வெளியீடு 13-10-2005 Issued 13-10-2005

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஏப்ரல் 11, 2005—தொகுதி 81—எண் 2

Monday the 11th April, 2005—Volume 81—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

V2ll,31'P05
P05·81·2
186241

53-59-

558
21.2.06

**11-4-2005**

**உள்ளடக்கம்**


பக்கங்கள்

**1. வினாக்கள்–விடைகள்**

உடுக்குறியிட்ட வினாக்கள் — 259-298

**2. அறிவிப்புகள்–**

(அ) பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைகள் மற்றும் தமிழ்நாடு நில மேம்பாட்டுக் குழுமம் ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் நியமனம் — 298-299

(ஆ) பேரவை அலுவலில் மாற்றம் — 299

**3. தகவல் கோரல்–**

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் — 299-301

(ஆ) பேரவையின் அலுவலர்கள் மாடத்தில் பதவி பெயர் குறித்த பலகைகள் வைக்கப்படுவது — 302-303

**4. கவன ஈர்ப்பு–**

(அ) சாத்தனூர் அணை ஆயக்கட்டில் நீரின்றி பயிர்கள் பாதிப்பு — 303-306

(ஆ) இரயில்வே மேம்பாலம் கட்டும் பணிக்காக சிதம்பரம் நகராட்சி திருவள்ளுவர் அங்காடியில் கடைகள் அகற்றப்படுவது — 306-310

**5. அறிக்கை அளித்தல்–**

மதிப்பீட்டுக் குழு — 310-311

**6. அரசினர் சட்டமுன்டிவடிவு (அறிமுகம் செய்தல்)–**

சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005 — 311-312

பக்கங்கள்

**7. மானியக் கோரிக்கைகள், 2005-2006, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 1 – மாநிலச் சட்டமன்றம்
(ஆ) கோரிக்கை எண் 2 – ஆளுநர் மற்றும் அமைச்சரவை
(இ) கோரிக்கை எண் 15 – நிதித் துறை
(ஈ) கோரிக்கை எண் 35 – திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை
(உ) கோரிக்கை எண் 37 – பொதுத் துறை
(ஊ) கோரிக்கை எண் 48 – ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்
—தொடர்ச்சி 312-444

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் 351,353, 361,365, 374-376, 396-424, 426

திரு. ப. இராஜரெத்தினம் 313-325

*திருமதி டி. யசோதா 347-362

திரு. ஐ. கணேசன் 363-370

திரு. டி. மணி 370-379

திரு. ஜி. பழனிசாமி 380-387

*திரு. ப. அரசன் 387-395





பக்கங்கள்

**7. மானியக் கோரிக்கைகள், 2005-2006, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(எ) கோரிக்கை எண் 25 – வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை
(ஏ) கோரிக்கை எண் 28 – செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா
(ஐ) கோரிக்கை எண் 27 – செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – செய்தி மற்றும் விளம்பரம்
—தொடர்ச்சி 445-505

மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் 445, 497-500

மாண்புமிகு திரு. அ. மில்லர் 454,467,480

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் 462,467-468, 470,473-478

திரு. து. நெப்போலியன் 468-481

*திரு. ராதாரவி 481-492

*திரு. கு. ஜெயக்குமார் 492-505

**8. அரசினர் தீர்மானங்கள்—**

(அ) விதி 32—ஐத் தளர்த்தல் 505-506

(ஆ) விதி 55 (6)—ஐத் தளர்த்தல் 506-507

**9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** 507-509

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
186241
600 008

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### பங்குனி 29, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2036
### 2005 ஏப்ரல் 11, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*“அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை*
*எண்ணி இடத்தாற் செயின்.”*

வினை செய்வதற்குரிய வழிவகைகளெல்லாம் குறைவில்லாதபடி, அவற்றை எண்ணிப் பார்த்து, இடத்தொடு பொருந்த, குறிப்பிட்ட வினையை ஒருவர் செய்தால், அவ்வினை வெற்றிபெற, அஞ்சாமையைத் தவிர, அவருக்கு வேறு துணை எதுவும் வேண்டுவதில்லை.

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 321, 322 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினா எண் 323, திரு. க. முருகவேல் ராஜன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**323—**

### கூட்டுறவு விநியோகக் கடை

***17302—திரு. க. முருகவேல் ராஜன்:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, அனக்காவூர் மதுரா, விநாயகபுரம் கிராமத்திற்குத் தனியாகக் கூட்டுறவு விநியோகக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2005 ஏப்ரல் 11

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விநாயகபுரம் கிராமத்திற்குத் தனியாகக் கூட்டுறவு நியாயவிலைக் [illegible] அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் செயற்குறிப்பில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 324, திரு. வெ. ஏழுமலை, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**324—**

### வங்கிப் பெட்டகக் கட்டடம்

***49676—திரு. வெ. ஏழுமலை:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி கூட்டுறவு விவசாய வங்கியின் அலுவலக வளாகத்தில் இடிக்கப்பட்ட வங்கிப் பெட்டகக் கட்டடம், இவ்வாண்டில் கட்டப்படுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி கூட்டுறவு விவசாய வங்கியின் அலுவலக வளாகத்தில், இடிக்கப்பட்ட வங்கிப் பெட்டகம் கட்டும் திட்டம், இவ்வாண்டு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்கின்ற பதிலைச் சொல்லி அமர்கிறேன்.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தங்கத் தாரகை தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு நன்றியைச் சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 325, திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.



2005 ஏப்ரல் 11]

**325—**

### கோயில் தேர்

***[illegible]6—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தொகுதி, மேலச்செவல், அருள்மிகு ஆதித்தவரணீஸ்வரர் சமேத சுவந்தரியம்மாள் திருக்கோயிலிலும் கல்விடைக்குறிச்சி, அருள்மிகு சுப்பிரமணியசாமி திருக்கோயிலிலும் பழுதடைந்த தேர்களுக்குப் பதிலாக புதிய தேர்களை அமைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன். சேரன்மகாதேவி தொகுதி, மேலச்செவல் அருள்மிகு ஆதித்தவரணீஸ்வரர் திருக்கோயிலுக்கு 21 இலட்சம் ரூபாய் செலவிலும் மற்றும் கல்விடைக்குறிச்சி, அருள்மிகு சுப்பிரமணியசாமி திருக்கோயிலுக்கு 15 இலட்சம் ரூபாய் செலவிலும் புதிதாகத் திருத்தேர்கள் செய்திட செலவாகலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த இரண்டு திருக்கோயில்களுக்கும் போதுமான நிதி வசதி இல்லாததால், பொதுமக்கள் ஆர்வத்துடன் பெரும் பங்கை நன்கொடையாக அளிக்க முன்வரும்பட்சத்தில், திருப்பணிக்கான மொத்த மதிப்பீட்டில், துறையின் நிதி உதவி 25 சதவீதத்திற்கு மிகாது அளித்து, திருத்தேர் திருப்பணி பொதுமக்கள் பங்கேற்புடன் செய்திட பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோயில்களில் அன்னதானத் திட்டத்தைக் கொண்டுவந்து, பல திருக்கோயில்களுக்குத் தங்கத் தேர்களும், பல திருக்கோயில்களுக்குப் புதிய தேர்களும் அமைத்துக் கொடுத்த மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சியில், என்னுடைய சேரன்மகாதேவி தொகுதியிலுள்ள அருள்மிகு ஆதித்தவரணீஸ்வரர் திருக்கோயிலில் புதிய தேர் அமைக்கும் பணிக்கு ரூ. 21 இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கு, என்னுடைய

[2005 ஏப்ரல் 11

நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு, இந்தத் திருக்கோயிலுள்ள தேர், கடந்த 30 ஆண்டுகளாகப் பழுதடைந்த சூழ்நிலையில் இருப்பதால், புதிய தேர் அமைக்கும் இந்தத் திட்டத்திற்கு மதிப்பீடுகளை அனுமதி செய்து, புதிய தேர் அமைக்கும் பணியினை உடனடியாகத் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், மேலச்செவல் அருள்மிகு ஆதித்தவரணீஸ்வரர் திருக்கோயில், பட்டியலைச் சேர்ந்த திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் ஆண்டு வருமானம் 17,850 ரூபாய் மட்டும்தான். இத்திருக்கோயிலுக்குக் கட்டடங்களோ, காலி மனைகளோ கிடையாது. இத்திருக்கோயில் திருத்தேர் பழுதுபட்ட நிலையில் உள்ளது. இத்திருக்கோயிலுக்குப் புதிதாகத் திருத்தேர் செய்திட 21 இலட்சம் வரை செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இருந்தாலும், பொதுமக்களுடைய நன்கொடையும் சேர்த்து, அரசின்மூலமாக 25 சதவீதம் கொடுக்கப்படுகின்ற நிதியிலேயிருந்து இந்த ஆண்டு அல்லது அடுத்த ஆண்டு திருப்பணிகள் செய்வதற்கு வேண்டிய தேர்த் திருப்பணிகள் நடப்பதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சேரன்மகாதேவி தொகுதியிலுள்ள கல்லிடைக்குறிச்சி சுப்பிரமணியசாமி திருக்கோயிலுக்குப் புதிய தேர் அமைக்கும் பணிக்கு, 15 இலட்சம் ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததற்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்து, இந்தத் தேரும் 50 ஆண்டுகளாகப் பழுதடைந்த சூழ்நிலையில் உள்ளது; எனவே கூடுதல் நிதி ஒதுக்கி, இந்தத் தேர் அமைக்கும் பணியினை இந்த ஆண்டு தொடங்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கண்ட இரண்டு திருக்கோயில் தேர்களையும் புதுப்பிக்க மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், பொதுமக்களிடமிருந்து நன்கொடை பெற்றுத் தருவதற்கு முயற்சி செய்வார்களேயானால்,



2005 ஏப்ரல் 11]

துறையின் சார்பாக 25 சதவீதம் நிதியொதுக்கி, இரண்டு திருத்தேர்களையும் திருப்பணி செய்வதற்குப் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மீண்டும் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தென்னரசு.

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி தொகுதி, மண்ணாரம்பாளையம் அருகிலுள்ள அருள்மிகு குலவிளக்கு அம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான தேர் மிகவும் பழுதடைந்துள்ளது. அந்தத் தேரை இந்த ஆண்டு புதுப்பித்துக் கொடுப்பதற்கு, அல்லது புதியதாகத் தேர் செய்து கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–05

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. தென்னரசு அவர்கள் கேட்ட அந்த ஆலயம் எங்களுடைய தொகுதியிலேதான் இருக்கிறது. கடந்த 3 தினங்களுக்கு முன்னாலே அந்தத் தேர் நல்ல முறையிலே ஓடிக் கொண்டிருந்தது. இனிமேல் பழுது ஏற்படும் என்று சொன்னால்--சட்டமன்ற உறுப்பினரைப் பொறுத்தவரை அந்த ஆலயம், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும் தென்னரசு அவர்களுக்கும் குலதெய்வமாக விளங்கிக் கொண்டிருக்கின்றது--ஈரோட்டிலே பெரிய வசதி படைத்தவர்கள் இருக்கிறார்கள், திருச்செங்கோட்டிலே இருக்கிறார்கள், மொடக்குறிச்சியிலே இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் சேர்ந்தால் ஒரே நாளில் அதற்கு வேண்டிய நிதியைப் பெற்றுவிடலாம். உடனடியாக அம்மாவுடைய அரசு திருப்பணி செய்வதற்கு உங்கள்மூலம் நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலுள்ள ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயிலில் கடந்த 2003 ஆம் ஆண்டு பாலாலயம் தொடங்கப்பட்டது. 2002 ஆம் ஆண்டிலிருந்து அந்தத் தேரினுடைய சக்கரங்கள் பழுதடைந்துள்ளதால் அந்தத் தேர் உற்சவம் நடைபெறாமல் இருக்கிறது. பாலாலயம் நிறைவுபெறுகின்ற

பொழுது அந்தத் தேரையும் புதுப்பித்து, தேரையும் ஓட்டுகின்ற அளவிலே நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில், 2003 ஆம் ஆண்டு இராஜகோபுரம் மற்றும் விமானங்கள் திருப்பணி செய்வதற்காக பாலாலயம் செய்யப்பட்டிருக்கிறது. ஓர் ஆலயத்தில் பாலாலயம் செய்யப்பட்டுவிட்டால் அந்தத் தேரில், ஆண்டவன், சுவாமி வெளியே வரக்கூடாது என்ற காரணத்தினாலேதான் அங்கே இன்றைக்கு அந்தத் தேர் ஓடாமல் இருக்கிறது. தேர் நல்ல முறையில் இருக்கிறது. இப்போது குறிப்பாக 1½ இலட்சம் ரூபாய் அளவிலே 3 விமானங்கள் பணி முடிந்திருக்கிறது. இராஜகோபுரத் திருப்பணி இன்னும் 3, 4 மாதக் காலங்களில் முடிக்கப்படும் என்று சொல்லி இருக்கிறார்கள். அது முடிந்ததும், தேர் நல்ல நிலையில் இருக்கிறது; ஓட்டப்படும் என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, தேனி மாவட்டம், வீரபாண்டி அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயிலிலும், பெரியகுளம் அருள்மிகு பாலதண்டாயுதபாணி திருக்கோயிலிலும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் சுமார் 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு புதிய தேர்கள் செய்து கொடுக்கப்பட்டு இருக்கின்றன. அதற்கு தேனி மாவட்ட மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, புதிதாக செய்த இந்தத் தேர் மழையிலும் வெயிலிலும் நின்று கொண்டிருப்பதால், தேர் சேதம் அடைகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. அதற்கு நிழற்குடை மாதிரி ஒரு அமைப்பை ஏற்படுத்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர் செய்து முடித்தாகிவிட்டது என்று சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். தேர் செய்யப்பட்டதற்குப் பிறகு, மழையில் நனையாமல், வெயிலில் காயாமல் பார்ப்பதற்கு அங்கே அந்த ஆலயத்தில் நிதி இருக்குமேயானால், உடனடியாக மேற்கூரை அமைப்பதற்கு





அறநிலையத் துறை நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு இடங்களில் தேர்களுக்குப் புதிய இரும்புச் சக்கரங்கள் பொருத்திய பிறகு, அந்தப் பழைய மரச் சக்கரங்கள் எல்லாம் கேட்பாரற்றுக் கிடக்கின்றன. தமிழகத்திலுள்ள வசதி இல்லாத பல்வேறு கோயில்களுக்கு எல்லாம் அந்த மரச் சக்கரங்களை எடுத்துச்சென்று, அங்கே பழைய சக்கரங்களைக் கழற்றிவிட்டு, இங்கே சும்மா கிடக்கின்ற அந்த மரச் சக்கரங்களை எல்லாம் அந்தக் கோயில்களில் உள்ள தேர்களுக்குப் பொருத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓட்ட முடியாமல் பழுது ஏற்பட்ட சக்கரத்தைத்தான் புதுப்பிப்பதற்காக BHEL நிறுவனத்தின்மூலம் இரும்பிலே சக்கரம் போடப்படுகிறது. அந்தப் பழைய சக்கரமும் பயன்படுத்துவதற்கு உதவுமேயானால், அதை வேறு ஏதாவது காரியங்களுக்குப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறுபடை வீடுகளில் ஒன்றாக விளங்குகின்ற சுவாமிமலை சுவாமிநாதசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான இரண்டு மரத் தேர்களில் ஒன்று பழுது நீக்கம் செய்யப்பட்டு, தற்போது நல்ல முறையிலே ஓடிக் கொண்டிருக்கிறது. மற்றொரு தேர் ஆண்டுக் கணக்கிலே பழுதாக இருக்கிறது. பழுதாகி இருக்கிற அந்தத் தேரை பழுதுநீக்கம் செய்து ஓட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆலயத்தில் போதிய நிதி வசதி இருக்கிறது. தேர் பழுது ஏற்பட்டு இருக்குமேயானால் உடனடியாகப் புதுப்பிப்பதற்கு ஆலய நிதியிலிருந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2005 ஏப்ரல் 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோயிலினுடைய கார்த்திகை தீபத் திருவிழாவின்போது அம்மன் தேர்ச் சக்கரம் பழுதுபட்டு 4,5 மணி நேரம் தேர் ஓடாத நிலை ஏற்பட்டிருந்தது. அங்கே இருக்கிற பெரிய தேருக்கு BHEL கம்பெனியின்மூலம் இரும்புச் சக்கரங்கள் போடப்பட்டு நல்ல முறையிலே இயங்கிக் கொண்டிருக்கின்றது. ஆகவே, அந்தக் கோயிலினுடைய அத்தனைத் தேர்களுக்கும் – கோயிலும் நல்ல நிதிநிலைமையில் இருக்கின்றது--BHEL நிறுவனத்தின்மூலம் இரும்புச் சக்கரங்கள் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா என் அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10–10

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலையிலே இருக்கின்ற தேர்களில், எந்தெந்தத் தேர்கள் பழுதுபட்டிருக்கின்றன என்பதைக் கண்டறிந்து, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்லிய அந்தத் தேர்கள் உடனடியாகக் கண்டறியப்பட்டு, ஆலயத்தில் போதிய நிதியிருக்கின்ற காரணத்தினாலே, அந்தத் தேர்களைத் திருப்பணி செய்வதற்கும், நல்லமுறையில் தேர்கள் ஓடுவதற்கும் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது தேர்களிலேயுள்ள மரச் சிற்பங்கள் எல்லாம், தொன்மை வாய்ந்த நல்ல சிற்பங்களாக இருக்கின்றன. அவற்றையெல்லாம் பாதுகாப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கிறதா? அதேபோன்று இந்த ஆண்டு எத்தனை புதிய தேர்கள் செய்வதற்கான செயல்முறை நடவடிக்கைகளை அரசு எடுக்க உள்ளது என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** இதற்குத் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப்பையா பாண்டியன்.



2005 ஏப்ரல் 11]

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழிலும் அர்ச்சனை செய்யலாம் என்று இன்றைக்கு உத்தரவிட்டு, தமிழ் நாட்டிலே சிறப்பாக, திருக்கோயில்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அந்தவகையிலே நெல்லை மாவட்டம், வாசுதேவநல்லூரிலே–அர்த்தனாரீசுவரர் கோயில், தமிழ் நாட்டிலே இரண்டு–இரண்டில் அதுவும் ஒன்று; அங்கு தேர் இல்லாமல் உள்ளது. அதற்கு திட்ட மதிப்பீடு தயார் செய்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டிலேயே அந்தத் திருக்கோயிலுக்குத் தேர் செய்து பொதுமக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றித் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக, அமைச்சரிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு சொல்லியதைப்போல, அங்கே தேர்கள் எல்லாம் பழுதுபட்டிருந்தால் அல்லது தேரைப் புதுப்பிக்க வேண்டுமென்றால், அந்த ஆலயத்தில், போதிய நிதியிருக்கின்ற ஆலயத்தில், ஆலயத்தினுடைய நிதியிலிருந்து தேர்த் திருப்பணி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அந்த ஆலயங்களில் நிதி பற்றாக்குறையாக இருந்தால், நிதி போதாத நிலையில் இருந்தால், அந்தப் பகுதியினுடைய பொதுமக்களுடைய நன்கொடை மூலமாகத்தான் பெரும்பான்மையான தேர்கள் இப்பொழுது திருப்பணி செய்யப்பட்டு வருகின்றன. அதைப்போல், தங்களுடைய தொகுதியிலே இருக்கின்ற, தாங்கள் கூறிய அந்த ஆலயத்தினுடைய தேர் புதுப்பிக்கப்பட வேண்டுமென்று மதிப்பீடு தயாரித்திருந்தாலும், போதிய நிதி ஆதாரம் இல்லாத காரணத்தினாலே சற்றுக் காலதாமதம் ஏற்பட்டிருக்கலாம். இருந்தாலும், நீங்கள் 75 சதவிகிதம் நிதியை வாங்கிக் கொடுப்பதற்கு முன்வந்தால், 25 சதவிகித நிதியை அறநிலையத் துறையின் மூலமாகக் கொடுத்து தேர்ப் பணி துவங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர்.

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா ஆட்சியில் அறநிலையத் துறைமூலம் ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்ட மக்கள் வணங்கும் கோயில்களுக்கெல்லாம் கும்பாபிஷேகம் செய்வதற்கு நிதிகளை ஒதுக்கி வழங்கிக்

[2005 ஏப்ரல் 11

கொண்டிருக்கின்றார்கள். 'ஊர்கூடி இழுத்தால்தான் தேர் வலம்வந்து நிற்கும்.' ஆகவே, தேர் ஓடுவதற்குச் சக்கரம் முக்கியமான ஒன்று. அந்தச் சக்கரங்கள் பல இடங்களில் பாதிக்கப்பட்டிருக்கின்றன. என்னுடைய தொகுதியில் செட்டிகுளத்திலும், அதேபோல பெரம்பலூரிலும் அந்தத் தேர்ச் சக்கரங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல BHEL நிறுவனத்தின் மூலமாகச் செய்வதற்கு இந்தச் சக்கரத்திற்கென்று தனியாக நிதி ஒதுக்கி, அரசு அதிலே நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விழைகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து ஆலயங்களிலேயிருக்கின்ற தேர்ச் சக்கரங்கள் பழுதுபடுமேயானால், அந்தந்த ஆலயங்களில் நிதி வசதியிருந்தால் உடனடியாக அந்தத் தேர், மரச் சக்கரங்களை இரும்புச் சக்கரங்களாக, BHEL நிறுவனத்தின் மூலமாக மாற்றி இப்பொழுது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதைப்போலவே, துணைச் சபாநாயகருடைய தொகுதியிலேயிருக்கின்ற தேர்களும், அங்கே நிதியிருக்குமானால் உடனடியாகச் சரி செய்யப்படும். நிதியில்லையென்றால், அங்கேயிருக்கின்ற வசதி படைத்தவர்கள், ஆன்மீக பக்தர்களிடத்திலே நிதி வசூல் செய்து, கூடிய விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. உசேன்.

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் புகழ்மிக்க பார்த்தசாரதி திருக்கோயில் அமைந்திருக்கின்றது. இந்தத் திருக்கோயிலுக்கு விழாக் காலங்களில் இலட்சக்கணக்கான பக்தர்கள் வந்து செல்கின்றார்கள். அவர்களுக்கு வசதியாக என்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஏற்கெனவே ஓர் உயர் கோபுர விளக்கு அமைத்துத் தந்துள்ளேன். இன்னொரு விளக்கு தேவைப்படுகிறது என்று மக்கள் அங்கே சொல்கிறார்கள். அந்த ஆலயத்தின், மற்றொரு பகுதியிலே அந்த உயர் கோபுர விளக்கு அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்ந்து, ஆய்வுசெய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சீனிவேல்.



2005 ஏப்ரல் 11]

**திரு. எஸ்.எம். சீனிவேல்:** அம்மாவை வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறுபடையப்பனில் முதற்படை முருகனாகிய ஆண்டவர் சுப்பிரமணிசாமியினுடைய திருக்கோயிலில் ஒன்றரைகோடி ரூபாய் இன்று இருப்பு இருக்கின்றது. தங்கத் தேர் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த ஆலயங்களில் போதிய அளவிற்கு நிதியிருக்கிறதோ, எங்கெல்லாம் தங்கம் இருக்கிறதோ, அந்த ஆலயங்களில் எல்லாம் இப்பொழுது திருப்பணி செய்வதற்கு, தங்கத தேர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதைப்போல், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதியில் சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் தங்கம் இருக்குமேயானால், உடனடியாக நீங்கள் நடவடிக்கை எடுத்து, தங்கத் தேர் திருப்பணி கமிட்டி அமைப்பீர்களேயானால், உடனடியாக தங்கத் தேர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க அரசின்மூலமாக ஏற்பாடு செய்யப்படும் என்பதனைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரம்பரியமாக இந்தத் தேர்கள் எல்லாம், மரச் சக்கரங்களிலேதான் இயக்கிக்கொள்ளப்பட்டு இருந்தன. இப்போது, இரும்புச் சக்கரங்களை வைத்துத் தேர்களை இயக்குவதாக அமைச்சர் அவர்கள் இங்கே பதில் சொல்லியிருக்கிறார்கள். அதன்மூலமாக, இந்த மரச் சக்கரங்களைக் காட்டிலும், இரும்புச் சக்கரங்கள் விலை குறைவாக உள்ளனவா; அதிலே என்ன சாதகங்கள் இருக்கின்றன என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரச் சக்கரம், சீக்கிரம் தேய்ந்துவிடும். அதில் பழுது ஏற்பட்டுவிடுகிறது. இரும்புச் சக்கரம், கொஞ்சம் கெட்டியாக இருக்கிற காரணத்தினால், கொஞ்ச நாட்களுக்கு உழைக்கக்கூடிய, பயன்படக்கூடியதாக இருக்கிற காரணத்தினால், இப்போது, அனைத்து ஆலயங்களிலேயும், BHEL மூலமாக, இரும்புச் சக்கரத்தைப் பயன்படுத்துகிறார்கள் என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2005 ஏப்ரல் 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தேர் நிரம்ப தூரம் ஓடிவிட்டது! (சிரிப்பு)

அடுத்த கேள்வி. வினா எண் 326, திருமதி மல்லிகா சின்னசாமி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**326—**

## இராஜ கோபுரம்

***72760—திருமதி மல்லிகா சின்னசாமி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர், ஆதிதிருவெள்ளரை பெருமாள் திருக்கோயிலின் முன்பகுதியில் அமைந்துள்ள மொட்டை கோபுரத்தை, இராஜகோபுரமாகக் கட்டும் திட்டம், அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன். (அ) மற்றும் (ஆ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர், ஆதிதிருவெள்ளரை பெருமாள் திருக்கோயிலின் முன்பகுதியில் அமைந்துள்ள மொட்டை கோபுரத்தை, இராஜகோபுரமாகக் கட்டினால், மொட்டை கோபுரமான மேற்குப் பகுதியில், அதிக பளு ஏற்ற வேண்டிய நிலையுள்ளது. அப் பளுவினைக் கீழுள்ள கல்பாரம் தாங்குமா என்பது குறித்து, தொல்பொருள் துறையினர் மற்றும் கட்டடக் கலைஞர்களின் ஆலோசனையைப் பெற்று, சோதனை செய்த பின்னரே, பழமையான மொட்டை கோபுரத்தை, இராஜகோபுரமாக மாற்ற இயலுமா என்பது குறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கின்ற, ஆதிதிராவிடத் திருக்கோயில்களுக்கெல்லாம், அந்தக் கோயில்களைப் புதுப்பிப்பதற்காக, புரட்சித் தலைவி அம்மா



2005 ஏப்ரல் 11]

அவர்கள், கிட்டத்தட்ட 6 ஆயிரம் திருக்கோயில்களுக்கு, 15 கோடி ரூபாய் சென்ற ஆண்டு நிதியொதுக்கியிருக்கிறார்கள். இன்றைக்கு, ஆதிதிராவிட மக்கள் எல்லாம், இந்த அரசைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். அந்தவிதத்திலே, இந்த ஆண்டும் 6 ஆயிரம் திருக்கோயில்களுக்கு நிதியொதுக்கப்பட்டிருக்கிறது. இதிலே, பேரூராட்சிகளிலே, 2, 3 இடங்களிலே, ஆதிதிராவிடர்கள், அருந்ததியர்கள், தேவேந்திரர்கள் எல்லாம் இருக்கிறார்கள். ஆகவே, அதை மனத்திலே வைத்துக்கொண்டு, ஒரு சிற்றூராட்சிக்கு ஒன்று என்பதை மாற்றி, இரண்டு அல்லது மூன்று ஆலயங்கள் என எடுத்துக்கொள்வதற்கு, அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைக் கேட்டுக்கொண்டு, முன்பு, தேரைப் பற்றிக் கூறினார்கள். அந்தத் தேரைப் பொறுத்தவரையில், நிதி வசதியிருந்தால் செய்துகொள்ளலாம்; இல்லையென்றால், donars மூலமாக ஏற்பாடு செய்துகொள்ளலாம் என்று கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து, தேவைப்படின், அந்தத் தேர்ச் சக்கரத்தை அமைத்துக்கொள்வதற்கு, அரசிடம் முன்னனுமதி வாங்கித் தருவாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பஞ்சாயத்தில், ஓராலயம், ஈராலயம் என்ற கணக்கு இல்லை. ஏறக்குறைய, சென்ற ஆண்டு ஆறாயிரம் ஆலயங்கள் ஒதுக்கப்பட்டன. இந்த ஆண்டு, ஆதிதிராவிட மக்களுக்காக, அங்கே இருக்கின்ற ஏறக்குறைய ஆறாயிரம் ஆலயங்களுக்கும்,—அதற்கு அப்பாற்பட்டு, கிராமங்களிலே இருக்கின்ற மற்றுமுள்ள ஆலயங்கள், அறநிலையத் துறையின் பொறுப்பிலே இருக்கின்ற ஆலயங்கள் எல்லாம், இன்றைக்குக் கேட்பாரற்றுக் கிடக்கின்றன--ஒருநேர பூஜைகூட செய்ய முடியாமல் இருக்கின்ற ஆலயங்களுக்கெல்லாம் திருப்பணி செய்ய வேண்டும் என்பதற்காக, மேலும், நான்காயிரம் ஆலயங்களுக்கும், ஏறக்குறைய பத்தாயிரம் ஆலயங்களுக்கு, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டு, திருப்பணி செய்வதற்காக, ஓராலயத்திற்கு 2.5 ஆயிரம் ரூபாய் வீதம் ஒதுக்கியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில், ஒவ்வொரு தொகுதிவாரியாகப் பிரித்து, அனைத்துத் தொகுதிகளுக்கும், இந்தத் திட்டத்தின்மூலமாக, அங்கே இருக்கின்ற ஆண்டவனுக்குத் திருப்பணி செய்வதற்குச் சென்றடையும் என்பதை நான் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இதை, சட்டமன்ற உறுப்பினருடைய நிதியிலே இருந்து செய்ய வேண்டுமென்றால், உங்களுக்காக, ஒதுக்கப்பட்டிருக்கிற நிதியை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினிடத்திலே கேட்டு, உத்தரவு பெற்ற பின்னர்,

எவ்வளவு ரூபாய் வேண்டுமானாலும் செலவிட்டுச் செய்துகொள்வதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்கலாம் என்பதை நான், பேரவைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுப்பையா பாண்டியன்.

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒவ்வொரு கேள்வியைக் கேட்கும்போதும், ஒரு கவிதையைச் சொல்வேன். எனக்கு முன்னால் இருக்கிற அன்பர், மரியாதைக்குரிய திரு. சேகர்பாபு அவர்கள், இந்தத் தடவை ஏன் கவிதை சொல்லவில்லை என்று கேட்டார். என்னுடைய தொகுதியிலுள்ள திருமலை குமாரசுவாமி திருக்கோயிலுக்கு, 50 இலட்சம் ரூபாயிலே திருப்பணி, குடமுழுக்கு செய்து கொடுத்த, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அப்பரும் சுந்தரரும் அருள்மிகு மாணிக்கவாசகரும், அருந்தமிழ் தந்த திருஞானசம்பந்தரும், பெருந்தமிழ் படைத்த மூதாட்டி ஒளவையும், செந்தமிழ்ச் செங்கோல் திருக்குறளை ஈந்த திருவள்ளுவரும், திருவருளால் திருப்புகழ் தந்த அருணகிரியும், நல்ல தமிழ்த் தொண்டால் நற்பெயர் கொண்ட நக்கீரனும், சிந்து தமிழுக்கு சேக்கிழாரும், கம்பனும், காப்பியம் படைத்த இளங்கோவடிகளும் இப்போது இல்லை என்ற தைரியத்தால், செம்மொழி ஆக்கியது நாங்கள் என்று சொல்கிறார்கள். எத்தனையோ தவசிகள்..(மணியடிக்கப்பெற்றது) இல்லை, இல்லை, ஒரே ஒரு கருத்தைச் சொல்லி முடித்துவிடுகிறேன்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கச்சேரியை, இன்னொரு நாள் வைத்துக்கொள்ளலாம். திரு. ராமராஜ்.

**திரு.ச. ராமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போடிநாயக்கனூர் தொகுதியிலே, போடிநாயக்கனூர் பகுதியில், மலையில், பரமசிவன் கோயில் திருவிழா, மிகச் சிறப்பாக 8 நாட்கள் தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் நடைபெற்று வருகிறது.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

திருவண்ணாமலை சுவாமி கோயிலுக்கும், என்னுடைய போடியிலே உள்ள பரமசிவன் கோயிலுக்கும், ஆதிகாலத்திலேயிருந்தே இணைந்து தெய்வ வழிபாடு இருந்து வருகிறது. அந்தக் கோயிலுக்கு, மலை வழியாக பக்தர்கள் செல்லும் நடைபாதை மிகவும் மோசமான சூழ்நிலையில்





இருக்கிறது. வருகின்ற சித்திரை 1 ஆம் தேதி வழிபாடு நடைபெற இருக்கிறது. மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், அடுத்த ஆண்டாவது, அந்த நடைபாதையைச் செப்பனிட அதற்குரிய நிதியை ஒதுக்கி, பக்தர்கள் சென்று வழிபட ஆவன செய்து, நடவடிக்கை எடுப்பாரா என்பதை இந்த நேரத்தில் கேட்டு அமைகிறேன்.

முற்பகல் 10–20

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆலயத்தில் நிதி இருக்கிறதா என்பதை ஆய்வு செய்து, அதற்குப் பிறகு அந்த மலைப் பாதை எவ்வளவு தூரம் என்பதையெல்லாம் கணக்கெடுத்து, முடிந்த அளவிற்கு நிதியாதாரத்தை வைத்து அந்தச் சாலை அமைப்பதற்கு அறநிலையத் துறை நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முசிறி தொகுதியிலே இராஜகோபுரம் கேட்பதுபோல, என்னுடைய உடுமலை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கோட்டை மாரியம்மன் திருக்கோயிலில் கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக திருப்பணி வேலைகள் சுமார் 60 இலட்சம் மதிப்பீட்டிலே நடைபெற்று வருகின்றன. இராஜகோபுரம் கட்டுவதற்கு 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே ஒரு திட்டவடிவு தயாரிக்கப்பட்டு நம்முடைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், குமணன் வாழ்ந்த பகுதியாகிய அந்தக் கோட்டை மாரியம்மன் திருக்கோயிலுக்குக் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறக்கூடிய வகையிலே நம்முடைய அரசு மூலமாக அந்த இராஜகோபுரம் கட்டுவதற்கு, அந்த நிதியைக் கொடுப்பதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆலயத்தினுடைய நிதி, 60 இலட்சம் ரூபாய் வசூல் செய்து திருப்பணி நடைபெற்றுக்கொண்டு இருக்குமேயானால், அந்த estimate, அதாவது மதிப்பீட்டின் அடிப்படையில் அதற்குரிய, அரசு மானியமாகக் கொடுக்கக்கூடிய நிதியைக் கூடிய விரைவில் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2005 ஏப்ரல் 11

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பெரியவர் பாப்பாசுந்தரம்.

**திரு. அ. பாப்பாசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குளித்தலை தொகுதியிலுள்ள அய்யர் மலை ஆலயம் மிகப் பிரசித்தி பெற்ற ஆலயம். அந்த கோயில் மூன்று கிலோ மீட்டர் அளவிற்கு உயரமான கோயில். அதிகமாக பக்தர்கள் தினமும் அந்தக் கோயிலுக்குச் செல்கின்ற காரணத்தினால் உச்சிக் கோயிலுக்கு 2, 3 கிலோ மீட்டர் மேலே நடந்து செல்வதற்கு மிகவும் கஷ்டப்படுகிற காரணத்தால், தனியார்கள் இன்றைக்கு 7½ கோடி ரூபாய் செலவு செய்து அங்கே ஒரு மலைப் பாதை அமைப்பதற்கு ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்கு ஒரு Committee அமைத்திருக்கிறார்கள். அந்த Committee அங்கீகாரம் பெற்று, பாதையை அமைத்துத் தருவதற்கு விதிமுறைகளில் ஏதாவது வழிவகை இருக்கிறதா? உடனடியாக அரசு அதை அனுமதிக்குமா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு, அதே கோயிலைச் சேர்ந்த சிவாலயத்திற்குக் கும்பாபிஷேகம் செய்வதற்காக அமைச்சர் அவர்களிடம் பணம் கேட்டிருந்தோம். அதற்கும் எந்த அளவிற்கு உதவி செய்ய முடியும் என்பதை அமைச்சரிடமிருந்து தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வசதி படைத்தவர்கள் கோடிக்கணக்கான ரூபாயில் அதைச் செய்வதாகச் சொன்னார்கள். நீங்கள் நிதி வசூல் செய்து அந்தப் பணியை முடிப்பதற்கு முன்வருவீர்களேயானால், அந்த அனுமதியை உடனடியாக அறநிலையத் துறைமூலமாகக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேசமயத்தில், இன்னொரு சிவாலயம் என்று சொல்லக்கூடிய, அந்த ஆலயத்திற்கு நிதி கேட்டிருக்கிறார்கள். இப்போது நிதியாதாரத்தைப் பொறுத்து, அறநிலையத் துறை ஆணையருடைய நிதியிலிருந்து கொடுக்கக்கூடிய நிதி எந்தெந்த ஆலயங்களுக்குக் கொடுக்கப்படும் என்பதை ஆய்வு செய்து, தாங்கள் கேட்கும் ஆலயங்களுக்குக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைப் பேரவைத் தலைவர் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வி. கணேசன்.

**திரு. வி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பிரசித்தி பெற்ற பல்வேறு ஆலயங்கள் கடந்த காலத்திலே மன்னர்களால் கட்டப்பட்டு basement நிலையில் நிற்கின்றன; அதற்குமேல் கோபுரங்களே கட்டப்படாமல் இருக்கின்றன;



2005 ஏப்ரல் 11]

அவைகுறித்து அமைச்சர் அவர்கள்—இந்த அரசு—ஆய்வு செய்திருக்கிறதா? அப்படிக் கட்டப்படாமல் இருக்கின்ற கோயில்களைக் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எந்த மாவட்டத்தில், எந்தப் பகுதியில் basement–உடன் அந்தப் திருப்பணிகள் செய்யப்பட்டு, வேலை நடைபெறாமல் இருக்கின்றன என்பதையும், அது அறநிலையத் துறையினுடைய பொறுப்பிலே இருக்கிறதா அல்லது தனியார் ஆலயமா என்பதையும் சொல்வார்களேயானால், கூடிய விரைவில் நாளை மறுதினமே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 327, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**327—**

**திண்காரை தளம்**

***73172—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர், 5–வது வட்டத்தில் செயல்படும் சத்துணவுக் கூடம், அங்கன்வாடி மையத்தின் கூரைக் கட்டடத்தை மாற்றி திண்காரை தளம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர், 5-வது வட்டத்தில் செயல்படும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையங்கள் மற்றும் அங்கன்வாடி மையங்கள் எதுவும் கூரைக் கட்டடங்களில் இயங்கவில்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, துரித நடவடிக்கையினால் இன்றைக்கு மாநகராட்சி சார்பிலே மாத்திரம் ரூபாய் 14 கோடி செலவிலே பல்வேறு அங்கன்வாடிகள்

[2005 ஏப்ரல் 11

மற்றும் சத்துணவு மையங்கள் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன. இருந்தாலும், மேலும் இந்த சிமெண்ட் கூரைகளினாலான சத்துணவுக் கூடங்கள் அதிக அளவிலே இருக்கின்றன. அதற்கு ஒரு நிரந்தர தீர்வாக நடப்பாண்டில் எத்தனை சத்துணவுக் கூடங்கள் கான்கிரீட் தளங்களாக மாற்றப்பட, ஆய்வில் உள்ளன என்பதைத் தங்கள் வாயிலாக அமைச்சரிடத்தில் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–25*

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு மையங்கள் மொத்தம் 51 இயங்கி வருகின்றன. இம்மையங்கள் மாநகராட்சிப் பள்ளிகளில் 16 மையங்களும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 35 மையங்களும் இயங்கி வருகின்றன. இவற்றின்கீழ் 17,724 நபர்கள் பயன் பெறுகின்றனர். இத்தொகுதியில் 5–வது வட்டத்தில் ஒரு சத்துணவு மையம் இயங்கி வருகின்றது. அதுவும் கான்கிரீட் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மேலும் டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில், 5–வது வட்டத்தில் மொத்தம் 17 அங்கன்வாடி மையங்கள், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இயங்கி வருகின்றன. இம்மையங்கள் அனைத்தும், கான்கிரீட் கட்டடங்கள் மற்றும் கல்நார் கூரைக் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. மேற்கண்ட சத்துணவு மையங்களோ, அல்லது அங்கன்வாடி மையங்களோ கூரைக் கட்டடங்களில் இயங்கவில்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பள்ளிக்கூடங்களில் இயங்குகின்ற சத்துணவுக் கூடங்கள் மற்றும் அங்கான்வாடிகளில் அம்மா அவர்களின் ஆணைக்கேற்ப, தற்போது மின்சார வசதி முழுவதுமாக பள்ளிக்கூடங்களிலே இயங்குகின்ற அங்கன்வாடிகள், சத்துணவுக் கூடங்களுக்கு செய்து தரப்பட்டிருக்கின்றன. தனி இடங்களில் இயங்குகின்ற அங்கன்வாடிகளில் இப்படிப்பட்ட மின்சார வசதி செய்து தரப்பட்டு அந்த மின்சாரத்திற்குண்டான மாதாந்திரக் கட்டணத்தை யார் கட்டுவது என்ற சூழ்நிலை நிலவுகிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள் இதை ஆய்வு செய்து, இந்த மின்சாரக் கட்டணத்தை சமூக நலத் துறை வாயிலாகவோ அல்லது மாநகராட்சியின் வாயிலாகவோ



2005 ஏப்ரல் 11]

கட்டுவதற்குண்டான நடவடிக்கையை மேற்கொள்ள முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி அரசு சிந்திக்கும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் *328*, *திரு. அ. நடராஜன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.*

**328—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

***40296—திரு. அ. நடராஜன் :**

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*குத்தாலம் தொகுதி, காஞ்சிவாய் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் ஊராட்சி ஒன்றியம், காஞ்சிவாய் கிராமத்தில் புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இப்போது இல்லை.

**திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மருத்துவத் துறையில் உலகத் தரத்தை மிஞ்சும் வகையிலே, நிர்வாகம் நடத்திடும் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். குத்தாலம் ஒன்றியம், காஞ்சிவாய் கிராமம், உள் கிராமம் ஆகும். அந்தக் கிராமத்தில் உள்ள மக்கள் மருத்துவமனைக்குச் செல்லவேண்டுமேயானால் 3, 4 கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று, அதன்பிறகு பேருந்தைப் பிடித்துச் செல்லவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களினுடைய அரசு, காஞ்சிவாய் கிராமத்திற்கு, ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க முடியாவிட்டாலும், துணைச் சுகாதார நிலையம் அமைத்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதனைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

[2005 ஏப்ரல் 11

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இம்மாமன்றத்தினுடைய அத்தனை மாண்புமிகு உறுப்பினர்களும், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். கடந்த காலத்தில், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய அரசு பொறுப்பேற்ற பிறகு, மக்கள்தொகை அடிப்படையில் ஆய்வு செய்து, நமது அரசு, புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு, ஆங்காங்கு இருக்கக்கூடிய கிராமங்களின் மக்கள்தொகை அடிப்படையிலே, இப்போது எத்தனை அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தேவைப்படுகின்றன; அதேபோல் துணை சுகாதார நிலையங்கள் தேவைப்படுகின்றன என்பதை ஆராய்ந்து சுகாதாரத் துறைமூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு இருக்கிறது. இதை ஆராய்ந்து முடிந்ததும், அதற்கான நிதியையும் மத்திய அரசிடம் பெற்று, வருகின்ற நிதியாண்டிலே நிதிநிலைக்கு ஏற்ப அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அதேபோல் துணைச் சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ. நடராஜன்

**திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி. நாகை மாவட்டம், மயிலாடுதுறை அரசு மருத்துவமனை, தாலுகா தலைமை மருத்துவமனை ஆகும். இருப்பினும் மாவட்ட மருத்துவமனைக்கு நிகராக, நாளொன்றுக்கு 1000 புறநோயாளிகளும், 250-க்கும் மேற்பட்ட உள்நோயாளிகளும் அனுமதிக்கப்படுகின்றனர். அதுமட்டுமல்ல மாதம் ஒன்றுக்கு 250-க்கும் மேற்பட்ட பிரசவங்கள் நடைபெறுகின்றன. மாதம் ஒன்றுக்கு 200 குடும்ப நல அறுவைச் சிகிச்சைகள் நடக்கின்றன. இப்படிச் சிறப்புப் பெற்ற மருத்துவமனையில், மருத்துவமனை தோன்றிய காலத்தில் வழங்கப்பட்ட கட்டில் மெத்தைகள் அனைத்தும் பழுதடைந்து, condemn செய்யப்பட்டு, ஏலம் விடப்பட்டிருக்கின்றன. இதுவரை புதிய கட்டில் மெத்தைகள் வழங்கப்படவில்லை. நோயாளிகள் அனைவரும் தரையில் படுத்திருக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், புதிதாக 200 கட்டில் மெத்தைகளை வழங்கவும், கூடுதலாக ஒரு மயக்க மருந்து டாக்டரை நியமிக்கவும் முன்வருவாரா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2005 ஏப்ரல் 11]

முற்பகல் 10-30

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இன்றையதினம், உலக வங்கியினுடைய நிதி 597.15 கோடி ரூபாயைப் பெற்று, முதலில் 5 மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்து, அந்த 5 மாவட்டங்களுடைய அரசு மருத்துவமனைகளினுடைய அடிப்படை வசதிகள், — நீங்கள் கேட்டதுபோல கட்டடங்கள், கட்டில்கள் — அதேபோல அங்கே மருத்துவர்களை நியமிப்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. வருகின்ற ஆண்டில் நாகப்பட்டினம் போன்ற மாவட்டங்கள் எடுக்கப்படும்போது, அங்கே உள்ள மருத்துவமனைகளுக்கான அத்தனை அடிப்படை வசதிகளும் செய்து தரப்படும் என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அந்த மானியக் கோரிக்கைமீதான விவாதத்தை நிறைவு செய்கிறபோது, அந்த மானியக் கோரிக்கையின்மீது சில அறிவிப்புகளை வெளியிட்டார்கள். அந்த வகையில் கோவை மாவட்டத்தில் ஏற்கெனவே தொடங்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன. பல்லாயிரக்கணக்கான மக்கள் கிராமப்புற ஏழை ஜனங்கள், நகரத்தை நோக்கி வந்துதான் வைத்தியம் செய்ய வேண்டிய நிலையுள்ளது. ஆகவே, கீரநத்தம் ஊராட்சியில் இடஒதுக்கீடு உட்பட அனைத்தும் செய்து முடித்து தீர்மானம் போடப்பட்டிருக்கிறது; அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அம்மாதிரியான ஆரம்ப சுகாதார நிலையங்களை நடப்பு நிதியாண்டிலேயே தொடங்கிச் செயல்படுத்த அரசு முன்வருமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை புரட்சித் தலைவி அம்மாவுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு வருகின்ற நிதியாண்டிலே நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

[2005 ஏப்ரல் 11

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது இருக்கக்கூடிய மக்கள் தொகை கணக்கீட்டிற்கு ஒத்தாற்போல ஆரம்ப சுகாதார நிலையங்களையும், துணை சுகாதார நிலையங்களையும் தமிழகத்திலே அதிகப்படுத்துவதற்கான ஒரு திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்கு எடுத்துச் சென்றதாகக் கூறியிருக்கிறார்கள். இப்போது தமிழகத்தில் இருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் எல்லாம் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த ஜனத்தொகையைக் கணக்கிட்டுக் கொடுக்கப்பட்டவை. ஆகவே, இப்போது இருக்கக்கூடிய ஜனத்தொகைக்கு ஒப்ப எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள், எத்தனை துணை சுகாதார நிலையங்கள் அதிகப்படுத்தப்படவிருக்கின்றன? அப்படிப்பட்ட திட்டத்தை நம்முடைய அமைச்சர் அவர்கள் எந்த அளவுக்கு இன்றைக்கு வகுத்திருக்கிறார்கள் என்பதை அவைக்குத் தெரிவிப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய அந்தக் கேள்வியைப் பொறுத்தவரையில், சுகாதாரத் துறைமூலமாக ஓர் ஆய்வு செய்து கணக்கிட்டுப் பார்க்கும்போது 179 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் இப்போது இருக்கக்கூடிய மக்கள் தொகையின் அடிப்படையில் கூடுதலாக தேவைப்படுகின்றன; அதேபோல் துணை சுகாதார நிலையங்கள் 901 இப்போது தேவைப்படுகின்றன என்பதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, அதேபோல மத்திய அரசுக்கும் அதை எடுத்துச்சென்று, அதற்கான நிதியைப் பெற்று வருகின்ற நிதியாண்டிலே அதுபோன்ற அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணைச் சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கை கொண்ட மருத்துவமனைகளாக பல இடங்களில் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. என்னுடைய சேரன்மகாதேவி தொகுதியில் உள்ள கல்லிடைக்குறிச்சி பேரூராட்சியின் ஜனத்தொகை சுமார் 60 ஆயிரமாக இருக்கிறது. அங்கே பல நோயாளிகள் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வந்து போகிறார்கள். ஆகவே அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை கொண்ட அரசு மருத்துவமனையாக இந்த ஆண்டு தரம் உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2005 ஏப்ரல் 11]

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு பொறுப்பேற்றவுடனே ஒன்றியத்திற்கு ஓர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற கோட்பாட்டிலே இதுவரையில் 105 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. வருகின்ற நிதியாண்டில், நிதிநிலைக்கு ஏற்ப மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை புரட்சித் தலைவி அம்மாவின் மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுனாமி பேரலையால் வந்த சேதத்தால் நாகை மாவட்டத்தினுடைய தலைமை மருத்துவமனைக்கு 9 கோடி ரூபாய் அளவுக்கு மேம்பாட்டுத் திட்டம் இருக்கிறது. மானியக் கோரிக்கை கொள்கை விளக்கக் குறிப்பிலே மாவட்டத்திற்கு ஒரு மையத்திலே, பேறுகாலத் திட்டம் நிலை இரண்டு அறிமுகப்படுத்தப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு, நாகைக்கு நிறைய சலுகை செய்கின்ற நேரத்திலே அந்தத் தொகையை, ஒன்றரை கோடி ரூபாய் அளவிலே பேறுகால திட்டம் இரண்டாம் நிலையை மயிலாடுதுறைக்குக் கொடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினத்திற்கு ஒதுக்கிய நிதி வேறு. அது, தனியார் நிறுவனம், பல்வேறு தொண்டு நிறுவனங்கள் சேர்ந்து வந்து இயங்கி அந்த மருத்துவமனையினுடைய வளர்ச்சிக்கு, நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. உங்களுடைய தொகுதிக்கு உட்பட்ட மயிலாடுதுறைக்கு, நான் ஏற்கெனவே கூறியதுபோல், உலக வங்கி நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்கான ஆய்வு நடத்தி, என்னென்ன திட்டங்களைத் திட்ட வேண்டும், எத்தனை மருத்துவர்கள் நியமிக்க வேண்டும், அதேபோல அங்கே அடிப்படை வசதிகளைப் பெருக்குவதற்கும், உபகரணங்கள் வாங்குவதற்கும் தொகை

ஒதுக்கப்பட்டிருக்கிறது. வருகின்ற நிதியாண்டிலே உங்களுடைய மாவட்டம் எடுத்துக்கொள்ளப்படும்போது, அதற்கும் அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–35

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 329, திரு. வி.கே. லட்சுமணன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**329—**

## இலவச மருந்து

***50739—திரு. வி.கே. லட்சுமணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் அரசு மருத்துவமனைமூலம் ஏழை நோயாளிகளுக்கு சைக்ளோஸ்போரின் மருந்து முறையாக உரிய காலத்தில் இலவசமாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு பொது மருத்துவமனைகளில் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்துகொள்ளும் பொதுமக்களுக்கு அறுவைச் சிகிச்சைக்குப்பின் உட்கொள்ள வேண்டிய சைக்ளோஸ்போரின் மருந்து எல்லா அரசு பொது மருத்துவமனைகளிலும், குறிப்பாக கோவை அரசு மருத்துவமனை உட்பட இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல், ஓய்வு பெற்ற அரசு ஊழியர், அரசு ஊழியர் மற்றும் அவர்தம் வாரிசுகளுக்கும் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைக்குப் பின் உட்கொள்ள வேண்டிய சைக்ளோஸ்போரின் மருந்து இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறுநீரகக் கோளாறு என்பது, ஏழை பணக்காரர்கள் என்ற வேறுபாடு இல்லாமல் இன்றைக்கு எல்லோருக்கும் வருகின்றது. அரசு ஊழியர்களுக்கு, அரசு மருத்துவமனைகளிலே இந்த சைக்ளோஸ்போரின் மருந்து இலவசமாக வழங்கப்படுகிறது. வாழ்நாள் முழுவதும் இந்த சைக்ளோஸ்போரின் மருந்தை அவர்கள் உண்டு வந்தால்தான் அவர்கள் உயிரோடு இருக்க முடியும் என்ற நிலைமை



இருக்கின்றது. கோவை போன்ற பெரிய மருத்துவமனைகளிலேகூட, இந்தச் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்யப்படுவதில்லை. எனவே, ஏழை மக்கள் அங்கே அறுவை சிகிச்சை செய்துகொள்ள முடியாமல் இருக்கிற நிலைமையில் இருக்கின்றவர்கள், சென்னைக்கு வரவேண்டிய ஒரு நிலைமை ஏற்படுகின்றது. ஆகவே, கோவையிலேயே இந்தச் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்வதோடு மட்டுமல்லாமல், அரசு ஊழியர்களுக்கு எப்படி 3 மாதங்களுக்கு ஒரு முறை அந்த ஆணையைப் புதுப்பிக்காமலேயே இந்த மருந்து வழங்கப்படுகிறதோ, அதேபோல மற்றவர்களுக்கும் இந்த ஆணையை 3 மாதங்களுக்கு ஒரு முறை புதுப்பிக்க வேண்டுமென்ற நிலைமை இல்லாமல் தொடர்ந்து எல்லா காலங்களிலும் சைக்ளோஸ்போரின் மருந்தை வழங்க அரசு முன்வருமா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்களுடைய முதல் கேள்வியிலேயே கோவை அரசு மருத்துவமனையிலே சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சையைத் தொடங்க வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். தமிழகத்திலே இருக்கக்கூடிய 12 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலே முதன்முதலாக சென்னையிலேயும், கீழ்ப்பாக்கத்திலேயும், ஸ்டான்லி மருத்துவமனையிலேயும், இராயப்பேட்டையிலேயும் இப்போது அதற்கான உபகரணங்கள் வாங்கி, அறுவைச் சிகிச்சை நடந்துகொண்டு வருகிறது. கோவை மருத்துவமனையைப் பொறுத்தளவிலே, M.C.I. உறுப்பினர்கள் வருகைபுரிந்தபோதுகூட, ஏற்கெனவே இதுசம்பந்தமாக பல கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். அதற்காக இப்போது அங்கே மருத்துவர் நியமிக்கப்பட்டு, அதற்கான உபகரணங்களும் வாங்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, வருகின்ற ஆண்டு அந்த மருத்துவமனையிலே அறுவைச் சிகிச்சைக்கான ஏற்பாடு இந்த அரசால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் செய்து தரப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல, சைக்ளோஸ்போரின் மாத்திரையைப்பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே இருக்கக்கூடிய பொது மக்களுக்கும் கொடுக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைத்தார்கள். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடனே சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்யும் வறுமைக் கோட்டிற்குக்கீழே உள்ளவர்களுக்கும். தனியார்

[2005 ஏப்ரல் 11

மருத்துவமனையிலே அவர்கள் அந்த அறுவைச் சிகிச்சையைச் செய்தால்கூட அவர்களுக்கும் அந்த மாத்திரைகள் இலவசமாகக் கொடுக்கப்படுகின்றன என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

2001–லே 63 இலட்சம் ரூபாய்க்கு அந்த மாத்திரைகள் தமிழகத்திலே இருக்கக்கூடிய அத்தனை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலேயும் இலவசமாக வழங்கப்பட்டிருக்கின்றன; 2002–லே 60,52,649.91 ரூபாய்க்கு வழங்கப்பட்டிருக்கின்றன; 2003–லே 60,62,019.91 ரூபாய்க்கு வாங்கி வழங்கப்பட்டிருக்கின்றன; 2004–லே 74,02,464.92 ரூபாய்க்கு வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் இங்கே கூறும்போது, இந்த மாத்திரைகளைப்பற்றிச் சொன்னீர்கள். இந்த சைக்ளோஸ்போரின் மாத்திரை என்பது அரசுமூலமாகக் கொடுக்கப்படும்போது, அந்த மாத்திரையினுடைய 50 mg–யினுடைய விலை 1,769.25 ரூபாய். ஆனால், இதை நீங்கள் வெளியிலேபோய் மார்க்கெட்டிலே வாங்க வேண்டுமென்றால் 3,600 ரூபாய் ஆகிறது. இதைக் கணக்கிலே கொண்டு, இலவசமாக மட்டுமல்ல; நமது அரசு மருத்துவமனைகளிலே கொடுக்கக்கூடிய மாத்திரையினுடைய விலை 1,769.25 ரூபாய். ஆகவே, நீங்கள் வெளியிலே உள்ள மார்க்கெட்டுக்குப் போகும்போது விலை வித்தியாசம் ஆகிறது; 3,600 ரூபாய் விலை ஆகிறது. இருந்தபோதிலும், சிலர் வசதி படைத்தவர்களாக இருந்தாலும் சரி, வறுமைக் கோட்டிற்குக்கீழே உள்ளவர்களாக இருந்தாலும் சரி, காசு கொடுத்து வாங்குகிறவர்கள் இப்போது நிறைய பேர் இருக்கிறார்கள். அவர்களுடைய வசதிக்கு ஏற்றாற்போல, கீழ்ப்பாக்கத்திலே இருக்கக்கூடிய அரசு மருத்துவமனையிலே இன்றையதினம் இதே விலைக்கு, கீழ்ப்பாக்கம் மருத்துவமனைக்கு நீங்கள் சென்றீர்கள் என்றால், 1,769.25 ரூபாய்க்கு அந்த மாத்திரைகள் கொடுக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இத்தகைய நடவடிக்கையை எடுத்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப் போல, அரசு ஊழியர்களுக்கு 3 மாதங்களுக்கு ஒருமுறை இந்த ஆணையைப் புதுப்பிக்க வேண்டுமென்ற நியதி இல்லை. ஆனால், தனியார் மருத்துவமனையிலே



2005 ஏப்ரல் 11]

இந்தச் சிகிச்சை பெற்றுக்கொள்பவர்கள் 3 மாதங்களுக்கு ஒருமுறை அரசை அணுகி இந்த ஆணையைப் புதுப்பித்தால்தான் அவர்களுக்கு இந்த மருந்து வழங்கப்படுகிறது. அப்படி வழங்கப்படாத நேரத்திலே தனியார் மருந்துக் கடைகளிலே வாங்குகிறபோது, மாதம் ஒன்றுக்கு ரூபாய் 5,000–க்கு மேல் செலவாகிறது. எனவே, சென்னைக்கு வராமல், கோவை அரசு மருத்துவமனையிலேயே, இந்த மருந்தை வழங்குவதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா என்று கேட்டுக்கொள்வதோடு, இந்த அறுவைச் சிகிச்சை செய்யும்போது அதிக இரத்தம் செலவாகின்றது. எனவே, அதற்குரிய இரத்த வங்கிக்கு, கோவையிலே ஒரு புதிய கட்டடத்தையும் கட்டித்தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–40

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரத்த வங்கியைப் பொறுத்தவரையில், அங்கே இருக்கக்கூடிய அரசு மருத்துவமனை மருத்துவக் கல்லூரியிலே — அந்த இரத்த வங்கி licence வாங்க வேண்டுமென்றால், கட்டடங்கள் இருக்க வேண்டும்; அதற்குத் தக்க equipments இருக்க வேண்டும்; அப்போதுதான் அந்த மருத்துவக் கல்லூரியிலே, அந்த இரத்த வங்கிகள் செயல்படமுடியும். தமிழகத்திலே இருக்கக்கூடிய 12 மருத்துவக் கல்லூரிகளை எடுத்துக் கொண்டாலும் சரி, நமது மருத்துவமனைகளை எடுத்துக் கொண்டாலும் சரி, ஆய்வு செய்து, அந்த ஆய்வின் அடிப்படையில் இப்பொழுது இரத்த வங்கிகள் எல்லாம் செயல்பட்டு, அதற்கான licence 2007, 2008 வரையில் renewal செய்து கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசு இப்போது விதித்துள்ள அந்த விதிக்கு ஏற்றாற்போல, 1000 square feet இடங்களும், அதேபோல் மற்ற உபகரணங்கள் இல்லாவிட்டால், அவர்கள் அந்த licence-ஐப் புதுப்பிக்கமாட்டார்கள். ஆகவே, இரத்த வங்கியைப் பொறுத்தவரையில், நமது அரசு மருத்துவமனையிலே இருக்கக்கூடிய இரத்த வங்கியிலே இரத்தம் தாராளமாகக் கிடைக்கிறது. உங்களுடைய மருத்துவமனைக்கு, அந்தத் தனியார் மருத்துவமனையில் operation செய்தவர்களுக்கும் அந்த மூன்று மாதங்களுக்கான மருந்து மீண்டும் கொடுக்க வேண்டுமென்று நீங்கள் ஒரு கோரிக்கை வைத்தீர்களே, அதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய மேலான பார்வைக்கு எடுத்துச்சென்று – ஏனென்றால் வறுமைக் கோட்டிற்குக்கீழே இருக்கக்கூடியவர்கள் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றாலும், அவர்களுக்கும் இந்த மருந்து இலவசமாகக் கொடுக்கப்படுகிறது; அதையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய மேலான பார்வைக்கு

[2005 ஏப்ரல் 11

எடுத்துச்சென்று, அதற்கும் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதேபோல் இதையும் எடுத்துச்சென்று, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஒப்புதலைப் பெற்று அதற்கும் இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே cyclosporin மருந்தைப் பெறுவதாக இருந்தாலும், சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைக்கு மிக அதிக அளவு செலவாகிறது. மாற்று சிறுநீரகங்கள் கிடைப்பதில் பல காலதாமதமாகிறது. ஆகவே, அந்த நோயாளிகள், ஏழை நோயாளிகள், மிகவும் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, திருவண்ணாமலை மாவட்டத்திலிருந்து சென்னைக்கு வந்து dialysis செய்ய வேண்டுமானால், அந்த நேரம் அவர்கள் வருகின்ற நேரத்திலே, அவர்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. ஆகவே, இன்றைக்கு உலக வங்கித் திட்டத்தின்மூலம் நிதி வந்திருக்கிறது. ஆகவே, ஆங்காங்கு இருக்கின்ற மாவட்ட மருத்துவமனைகளிலும் dialysis கருவியை அமைத்தால், ஏழை எளிய மக்கள் அங்கே அவர்கள் அந்தச் சிகிச்சையைப் பெறமுடியும். அதை அரசு கவனத்தில் கொண்டு, அந்த ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை இன்றைய தினம் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் இந்தக் கோரிக்கை வருவதற்கு முன்னால், தமிழகத்திலே 7 Regional Dialysis Centres, — குறிப்பாக, திருவண்ணாமலை மாவட்டத்திலும் அந்தக் கட்டடங்கள் கட்டி முடிந்து, அதற்கான இயந்திரங்கள் வாங்கி அதற்கான டாக்டர்கள், மருத்துவர்கள், Specialists நியமிப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். ஒரு Regional Dialysis Centre-னுடைய மதிப்பு கிட்டத்தட்ட 3 கோடி ரூபாய் மதிப்பிலே, அந்த 7 இடங்களிலே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. அனைத்து மருத்துவமனைக் கல்லூரிகளிலும், படிப்படியாக அத்தனை இடங்களிலும் மருந்துகள் அதேபோல், அங்கே இருக்கக்கூடிய equipments, கருவிகளும் வாங்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, மாவட்ட மருத்துவமனையைப் பொறுத்தவரையிலே, உலக வங்கி நிதி வருவதற்கு முன்னாலே 7 மாவட்டங்களில் எடுக்கப்பட்டிருக்கிறது. உலக வங்கியினுடைய நோக்கமே, dialysis போன்ற கருவிகள் வாங்குவதற்கு மட்டுமல்லாமல்,



2005 ஏப்ரல் 11]

அங்கே இருக்கக்கூடிய நோயாளிகளைத் தீவிரமாகக் கவனித்து அவர்களுடைய நோயைத் தீர்க்க வேண்டுமென்ற எண்ணத்தில்தான், அந்த நிதியை ஒதுக்கினார்கள். ஆகவே, அரசு அதற்கான நடவடிக்கையையும் எடுத்துக் கொண்டு வருகிறது என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறுநீரக அறுவைச் சிகிச்சையிலே ஒரு மிகப் பெரிய நடைமுறை சிக்கல் இருக்கின்றது. அதிலே ஒரு கணவனுடைய இரண்டு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்டு, kidney failure ஆகி மருத்துவமனையிலே இருக்கின்றபோது, blood relatives மட்டும்தான் donor-ஆக இருக்கவேண்டும் என்ற ஒரு சட்டம் நடைமுறையிலே இருக்கின்றது. அதாவது, கணவனின் இரண்டு kidney-களும் பழுதாகி, மருத்துவமனையிலே உயிருக்குப் போராடுகின்றபோது, மனைவி தன்னுடைய kidney-யைத் தானமாகக் கொடுக்க முன்வருகின்ற சூழ்நிலையில்கூட, அந்த kidney அவருக்குப் பொருந்துகின்ற சூழ்நிலையில்கூட, அரசு மருத்துவமனைகளிலே மனைவி தானமாகக் கொடுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு சட்டச் சிக்கல் இருக்கின்றது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய நல்ல ஆட்சியிலே, அந்த விதிமுறையைத் தளர்த்தி, ஒரு கணவனுக்கு மனைவி தன்னுடைய kidney-யைத் தானமாகக் கொடுக்கலாம் என்ற விதிமுறையைத் தளர்த்துகின்றபோது, அரசு மருத்துவமனையிலே அவர்கள் இலவசமாக அந்த அறுவைச் சிகிச்சையை செய்து கொண்டு, உயிரைக் காப்பாற்றிக்கொள்ள முடியும். அந்த விதியைத் தளர்த்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட விதி அப்படியல்ல. சட்டவிதி என்பது love and affection என்றுதான் இருக்கிறது. Blood Relatives என்பது அரசாங்கம் மூலமாக நாங்கள் எடுத்துக் கொண்டோம். அரசிலே ஒரு முடிவு கேட்டு அதாவது, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்த பிறகு, இந்த கமிட்டியின்மூலமாக வரும்போது, சிலர் தங்களுடைய kidney-யை சிறுநீரகத்தை மாற்றும்போது, அவர்கள் வெளி மாநிலத்திலிருந்து வந்தாலும் சரி, அல்லது இங்கேயிருக்கக் கூடியவர்களானாலும் சரி, அவர்கள் அந்த relationship–ஐக் கூறும்போது, love and affection என்பது

[2005 ஏப்ரல் 11

சட்டத்திலே இருக்கின்றது; மனைவி என்று வரும்போது, அவரிடம் அந்த விசாரணை வரும்போது, அதிலே பல சட்டச் சிக்கல் வந்தது. ஆகவேதான் நீங்கள் கூறியதுபோல், blood relation வேறு; love and affection வேறு. ஆகவே, இதையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, அரசு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எஸ். தென்னரசு.

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு தலைமை மருத்துவமனை 600 படுக்கைகள் கொண்ட மிகப் பெரிய தலைமை மருத்துவமனை. 3,500-க்கும் மேற்பட்ட புறநோயாளிகள் தினமும் வந்து செல்கிறார்கள். சிறுநீரகம் பாதிக்கப்பட்டவர்களுக்கு இரத்த சுத்திகரிப்புக் கருவி இங்கே இல்லை. இந்த இரத்தச் சுத்திகரிப்புக் கருவி இல்லாத காரணத்தினாலே கோவைக்குச் செல்லவேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. நூறு கிலோ மீட்டருக்கு அதிகமாக இருக்கிற கோவைக்கு அனுப்பி விடுகிறார்கள் அங்கிருக்கிற மருத்துவர்கள். அந்த ஈரோடு தலைமை மருத்துவமனைக்கு ஓர் இரத்த சுத்திகரிப்பு கருவி, dialysis machine வழங்குவதற்கும், அதற்குண்டான ஒரு மருத்துவரை நியமிப்பதற்கும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் ஏற்கெனவே இதற்கு முன்னால் கேட்ட கேள்வியிலேயும் சொன்னேன், உலக வங்கியினுடைய நிதி வந்திருக்கிறது, உங்களுடைய மாவட்டம் வரும்பொழுது, அந்த மாவட்டத்தினுடைய தலைமை மருத்துவமனைக்கு அந்தமாதிரி வசதிகள் செய்வதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் Human Organ Transplantation நடைமுறையின்போது



2005 ஏப்ரல் 11]

வழங்கப்படுகிற மருந்துகளைப் பற்றியும், அது சமயங்களில் கடைபிடிக்கப்பட்ட சட்ட விதிமுறைகளைப் பற்றியும் இங்கே பதில் அளித்துக் கொண்டிருக்கிறார்கள். Human Organ Transplantation Act என்று ஒரு சட்டம் இருக்கிறது. மனித உறுப்புகளை மாற்றுவதற்கான சட்டம் வரையறுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, சென்னையிலே மூன்று மருத்துவமனைகளில் சிறுநீரகம் மாற்றுவதற்கான வசதி இருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆனால், தமிழகத்தின் பிற பகுதிகளிலே சிறுநீரகம் மாற்றுவதென்பது பெரும்பாலும் தனியார் மருத்துவமனைகளிலே நடக்கிறது. அப்படி சிறுநீரகங்களை மாற்றுகிறபொழுது அதற்கென்று கண்காணிப்பு மையங்களாக அரசு மருத்துவமனையிலே – இன்னும், குறிப்பாகச் சொல்லப்போனால் மருத்துவக் கல்லூரி முதல்வர் அளவிலே அதற்கான குழுக்கள் இருக்கின்றன. ஆனால், அதில் ஏதாவது தவறு நேரும் என்று சொன்னால் அதை மேல் முறையீடு செய்து சட்டத்தின் பார்வைக்குக் கொண்டு வருவதற்கு ஒரு நடைமுறை Committee இருப்பதாக சட்ட நூல்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், யதார்த்தத்தில் அந்த Committee-யாக எது செயல்படுகிறது என்பது பாதிக்கப்படுகிற மக்களுக்குத் தெரியவில்லை. இன்றைய காலகட்டத்தில் சிறுநீரகத் திருட்டு என்பது மிகப் பரவலாக எல்லா இடங்களிலும் நடந்து, ஏழையெளிய மக்கள் அவர்களுக்குத் தெரியாமல்.... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன், கேள்விக்கு வாருங்கள்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** நான் கேள்விக்கு வருகிறேன். எனவே, அப்படி சிறுநீரகத் திருட்டுகளை கண்காணித்து, வழக்கு நடத்துவதற்கான சட்டப்படியான மையம் எது? அதில் எப்படி அந்த வழக்குகளை ஏற்றுக்கொள்கிறார்கள்? அதன் வழியாக எத்தனை வழக்குகள் காவல் நிலையத்திற்கு அனுப்பப்பட்டன? எத்தனை பேருக்கு தண்டனை வாங்கித் தரப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் Committee-யைப் பற்றி பேசினார்கள். இந்த Transplantation Act பிரகாரம், Committee என்பது சென்னையில் மட்டும் இருந்தது. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடனே மதுரையிலும், அதேபோல் கோவையிலும் இப்பொழுது அந்த

[2005 ஏப்ரல் 11

Committee- இயங்கிக்கொண்டு வருகிறது. கடந்த இரு வாரங்களுக்கு முன்னால் நீங்கள் பத்திரிகையிலே படித்திருக்கலாம். அரசைப் பொறுத்தவரையிலே இதுபோன்ற தவறுகள் நடைபெறக்கூடாது என்பதற்காக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. ஒருவருக்கு சிறுநீரகம் வரும்பொழுது, அவர்களுக்குக் கொடுக்க முடியாது என்று இந்த Committee reject செய்தது. ஆனால், இதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்துக்குச் சென்றார்கள். உச்ச நீதிமன்றம் தீர்ப்பு என்ன வழங்கியது என்றால், தமிழக அரசு இந்த Committee அமைத்து, இந்த Committee-யின் மூலமாக எடுத்த நடவடிக்கை சரி என்று கூறியது. எப்படியென்றால், அந்த Committee-யிலே இருக்கக்கூடியவர்கள், இப்பொழுது சென்னையை எடுத்துக் கொண்டால், சென்னை அரசு மருத்துவமனையினுடைய Dean, அதைப்போல் அங்கேயிருக்கக்கூடிய ஒரு D.D., அதற்குமேலாக D.M.S. ஆக மூவரும் இருக்கிறார்கள். அந்த மூவரும் அந்த Committee-க்கு வருகின்றபோது, அங்கிருந்து பரிசீலனை செய்யக்கூடிய Nephrologist யார் அதைப் பரிந்துரை செய்வாரோ, அவரும் வருகிறார். அவர்கள் இருவரையும், Patient–ஐயும், Donor–ஐயும் தனித்தனியாக வைத்து, அவர்களுக்கு அந்த Kidney பொருந்துமா என்று பல்வேறு கேள்விகளைக் கேட்கிறார்கள். அந்தக் கேள்விகளின் அடிப்படையிலே சில இடங்களிலே அவர்கள் பதில்களைத் தவறாகச் சொன்னாலோ அல்லது அங்கிருந்து வரும்பொழுது, அந்த Authorisation Committee-யிலே இருக்கக்கூடியவர்கள் அவர்களுக்கு என்ன அந்தச் சட்டத்திற்கு உட்படுகிறதோ அதற்கு மேலாக—அவர்கள் அந்தச் சட்டத்திற்கு உட்பட்டு வரவில்லையென்றால், அந்த Committee-க்கு வரும்பொழுது Kidney–யைப் பொருத்தமுடியாமல் மறுக்கப்படுகிறது. ஆகவேதான், உச்ச நீதிமன்றம்கூட கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னால் தமிழக அரசைப் பாராட்டியிருக்கிறது என்பதை நான் இந்த மாமன்றத்திலே பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *330, 331* பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினா எண் *332*, திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

**332—**

**துணை பாகங்கள் பூங்கா**

***23776—திரு. சி. சண்முகவேலு:***

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2005 ஏப்ரல் 11]

சென்னைக்கு அருகே மோட்டார் வண்டி துணை பாகங்கள் தயாரிக்கும் பூங்கா ஒன்றை TIDCO உதவியுடன் அமைக்க நிலம் கையகப்படுத்தப்பட்டுவிட்டதா?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் கையகப்படுத்தப்பட்டுவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சென்னை அருகே மோட்டார் வண்டி துணை பாகங்கள் தயாரிக்கும் பூங்காவிற்கு நிலம் கையகப்படுத்தப்பட்டதாகக் கூறினார்கள். இதில் TIDCO–வினுடைய பங்கு என்ன என்பதை மாண்புமிகு அமைச்சரிடம் அறிய விரும்புகிறேன். அதைப்போல அதற்கு திட்ட மதிப்பீடு எவ்வளவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதிலே எத்தனை ஏக்கர் நிலத்தில் அந்த நிறுவனமானது அமைய உள்ளது என்பதையும், அங்கே எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய ஒரு சூழ்நிலை உள்ளது என்பதையும் தங்கள்மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10–50*

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் TIDCO-வின் பங்கு *11* சதவீதம், அதாவது, *2.2* கோடி ரூபாயாக இருக்கும். மொத்தம் *1,343* ஏக்கர் நிலப்பரப்பில் அமையவிருக்கும் இந்தத் தொழிற்சாலை, *232* கோடி ரூபாய் முதலீட்டில் அமையவிருக்கிறது என்பதையும், இதில் நேரடியாக *3,000* பேர்களும், மறைமுகமாக கிட்டத்தட்ட –அந்தத் திட்டம் முழுவதும் முடிகின்ற நிலையில் – *30,000* பேர்களும் வேலைவாய்ப்பைப் பெறுகின்ற வகையில் அந்தத் தொழிற் பூங்கா அமையவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே வேறு என்ன, பிறத் தொழில்கள் அதிலே அமைவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதா என்பதையும், எவ்வளவு முதலீட்டை அந்தப் பூங்கா ஈர்க்கும் என்பதையும் கேட்டுக்கொள்கிறேன். கோவை மாவட்டம் தென்னிந்தியாவினுடைய Manchester-ஆக இருக்கக்கூடிய ஒரு பெரிய நகரம். அங்கே, தொழிற்சாலைகள் மிகச் சிறப்பான

[2005 ஏப்ரல் 11

முறையிலே செயல்பட்டு வருகின்றன. அந்த மாவட்டத்திலே மோட்டார் உற்பத்தித் தொழிற்சாலைகள் இதுவரை அங்கு ஒன்றும் இல்லை. கோவை மாவட்டத்திலே, புதிதாக மோட்டார் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்று அமைப்பதற்கு நம்முடைய அரசு முன்வருமா என்பதையும் கேட்டுக்கொள்கிறேன். அதற்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும், பன்னாட்டு விமான நிலையம், நிலம், தண்ணீர், சாலை வசதிகள் போன்ற அனைத்து வசதிகளுமே அங்கேயுள்ளன. அதைக் கருத்திலேகொண்டு, சென்னையிலே எப்படி Hyundai, Ford, Mitsubishi, அதேபோல Ashok Leyland போன்ற தொழிற்சாலைகள் உள்ளனவோ, அதைப்போல கோவையிலே ஏதாவது ஒரு தொழிற்சாலை அமைப்பதற்கு நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, அம்மா அவர்களுடைய ஆட்சியிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் 2,500 கோடி ரூபாய் அளவில் உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டை இந்தப் பூங்கா ஈர்க்கும் என்பதையும், ஆட்டோ துணை பாகங்கள் தயாரிப்பது, நடுத்தர மற்றும் லேசான இரக பொறியியல் கணினி மென்பொருள் தயாரிப்பு, மின் மற்றும் மின்னணுவியல் தொழில்கள், நுகர்பொருட்கள் தொழில்கள், ஆடைகள் தயாரிப்பு மற்றும் தோல் பொருட்கள் தயாரிக்கின்ற தொழில்களைச் செய்யும் வகையில் இந்தப் பூங்கா அமையவிருக்கிறது. மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோயம்புத்தூர் மாவட்டத்தில் இதுபோன்று ஒரு பூங்காவை அமைக்க அரசு முன்வருமா என்று கேட்டிருக்கிறார்கள். இதில் தனியார்கள் இதுபோன்று, மகேந்திரா தொழிற் பூங்கா போன்று, தனியார்கள் அந்தத் தொழில்களைத் தொடங்க முன்வருவார்களானால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு TIDCO-வினுடைய பங்கையும் அதில் வைத்து அங்கே அந்தப் பூங்கா உருவாவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கு அருகே இந்த மோட்டார் வண்டி துணை பாகங்கள் தயாரிக்கின்ற பூங்கா வருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது எந்த ஊர், எந்த மாவட்டத்தில் இருக்கிறது, எத்தனை ஏக்கர்



2005 ஏப்ரல் 11]

என்பதை அவைக்குத் தெரிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது மகேந்திரா தொழிற்பூங்கா. சிங்கபெருமாள்கோவில் அருகிலே இருக்கிறது. மொத்தம் 1,343 ஏக்கர் நிலப்பரப்பில் அமையவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.எஸ். கண்ணன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறை அமைச்சர் அவர்கள் சென்னைக்கு அருகே என்று சொல்லி, இப்போது இடத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதேபோல், காட்டுப்பள்ளி துறைமுகம் அருகே, அரசுத் தரப்பில் ஏறக்குறைய 5,000 ஏக்கர் நிலமெடுத்து Export Zone ஏற்படுத்துவதாக ஒரு திட்டம் இருப்பதாக அறிகிறேன். அது உண்மையா? எப்போது ஏற்படுத்தப்படும் என்ற விவரங்களையும், எவ்வளவு முதலீட்டிலே என்பதையும், எவ்வளவு பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு தனிக் கேள்வி போட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கு அருகே இந்த மோட்டார் வண்டிகள் துணை பாகங்கள் தயாரிக்கின்ற பூங்காவை TIDCO உதவியுடன் அமைக்க நிலம் கையகப்படுத்தப்பட்டு அதனுடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருப்பதாக ஒரு மகிழ்ச்சியான செய்தியை தொழில் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். Nokia போன்ற பெரிய நிறுவனங்கள்கூட இங்கே தொழில் தொடங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. மிக்க மகிழ்ச்சி. கோவை போன்றிருக்கிற பகுதிகளில், மாண்புமிகு உறுப்பினர் திரு. சண்முகவேலு அவர்கள் சொன்னதுபோல, பஞ்சாலை உள்ளிட்ட ஆதாரத் தொழில்கள் பாதிக்கப்பட்டிருக்கும் ஒரு மாவட்டத்தில் 1,500-க்கும் மேற்பட்ட, மோட்டார் உதிரி பாகங்களை உற்பத்தி செய்கிற வலுவான engineering தலமாக இருக்கிற அந்த மாவட்டத்தில் இதுபோன்ற ஓர் அமைப்பை உருவாக்க எதிர்காலத்திலாவது ஒரு செயல் திட்டத்தை உருவாக்கி நிறைவேற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[2005 ஏப்ரல் 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே அமைச்சர் பதில் சொல்லிவிட்டார். திரு. ஆறுமுகம்.

*முற்பகல் 10–55*

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அமையவிருக்கிற அந்த மோட்டார் வண்டி துணை பாகம் தயாரிக்கும் தொழிற்சாலை எங்கள் ஊருக்கு அருகிலேயேதான் வர இருக்கிறது. அதிலே அந்த மோட்டார் வாகன துணை பாகம் உற்பத்தி மட்டும் வருகிறதா? (குறுக்கீடு) இல்லை, அதிலே பல்வேறு கம்ப்யூட்டர் தயாரிக்கும் தொழிற்சாலைகளும் வர இருப்பதாகச் சொல்கிறார்கள். அவை இரண்டும் இணைந்து வருகின்றனவா அல்லது வேறு தொழிற்சாலைகள் வர அங்கே வாய்ப்பு இருக்கிறதா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற் பூங்கா அமையவிருக்கிற இடத்தில்தான் அவர்களுக்கு தனித்தனியாகக் குறிப்பிட்ட ஏக்கர்களைப் பிரித்துக் கொடுத்து, அந்த இடத்திற்குள்ளாகத்தான் அந்தத் தொழிற்சாலை வர இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 333, திரு. என். ரெங்கநாதன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**333—**

### நெற்களம்

***35814—திரு. என். ரெங்கநாதன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதி, காளஹஸ்தினாபுரத்தில் நெற்களம் ஒன்று அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதைய நிதிநிலைமைக்கு ஏற்றவாறு பூம்புகார் தொகுதி, காளஹஸ்தினாபுரத்தில் வேளாண்மை விற்பனைக் குழுமூலமாக நடப்பு நிதியாண்டில் உலர்களம் அமைக்க ஆய்வு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



2005 ஏப்ரல் 11]

**திரு. என். ரெங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டிருந்த வினாவிற்கு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவதாகச் சொல்லியிருக்கிறார். ஆகையால், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 334, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**334—**

### மாணவர் விடுதி

***42098—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், அத்திப்பாடி ஊராட்சி அரசு உயர்நிலைப் பள்ளியில் மாணவர் விடுதி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், அத்திப்பாடி ஊராட்சி அரசு உயர்நிலைப் பள்ளியில் மாணவர் விடுதி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், அத்திப்பாடி கிராமம் என்பது கிருஷ்ணகிரி மாவட்டத்தினுடைய ஒரு கடைக்கோடி பகுதியாகும். அங்கே அரசு உயர்நிலைப் பள்ளியில் படிக்கின்ற மாணவர்களுக்கு அரசு விடுதி அமைக்கும் திட்டம் உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டத்தில் ஊத்தங்கரையிலேயே பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளியினுடைய

மாணவர் விடுதி இயங்கி வருகிறது. வாடகைக் கட்டடத்தில் இயங்கும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருடைய நல விடுதிகள் அனைத்திற்கும் சொந்தக் கட்டடம் கட்டவேண்டிய முடிவு எடுக்கப்பட்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்று 972 விடுதிகளில் 770 தனியார் விடுதிகளில் படிக்கக்கூடிய மாணவர்களுடைய அடிப்படை வசதிகள் இல்லாமல் வேதனைப்படுகின்ற நிலைமை அறிந்து நிதிநிலைமையினுடைய சிரமம் இருந்தாலும்கூட பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினருடைய மாணவச் செல்வங்களுடைய நலன் பேணி, இன்று 630 விடுதிகள் கட்டக்கூடிய திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மேலும், இருக்கின்ற விடுதிகளிலேயே ரூபாய் 31 இலட்சம் ஒதுக்கி, 775 கூடுதல் மாணவர்கள் சேர்ந்து படிக்கவும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே, அத்திப்பாடியில் விடுதி தொடங்கும் திட்டம் இந்த ஆண்டு பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு திட்டத்தில் இல்லை என்று குறிப்பிடுகிறார். ஆனால், இந்த அத்திப்பாடி என்கின்ற கிராமம் எங்கள் மாவட்டத்தினுடைய கடைசி எல்லையில் இருக்கிறது. அங்கிருந்து அதிக தூரம் சென்றுதான் மாணவர்கள் விடுதிக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. அப்படிச் சென்றால் விடுதியில் இடம் இல்லையென்று சொல்லிவிட்டால், அந்த மாணவர்களுக்கு படிக்கின்ற வாய்ப்பு கெட்டுப் போய்விடுகிறது. அவர்கள் அந்த வாய்ப்பை இழக்கிறார்கள். அது, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் மிக அதிகமாக படிக்கிற ஒரு பள்ளியாகும். இந்தப் பள்ளி மையப் பகுதியாக இருக்கின்ற காரணத்தால், இங்கே ஒரு விடுதி அமைக்கும் திட்டத்தினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து கட்டிக் கொடுக்க வேண்டுமென தங்கள் வாயிலாக கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மகாலிங்கம்.

**திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திசையை நோக்கி பாதம் பணிந்து வணங்குகிறேன். ** (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, அந்தக் குற்றச்சாட்டு நீக்கப்படுகிறது. உட்காருங்கள். (குறுக்கீடு) நீக்கப்படுகிறது. உட்காருங்கள்.

**திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு இதய தெய்வம் அம்மாவினுடைய பொற்கால ஆட்சியில் கல்லாதவர்கள் இல்லையென்ற சூழ்நிலை உருவாக்குவதற்காக..

முற்பகல் 11–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரின் பதில் முடிகிறவரை கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. எஸ். மகாலிங்கம்:** பல்வேறு நலத் திட்டங்களை நாள்தோறும் அறிவித்து வருகிறார்கள். அதன்மூலமாக கடந்த 2001–2002 ஆம் ஆண்டில் சேவூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு 31 இலட்சம் ரூபாயிலே நல்ல ஆய்வுக்கூடம் கொண்ட பள்ளிக் கட்டடத்தைக் கட்டிக் கொடுத்தார்கள். அதற்காக அந்தப் பள்ளி மாணவர்கள் பாராட்டைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். மேலும், மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் 700–க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் பயின்று வரும் அந்தச் சேவூர் அரசு மேல்நிலைப் பள்ளியிலே நடப்பு நிதியாண்டிலே புதிதாக அரசு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின்மூலமாக மாணவர் விடுதி அமைத்துத் தருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அந்தப் பகுதியில் தேவைக்கு ஏற்ப, மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2005 ஏப்ரல் 11

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

## 2. அறிவிப்புகள்

### (அ) பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைகள் மற்றும் தமிழ்நாடு நில மேம்பாட்டுக் குழுமம் ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் நியமனம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கீழ்க்காணும் அமைப்புகளில் உள்ள காலியிடங்களுக்கு மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து முறையாக வேட்பு மனுக்கள் வரப்பெற்றுள்ளன:

| | |
|---|---|
| 1. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் (ஆட்சிமன்றப் பேரவை) | 1. திரு. ப. இராஜரெத்தினம்<br>2. திரு. ஜி. கோதண்டராமன்<br>3. திரு. துரை கி. சரவணன் |
| 2. சென்னைப் பல்கலைக்கழகம் (ஆட்சிமன்றப் பேரவை) | 1. திரு. சி. துரைராஜ் |
| 3. தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் (ஆட்சிமன்றப் பேரவை) | 1. முனைவர் செ.கு. தமிழரசன் |
| 4. தமிழ்நாடு நில மேம்பாட்டுக் குழுமம் | 1. திரு. செ. தாமோதரன்<br>2. திரு. பி.ஜி. இராஜேந்திரன்<br>3. திரு. என்.ஆர். ரங்கராஜன் |

தேர்ந்தெடுக்கப்பெற வேண்டிய உறுப்பினர்களுடைய எண்ணிக்கையும் முறையாக வரப்பெற்றுள்ள வேட்பு மனுக்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால் வேட்பு மனு அளித்த மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அந்தப் பதவிகளுக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களுடைய பதவிக் காலம் 5–12–2007 வரை ஆகும்.



2005 ஏப்ரல் 11] [பேரவைத் தலைவர்]

சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினரின் பதவிக் காலம் 6–5–2006 வரை ஆகும்.

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினரது பதவிக் காலம் 21–11–2007 வரை ஆகும்.

தமிழ்நாடு நில மேம்பாட்டுக் குழுமத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களுடைய பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகளாகும்.

தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காகப் பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்த நாளோடு அவருடைய உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

### (ஆ) பேரவை அலுவலில் மாற்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை அலுவல்கள் குறித்து ஏற்கெனவே— திரு. புகழேந்தி சொல்லிவிட்டீர்களா? — அறிவிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலில் கீழ்க்காணும் மாற்றம் பேரவையின் ஒப்புதலோடு செய்யப்படுகின்றது:

8–4–2005 அன்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கைகள்மீதான விவாதம் இன்றும் தொடர்வதால், இன்று மாலை எடுத்துக் கொள்ளப்படுவதாக இருந்த மானியக் கோரிக்கை எண் 17 – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மீதான விவாதமும் வாக்கெடுப்பும் நாளை (12-4-2005) காலை எடுத்துக்கொள்ளப்படும்.

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடுகள்) திரு. எ.வ. வேலு அவர்கள். (குறுக்கீடுகள்)

## 3. தகவல் கோரல்

### (அ) உறுப்பினர்களின் முன்னறிவிப்புகள்

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. கே.ஆர். ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

[2005 ஏப்ரல் 11

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரிதி, என்ன சொல்லுங்கள். திரு. பரிதி.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தில் பல்வேறு முறைகேடுகள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறீர்கள். அவ்வளவுதான். அத்தோடு முடியுங்கள். அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. என்னுடைய அறைக்கு வாருங்கள். விளக்கம் சொல்கிறேன். (குறுக்கீடு) என்னுடைய அறைக்கு வாருங்கள். விளக்கம் சொல்கிறேன்.

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. எ.வ. வேலு அவர்கள். (குறுக்கீடுகள்) அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. எ.வ. வேலு.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. எ.வ. வேலு. (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், ஒத்திவைப்புத் தீர்மானம் காலையிலே கொடுத்திருக்கிறார். அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. என்னுடைய அறைக்கு அவர் வரட்டும். நான் விளக்கம் சொல்கிறேன். (குறுக்கீடு)



2005 ஏப்ரல் 11]

**திரு. துரைமுருகன்:** இன்றைக்குக் கொடுத்தது தங்கள் ஆய்வில் இருப்பதில் ஒன்றும் தவறு இல்லை. ஆனால், அவர் என்ன தெரிந்துகொள்ள விரும்புகிறார் என்றால், இன்னும் இரண்டு நாட்கள்தான் இருக்கின்றன. **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து தாங்கள் பேசியது அனைத்தும் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு) தாங்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. திரு. எ.வ. வேலு. (குறுக்கீடுகள்) திரு. எ.வ. வேலு, வாசியுங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பதில் சொல்லிவிட்டேன், தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. எ.வ. வேலு.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. தயவுசெய்து இதற்கு ஒன்றும் விளக்கம் தேவையில்லை. ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார். அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. அவர் என்னுடைய அறைக்கு வரட்டும். நான் விளக்கம் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) அதோடு உட்காருங்கள். திரு. எ.வ. வேலு. (குறுக்கீடுகள்)

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. எ.வ. வேலு:** Mike கொடுத்தால்தானே? (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-05

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு, வாசியுங்கள். (குறுக்கீடுகள்) அன்றைக்கே உங்களைப் பேசவிடாமல் கெடுத்துவிட்டார்கள். இப்போது வாசியுங்கள். (குறுக்கீடுகள்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2005 ஏப்ரல் 11

**(ஆ) பேரவையின் அலுவலர்கள் மாடத்தில் பதவி பெயர் குறித்த பலகை வைக்கப்படுவது**

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் இந்த மன்றத்தினுடைய நீண்டநாள் உறுப்பினர், நானும் உறுப்பினர், மற்றவர்களும் உறுப்பினர்கள். ஆனால், இதுவரையிலே நான் காணாத ஒரு புதுமை என்னவென்று கேட்டால், இங்கேயிருக்கிற Officers உட்கார்ந்திருக்கிற gallery–யில், எந்தெந்த இலாகாவைச் சார்ந்தவர்களோ, முதலமைச்சர் அலுவலகத்தைச் சார்ந்தவர்களோ அல்லது Chief Secretary-யோ வந்து உட்காருவார்கள், போவார்கள், பார்த்திருக்கிறோம். ஆனால், இப்போது திடீர் திடீரென்று ஒவ்வொரு நாளும் தலைமைச் செயலாளர் என்று ஒரு போர்டு, Finance Secretary என்று ஒரு போர்டு, இப்படி வைக்கிறார்கள். சரி, அவர்கள்தான் உட்காருகிறார்களா என்று கேட்டால், அவர்களும் உட்காருவதில்லை. ஆக, மாறி உட்காருகிறார்கள். இப்படியொரு நிலைமையை ஏன் புதிதாக இப்போது ஆரம்பித்திருக்கிறார்கள்? இதுவரையில், கடந்த 20, 23 வருடங்களிலே நான் பார்க்காதது, இப்போது வைப்பதினாலே ஒன்றும் தலைமுழுகிப் போய்விடவில்லை. ஏன், என்ன காரணம்? தெரிந்து கொள்ளலாம் என்றுதான். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன காரணம் என்பதை நான் விசாரித்துச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) விசாரித்துச் சொல்கிறேன். திரு. எ.வ. வேலு.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற வளாகம் என்பது உங்களுடைய பராமரிப்பில் இருக்கிறது. உங்களுக்குக் கீழே வருகிறது. உங்களுக்குத் தெரியாமல், அதைப்போன்ற போர்டுகள் வைப்பதும், வேறு எதுவும் செய்வதும் முறையல்ல. உங்களுக்கோ, சட்டமன்றப் பேரவைச் செயலாளருக்கோ தெரியாமல் அங்கே எதுவும் வைக்கமுடியாது. ஆக, எப்படி அதை வைத்தார்கள்? யாருடைய அனுமதியின் பேரிலே அதை வைத்தார்கள் என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, எப்போதுமே அந்தந்த மானியக் கோரிக்கைகள் தொடர்பான அரசு அலுவலர்கள் வந்து அமர்வதுண்டு. தாங்கள் சொல்லியது என்னுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. என்னவென்று பார்க்கிறேன். (குறுக்கீடுகள்)



2005 ஏப்ரல் 11]

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** தினசரி தலைமைச் செயலாளர் என்று ஒரு போர்டு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நீங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்துவிட்டீர்கள். என்னவென்று பார்க்கிறேன். திரு. எ.வ. வேலு. (குறுக்கீடு)

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். அதற்கெல்லாம் இப்போது விளக்கம் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள்.

## 4. கவன ஈர்ப்பு

**(அ) சாத்தனூர் அணை ஆயக்கட்டில் நீரின்றி பயிர்கள் பாதிப்பு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. எ.வ. வேலு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். (குறுக்கீடு) திரு. எ.வ. வேலு வாசியுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சாத்தனூர் அணை ஆயக்கட்டில் 45 ஆயிரம் ஏக்கர் நிலத்திலுள்ள பயிர்கள் நீரின்றி பாதிக்கப்பட்டுள்ளது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைமுன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### அறிக்கை

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், சாத்தனூர் கிராமத்தில் தென் பெண்ணையாற்றின் குறுக்கே சாத்தனூர் அணை கட்டப்பட்டுள்ளது. சாத்தனூர் நீர்த்தேக்கத்திலிருந்து இடது மற்றும் வலதுபுறக் கால்வாய்கள்மூலம் முறையே 24,000 ஏக்கர் மற்றும் 21,000

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2005 ஏப்ரல் 11

ஏக்கர், ஆக மொத்தம் 45,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. மேலும், விழுப்புரம் மாவட்டம், திருக்கோயிலூர் அணையின் பழைய ஆயக்கட்டில் உள்ள 5,000 ஏக்கர் நிலங்களுக்கான பாசன நீரும் இவ்வணையில் சேமித்து வைத்து, தேவைப்படும்போது தண்ணீர் திறந்துவிடப்பட்டு, ஏரிகளில் நிரப்பப்பட்டு, பாசனம் நடைபெறுகிறது.

2004 ஆம் ஆண்டில் பெய்த பருவ மழையின் காரணமாக, சாத்தனூர் அணையின் நீர் மட்டம் அதன் முழு கொள்ளளவான 119 அடி உயரத்தை எட்டிய நிலையில், விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று 10-1-2005 முதல் சுழற்சி முறையில் 90 நாட்களுக்கு (77 நாட்களுக்கு மூன்று சுழற்சிகளில் தண்ணீர் விட்டும், இடையிடையே 13 நாட்களுக்குத் தண்ணீர் நிறுத்தியும்) தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. தண்ணீர் 10-4-2005 வரை பாசனத்திற்கு அளிக்கப்படும். சாத்தனூர் அணையின் தண்ணீர் மொத்த ஆயக்கட்டு பாசனப் பரப்பான 45,000 ஏக்கர் விளைநிலங்களும் எவ்விதக் குறைவுமின்றி நடப்பாண்டில் பயிர்ச் சாகுபடி செய்யப்பட்டு கதிர் விளையும் நிலையில் உள்ளது.

அரசு ஆணைப்படி, 10-4-2005 வரை தண்ணீர் திறந்துவிட, போதுமான தண்ணீர் சாத்தனூர் அணையில் இருப்பில் உள்ளது. சாத்தனூர் அணையில் 14-3-2005 அன்றுள்ளபடி, அணையின் நீர் மட்டம் 92.75 அடியாகும். கால்வாய்களின் கடைமடை வரையிலும் தண்ணீர் சென்று முழுப் பரப்பும் பயன்பெற்று வருகின்றது. விழுப்புரம் மாவட்டம், திருக்கோயிலூர் அணையின் பழைய ஆயக்கட்டு பகுதிகளில் 5,000 ஏக்கர் நிலங்களின் பாசனத்திற்கு நடப்பாண்டில் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. மேலும், 10-4-2005-ல் அணையில் தண்ணீர் திறந்துவிடப்பட்டது, நிறுத்தப்படும்பொழுது, அணையில் 1540.48 மி.க. அடி நீர் இருப்பில் இருக்கும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. இதில் குடிநீர் மட்டும், இதர அடிப்படைத் தேவைகள் போக, சுமார் 316.80 மி.க. அடி நீர் அணையில் உபரியாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு.

***திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தனூர் அணை ஆயக்கட்டிலே இடதுபுறக் கால்வாய் 24 ஆயிரம் ஏக்கர், வலதுபுறக் கால்வாய் 21 ஆயிரம் ஏக்கர், ஆக, 45 ஆயிரம் ஏக்கர் அந்தப் பகுதியிலே விவசாயிகள் பயிர் செய்கிறார்கள். குறிப்பாக, சுமார் 20 ஆயிரம் ஏக்கரிலே நெற் பயிர்களும், 10 ஆயிரம் ஏக்கரிலே கரும்புப் பயிரும், 10 ஆயிரம் ஏக்கரிலே மணிலாப் பயிரும், 5 ஆயிரம்



2005 ஏப்ரல் 11] [திரு. எ.வ. வேலு]

ஏக்கரிலே இதரப் பயிர்களும் அங்கே பயிர் செய்யப்படுகின்றன. 90 நாட்களுக்குத் தண்ணீர் விடுவதாக அரசாங்கம் சொன்னது. அரசாங்கத்தினுடைய இந்த அறிக்கையைப் படிக்கிறபோது, 90 நாட்கள் தண்ணீர் விடுவதாகச் சொல்லி, ஆனால் 77 நாட்கள்தான் இன்றைக்குத் தண்ணீர் விடப்பட்டிருக்கிறது. 90 நாட்கள்கூட விடவில்லை. இன்றைக்கு நெற்பயிர் வைக்க வேண்டுமென்று சொன்னால், குறைந்தபட்சம் 120 நாட்கள் தேவை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. எ.வ. வேலு:** 45 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பிலே பயிர் செய்து பாதிக்கப்பட்டிருப்பவர்களுடைய கேள்வி, இந்த சேடை, நடவு, நாற்றங்கால் என்று இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாகப் போனால்கூட, கிட்டத்தட்ட 120 நாட்கள் தேவை. 77 நாட்கள்தான் தண்ணீர் விடப்பட்டிருக்கிறது. அரசாங்கமே இங்கே அறிக்கை கொடுத்திருக்கிறது. எனவே, இன்னும் 20 நாட்களுக்குக் கொடுத்தால்தான், அந்தப் பயிரைக் காப்பாற்ற முடியும். எனவே, அரசு, இந்த மாதம் 30 ஆம் தேதிவரை கொடுத்தால்தான், இருக்கிற 45 ஆயிரம் ஏக்கரிலுள்ள பயிர்களைக் காப்பாற்றமுடியும். எனவே, அப்படியொரு திட்டத்தை அரசாங்கம் வைத்திருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தனூர் அணையிலிருந்து திருவண்ணாமலை விவசாயப் பெருமக்களுக்கு வழங்கப்பட்டு வந்த தண்ணீர், விதிமுறைகளின்படி 10-4-2005 அன்றோடு நிறுத்தப்படவேண்டும். ஆனால், இங்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்து, அதை 30-4-2005 வரை நீட்டித்துத் தரவேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதைப்போல, நம்முடைய மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்களும், சாத்தனூர் அணை இடதுபுறக் கால்வாய் நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத் தலைவர் திரு. எஸ்.ஆர். தருமலிங்கம் அவர்களும், அரசின் கவனத்திற்கு இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்கள் அதனை ஏற்று, L.M.C. கடைமடைப் பகுதிகளுக்கு 650 கனஅடி வீதம் 11-4-2005, இன்றுமுதல் 30-4-2005 முடிய, 20 தினங்களுக்குத் தண்ணீர் மேலும் விடுவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

[திரு. எ.வ. வேலு] [2005 ஏப்ரல் 11

கொடுத்திருக்கிற இந்த அறிக்கையிலே இன்றைய தேதியிலே சொல்லியிருக்கிறீர்கள். ஏனென்றால் காலையிலே தொகுதியிலேயிருந்து நான் phone செய்து தண்ணீர் என்ன நிலைமையில் அங்கு இருக்கிறது என்று கேட்டேன். அதிலே 1540 மில்லியன் கனஅடி தண்ணீர் இருப்பு இருப்பதாக அறிக்கையிலே நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், இன்றைய தேதியில் அங்கே என்ன இருப்பு இருக்கிறது என்று சொன்னால், 2076 கனஅடி இன்றைக்கு இருப்பு இருக்கிறது. குறைந்தபட்சம் 86 அடி உயரம் இருக்கிறது. இப்போது, ஆண்டாண்டு பார்த்தீர்கள் என்றால், 72 அடி, 75 அடியில் நிறுத்திவிடுவார்கள். ஏனென்றால், அங்கே இருக்கிற கூட்டுக் குடிநீர்த் திட்டம், மீன் வளர்ப்புக்குத் தேவையான தண்ணீர் . . .

முற்பகல் 11–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தண்ணீர் கொடுப்பதுபற்றிப் பரிசீலிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார். நீங்கள் ஏன் போட்டுக் குழப்புகிறீர்கள்?

**திரு. எ.வ. வேலு:** அரசாங்கத்திற்கு...

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றுவரை அந்தப் பகுதியிலே இருக்கின்ற 45,000 ஏக்கருக்கும், கடைமடைப் பகுதி வரைக்கும் தண்ணீர் சென்று விவசாயத்திற்கு உரிய நீர் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. எதிர்காலத்தில், இருக்கின்ற குடிநீர்த் தேவைக்குப்போக, 650 கன அடி தண்ணீர் இன்றுமுதல் விடுவிக்கப்பட இருக்கின்றது; 30-4-2005 முடிய விடுவிக்கப்படும். மேலும், தேவைப்பட்டால் இந்த அரசு கனிவுடன் அதைப் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

### (ஆ) இரயில்வே மேம்பாலம் கட்டும் பணிக்காக சிதம்பரம் நகராட்சி, திருவள்ளுவர் அங்காடியில் கடைகள் அகற்றப்படுவது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு. திருவாளர்கள் பி.எஸ். அருள் மற்றும் துரை கி. சரவணன் ஆகியோரில் ஒருவர், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. அருள். (குறுக்கீடு) திரு. சரவணன் கேள்வி கேளுங்கள். (குறுக்கீடு) முதலில் அவரைக் கேள்வி கேட்கச் சொல்லுங்கள்.



2005 ஏப்ரல் 11]

**திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இரயில்வே மேம்பாலம் கட்டும் பணிக்காக சிதம்பரம் நகராட்சிக்குச் சொந்தமான திருவள்ளுவர் அங்காடியில் உள்ள கடைகளை அகற்றுவது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

சிதம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட சிவபுரி சாலையில் அமைந்துள்ள இரயில்வே லெவல் கிராசிங்கிற்கு இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி நடைபெற்று வருவதால், மேம்பாலம் கட்டும் பணிக்கும், அணுகு சாலை அமைக்கும் பணிக்காகவும், மேற்படி இடம் தேவைப்படுகிறது என நெடுஞ்சாலைத் துறையால் தெரிவிக்கப்பட்டதால், கடைகளை அப்புறப்படுத்த ஏதுவாக நகராட்சியின் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கையின் பொது நிபந்தனை பத்தி எண் 22-ன்படி, மேற்படி கடைகளுக்கு வழங்கப்பட்ட மூன்றாண்டு கால உரிமத்தை இரத்து செய்து, கடைகளை அப்புறப்படுத்திவிட்டு, நெடுஞ்சாலைத் துறை வசம் ஒப்படைக்க நகராட்சி மன்றத் தீர்மான எண் 279, நாள் 10-11-2004-ல் முடிவு செய்யப்பட்டதன் பேரில், கடைகளை அப்புறப்படுத்திக் கொண்டு இடத்தை ஒப்படைக்கக் கோரி தெரிவிக்கப்பட்டது. மேற்கண்ட இடத்தினைக் காலி செய்ய ஏதுவாக, முப்பது கடைக்காரர்களுக்கும் மாற்று இடம் வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் சார் ஆட்சியர், சிதம்பரம், அவர்களின் பரிந்துரையின் பேரிலும், நகராட்சி மன்றத் தீர்மான எண் 491, நாள் 28-2-2005-ன்படியும், தமிழ்நாடு வீட்டு வசதித் துறைக்குச் சொந்தமான இடத்தினை நீண்டகால குத்தகைக்கு வாங்கிக் கடைகள் கட்டுவதற்கு ஏதுவாக, மேற்படி இடத்தை வழங்கக் கோரி, அரசுச் செயலாளர், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சென்னை, அவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, அவர்கள்மூலம் முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அருள், கேள்வி கேளுங்கள்.

[2005 ஏப்ரல் 11

**திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அதில், நகராட்சிக்குச் சொந்தமான இடத்தை, மேம்பாலம் கட்டும் பணிக்காக, அங்குள்ள கடைகளை அப்புறப்படுத்தி அருகிலே இருக்கின்ற வீட்டுவசதி வாரியத்திற்குச் சொந்தமான இடத்தில் மாற்று இடம் தருவதற்கு மாவட்ட நிர்வாகமும், மாவட்ட ஆட்சித் தலைவரும், சிதம்பரம் சார்-ஆட்சியர் அவர்களும் அரசுக்குப் பரிந்துரை செய்திருப்பதாக அவர்களுடைய அறிக்கையிலே குறிப்பிட்டுள்ளார்கள். அந்த 30 கடை உரிமையாளர்களும் மேம்பாலம் கட்டும் பணிக்காக, உடனடியாக காலி செய்யவேண்டுமென்று அவர்களுக்கு நகராட்சி நிர்வாகத்திலிருந்து Notice அனுப்பப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வீட்டு வசதி வாரியத் துறையின்மூலமாக அவர்களுக்கு மாற்று இடம் வழங்கப்படுவதற்குக் கோப்புகள் அனுப்பப்பட்டுள்ளதாகக் கூறியிருக்கிறார்கள். அந்த மாற்று இடம் வழங்குகின்றவரையில் அவர்கள் தற்காலிகமாக, இப்போது நிரந்தரமாக இருக்கின்ற இடத்தில் காலி செய்யாமல், மாற்று இடம் தரும் வரையில் அவர்கள் அனுமதிக்கப்படுவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேம்பாலம் கட்டும் பணிக்கும், அணுகு சாலை அமைக்கும் பணிக்கும் அவசர முக்கியத்துவம்வாய்ந்த நிகழ்விலே, அங்கே அந்த இடம் தேவைப்படுகின்ற காரணத்தினால், அவர்களுக்குக் கடந்த 1–1–2005 அன்று, அந்தக் கடைகளைக் காலி செய்யச் சொல்லி தபால் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த அணுகு சாலையும், மேம்பாலமும் அந்தப் பகுதியினுடைய நெருக்கடியைத் தீர்க்கின்றவகையிலே அமைப்பதற்காக, மிக விரைவில் அந்தப் பணி செயல்படுத்தப்படவேண்டும் என்ற நோக்கத்தோடு அவர்களுக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கடைகள் 30–ஐயும் காலி செய்து, புதிதாக வீட்டுவசதி வாரியத்திற்குச் சொந்தமான இடத்தில், அந்தக் கடைகளைக் கட்டுவதற்குண்டான ஆயத்தப் பணிகளை அரசு மேற்கொண்டிருக்கின்ற காரணத்தினாலும், அந்தப் பகுதியிலே இருந்து ஒரு 150 மீட்டர் தூரத்திலே, அருகிலே அந்த இடம் இருக்கின்ற காரணத்தினாலும், அவர்கள் விரைந்து அந்த இடத்தினைக் காலி செய்து கொடுத்தபிறகு, அந்தப் பகுதியிலே, அந்த மேம்பாலம் கட்டுவதற்கான வழிவகைகள் செய்யப்பட்டுவிட்டு, அவர்களுக்கு அந்தக் கடைகளை அமைத்துக் கொடுப்பதற்கும் அரசு பரிசீலிக்கும் என்று கூறுகின்றேன்.



2005 ஏப்ரல் 11]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரை கி. சரவணன்.

**திரு. துரை கி. சரவணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் நகராட்சியில், திருவள்ளூர் அங்காடியில் சுமார் 30 கடைகள் இருக்கின்றன. அந்தக் கடைகளிலே, சுமார் 300–க்கும் மேற்பட்ட ஊழியர்கள் வேலைபார்த்து வருகிறார்கள். அதனால், சுமார் 300 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இந்த மேம்பாலம் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டப்பட்டு தொடங்கும்முன்பே, அந்தக் கடையின் சொந்தக்காரர்கள் நாங்கள் இந்த இரயில்வே மேம்பாலம் கட்டும் பணிக்கு எங்களது இடத்தினைக் காலி செய்து கொடுக்கிறோம். அதற்கு, எங்களுக்கு மாற்று இடம் தேவையென்று நகராட்சி நிர்வாகத்திடமும், மாவட்ட நிர்வாகத்திடமும் கோரிக்கை வைத்தார்கள். ஆனால், நகராட்சி நிர்வாகம் அந்தக் கோரிக்கையை ஏற்காமல், அவர்களுடன் கலந்தாலோசிக்காமல் தொடர்ந்து அதை அலட்சியப்படுத்திவிட்டு, அந்த இடத்தினைக் காலி செய்ய வேண்டுமென்று அறிவிப்புக் கொடுத்தார்கள். அதனைத் தொடர்ந்து அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்றார்கள். நானும் இது சம்பந்தமாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் தொடர்புகொண்டு பேசியபிறகு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், உதவி ஆட்சித் தலைவர் அவர்களை நேரடியாக சென்று ஆய்வு செய்யச் சொல்லி அந்த ஆய்வின்போது நானும் அங்கு சென்று அந்த இடத்தினைப் பார்த்து அருகிலுள்ள வீட்டுவசதி வாரிய இடத்திலே அவர்களுக்கு இடம் ஒதுக்கீடு செய்து கொடுக்கலாம் என்று ஆலோசனை வழங்கினார்கள்.

*முற்பகல் 11–15*

அதன் அடிப்படையிலே நகராட்சி நிருவாகம் அதன்பிறகு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி இன்று அந்தத் தீர்மானத்தின் அடிப்படையிலே வீட்டுவசதி வாரியத் துறைச் செயலாளருக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளதாக பதிலிலே தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது இந்த நகராட்சியின் அலட்சியத்தாலும் காலதாமதத்தாலும் இரயில்வே கட்டும் மேம்பாலப் பணிகள் காலதாமதப்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது. எனவே, ‹'ரசு வீட்டு வசதித் துறையிடம் உடனடியாக விரைவாக நடவடிக்கை மேற்கொண்டு அவர்களுக்கு அந்த மாற்று இடத்தினை பெற்றுத் தருவதற்கான நடவடிக்கை மேற்கொள்வாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2005 ஏப்ரல் 11

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே இரயில்வே மேம்பாலமானது கட்டாயமாகத் தேவை என்ற குறிக்கோளோடு நகராட்சி நிருவாகத்தால் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்குச் சொந்தமான இடத்தை நீண்டகால குத்தகைக்கு வாங்கி கடைகள் கட்டுவதற்காக இன்றையதினம் அனுமதிகோரி முன்மொழிவுகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. ஆகவே, விரைந்து அந்தப் பகுதியில் இருக்கின்ற அந்தப் பிரச்சினையைத் தீர்க்கின்ற வகையிலே அரசானது முனைப்போடு செயல்படும் என்று தெரிவித்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எஸ். அருள். அடுத்து சரவணன் இன்னொரு கேள்வி கேட்க வேண்டுமா? திரு. பி.எஸ். அருள்.

**திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் ஒரு வேண்டுகோளாக நகராட்சி நிருவாகம் மீண்டும் மீண்டும் மூன்று முறை அவர்களுக்கு நோட்டீஸ் கொடுத்திருக்கிறது. தற்போதுகூட நோட்டீஸ் கொடுத்தார்கள். அதுசம்பந்தமாக எங்களது மாவட்ட அமைச்சர், கல்வி அமைச்சர் அவர்கள்கூட இரண்டு மாதங்களுக்கு முன்பு மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடந்த ஆய்வுக் கூட்டத்தில் பல்வேறு துறை சம்பந்தமாக ஆய்வு நடைபெற்றபோது இந்த மேம்பாலப் பிரச்சினையும் கொண்டு வரப்பட்டது. அப்போது நகராட்சி நிருவாகத்திடம் பல்வேறு கருத்துகள் கேட்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்கூட இது சம்பந்தமாக அவர்களுக்கு மாற்று இடம் உடனே வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதன் அடிப்படையிலே மாவட்ட ஆட்சித் தலைவர், சிதம்பரம் சார்-ஆட்சியர், வட்டாட்சியர் ஆகியோர் ஒரு குறிப்பாணையை உங்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே குறிப்பாக விரைவில் அந்தப் பணிகளை நீங்கள் செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு அமைகின்றேன்.

## 5. அறிக்கை அளித்தல்

### மதிப்பீட்டுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்.



2005 ஏப்ரல் 11]

***திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். 2003–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவின் பாசனம் குறித்த முப்பத்து ஒன்றாவது அறிக்கையை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2005 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் (குறுக்கீடுகள்)...

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிமுக நிலையிலேயே இந்தச் சட்டமுன்வடிவை நான் எதிர்க்கிறேன்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை ஆரம்ப நிலையிலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எதிர்க்கிறேன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக எதிர்க்கிறோம்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக அறிமுக நிலையிலே எதிர்க்கிறோம்.

[2005 ஏப்ரல் 11

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அதன் அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

| | | | |
|---|---|---|---|
| (அ) | கோரிக்கை எண் 1 | மாநிலச் சட்டமன்றம் | —தொடர்ச்சி |
| (ஆ) | கோரிக்கை எண் 2 | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | |
| (இ) | கோரிக்கை எண் 15 | நிதித் துறை | |
| (ஈ) | கோரிக்கை எண் 35 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | |
| (உ) | கோரிக்கை எண் 37 | பொதுத் துறை | |
| (ஊ) | கோரிக்கை எண் 48 | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | |

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 8-4-2005 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றின்மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின்மீதான விவாதமும், வாக்கெடுப்பும். திரு. ப. இராஜரெத்தினம். (குறுக்கீடு)



2005 ஏப்ரல் 11]

**திரு. பா. பரணிகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இன்னும் பேசி முடிக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அன்றைக்கே முடிந்துவிட்டது.

*முற்பகல் 11-20*

**திரு. ப. இராஜரெத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அஞ்சுவது யாதொன்றும் இல்லை. இனி அஞ்ச வருவதும் இல்லை எனும் பொன்மொழியை நெஞ்சிலே ஏந்தி, பற்றவரும் பகையினத்தை தூள் தூளாக்கி, பகை மேகக் கூட்டத்தை பஞ்சாய் பரத்தி, சுற்றிவரும் நெருக்கடியை திசைதிருப்பி, வெற்றிகளைப் பெற்று வரும் வீர வேங்கை, வெள்ளமென சீறி வரும் புல்லர் தம்மை விழி அசைவில் அடக்குகின்ற கொள்கை சிங்கம் (மேசையைத் தட்டும் ஒலி) கொற்றவையாய் அமர்ந்திருக்கும் இந்த மாமன்றத்தில் பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சாதாரண தாழ்த்தப்பட்ட இனத்தில், ஒரு சாதாரண போலீஸ்காரரின் மகனாகப் பிறந்த என்னை, நாடாளுமன்றத்தினுடைய மக்களைவை உறுப்பினராக்கி, சட்டமன்றத்தினுடைய உறுப்பினராக்கி, கழகத்தினுடைய எம்.ஜி.ஆர். இளைஞர் அணியின் செயலாளராகப் பணியாற்றுவதற்கு வாய்ப்புத் தந்து, இங்கே வெற்றிகளைப் பெற்று வரும் வீர வேங்கையாக, வெள்ளமெனச் சீறிவரும் புல்லர் தம்மை, விழி அசைவில் அடக்குகின்ற கொள்கைச் சிங்கமாக, கொற்றவையாய் அமர்ந்திருக்கும் தங்கத் தாரகை, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு நடைபெறுகின்ற மாநிலச் சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, நிதித் துறை, பொதுத் துறை, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் ஆகிய துறைகளைப் பற்றிய மானியக் கோரிக்கைகள்மீது பேசுவதற்கு வாய்ப்பினை நல்கிட்ட, நான் நித்தம் வணங்குகின்ற இதய தெய்வம், அம்மா அவர்களுக்கு மீண்டும் நன்றி கூறி என் உரையைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 21 ஆண்டுகளுக்கு முன்பாக, 23-04-1984 ஆம் தேதி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நாடாளுமன்றத்தினுடைய மேலவையிலே, தன்னுடைய கன்னிப் பேச்சிலே பேசும்போது குறிப்பிட்டார்கள்.

"I have come here as the representative of the weaker sections of our society, the toiling masses, the crores of humble workers, farmers, poor agricultural labourers and women to give oral manifestation to their desires and make them known to the rest of the country" என்று சொன்னார்கள். 21 ஆண்டுகளுக்கு

முன்பு, இதய தெய்வம் அம்மா அவர்கள், சொன்னதைச் சொன்னபடி செய்கின்ற சொக்கத் தங்கமாக (மேசையைத் தட்டும் ஒலி) இன்று அதை அப்படியே நிரூபித்து, நலிந்த பிரிவினர், உழைக்கும் வர்க்கத்தார், ஏழ்மையில் வாழ்கின்ற உழைப்பாளர்கள், உழவர்கள், பெண்கள், ஏன், சமுதாயத்தின் அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறுகின்ற வகையில், வரியில்லாத வரவு-செலவு அறிக்கையை இந்த இரண்டு ஆண்டுகளாக வழங்கி, சாதனைத் தலைவியாக இங்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அமர்ந்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலச் சட்டமன்றம் குறித்து எனது கருத்துகளை இங்கு பதிவு செய்ய விழைகின்றேன். முன்னாள் பழமையும், இன்னாள் புதுமையும் எனச் சேர்ந்து விளங்குவதுதான் நமது சட்டமன்றப் பேரவை. மெழுகாய்த் தானுருகி, அழகாய்த் தமிழகத்தை உயர்த்த, ஓய்வில்லாமல், ஒருநாளைக்கு 20 மணி நேரத்திற்கும் மேலாக உழைத்து, தமிழ்நாட்டை இந்தியாவின் தலைநாடாகச் செய்து வருகின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையையும், இந்தியத் திருநாட்டிலே இருக்கின்ற மற்ற மாநில சட்டப்பேரவைகளைக் காட்டிலும் பெருமையும் புகழும் வாய்ந்த பேரவையாக மாற்றுவதற்கு பல்வேறு சாதனைகளைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்து வருகிறார்கள் என்பதை நான் நன்றியுடன் நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி 2001 மே திங்களிலே அமையப்பெற்றவுடன், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை இந்தச் சட்டமன்றப் பேரவைக்கு அளித்தார்கள். நவீன சிந்தனைகளின் இருப்பிடமாய், புதுமை மலர்கள் பூத்துக்குலுங்கும் இலட்சியப் பூந்தோட்டமாய், நம்முடைய சட்டமன்றம் விளங்கிட வேண்டும், இங்கே சட்டமன்ற உறுப்பினர்களாக வந்திருக்கின்ற புதிய உறுப்பினர்கள் இந்த அவையினுடைய நடவடிக்கைகளைத் தெரிந்துகொள்ள வசதியாக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு புத்தாக்கப் பயிற்சியை 05-09-2001, 10-09-2001 ஆகிய இரண்டு நாட்களிலே நடத்தி புதிய உறுப்பினர்களுக்கு நல்ல பயிற்சியைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக, புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குச் சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைப் பணிவுடன் சமர்ப்பிக்கின்றேன்.



முற்பகல் 11-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் மன்றம்தான் இந்தச் சட்டமன்றம் என்கின்ற கருத்தைக் கொண்டவர்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தேர்ந்தெடுத்து அனுப்பிய அந்த மக்கள் தினந்தோறும் இந்தச் சட்டமன்றத்தினுடைய நிகழ்வுகளைப் பார்க்கின்ற வகையிலே இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 12-3-2002 முதல் தொலைக்காட்சி ஒளிபரப்பை தொடங்கச் செய்து இந்தச் சட்டமன்றத்தினுடைய நிகழ்வுகளை இன்றைக்கு தமிழ்நாட்டிலே இருக்கின்ற பாமர மக்கள்கூட தெரிந்துக்கொள்கின்ற நல்ல சாதனையைப் படைத்தவர்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அவர்களை இன்றைக்கு நான் வணங்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமாத்திரமல்ல; பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களாகத் திகழவேண்டும், முதன்மைப் பெற்றவர்களாக வரவேண்டும் என்கின்ற கருத்தைக் கொண்ட புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கணினிப் பயிற்சியை 21-4-2003 முதல் 15 நாட்கள், 30 மணி நேரம் வழங்கினார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமல்ல, பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் பெருமக்களுக்கும் அந்தக் கணினிப் பயிற்சியை வழங்கியவர்தான் இங்கேயிருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் பணிவோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவையின் வரலாற்றுப் பெருமைகளை, முழுத் தகவல்களை, இன்றைக்கு இணையதளத்தின்மூலம் உலகத்திலுள்ள அனைவரும் தெரிந்து கொள்கின்ற வகையிலே இணையதளத்தை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையினுடைய website-ஐ 1-3-2005-லே தொடங்கி மாபெரும் சரித்திர சாதனையைப் படைத்தவராக இங்கே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் பணிவோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்ற வரலாற்றின் பொன்னேடுகளில், வைர வரிகளாய் மின்னும் வரலாற்றைப்

படைத்தவர்தான் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இப்போது மேலும் ஒரு சிறப்பைச் செய்திருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஊதியத்தை 12 ஆயிரத்திலிருந்து 16 ஆயிரம் ரூபாய் என்றும், ஓய்வூதியத்தை 5 ஆயிரத்திலிருந்து 6 ஆயிரம் ரூபாய் என்றும் உயர்த்தி வழங்கிய மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாக, என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் பணிவோடு காணிக்கையாக்கிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வானையும் மிஞ்சுகின்ற வள்ளல்தன்மை கொண்ட புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியை ஒரு கோடி என இன்றைக்கு உயர்த்தி அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பணிவோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எடுத்துக் கொடுக்கும்போதும், அடுத்து கெடுக்கும்போதும் தன் சுய இலாபம், சுய விளம்பரம், சுய தம்பட்டம், இவற்றை மட்டுமே கருத்திலேகொண்டு அன்று ஆட்சியைப் புரிந்தவர்கள், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியை 77 இலட்சம் வழங்கினார்கள். ஏன் 77 இலட்சம்? வழங்கியவருக்கு 77 வயதாம். அதனால் 77 இலட்சம். ஆனால், இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 100 இலட்சத்தை வாரி வழங்கியிருக்கிறார்கள். இது எதைக் குறிக்கிறது என்று சொன்னால், (மேசையைத் தட்டும் ஒலி) 100 இலட்சத்தை வாரி வழங்கியிருக்கிறார்கள், புரட்சித் தலைவி அம்மா அவர்கள். நூற்றுக்கு நூறு நல்ல முதல்வர் நம் அம்மா அவர்கள் என்பதை உணர்த்துகின்ற வகையிலே, நூற்றுக்கு நூறு தூய உள்ளம், அம்மா அவர்களுடைய உள்ளம் என்பதை உணர்த்துகின்ற வகையிலே, நூற்றுக்கு நூறு வரப் போகின்ற தேர்தலிலே, வெற்றிபெறப் போவது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை உணர்த்துகின்ற வகையிலே, நூறு ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து தமிழ்நாட்டினுடைய ஆட்சிக் கட்டிலை, அலங்கரிக்கப் போவது புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை உணர்த்துகின்ற வகையிலே, இன்றைக்கு 100 இலட்சத்தை வாரி வழங்கியிருக்கிறார்கள். அந்த இதய தெய்வத்திற்கு, நான் பணிவோடு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாவற்றிற்கும் மேலாக சட்டமன்ற வரலாற்றிலே, கேட்கப்படுகின்ற கேள்விகள் எதுவாக



இருந்தாலும், விரல் நுனியிலே பதில்களை விளக்கிக்கூறும் வித்தகத்திலும் தலைசிறந்து விளங்குகிறார், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்றத்திற்கு அதிகமான நேரம் வந்து, பல மணி நேரம் இந்த சட்டமன்றத்திலே அமர்ந்து, விவாதங்களில் கலந்துகொண்ட ஒரே முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை நான் பணிவோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு முன்னால் சட்டமன்றத்திலே பேசுவதற்கும், பட்டிமன்றத்திலே பேசுவதற்கும் வித்தியாசம் தெரியாத நிலையிலே அரைகுறை தமிழிலே இரட்டை அர்த்தப் பேச்சுக்கள், நக்கல், நையாண்டி, நாலாந்தர நகைச்சுவை இவற்றை எல்லாம் தமிழ்ச்சுவை என்ற போர்வையிலே அரங்கேற்றுவதற்குப் பதிலாக, இன்றைக்கு கேள்விக்கு பதில் சொல்லாமல் திசை திருப்புகின்ற அரசியலை செய்து கொண்டிருக்கின்றவர்களுக்கு மத்தியிலே, கருத்துக்குக் கருத்தும், சொல்லுக்குச் சொல்லும், பொருளுக்குப் பொருளும், விளக்கத்திற்கு விளக்கமுமாக பதில் அளிக்கும், நவீன தமிழகத்தினுடைய சிற்பியாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழக சட்டமன்ற வரலாற்றிலே, தனித்தன்மையைப் பெற்று விளங்குகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் தினந்தோறும் அவைக்கு வருகிறார்கள். அறிவிப்பின்மூலம் அள்ளித் தருகிறார்கள். நித்தம் நித்தம் அறிவிப்பு, மக்கள் மனதிலே பூரிப்பு. அம்மா அவர்களின் நாவசைப்பில் நன்மைகள் மலர்கின்றன. ஒவ்வொரு அறிவிப்பின்மூலம் நன்மைகள் ஒருவருக்கா, இருவருக்கா, யாருக்கு சிறந்த நன்மைகள்? ஒவ்வொரு அறிவிப்பின்மூலமும் கோடிக்கணக்கான மக்கள் பயன்பெறுகிறார்கள். மக்களுக்கோ, இந்த அறிவிப்புகளின்மூலம் இனிப்பு. ஆனால், பொல்லாங்கு மனம் படைத்த ஒரு சில மனிதர்களுக்கு மட்டும் கசப்பு என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய சீரிய தலைமையிலே சிறப்பாக நல்ல முன்னேற்றத்தைப் படைத்துக் கொண்டிருக்கின்ற நல்ல துறையாக நிதித் துறை விளங்கிக் கொண்டிருக்கிறது. 2001-லே புரட்சித் தலைவி

அம்மா அவர்கள் இந்த நாட்டினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நேரத்திலே நிதியற்ற கஜானாவாய், கதியற்ற களஞ்சியமாய் இருந்த தமிழகத்தினுடைய நிதி நிலையை மாற்ற புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு நாளைக்கு குறைந்தது 20 மணி நேரத்திற்கு மேலாக உழைப்பு, உழைப்பு, உழைப்பு, என உழைத்து இன்று நிதி நிலையை சீராக்கி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பேரவைத் தலைவர் அவர்களே, நிதித் துறையினுடைய கட்டுப்பாட்டின்கீழ் விளங்குகின்ற கருவூலக் கணக்குத் துறை, உள்ளாட்சி தணிக்கைத் துறை, சிறு சேமிப்புத் துறை, அரசு தகவல் தொகுப்பு விவர மையம், கூட்டுறவு தணிக்கைத் துறை, அரசுத் துறை ஓய்வூதிய இயக்ககம் ஆகிய துறைகள் மிடுக்கோடும், மேன்மையோடும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய தலைமையிலே இன்றைக்குச் சாதனை படைக்கின்ற துறைகளாக நடைபோட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய சீர்மிகு ஆட்சியிலே பொதுத் துறை நற்பணிகளை ஆற்றுகின்ற நல்ல துறையாக பீடுநடை போட்டு வருகிறது என்றே சொல்ல வேண்டும். நம்பிக்கை விதைகளை மக்களின் உள்ளங்களிலே விதைத்துக் கொண்டிருக்கின்ற சாதனைத் தலைவியாக மாண்புமிகு அம்மா அவர்கள் விளங்குகிறார்கள். இந்தியாவில் எந்த முதல்வருக்கும் இல்லாத பெருமையும், நம்பகத் தன்மையும் பெற்ற ஒரே முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய தனிப் பிரிவு மிகச் சிறப்பாக இன்றைக்கு பணியாற்றக்கூடிய நல்ல துறையாக மிளிர்ந்து வருகின்ற காட்சியை நாம் காண்கிறோம். மாண்புமிகு அம்மா அவர்களிடம் நேரில் வழங்கப்படுகின்ற மனுக்கள் மற்றும் முதலமைச்சர் தனிப் பிரிவிலே கொடுக்கப்படுகின்ற மனுக்கள்மீது முறையான நடவடிக்கை இன்றைக்கு தமிழ்நாட்டிலே எடுக்கப்படுகின்ற காட்சியை தமிழ்நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டான 2004 ஆம் ஆண்டில் மட்டும் மாண்புமிகு முதலமைச்சர் தனிப் பிரிவிலே பெறப்பட்ட மனுக்கள் 3,87,884. அதிலே 3,39,965 மனுக்கள் இன்றைக்கு தீர்வு காணப்பட்டு, இது 100-க்கு 88 சதவிகிதம் என்ற சதவிகிதத்தினுடைய வளர்ச்சியைப் பெற்ற மாண்புமிகு



முதலமைச்சருடைய அலுவலக தனிப் பிரிவு சீர்மிகு பிரிவாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நல்ல நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வள்ளுவர்

"பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்"

என்று கூறுவார். அந்த வகையிலே திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை என்பது திட்டம் வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை என 29-4-2003 முதல் மாற்றப்பட்டு, இந்தத் துறை இன்றைக்கு மாண்புமிகு அம்மாவுடைய சீரிய தலைமையிலே நல்ல சாதனைகளை உருவாக்குகிற நல்ல துறையாக பரிணமித்துக் கொண்டிருக்கிறது. திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையிலே மாண்புமிகு அம்மா அவர்கள் சரித்திர சாதனையைப் படைத்துக் கொண்டிருக்கிறார்கள். திட்டம் மற்றும் வளர்ச்சிப் பணிகளை அம்மா அவர்கள் அடிக்கடி ஆய்வு செய்து, நேரடிக் கண்காணிப்பு மேற்கொள்கிற காரணத்தினால், இத்துறை மிக வேகமாக வளர்ந்து வரும் துறையாக மாறி வந்து கொண்டிருக்கிறது.

தரமான மருந்துகளை ஏழை மக்களுக்கு அரசு மருத்துவமனையிலே தர, மாண்புமிகு அம்மா அவர்கள் திட்டமிட்டதன் வாயிலாக 11 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், 270 Selection Level Hospitals, 1,413 Primary Health Centres, 8,688 Health Sanitary Centres மூலம் இந்தியாவிலேயே தரமான மருந்துகளை வழங்கக்கூடிய ஒரே மாநிலம் தமிழ்நாடுதான் என்கின்ற நிலையை தமிழக அரசு பெற்று வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-35

பேரவைத் தலைவர் அவர்களே,

'பாலைவனம் சோலைவனம் ஆக வேண்டும்,
பசுங்கிளிகள் அங்கிருந்து பாட வேண்டும்'

என்றார் பாரதியார். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் இன்றைக்கு, 'Comprehensive Waste Land Development Scheme', அம்மா அவர்களுடைய தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் சரித்திர சாதனைகளைப் பெறுகின்ற நல்ல திட்டமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. அதிக உற்பத்தி ஆகக்கூடிய பொருள்களைக்

கண்டுபிடித்து சோளம், கரும்பு, கடலை மற்றும் உயர்தர வாழையின உற்பத்திக்கு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லரசு இன்றைக்கு வழிவகை கண்டு கொண்டிருக்கிறது என்பதை நான் பெருமையோடு இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய தெளிந்த நுண்ணறிவாற்றலால், Seed Law தமிழகத்திலே கொண்டு வரப்பட்டு, இன்றைக்கு மிடுக்கோடும், மேன்மையோடும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய தலைமையிலே தமிழகம் பீடுநடை போட்டுக்கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே பணிவோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே எத்தனையோ சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அற்புதமான சட்டங்களை எல்லாம் மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். பல்வேறு சட்டங்களைப் பற்றி நாம் இன்றைக்கு அறிந்திருக்கிறோம். அதிலே மிக அற்புதமான ஒரு சட்டம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்த மழைநீர் சேகரிப்புத் திட்டம் பற்றிய அந்தச் சட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை இன்றைக்கு தமிழ்நாட்டிலே இருக்கின்றவர்கள் மாத்திரம் பாராட்டவில்லை, இந்தியாவிலே இருக்கின்றவர்கள் மாத்திரம் பாராட்டவில்லை, உலகத்திலே இருக்கின்ற பல விஞ்ஞானிகள், பல சாதனையாளர்கள் எல்லாம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய இந்த சரித்திரச் சாதனையை இன்றைக்குப் பாராட்டிக்கொண்டிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தைப் பாராட்டி நான் ஒரேயொரு விஷயத்தை மாத்திரம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டுவந்த இந்தத் திட்டத்தைப் பாராட்டி நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த முதுநிலை விஞ்ஞானி, டாக்டர் கூஸ்.ஜெ. விஜ்வெர்பர்க் என்பவர், புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பாராட்டி நெதர்லாந்து நாட்டிலேயிருந்து ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அவர் அந்தக் கடிதத்திலே குறிப்பிட்டிருக்கிறார்:

"I came to understand from Dr. S. David Kingston, Assistant Professor, Veterinary University, Training and Research Centre, Kanyakumari District, Tamilnadu that your Government is introducing a Rain-water Harvesting Scheme in the State to harvest the North-east monsoon rains to enrich the subsoil aquifers. I appreciate this scheme open heartedly. I feel that these schemes will be very effective during drought years. Since the precipitation rate is decreasing and the global atmospheric temperature is increasing, such systems will be very helpful for maintaining the underground water table. I feel that more Countries



should follow the same approach" என்று நெதர்லாந்து நாட்டிலே இருக்கிற (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நிபுணர் இன்றைக்குப் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சாதனை மேல் சாதனை படைக்கின்ற நல்ல முதல்வராக இன்றைக்குப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இப்போது திகழ்ந்துகொண்டிருக்கிறார்கள். பேரவைத் தலைவர் அவர்களே, நான் பணிவோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு எந்த மாநிலத்தில் இருந்து மத்திய அரசிலே மத்திய அமைச்சர்களாக இடம் பெற்றாலும் அந்த மாநிலத்திற்கு, அந்த சொந்த மாநிலத்திற்கு, சொந்த மாவட்டத்திற்கு ஏதாவது செய்யலாம் என்று அனைத்து மாநிலங்களிலும் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், தமிழகத்திலே இருந்து சென்று மத்திய அரசிலே அமைச்சர்களாக இருக்கின்றவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இப்போது தமிழகத்தினுடைய மக்கள் கேள்வி கேட்க ஆரம்பித்திருக்கிறார்கள். இன்றைக்குச் சொந்த மாநிலத்திற்கு எதுவும் செய்யாமல், அதுவும் சொந்த மாவட்டத்திற்கு எதுவும் செய்யாமல், மாண்புமிகு நிதி அமைச்சர் சிதம்பரம் அவர்கள் சிவகங்கை மாவட்டத்தில் இருக்கிற மத்தியக் கூட்டுறவு வங்கியினுடைய செயல்பாட்டை இப்போது மூடுகின்ற அளவிற்கு அவர்கள் கொண்டு சென்றிருக்கிறார்கள் என்று சொன்னால், அந்த துரோகச் செயலை தமிழ்நாட்டு மக்கள், அதிலும் குறிப்பாக சிவகங்கை மாவட்டத்தினுடைய (குறுக்கீடு) மக்கள் மன்னிக்க மாட்டார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் பணிவோடு எடுத்துத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தச் சூழ்நிலையில், எந்தக் காலகட்டத்தில் இத்தகைய சூழ்நிலை, எப்படி, யாரால் ஏற்பட்டது என்பதையும் நான் பணிவோடு தெரிந்துகொள்ள ஆசைப்படுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நான் இன்னொரு கருத்தையும் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நாடாளுமன்றத்தினுடைய தேர்தல் முடிந்தது, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் திரு. கருணாநிதி அவர்கள் டெல்லிக்குச் சென்றார். டெல்லிக்கு எதைச் சாதிக்கச் சென்றார்? காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பு வெளிவர மத்திய அரசு முயற்சிக்க வேண்டுமென்று கேட்பதற்காகச் சென்றாரா? தென்னக நதிகளை இணைத்து தேனாறும், பாலாறும் ஓட வேண்டும், அதற்கான வழிவகை காண வேண்டும் என்பதற்காகச் சென்றாரா? எண்ணூர் துறைமுகத்தில்

திரவ இயற்கை எரிவாயு இணையகம் அமைக்க திட்டம் தீட்டுவதற்காக அவர் டெல்லி சென்றாரா? நாங்குநேரி உயிரி தொழில்நுட்பப் பூங்கா அமைத்து, தமிழ்நாட்டை நவீனமயமாக்க அவர் டெல்லி சென்றாரா?

முற்பகல் 11-40

தமிழ்நாட்டிலே அகல இரயில் பாதைத் திட்டத்திற்கு நிதி வாங்க அவர் டெல்லிக்குச் சென்றாரா? குளச்சல் துறைமுகத்தை பன்னாட்டுத் துறைமுகமாக விரிவுபடுத்தும் திட்டத்திற்காக திரு. கருணாநிதி அவர்கள் டெல்லிக்குச் சென்றாரா? அல்லது கடல் வணிகத் துறை பல்கலைக்கழகம் அமைக்க வழிவகை காணச் சென்றாரா? இவை எதற்காகவும் அவர் டெல்லிக்குச் செல்லவில்லை. தன் குடும்பம் முன்னேற வேண்டும் என்பதற்காக, குடும்பத்தினுடைய வளர்ச்சிக்கு உதவும் அமைச்சர் பொறுப்புகளை எல்லாம் கேட்பதற்காக டெல்லிக்குச் சென்றார். அதேபோலவே தங்களுடைய வளர்ச்சிக்குத் தேவையான இலாகாகளை அவர் கேட்டுப் பெற்றார். பின்னர் அவர் சென்னை திரும்பினார். கேட்ட துறைகள் கிடைக்கவில்லை. என்ன செய்தார் தெரியுமா? அமைச்சர்கள் பதவி ஏற்கமாட்டார்கள் என்று சொன்னார். பேரவைத் தலைவர் அவர்களே, உலக வரலாற்றிலே கோரிக்கை நிறைவேற மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். வணிகர்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். பார்த்திருக்கிறோம், படித்திருக்கிறோம். ஆனால், தன்னுடைய குடும்ப வளர்ச்சிக்கான துறைகள் ஒதுக்கப்படவில்லை என்பதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) அமைச்சர்கள் வேலை நிறுத்தம் செய்வதை அன்றுதான் (மேசையைத் தட்டும் ஒலி) கேலிப் புன்னகையோடு இந்த உலகம் உன்னிப்போடு பார்த்தது. (மேசையைத் தட்டும் ஒலி) பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கும் அதற்கு அர்த்தமும் (குறுக்கீடுகள்) அந்தத் திட்டம் காட்டிக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று பேசமுற்பட்டனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அவர் பேசி முடித்த பிறகு வாய்ப்புக் கொடுக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அவர் பேசி முடித்தபிறகு உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுக்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்துவிடட்டும். திரு. துரைமுருகன், அவர் பேசிமுடித்துவிடட்டும்.

**திரு. ப. இராஜரெத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைக்கு டெல்லி சென்ற கருணாநிதி அவர்கள், அன்றைக்கு.....

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்;** அவர் பேசி முடித்துவிடட்டும். அவர் பேசி முடிக்கப் போகிறார். பேசி முடித்தவுடன் உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுக்கிறேன்.

**திரு. ப. இராஜரெத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்றத்தினுடைய தேர்தல் முடிந்தவுடன் டெல்லிக்குச் சென்றாரே கருணாநிதி, தமிழ்நாட்டு நலனுக்காக, அதைக் கேட்பதற்காக அவர் டெல்லிக்குச் செல்லவில்லை. தன்னுடைய குடும்ப நலனைப் பெருக்கிக் கொள்வதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) டெல்லிக்குச் சென்றார் என்பதைப் பணிவோடு நான் தெரிவிக்கின்ற இதே நேரத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள்..... (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். துரைமுருகன், அவர் பேசி முடித்தவுடன் பேசுங்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசி முடித்தவுடன் பேசுங்கள். அவர் முடிக்கப் போகிறார். முடித்தவுடன் உங்களைக் கூப்பிடுகிறேன். இப்போது அவர் yield ஆகவேண்டுமில்லையா?

**திரு. ப. இராஜரெத்தினம்:** 1998 ஆம் ஆண்டிலே நாடாளுமன்றத் தேர்தலிலே மிகப் பெரிய வெற்றியைப் பெற்றார்கள் அன்றைக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்...(கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்தவுடன் வாய்ப்புக் கொடுக்கிறேன். (குறுக்கீடுகள்) உங்களுடைய கருத்தைச் சொல்வதற்கு வாய்ப்புக் கொடுக்கிறேன். (குறுக்கீடுகள்) அவர் பேசி முடித்தவுடன் கொடுக்கிறேன். உங்கள் கருத்தை அப்போது சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். சொல்கிறேன். அவர் பேசி முடித்தவுடன் வாய்ப்புத் தருகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவர் பேசி முடித்தவுடன் வாய்ப்புக் கொடுக்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். பேசி முடித்தவுடனே வாய்ப்புக் கொடுக்கிறேன், உட்காருங்கள்.

**திரு. ப. இராஜரெத்தினம்:** 1998 ஆம் ஆண்டு மிகப் பெரிய வெற்றியை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நாடாளுமன்றத் தேர்தலிலே வெற்றி பெற்றதற்குப் பின்னால் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் டெல்லிக்குச் சென்றார். டெல்லிக்குச் சென்று, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காவிரி நதிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று சொன்னார். 69 சதவீத இட ஒதுக்கீட்டை அமல்படுத்துங்கள் என்று சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) மகளிருக்கு இட ஒதுக்கீட்டைக் கொடுங்கள் என்று சொன்னார். முல்லைப் பெரியாறு அணையினுடைய நீர்மட்டத்தை உயர்த்துங்கள் என்று சொன்னாரேயொழிய.. (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்தவுடன் கூப்பிடுகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசி முடித்த பிறகு கூப்பிடுகிறேன், உங்களுக்கு வாய்ப்புக் கொடுக்கிறேன். உட்காருங்கள்.

**திரு. ப. இராஜரெத்தினம்:** கருணாநிதி கேட்டதைப்போல இன்றைக்கு அவர்களுக்குத் தேவையான துறைகளை கேட்பதற்காகச் செல்லாமல், சுயநலமில்லாமல் அன்றைக்கு 1998–லே பாடுபட்டவர்தான் நம்முடைய ஒப்பற்ற முதல்வர், தங்கத் தாரகை புரட்சித் தலைவி அம்மா அவர்களை.....(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்தவுடன் வாய்ப்புக் கொடுக்கிறேன்.

**திரு. ப. இராஜரெத்தினம்:** இந்த நாடு பாராட்டிக் கொண்டிருக்கிறது. நல்லவர்கள் வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மாத்திரம் இந்த நேரத்திலே தெரிவித்து, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் தாங்கள் பேசி முடிக்கின்ற நேரத்திலே அடுத்து வெல்வோம் என்று சொல்கிறார்கள். நான் பணிவோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன் பேரவைத் தலைவர் அவர்களே, தங்கத்தை பித்தளைகள் வென்றதாக, தகரங்கள் வெள்ளிமுன் நின்றதாக, (மேசையைத் தட்டும் ஒலி) பொங்குகடல்முன் ஓடை குதித்ததாக, புனலருவிதனை வாய்க்கால் எதிர்த்ததாக (மேசையைத் தட்டும் ஒலி) எங்கேனும் கேட்டதுண்டா? வரலாற்றிலே எவரேனும் கண்டதுண்டா? (கூச்சல்–குழப்பம்) தமிழ்நாட்டை சிங்கத் தலைவி ஆளுகிறார், (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்த்து வெல்ல, சிறு நரிகள் படை எடுத்தால், பேரவைத் தலைவர் அவர்களே, நெருப்பு



மலை முன்னாலே புழுக்கள் வந்து நெளிந்து ஆட்டம் போட்டால் (மேசையைத் தட்டும் ஒலி) என்ன ஆகும்? (மேசையைத் தட்டும் ஒலி) அதே நிலைதான் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வரும் தேர்தலிலே மக்கள் அந்தப் பாடத்தைப் புகட்டுவார்கள், புகட்டுவார்கள். என்றென்றுமே புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கே வெற்றி, வெற்றி, வெற்றி என்று சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) மாநிலச் சட்டமன்றம் குறித்த மானியக் கோரிக்கையை மனதாரப் பாராட்டி வரவேற்று அமர்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர், எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் டெல்லிக்குச் சென்றார், தமிழ்நாட்டுக்கு எந்தவிதமான திட்டங்களையும் கேட்பதற்காகச் செல்லவில்லை. ஏதோ அவருடைய..(குறுக்கீடு) எங்களுக்குத் தெரியுமப்பா, எது உண்மை என்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே பார்த்துப் பேசுங்கள். பேரவைத் தலைவரைப் பார்த்துப் பேசுங்கள்.

முற்பகல் 11–45

**திரு. துரைமுருகன்:** ஆனால், ஏதோ தன்னுடைய குடும்பத்தினுடைய வாழ்வுக்காகச் சென்றார் என்று ஓர் ஆதாரமற்ற, இன்னும் சொல்லப்போனால், வெறுக்கத்தக்க, பரிகசிக்கத்தக்க ஒரு பேச்சை மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேசியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம், மத்தியிலே இருக்கின்ற ஆட்சியில் பங்கு பெற்றிருக்கின்றது. ஆகையினாலே பங்குபெறுகின்றபோது, எங்கள் கட்சியின் சார்பில் அமைச்சர்களைக் கேட்பது ஒன்றும் தவறல்ல. இரண்டாவது, தமிழ்நாட்டுக்குப் பயன் தரத்தக்க இலாகாக்களைக் கேட்பதிலேயும் தவறல்ல. அப்படி நாங்கள் கேட்டதிலே சில நேரங்களில் மாறுபட்ட கருத்து வந்தால், அந்தக் கருத்துக்காகப் போராடி இந்த இலாகா எங்களுக்கு வேண்டும், இது தமிழ்நாட்டுக்குத் தேவையானது என்று கேட்பதிலும் தவறல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான், உட்காருங்கள். உங்கள் கருத்தைச் சொல்லிவிட்டீர்கள்.

**திரு. துரைமுருகன்:** இருங்கள், நான் சொல்லிவிடுகின்றேன். அப்படிக் கேட்டதனுடைய விளைவுதான் இன்றைக்கு வாராது இருந்த சேதுசமுத்திரத் திட்டம் வந்து கொண்டிருக்கின்றது. இன்றைக்குச்

சென்னை மாநகரத்தைச் சுற்றிலும் பார்த்தால், பெரிய பெரிய சாலைகளுக்கு மேம்பாலங்கள் வந்து கொண்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான், உட்காருங்கள். இதில் தனிச் சொற்பொழிவு ஆற்றவேண்டாம். அவர் கேட்டதற்குப் பதில் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடு) கேட்டதற்கான பதிலைச் சொல்லிவிட்டீர்கள், உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன்:** நான் அந்த அளவுக்கு தரம் தாழ்ந்து போகமாட்டேன். ஆகையினாலே இவையெல்லாம் அரசியல் தெரிந்த, விவரம் புரிந்தவர்களுக்குத் தெரியும். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், அது என்ன ** எனக்கு ஒன்றும் புரியவில்லை. அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றது. அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றது. திருமதி யசோதா. (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே பேசுகின்றபோது, இந்த அவையிலே இல்லாத மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் அவர்கள், தன்னுடைய சொந்த மாவட்டத்திற்கே துரோகம் செய்திருக்கின்றார், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்கு துரோகம் செய்திருக்கின்றார் என்றார். சிவகங்கை மாவட்டத்தினுடைய கூட்டுறவு வங்கி இன்று ரிசர்வ் வங்கியினால் முடக்கப்பட்டு..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அதுபற்றி இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே அறிக்கை விட்டிருக்கின்றார்கள். (குறுக்கீடு) தெளிவான அறிக்கை விட்டிருக்கின்றார்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** நான் என்ன சொல்கின்றேன் என்றால், இதிலே கூட்டுறவு வங்கியினுடைய செயல்பாடுகள் சரியாக இல்லாதபோது, அதை நெறிமுறைப்படுத்த வேண்டிய ஒரு பொறுப்பு ரிசர்வ் வங்கிக்கு இருக்கின்றது. இங்கே சிவகங்கை மாவட்டக் கூட்டுறவு வங்கியில் நடைபெற்றிருக்கின்ற பல முறைகேடுகள் காரணமாக, அங்கே இயலாமை..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், நீங்கள் என்ன சொல்ல வருகின்றீர்கள் என்று தெரிகின்றது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின்மீது மத்திய நிதி இலாகாவிற்கு கட்டுப்பட்ட ரிசர்வ் வங்கியானது எடுத்த நடவடிக்கையின்மீது சில கருத்துகளை தங்களுடைய அனுமதியோடு இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வைதியலிங்கம், உட்காருங்கள். உங்களுக்கென்ன இதிலே இருக்கின்றது? உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மொத்தம் 144 வங்கிகள் இந்தியாவிலே 11 (1) வங்கிகளாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆந்திரப் பிரதேசத்திலே 8, அஸ்ஸாம் மாநிலத்திலே 1, பீகார் மாநிலத்திலே 17, சத்தீஸ்கர் மாநிலத்திலே 7, குஜராத் மாநிலத்திலே 7, இமாச்சலப் பிரதேசத்திலே 1, ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலத்திலே 2, கர்நாடக மாநிலத்திலே 3, மத்திய பிரதேசத்திலே 28, மகாராஷ்டிராவிலே 12, ஒரிஸ்ஸாவிலே 8, பஞ்சாப் மாநிலத்திலே 1, இராஜஸ்தானிலே 3, தமிழ்நாட்டில் 9, உத்தரப் பிரதேசத்திலே 31, உத்தராஞ்சல் மாநிலத்திலே 2, மேற்கு வங்காளத்திலே 1. இதர இடங்களில் 3 ஆக, 144 மாவட்டக் கூட்டுறவு வங்கிகள் 11 (1) வங்கிகளாக இந்தியா முழுவதும் செயல்படுகின்ற நேரத்தில், எந்த வங்கிகளின்மீதும் எடுக்காத நடவடிக்கையாக, 2004 மார்ச் 31 நிலைமைப்படி, அந்த வங்கியினுடைய கணக்குகள் நட்டத்திலே இருந்ததை வைத்து, 2005 மார்ச் 31 முடிந்து, அந்த வங்கி இந்த ஆண்டு 3 கோடியே 81 இலட்சம் ரூபாய் இலாபம் ஈட்டியிருக்கின்ற நேரத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) ஓராண்டுக்கு முன்தேதியிட்ட கணக்கை வைத்து, ரிசர்வ் வங்கியானது இப்பொழுது நடவடிக்கை எடுத்திருப்பது, யாருடைய தூண்டுதலின் பெயரால் எடுக்கப்பட்டிருக்கின்றது என்பதை நான் இந்தப் பேரவையின் வாயிலாக அறிய விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியா முழுவதும் 144 வங்கிகள் 11 (1) வங்கிகளாக இருக்கின்ற நேரத்தில், இன்றைக்கு 11 (1) வங்கியிலிருந்து விடுபட்டு வந்து, அந்த வங்கி சிறப்பான ஒரு நிலையை அடைந்து, தமிழகம் முழுவதும் சிறப்பாக மழை பொழிந்து, எங்கும் பசுமை படர்ந்துகொண்டிருக்கின்ற நேரத்திலே, கண்மாய்களெல்லாம் நிரம்பி வழிந்து கொண்டிருக்கின்ற நேரத்திலே, மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் அம்மா அவர்களுடைய சிறந்த வழிகாட்டுதலின்பேரிலே அந்த வங்கி இந்த ஆண்டு இயற்கையாகவே 11 (1) நிலையிலிருந்து விடுபட்டு வந்துவிட்டதற்குப் பிறகு, ஓராண்டுக்கு முன்தேதியிட்ட ஒரு கணக்கை வைத்து, சட்டமன்றம் நடைபெற்றுக்

கொண்டிருக்கின்ற நேரத்திலே, இங்கு வீணாக ஒரு பீதியை கிளப்பி, மக்களிடத்திலே ஒரு தவறான எண்ணத்தை, எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின்மீது உருவாக்குவதற்காக திட்டமிட்டு செய்யப்பட்ட ஒரு சதிச் செயல்தான், சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின்மீது எடுக்கப்பட்டிருக்கின்ற நடவடிக்கை. (மேசையைத் தட்டும் ஒலி) சிவகங்கை மாவட்டக் கூட்டுறவு வங்கியானது, எப்பொழுது யாருடைய ஆட்சிக் காலத்தில் சிதிலமடைந்தது, சீரழிந்தது என்கின்ற நிலையினை இந்தப் பேரவையிலே தங்களுடைய அனுமதியோடு நான் வெளிப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*முற்பகல் 11–50*

சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியானது, தேர்ந்தெடுக்கப்பட்ட நிருவாகக் குழுவினுடைய காலத்திலே, அந்த வங்கியினுடைய தலைவராக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. சிவராமன் அவர்கள் இருந்த காலத்திலே, அந்த மாவட்டத்தினுடைய 175 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் Credit Society–களிலே பணியாற்றிய தொழிலாளர்களுடைய சம்பளத்தை, ஊதிய உயர்வை அதிகப்படுத்தி, மத்திய வங்கியிலேயிருந்து நகைக் கடன் வழங்குவதற்காக வாங்கிய கடனை, 1998 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியிலேயிருந்து நகைக் கடன் வழங்குவதற்காக வாங்கிய கடனை, விவசாயிகளுக்கும் பொதுமக்களுக்கும் நகைக் கடன் வழங்குவதற்காக வழங்கிவிட்டு மக்கள் அந்த நகைக் கடனை மீட்டதற்குப் பிறகு, அந்தப் பணத்தை மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்குச் செலுத்தாமல், 25 கோடியே 45 இலட்சம் ரூபாயை imbalance நிதி சீரின்மை செய்தது, (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மாவட்டத்தினுடைய மத்தியக் கூட்டுறவு வங்கியினுடைய தலைவராக இருந்த திரு. சிவராமன் அவர்களுடைய தலைமையிலே நடைபெற்றபோது என்பதைக் குறிப்பிட்டுக்கொண்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. சிவராமனுடைய காலத்தில் நடந்தது என்பதைக் கூறி, சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியானது 1995–96 ஆம் ஆண்டு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே இருந்தவரையிலே எவ்வகையான நட்டத்திற்கும் இழப்பிற்கும் ஆளாகவில்லை. ஆனால், திரு. சிவராமன் அவர்களுடைய காலத்திலேதான், அவருடைய பதவிக் காலம் முடிவடைகிறபோது 23 கோடியே 23 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய் நட்டத்திலே அந்த வங்கியை



விட்டுவிட்டுச் சென்றவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியைச் சீரமைப்பதற்காக மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதுவரையிலே அந்த வங்கிக்காக கடந்த நான்காண்டு காலத்திலே கருணைத் தொகையாக வழங்கியிருக்கிற தொகை மட்டும் 16 கோடியே 28 இலட்சம் ரூபாயை வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் அவர்கள் பத்திரிகைகள் வாயிலாக, பேட்டிகள் வாயிலாக, தமிழகத்திலே இருக்கிற நலிவடைந்த வங்கிகளுக்குப் பயிர்க் கடன் வழங்குவதற்காக இதுவரை 128 கோடி ரூபாயை வழங்கியிருக்கிறோம், வழங்கியிருக்கிறோம் என்கின்ற ஒரு செய்தியைத் தொடர்ந்து சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியிலேயிருந்து வழங்கப்பட்டிருக்கிற பயிர்க் கடனுக்கு மத்திய ரிசர்வ் வங்கியிலிருந்தோ, நபார்டு வங்கியிலேயிருந்தோ ஒரு பைசா பணம்கூட இதுவரையிலே வரவில்லை. தஞ்சாவூர், கும்பகோணம் மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கியிருக்கிற பயிர்க் கடனும், நபார்டு வங்கியிலேயிருந்து இதுவரை ஒரு பைசாகூட கொடுக்கப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக்கு இப்போது liquidity support–ஆக நபார்டு வங்கியானது சுமார் 7 கோடி ரூபாய் சென்ற 15 நாட்களுக்கு முன்னாலே கொடுத்திருக்கிறார்கள் என்பது மட்டும் உண்மை. 15 நாட்களுக்கு முன்னாலே liquidity support–ஆக 7 கோடி ரூபாய் அளவிற்கு தொகையைக் கொடுத்துவிட்டு, பதினைந்தாவது நாள் அந்த வங்கியினுடைய செயல்பாட்டை முடக்கி வைப்பது என்பது இது எந்த ஜனநாயகக் கடமை? (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் வாக்களித்த மக்களுக்கு அவர்கள் செய்கிற பரிசா? வேரிலே கொதிக்கின்ற வெந்நீரை ஊற்றிவிட்டு விழுதிலே பன்னீரைத் தெளிப்பதற்குப் பார்ப்பவர்கள்தான் நாட்டு மக்களுக்கு நன்மை செய்யக்கூடியவர்களா? (மேசையைத் தட்டும் ஒலி)

நாட்டிலே நல்ல மழை நான்காண்டு காலம் இல்லாமல் இப்போது மழை பெய்துகொண்டிருக்கிறது. காலையிலே ஆறு மணிக்கு காட்டுக்குச் சென்றால் மாலை வரை தலை நிமிராமல் பாடுபடுகிற விவசாயினுடைய முதுகிலே ஓங்கித் தட்டி அடித்துவிட்டு, அவனுடைய முதுகிலே புண்ணாகி விட்டதே என்று வெந்த புண்ணிலே இன்றைக்கு

வேல் பாய்ச்சி, புண்ணினுடைய ஆழத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் மத்தியிலே இருக்கிற ஆட்சியாளர்கள். இன்றைக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய தலைமையிலே, சிறந்த தலைமையிலே, நல்ல நிர்வாகத்திலே, 1996–2001 வரையிலே கூட்டுறவிலே மிகப் பெரிய சுனாமியை உருவாக்கிவிட்டு, ஆழிப் பேரலையை உருவாக்கிவிட்டுச் சென்ற திராவிட முன்னேற்றக் கழகத்தாருடைய நிர்வாகச் சீர்கேடுகளுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என்னென்ன வகையான, சிவகங்கை மாவட்டத்திலே நடத்தப்பட்ட முறைகேடுகளைப்பற்றி மட்டும் நடவடிக்கை எடுக்கப்பட்டதற்காகவும், எத்தனை இலட்சம் ரூபாய்கள் முறைகேடான கடன்கள் வழங்கப்பட்டிருக்கின்றன; பண்ணைசாராக் கடன்களாக, திருவாளர் சிவராமன் தலைவராக இருந்தபோது, வழங்கப்பட்ட கடனிலே இன்றுவரை சிவகங்கை மாவட்டத்திலே அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கிய கடன்களிலே, 70 இலட்சத்து 82 ஆயிரம் ரூபாய் அசல் மட்டும் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு வரை வசூலாகாமல் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Gas Loan என்று 2000 ஆம் ஆண்டு இறுதியிலே அந்தக் கட்சி எதிர்காலத்திலே தேர்தலைச் சந்திப்பதற்காக ஒரு கடனை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே வழங்கினார்கள். அந்த Gas Loan விநியோகித்த வகையிலே இன்றைக்கு வரையிலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே விநியோகிக்கப்பட்ட Gas Loan வகையிலே இன்றைக்குவரை வட்டியோடு வராமல் இருக்கிற தொகை ஏழரை கோடி வழங்கப்பட்டதிலே ஐந்து கோடி ரூபாய்; (மேசையைத் தட்டும் ஒலி) நகைக் கடன் வழங்கியவகையிலே வராமல் இருக்கிற தொகை 25 கோடி ரூபாய்; (மேசையைத் தட்டும் ஒலி) பண்ணைசாரக் கடன்கள் வகையிலே அவருடைய கட்சிக்காரர்களுக்கு, யார் யாருக்கு என்ற பெயர்ப் பட்டியல் இருக்கிறது. அவற்றையெல்லாம் படித்தால் நேரம் ஆகிவிடும். அதையும் சேர்த்து 31 கோடி ரூபாய் பணத்தை, ஏழையெளிய மக்களுடைய பணத்தை, வாடி வதங்கிக்கொண்டிருக்கிற விவசாயிகளுக்குப் பயிர்க் கடன் வழங்க வேண்டிய கடனை, முறைகேடாகச் சீரழித்தவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11–55*

அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே ஏற்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட நிருவாகக் குழுக்களினுடைய தலைவர்களுடைய காலத்திலே சிவகங்கை



மாவட்டத்திலே நடந்ததைப் பற்றி மட்டுமல்ல; தமிழகத்தினுடைய மாநிலக் கூட்டுறவு வங்கியிலே—அன்றைக்கு நான் Sardar Mulla Transport பற்றிச் சொன்னேன். இன்றைக்கு ஒரு கதையை நான் சொல்லி உங்களிடமிருந்து விடைபெற விரும்புகின்றேன். இறந்துவிட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு மாநிலக் கூட்டுறவு வங்கியிலே நெல்லிக்குப்பத்திலே நடந்த இடைத் தேர்தலிலே வெற்றி பெற வேண்டுமென்பதற்காக 2000 ஆம் ஆண்டு திடீரென்று கூட்டுறவுச் சட்டம் 32–வது விதியைத் தளர்த்தி அவருக்கும், அவருடைய மகனுக்கும், அவருடைய மனைவியின் பெயரிலும் வழங்கிய கடன் 25 இலட்சம் ரூபாயிலே இன்றைக்கு வரையிலே 30 இலட்சம் ரூபாய் வரை வட்டியோடு வசூல் ஆகாமல் நிலுவையிலே இருக்கிறது. அதற்காக அப்போது மாநிலக் கூட்டுறவுத் துறை அமைச்சராக இருந்தவர் சட்டத்திலேயே விலக்களித்து, மாநிலக் கூட்டுறவு வங்கியிலே ஒரு தனி நபரை அங்கத்தினராகச் சேர்த்து நெல்லிக்குப்பம் தேர்தலிலே வெற்றி பெற வேண்டுமென்பதற்காக மாநிலக் கூட்டுறவு வங்கியினுடைய பணத்தை 30 இலட்சம் ரூபாயை அள்ளிக் கொடுத்தவர்கள் யார்? அதற்காக விதிவிலக்களித்தவர்கள் யார்? யாருடைய ஆட்சிக் காலத்திலே இப்படிப்பட்ட தவறுகள் நடந்தது? கெடுத்ததையும் கெடுத்துவிட்டு, படிப்பது இராமாயணம், இடிப்பது பெருமாள் கோயிலா? (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டக் கூட்டுறவு வங்கி இன்றைய நிலையிலே மிகச் சிறப்பாக உள்ளது. இரண்டும் (குறுக்கீடு) நடப்பாண்டு (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** இன்னும் ஒரு வார காலத்தில் (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** கணக்குகள் தணிக்கை செய்யப்படும்போது.. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** 3 கோடியே 80 இலட்சம் ரூபாய் அளவுக்கு.. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. பன்னீர்செல்வம். உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய சிறந்த முயற்சியிலே, சீரிய முயற்சியிலே, நல்ல வழிகாட்டுதலிலே சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியினுடைய அனைத்து deposit-களும் insurance செய்யப்பட்டிருக்கிறது. இன்றைக்குச் சிறப்பாக நடைபெறுகின்ற வங்கிகளிலே சிவகங்கை வங்கி முதன்மை வங்கியாக இருக்கிறது. பொதுமக்கள் பீதியடையத் தேவையில்லை. அம்மாவினுடைய வழிகாட்டுதலிலே அனைத்து மக்களுக்கும் அவர்களுடைய deposit பணம் ரூ. 140 கோடிக்கும் சரியான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. எந்த வகையான சூழ்ச்சியும், மத்திய நிதி அமைச்சருடைய சூழ்ச்சியும் சிவகங்கை மாவட்ட மக்களிடத்திலே எடுபடாது. தமிழ்நாட்டிலே எடுபடாது என்கின்ற விளக்கத்தைச் சொல்லி அமர்கின்றேன். நன்றி. வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, என்ன சொல்லுங்கள்?

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தியைப் பற்றிச் சொன்னார். அவர் அப்போது தி.மு.க.-விலே இல்லை என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் 4 ஆண்டுகளாக ஏன் இவர்கள் எல்லாம் வசூல் செய்யவில்லை. தி.மு.க.-காரர்களுக்குக் கொடுத்தார்கள் என்று சொல்கிறீர்களே, 4 ஆண்டுகளாக கூட்டுறவுத் துறையை வைத்திருக்கிறீர்கள். வசூல் செய்யாதது யார் குற்றம்? கடன் இருக்கிறது..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் உண்மையைச் சொல்கிறார். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு கூட்டுறவுத் துறைக்கு வரவேண்டிய கடன் பாக்கியாக சுமார் 800 கோடி ரூபாய் உங்கள் கட்சிக்காரர்களிடத்திலேதான் பாக்கி இருக்கிறது. அதை உங்கள் கட்சித் தலைவரிடத்திலே சொல்லி அவர்களை எல்லாம் கட்டச் சொல்லுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி யசோதா. திருமதி யசோதா. (குறுக்கீடு) திரு. எஸ்.ஆர்.பி.



**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் வங்கி முடக்கப்பட்டதாலே வங்கியிலே வைப்புத் தொகை வைத்திருப்பவர்களுக்கு எந்தவிதமான ஆபத்தும் கிடையாது என்று விளக்கம் கொடுப்பது தவறு இல்லை. தாராளமாக கொடுக்கலாம். ஆனால், அதற்காக சகட்டுமேனிக்கு குற்றச்சாட்டுகள் சுமத்துவதும், உள்நோக்கம்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, எஸ்.ஆர்.பி. இல்லை, ஆதாரத்தை வைத்துக் கொண்டுதான் சொல்கிறார்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை, இல்லை. அது ஆதாரம் கிடையாது. அவர் சபையிலே உறுப்பினர் இல்லை. அவர் சபையிலே உறுப்பினர் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, கையிலே ஓர் ஆதாரத்தை வைத்துக் கொண்டுதான் அவர் பேசுகிறார்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே அவர் சபையிலே உறுப்பினர் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் கையிலே ஓர் ஆதாரத்தை வைத்துக் கொண்டுதான் பேசுகிறார்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஆதாரம் என்றால் என்ன ஆதாரம்? (குறுக்கீடு) நான் முதலிலே என்ன பேசுகிறேன் என்று கேட்டுவிட்டு பிறகு சொல்லுங்கள். முதலிலே என்ன சொல்கிறேன் என்றால், Reserve Bank-ஐப் பொறுத்தவரையிலே, அது ஒரு தன்னாட்சி நிறுவனம். அங்கே யாரும் குறுக்கிட முடியாது. அவர்கள் ஏற்கெனவே Notice கொடுத்திருக்கிறார்கள். அந்த Notice படி நடந்துகொள்ளவில்லை. ஏற்கெனவே அவர்களுக்கு நீட்டிப்பு, 6 ஆண்டு காலம் நீட்டிப்பு கொடுத்திருக்கிறார்கள். அதற்குப் பிறகும் தவறு நடைபெறுகிறது என்று சொன்னதனாலே அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அந்த நடவடிக்கை தவறு என்றால், அந்த நடவடிக்கையை நிறுத்துவதற்கு நாம் முயற்சி பண்ணலாம். ஆனால், அதேநேரத்திலே அதற்காக நிதி அமைச்சர்மீது, இங்கே இல்லாத நிதியமைச்சர்மீது அவர்தான் சதி செய்தார் என்று சொல்வதும், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்குத் துரோகம் செய்தார் என்று சொல்வதும் இந்தச் சபையிலே பேசுவது முறையல்ல. இந்தச் சபையிலே பேசக் கூடாது. அவர் உறுப்பினர் இல்லை. இந்தச் சபையிலே இல்லை. அவையிலே இல்லாத..

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. எஸ்.ஆர்.பி., அவர் சொல்லி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு மூத்த உறுப்பினர் அண்ணன் எஸ்.ஆர்.பி. அவர்கள் சொல்வதற்குமுன் நான் ஒரு விளக்கத்தைத் தர விரும்புகிறேன். இந்தப் பிரச்சினையைக் கிளப்பியது மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள். திரு. ஞானசேகரன் அவர்கள் கிளப்பிய பிரச்சினைக்குத்தான் நான் பதில் சொல்லவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இன்றைக்குத் தமிழகத்திலே மட்டும் இந்த ஒரே ஒரு வங்கியின்மீது மட்டும்தான் இந்தச் சட்டம் பாய்ந்திருக்கிறதே அல்லாமல், நாடு முழுவதும் 144 வங்கிகள் முடக்கப்பட...

நண்பகல் 12–00

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை குறித்து நான் விரிவான ஓர் அறிக்கையை நேற்று வெளியிட்டிருக்கிறேன். இந்த சிவகங்கை கூட்டுறவு வங்கி முடக்கப்பட்டது குறித்து மாநில அரசுக்கு எந்தவிதமான தகவலும் தரப்படவில்லை என்பதை அந்த அறிக்கையிலேயே தெளிவுபடுத்தியிருக்கிறேன். மத்திய நிதி அமைச்சரின் தூண்டுதலின்பேரில், அந்த வங்கியை முடக்கிவிட்டு, அதன்பிறகு மத்திய நிதி அமைச்சர் அவர்களே இந்தப் பிரச்சினையை வெளியிட்டார். அவர் ஓர் அறிக்கை கொடுத்து, இந்த வங்கி முடக்கப்பட்டதற்கு யார் காரணம்? ஜெயலலிதாதான் காரணம், போய் ஜெயலலிதாவிடம் கேளுங்கள் என்றெல்லாம் அவர் பேட்டி கொடுத்திருந்தார், அறிக்கை கொடுத்திருந்தார். அதற்குத்தான் நான் பதில் சொல்லியிருக்கிறேன் அறிக்கை விரிவாக பதில் சொல்லியிருக்கிறேன். அதை மீண்டும் இங்கே பேச நான் விரும்பவில்லை. மீண்டும் அந்தப் பிரச்சினையை இங்கே கிளப்ப யாரும் விரும்பவில்லை. ஆனால், காங்கிரஸ் கட்சி உறுப்பினர், திரு. ஞானசேகரன் அவர்கள்தான் இப்போது அந்தப் பிரச்சினையை இங்கே எழுப்பினார். அதற்குத்தான் எங்களுடைய அமைச்சர் இங்கே பதில் சொன்னார் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா. (குறுக்கீடுகள்)



**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** குற்றச்சாட்டை மாண்புமிகு உறுப்பினர் இராஜரெத்தினம்...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசினீர்கள் அதை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பிரச்சினை எழுப்பியதில் தவறு இல்லை. பிரச்சினை எழுப்பினால், பிரச்சினைக்குப் பதில் சொல்லலாம். இங்கே வைப்புத் தொகை வைத்த அத்தனைப் பேருக்கும், Deposit Holders அத்தனைப் பேர்களுக்கும் உறுதிமொழி சொல்லலாம். அதற்கு எந்தவிதமான பங்கம் வந்துவிடாது. நீங்கள் செலுத்தியத் தொகை அப்படியே நிச்சயமாக திருப்பித் தரப்படும் என்று உத்தரவாதம் கொடுப்பதிலே தவறு இல்லை. அரசின் கடமையும்கூட. ஏனென்று சொன்னால், அந்த வங்கி தமிழக அரசினுடைய கட்டுப்பாட்டிலேயிருக்கிறது. எனவே, அதற்கு உத்தரவாதம் தரவேண்டியதுதான். அதற்காக, நீங்கள் நேரடியாக மத்திய நிதி அமைச்சர்மீது குற்றச்சாட்டு சொல்வதும், ஏதோ சதி செய்தார் என்று சொல்வதும், சட்டசபையிலே சொல்லமுடியாது. அதற்கு விதிகள் தெளிவாக இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அது எப்படி முறையாக இருக்கமுடியும்? உள்நோக்கம் கற்பித்து (குறுக்கீடுகள்) அவருடைய தொகுதி...

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் எஸ்.ஆர்.பி. அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர்தான் முதன்முறையாக, இதற்குக் காரணம் முழுக்க முழுக்க தமிழக அரசும், முதலமைச்சரும் என்று பத்திரிகையிலே அறிக்கை விட்டவர் அவர்தான். அதற்குப் பிறகு மூன்று நாள் கழித்துத்தான் எங்களுடைய இதய தெய்வம் அம்மா அவர்கள், கண்ணியம் காத்து அதற்குப் பிறகு தன் கடமையை நிறைவேற்றியிருக்கிறார்கள். மூன்று நாட்களாக மக்களிடையே பிரச்சினையை திசைதிருப்ப முயற்சி செய்தவர்கள் யார் என்பது நாட்டு மக்களுக்கே நன்றாகத் தெரியும். இதே நடவடிக்கையை மாநிலத்திலே அல்ல, இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் 11 (1) bank-ல் வேறு

எந்த bank-ன்மீதும் நடவடிக்கை எடுக்காமல், 2004 மார்ச் 31-லே முடிவடைந்த கணக்கை வைத்து, 2005 ஏப்ரல் 5 ஆம் தேதி நடவடிக்கை எடுப்பது என்ன நியாயம் என்பதுதான் எங்களுடைய கேள்வி? அது எப்பொழுது நடந்த முறைகேடு? திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் நடந்த முறைகேட்டை எங்கள்மூலமாக, இந்த அவையின்மூலமாக வெளிக்கொண்டுவருவதற்கு மத்திய நிதி அமைச்சர் இப்படி ஓர் ஏற்பாட்டைச் செய்திருக்கிறார். என்னுடைய அடுத்த கேள்வி ஒன்று கேட்டு அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** 147 வங்கிகளாக இருக்கலாம் அல்லது 100—எவ்வளவு வங்கிகளானாலும் இருக்கலாம். ஆனால், அந்த வங்கிகளுக்கு நீட்டிப்பு கொடுக்கப்பட்டதா? Reserve Bank மூலம் நீட்டிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறதா? எவ்வளவு காலத்திற்குள் அது சரி செய்யவேண்டுமென்று நீட்டிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். இதைப் பொறுத்தவரையில், அந்த மூன்றாவது மாதத்தோடு அது முடிவடைகிறது. எனவேதான் Reserve Bank நடவடிக்கை எடுத்திருக்கிறது. நிதி அமைச்சர் நடவடிக்கை எடுக்கவில்லை. தவறானது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் நீட்டிப்பு தரவேண்டும் என்று மாநில அரசிடமிருந்து கோரிக்கை அனுப்பப்பட்டது. வேண்டுமென்றே மத்திய நிதி அமைச்சர் அவர்களும், Reserve Bank of India-வும் அதை நிராகரித்துவிட்டு, அதைக் கண்டுகொள்ளாமல் இந்த முடக்கம் நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி யசோதா. (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக எந்த ஆட்சியாக இருந்தாலும், யாராக இருந்தாலும், வாங்கிய கடனைத் திருப்பி அரசுக்குக் கட்டவேண்டும் என்பதிலே யாருக்கும் மாறுபட்ட கருத்து கிடையாது. எந்த அரசாக இருந்தாலும் இப்படி கூட்டுறவு வங்கியின்மூலம் கடன் கொடுக்கும். அது தி.மு.க. அரசாகயிருந்தாலும் சரி, அ.தி.மு.க.-வாகயிருந்தாலும், காங்கிரசாக இருந்தாலும் கடன் கொடுக்கும். அந்தக் கடன் கொடுப்பது என்பது, அது அரசாங்கம் செய்கின்ற சலுகை. ஆனால், அதே ஆட்சியோ, அடுத்து வருகிற ஆட்சியோ அந்தக் கடனை வசூல் செய்ய வேண்டும். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஏதோ கடன் கொடுத்ததே தி.மு.க.



ஆட்சியிலே மிகப்பெரிய ஊழலைப்போல சித்தரிப்பது தவறு. நாங்கள் கேட்கிறோம்,...

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில கூட்டுறவு வங்கியினுடைய..

**திரு. துரைமுருகன்:** Please, please. விதிமுறைகளை மீறி, அப்படி யாருக்காவது கொடுத்திருந்தால், சட்டப்படி நீங்கள் அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதிலே எங்களுக்கு மாறுபட்ட கருத்தில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் அந்தக் கருத்தைத்தான் சொல்கிறார். விதிமுறைகளை மீறிக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில கூட்டுறவு வங்கியானது, சென்னை மாவட்டத்திற்குள் அல்லாத ஒரு சொத்துக்கு, கடலூரிலேயிருக்கிற, விலை குறைந்த ஒரு சொத்திற்கு பதினைந்து இலட்சம் ரூபாய் மட்டுமே தற்போது மார்க்கெட் விலையுள்ள ஒரு சொத்திற்கு, அப்போது முப்பது இலட்சம் ரூபாய் என்று விலை மதிப்பு காட்டி கடனை வழங்குவதற்காக, அதற்கும் அப்பொழுது சட்டத்திலேயே ஒரு திருத்தத்திற்கு அப்பொழுது இருந்த அமைச்சர் அவர்கள் விதிவிலக்கு அளித்து, ஒரே மாதத்திலே அந்தக் கடனை வழங்கியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் அவருடைய கருத்தாகச் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** அதை வசூலிப்பதற்கான அனைத்து நடவடிக்கையும் எடுக்கப்பட்டு, 2005 ஜனவரி மாதம் 11 ஆம் தேதி சொத்துகள் ஜப்தி செய்யப்பட்டிருக்கின்றன என்பதை... (குறுக்கீடு) குறைந்த அளவு சொத்துதான் இருக்கிறது.

பிற்பகல் 12-05

**திரு. துரைமுருகன்:** அதாவது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதுபோல, தவறாக முறைகேடாக யார் கடன் வழங்கியிருந்தாலும் அவர்கள்மீது நீங்கள் நடவடிக்கை எடுத்தால் திராவிட முன்னேற்றக் கழகம் அவர்களுக்காகப் பரிந்துரை செய்யாது. ஆனால், பொதுவாக, விவசாயிக்குக் கொடுத்த கடனை நான்கு ஆண்டு காலமாக நீங்கள் வசூல் செய்யாமல் விட்டுவிட்டு, உங்கள் கையாலாகாத்தனத்திற்கு எங்கள்மீது பழியைப் போடுவது என்ன நியாயம்?

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 755 நபர்கள் இவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் வழக்குமன்றத்திலே சென்று.. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், நீதிமன்றத்திலே சென்று என்றுதான் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** அவர்களுடைய சொத்துக்களின்மீது வசூல் செய்வதற்குத் தடையாணை பெற்றிருக்கிறார்கள். வேண்டுமென்றால் அவர்கள் அந்தத் தடையாணையை நீக்கிவிட்டு வழக்குமன்றத்திலே அந்த வழக்கைச் சந்தித்து நேரடியாக அவர்களுடைய தாவாவை நேர் செய்துகொள்ளலாம். அதற்கு மாறாக, குறுக்கு வழியிலே சென்று தற்காலிகமாக தடையாணையைப் பெற்று வசூல் செய்வதை, 755 பேர் தேர்ந்தெடுக்கப்பட்ட வங்கியினுடைய நிர்வாகத்தில் தலைவர்களாக, இயக்குநர்களாக இருந்தவர்கள் மட்டும் தடையாணை பெற்றிருப்பவர்கள். அது போக, சொத்து மதிப்பே இல்லாமல் கொடுக்கப்பட்ட கடன்களே பல நூறு கோடி ரூபாயைத் தாண்டுகிற அளவிற்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதன்மீதும், நீங்கள் வருத்தப்படாதீர்கள், விரைவில் நடவடிக்கை வரும். கண்டிப்பாக உப்பைத் தின்றவர்கள் தண்ணீரைக் குடித்தேயாக வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அதில் மாறுபட்ட கருத்தேயில்லை. நிச்சயமாக உப்பைத் தின்றவர்கள் தண்ணீரைக் குடித்தேயாக வேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. விளக்கம் சொல்லிவிட்டீர்கள். நீங்கள் சொன்னதற்கு அமைச்சர் பதில் சொல்லிவிட்டார்கள்.

**திரு. துரைமுருகன்:** அவர் சொல்கிற காரணம், யாரோ போய் தடையாணை வாங்கியிருக்கிறார்களாம். தடையாணையை விலக்குவதில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாரோ போய் இல்லை.

**திரு. துரைமுருகன்:** யாராக இருந்தாலும் சரி. தடையாணையை விலக்குவதில்...

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** உங்கள் கட்சியிலேயே, இந்த அவையிலேயே உறுப்பினராக இருப்பவர் தடையாணை பெற்றிருக்கிறார்.



**திரு. துரைமுருகன்:** கோர்ட்டுக்குப் போய் ஒரு தனி மனிதன் தடையாணை வாங்குவது என்பது நீதிமன்றத்திலே நடக்கிற ஒன்று. ஆனால், அந்தத் தடையாணையை நீக்குவது ஒன்றும் அரசுக்குப் பெரியதல்ல. இன்னும் சொல்லப்போனால், தடையாணை கொடுத்ததையெல்லாம் நீதிபதிகள் வீட்டிலேகூட போய் அந்தத் தடையாணைக்கு எதிராணை வாங்கியிருக்கிறீர்கள். அவ்வளவு சாமர்த்தியம் உள்ள அரசு இந்தத் தடையாணையை ஒரு நொடியிலே நீக்கிவிட்டு நடவடிக்கை எடுக்கக் கூடாதா?

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் திரு. துரைமுருகன் அவர்களும், திரு. எஸ்.ஆர்.பி. அவர்களும், திரு. ஞானசேகரன் அவர்களும் தவறான கருத்துகளை இங்கே தெரிவித்து பிரச்சினையை திசை திருப்பப் பார்க்கிறார்கள். நான் இவ்வளவு நேரம் இந்த அவையின் நேரத்தை எடுத்துக்கொள்ளக்கூடாது என்றுதான் பொறுமை காத்தேன். இந்தப் பிரச்சினையை ஆரம்பித்து வைத்தவர் மத்திய நிதியமைச்சர் திரு. சிதம்பரம் அவர்கள். இந்தக் கூட்டுறவு வங்கியை, சிவகங்கை கூட்டுறவு வங்கியை முடக்கிவிட்டு அவர்தான் ஓர் அறிக்கை வெளியிட்டார். அப்போதுதான் இந்த விவரம் மாநில அரசுக்கே தெரிய வந்தது. முடக்கப்பட்டதற்கு முழு பொறுப்பை மாநில அரசுதான் ஏற்க வேண்டும், குறிப்பாக, "முதலமைச்சர் என்று என் பெயரைக் குறிப்பிட்டு, முதலமைச்சர்தான் இந்தப் பொறுப்பை ஏற்க வேண்டும், அவர்தான் இதற்குக் காரணம் என்று பழி சுமத்தினார். அதன் பிறகு, விவரங்களைச் சேகரித்து விரிவான ஓர் அறிக்கையை நேற்று நான் வெளியிட்டேன். அந்த அறிக்கை எல்லா முக்கியமான நாளேடுகளிலும் வெளிவந்திருக்கிறது. தொலைக்காட்சிகளிலும் அது தெரிவிக்கப்பட்டது. ஆனால், வேண்டுமென்றே என்னுடைய அறிக்கையில் இருக்கின்ற விவரங்களை மூடிமறைத்து, பிரச்சினையை திசை திருப்பப் பார்க்கிறார்கள் எதிர்க்கட்சி உறுப்பினர்கள். ஆகவே, இந்த அவையில், என்ன நடந்தது என்ற உண்மை விவரங்களை நான் பதிவு செய்ய விரும்புகிறேன். ஆகவே, அவையின் நேரத்தை நான் எடுத்துக்கொள்ள வேண்டிய கட்டாயத்தை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உருவாக்கிவிட்டார்கள்.

சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மாநில அரசின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் வருவதாகவும், அதன் நிதிநிலைமையை மேம்படுத்துமாறு பல முறை அறிவிப்பு கொடுத்தும் மாநில அரசின் தரப்பிலோ அல்லது வங்கியின் தரப்பிலோ எந்தவித சாதகமான

நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென்றும், இவ்வங்கியின் செயல்பாட்டில் கடும் முறைகேடுகள் நடைபெற்றுள்ளன என்றும் தெரிவித்து, அந்த வங்கியின் சீர்குலைவிற்கு மாநில அரசே காரணம் என்று மத்திய அமைச்சர் திரு. ப. சிதம்பரம் குற்றம்சாட்டியுள்ள செய்தி பத்திரிகைகளில் வெளியாகியுள்ளது. மத்திய நிதியமைச்சர் வழக்கம்போலவே அடிப்படையான உண்மை நிலையை ஒதுக்கித் தள்ளி இதில் அரசியல் ஆதாயம் தேட முயற்சித்துள்ளார். இவ்வாறு செய்வதை அவர் வாடிக்கையாகக் கொண்டிருப்பது மிகவும் துரதிருஷ்டவசமானது. அப்படியிருந்தும் தொடர்ந்து அவர் மத்திய அரசின் நிதியமைச்சகத்திற்குத் தலைமையேற்று நடத்திக்கொண்டிருக்கிறார். சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் நிதிநிலைமை சீரழிந்து 31-3-1999 அன்றைய நிலவரப்படி அதன் நிகர மதிப்பு ஒரு இலட்சம் ரூபாய்க்கும் கீழாக வீழ்ச்சியடைந்துவிட்டது. இவ்வாறு இவ்வங்கி 1949 ஆம் ஆண்டு வங்கி முறைப்படுத்தல் சட்டத்தின் 11, உட்பிரிவு 1 பிரிவை நிறைவு செய்யவில்லை. இங்கு இந்தத் தேதிதான் முக்கியமானது.

அப்போது தி.மு.க.தான் ஆட்சிப் பொறுப்பில் இருந்தது. ஆகவே, சிவகங்கைக் கூட்டுறவு வங்கியின் சீர்குலைவுக்கு அப்போதைய தி.மு.க. அரசின் நிர்வாகச் சீர்கேடே முழு காரணமாகும். 1949 ஆம் ஆண்டு வங்கி முறைப்படுத்துதல் சட்டத்தின் 11, உட்பிரிவு (1) பிரிவை நிறைவு செய்யாததால், மத்திய அரசு, இவ்வங்கி தொடர்ந்து செயல்பட ஏதுவாக இவ்வங்கிக்கு முதலில் 31-3-2003 வரையிலும், பின்னர் 31-3-2004 வரையிலும், இப்பிரிவிலிருந்து விலக்கு அளித்தது.

பிற்பகல் 12-10

மீண்டும் இவ்வங்கி 31-3-2007 வரை விதிவிலக்கு கோரி விண்ணப்பித்தது. மாநில அரசும் 30-3-2004 அன்று, இதனைப் பரிந்துரைத்து நபார்டு வங்கிக்கு அனுப்பி வைத்துள்ளது. இந்த விண்ணப்பம் இன்னமும் நிலுவையில் இருக்கும்போதே இந்திய ரிசர்வ் வங்கியானது, இவ்வங்கி வைப்பீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கும், அவற்றைப் புதுப்பிப்பதற்கும் மற்றும் வைப்பீட்டாளர்களுக்கு அவர்களுடைய கணக்கிலிருந்து ஆயிரம் ரூபாய்க்குமேல் திருப்பிக் கொடுப்பதற்கும் தடை விதித்து 5-4-2005 அன்று தன்னிச்சையான, தேவையற்ற, கடுமையான உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளது. இந்த உத்தரவுகள், ஒருதலைபட்சமாகப் பிறப்பிக்கப்பட்டுள்ளன. காரண விளக்கம் கேட்டு இவ்வங்கிக்கு அறிவிப்பு எதுவும் கொடுக்கப்படவில்லை. உத்தேச நடவடிக்கை குறித்து,



மாநில அரசுக்கும்கூட தெரிவிக்கப்படவில்லை. இது மிகவும் துரதிர்ஷ்டவசமான, தேவையற்ற, கடுமையான நடவடிக்கை ஆகும்.

விவசாயிகள், கைவினைஞர்கள், நெசவாளர்கள் ஆகியோர்களின் தேவைகளைக் கருத்திற்கொள்ளாமல், அவர்களின் நலனை அலட்சியப்படுத்தும் போக்கில் இவ்வாறு செய்து இருப்பது, திரு. ப. சிதம்பரம் அவர்களின் வஞ்சக நோக்கத்தையே வெளிப்படுத்துவதாக அமைகிறது. திரு. ப. சிதம்பரம், என்னுடைய அரசுமீது பழி சுமத்துவதற்கு முன்னதாக, இவ்வங்கி சீர்குலைந்தது தி.மு.க. ஆட்சிக் காலத்தில்தான் என்பதனையும், என்னுடைய அரசுதான் உண்மையில் அச்சீர்குலைவிலிருந்து இவ்வங்கியை மீட்டது என்பதையும் தெரிந்துகொள்ளாமல் போனது ஏன்? (மேசையைத் தட்டும் ஒலி)

அவருடைய கூட்டணிக் கட்சிகள் செய்த கடும் முறைகேடுகளை என்னுடைய அரசு செய்தது போல் பழிபோடுவதுதான் அவரது கூட்டணி தர்மம்போலும். 31-3-1999 வாக்கிலேயே தி.மு.க. ஆட்சியால், சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, சீரழிக்கப்பட்டுவிட்டது என்பதுதான் இதிலிருந்து வெளிப்படுகிற அடிப்படை உண்மை ஆகும். இதனை எவரும் மறுக்க முடியாது.

2001 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு அடுத்தடுத்து கடும் வறட்சிக்கு இலக்காகியது என்பதும், இதனால் விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளிடமிருந்து பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்த முடியவில்லை என்பதும் அனைவரும் அறிந்ததே. இவ்வாறாக ஒட்டுமொத்தக் கூட்டுறவுக் கடன் அமைப்பே பெரும் நெருக்கடிக்கு உள்ளாகி இருந்தது. கூட்டுறவுக் கடன் அமைப்பை தேவையான நிதி உதவி அளித்து, இந்தக் கூட்டுறவுக் கடன் அமைப்பை வலுப்படுத்துவதற்கான சீரமைப்பு நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வதை விட்டுவிட்டு, திரு. ப. சிதம்பரம் 2004-2005 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில், ஒரு பணிக் குழு அமைக்கப்படும் என்ற வெற்று அறிவிப்பை மட்டும் வெளியிட்டார்.

இக்குறைபாட்டை நான் அப்போதே சுட்டிக்காட்டினேன். தற்போது 2005-2006 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் மாநில அரசுகள் இதுகுறித்து கலந்து ஆலோசிக்கப்படும் என்று குறிப்பிட்டு, சீரமைப்பு நடவடிக்கைகள் பற்றிய சில குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. நிலைமை இவ்வாறு இருக்க, திரு. ப. சிதம்பரமும், இந்திய ரிசர்வ் வங்கியும், விவசாயிகள், நெசவாளர்கள், சிறு கைவினைஞர்கள் மற்றும் ஏழை எளிய மக்கள் ஆகியோரின் வறிய நிலைமையையும் பொருட்படுத்தாமல் இவ்வாறு கடும் நடவடிக்கையை எடுத்தது ஏன்? இது உள்ளபடியே

கண்டிக்கத்தக்க ஒரு நடவடிக்கை ஆகும். இதில் மேலும் மோசம் என்னவென்றால், சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியானது, அதன் நெருக்கடியான நிலையிலிருந்து 2004–2005 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தகுந்த விதத்தில் மீண்டு, இந்த ஆண்டு, நல்லதொரு முன்னேற்றம் கண்டுள்ள ஒரு காலக் கட்டத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) நல்லதொரு முன்னேற்றம் கண்டுள்ள ஒரு காலக் கட்டத்தில், இந்தக் கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில், இவ்வங்கி 10 கோடி ரூபாய் என்ற இலக்கையும் விஞ்சி 11.70 கோடி ரூபாய் அளவுக்கு பயிர்க் கடன் அளித்துள்ளது. 3.5 கோடி ரூபாய் பயிர்க் கடன் தவணையை மாற்றியமைத்து அதன்மூலம், வாராக் கடனின் Non-performing Assets-ன் அளவைக் குறைத்துள்ளது. வட்டித் தள்ளுபடி ரொக்கத் தேவைகளுக்கான ஆதரவு நிதி, Liquidity support முதலியவற்றிற்காக, பல்வேறு திட்டங்களின்கீழ் சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு, மாநில அரசு, கடந்த 4 ஆண்டுகளில் 16.28 கோடி ரூபாய் வழங்கியுள்ளது. 1999 ஆம் ஆண்டுக்கு முன்னர் வழங்கப்பட்ட, ஒரு முறை மாற்றியமைக்கப்பட்ட கடன்களைச் சமாளிப்பதற்காக 2004–2005 ஆம் ஆண்டில் இவ்வங்கிக்கு, மாநில அரசு 6.8 கோடி ரூபாய் வழங்கி உள்ளது. மேலும் இவ்வங்கி நபார்டு வங்கியிடமிருந்து ரொக்கத் தேவைகளுக்கான ஆதரவு நிதியாக 7.70 கோடி ரூபாய் பெற்று உள்ளது.

*பிற்பகல் 12–15*

இவ்வாறாக இவ்வங்கியைச் சீரமைப்பதற்கு திட்டவட்டமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அதற்கு நல்ல பயன் கிட்டியுள்ள நிலையிலும், இந்திய ரிசர்வ் வங்கியானது நபார்ட் வங்கியின் அறிக்கையின் அடிப்படையில் இவ்வங்கியின் இயல்பான பணிகளுக்கு தடை விதித்து மேற்சொன்ன உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளது.

இவ்வங்கி, வங்கி முறைப்படுத்துதல் சட்டத்தின்படியான ரொக்க இருப்பு விகிதம் மற்றும் சட்டப்படியான பணமாற்று விகிதம் ஆகியவற்றைப் பராமரித்து வந்துள்ளது. இச்சட்டத்தின் 11, உட்பிரிவு 1 பிரிவு நிறைவு செய்யப்படாததைத் தவிர வேறு முறைகேடுகள் எதுவும் இல்லை. சட்ட மீறல் எதுவும் இல்லை. எனவே, திரு. ப. சிதம்பரம் அவர்களின் குற்றச்சாட்டுகள் முற்றிலும் ஆதாரமற்றவை. தி.மு.க. ஆட்சியால் சீரழிந்த நிலையில் விடப்பட்ட இவ்வங்கியைச் சீரமைக்க மாநில அரசு திறம்பட நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்பது மேற்சொன்னவற்றால் தெளிவாகிறது.



கடந்த 4 ஆண்டுகளில் இவ்வரசு இவ்வங்கிக்கு கணிசமான நிதியுதவி அளித்துள்ளது. இதன் பயனாக இவ்வங்கி 31–3–2004 அன்றைய நிலவரப்படி மொத்தக் கடன் நிலுவையில் 35.8 சதவிகிதமாக இருந்த வாராக் கடன் அளவை 31–3–2005 நிலவரப்படி 22.35 சதவிகிதமாக குறைத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வங்கி 2004–2005 ஆம் ஆண்டில் இலாபம் ஈட்டக்கூடிய நிலையில் உள்ளது. 31–3–2005 நிலவரப்படி இவ்வங்கியின் நிகர மதிப்பு 2.35 கோடி ரூபாயாக இருக்கும். இவ்வாறாக 31–3–2005 நிலவரப்படி சிவகங்கை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி மோசமான நிலைமையில் இருந்து வெற்றிகரமாக மீண்டுள்ளது என்பதும், (மேசையைத் தட்டும் ஒலி) தற்போது இது வங்கி முறைப்படுத்துதல் சட்டத்தின் 11, உட்பிரிவு 1 பிரிவை நிறைவு செய்துள்ளது என்பதும் தெளிவாகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

5–4–2005 அன்று இந்திய ரிசர்வ் வங்கி எடுத்த நடவடிக்கை முற்றிலும் தேவையற்ற ஒன்றாகும். அது உடனடியாகத் திரும்பப் பெறப்பட வேண்டும். கடந்த ஆண்டில் ஏற்பட்ட முன்னேற்றங்களையும், 31–3–2005 அன்றுள்ளவாறான நிலைமையையும் இந்திய ரிசர்வ் வங்கி கருத்தில் கொண்டிருக்குமேயானால் அது மேற்கொண்ட நடவடிக்கையை எடுத்திருக்கக்கூடாது என்பது தெளிவாகிறது. தான் பிறப்பித்த உத்தரவுகளை இரத்து செய்வதுதான் இந்திய ரிசர்வ் வங்கி மேற்கொள்ளக்கூடிய சரியான நடவடிக்கையாக இருக்கும். வங்கி முறைப்படுத்துதல் சட்டத்தில் 11, உட்பிரிவு 1 பிரிவை நிறைவு செய்வதில் இருந்து 31–3–2007 வரையிலான மேலும் 3 ஆண்டுகளுக்குத் தொடர்ந்து விதிவிலக்கு அளிக்குமாறு வேண்டி 30–3–2004 அன்று மாநில அரசு ஒரு செயற்குறிப்பை அனுப்பியிருந்தது. இந்திய ரிசர்வ் வங்கியும், மத்திய அரசும் இந்தக் கோரிக்கையை புறக்கணித்துவிட்டன. நாட்டிலுள்ள கூட்டுறவுக் கடன் அமைப்புகள் அனைத்தும் புனரமைக்கப்பட வேண்டியது அவசியம் என்பது திரு. ப. சிதம்பரத்திற்கு நன்கு தெரிந்திருந்தும் இந்த விதிவிலக்கை அவர் ஏன் வழங்கவில்லை? மேலும் 31–3–2005 நிலவரப்படி சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் நிகர மதிப்பு 2.35 கோடி ரூபாயாக உள்ளதால் அதற்கு இனிமேலும் மேற்சொன்ன 11, உட்பிரிவு 1 பிரிவிலிருந்து விலக்கு தேவையில்லை என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) விலக்கு தேவையில்லை என்பதுதான் நிதர்சனமான உண்மை. இருந்தாலும் சரியான நேரம் பார்த்து அரசியல் அபிலாஷைகளைத் தீர்த்துக்கொள்வதற்காக, வஞ்சக நோக்கத்தோடு விவசாயிகள், கைவினைஞர்கள், நெசவாளர்கள் மற்றும் இவ்வங்கியை நம்பியுள்ள ஏனையோரையும் பாதிக்கின்ற இந்த கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

தன்னுடைய சொந்தத் தொகுதி மக்களையே பாதிக்கக்கூடிய இத்தகைய பழிவாங்கும் நடவடிக்கையை மேற்கொள்வதற்குப் பதிலாக, தேவையற்ற மேற்சொன்ன உத்தரவுகள் இரத்து செய்யப்படுவதை உறுதி செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை திரு. ப. சிதம்பரம் மேற்கொள்ள வேண்டும். திரு. ப. சிதம்பரம் அற்ப அரசியல் இலாபத்திற்காக விவசாயிகள், கைவினைஞர்கள், நெசவாளர்கள் மற்றும் பிறரைப் பாதிக்கக்கூடிய அளவுக்கு தன்னுடைய தரத்தைத் தாழ்த்திக் கொண்டிருப்பது மிகவும் துரதிருஷ்டவசமானதாகும். போதிய நிதியுதவி அளித்து கூட்டுறவுக் கடன் அமைப்புகளை முற்றிலுமாகச் சீரமைப்பதற்கான மிகப் பெரும் நடவடிக்கைகளை தமிழக அரசு ஏற்கெனவே எடுத்துள்ளது. 2004–2005 ஆம் ஆண்டில் சாதனை அளவாக 1,064 கோடி ரூபாய் பயிர்க் கடன் வழங்கப்படுவதை உறுதி செய்துள்ளது. இவ்வாறாக பெரிய அளவில் மறு சீரமைப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு அதன் பயனாக கூட்டுறவுக் கடன் அமைப்பு வலுப்பெறத் தொடங்கியிருக்கும் நிலையில் திரு. ப. சிதம்பரத்தின் தூண்டுதலின் பேரில் எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கை கடுமையானதும், முற்றிலும் தேவையற்றதும் பழிவாங்கும் நோக்கத்திலானதும் ஆகும். இந்த நடவடிக்கை அவரைத் தேர்ந்தெடுத்த மக்களுக்கு எதிரானதாகும். திரு. ப. சிதம்பரம் என்னுடைய அரசுக்கு எதிராக அரசியல் ஆதாயம் தேடும் முயற்சியில், தன் கண்ணையே குத்திக்கொள்வது அதிர்ச்சியைத் தருகிறது.

*பிற்பகல் 12–20*

நெடுங்காலமாக நிலவி வந்த வறட்சிக்குப் பிறகு, இந்தப் பருவத்தில் பெய்துள்ள நல்ல மழையைப் பயன்படுத்தி கோடைப் பயிர்ச் சாகுபடி செய்ய முற்பட்டுள்ள இந்த முக்கியமான தருணத்தில் திரு. ப. சிதம்பரம் மேற்கொண்டுள்ள இந்தத் துரோகச் செயலை அவருக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்த தொகுதி மக்கள் ஒருபோதும் மன்னிக்கமாட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

விவசாயிகள், கைவினைஞர்கள், நெசவாளர்கள், ஏழை எளியோர் ஆகியோரின் நலன் பாதுகாக்கப்படுவதற்கு எனது அரசு எப்போதுமே உயரிய முக்கியத்துவம் அளித்து வருகிறது. திரு. ப. சிதம்பரம் என்னதான் தீய சூழ்ச்சிகள் செய்தாலும், விவசாயிகள், கைவினைஞர்கள்,, நெசவாளர்கள் மற்றும் ஏனையோரின் நலன் பாதுகாக்கப்படுவதை நான் நிச்சயம் உறுதி செய்வேன். (மேசையைத் தட்டும் ஒலி)



31–3–2005 நிலவரப்படியான சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் நிதிநிலைமையைச் சுட்டிக்காட்டி, இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநருக்குக் கடிதம் எழுதியுள்ளேன். இதன் அடிப்படையில், ரிசர்வ் வங்கியின் உத்தரவு உடனடியாக இரத்து செய்யப்பட வேண்டுமென நான் அந்தக் கடிதத்தில் வலியுறுத்தியுள்ளேன் என்பதைத் தெரிவித்து அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. எஸ்.ஆர்.பி., விவாதத்திற்கு முற்றுப்புள்ளி வையுங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரிய பதிலைச் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) சரி, திரு. எஸ்.ஆர்.பி. சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** தலைவர் அவர்களே, விளக்கம்தான் கேட்கிறேன். வேறு அல்ல. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் வெளியிலே வெளியிட்ட அறிக்கையினை இங்கே அவையிலே வைத்தார்கள். அதிலே, வஞ்சகம், துரோகம், சூழ்ச்சி போன்ற சொற்கள் இருந்தன. அவை அப்படியே அவைக் குறிப்பில் இருக்கலாமா என்பதை மட்டும் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை அப்படியே அவைக் குறிப்பில் இருக்கலாம்; தாராளமாக இருக்கலாம். திருமதி டி. யசோதா. (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். திரு. ஞானசேகரன் உட்காருங்கள். (குறுக்கீடு) உங்கள் கட்சித் துணைத் தலைவரைப் பேச விடுங்கள். திருமதி டி. யசோதா.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, நிதித் துறை... (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** ஒரு தவறான செய்தி பதிவாகிவிடக் கூடாது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தவறான செய்தி பதிவாகிவிடக் கூடாது. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது, நெல்லிக்குப்பம் இடைத் தேர்தலின்போது, நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்திக்கு, திராவிட முன்னேற்றக் கழகம் ஜெயிக்க வேண்டும் என்பதற்காக அவருக்கு நாங்கள் ஏதோ பணம் கொடுத்ததாக, லோன் கொடுத்ததாகச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தாலே என்று அவர் சொன்னார். நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி அப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தில் இல்லை. அவர் எங்களுக்குத் தேர்தலிலேயும் வேலை செய்யவில்லை. நாங்களும்

அவரைப் பார்க்கவில்லை. எனவே, எங்களுக்கும் அதிலே சம்பந்தமில்லை. ஆனால், இடைத் தேர்தலில் எங்களுக்கு அவர் உதவினார் என்று ஒரு தவறான கருத்தை இந்த மன்றத்திலே பதிய வைத்திருக்கின்றார். அது அவைக் குறிப்பிலே இருக்கக் கூடாது. அதை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடு) உங்களுடைய கருத்தைச் சொல்லிவிட்டீர்கள்.

**திரு. துரைமுருகன்:** இல்லை, அதை அவைக் குறிப்பிலேயிருந்து எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** இல்லை, அவர் அப்போது எங்கள் கட்சியில் இல்லை.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்குக் கடன் வழங்க வேண்டும் என்பதற்காகவே மாநில கூட்டுறவு வங்கியினுடைய சட்டங்களையும், தமிழக அரசின் கூட்டுறவுத் துறையினுடைய சட்டங்களையும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே சொன்னது, அதைத்தான் சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாக அரசாணை வழங்கி பிறகு எதற்காக இவர்கள் திருத்தியமைத்தார்கள் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம்.சி. சம்பத் அவர்கள், அவர் அந்தத் தொகுதியைச் சேர்ந்தவர்.

**திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அந்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இல்லை என்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் துரைமுருகன் அவர்களும் மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்களும் குறிப்பிட்டார்கள். அவருடைய சகோதரர்கள், அவருடைய புதல்வன் அனைவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தார்கள். அதோடு மட்டும் இல்லாமல், அவர்களுடைய தேர்தல் அலுவலகம்கூட, அந்த இடைத் தேர்தலிலே தேர்தல் அலுவலகம்கூட, மாண்புமிகு உறுப்பினர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் மற்றும் மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்களுடைய தேர்தல் அலுவலகம்கூட கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வீட்டில்தான் நடைபெற்றது என்பதை நான் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உங்களுடைய கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். திருமதி யசோதா. (குறுக்கீடு) இல்லை, முடியுங்கள். துரைமுருகன் சொல்லிவிட்டார். அவருடைய கருத்தைச் சொல்லிவிட்டார்.

**டாக்டர் க. பொன்முடி:** இல்லை, தலைவர் அவர்களே, பெயரைச் சொல்லியிருக்கிறார்கள். அவையிலே பதிவாகியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி யசோதா பேசுங்கள்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) பேரவைத் தலைவர் அவர்களே, இதையும் நான் மறுக்க வேண்டியவனாக இருக்கிறேன். காரணம், நெல்லிக்குப்பம் தேர்தலைப் பொறுப்பேற்று நடத்தியவர்களில் நானும் ஒருவன். ஆகையினாலே அவர்களுடைய உறவினர்கள் இருந்தார்கள், அப்படி இருந்தார்கள் என்றால், அப்படியென்றால் திரு. சம்பத், உங்களுடைய ஊர் எப்படியிருந்தது என்று சொல்லட்டுமா நான்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சரி.

**திரு. துரைமுருகன்:** அதனாலே, அதுவல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி யசோதா. (குறுக்கீடு) உட்காருங்கள், துரைமுருகன். சொல்லிவிட்டீர்கள், உங்கள் கருத்தைச் சொல்லிவிட்டீர்கள், அவ்வளவுதான்.

**திரு. துரைமுருகன்:** அதற்காகத் தவறான செய்திகளைச் சொல்லக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலச் சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, நிதித் துறை,

திட்டம் வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, பொதுத் துறை, ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் என்கின்ற தலைப்பின்கீழ் நான் சார்ந்திருக்கின்ற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய சார்பில் என்னுடைய கருத்துகளை இங்கே பதிய வைக்க விரும்புகின்றேன்.

*பிற்பகல் 12–25*

சட்டமன்றம், மிகக் குறைந்த நாட்களிலே நடைபெறுகின்ற காரணத்தினால், அனைத்து உறுப்பினர்களுடைய எண்ணங்களை இங்கே பதிவு செய்ய இயலாத சூழ்நிலை இருக்கின்றது. குறிப்பாக சொல்ல வேண்டுமென்று சொன்னால், கடந்த 2 ஆண்டுகளுக்குப் பிறகு, இன்றைக்குத்தான் நான் இந்த மாமன்றத்திலே பேசுகின்ற ஒரு வாய்ப்பினைப் பெற்றிருக்கின்றேன். அதுவும் இறுதிக் கட்டத்திலே. வாய்ப்பு கொடுக்கவில்லை என்பதல்ல...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் யசோதா அவர்களுக்கு, அவரது கட்சியில் வாய்ப்புக் கொடுக்கப்படவில்லை என்றால், அதற்கு நாங்கள் பொறுப்பேற்க முடியாது. சட்டமன்றம் மிகக் குறைவான நாட்களே நடைபெறுகின்றது என்கிறார். 2 மாத காலமாக இந்த பட்ஜெட் கூட்டத் தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**திருமதி டி. யசோதா:** குறைந்த பட்சம் 100 நாட்களாவது நடைபெற வேண்டும் என்பது தான் என்னுடைய எண்ணம். ஆகவேதான் அதை இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன். எங்கள் கட்சியிலே பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்கவில்லை என்பதல்ல. நான் எந்த மானியத்திலும் பேசுவதற்குரிய வாய்ப்பு எனக்கிருக்கிறது. இருந்தாலும், மற்றவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டிய சூழ்நிலையிலே இருக்கின்ற காரணத்தினால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, ஆதிதிராவிடர் நலத் துறை மானியத்தில் தாங்கள்தான் பேசுவதாக இருந்தது. அன்றைக்கு வெளியேறிப் போய்விட்டீர்கள். நாங்கள் என்ன செய்வது?

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நேரத்திலே நான் குறிப்பாக தமிழக முதல்வர் அவர்களுக்கு, என்னுடைய தொகுதியிலே நோக்கியா கம்பெனியைக் கொண்டு வந்ததற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத்



தட்டும் ஒலி) என்னுடைய தொகுதியிலே பல கம்பெனிகள் தினம்தினம் வந்து கொண்டிருக்கின்றன. ஆனால், என்னுடைய தொகுதி மக்களுக்கு அங்கு திறமையான உறுப்பினர்கள், தொழிலாளர்கள் இருந்தாலும்கூட, அவர்களுக்கு அங்கே வேலைவாய்ப்புக் கொடுக்கப்படவில்லை என்பதையும் இந்த மாமன்றத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, அங்கே தொழிலாளர்களை நியமனம் செய்கிற போது, தொகுதியிலே இருக்கின்றவர்களை. Labour contract என்கின்ற பெயரிலேதான் பணிக்கு வைத்துக்கொள்கிறார்களே தவிர, அங்கே அவர்களுக்குப் பணி நிரந்தரம் கிடையாது. எப்போது வேண்டுமானாலும் அந்த labour contract-லிருந்து நீக்கலாம். அதனால், இந்த மாதிரியான கம்பெனிகள், வெளிநாட்டிலிருந்து வருகின்ற கம்பெனிகள் எல்லாம் labour contract என்கின்ற பெயராலே நம்முடைய இளைஞர்களுடைய உழைப்பை எடுத்துக்கொள்கின்ற அதே சூழ்நிலையில் அவர்களுக்கு ஒரு நிரந்தரமான பணியை உருவாக்கித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் குறிப்பிட்டதுபோல ஆதிதிராவிடர் நலத் துறையிலே நான் பேசவில்லை என்றாலும்கூட, தனித் தொகுதியிலேயிருந்து மக்கள் என்னைத் தேர்ந்தெடுத்திருக்கின்ற காரணத்தினால், நான் சில விவரங்களை உங்கள் முன்னே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அரசின் மூலமாக ஒவ்வொரு துறைக்கும் நிதி ஒதுக்கீடு செய்கின்றபோது அதில் 20 சதவிகிதம் ஆதிதிராவிடர் நலனுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்கின்ற விதியின் அடிப்படையில் ஒவ்வொரு துறையும் கடந்த 4 ஆண்டு காலத்தில் செய்த நலப் பணிகள் என்ன, தொகை எவ்வளவு என்பதைத் தங்கள்மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.

அதேபோல, இட ஒதுக்கீடு என்று சொல்கின்றபோது, அரசியலமைப்புச் சட்டத்தின் பிரகாரம் 18 சதவிகிதம் ஆதிதிராவிடர் மக்களுக்கு இருக்கிறது. ஆனால், அமைச்சரவையிலே இந்த 18 சதவிகிதம் கடைப்பிடிக்கப்பட்டிருக்கின்றதா என்பதைத் தங்கள்மூலமாக நான் அறிய விரும்புகிறேன். 25 அமைச்சர்கள் இருக்கிறார்கள். ஆனால், ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர் ஒரேயொரு அமைச்சர்தான் இருக்கிறார் என்பது மிகவும் வேதனைக்குரியதுதான். நான் முன்னாலே புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே கூட....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் துணைத் தலைவரும் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்தான். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12–30*

**திருமதி டி. யசோதா:** தனி தொகுதியிலே நிற்க வேண்டும் என்றால், அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்தான் நிற்க வேண்டும். ஆகவே, நான் அதைச் சொல்லாமலே புரியும் என்று நினைத்தேன். ஆகவே, இந்த அமைச்சரவையிலேகூட, புரட்சித் தலைவர் காலத்திலேகூட 2 பேர் இருந்தார்கள் அமைச்சர்களாக. திராவிட முன்னேற்றக் கழக காலத்திலேகூட 2 பேர் இருந்தார்கள் அமைச்சர்களாக. நீங்கள்கூட 2 பேர்தான் வைத்திருந்தீர்கள். ஏதோ உங்களுக்கு விருப்பம் இல்லை என்று ஒருவரை எடுத்திருக்கலாம். அதற்குப் பதிலாக இன்னொருவரை அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவரைப் போட்டிருந்தால், ஓரளவிற்கு 25 பேருக்கு 2 பேராவது இருக்கிறார்கள் என்ற ஒரு நிறைவை எங்களுக்குள்ளே உருவாக்கிக் கொள்ளமுடியும். ஆகவே, அது இன்றைக்கு நிறைவேற்றப்படவில்லை என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச்சொல்ல விரும்புகின்றேன்.

அதேபோல, தாட்கோமூலமாக வங்கிகளிலே பரிந்துரை செய்து மனுக்கள் அனுப்பப்படுகின்றன. ஆனால், தாட்கோமூலமாக போகின்ற அந்த மனுக்களுக்கு வங்கிகளிலே கடன் கொடுப்பதில்லை. அவர்களிடம் surety கேட்கிறார்கள், சொத்து ஜாமீன் கேட்கிறார்கள். நீங்கள், உடனே அந்த வங்கிகள் எல்லாம் மத்திய அரசாங்கத்திற்கு உரியதுதானே என்று சொல்லலாம். நான் அதைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. தாட்கோவுக்கென்று ஏன் ஒரு தனி வங்கியை நாம் உருவாக்கக்கூடாது என்பதைத்தான் இந்த மாமன்றத்திலே உங்கள்மூலமாக நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். ஓர் உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்று சொன்னால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேகூட கடன் கொடுக்கமாட்டார்கள். ஆனால், அந்த நேரத்திலே வங்கிகளில் எல்லாம் அதிகாரிகளாக இருக்கின்றவர்கள், செயலாளராக இருக்கின்றவர்கள் ஆகியோரை கூப்பிட்டுப் பேசி, அவர்களை நம்முடைய வழிக்குக் கொண்டுவந்து கடன் கொடுக்க வைத்திருக்கிறார்கள். டாக்டர் அம்பேத்கர் அவர்களுடைய நூற்றாண்டு விழா நடைபெறுகின்றபொழுது திரு. சீதாராம் தாஸ் அவர்கள் ஆதிதிராவிட நலத் துறையினுடைய செயலாளராக இருக்கின்றபொழுது வங்கியிலே இருக்கின்ற அதிகாரிகள் எல்லோரையும் வரவழைத்து, ஏன் நீங்கள் கடன் கொடுக்கக்கூடாது என்று கேட்டு, 5 இலட்சம் ரூபாய் அன்றைக்குக் கடன் கொடுக்கப்பட்டது. ஒரு இலட்சம் ரூபாய் அரசாங்கத்தினுடைய margin money–யும் subsidy–யும், 4 இலட்சம் ரூபாய் வங்கிகளிலே கடன் கொடுக்கப்பட்டது. அந்தக் கடன் கொடுக்கப்பட்டதற்குக் காரணம் – எல்லா வங்கிகளும் அன்றைக்குக் கொடுத்ததற்குக் காரணம் நம்முடைய அணுகுமுறைதான். இன்றையதினம் நம்முடைய அணுகுமுறை சரியாக இல்லையோ என்கின்ற எண்ணம் எனக்கு இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது.



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலை அவைக்குத் தந்துகொண்டிருக்கிறார்கள். தற்போது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பிரத்தியேகமாக தாட்கோ அமைப்பு ஆதிதிராவிட நலத் துறையில் அக்கறை செலுத்திய காரணத்தால், தாட்கோவுக்கென ஒரு Chair Person-ஐப் போட்டு டாக்டர் சரோஜா என்பவர், அதில் பொறுப்பில் இருப்பது உங்களுக்குத் தெரியும். இதுகாறும் தாட்கோ அமைப்புமூலமாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பலன் உடனடியாக, நேரடியாக சென்று சேராமல் இருந்ததற்கு இடைத்தரகர்கள், brokers காரணம் என்பதைக் கண்டறிந்து, அப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் சட்டப் பேரவை உறுப்பினர்கள்மூலம் மற்றும் மக்கள்மூலம் வந்த காரணத்தால், அதைக் களைய வேண்டுமென்ற கட்டாய ஆணையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்தார்கள். இடைத்தரகர்கள் எல்லாம் நீக்கப்பட்டு, பயனாளிகள் கண்டறியப்பட்டு, அவர்கள் உண்மையிலேயே செய்ய விரும்புகின்ற தொழிலுக்குப் பணம் சென்றடைய வேண்டும். அந்தத் தொழிலைச் செய்யவேண்டுமென்று ஆணையிட்டு, அப்படிப்பட்ட ஆக்கபூர்வமான அணுகுமுறையை தாட்கோ நிறுவனம் வரலாற்றில் இல்லாத அளவிற்கு தற்போது நடைமுறைப்படுத்தி வருகிறது. அதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

***மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5 ஆண்டுகால தி.மு.க ஆட்சியில் தாட்கோமூலமாக வழங்கப்படுகிற அந்தக் கடனுதவிகள் எல்லாம் தகுதியான பயனாளிகளுக்குக் கொடுக்காமல், தகுதியற்றவர்களுக்கு முறைகேடாக வழங்கப்பட்டதன் விளைவாக, இன்றையதினம் சில வங்கிகள் இப்படி தாட்கோ கடன் என்றாலே மறுக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப்

பொறுப்பேற்றவுடன் வங்கியாளர்களை அழைத்துப்பேசி, தகுதியானவர்களுக்கு முறைகேடில்லாத அளவிற்குக் கடன் வழங்கவேண்டும் என்கிற திட்டத்தின் அடிப்படையில்தான் இப்போது ஒவ்வொரு (மேசையைத் தட்டும் ஒலி) மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சித் தலைவரின் நேரடிப் பார்வையில் வங்கிகளுக்கு தாட்கோமூலமாக கடனுதவிகள் வழங்கப்பட்டதன் விளைவாகத்தான் கடந்த 4 ஆண்டுகளில், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு 4,75,395 பேர்களுக்கு கடனுதவி வழங்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கு ரூபாய் 307.48 கோடி மதிப்பீட்டில் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், கடந்த 5 ஆண்டு கால தி.மு.க. ஆட்சியில் 95,398 பேருக்கு மட்டும் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு வழங்கப்பட்ட மானியம் 18.535 கோடி ரூபாய் மட்டும் வழங்கப்பட்டுள்ளது.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4,75,395 பேருக்கு இன்றைக்கு தாட்கோ loan கிடைத்திருக்கிறது. ஆனால், என்னுடைய தொகுதியிலே இரண்டு பேருக்குக்கூட கிடைக்கவில்லை. ஒரு ஆளுக்குக்கூட கிடைக்கவில்லை. ஸ்ரீபெரும்புதூர் தொகுதி என்பது தனி தொகுதிதான். அந்தத் தனி....

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் திட்ட இலக்கு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் உருவாக்கப்படுகிறது. அந்தத் திட்டத்தின்மூலமாகத்தான் அனைத்துப் பயனாளிகளுக்கும் கடன் வழங்கப்பட்டு வருகிறது. தனி தொகுதிக்கு என்று கொடுக்கக்கூடாது என்ற அடிப்படையில் இல்லை. கடன்பெற விண்ணப்பித்தவர்களுக்கு அவர்களுடைய விண்ணப்பங்களை முறையாகத் தேர்வு செய்து வங்கிகளுக்கு அனுப்பப்பட்டு வங்கியாளர்களுடைய ஒப்புதல் பெற்று கடன் உதவி வழங்கப்பட்டு வருகிறது.

பிற்பகல் 12–35

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விண்ணப்பங்கள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டு, தாட்கோமூலமாக வங்கிகளுக்கு அனுப்பப்பட்டு, வங்கிகள் கடன் கொடுப்பதில்லை, அவர்கள் surety கேட்கிறார்கள், மாட்டு வண்டி வாங்குவதற்கு loan வேண்டுமென்றால் surety வேண்டும் என்கின்ற நிலை இருக்கிறது. அதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக்கூட நான் நேரடியாகக் கொண்டு வந்திருக்கின்றேன். ஆனால், அதற்குப் பலன்தான்



எதுவும் கிடைக்கவில்லை. ஆகவேதான் நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு உறுப்பினர் தவறான தகவலைச் சொல்லிக் கொண்டிருக்கிறார். எந்த வங்கியில் கடன் கொடுக்க மறுக்கப்பட்டது என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திருமதி டி. யசோதா:** தவறான தகவல் என்று சொல்லாதீர்கள். State Bank of India, Sriperumpudur, என்னுடைய தொகுதியிலே இருக்கிற அத்தனை வங்கிகளும். நான் நேரடியாகவே சொல்லியிருக்கிறேன். நீங்கள் தவறான தகவல் என்று சொல்லாதீர்கள். நான் தவறான தகவலைச் சொல்ல மாட்டேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட ஒரு பிரச்சினை இருப்பது உண்மைதான். என்ன என்றால், தாட்கோவிடம் கடன் வேண்டுமென்று விண்ணப்பம் கொடுத்து, தாட்கோ loan தர வேண்டுமென்று கேட்கும்போது, அந்த மனு கூட்டுறவு வங்கிகளிடம் போகின்றபோது, கூட்டுறவு வங்கிகள், அந்த மாதிரி மாட்டு வண்டி வாங்குவதற்கு loan கேட்கும்போது security வேண்டும், surety வேண்டும் என்று கேட்பதில்லை. ஆனால், துரதிருஷ்டவசமாக, மைய அரசினுடைய கட்டுப்பாட்டிலே இருக்கிற நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் எல்லாம், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, கிராம மக்களுக்கு உதவுவோம் என்று வாய்கிழிய பேசிவிட்டு, தாழ்த்தப்பட்ட மக்கள் loan வேண்டுமென்று கேட்கிறபோது, collateral security வேண்டுமென்று கேட்டு, அந்த மக்களையும் பாதிக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நிலையை மாற்ற வேண்டும். மைய அரசுக்கு நீங்கள் அதை எடுத்துச்சொல்லுங்கள்.

**திருமதி டி. யசோதா:** இதில் நான் அரசியல் சாயம் பூசுவதற்கு விரும்பவில்லை. நான் உண்மையிலேயே இந்த மக்களுக்காக, நீங்களும் உதவி செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கின்றேன். தாட்கோவுக்கு என்றே ஒரு வங்கியை உருவாக்குங்கள். இந்தப் பிரச்சினைகள் எல்லாம் இல்லாமல் போகும். வங்கியினுடைய நிருவாகிகள், Managers என்ன நினைக்கிறார்கள் என்றால், 'நாம் கடனைக் கொடுத்துவிட்டு, நாம் ஏன் மாட்ட வேண்டும்; நம்முடைய சாதிக்கும், இந்தச் சாதிக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது;' அப்படியென்று நினைக்கிறார்கள். இந்த நினைப்பை மாற்ற

வேண்டுமென்று சொன்னால், இந்தத் துறைக்கென்று நீங்கள் ஒரு வங்கியை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல, எங்கே பார்த்தாலும் அம்பேத்கர் சிலை இருக்கின்றது. அது ரொம்ப பெருமையாகத்தான் இருக்கிறது. ஆனால், அந்த அம்பேத்கர் சிலைக்கு ஒரு கம்பி வலையைப் போட்டு, அவரை ஜெயிலுக்குள்ளே வைத்த மாதிரி வைத்திருக்கிறீர்கள். அந்த அளவுக்கு...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 4 ஆண்டுக் காலமாக, இந்த ஆட்சிக் காலத்தில், சாதிக் கலவரங்கள் ஏற்படவில்லை. அதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணம். முன்பெல்லாம் அடிக்கடி சாதிக் கலவரங்கள் ஏற்பட்டதற்கு காரணம் யாராவது சில விஷமிகள் போய், டாக்டர் அம்பேத்கர் சிலைக்கு செருப்பு மாலை அணிவிப்பார்கள். உடனே அந்த ஊரில் கலவரம் வெடிக்கும். இல்லையென்றால், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் சிலைக்கு வேறு யாராவது விஷமிகள் போய், செருப்பு மாலை அணிவிப்பார்கள். உடனே அங்கே சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை ஏற்படும். இதைத் தவிர்ப்பதற்காக உயர்மட்டத்தில், காவல் துறை அதிகாரிகளை வரவழைத்து அவர்களுடன் நான் ஓர் ஆய்வுக் கூட்டம் நடத்தினேன். அப்போது இந்தச் செருப்பு மாலை எந்த நேரத்தில், யார் போய் போடுகிறார்கள் என்றே கண்டுபிடிக்க முடியவில்லை, ஆகவே, அந்தச் சிலைகளுக்கு ஒரு பாதுகாப்பாக இருப்பதற்கும், இந்த மாதிரி செருப்பு மாலை யாரும் அணிவிக்கக் கூடாது என்கின்ற வகையில் அதைத் தடுப்பதற்கும், சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகள் ஏற்படாமல் தடுப்பதற்கும், அந்தச் சிலைகளைச் சுற்றி, இப்படி ஒரு கம்பி தடுப்பு வேலி போடுவது நல்லது என்ற ஆலோசனையை காவல் துறை அதிகாரிகள் வழங்கினார்கள். அதை நானும் ஒப்புக்கொண்டேன். அதனால்தான் இது நடைமுறைக்கு வந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது, முத்துராமலிங்கத் தேவர் சிலையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். முத்துராமலிங்கத் தேவர் சிலைக்கு கம்பி வலை கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. ஏராளமாக இருக்கின்றன.

**திருமதி டி. யசோதா:** இங்கே இல்லை.



**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு மாண்புமிகு முதலமைச்சர் குறிப்பிட்டதுபோல, நெல்லையிலே இருந்த தேவர் சிலைக்கு, அப்படி ஒரு நிகழ்வு ஏற்பட்டதன் காரணமாக, நெல்லை தேவர் சிலை அப்படித்தான், கம்பி வலைக்குள்தான் வைக்கப்பட்டிருக்கிறது.

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னால்கூட, மும்பையில் இருக்கின்ற தமிழர்கள் இது தொடர்பாக எனக்குக்கூட ஒரு கடிதம் எழுதியிருந்தார்கள். வெள்ளையர்கள் ஆட்சிக் காலத்திலேதான் சுதந்திரத்திற்காகப் போராடி தேவர் அவர்கள் சிறைக்குள் வைக்கப்பட்டார்கள். இன்றைக்குச் சுதந்திரம் வந்த பிறகும், அவருடைய சிலை கம்பி வலைக்குள் வைக்கப்பட்டிருக்கிறதே? இதை நீங்கள் அவையிலே பேச வேண்டுமென்று சொல்லி, மும்பையிலே இருக்கின்ற தமிழர்கள் எனக்குக் கடிதம் வாயிலாக, இரண்டு நாட்களுக்கு முன்னால்தான் தெரிவித்தார்கள். நல்லவேளையாக நமது சகோதரி யசோதா அவர்கள் பேசுகின்ற நேரத்திலே, அதைச் சொல்லுகின்ற ஒரு வாய்ப்பு கிடைத்தது என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்போது இருந்தது சிறை, இப்போது கொடுக்கப்பட்டு இருப்பது பாதுகாப்பு; தலைவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற பாதுகாப்பு.

**திருமதி டி. யசோதா:** பாதுகாப்பு, பாதுகாப்புக் கவசம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி யசோதா, பேசுவதற்கு இன்னும் எவ்வளவு நேரம் வேண்டும்?

**திருமதி டி. யசோதா:** நான் பேசி இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 5, 6 உறுப்பினர்கள் பேச வேண்டும். நிதியமைச்சர் பதில் சொல்ல வேண்டும். இன்னும் மூன்று மானியக் கோரிக்கைகள் இருக்கின்றன.

**திருமதி டி. யசோதா:** முக்கியமானவை நிறைய இருக்கின்றன. இன்னும் நான் சட்டமன்ற மானியக் கோரிக்கைக்கே வரவில்லையே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, வந்துவிடுங்கள். இன்னும் மூன்று மணித்துளிகளில் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திருமதி டி. யசோதா:** நிலம் வாங்குவதற்கு... (மணியடிக்கப்பெற்றது) முக்கியமானது சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூன்று மணித் துளிகளில் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

பிற்பகல் 12–40

**திருமதி டி. யசோதா:** நிலம் வாங்குவதற்கு நீங்கள் 1 இலட்சம் ரூபாய் கொடுக்கிறீர்கள். அதேபோல் அவர்களுக்கு அந்த நிலத்தைப் பராமரிப்பதற்கு 1 இலட்சம் ரூபாய் கொடுக்கிறீர்கள். எந்த ஊரிலே 1 ஏக்கர் நிலம் 1 இலட்சம் ரூபாய்க்குக் கொடுக்கிறார்கள். அப்படியே கொடுப்பதாக இருந்தாலும், அதற்கு ஒரு இன்ஜினியர் வந்து உங்களுக்கு அந்த இடத்தினுடைய நிலை என்ன என்பதை அவர் நிர்ணயம் செய்து கொடுக்க வேண்டும். அவருக்கு certain amount கொடுத்தாக வேண்டும். அதேபோல அந்த . . .

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்ஜினியர்களுக்கெல்லாம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. நிலத்தை விவசாயக் கூலிகளாக, குறிப்பாக ஆதிதிராவிட மக்கள், அடுத்தவர் நிலத்தில் கட்டுக் குத்தகைக்கு அல்லது ஆண்டுக்கு ஓர் ஏக்கர் நிலத்தில் இவ்வளவு மகசூல் செய்து ஒரு மூட்டையோ அல்லது ஒரு கோட்டையோ தருகிறேன் என்று ஆண்டாண்டு காலமாக உழுது பயிர் செய்து வருகிறார்கள். அப்படிப்பட்ட நிலச் சொந்தக்காரர்கள், நீங்களே நிலத்தை வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்கிறபோது, இவர்களிடத்திலே பணமில்லை. நாங்கள் ஆண்டாண்டு காலமாக உழைத்து உழைத்து உங்களுக்குக் கொடுத்து வருகிறோம் என்று நடைமுறையில் இருந்து வந்த பழக்கத்தை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதுபோன்ற அடுத்தவர்கள் நிலத்தில் உயிரைக் கொடுத்து உழைக்கக்கூடிய மக்களுக்கு, அந்த நிலத்தின் சொந்தக்காரர்களாக ஆக்கவேண்டும், அதுவும் குறிப்பாக தாய்மார்களுக்கு, பெண்களுக்கு கொடுக்க வேண்டும் என்றுதான் அம்மா அவர்கள் 7,000 மகளிர்க்கு கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அந்த அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இதுபோன்ற விவசாயக் கூலிகளாக உழுது வந்த, பயிர் செய்து வந்த விவசாயக் கூலிகளுக்கு அதிகமான அளவுக்கு விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டு, மொத்த விண்ணப்பங்கள் – 11,577 விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டு, பயனாளிகளிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்கள் எல்லாம் தேர்வு



செய்யப்பெற்று, 11,274 விண்ணப்பங்கள் சரிபார்க்கப்பட்டு, அப்படி சரிபார்க்கப்பட்ட பின்பு அந்த நிலத்தை வேளாண்மை அலுவலர்கள் அந்த நிலத்தைப் பார்வையிடுகிறார்கள். அந்த நிலம் விவசாயத்திற்கு உகந்த நிலமா என்று பார்க்கிறார்கள். ஏற்கெனவே இவர்கள் உழுது வந்த, காலங்காலமாக உழுது வந்த விளைநிலம்தான், இருந்தாலும் அவர்கள் ஓர் ஆய்வு செய்கிறார்கள். அந்த ஆய்வு செய்யப்பட்ட பின்பு கிட்டத்தட்ட 9,090 விண்ணப்பங்கள் திரும்ப வரப்பட்டு இருக்கின்றன. அவற்றில் 8,100 விண்ணப்பங்கள் வங்கிகளுக்கு அனுப்பப்பட்டு விட்டன. அந்தளவுக்கு நேர்மையான நல்ல திட்டம், எல்லோரும் விரும்புகிற திட்டம். அதனால்தான் அதிகமான அளவுக்கு விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டு, அது தொடர்ந்து இப்போது அதிகமான அளவுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இது தொடர்ந்து எல்லா மாநிலங்களிலும் வரவேற்கக்கூடிய திட்டமாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி டி. யசோதா, இன்னும் இரண்டு மணித்துளிகளில் பேச்சை முடித்து விடுங்கள். இன்னும் 5 பேர் பேச வேண்டும்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசுவது ஆதிதிராவிடர் நலத் துறை சம்பந்தமாக, அமைச்சர் அவர்களே, இந்தத் திட்டத்தை நான் குறை கூறவில்லை. கொடுக்கின்ற இடத்திலே இருக்கின்ற முதல்வரிடத்திலே கோரிக்கை வைக்கின்றேன் என் சமுதாய மக்களுக்காக. அதற்கு தயவுசெய்து தடைக் கல்லாக இருக்க வேண்டாம். நான் என்ன கேட்கின்றேன்? முதலில், உங்களுடைய condition, 1 இலட்சம் ரூபாய்க்கு agreement கேட்கிறீர்கள். Agreement போடும்போது, அவன் agreement–க்கு முன் பணம் கேட்கிறான். பணம் கொடுத்தால்தான் அவன் agreement போடுவான். அந்தப் பணம் அவனிடத்தில் கிடையாது. அதேநேரத்தில் இன்ஜினியர் வந்து அந்த நிலத்தைப் பற்றிய விவரத்தைச் சொல்ல வேண்டுமென்று சொல்கிறீர்கள். இன்ஜினியரும் பணம் கேட்பான். இந்த இரண்டையும் வாங்கி அவர்கள் கொடுத்த பிறகு அதற்குப் பிறகுதான் உங்களிடம் வருகிறார்கள். ரூபாய் 1 இலட்சத்திலே நிலம் கிடைக்கவில்லை. அதனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நிதியமைச்சர் அவர்களும் இதில் தலையிட்டு இந்தத் தொகையினை நீங்கள் இன்னும் உயர்த்தி ரூ.11,000/– இல்லை, ரூபாய் 18 இலட்சத்திற்கு நீங்கள் கொடுத்தீர்கள் என்றாலும் எனக்கு சந்தோஷம்தான். செய்கிற

திட்டத்தைப் பற்றி நான் குறை சொல்லவில்லை. தொகை போதாது என்பதைத்தான் நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல அடுத்தாற்போல் உங்களிடத்திலே கேட்க விரும்புவது எல்லாம் சமீபகாலமாக அதாவது சிலபல ஆண்டுகளாக I.A.S., I.P.S. அதிகாரிகள்–இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுடைய எண்ணிக்கை மிகக் குறைந்து போய்விட்டது என்று கேள்விப்படுகிறேன். அதற்குக் காரணம், நாம் பரிந்துரை செய்கின்றபோது, அது 4 வகையாக பரிந்துரை செய்யப்படுகிறது. Poor, Good, Very Good, Outstanding; இந்த Outstanding என்று போட்டு அனுப்புகின்ற மனுக்களைத்தான் மத்தியிலே இருக்கின்றவர்கள் பரிசீலனை செய்து I.A.S., I.P.S. அதிகாரிகளுக்கு முன்னுரிமை கொடுக்கின்றார்கள். அப்படி கேரளாவிலிருந்து, கர்நாடகாவிலிருந்து, ஆந்திராவிலிருந்து பல மாநிலங்களிலேயிருந்து I.A.S., I.P.S. அதிகாரிகள் இன்றைக்கு அதிகமான அளவிலே இருக்கின்றார்கள். தமிழகத்திலே அதற்குரிய பிரதிநிதித்துவம் இல்லை என்று நான் கேள்விப்படுகிறேன். அது உண்மையாக இருக்குமேயானால், அதுபற்றி அரசாங்கம் நிச்சயமாக கவனிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோல மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வேலைவாய்ப்பு பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்றீர்கள். மகளிர் சுய உதவிக் குழுக்கள் 10 village-களுக்கு ஒரு Store room மாதிரி நீங்கள் போட்டுக் கொடுத்தீர்கள் என்றால், அவர்கள் உற்பத்தி செய்கின்ற அந்தப் பொருட்களை, Store room–லே தேக்கி வைத்து, அரசாங்கமே அதற்கு ஒரு நல்ல விலையை ஏற்பாடு பண்ணிக் கொடுத்தால் நன்றாக இருக்கும்.

*பிற்பகல் 12–45*

என்னுடைய தொகுதியிலே embroidery வேலை அதிகமாக இருக்கிறது. ஆனால், அந்த embroidery–க்கு, ஒரு புடவைக்கு 150 ரூபாய் கொடுக்கிறார்கள். Manager 10 ரூபாய் commission எடுத்துக்கொண்டு, 140 ரூபாய் கொடுக்கிறார். Broker–கள் அதையும் எடுத்துக்கொண்டு 50 ரூபாய் கொடுக்கிறார்கள் ஒரு புடவைக்கு. அந்த 50 ரூபாயை அந்தப் புடவைக்குக் கொடுக்கும்போது, கிட்டத்தட்ட 90 ரூபாய் commission–ஆக அந்த ஏழைகளுடைய உழைப்பு அங்கே கொள்ளையடிக்கப்படுகின்றது. ஆகவே, அரசாங்கம் இதுபற்றிக் கவனிக்கவேண்டும் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன்.



அடுத்து, Thiruvalluvar University. அந்த University–யிலே இரண்டு பெண் lecturer–கள் S.C.–ஆக இருக்கிறார்கள். 10 பேரை permanent பண்ணியிருக்கிறார்கள். அதிலே இவர்கள் இரண்டு பேரையும் பண்ணவேண்டும்; பண்ணவில்லை. இவர்கள் இரண்டு பேரையும் வேலைநீக்கம் செய்திருக்கிறார்கள். அதற்கு என்ன காரணம் என்று சொன்னால், ஒரு அம்மா temporary. 10 பேர் temporary–ஆக இருந்தபோது, அதிலேயும் இவர் ஒருவர். ஆனால், அந்த 10 பேரை permanent பண்ணும்போது இந்த அம்மாவை permanent பண்ணவில்லை. இவரை temporary என்று சொல்லிவிட்டார்கள். அடுத்து இன்னொரு அம்மாவிற்குச் சொல்கிற காரணம் என்னவென்றால், அவர் pregnant–ஆக இருக்கிறார், அவர் கர்ப்பமாக இருக்கிறார் என்ற காரணத்தினாலே அவரை வேலைநீக்கம் செய்துவிட்டோம் என்று சொல்கிறார்கள். இது எந்த வகையிலே நியாயம்? இதுகுறித்து கண்ணகி பாக்கியநாதன், ஐ.ஏ.எஸ்., விசாரணைக்குப் போயிருக்கிறார்கள். அவரை உள்ளேயே விடாமல், ஒரு statement–ம் கொடுக்கமுடியாது என்று சொல்லி வெளியேற்றியிருக்கின்ற அந்த நிர்வாகத்தினை...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறார் என்றே புரியவில்லை. திருமதி கண்ணகி பாக்கியநாதன் அவர்களுக்கு நேற்றைய முன்தினம்தான் posting போடப்பட்டிருக்கிறது. அவர் 4 நாட்களுக்கு முன்புதான் மத்திய service–லேயிருந்து இங்கே வந்திருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி டி. யசோதா:** இப்போது இல்லை அம்மா. அவர்கள் மத்திய அரசாங்கத்திலேதான் அந்தப் பொறுப்பிலே இருக்கிறார்கள். இந்த SC/ST இவர்களைத்தான் அவர்கள் கவனிக்கிறார்கள். அப்படிக் கவனிப்பதற்காக அவர்கள் Thiruvalluvar University–க்குப் போயிருக்கிறார்கள். போனவரை உள்ளே அனுமதிக்கவில்லை. அனுமதிக்காதது மட்டுமல்ல, அவர்கள் ஒரு statement–ஐக் கேட்டிருக்கிறார்கள். அந்த statement–ஐ அவர்கள் கொடுக்கவில்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமதி கண்ணகி பாக்கியநாதன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் மத்தியிலிருந்து State cadre–க்கு revert ஆகி இங்கே வந்திருக்கிறார். நேற்றைய முன்தினம்தான் அவருக்கு posting போடப்பட்டிருக்கிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிஷம். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருவள்ளுவர் பல்கலைக்கழகத்திலே இரண்டு பேராசிரியைகளை விசாரிப்பதற்காக வந்த கண்ணகி பாக்கியநாதன் அவர்களை உள்ளே அனுமதிக்கவில்லை என்று கூறியிருக்கிறார்கள். அது தவறு. திருமதி கண்ணகி பாக்கியநாதன் என்பவர் ஓர் அரசு அதிகாரியாக இருக்கின்றார். ஒரு நிர்வாகத்திற்குச் செல்கின்றபோது முன்னறிவிப்பு கொடுக்கவேண்டும். நான் இதற்காக வருகின்றேன், இன்ன தேதியிலே வருகின்றேன், எனக்கு நீங்கள் ஒத்துழைப்புக் கொடுக்கவேண்டும் என்று ஒரு முன்னறிவிப்பு கொடுத்துவிட்டு, சென்றிருக்க வேண்டும். எந்த முன்னறிவிப்பும் கொடுக்காமல், அந்தப் பல்கலைக்கழகத்திற்குச் சென்று ஓர் அறையிலே உட்கார்ந்துகொண்டு, அந்தப் பல்கலைக்கழக நிர்வாகத்தில் இருக்கின்ற அத்தனை அதிகாரிகளையும் 'இங்கே வாருங்கள், அந்த சம்பந்தப்பட்ட file-ஐ எடுத்து வாருங்கள்' என்று, எந்த ஒரு முன்னறிவிப்பும் இல்லாமல் சென்றதால்தான் இந்தப் பிரச்சினை உருவானதே தவிர, அவருக்கு ஒத்துழைப்பு கொடுக்கவில்லை என்று இல்லை. அப்படியிருந்தும், அவர் வந்துவிட்டார் என்ற காரணத்திற்காக அன்றைக்கு அந்தத் துணை வேந்தர் அவர்கள் அவருக்கு முழு ஒத்துழைப்பைக் கொடுத்திருக்கின்றார் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி யசோதா, பேச்சை முடித்துவிடுங்கள். இரண்டு மணித்துளிகளிலே பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நேரம் இல்லை. திருமதி யசோதா பேச்சை முடியுங்கள்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இராஜரெத்தினம் அவர்கள் பேசுகின்றபோது ஒரு கோடி ரூபாய் சட்டமன்ற உறுப்பினருக்கு...

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) அவர் பேசி முடித்துவிடட்டும்.

**திருமதி டி. யசோதா:** சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதி மேம்பாட்டிற்காக நிதியினை கொடுத்திருக்கிறார்கள். நான் அதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆனால், ஒரு கோடி ரூபாயை எங்களுக்குக் கொடுத்துவிட்டு, நீங்களே ஒரு வரையறை கொடுத்து, இது இதற்கு, இப்படி இப்படித்தான் செலவு பண்ணவேண்டும் என்று சொல்லிக் கொடுக்கும்போது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 40 இலட்சம் ரூபாய்தான் வருகிறது. ஆனால், தொகுதியிலே இருப்பவர்கள் என்ன கேட்கிறார்கள் என்றால், இப்போது 25 இலட்சம் ரூபாய் அந்த வீடுகளை repair பண்ணுவதற்குக் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால், 25 இலட்சம் ரூபாயிலே நாங்கள் எத்தனை வீடுகளை repair பண்ண முடியும்? 250 வீடுகளை repair பண்ண முடியும். ஆனால், ஏற்கெனவே இருக்கிற 1,000 வீட்டுக்காரர்கள், 2,000 வீட்டுக்காரர்கள் வந்து மொத்தத்தையும் எங்களுக்குக் கொடுங்கள் என்று சொல்லும்போது அவர்களை எங்களால் நிறைவுபடுத்தமுடியவில்லை.

அதுமட்டுமல்ல, இரண்டாவது இப்போது குடிதண்ணீர்ப் பிரச்சினைதான் முக்கியமானது. குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு 10,000 ரூபாய் கொடுத்துவிட்டு, அதை 5,000 ரூபாயாக ஆக்கியிருக்கிறீர்கள். ஆனால், இப்போது வருகிற... (குறுக்கீடு) 10 இலட்சம் ரூபாய். 10 இலட்சம் ரூபாய் கொடுத்துவிட்டு அதை 5 இலட்சம் ரூபாயாக ஆக்கியிருக்கிறீர்கள். அந்த 5 இலட்சம் ரூபாயிலே நிச்சயமாக எங்களுடைய குடிதண்ணீர்ப் பிரச்சினையை நிவர்த்தி செய்துகொள்ள முடியாது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர்ப் பிரச்சினைக்கு இது ஒரு சிறு தொகுப்புதான். Water Board மூலமாக, குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலமாக பிரத்தியேகமாக நிதி ஒதுக்கப்பட்டு, குடிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்பட்டு வருகிறது.

பிற்பகல் 12–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, முடித்து விடுங்கள். திரு. ஐ. கணேசன். (குறுக்கீடு)

**திருமதி டி. யசோதா:** ஒரேயொரு நிமிடம். சீக்கிரம் முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாக்கியத்தை நிறைவு செய்யுங்கள்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே நம்முடைய மாண்புமிகு எங்கள் மாவட்ட அமைச்சர் அவர்களுக்குக்கூடத் தெரியும். கோவூர், படப்பை ஆகிய இரண்டு இடங்களில் sub-stations போடச்சொல்லி நான்கு வருடங்களாக நான் போராடிக் கொண்டு வருகிறேன். நிலம் எல்லாம்கூட வாங்கிக் கொடுத்தாகிவிட்டது. நிலத்தைக்கூட கையகப்படுத்தி விட்டார்கள் மின் துறையிலே. ஆனால், இன்னும்கூட அது எங்களுக்கு, பொது மக்களுக்கு ஒப்பளிக்கக்கூடிய சூழ்நிலைக்கு வரவில்லை என்ற வேதனையையும் நான் உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதேபோல,..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மற்ற கோரிக்கைகளை எழுதிக் கொடுங்கள். திரு. ஐ. கணேசன். (குறுக்கீடுகள்)

**திரு. போளூர் வரதன்:** Speaker Sir, ஒரு நிமிடம்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாக்கியத்தை நிறைவு செய்யுங்கள்.

**திருமதி டி. யசோதா:** முடித்துவிடுகிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டிலும், இருக்கின்ற குறைபாடுகளை நீங்கள் எழுதிக் கொடுக்கச் சொல்கின்ற காரணத்தினால், நான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலேயும், சம்பந்தப்பட்ட மாண்புமிகு அமைச்சர்களிடத்திலும், மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலும் அதைக் குறிப்பிட்டு, நான் எழுதிக் கொடுக்கிறேன் என்பதைச் சொல்லி, என்னுடைய கோரிக்கைகளை இந்த மாமன்றத்திலே வைப்பதற்கு நேரம் ஒதுக்கித் தந்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன். (குறுக்கீடு) திரு. ஐ. கணேசன். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலச் சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, நிதித் துறை, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, பொதுத் துறை, ஓய்வூதியம், ஏனைய ஓய்வூக்கால நன்மைகள் என்ற மானியக் கோரிக்கைகளின்மீது பேச அழைத்த தங்களுக்கும், எங்களுடைய தமிழ்க் குடிதாங்கி மருத்துவர் அய்யா அவர்களுக்கும் என்னுடைய



மனப்பூர்வமான நன்றி கலந்த வணக்கத்தை முதலிலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு பொன்னான கருத்தினை இந்த நாட்டிற்கு விட்டுச் சென்றிருக்கிறார்கள். ''அரசாங்கம் ஒரு வீடு; ஆளுங்கட்சி அதை வாடகைக்கு எடுத்துக்கொள்கிறது; மக்களின் நல்லெண்ணம்தான் வாடகைப் பணம்; அதன் கணக்கு ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை பார்க்கப்படுகிறது; மக்களைப் பார்த்து ஆளுகிறவர்கள் அஞ்சவேண்டும்; ஆளுகிறவர்களைப் பார்த்து மக்கள் எக்காரணத்தைக் கொண்டும் அஞ்சக்கூடாது" என்று நான் சொல்லவில்லை, தலைவர் அவர்களே. பேரறிஞர் பெருந்தகை, அறிவுலக மேதை, அறிவுக் கடல், அறிஞர் அண்ணா அவர்கள் கூறினார் என்பதை மட்டும் இங்கே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நமது நாட்டில் பல தூய்மையான உயர்ந்த கருத்துகள் உண்டு. ஆனால், அவை ஓடாத கடிகாரங்களாக இருக்கின்றன. ஒருபுறம் உயர்ந்த நிலை உண்டு. மறுபுறம் வாழ்க்கையில் வேதனை. இந்த நிலை நீங்குவதற்கு நாம் அனைவரும் பாடுபடவேண்டும் என்று சொல்லி, — இங்கே இந்தத் தொலைக்காட்சி காட்டப்படுகிறது. ஒருநாள்கூட என்னைக் காட்டவில்லை. (சிரிப்பு) இன்றைக்காவது காட்டுவதற்கு நீங்கள் உத்தரவு போடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களை நானே பலமுறை தொலைக்காட்சியிலே பார்த்து இரசித்திருக்கிறேன். (சிரிப்பு)

**திரு. ஐ. கணேசன்:** இல்லை, தலைவர் அவர்களே, இது உண்மைக்கு மாறான தகவலாகத் தெரிகிறது என்னைப் பொறுத்தவரைக்கும். (சிரிப்பு) ஏனென்றால், நாடாளுமன்றத்திலும், ஆந்திராவைப் போன்ற ஒருசில சட்டமன்றங்களிலும் தனியார் தொலைக்காட்சிகள்மூலம் ஒளிபரப்பு செய்யப்படுகிறது. நமது தமிழ்நாட்டிலும் இந்தத் தனியார் தொலைக்காட்சிகளையும், அரசுத் தொலைக்காட்சிகளையும் — முழுமையாக நாட்டு மக்கள், நம்மை ஓட்டுப் போட்டு அனுப்புகிறார்களே ஆறரை கோடி மக்கள், இந்தச் சட்டமன்றத்திலே எந்தெந்த நிகழ்ச்சிகள், எவ்வாறு நடைபெறுகிறது? எந்த உறுப்பினர் எவ்வாறு நடந்து கொள்கிறார் என்பதை முழுமையாக நாட்டு மக்கள் தெரிந்துகொள்ள வேண்டுமானால்—மற்ற அனைத்துத் தனியார் தொலைக்காட்சிகளையும் இங்கே படம் எடுக்க நீங்கள் அனுமதிக்கவேண்டும்.

அதேபோல, சகோதரி அவர்கள் கூறியதுபோல, சட்டமன்றம் தொடர்ந்து ஆண்டொன்றுக்கு 100 நாட்களாவது நடத்தவேண்டும். இதுதான் ஜனநாயகம். சட்டமன்றம் அன்றாடம் நடக்கும் நேரத்தினை அதிகப்படுத்தவேண்டும். மூன்று மணிநேரம், மூன்றரை மணிநேரம் போதாது. உங்களுக்குத் தெரியும். 9-00 மணியிலிருந்து நாலரை மணி நேரம் நாம் வாதிட்டால்கூட முடியவில்லை, மதியம் நடந்தது இங்கே. மதியம் வைப்பதற்கு ஒருவரைக் கேட்கிறார்கள். வேண்டாமென்றால், விட்டுவிட்டுப் போய் விடுகிறார்கள். இது எங்களைப் போன்றவர்களுக்கு வேதனை அளிக்கிறது. மாலையிலே வைக்கவேண்டும். ஒவ்வொரு கட்சியின் சார்பிலும், ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று உறுப்பினர்களாவது பேச வாய்ப்பளிக்கவேண்டும். தொகுதிப் பிரச்சினைகளைப் பற்றி மட்டும் அரசுக்குத் தெரியப்படுத்துவதற்கு, ஆண்டொன்றுக்குக் குறைந்தது 5 நாட்களாவது ஒதுக்க முதலமைச்சர் அவர்கள் முடிவு எடுக்கவேண்டும்.

*பிற்பகல் 12–55*

தொகுதிப் பிரச்சினைகளைப் பேச குறைந்தது ஆண்டு ஒன்றுக்கு 5 நாட்களாவது ஒதுக்கவேண்டும். என்னுடைய தொகுதிப் பிரச்சினைகளைக் குறித்து செயலாளர் அவர்களுக்கு இந்தச் சட்டமன்றம் கூடுவதற்கு முன்னால் 84 கவன ஈர்ப்பு அறிவிப்புகள் கொடுத்திருந்தேன்; 84 கவன ஈர்ப்பு அறிவிப்புகள். இதுவரையில் ஒரு கவனஈர்ப்புகூட இல்லை. அதிலே மிக முக்கியமானது, என்னுடைய எடப்பாடி தொகுதியிலே பூலாவட்டி, ஆடையூர் பக்கத்திலே பாவம், பரிதாபத்திற்குரிய 3 தொழிலாளர்கள் மண்ணிலே புதைந்து செத்தார்கள். ஒருவர் உயிரோடு மீட்கப்பட்டார். அந்த மூன்று பேருக்கும், பரிதாபத்துக்குரிய அந்த மூன்று பேருக்கும் முதலமைச்சர் அவர்களின் நிவாரண நிதி வழங்கவேண்டும் என்பதற்காக முதலமைச்சர் அவர்களின் தனிப் பிரிவிற்கு கடிதங்கள் அனுப்பினேன். இதே அவையிலே, நிதி அமைச்சர் அவர்கள்மூலமாக முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியப்படுத்துங்கள் என்று சொன்னேன். சித்தன் மகன் கிருஷ்ணன், வயது 30. அம்மாசி மகன் இரத்தினசாமி, வயது 50. இரத்தினசாமி மகன் பெருமாள், வயது 27, ஆகிய மூன்று பேரும் மண்ணிலே புதைந்து இறந்தார்கள். அதிலே குறிப்பாக, இந்த கிருஷ்ணன் மனைவி பழனியம்மாள் வயது 27. முதலமைச்சர் அவர்கள் தயவுகூர்ந்து இதற்குப் பதில் சொல்லவேண்டும். கிருஷ்ணனுடைய மனைவி பழனியம்மாள் வயது 27. அவர்களுடைய குழந்தை வெங்கடேசனுக்கு



வயது 7, கோபாலுக்கு வயது 4, சுதா என்கின்ற ஒரு கைக்குழந்தைக்கு வயது 6 மாதங்கள். 27 வயது நிரம்பாத அந்தப் பெண் எந்தவிதமான உதவியும் இல்லாமல் அவதியுற்றிருக்கிறார்கள். அந்த பரிதாபத்துக்குரிய, அந்த நிகழ்வினை...(குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதிக்கப்பட்ட அந்த நபர்களுக்கு, அந்தக் குடும்பங்களுக்கு, நிவாரணம் அளிப்பதற்கு, துறைக்கு அது ஆய்வுக்காக அனுப்பப்பட்டு இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவருடைய பரிந்துரையைப் பெற்று விரைவிலே அதற்கு நிவாரணம் வழங்கப்படும். மாண்புமிகு அம்மா அவர்கள், அந்த நடவடிக்கைக்கு ஆணையிடுவார்கள்.

**திரு. ஐ. கணேசன்:** அந்தக் குடும்பத்திற்கு முதலமைச்சரின் நிவாரண நிதி நிச்சயமாக வழங்கப்படும் என்று இந்த அவையிலே முதலமைச்சர் அவர்களை வைத்துக்கொண்டு, நிதி அமைச்சர் அவர்கள் உத்தரவாதம் கொடுத்ததற்காக, அவருக்கு என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, கடந்த நான்கு ஆண்டுகளாக, ஒரு நாள்கூட விதிப்படி தனி உறுப்பினர் அலுவல் 33 (1) என்ற விதிப்படி எடுத்துக் கொள்ளப்படவில்லை, இதுவரை நான்கு ஆண்டுகளாக ஒரு அலுவல்கூட எடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டை நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எல்லா நாட்களும் வினாக்கள்–விடைகள் நேரம் இடம் பெற்றே தீரவேண்டும். எக்காரணத்தைக் கொண்டும், இந்த வினாக்கள்–விடைகள் நேரத்தை நீங்கள் ஒதுக்கக்கூடாது என்று இந்த அவையிலே என்னுடைய கருத்தைப் பதியவைக்க நான் முயற்சி எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்லி, அதே நேரத்திலே, இந்த வினாக்கள்–விடைகள் நேரத்தில் கடைசியாக நீங்கள் இந்தச் சட்டமன்றத்தில் ஓராண்டு நிகழ்வுகளைப் பற்றிப் படிக்கும்போது, ஐந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களில் ஒவ்வொரு உறுப்பினரும் இத்தனை வினாக்களைக் கேட்டிருக்கிறார்கள் என்ற ஓர் அறிக்கை வாசிக்கப்படுவது வழக்கம். ஆனால், ஏனோ இந்த நான்கு ஆண்டுகளாக அது வாசிக்கப்படவில்லை என்பதனை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, வாசிக்கிறோம். (குறுக்கீடுகள்) ஏற்கெனவே வாசிக்கப்பட்டிருக்கிறது. கணேசன், (குறுக்கீடு) வாசிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை. இரண்டு ஆண்டுகளாக வாசிக்கப்படவில்லை. இரண்டு ஆண்டுகளாக வாசிக்கப்படவில்லை. முதல் ஆண்டு வாசிக்கப்பட்டது. ஆனால், இரண்டு ஆண்டுகளாக வாசிக்கப்படவில்லை. இந்த ஆண்டு வாசியுங்கள் என்பதற்காகத்தான் கூறுகிறேன்.

அதேபோல, சட்டமன்ற எதிர்க்கட்சி வரிசையிலே மூன்றாவது பெரிய கட்சி என்ற பெயரைப் பா.ம.க. பெற்றிருக்கிறது. எங்கள் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துரையாடுவதற்கு ஓர் அறை ஒதுக்கப்படவேண்டுமென்று நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் இதே அவையிலே நாங்கள் கேட்டிருந்தோம். எங்களுக்கு ஓர் அறைகூட இதுவரை ஒதுக்கப்படவில்லை. இவ்வளவு பெரிய கோட்டையிலே எங்களுக்கு ஓர் அறைகூட இல்லையா அல்லது எங்கள் உள்ளத்திலே ஆழமில்லையா? (சிரிப்பு) மூன்றாவது பெரிய கட்சியாக உள்ள பா.ம.க.–வுக்கு இந்தப் பேரவைக் குழுக்களிலே, பொதுக் கணக்குக் குழு, அரசு உறுதி மொழிக் குழு, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு என எத்தனைக் குழுக்கள் இருந்தபோதிலும், நான்கு ஆண்டுக்காலமாக எங்களுக்கு என்று ஒரு தலைவர் பதவி கொடுக்க உங்களுக்கு மனம் இல்லை. ஆனால், எங்களைவிட (குறுக்கீடு) அது உங்களுடைய இஷ்டம்தான்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளில் முடியுங்கள்.

*பிற்பகல் 1–00*

**திரு. ஐ. கணேசன்:** அது உங்கள் அதிகாரம்தான். நான் அதிலே தலையிடவில்லை. உங்களுக்கு மனம் இல்லையே, இது ஜனநாயகம் இல்லையே என்பதற்காகத்தான் சொல்ல வருகிறேன். ஆனால், எங்களைவிட இன்னும் சிறிய, ஓர் உறுப்பினர் கொண்ட கட்சிகளுக்குக்கூட கொடுக்கிறீர்கள். அது உங்கள் இஷ்டம்; அது உங்கள் ஜனநாயகம் – இதுதான் ஜனநாயகமா என்று தெரிந்துகொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளுக்குள் பேசி முடியுங்கள். அதுதான் ஜனநாயகம்.

**திரு. ஐ. கணேசன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல அரசுத் துறையிலும் பேரவைச் செயலகத்திலும் காலியாக உள்ள பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும். நீண்டகாலமாக ஒரே பதவியிலே பணியாற்றிய பலருக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட வேண்டும். அரசு ஊழியர்களுக்கு ஈட்டிய விடுப்பை சரண்டர் செய்தால்



முன்பு இருந்ததுபோல பதினைந்து நாட்கள் அனுமதிக்கப்பட வேண்டும். முன்பு அரசு ஊழியர்களுக்கு முழு ஓய்வு பெற 30 ஆண்டுகளாக இருந்தது. தற்பொழுது முப்பத்து மூன்று ஆண்டுகளாக மாற்றப்பட்டது. அதை மீண்டும் முப்பது ஆண்டுகளாகக் குறைக்க வேண்டுமென்று பணிவோடு உங்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை, இல்லை, என்னங்க, நான் இப்போதுதான் பேச ஆரம்பித்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, உங்கள் நேரம் முடிந்துவிட்டது. (குறுக்கீடு) பதினைந்து மணித்துளிகள் முடிந்துவிட்டன. திரு. டி. மணி. (குறுக்கீடு)

**திரு. ஐ. கணேசன்:** நான் என்ன தப்பாக பேசினேன்? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தப்பாகப் பேசினீர்கள் என்பது அல்ல. நேரம் முடிந்துவிட்டது அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) திரு. கணேசன் இரண்டு மணித்துளிகளுக்குள் முடியுங்கள். (குறுக்கீடு) இரண்டு மணித்துளிகளுக்குள் முடியுங்கள். இரண்டே இரண்டு மணித்துளிகள்.

**திரு. ஐ. கணேசன்:** அரசுத் துறை சம்பந்தமாகத்தான் கேட்கிறேன். நான் தவறாக ஒன்றும் கேட்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணியடிப்பது என்பது தவறாகப் பேசியதற்கு அல்ல. நேரம் முடிந்துவிட்டது என்பதைக் குறிப்பதற்காக.

**திரு. ஐ. கணேசன்:** சரி. அகவிலைப்படி மாண்புமிகு புரட்சித் தலைவர் காலத்திலே வழங்கப்பட்டதைப்போல மத்திய அரசு வழங்கிவரும்போதெல்லாம், நமது அரசு உடனுக்குடன் அகவிலைப்படி வழங்க வேண்டும். அரசு ஊழியர்களுக்கு ஓய்வூதியம் கடைசி மாதச் சம்பள அடிப்படையிலே முன்பு இருந்ததுபோல கணக்கிட்டு வழங்கப்பட வேண்டும். அரசு ஊழியர்களுக்கு விடுப்புக் கால சலுகையில் மற்ற மாநிலங்களுக்கும் சென்றுவர அனுமதிக்க வேண்டும். குடும்ப ஓய்வூதியம், குறைந்த அளவு அரசு ஊழியர்களுக்கு ரூபாய் 1,500–வது நிர்ணயிக்க வேண்டும். ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம் பெறுவோருக்கு மாதம் ஒன்றுக்கு 50 ரூபாய் மருத்துவப்படி வழங்கப்படுகிறது. அதைக் குறைந்தது 200 ரூபாயாகவாவது உயர்த்திக் கொடுக்க வேண்டும்.

அரசு ஊழியர்கள் ஓய்வுக் கால பணிக்கொடை உச்ச வரம்பு மூன்றரை இலட்சம் ரூபாய் என்பது ஐந்து இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட வேண்டும். அரசு ஊழியர்களுக்கு பணிக்கொடை கணக்கிடும்போது அடிப்படைச் சம்பளம், அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி மற்றும் நகர ஈட்டுப் படி ஆகியவற்றைக் கணக்கிலே சேர்க்க வேண்டும். ஓய்வூதியம் பெறுவோருக்கு மூன்றிலே ஒரு பங்கு தொகையை ஒட்டுமொத்தமாக பெற தற்போது தகுதியுடையவர்கள். இதன்மூலம் குறைக்கப்பட்ட ஓய்வூதியம் பகுதி ஒட்டுமொத்த தொகைபெற்று 15 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் பெற தகுதியுள்ளது என்பதனை 12 ஆண்டுகள் முடித்த உடனே முழுமையாகப் பெற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மத்திய அரசு, மகளிர்களுக்கு 135 நாட்கள் பேறுகால விடுப்பு அளிக்கிறது. ஆனால், நம்முடைய அரசு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** ஒரு நிமிஷத்தில் முடித்துவிடுகிறேன். ஆனால், நம்முடைய அரசு மூன்று மாதங்கள்தான் அளிக்கிறது. இதை, மத்திய அரசு அளிப்பதுபோல மகளிர் நலத்திலே அக்கறை உள்ள இந்த அரசு 135 நாள் பேறுகால விடுப்பாக தமிழக அரசு அளிக்க வேண்டும். ஆறாவது சம்பளக் குழு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அத்துடன் முடித்துவிடுங்கள். திரு. டி. மணி. (குறுக்கீடு)

**திரு. ஐ. கணேசன்:** ஒரே ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி. (குறுக்கீடு) வாக்கியத்தை நிறைவு செய்யுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் அவர்கள் சட்டமன்றத்திலே (குறுக்கீடு) – நீங்கள் கேட்டீர்களே அதற்காகச் சொல்கிறேன் அறிவித்த – வாழ்த்து தெரிவிக்கலாம் இல்லையா, அதற்கு நேரம் இருக்கும் இல்லையா, எங்களுக்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 13-9-2001-லிருந்து இந்த அவையிலே நிதி அமைச்சர், முதலமைச்சர் அவர்களுடைய அனுமதி பெற்று அளிப்பதாகச் சொன்ன அந்தத் தொகையை எங்களுக்கு அளித்திருக்கிறார்கள். அதற்காக நான் அவரை வாழ்த்துகிறேன். ஆனால், தமிழகத்திலே மட்டும்தான் இவ்வளவு சம்பளம் என்று ஒரு சிலர் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இது தவறு. தமிழகத்தைவிட 17 மாநிலங்கள் – தமிழகத்தைவிட 17 மாநிலங்களிலே – இதைவிட அதிகத் தொகை அளிக்கப்படுகிறது.



அதுமட்டுமல்ல, தொடர் வண்டி – புகை வண்டி அல்ல – தொடர் வண்டியிலே நமக்கு 15,000 ரூபாய்தான் அளிக்கப்படுகிறது. நிதி அமைச்சர் அவர்கள் முதலமைச்சர் அவர்களிடத்திலே பேசி....

பிற்பகல் 1–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதையெல்லாம் பழனிசாமிக்கும், கருணாகரனுக்கும் அப்படியே சொல்லுங்கள். திரு. டி. மணி.

**திரு. ஐ. கணேசன்:** ஒரேயொரு நிமிடம். நிதியமைச்சர் அவர்கள் முதலமைச்சர் அவர்களிடம் சொல்ல வேண்டும். நமக்கு 15,000 ரூபாய்தான் அளிக்கப்படுகிறது. இதே கேரளாவிலே, 45,000 ரூபாய், நண்பர்களே, புரிந்துகொள்ளுங்கள். 45,000 ரூபாயிலிருந்து 80,000 ரூபாய் வரை அளிக்கப்படுகிறது. 45,000 ரூபாயிலேயிருந்து 80,000 ரூபாய் வரை, பல மாநிலங்களிலே அளிக்கப்படுகிறது. எத்தனை வேண்டுமானாலும் உதாரணங்கள் சொல்லலாம். அரசு வெளியிட்ட அறிக்கையை நான் காட்டத் தயாராக இருக்கிறேன். (குறுக்கீடு) ஒரே ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, திரு. மணி. (குறுக்கீடு)

**திரு. ஐ. கணேசன்:** ஒரு நிமிடத்திலே முடித்து விடுகிறேன். தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்திலே முடித்து விடுகிறேன். ஒரேயொரு நிமிடத்திலே முடித்துவிடுகிறேன். ஓய்வூதியத்தில், ஒரு சிறிய திருத்தம் கொண்டு வந்தால்தான் நன்றாக இருக்கும். ஓராண்டு பணியாற்றினால் 6,000 ரூபாய் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்காகப் பாராட்டுகிறேன். ஆனால், 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் பணியாற்றியிருக்கிறார்கள்; 20 ஆண்டுகள் பணியாற்றியிருக்கின்றார்கள் என்றால், ஒரு ஐந்தாண்டுகளுக்கு மேல் பணியாற்றக்கூடியவர்களுக்கு 200 ரூபாய் ஆண்டொன்றுக்கு,—300 ரூபாய் என்று மற்ற மாநிலங்களிலே, அந்த முறை கடைப்பிடிக்கப்படுகிறது; உச்ச வரம்பாக 10,000 ரூபாய், 12,000 ரூபாய் என்று நிர்ணயித்து, அறிவித்தால்தான் நியாயமாக இருக்கும். அதேபோல,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்துவிடுங்கள், முடித்துவிடுங்கள். திரு. மணி.

**திரு. ஐ. கணேசன்:** நன்றி சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றியை உங்கள் சார்பாக நான் சொல்லிவிடுகிறேன். திரு. மணி. (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். திரு. மணி.

**திரு. ஐ. கணேசன்:** ஒரேயொரு நிமிடத்திலே முடித்துவிடுகிறேன். ஒரே நிமிடத்திலே முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. உட்காருங்கள், உட்காருங்கள். இன்றைக்கு முடிக்கவேண்டும். இந்த மானியக் கோரிக்கை முடிந்த பின்னர், வீட்டுவசதி வாரியம் வேறு இருக்கிறது.

**திரு. ஐ. கணேசன்:** ஒரேயொரு நிமிடத்திலே முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) மற்றவர்களுக்கு ஒரு மணிநேரம் கொடுக்கிறீர்கள். எனக்கு ஐந்து நிமிடம் கொடுக்கக்கூடாதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித்துளியில் பேசி முடியுங்கள். இந்த மாதிரி கட்டுப்பாட்டை மீறினால் எப்படி அவையை நடத்த முடியும்?

**திரு. ஐ. கணேசன்:** நானா கட்டுப்பாட்டை மீறுகிறேன்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு குறிப்பிட்ட நேரம் நிர்ணயிக்கப்படுகிறது. (குறுக்கீடு) ஒரு குறிப்பிட்ட நேரம் என்று நிர்ணயிக்கப்படுகிறது. (குறுக்கீடு) திரு. மணி, பேசுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** ஏங்க, 6 மானியத்தைக் கையிலே வைத்துக்கொண்டு, ஐந்து நிமிடத்தில் பேசு என்றால், எப்படீங்க முடியும்? ஒரு நிமிடம். ஒரு நிமிடத்திலே முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடைசியாக, பேரறிஞர் அண்ணா கூறியது. நாட்டில் நல்லாட்சி நடக்க ஆளுங்கட்சி ஒன்று மட்டும் இருந்தால் போதாது. தலைவர் அவர்களே, மாற்றுக் கட்சிகள் இருக்க வேண்டும். மாற்றுக் கட்சி இல்லாத ஜனநாயகம், பிரேக் இல்லாத கார், கரையில்லா ஆறு, மூக்கணாங்கயிறு இல்லாத மாடு. இதுபோலத்தான் உள்ளது, தமிழ்நாடு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மிச்சத்தை நான் சொல்கிறேன். இப்பொழுது, மணி பேசுங்கள்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலச் சட்டமன்றம், அமைச்சரவை, நிதித் துறை, ஓய்வூதியம், அதுபோன்று, நம்முடைய திட்ட வளர்ச்சித் துறை, இவை சம்பந்தமாக சுருக்கமாகச் சில விவரங்களைச் சொல்வதற்கு விழைகின்றேன். நம்முடைய சட்டமன்றத்திலே தினக்கூலிப் பணியாளர்களாக வேலை செய்கின்றார்கள். அவர்களுக்கு எந்த நிரந்தரமும் இல்லை. சம்பளமும்



குறைவு. ஏதாவது, பிற இலாக்காக்களிலே அவர்களை இணைக்க முடியுமா என்று பார்க்க வேண்டும். அல்லது, அவர்களுடைய சம்பளத்தையாவது உயர்த்திக் கொடுக்க வேண்டும்.

அதுபோன்று, நம்முடைய பேரவையினுடைய நிருபர்கள். அவர்களுடைய சம்பளம் என்பது போதுமானதாக இல்லை. எனவே, அவர்களுடைய சம்பளத்தையும், இன்று இருக்கின்ற சம்பளத்திலிருந்து அதிகப்படுத்தி, ஒரு 400 ரூபாய் அதிகம் கொடுக்கக்கூடிய அளவிலே நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று, நம்முடைய சட்டமன்றத்தினுடைய நேரம், அது போதுமானதாக இல்லை. எனவே, என்னுடைய வேண்டுகோளெல்லாம், காலையிலே முன்பெல்லாம் 9–00 மணிக்கு இருந்து, அதை 10–00 என்று ஆக்கிவிட்டோம். எனவே, அதை இப்போது, அதனுடைய நடுநிலை என்று சொல்கிறபோது, ஒன்பதரை மணிக்கே ஆரம்பித்தால், இன்னும் கொஞ்சம்கூட சிறப்பாக நேரத்தை நாம் எடுத்துக்கொள்ள முடியும்.

அதுபோன்று, இந்தச் சட்டமன்றத்திலே வருகின்ற பிரச்சினைகள், அது வரவு–செலவுத் திட்டம் என்று வருகின்றபோது, அதற்குள்ளே நிறைய விவகாரங்கள் வருகின்றன. அந்த விவரங்களையெல்லாம் சொல்வதற்குப் போதுமான நேரம் தரப்படுவதில்லை. எனவே, நம்முடைய அமைச்சர் பெருமக்களுக்கெல்லாம் நாங்கள் நிறையக் கடிதங்கள் எழுதுகின்றோம். நாடாளுமன்றத்தில் இருக்கின்ற — நமக்கே தெரியாது — ஓர் அமைச்சர், இரயில்வேயிலே இருக்கின்றார். அவருக்கு ஒரு கடிதம் எழுதுகின்றோம். 15 நாட்கள் கழித்து, நமக்குப் பதில் வருகின்றது. நாம், அந்த நிலையை,—நம்முடைய தமிழகச் சட்டமன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் ஒரு கடிதம் எழுதுகின்றபோது, அதற்கு ஏதாவது ஒரு பதில் வருமா என்று நாம் ஏங்கி நிற்க வேண்டிய நிலைமை. எந்தப் பதிலும் வருவதில்லை. தயவு செய்து இனியாகிலும், நம்முடைய அமைச்சர் பெருமக்களுக்குத் தருகின்ற கடிதங்களுக்கு, செய்வோம், அல்லது செய்யவில்லை அல்லது உங்களுடைய கடிதம் கிடைக்கப்பெற்றிருக்கிறது என்று சொல்கின்ற ஒரு பதிலையாவது தருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். அதிலே ஒரு சிறப்பான அம்சம் என்னவென்றால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனிப் பிரிவிற்கு நாம் ஒரு கடிதத்தைக் கொடுக்கின்றோம். 10 நாட்களுக்குள்ளே ஒரு பதில் வருகின்றது. இந்தப் பிரச்சினை சம்பந்தமாக, விவரங்கள் சேகரிக்கப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஆகவே, பின்னாலே என்ன நடவடிக்கை என்பது நமக்குத் தெரியாது. நான் ஏற்கெனவே,

இந்த வருடத்திலே மூன்று கடிதங்களுக்கு, பின்னால் வந்த கடிதங்களுக்கு, என்ன நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது என்பதற்குச் சில விவரங்களைக் கேட்டிருந்தேன். அது வரவில்லை.

பிற்பகல் *1–10*

இதற்கு மேலே அவசர நிலை காரணமாக, சில சமயங்களில் FAX-ஐக் கொடுக்கின்றோம். இந்த FAX செய்தி எங்களுக்குக் கிடைத்திருக்கின்றது என்ற ஒரு பதிலைச் சொன்னால் ஒரு மனநிறைவாவது எங்களுக்கு ஏற்படும். ஏனென்று சொன்னால், இன்றைக்குக் காலையிலே நான் பத்திரிகையை எடுத்துப் படிக்கின்றபோது, தினமணி பத்திரிகையை, நம்முடைய மாண்புமிகு சபாநாயகருக்கு முன்னாலே காட்டி, அதிலே ஒரு கவன ஈர்ப்பு எழுதிக் கொடுத்தேன். அது வராது என்று சொல்லிவிட்டார். இங்கே நம்முடைய சீரிப்பாறைக்குப் பக்கத்திலே நான்கு மாதங்களுக்கு முன்னாலே ஒரு பாலத்தைக் கட்டினோம்; இப்போது மூன்று தினங்களாக பெய்து வருகின்ற மழையாலே அந்தப் பாலத்தைக் காணோம். ஆகவே, இப்படிப்பட்ட பிரச்சினைகளை உங்களுடைய கவனத்திலே கொண்டு வந்து தீர்வு ஏற்பட வேண்டும். ஒரு விமர்சனம் என்ற முறையிலோ அல்லது குறை சொல்லுகின்ற முறையிலோ அதை நாங்கள் எடுத்துக்கொள்ளவில்லை.

அதுபோன்றுதான் மூன்று தினங்களுக்கு முன்னாலே, தூத்தூர் பகுதியிலே, கடலோரத்திலே, ஒரு சின்ன பகுதியிலே மிகப்பெரிய கொந்தளிப்பு, கடல் கொந்தளிப்பு. *16* படகுகள், கரையிலே ஒதுக்கி வைத்திருந்த படகுகள், அடித்து உடைக்கப்பட்டு, அவர்களுக்கு இப்போது பிழைப்பிற்கு வழியில்லை. இனி அவர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டுமென்று சொன்னால், இதற்கு பின்னாலே, சுனாமியாலே பாதிக்கப்பட்டவர்களுக்கு நாம் சில உதவிகளைச் செய்து கொண்டிருக்கிறோம். நாம் செய்கின்ற உதவிகளினுடைய ஒரு பகுதியாக, அவர்களுடைய படகுகளை வாங்குவதற்கு நாம் சில ஏற்பாடுகளை செய்வது சிறப்பாக இருக்கும்.

அதுபோலத்தான் நம்முடைய அரசு நிகழ்ச்சிகள். மற்ற நிகழ்ச்சிகளைப்பற்றி நான் சொல்ல வரவில்லை. நம்முடைய மாவட்டத்திலே கடல் கொந்தளிப்பு ஏற்பட்டபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருமுறை வந்தார்கள். பாராட்டுகின்றோம். ஆனால், எங்களுக்குத் தகவல் தரப்படவில்லை. நாங்கள் எப்படி தகவலைப் பெறுவது? அந்தத் தகவலைப் பெற்றதற்குப் பின்னால் வழிமறித்து, வண்டியிலே பின்னாலே போய், நம்முடைய அமைச்சர்கள் இந்த வண்டியை பார்த்தார்கள். எனவேதான், கொஞ்சம் வழிவிட்டு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓர் இடத்திலே நிற்க வேண்டிய சந்தர்ப்பத்திலேதான், அந்தப் பதிலைக் கொடுக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. எனவே, அரசு நிகழ்ச்சிகளுக்கு மாவட்டத்திலே வருகின்றபோது, முறையான தகவல்களைத் தந்து, நாங்கள் என்ன வேறு ஏதாவது சொல்லப் போகிறோமா? அந்த மாவட்டத்திலே இருக்கின்ற பிரச்சினைகள் அதைத்தான் சொல்லவிருக்கின்றோம். சில முடியும், சில முடியாமல் போகலாம். இருந்தாலும்கூட ஒரு மனநிறைவை ஏற்படுத்துகின்ற வகையிலே, காரியங்களைச் செய்வது.



இன்னொன்று, நம்முடைய நிதி சம்பந்தமாக. நிதியிலே நான் இரண்டு காரியங்களை குறிப்பிட விரும்புகிறேன். அதாவது, தமிழ்நாட்டிலே இப்போது நம்முடைய முந்திரிக்கொட்டை தொழிலில் வேலை செய்கின்ற தொழிலாளர்கள் ஏறத்தாழ ஒரு இலட்சம். நம்முடைய மாநிலத்திலே பல பகுதிகளுக்கு அது விஸ்தரிக்கப்பட்டுவிட்டது. ஆனால், அது ஏற்றுமதியாகின்ற மையப் பகுதி கொல்லம் அல்லது கொச்சி. இதிலே வருகின்ற அன்னியச் செலாவணி ஒரு காசுகூட நமக்குக் கிடைப்பதில்லை. இதற்கு முன்னால் ஒரு தடவை மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருக்கின்ற காலத்தில் இதை நான் சட்டப் பேரவையிலே கொண்டு வந்திருக்கின்றேன். நமக்கு அந்த முந்திரிக்கொட்டையினுடைய தோல் இருக்கிறது அல்லவா, அதை எடுத்து அந்தத் தோல் காசுதான் நமக்கு வரும். அதற்குக் காரணம் என்னவென்று சொன்னால், நம்முடைய மாநிலத்திலே ஏற்றுமதிக்கு வழியில்லை. எனவேதான், அந்தக் காலத்திலேயிருந்து வைத்திருக்கின்ற மிகப் பெரிய ஒரு கோரிக்கை குளச்சலிலே ஆழமான பகுதியிருப்பதால், அங்கே ஒரு துறைமுகத்தை ஏற்படுத்தி, அதன் மூலமாக இந்த ஏற்றுமதி பூராவும் தமிழ்நாட்டிலே உற்பத்தியாகின்ற முந்திரி பருப்பினுடைய ஏற்றுமதி பூராவும் அது வழியாகச் செல்கின்றபோது, அன்னியச் செலவாணியை மத்திய சர்க்காருக்கு நாம் தேடிக் கொடுக்கின்றோம். ஒன்று. இரண்டாவது, மணவாளக்குறிச்சியிலே ஒரு மணல் ஆலை இருக்கிறது. *5* ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு கேள்வியை கொடுத்திருந்தேன். இதிலே எவ்வளவு அன்னியச் செலாவணி வருகின்றது என்று. எனக்கு இதுவரையிலும் பதில் வரவில்லை. எனவே, அதன்மூலமாக மத்திய அரசுக்கு அன்னியச் செலாவணியை நாம் தேடிக் கொடுக்கின்றோம்.

தமிழ்நாட்டிலே அதிகப்படியான அன்னியச் செலாவணி தேடித் தருகின்ற ஒரு சின்ன மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம். இதன்மூலமாக மத்திய அரசிடமிருந்து நம்முடைய வளர்ச்சிப் பணிக்காக, தமிழ்நாட்டினுடைய வளர்ச்சிப் பணிகளுக்காக, தமிழ்நாட்டினுடைய தொழில் வளம் பெருகுவதற்காக மத்திய அரசுக்கு நாம் நிதியை சம்பாதித்துக் கொடுக்கின்றோம். ஆனால், அதனுடைய பங்கை சரிவர நமக்கு அவர்கள் தருகின்றார்களா என்று கேட்டால் இல்லை. ஆகவேதான் இதை ஒரு புள்ளிவிவரங்களோடு, எவ்வளவு வருகின்றது என்பதை புள்ளிவிவரங்களோடு மத்திய அரசை நாம் கேட்கின்றபோது அல்லது சில நேரங்களிலே, எங்களைப் பொறுத்தமட்டில் ஒரு போராட்டம் என்று சொன்னால், அதைக்கூட சொல்லியிருக்கின்றோம். மத்திய அரசாங்கத்தினுடைய நடவடிக்கைகளிலே ஒரு போராட்டம் தேவையென்று சொன்னால் அந்த முறையிலே அதை நடத்துவதற்குகூட நாம் தயாராக வேண்டும். தமிழ்நாட்டிலே . . .

பிற்பகல் *1–15*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும், அடிப்படை வசதிகளை மிகவும் அதிகமாகக் கொண்டிருக்கிற ஒரு மாநிலம் தமிழகம். குறிப்பாக 2001–லிருந்து நடப்பாண்டு வரை இந்தியாவில் பிற மாநிலங்களில் இல்லாத அளவிற்கு பல நூறு கோடி ரூபாய் முதலீட்டில் அடிப்படை வசதிகள் அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு மட்டும் சராசரியாக 27 ஆயிரம் கோடி ரூபாய் மைய அரசுக்கு பல்வேறு தொகுப்புகளிலிருந்து வருமானமாக செல்கிறது. ஆனால், மைய அரசைப் பொறுத்தவரைக்கும், மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிப்பினைத் தருவது ஒட்டுமொத்தமாக 30.5 சதவிகிதம்தான். 100 ரூபாய் நாம் மைய அரசுக்குக் கொடுத்தால், எல்லா மாநிலங்களுக்கும் ஒட்டுமொத்தமாக 30.5 சதவிகிதம் தருகிறார்கள். தமிழகத்திற்கு 1.62 சதவிகிதம் மட்டும்தான் தருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்களுடைய நல்ல உணர்வை நான் பாராட்டுகிறேன். இந்த உணர்வை உங்கள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் டெல்லியிலே எடுத்துச் சொல்லி பதவியிலிருந்து விலகி விடுவோம்; உங்களுக்கு ஆதரவை நாங்கள் திரும்பப்பெற்றுவிடுவோம். மாநிலங்களுக்கு அதிக பணத்தைத் தரவேண்டும் என்று, இதையே – This can be taken as a weapon by you. மக்களுக்கு நீங்கள் உண்மையிலேயே நன்மை செய்ய வேண்டும் என்ற நோக்கம் C.P.I. (M) இயக்கத்திற்கு இருக்குமேயென்றால், மைய அரசு பண அதிகாரத்தைத் தன் கையிலே குவித்து மாநிலங்களையெல்லாம் நசுக்குகின்ற ஓர் அணுகுமுறையை மேற்கொள்கின்றது. அதைத் தடுக்க நீங்கள் மைய அரசுக்குத் தருகின்ற ஆதரவை வாபஸ் பெற வேண்டும். இந்தியாவிற்கு வழிகாட்டியாக நீங்கள் இதைச் செய்தால் மாநிலங்கள் எல்லாம் உங்களை வாழ்த்தும்.



**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள், அவருடைய மாவட்டத்தில் குளச்சலை ஒரு பெரிய துறைமுகமாக develop செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை இங்கு வைத்தார். இதே கோரிக்கையை பல முறை மத்திய அரசிடம் நாங்கள் வைத்திருக்கிறோம். இந்த அதிகாரம் மத்திய அரசின் அதிகார வரம்பிற்கு உட்பட்டது. ஆகவே, மத்திய அரசு மனம் வைத்தால்தான் குளச்சலை துறைமுகமாக ஆக்க முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, இரண்டு மணித்துளிகளில் முடித்துவிடுங்கள்.

**திரு. டி. மணி:** சில விஷயங்களைச் சொல்வதற்கு நேரம் கொஞ்சம் கொடுங்கள். அதாவது, இது சம்பந்தமாக நம்முடைய துறைமுகம் சம்பந்தமாக, நம்முடைய நாகர்கோவிலில் இருக்கக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள், இப்பொழுதுகூட நடந்து முடிந்த நாடாளுமன்றக் கூட்டத்திலே இந்த விவகாரத்தை, குளச்சல் துறைமுகத்தினுடைய நிலைதான் என்ன? அரசு நிதி ஒதுக்குவதற்கு தயார்தானா என்ற ஒரு கேள்வியை போட்டு அவருடைய பிரசங்கத்திலே அதைச் சொல்லி இருக்கின்றார்கள். அதை நாங்கள் மறுக்கவில்லை. அதேபோன்று, நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இரண்டு கருத்துகளைச் சொல்லி இருக்கின்றார்கள். இந்த நிதி ஆதாரத்தைக் கண்டறிவதிலே எந்தவித காரணத்தைக் கொண்டும் நாங்கள் பின்னணியிலே இருக்கின்றவர்கள் அல்ல. நிதி ஆதாரத்தை எப்படி பெருக்கிக் கொள்ள வேண்டும், மத்திய அரசாங்கம் நம்முடைய பங்கினை எப்படித் தர வேண்டும், எதற்காகப் பயன்படுத்த வேண்டும் என்பதிலே மத்திய அரசோடு நிரந்தரமான ஒரு கொள்கை ரீதியான ஒரு போராட்டத்தை நடத்துகின்ற ஓர் இயக்கத்தைச் சார்ந்தவன் என்ற முறையிலே 4 தினங்களாக, 5 தினங்களாக எங்களுடைய இயக்கத்தினுடைய அகில இந்திய மாநாடு டெல்லியிலே நடைபெறுகின்றது; அந்த மாநாட்டிலே எடுத்துக்கொண்டிருக்கின்ற முடிவுகள் முழுமையாக அதைப் படித்துப் பார்த்தால், முழுமையாக அந்த அரசோடு எதைப் பாதுகாத்துக் கொள்வதற்காக? ஒரு மதரீதியான ஆட்சி இந்த நாட்டிலே இருந்த நிலைமையை நாம்

சந்தித்தவர்கள்; எனவேதான், அது வரக்கூடாது என்ற ஒரே காரணத்திற்காக மட்டும்தான் இந்த அரசோடு எங்களுடைய ஒத்துழைப்பே தவிர, பொருளாதார அடிப்படையிலே அந்த ஒத்துழைப்பு இல்லை. அதுமட்டுமல்ல, வர்க்கரீதியாகப் பார்க்கின்றபோது, அந்தக் கட்சியினுடைய வர்க்கரீதியான அணுகுமுறையை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. எங்களுடைய வர்க்கரீதியான அணுகுமுறை உழைப்பாளி வர்க்கத்தைப் பின்னணியாகக் கொண்டு வழங்கவில்லை. (குறுக்கீடு) விடுங்கள், விடுங்கள். அதாவது அதை வர்க்கரீதியாக அணுகுகின்ற ஒரு கொள்கை படைத்தவர்கள். எனவேதான் எங்களுடைய நிலைப்பாட்டை நாங்கள் நாடாளுமன்றத்திலேயானாலும் சரி, எங்களுடைய கட்சியினுடைய மாநில மாநாடு ஆனாலும் சரி, அகில இந்திய மாநாட்டிலும் தெளிவுபடுத்தி இருக்கின்றோம். அந்தப் பின்னணியில் இருந்துகொண்டுதான் நம்முடைய மாநிலத்தினுடைய வளர்ச்சிக்காக நீங்கள் கடன் வாங்கவேண்டிய தேவை இல்லை என்பது எங்களுடைய வாதம். இந்தியாவில் இருக்கக்கூடிய கோடீஸ்வரர்கள் எத்தனை கோடி வராக் கடன் என்று சொல்லி இன்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள்? அதை மட்டும் மத்திய அரசு வசூலித்தாலே நாம் ஒரு காசுகூட உலக வங்கியிடம் சென்று கடன் வாங்கத் தேவையில்லை என்ற கருத்தை உடையவர்கள் நாங்கள். ஆகவேதான்...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இந்த நல்ல ஆலோசனையை மைய நிதி அமைச்சர் திரு. சிதம்பரத்திடம் வற்புறுத்திக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்றத்தில் பகிரங்கமாக எங்களுடைய கட்சியினுடைய 44 தோழர்களும் அங்கே குரல் எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். நடந்துகொண்டிருக்கக்கூடிய அகில இந்திய மாநாட்டிலேகூட மாநில அரசுகளினுடைய உரிமைகளை மத்திய அரசாங்கம் எப்படி நசுக்குகிறது என்பதைக் கண்டித்து ஒரு தீர்மானமும், அந்த உரிமைகளை வென்றெடுப்பதற்கான ஒரு புதிய ஐக்கிய முன்னணி தந்திரத்தையும் உருவாக்குவது என எங்களுடைய மாநாட்டிலே முடிவு செய்திருக்கிறோம். ஆகவே, எங்களுடைய போராட்டம் ஒளிவுமறைவற்றது; பகிரங்கமாக நாங்கள் போராடிக் கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்குத் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



பிற்பகல் 1–20

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகிரங்கமாக கம்யூனிஸ்ட் கட்சிகள் போராடிக் கொண்டிருக்கின்றன. அதேநேரத்தில் பகிரங்கமாக மத்திய அரசுக்கு ஆதரவும் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மாநாடு நடத்தி தீர்மானம் மட்டும் நிறைவேற்றினால் போதாது; நாடாளுமன்றத்தில் முழங்கினால் மட்டும் போதாது; மக்கள் விரோதமாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கும் இந்த மத்திய அரசுக்கு வழங்குகின்ற ஆதரவை வாபஸ் பெற வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மத்திய அரசு போக வேண்டும், அப்போதுதான் இந்த நாட்டு மக்களுக்கு நன்மை நடக்கும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, அடுத்து நீங்கள் பேசப் போகிறீர்கள். அப்போது பேசும்போது சொல்லுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** இந்த மத்திய அரசை அனுப்பிவிட்டு எந்த மத்திய அரசை அமர்த்தப் போகிறார்கள் என்பதை முதலமைச்சர் சொன்னால் விளக்கமாகப் புரிந்துகொள்ள முடியும். அதைச் சொல்ல வேண்டும் அல்லவா? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மத்திய அரசுக்கு நாங்கள் கொடுக்கிற ஆதரவை விலக்கிக் கொண்டால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. மத்திய அரசு போனால், அது என்ன வெற்றிடமாகவா இருக்கும்?

**திரு. கே.சி. கருணாகரன்:** யாருடைய தலைமையில் என்று சொன்னால் நாங்கள் உங்களைக்கூட ஆதரிக்கத் தயார். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, இரண்டு மணித்துளிகளில் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) அரசன், ஏதோ கேட்க வேண்டும் என்று சொன்னீர்களே, என்ன? (குறுக்கீடு) டி. மணி.

**திரு. டி. மணி:** அந்த அரசியல்ரீதியான நடவடிக்கைக்கு இங்கே நாங்கள் 6 பேர் இருக்கிற அமைப்பு ஒரு முடிவைச் சொல்ல முடியாது. அகில இந்திய அடிப்படையிலே எங்களுடைய மாநாட்டிலே மத்திய அரசினுடைய தவறான பொருளாதாரக் கொள்கையை மிகக் கடினமான முறையிலே இன்று விமர்சனம் செய்து கண்டிக்கின்ற தீர்மானத்தை ஒரு பக்கத்திலே போட்டிருக்கிறோம். அதுமட்டுமல்ல, வெளியிலே நடைபெறுகின்ற பல்வேறுவிதமான போராட்டங்களிலே, இயக்கங்களிலே இதை முன்னணியாக வைத்துக்கொண்டுதான்

மத்திய அரசாங்கத்தினுடைய பொருளாதாரம் சம்பந்தமான விஷயங்களிலே எங்களுடைய நிலைப்பாட்டை நாங்கள் விளக்கியிருக்கிறோம். எனவே, 'நாங்கள் அங்கிருந்து வெளியேற வேண்டும்' என்று சொன்னால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பின்னால் வருவது என்ன என்பதைச் சொல்ல வேண்டும். ஏற்கெனவே கடந்த காலத்திலே...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பின்னால் வருவது என்ன என்பதை இப்போதே எப்படிச் சொல்லமுடியும்? மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள், இப்போதிருக்கிற அரசு போய் விட்டால், பின்னர் யார் அரசமைப்பது என்பதை முதலமைச்சர் சொல்ல வேண்டும் என்கிறார். நான் எப்படிச் சொல்ல முடியும்? Nature abhors a vacuum. அதனால் ஒன்று போனால் இன்னொன்று வரும். எப்படியோ வரும். அது எப்படி என்று இப்போது சொல்ல முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லிவிட்டார்கள். அதற்கு வேறுவிதமான மறுப்பை நான் சொல்லவில்லை. பின்னால் ஒன்று வரும் என்று சொல்கிறபோது, மார்க்சிய சித்தாந்தத்தை உள்ளடக்கி இயங்குகின்ற கட்சி என்ற முறையில், ஒரு வர்க்க அமைப்பு என்ற முறையில் நாளை வருவதைப் பற்றி ஓர் அளவிற்காவது சிந்தனையோட்டம் இல்லை என்று சொன்னால், அது ஒரு நல்ல சம்பிரதாயமாக இருக்காது என்பதை மட்டும் சொல்லிக்கொள்கிறேன். எனவே, மத்திய அரசைக் காரணம் காட்டி, மத்திய அரசினுடைய தவறான வழிகளை, தவறான பாதையை விமர்சித்துக் கொண்டுதான் எங்களுடைய ஆதரவு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது மாண்புமிகு முதலமைச்சருக்குத் தெரியாதது அல்ல; அமைச்சர் பெருமக்களுக்கு தெரியாதது அல்ல; அந்தவகையிலேதான் எங்களுடைய நடவடிக்கைகள் பூராவும் இருக்கின்றன. இங்கே சற்று முன்னாலே நடந்த விவாதம் (மணியடிக்கப்பெற்றது) நம்முடைய மத்திய நிதி அமைச்சர் சம்பந்தப்பட்டதைப் பொறுத்தவரையில் அவருடைய கொள்கை, காங்கிரஸ் கட்சி வைத்திருக்கிற கொள்கைக்குக்கூட உகந்ததா என்ற கேள்விக்குறியாக இன்றைக்கு இருக்கிற ஒரு கால கட்டம் இது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவேதான் இந்தச் சூழ்நிலையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தமட்டில், ஒரு



திறமையான நிர்வாகத்தை, அதிலும் குறிப்பாக தமிழ்நாட்டிற்கு, நாங்கள் இங்கே சுட்டிக்காட்டி இருக்கிற வருவாயைப் பெருக்குகின்ற வகையில், எந்த வகையில் மத்திய அரசு நமக்கு உதவ வேண்டும் என்று சொன்னால், இன்னும் ஒன்றைச் சொல்ல நான் விரும்புகிறேன்; மாநில அரசாங்கத்திற்கு தருகின்ற திட்டங்களோ, மற்ற காரியங்களோ இந்த மாநில அரசாங்கத்திற்குத் தெரியாமல் அதைச் செய்வதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மாநிலத்தினுடைய அதிகாரத்திலே கையை வைக்கக்கூடாது என்று சொல்கிற வாதத்திற்குப் பின்னால்—எனவேதான் இந்தப் பிரச்சினைகளை மிகச் சுருக்கமாகச் சொல்லி, நான் வேறு விவாதங்களுக்குச் செல்லவில்லை.

நம்முடைய மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்திலே எங்களுடைய பகுதியிலே இரப்பர் தொழிற்சாலையை உருவாக்கச் சொன்னார். நான்தான் கோரிக்கை வைத்தேன்; ஏற்றுக்கொண்டார்கள். மத்திய அரசு அனுமதித்தால் செய்யலாம் என்று சொன்னார்கள். கேட்டது, டயரை உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை. போக்குவரத்துக் கழகத்திற்கு மட்டும் நாம் பயன்படுத்தினால் இலாபகரமாக அதை நடத்த முடியும்; ஆனால், 1980 ஆம் ஆண்டு காலத்திலே சொன்னது. இப்போது 2005-லே வந்திருக்கிறோம். இதற்கிடையில் ஆட்சி மாற்றங்கள், அவர்கள் வேறு ஒரு கதையைச் சொன்னார்கள், இரப்பர் பூங்கா என்று. அது என்ன பூக்குமோ, காய்க்குமோ என்று தெரியவில்லை. இதுவரையிலும் ஒரு பூவும், காயும் அங்கே வரவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) எனவேதான் குறைந்தபட்சம் . . . ( குறுக்கீடு)

பிற்பகல் 1-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, உட்காருங்கள். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள், (குறுக்கீடு) பேசவில்லையா? சரி, மணி பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. டி. மணி:** எனவே குறைந்தபட்சம் 100 பேர்களுக்காகிலும் வேலை கிடைக்கக்கூடிய ஒரு வாய்ப்பினை நம்முடைய மாநில அரசு உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றிகூறி, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி. (குறுக்கீடு) திரு. அரசன் ஏதோ கேட்கவேண்டும் என்கிறார். திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) பழனிசாமி, உட்காருங்கள். நான் பேசி முடித்தவுடன் நீங்கள் பேசுங்கள். மதச் சார்புடையவர்களை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிக்க வேண்டாம். ஆனால், தவறான பொருளாதார சித்தாந்தமான உலகமயமாக்கலை, தாராளமயமாக்கலை அமல்படுத்தியவர்களை ஆதரிக்கிறீர்களே அது நியாயமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான் முடியாது என்று சொல்லிவிட்டாரே அவர். மணி ஆதரிக்கமாட்டோம் என்று சொல்லிவிட்டார். திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய ஆறு மானியக் கோரிக்கைகள்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக சில கருத்துகளைச் சொல்ல நான் விழைகின்றேன்.

நேற்றையதினம் திருவாரூர் மாவட்டத்திற்கு நான் சென்றிருந்தேன். என்னுடைய தொகுதியிலேயும், அதுபோல நாகப்பட்டினம் தொகுதியிலேயும், அதேபோன்று கோவில்பட்டியிலும் பல இடங்களிலே Gas போன்ற ஒரு வாயு வெளிவந்து கொண்டிருப்பதால் மக்கள் அதிர்ச்சியும், பதற்றமும் அடைந்து கொண்டிருக்கிறார்கள். நேற்று மாவட்ட ஆட்சித் தலைவரோடு நானும் சென்று அதைப் பார்வையிட்டும், என்னவென்று கண்டுபிடிக்க முடியவில்லை. அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். பல இடங்களிலே திடீர் திடீரென்று வேகமாக பூமியிலிருந்து அனல் காற்று போன்று வருகிறது. அது என்னவென்று ஆராய்ந்து பொதுமக்களிடம் இருக்கும் அந்தப் பதற்றத்தைத் தணிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று என்னுடைய தொகுதியிலே கீழப்பாண்டி, குன்னலூர், இடையூர் போன்ற இடங்களிலேயும், அதேபோன்று வேதாரண்யம் தொகுதியிலே தானிக்கோட்டகம் என்ற இடத்திலேயும், கோவில்பட்டி தொகுதியிலே கரியபட்டி போன்ற இடங்களிலும் வந்திருப்பதாகச் செய்திகள்கூட தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன. நான் நேரடியாகப் பார்த்தேன். அதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இன்னொன்று. சமீபத்திலே பெய்திருக்கின்ற பெருமழை என்பது எல்லோருக்கும் மகிழ்ச்சி அளித்திருக்கிறது. குடிதண்ணீர்ப் பிரச்சினை



எல்லாம் தீர்வதற்கு; மிக்க மகிழ்ச்சி. இருந்தபோதிலும்கூட, விவசாயிகளைப் பெரிய பாதிப்புக்கு உள்ளாக்கியிருக்கிறது என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நாகை, திருவாரூர் மாவட்டங்களில் மட்டுமல்ல, மற்ற மாவட்டங்களிலேகூட பருத்தி விவசாயிகள் பெரிய அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதேபோல கடலை, உளுந்து பயிர் செய்த விவசாயிகளுக்கு தொடர்ந்து பெரிய அளவுக்கு இன்றைய தினத்திலே பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எல்லாம் தங்களுடைய அறிக்கைகளை வெளியிட்டிருக்கிறார்கள். அந்த விவசாயிகளைப் பாதுகாப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். பெருத்த நஷ்டம். பட்ட புண்ணிலே படுவது போன்று விவசாயிகள் தொடர்ந்து வேதனையிலே, இதுபோன்ற இயற்கைச் சீற்றத்தினால் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். அப்படிப்பட்ட பாதிப்பு, இதிலே பருத்தி விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நிச்சயமாக அரசு உதவி செய்யவேண்டுமென்று நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமீபத்திலே விவசாயத் தொழிலாளர்களுக்கான கூலி உயர்வை அறிவித்திருக்கிறார்கள். அதற்கு நன்றி சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஆறு ஆண்டுகளுக்கு மேலாக விவசாயத் தொழிலாளர்களுக்கு, ஒரு கோடிக்கு மேலாக இருக்கக்கூடிய, தமிழகத்தில் இருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்களுக்கு கூலி உயர்வு அறிவிக்கப்படவில்லை. சமீபத்திலே இங்கே அறிவித்திருக்கிறார்கள். உண்மையிலேயே நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், கூலி உயர்வை அறிவித்திருப்பதிலே, அது எல்லா மாவட்டங்களிலும் அமல்படுத்தப்பட வேண்டும்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு அறிவித்தபோதே அந்த அறிவிப்பில் இன்னொரு அறிவிப்பையும் சேர்த்து நான் வெளியிட்டேன். அதாவது நடைமுறைப்படி procedure-படி இப்போது இந்த ஊதிய உயர்வுக்கான notification அரசால் வெளியிடப்படும். இரண்டு மாத காலம் அவகாசம் கொடுக்கப்படும். அந்த இரண்டு மாத காலத்திற்குள் யாருக்கெல்லாம் ஆட்சேபனை இருக்கின்றதோ, யாருக்கெல்லாம் ஆலோசனை சொல்ல வேண்டுமென்று விருப்பம் இருக்கிறதோ, அவர்கள் தங்கள் ஆலோசனைகளையும், ஆட்சேபனைகளையும் அரசுக்குத் தெரிவிக்கவேண்டும். சட்டப்படி இதுதான் நடைமுறை. அதன் பிறகு

இறுதி அறிவிக்கை final notification ஜூன் மாதத்தில் வெளியிடப்படும். ஜூன் மாதம் முதல் இந்த ஊதிய உயர்வு அமலுக்கு வரும்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி. அதேநேரத்திலே அறிவிக்கப்பட்டிருக்கின்ற கூலியைவிட அதிகமாக இருப்பதை இது கட்டுப்படுத்தக் கூடாது. இதைவிடக் குறைவாகப் பெற்றிருக்கின்ற கூலியையும் பெறுவதற்கான அந்த G.O.–விலே தாங்கள் இணைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோன்று தமிழ்நாட்டிலே விவசாயிகளை எடுத்துக்கொண்டோம் என்று சொன்னால் 70 சதவிகிதம் விவசாயிகள். அந்த விவசாயிகளுடைய வாழ்க்கையில் வேலைவாய்ப்பை உருவாக்கவேண்டும். அந்த விவசாயிகள் வேளாண் தொழிலில் ஈடுபடவில்லையென்று சொன்னால், நகரத்தை நோக்கி படையெடுக்கின்ற நிலையைத்தான் நாம் காணமுடியும்.

*பிற்பகல் 1–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகின்றது.

**திரு. ஜி. பழனிசாமி:** ஆக, விவசாயிகளுக்கு வழங்கக்கூடிய மானியங்கள், சலுகைகள், உரங்கள்மீது வழங்கக்கூடிய சலுகைகளை மாநில அரசு கணக்கீடு இல்லாமல் வழங்கவேண்டும். அவர்கள் தேச நலனுக்காக உழைக்கக்கூடிய மனிதர்களாக இருக்கின்றார்கள். விவசாயிகள் என்பவர்கள் இன்றையதினம் பரிதாபநிலைக்கு ஆட்பட்டிருக்கின்றார்கள். ஆக, வேளாண் தொழிலுக்கு வழங்கக்கூடிய சலுகைகளை முழுமையாக இந்த அரசு வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று தமிழ்நாட்டில் குடிநீர்ப் பிரச்சினை என்பது மிக முக்கியமான பிரச்சினையாக ஆகிவிடுகின்றது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சமீபத்திலே அறிவித்தபோது நிறைய பட்டியலிட்டு அறிவித்தார்கள். அவை முறைப்படுத்துகின்ற திட்டமாக இருக்கவேண்டும். ஏதோ அழுத பிள்ளைக்கு குட்டிக் கதை சொல்வது போன்ற திட்டங்கள் இருந்தது என்று சொன்னால், நிரந்தரத் திட்டங்களுக்குத் தீர்வு காண முடியாது. அது நிரந்தரத் திட்டமாகவும், நீண்டகாலத் திட்டமாகவும் குடிநீர்த் திட்டங்கள் இருக்கவேண்டும். சமீபகாலங்களில் இந்தியாவில் மட்டுமல்ல..



**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு குடிநீருக்கென்று அறிவித்த திட்டங்கள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மீதித் திட்டங்கள் இப்போது நடைமுறையில் இருக்கின்றன. இன்னும் ஒருசில மாதங்களில் அந்த குறிப்பிட்ட தேதிக்குள் அந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுவிடும். நிறைவேற்றப்படுகின்ற திட்டங்களைத்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவிக்கின்றார்கள். மத்திய அரசிடமிருந்து மற்ற மாநிலங்களெல்லாம் குடிநீருக்காக வாங்குகின்ற பங்கில், ஒரு பங்கு போட்டால், நம்முடைய தமிழக அரசு, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 6 பங்கு அளவிற்கு கூடுதலாக செலவினம் செய்து குடிநீர்ப் பிரச்சினையை தீர்க்கின்ற வகையிலே மிகவும் முனைப்போடு செயல்பட்டு அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதிலே மிகச் சிறந்த முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. நான் அதில் குறை ஒன்றும் சொல்லவில்லை. ஆனாலும், இன்றைக்கு ஆகாரத்திற்கு, உணவுக்கு செலவழிக்கக்கூடிய அதே நிலையில், குடிப்பதற்கு தண்ணீருக்கும் செலவழிக்கவேண்டிய அவசியம் இருக்கின்றது. ஒருபுறத்திலே பார்த்தால் ஓட்டலுக்குப் போனால்கூட ஓட்டலில் உணவுச் செலவுக்கு சமமாக தண்ணீரை வாங்கித்தான் அருந்த வேண்டிய அவசியமிருக்கின்றது. ஆக, அது வசதிபடைத்தவர்களின் வாழ்க்கைக்கு உதவியாக இருக்கும். ஆனால், ஏழை எளிய, கிராமப்புறங்களிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றவர்கள் தூய்மையற்ற தண்ணீரைக் குடிப்பதன் மூலமாக தொற்று நோய் பரவி, தங்களுடைய வாழ்க்கை சீரழிகின்ற நிலைமை தமிழ்நாட்டிலே இருக்கின்றது, இந்தியாவிலும் இருக்கின்றது. அதைத் தடுப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதுதான். அதற்கு என்ன செய்யவேண்டுமென்று சொன்னால், நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கின்ற 30 மாவட்டங்களிலும் பிரதானமாக குடிநீருக்காக, எந்தத் தாலுகாவிலே, எந்த மாவட்டத்திலே, எந்தக் கிராமத்திலே, எந்தக் குக்கிராமத்திலே இப்படிப்பட்ட தண்ணீர்ப் பிரச்சினை இருக்கின்றது என்பதை ஆராய்ந்து வெள்ளை அறிக்கை வைத்து விவாதிக்க வேண்டும். அதற்கு முன்னுரிமை கொடுத்து விவாதிக்கவேண்டும். ஏதோ பிரச்சினை வருகின்ற இடத்திலே மட்டும் கவனத்தைச் செலுத்திவிட்டு நாம் விட்டுவிடுகின்றோம். மக்களுடைய பிரச்சினை வருகின்ற இடத்திலே

மட்டும் அரசாங்கமும், அதிகாரிகளும் கவனம் செலுத்துகின்றார்கள். இல்லையென்று சொன்னால், அந்தப் பிரச்சினையில் யாரும் கவனம் செலுத்துவதில்லை. ஆக, ஒட்டுமொத்தமாக தமிழ்நாட்டினுடைய குடிநீர்த் தேவையைப் பற்றி இந்த அரசாங்கம் ஒரு முழுமையான வெள்ளை அறிக்கையை வைத்து முன்னுரிமை அடிப்படையில் எதைச் செய்ய வேண்டுமென்பதை இந்த அரசு செய்யவேண்டும். அப்படி வைத்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகின்றபோதுதான், ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற வித்தியாசம் இல்லாத அளவிற்கு இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற வாய்ப்பை உருவாக்க முடியும். இதை இந்த அரசு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆக, இது ஒரு முக்கியமான திட்டமாக இருக்கிறது. குடிநீர்ப் பிரச்சினை என்பது சில இடங்களில் இருக்கின்றது, சில இடங்களில் இல்லாத போக்கு இன்று தமிழ்நாட்டில் இருந்துகொண்டிருக்கின்றது. ஏழை எளிய மக்களுக்கு எட்டாத கனியாக குடிதண்ணீர் இருக்கின்றது. மாசுபடுகின்ற தண்ணீரிலிருந்து அந்த மக்களைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் இருக்கின்றது. அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று இன்றையதினம் பார்த்தோம் என்று சொன்னால், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி பற்றி அறிவிக்கப்பட்டிருக்கின்றது. ஒரு கோடி ரூபாயாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. ரொம்ப மகிழ்ச்சியாக இருக்கின்றது. அதில் குடிநீருக்கு ரூ. 5 இலட்சம், நமது கிராமம் திட்டத்திற்கு ரூ. 10 இலட்சம், தெருவிளக்குக்கு ரூ. 5 இலட்சம், தொகுப்பு வீடுகளுக்கு ரூ. 25 இலட்சம், சிமெண்ட் சாலைகளுக்கு ரூ. 10 இலட்சம், மாணவர் விடுதிக்கு ரூ. 5 இலட்சம், இதர பணிகளுக்கு ரூ. 40 இலட்சம் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இதிலே மேலேயிருக்கின்ற ரூ. 40 இலட்சம் தவிர, பாக்கியெல்லாம் ஊராட்சி ஒன்றியம் மற்ற துறைகளுக்குக் கொடுத்துவிடலாம். இதை சட்டமன்ற உறுப்பினர் கொடுக்க வேண்டிய அவசியமில்லை. அப்படிக் கொடுத்தால் அந்தப் பிரச்சினைகளுக்கு எந்தவொரு சட்டமன்ற உறுப்பினரும் தீர்வு காண முடியாது. எங்களால் முடியவில்லை. அதிலே நடைமுறையில் சங்கடங்கள் இருக்கின்றன. ஊருக்கு ஊர், ஒவ்வொரு பஞ்சாயத்திலும் பிரச்சினை இருக்கின்றது. என்னுடைய தொகுதியில் மட்டும் நூற்றுக்கு மேற்பட்ட ஊராட்சிகள் இருக்கின்றன. ஒரு நகராட்சி இருக்கின்றது. அதேபோன்று major பஞ்சாயத்து இரண்டு இருக்கின்றது. எப்படி அந்த மக்களுடைய



பிரச்சினையைத் தீர்க்கமுடியும்? ஆக, இதையெல்லாம் பார்த்தோம் என்று சொன்னால், ஊராட்சி அமைப்புகள், குடிநீர் வாரியம் போன்ற அமைப்புகளிடம் விட்டுவிடலாம்.

பிற்பகல் 1–35

ஆக, இந்த இதர பணிகள் என்பதை மட்டும், ரூ. 40 இலட்சத்தை மட்டும், சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுத்தால், அவர்களிடத்திலே வருகின்ற கோரிக்கைகளைப் பெற்று நிறைவேற்றுவதற்கு ஒரு வாய்ப்பு இருக்கும். இதை அரசு பரிசீலனை செய்ய வேண்டும் என்று—நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளிலே முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** நான் முடித்துக்கொள்கிறேன் அதேபோன்றுதான் இன்றைக்கு என்னுடைய தொகுதியிலே இருக்கிற பிரச்சினையைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நாகை, திருவாரூர் மாவட்டம், தஞ்சாவூர் மாவட்டம் ஆகியவை இன்றைக்குக் கல்வித் தகுதியிலே, கல்வி வளர்ச்சியிலே குறைந்திருக்கிற மாவட்டங்கள். அந்த விகிதாச்சாரத்திலே குறைந்திருக்கிற மாவட்டங்கள் அந்த மாவட்டங்கள். அடுத்ததாக, தமிழ்நாட்டிலே இருக்கிற மாவட்டங்களிலே தருமபுரி ஒரு மாவட்டம். இந்த மாவட்டத்திலே கல்வி வளர்ச்சி என்பது மிகக் குறைவாக இருக்கிறது. எங்கள் மாவட்டத்திலே, ஏதோ திருவாரூரிலே மட்டுமே ஒரு கலைக் கல்லூரி இருக்கிறது. ஆக, வேதாரண்யம், திருத்துறைப்பூண்டி, பட்டுக்கோட்டை, இந்தப் பகுதிகளிலே எந்தக் கலைக் கல்லூரியும் கிடையாது. ஆனால், சட்டமன்ற உறுப்பினருக்குக் கொடுத்திருக்கிற ஒரு கோடி ரூபாயை நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள். என்னுடைய தொகுதியிலே ஒரு கல்லூரியை ஆரம்பித்துக் கொடுங்கள். அது எனக்காக அல்ல. அங்கே இருக்கிற மாணவர்கள் நூற்றுக்கு நூறு பேர் ஆதிதிராவிடர்களாகவும், பிற்பட்டவர்களாகவும் இருக்கிறார்கள். அந்த வகையிலே அந்தக் கோரிக்கையை நீங்கள் நிறைவேற்றித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகிறபோதும், மற்றவர்களும் சொன்னார்கள். இன்னொன்றை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிகளில் தேர்தல் எல்லாம் இப்போது நடைபெற இருக்கிறது. சென்னையைப்

பார்த்தோம் என்றால், வார்டு தேர்தல் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அநேகமாக வருகிற தேர்தலிலேகூட பார்த்தோம் என்று சொன்னால், அங்கே எப்போது தேர்தல் நடந்தாலும் சரி, ஒரு கலவரத்தோடுதான் தேர்தல் நடந்து முடிகிறது. ஆக, அதற்குரிய பாதுகாப்பு இல்லாத ஒரு சூழ்நிலைதான் இருக்கிறது. வாக்காளர்களே அச்சப்படுகிறார்கள். போலி வாக்கு அளிக்கப்படுவதாகப் புகார்கள் வந்துகொண்டே இருக்கின்றன. ஆக, ஒரு நீதியான முறையிலே அந்தத் தேர்தலை நடத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து மத்திய அரசைப்பற்றி. மாநில அரசுக்கு எந்த ஒரு கோரிக்கை வைத்தாலும் அதை மத்திய அரசிலேயே நீங்கள் கேளுங்கள், மத்திய அரசிடத்திலே அனுமதியைப் பெற்றுத் தாருங்கள் என்று மத்திய அரசின்மீது பழியைச் சுமத்திவிட்டு மாநில அரசு தப்பித்துக்கொள்ளக் கூடாது. (குறுக்கீடு) இல்லை. மாநில அரசு தப்பித்துக்கொள்ளக் கூடாது. ஆக மத்திய அரசு நீங்கள் என்னென்ன கொடுத்தது... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு, குறிப்பாக இந்த மாநில அரசு, எப்போதுமே தப்பித்துக்கொள்ள முயற்சி செய்வதில்லை. ஆனால், நம்முடைய இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் அப்படி இருக்கிறது. மத்திய அரசிடம்தான் அதிகாரங்கள் குவிந்திருக்கின்றன. மாநில அரசுக்கு உள்ள அதிகாரங்கள் மிகமிகக் குறைவானதே ஆகும். அதனால்தான் மாநில அரசின் அதிகார வரம்பிற்குள் என்னென்ன இருக்கிறதோ எல்லாவற்றையும் செய்துவிட்டு, முடியாதபட்சத்தில் மத்திய அரசு அனுமதி வழங்க வேண்டும் என்று இருந்தால்தான் மத்திய அரசு அனுமதியை நாங்கள் கோருகிறோம்.

**திரு. ஜி. பழனிசாமி:** முடித்துவிடுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னதற்கு நன்றி. எங்களைப்போன்ற இடதுசாரிக் கட்சிகள், கம்யூனிஸ்ட் கட்சிகள், குவிந்திருக்கிற அதிகாரங்களை மாநில அரசுகளுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும் என்றுதான் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

அதுபோன்று, புதிய பொருளாதாரக் கொள்கையாக இருந்தாலும் சரி, இன்றைக்கு காங்கிரஸ் கட்சியினுடைய, மத்தியிலே இருக்கக்கூடிய மன்மோகன் சிங் அவர்களுக்கு ஆதரவு அளித்திருப்பதுகூட ஒரு குறைந்தபட்ச செயல்திட்டத்தின் மூலமாகத்தான் ஆதரவளித்துக்



கொண்டிருக்கிறோம். ஆக, உலகப் பொருளாதாரமாக இருந்தாலும் சரி, தாராளமயமாக இருந்தாலும் சரி, தனியார்மயமாக இருந்தாலும் சரி, ஆக மக்களுக்கு விரோதமான எந்தக் கொள்கை வந்தாலும், எதிர்க்கிற கட்சிகளாகத்தான் நாடாளுமன்றத்திலே பகிரங்கமாக எதிர்த்துக் கொண்டிருக்கிறோம். அதைத்தான் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

இதேபோன்றுதான் ஏற்கெனவே இருந்த பாரதிய ஜனதா கட்சியினுடைய ஆட்சிக் காலத்தில், ஏதோ மாநிலங்களுக்கெல்லாம் பெரிய அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதைப் போன்று ஒரு காட்சியை அளித்தார்களேதவிர, அநேகமாக புதிய பொருளாதாரக் கொள்கையில் முழுமையாக 1200 பொருள்களை இந்தியாவிலே நுழையவிட்டு, இந்தியாவினுடைய முழு வர்த்தகத்தையும் சுரண்டக்கூடிய அளவுக்கு பேரபாயத்தை உருவாக்கியது பாரதிய ஜனதா கட்சிதான். (குறுக்கீடு) அப்போது எல்லாம் நீங்கள்தான் கூட்டணியிலே இருந்தீர்கள்; அந்தக் கட்சிக்கு ஆதரவு கொடுத்துக் கொண்டிருந்தீர்கள். (மணியடிக்கப்பெற்றது) அப்போதெல்லாம் அதைக் கேட்க முடியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி (குறுக்கீடு) பழனிசாமி, இன்னும் ஒரு மணித்துளியிலே முடியுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** ஆகையாலே, (குறுக்கீடு) ஏன் நீங்கள் தேர்தலிலே கூட்டு வைக்காமலா இருந்தீர்கள்? கூட்டு வைக்காமலா வந்தீர்கள்? (குறுக்கீடு) அதெல்லாம் இல்லை. தேர்தலிலும்தான் நீங்கள் கூட்டு வைத்திருந்தீர்கள்; பாரதிய ஜனதா கட்சியோடு நீங்கள்தான் கூட்டு வைத்திருந்தீர்கள். நாங்கள் வைக்கவில்லை. (குறுக்கீடு) அது, தி.மு.க.–வைக் கேட்டிருக்கலாம். தி.மு.க. வைத்திருக்கலாம். தி.மு.க. கூட்டணி வைத்திருக்கலாம். அது யாராக இருந்தாலும் இடதுசாரிக் கட்சியினுடைய கொள்கையில் உறுதியாக இருந்து, மாநில உரிமைகள் பறிக்கப்படாமல் மாநிலத்திற்கு உரிய நிதியை வழங்க வேண்டும் என்பதிலே தொடர்ந்து வலியுறுத்தக்கூடிய கட்சிகள் இடதுசாரி கட்சிகள் என்பதைச் சொல்லி வார்த்தையை நிறைவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்தில் உரையாற்றுகிற வாய்ப்பினைத் தந்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத்

தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) அதைத்தான் சொல்கிறேன், சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சகோதர நிருபர்களுக்கு என்மீது இருந்த ஐயம் எல்லாம் போய்விட்டது போலிருக்கிறது. காலையிலே என்னோடு உணவு அருந்தினார்கள். அவர்கள் கேட்கவில்லை; எந்தக் கட்சியின் சார்பாக உரையாற்றப் போகிறீர்கள் என்று கேட்கவில்லை.

பிற்பகல் 1–40

சகோதரர் ராஜா அவர்கள் கேட்கிறார்கள். என்னுடைய உரையிலேயிருந்துதான் அவர் தெரிந்துகொள்ள வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எந்த ராஜா? இந்த ராஜாவா, அந்த ராஜாவா?

**திரு. ப. அரசன்:** பா.ம.க. ராஜா! அவருக்குப் புரிந்துபோய்விட்டது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு அந்தத் திரைப்படத்தினுடைய பெயர் ஞாபகம் இல்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் தன்னுடைய குரலாலேயே அந்தப் படத்திலே ஒரு பாட்டு பாடி இருக்கிறார்கள். (குறுக்கீடு) அடிமைப் பெண்ணா? வாழ்க. அதிலே 'அம்மா என்றால் அன்பு' என்று அவர்கள் முதல் வரியிலே பாடுவார்கள். இன்றைக்கு அவர்கள் அதற்கு இலக்கணமாகத் திகழ்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்லிக்கொள்வதிலே நான் பெருமையடைகின்றேன். தமிழகத்திலே இருக்கின்ற அனைத்துத் தரப்பினருக்கும் கடையேழு வள்ளல்களுக்குப் பிறகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 8 ஆம் வள்ளலாகத் திகழ்ந்தார்கள். அந்த எம்.ஜி.ஆர். அவர்களுடைய வாரிசாக வந்திருக்கின்ற நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்துத் தரப்பினருக்கும் இன்றைக்கு பல்வேறுவிதமான சலுகைகளை, நல்ல அறிவிப்புகளைத் தந்திருக்கிறார்கள். இதிலேயும்கூட ஒருசில சகோதரர்கள், என்னிடத்திலே 2,3 நாட்களாக சில சலுகைகள் தரவில்லை என்று சொல்லி இருக்கிறார்கள். அதை நான் மாண்புமிகு முதல்வருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். அதிலே முதலாவது, நம்முடைய போக்குவரத்துத் தொழிலாளர்கள். இந்த வம்பைக்கூட இழுத்துவிட்டது நம்முடைய மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்தான். நேற்றைக்கு அவர்கள் என்னுடைய தொகுதியிலே ஓர் ஓட்டுனருடைய திருமணத்திற்குத் தலைமை தாங்க வந்தார்கள். இன்னொரு அரசு போக்குவரத்துக் கழகத்தினுடைய நடத்துனருடைய திருமணத்திற்குத் தலைமை ஏற்க வந்தார்கள். இருவரும் அனைத்திந்திய அண்ணா தி.மு.க.–வைச் சார்ந்தவர்கள். அந்தத் திருமணங்களுக்கு நானும் சென்றிருந்தேன். என்னுடைய பெயரைக்கூட வாழ்த்துரையிலே போட்டிருந்தார்கள். அங்கே அநேகமாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தொழிற் சங்கத்திலே பணியாற்றுகின்ற சகோதரர்கள் எல்லாம் இரண்டு திருமணங்களுக்கும் வந்திருந்தார்கள். அவர்கள் எல்லாம் சொன்னார்கள். எங்களையும் கொஞ்சம் முதல்வருடைய கடைக்கண்ணிலே பார்த்து கொஞ்சம் உதவி செய்யச் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். அதை நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.



அதைப்போல (குறுக்கீடு) இல்லை, இல்லை, நீங்கள் நிறைய விளக்கம் சொல்லிவிட்டீர்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதாவது சட்டப் பிரச்சினையிலே மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதை நான் முழுவதுமாக ஏற்றுக்கொள்கின்றேன். ஏதோ முடிந்தால் கொஞ்சம் மனிதாபிமானரீதியாக கொஞ்சம் சிந்தித்துப் பார்த்து இரக்க உணர்வோடு செய்யுங்கள்; கேட்கிறவர்கள் நமது சகோதரர்கள்தான். அதை நேற்று கேட்டவர்கூட ஏற்கெனவே நம்மோடு இரண்டறக் கலந்து நம்மோடு ஜெயிலில் இருந்தவர்; நேற்று வந்து பார்த்தவர்களில் பாதிப் பேர் நம்மோடு ஜெயிலில் இருந்தவர்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்காககூட அவர்கள் சிறையிலே இருந்தவர்கள். அவர்கள் சொன்ன கோரிக்கை. நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

அதைப்போல மின் துறையிலே பணியாற்றுகிறவர்களும் சில கோரிக்கைகளைச் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, அந்த இரண்டு துறைகளையுமே நீங்கள்தான் வைத்திருக்கிறீர்கள். மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் அந்தக் கோரிக்கைகளைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

இன்றைக்குக் காலையிலே என்னுடைய புதுக்கோட்டை நகரத்திலேயிருந்து காவல் துறையிலே பணியாற்றுகின்ற ஒருசில சகோதரர்கள் வந்தார்கள். 1996–ல் காவல் துறையிலே துப்புரவுப் பணியாளர்களாக 900 ரூபாய் சம்பளத்திலே எங்களை நியமித்தார்கள். இப்போது எங்களுடைய படிப்பிற்குத் தகுந்தாற்போல் promotion- பதவி

உயர்வு தரவேண்டும் என்று கேட்டு அவர்களும் ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அதையும் நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

மனிதனுக்கு சுயநலம் இல்லாமல் இருக்கக்கூடாது. அந்த வகையிலே என்னுடைய சுயநலமான ஒரு கோரிக்கையை நான் மாண்புமிகு முதல்வருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். எங்களுடைய முரளிக்கு பம்பர் லாட்டரி அடித்தது. அதுமாதிரி என்னுடைய தொகுதிக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிறைய செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன். 2001 ஆம் ஆண்டு இந்த ஆட்சி பொறுப்பேற்றபோது எவ்வளவு நிதிச் சிக்கல்கள் இருந்தன என்பதை நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு முறையும் மிகத் தெளிவாக, தெள்ளத்தெளிவாக விளக்கி இருக்கிறார்கள். உண்மையிலேயே மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களையும், அதோடு அவர்களோடு பணியாற்றுகின்ற அதிகாரிகளையும் உண்மையிலேயே இந்த நேரத்திலே பாராட்ட வேண்டும்.

*பிற்பகல் 1–45*

அந்த நிதிச் சிக்கல்களையெல்லாம் தீர்த்து, நிதிக் கஷ்டங்களையெல்லாம் போக்கி, இன்றைக்கு தமிழகத்தினுடைய நிதி நிலைமையை இந்தியாவிலேயே சிறந்த நிதி நிலைமை என்கிற (மேசையைத் தட்டும் ஒலி) ஓரிடத்திற்குக் கொண்டுவந்திருப்பதற்குக் காரணம் இந்த ஆட்சி. அதற்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த ஆட்சி ஏற்பட்டதற்குப் பின்னாலே-சென்ற ஆட்சியிலேதான், நான் குறையாகக்கூட சொல்லவில்லை; மாண்புமிகு சகோதரர்களெல்லாம் கோபித்துக்கொள்ள வேண்டாம். சென்ற ஆட்சியிலே மணல் அள்ளுவதிலே, நீங்கள் குறைந்த வருமானத்தைப் பெற்றிருக்கிறீர்கள். இன்றைக்கு நல்ல சீரிய நிர்வாகத்திலே இலாபத்தைப் பெற்றிருக்கிறார்கள். அதைப்போல, TASMAC, சாராயக் கடை நடத்தியதிலே I.M.F.L. (Indian Made Foreign Liquor) மதுபானக் கடைகள் நடத்தியதிலே ஏறத்தாழ ஆயிரத்து சொச்சம் கோடி ரூபாய் அதிக வருமானத்தை இந்த அரசு ஈட்டியிருக்கிறது. அதைப்போல, பத்திரப் பதிவிலே இலாபம் பெற்றிருக்கிறது. இப்படி ஒவ்வொரு துறையிலேயும், இந்த அரசு மிகப் பெரிய சாதனைகளைச் செய்திருக்கிறது. அதிலே, நம்முடைய வணிக வரி வசூல் மன்னன், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், அவருக்கு ஒரு பட்டம். 8,000



கோடி ரூபாய்க்கு மேலே ஏற்கெனவே பாக்கியிருந்தது. இப்பொழுது இருக்கிறதையும் வசூல் செய்து, 8,000 கோடி ரூபாயில் 5,000 கோடி ரூபாய்க்குமேல் வசூல் செய்து இந்த அரசாங்கத்திற்கு அதை நிதியாகச் சேர்த்து, அது சத்துணவிற்காக, அரசு ஊழியர்களுக்காக, மக்களுடைய நலத் திட்டங்களுக்காகப் பயன்படுத்தியிருக்கிறார்கள். இதை நான் உண்மையிலேயே பாராட்டியாக வேண்டும். அதுமட்டுமல்ல; ஏற்கெனவே அரசு பெற்ற கடனை திருப்பிச் செலுத்தியிருக்கிறார்கள். உலக வங்கிக்கு திருப்பிச் செலுத்தியிருக்கிறார்கள். NABARD வங்கிக்கு திருப்பிச் செலுத்தியிருக்கிறார்கள். HUDCO வங்கிக்கு திருப்பிச் செலுத்தியிருக்கிறார்கள். இன்ன பிற நிறுவனங்களுக்கெல்லாம் திருப்பிச் செலுத்தி, இன்றைக்கு அந்த நிறுவனங்களெல்லாம், இங்கு யாருக்கு நிதியுதவி செய்கிறார்களோ இல்லையோ, தமிழகத்திலே இருக்கிற ஆட்சிக்கு நாங்கள் நிதியுதவி செய்வோம் (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்லுகிற அளவிற்கு, இன்றைக்கு நிதிநிலைமையை சீராக்கியிருக்கிறார்கள் என்பதற்காக நான் பாராட்டுகிறேன்.

அதைப்போல, அந்நிய முதலீடுகளை, சில பேர் பெரிய கண்ணாடியைப் போட்டுக்கொண்டு, தேடிப் போய்க் கொண்டிருக்கிறார்கள். ஆனால், தமிழகத்தை நோக்கி அந்நியச் செலாவணி வந்துகொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையோடு கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்குக் காலையிலேகூட, நம்முடைய சகோதரி யசோதா அவர்கள் உரையாற்றுகிறபோது சொன்னார்கள். என்னுடைய தொகுதியிலே பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய்க்கு தொழிற்சாலைகளெல்லாம் வருகின்றன என்று அவர்கள் சொன்னார்கள். அவரை அறியாமலேயே இந்த அரசை அவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். அதற்காக, நான் சகோதரி அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இந்த ஆட்சிக்கு அந்நிய முதலீடு தானாகத் தேடி வருகிறது. அந்த அளவிற்கு இந்த அரசு, அந்நிய முதலீடு தேடிவருகிற அளவிற்கு இந்த அரசு அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஒரு மாதிரியாக திரும்பிப் பார்க்கிறார்கள். (சிரிப்பு) பல இடங்களிலே அந்நிய முதலீடுகளை, வெளிநாட்டிலே இருப்பதுபோல செய்வதற்கு சிரமப்படுகிற நேரத்தில், கஷ்டப்படுகிற நேரத்தில், தமிழகத்திலே ஆட்சியிலே இப்பொழுது அளிக்கிற ஒத்துழைப்பைப் பெற்றுக்கொண்டு, இங்கே முதலீடு செய்வதற்கு வருகிறார்கள் என்பதற்காக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்திலே, மாண்புமிகு பேரவைத்

தலைவர் அவர்களே, நீங்கள் அறிவீர்கள். இசை முரசு நாகூர் அனிபா என்று ஒரு பெரிய பாடகர் இருந்தார். அவர் அந்தக் காலத்திலே, நம்முடைய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைப் பற்றிப் பாடுவார்.

"ஈந்து சிவந்தது, எம்.ஜி.ஆர். இருகரமே"

என்று பாடுவார். அதுமட்டுமல்ல,

"மின்னுகின்ற பொன்னைப்போன்ற நிறத்தைப் பெற்றவர்,
மூடிவைக்கத் தெரியாத கரத்தைப் பெற்றவர்"

என்று எம்.ஜி.ஆர். அவர்களைப் பற்றிப் பாடுவார். அதைப்போல, நம்முடைய முதல்வர் அவர்கள் மூடிவைக்கத் தெரியாத கரத்தைப் பெற்றவர்கள் என்று சொல்லிக்கொள்ளுவதிலே, (மேசையைத் தட்டும் ஒலி) தம்முடைய ஆற்றலால், தம்முடைய மதிநுட்பத்தால், இன்றைக்கு தமிழகத்தினுடைய நிதிநிலைமையை மிகவும் சீரமைத்திருக்கிறார்கள். அதைப்போல, இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலே மட்டும் அவர்கள் சத்துணவு அமைப்பாளர்களுக்கு, அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு, கட்டடத் தொழிலாளர்களுக்கு, அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு, காவல் துறை நண்பர்களுக்கு, 97 இலட்சம் பள்ளிக் குழந்தைகளுக்கு இலவசப் பாடப் புத்தகம், ஆதிதிராவிட மாணவிகளுக்கு இலவச சைக்கிள், பிற்படுத்தப்பட்ட மாணவிகளுக்கு இலவச சைக்கிள் என்று பல்வேறு சலுகைகளை அளித்திருக்கிறார்கள்.

பிற்பகல் 1-50

அதைப்போல, (மணியடிக்கப்பெற்றது) கடைசியாக வருகிறேன் அண்ணே. ஆசிரியர்கள் நியமனத்திலே நிறைய செய்திருக்கிறார்கள். 15 ஆண்டுக் காலமாக கல்லூரியிலே விரிவுரையாளர்கள் நிரப்பப்படாமல் இருந்த நிலைமையை மாற்றி இன்றைக்கு 800 கல்லூரி விரிவுரையாளர்களை நிரப்புவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட இந்த ஆட்சியை நான் பாராட்டுகிறேன். அதிலேயும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பாட்டு ஒன்றை நான் சொல்லிக் காண்பிக்க வேண்டும். மலைக்கள்ளன் படத்திலே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பாடுவார்.

"தெருவெங்கும் பள்ளிகள் கட்டுவோம்,
கல்வி தெரியாத பேர்களே இல்லாமல் செய்வோம்"

என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பாடுவார். அந்தப் பாட்டிற்கிணங்க இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்திலே எந்தக்



கிராமத்திலேயும் தொடக்கப் பள்ளிகள் இல்லை, நடுநிலைப் பள்ளிகள் இல்லை, உயர்நிலைப் பள்ளிகள் இல்லை, மேல்நிலைப் பள்ளிகள் இல்லை என்கிற நிலைமையை உருவாக்கியிருக்கிறார்கள் என்பதற்காக நான் இன்றைக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லாமல் இல்லை.

**திரு. ப. அரசன்:** இல்லை என்கிற நிலைமை இல்லாமல் ஆக்கியிருக்கிறார்கள் என்பதற்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன். எல்லோருக்கும் கொடுத்ததைப் போல, சட்டமன்ற உறுப்பினர்களாகிய எங்களுக்கும் ஏற்கெனவே அளித்த உறுதிமொழியை ஏற்று நீங்கள் சம்பள உயர்வைத் தந்திருக்கிறீர்கள். படி உயர்வைத் தந்திருக்கிற உங்களுக்கு அதற்காக மீண்டும் ஒரு முறை நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருசில கருத்துகளை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இந்தக் கேள்வி நேரத்தை இரத்து செய்வது என்பது அவ்வளவு சரியாக இல்லை. கூடியவரைக்கும் கேள்வி நேரம் இருப்பதற்குத் தாங்கள் முயற்சிக்க வேண்டும்.

அதைப்போல, சட்டமன்றங்கள் 100 நாட்கள் கூட்ட வேண்டுமென்று நீங்களேகூட அந்தப் பேரவைத் தலைவர்கள் மாநாட்டில் ஏற்றுக்கொண்டு வந்திருக்கிறீர்கள். ஏனென்று சொன்னால், விவாதங்கள் நல்ல பலனைத் தரும். ஒருசில நேரத்திலே நம்முடைய விவாதங்கள் வேறு திசையை நோக்கிப் போனாலும், கூடியவரைக்கும் விவாதங்கள் மிகச் சிறந்த பலனைத் தரும். அதற்கு ஓர் உதாரணம், காலையிலே நம்முடைய சிவகங்கை மத்திய கூட்டுறவு வங்கி மூடப்பட்ட, அதுவும் அந்த சிவகங்கை மாவட்டத்திலே மத்திய நிதியமைச்சர் இருக்கிறபொழுதே முடக்கப்பட்டதை மிகத் தெளிவாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியெல்லாம் சொல்கிறபோது கொஞ்சம் நேரம் அதிகமாகத் தேவைப்படுகிறது. சிவகங்கை மத்திய கூட்டுறவு வங்கியை மூடியது என்பது விவசாயிகளுடைய வயிற்றிலே மண்ணை அள்ளிப் போடுவதைப் போல அந்தச் செயலை மத்திய நிதியமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பொதுவாக, ஒரு வங்கி சரியாக செயல்படவில்லையென்று சொன்னால், என்னுடைய அனுபவத்திலே

நான் பார்த்திருக்கிறேன். அந்த வங்கிக்கு Notice அனுப்ப வேண்டும். அந்த வங்கியிலேயிருந்து அந்த Notice–க்கு பதிலைப் பெற வேண்டும். அதற்குப் பிறகு, நீங்கள் இன்ன தவறைச் செய்திருக்கிறீர்கள், அதைக் களைவதற்கு நீங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறீர்களா என்று கேட்க வேண்டும். இந்த நடவடிக்கைகளையெல்லாம் செய்யாமல், ஏதோ ஒரு காரணத்தை மனதிலே வைத்துக்கொண்டு சிவகங்கை மாவட்ட மக்களின், சிவகங்கை மாவட்ட விவசாயிகளின் வயிற்றிலே அடிக்கும் வகையில் மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் அவர்கள் இன்றைக்கு ஒரு பெரிய தவறான காரியத்தைச் செய்திருக்கிறார்கள். அதற்கான விளக்கத்தைத் தருகிறபோது நமக்கு நேரம் அதிகமாகத் தேவைப்படுகிறது. ஆகவே, சட்டமன்றத்தை 100 நாட்கள் நடத்துவதற்கு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மீண்டும் ஒரு முறை (குறுக்கீடுகள்) நமது கிராமம் பற்றிச் சொல்ல வேண்டுமா? எல்லோரும் சொல்கிறார்கள்; நமது கிராமம் என்பது எங்களுக்குக் கொடுத்துவிட்டால் அதைத் திருப்பி கலெக்டர் அந்த அதிகாரத்தை எடுத்துக்கொள்கிறார் என்று சொல்கிறார்கள். எங்களுக்குக் கொடுத்துவிட்டு பிறகு, திருப்பி கலெக்டருக்குப் போவது என்பது, R.D.L.A. Minister அதைக் கொஞ்சம் பார்க்க வேண்டும். நீங்கள் இந்தச் சட்டம் போடுவதற்கு முன்பே ஒரு தடவை...

**மாண்புமிகு திரு. கே.பி அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தக் கிராமம் மட்டும்தான் எடுத்துக் கொள்ளப்படுகிறது. (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தச் சட்டமன்ற உறுப்பினரையும் மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்பதே இல்லை. அவர்களாகவே அதை எடுத்துக்கொள்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரசன், பேசி முடித்துவிடுங்கள். இரண்டு மணித்துளிகளில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. லா. சந்தானம்:** அமைச்சர் குறிப்பிடுவதுபோல் அல்லாமல், அந்த நமது கிராம நிதியினை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உடன்பாடு இல்லாமலே அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே எடுத்துக்கொள்கிறார்கள். இதிலே எங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவர் கொடுத்த நிர்வாக அனுமதி என்னிடத்திலே இருக்கிறது. அதிலே, சட்டமன்ற உறுப்பினர்கள் நிதியிலிருந்து



எடுத்துக்கொள்ளப்பட்டது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதா என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் இதை அளிக்கிறேன்.

*(உறுப்பினர் ஒரு நகலை மாண்புமிகு முதலமைச்சரிடம் அளித்தார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரசன் இரண்டு மணித் துளிகளில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது நிச்சயமாக இப்போதே நீங்கள் அவையில் பார்த்திருப்பீர்கள், எப்படிச் சட்டமன்ற உறுப்பினர்களுடைய உணர்வுகள் பிரதிபலித்தது என்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அதைப் போலவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு நல்ல திட்டத்தை அறிவித்திருக்கிறீர்கள், அதிலே எங்களுக்கு மாற்று கருத்தில்லை. 1991–க்கு முன்னாலே கட்டப்பட்ட வீடுகள் பழுதடைந்து போய் இருக்கின்றன, அவற்றுக்கு 25 இலட்சம் ரூபாய் ஒதுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், 25 இலட்சம் ரூபாய் என்பது அதற்குப் போதாது. என்னுடைய தொகுதியிலே எல்லாம் நான் இரண்டு நாட்கள் இப்போது ஊரிலே இருக்கிறபொழுது ஊராட்சி ஒன்றிய ஆணையரிடத்திலே கேட்கிறபொழுது, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலேயும் 500 வீடுகள் 600 வீடுகள், 700 வீடுகள் – எனக்கு மூன்று ஊராட்சி ஒன்றியம், இன்னொன்று குட்டி ஊராட்சி. (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடம், முடித்துவிட்டேன், முடித்துவிட்டேன்.

பிற்பகல் 1–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித்துளியில் முடித்துவிடுங்கள்.

**திரு. ப. அரசன்:** ஆகவே, அந்த 25 இலட்சம் ரூபாய் என்பது போதாத தொகையாக இருக்கிறது. ஆகவே, அதற்கும் ஏதாவது வழி செய்யமுடியுமா என்பதைச் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, நல்லாட்சி நடத்துகிற, சீர்மிகு ஆட்சி நடத்துகிற, ஏழை எளியவர்களை வாழ வைக்கிற, பாட்டாளி வர்க்கத்தினரை வாழவைக்கிற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, மீண்டும் என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்து, நன்றி தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், பதிலுரையை இப்போது வைத்துக்கொள்ளலாமா அல்லது மதியத்திற்கு மேல் வைத்துக்கொள்ளலாமா?

[2005 ஏப்ரல் 11

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மதியத்திற்கு மேல் வைத்துக் கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் இன்று மாலை 4–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–56 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பிற்பகல் 4–30

பிற்பகல் 4–30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

## 7. மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும் – தொடர்ச்சி

| | | | |
|---|---|---|---|
| **(அ)** | **கோரிக்கை எண் 1** | – | **மாநிலச் சட்டமன்றம்** |
| **(ஆ)** | **கோரிக்கை எண் 2** | – | **ஆளுநர் மற்றும் அமைச்சரவை** |
| **(இ)** | **கோரிக்கை எண் 15** | – | **நிதித் துறை** |
| **(ஈ)** | **கோரிக்கை எண் 35** | – | **திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை** |
| **(உ)** | **கோரிக்கை எண் 37** | – | **பொதுத் துறை** |
| **(ஊ)** | **கோரிக்கை எண் 48** | – | **ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்** |

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய பதிலுரை.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலச் சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, நிதித் துறை, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, பொதுத் துறை மற்றும் ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் ஆகியன பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துகளை அவையிலே எடுத்து வைத்திருக்கிறார்கள்.



2005 ஏப்ரல் 11] [திரு. சி. பொன்னையன்]

இதிலே தேர்தல் என்ற பிரிவு பற்றி சிலவற்றைக் கூற விழைகின்றேன். தமிழ்நாட்டிலே இருக்கின்ற 39 சட்டமன்றத் தொகுதிகளில் (குறுக்கீடு) மன்னிக்க வேண்டும். தமிழ்நாட்டில் இருக்கின்ற 39 சட்டமன்ற தொகுதிகளில் (குறுக்கீடு) இல்லை, இல்லை, சட்டமன்றம்தான், கவனியுங்கள். 1-1-2005 ஆம் நாளை தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியலை Special Intensive Revision என்று சொல்லக்கூடிய சிறப்பு தீவிர முறை திருத்தத்தின் அடிப்படையிலும், எஞ்சி இருக்கின்ற 195 சட்டமன்றத் தொகுதிகளில் Special Summary Revision என்ற சிறப்பு சுருக்க முறை திருத்தத்தின் அடிப்படையிலும், இந்தப் பணியினை ஒரு குறிப்பிட்ட கால கட்டத்திற்குள் மேற்கொள்ள வேண்டுமென்று இந்தியத் தேர்தல் ஆணையம் ஆணையிட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. இந்த Special Intensive Revision என்ற அடிப்படையில் Fresh roll enumeration by door to door verification என்ற முறையில் வீடு வீடாகச் சென்று துல்லியமாக ஆய்ந்து புதிய வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்படும். இந்தப் பணி 39 சட்டமன்றத் தொகுதிகளில், நகர்ப்புறங்களை உள்ளடக்கிய சட்டமன்றத் தொகுதிகளில் மேற்கொள்ளப்படும்.

அதையடுத்து, அதையொட்டி மீதம் உள்ள 195 சட்டமன்றத் தொகுதிகளில் வீடு வீடாகச் சென்று வாக்காளர் பட்டியலை சரி பார்த்து, Updating the existing roll by door to door verification என்ற அடிப்படையில் ஆங்கு ஏற்கெனவே இருக்கின்ற, நடைமுறையில் இருக்கின்ற வாக்காளர் பட்டியலில் நீக்கம், சேர்த்தல் ஆகியவை மேற்கொள்ளப்பட்டு, அவை ஓர் ஒழுங்கு நியதிக்குக் கொண்டுவரப்படும். இப்படிப்பட்ட அணுகுமுறையை, வாக்காளர் பட்டியலில் குளறுபடிகள் இருக்கக்கூடாது, கடந்த காலத்தில் 12 இலட்சத்திற்கு மேல் வாக்காளர் பட்டியலில் இடம்பெற வேண்டியவர்கள் இடம் பெறாமல் போய்விட்டதும், 18 இலட்சத்திற்கு மேல் வாக்காளர் பட்டியலில், வீடுகளில் அந்த இடங்களில் இல்லாதவர்கள் சேர்க்கப்பட்டதும், இதுபோன்ற குறைகள் எல்லாம் இருப்பதை இந்திய தேர்தல் ஆணையத்திற்குச் சுட்டிக்காட்டிய பிறகு, இப்படிப்பட்ட Special Intensive Revision and Special Summary Revision ஆகிய செயல்முறைகளை நடைமுறைப்படுத்த தேர்தல் ஆணையம் ஆணையிட்டிருக்கிறது. இந்தப் பணி முடிந்த பிறகு வாக்காளர் பட்டியல் சரியான பட்டியலாக, எவர் பெயரும் விடுபடாத அல்லது இல்லாதவர் பெயர் சேர்க்கப்படாத பட்டியலாக அமையும் என்று இந்தியத் தேர்தல் ஆணையம் நம்புகிறது. அந்த நம்பிக்கையின் அடிப்படையில் இந்தப் பணி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. தற்போது ஒட்டுமொத்த வாக்காளர்கள் 4 கோடியே 72 இலட்சம் பேர் இருக்கிறார்கள்.

பிற்பகல் 4–35

இதிலே 3 கோடியே 55 இலட்சம் பேருக்கு இதுகாறும் புகைப்பட அடையாள அட்டை தரப்பட்டிருக்கின்றது. இதிலே, இன்னும் ஒரு கோடியே 17 இலட்சம் பேருக்கு புகைப்பட அடையாள அட்டை தரவேண்டிய நிலையில் இருக்கிறது. 31–08–2005–க்குள் வாக்காளர் பட்டியல் திருத்தப் பணி முழுமையாக நிறைவேறி, அதற்குப் பிறகு எஞ்சியுள்ள இந்த ஒரு கோடியே 17 இலட்சம் வாக்காளர்களுக்கும் வாக்காளர் புகைப்படத்துடன் சேர்ந்த வாக்காளர் அடையாள அட்டை தருகின்ற பணி மேற்கொள்ளப்படும். மக்கள், வாக்காளர் பெருங்குடி மக்கள், இந்தக் காலக்கட்டத்தில் தேர்தலில் தவறுகள் நடப்பதைத் தடுக்க உதவுகிற வகையில், மக்கள் அனைவரும் முன்வந்து தங்களுக்கு 31–08–2005–க்குப்பிறகு மேற்கொள்ளப்படவிருக்கின்ற அந்தச் செயல் திட்டத்தில், அவர்கள் புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியலில் அவரவர் பெயர் இடம் பெறுவதற்கு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பொதுத் துறை குறித்த சில தகவல்களை நான் இங்கே தெரிவிக்க விழைகின்றேன். ஏற்கெனவே பேசிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் உயர்திரு. இராஜரெத்தினம் அவர்கள் கூறியதைப்போல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களினுடைய நேரடிப் பார்வையில் இயங்குகிற Chief Minister's Special Cell எனப்படும் அமைப்பு, ஆக்கபூர்வமான பணிகளை, மக்களின் நலன் கருதி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய நேரடிப் பார்வையில், அது மிகச் சிறப்பாக, அனைவரும் பாராட்டக்கூடிய அளவிற்குச் செயல்பட்டு வருகிறது. அதிலே இந்த 2004 ஆம் ஆண்டு மட்டும் 3 இலட்சத்து 87 ஆயிரத்து 884 மனுக்கள் பெறப்பட்டு, வரலாறு காணாத அளவிற்கு, அதிலே 88 சதவீத மனுக்கள், 3 இலட்சத்து 39 ஆயிரத்து 965 மனுக்கள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு, அதிலே தீர்வு காணப்பட்டிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியினை தெரிவிக்க விரும்புகிறேன். இது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பாதிக்கப்பட்ட மக்களின் நலனில் எத்தகைய அக்கறையைக் காட்டுகிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுகிற அளவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) இந்த Chief Minister's Special Cell சிறப்பாகச் செயல்படுகிறது என்பதனைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதுமட்டுமல்லாமல், இந்த அமைப்புமூலமாக முதலமைச்சர் அவர்களினுடைய இந்த Special Cell மூலமாக, 1,187 நலிந்த மக்களுக்கு, ஏழை மக்களுக்கு surgery – அறுவைச் சிகிச்சை செய்வதற்கு மட்டும்,



2 கோடியே 89 இலட்சத்து 73 ஆயிரத்து 660 ரூபாய், இந்த அளவிற்கு, எந்தக் காலத்திலேயும் இல்லாத அளவிற்கு 1,187 நபர்களுக்கு இப்படி 14–5–2001–லிருந்து 25–12–2004 வரை 1,187 நபர்களுக்கு அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதுவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கருணை உணர்வுடன்கூடிய அணுகுமுறைதான் காரணம் என்பதனை நான் எடுத்துச் சொல்ல விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போலவே, ஏழை மாணவர்கள், படிக்கக்கூடிய திறன் இருந்தும், ஞானம் இருந்தும், ஏழ்மையின் காரணமாக வாய்ப்பை இழந்த மாணவர்கள் 499 பேருக்கு, ஒரு கோடியே 20 இலட்சத்து 60 ஆயிரத்து 235 ரூபாய் அவர்களுக்கு, Meritorious students என்று கருதக்கூடிய மாணவர்களுக்கு எல்லாம் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் Professional Colleges, மருத்துவக் கல்லூரிகளிலேயும், பொறியியல் கல்லூரிகளிலேயும் இடம் கிடைக்க, அவர்களுக்கு அந்த உதவியினைச் செய்து, அந்த ஏழை மாணவர்கள், தகுதியுள்ள மாணவர்கள் வயிற்றிலே பாலை வார்த்திருக்கின்ற சாதனையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போலவே, மேலும் 469 ஏழை எளியவர்களுக்கு ஒரு கோடியே 38 இலட்சத்து 28 ஆயிரத்து 304 ரூபாய் உதவியினைத் தந்து அவர்களுடைய குறைகளைப் போக்கியிருக்கிறார். அத்தோடு, 5,184 உடல் ஊனமுற்றவர்களுக்கு, 60 இலட்சத்து 39 ஆயிரத்து 776 ரூபாயை இரக்க உணர்வோடு, அந்த உடல் ஊனமுற்றவர்களுக்கும் உதவிய சாதனையை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் செய்து, முதலமைச்சரினுடைய Chief Minister's Special Cell ஏழைகளின் நலன் காக்கக்கூடிய அளவிற்கு, மக்களின் குறைகளைத் தீர்க்கக்கூடிய அளவிற்கு மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது என்பதனைக் கூறுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

பிற்பகல் 4–40

சட்டமன்றப் பேரவையைப் பொறுத்தவரைக்கும், மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். சட்டமன்றப் பேரவையைப் பொறுத்தவரைக்கும், வரலாறு காணாத அளவிற்கு, அறிவு நிறைந்த சட்டமன்ற நிகழ்வுகளாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் Treasury Bench

ஆளுங்கட்சியைப் பொறுத்தவரைக்கும், எந்த அளவிற்கு மிகச் சிறப்பான திட்டங்களை மக்களின் நலன் கருதி செயல்படுத்தி, அதை மக்களுக்கு அவைமூலம் எடுத்துரைத்தது என்பதனை இந்த அவை நன்கு அறியும். எத்தகைய ஒரு பிரச்சினையாக இருந்தாலும், மக்களுக்கு நல்லதை மட்டுமே செய்ய வேண்டும் என்ற நோக்கோடு செயல்படுகின்ற தமிழகத்தின் முதலமைச்சர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் எவ்வளவு அக்கறையோடு இருக்கிறார், மக்களுக்காகவே அவர் வாழ்கிறார் என்பதனை எடுத்துக்காட்டக்கூடிய அளவிற்கு அவையிலே தொடர்ந்து பல மணி நேரம் அன்றாடம் இருந்து, அவையினுடைய ஒவ்வொரு நடவடிக்கையையும் உன்னிப்பாகக் கவனித்து, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய துறையாக இருந்தாலும் சரி, ஏனைய சக அமைச்சர்களுடைய துறையாக இருந்தாலும் சரி, whatever may be the subject matter, ஒவ்வொரு துறையிலும் ஆழ்ந்த ஞானத்தோடு, அறிவு ஞானத்தோடு with finger tip knowledge in each and every subject – விரல் நுனியிலே ஒவ்வொரு துறையைப் பற்றிய ஞானத்தையும் புள்ளிவிவரத்தோடு வைத்து, கேட்ட கேள்விகளுக்கு எத்தகைய பதில்களைத் தந்தார், (மேசையைத் தட்டும் ஒலி) முறையான பதில்களை, சரியான பதில்களை, மக்களுக்குத் தேவையான பதில்களை எந்த அளவிற்குத் தந்தார் என்று இந்தத் தமிழகமே பாராட்டக்கூடிய அளவிற்கு, இந்தச் சட்டமன்றத்தின் மூலமாக ஆட்சி இயந்திரத்தினுடைய அணுகுமுறைகளை, மாண்புமிகு முதலமைச்சருடைய கொள்கைத் திட்டங்களை எப்படி விளக்கினார் என்பது வரலாற்றில் பொன் எழுத்தில் பொறிக்கப்பட வேண்டிய ஒன்று என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அத்தகைய சிறந்த செயல்பாட்டிற்குக் காரணம், தமிழகத்தின் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மக்களுக்கு நல்ல முறையில் பணியாற்ற வேண்டும் என்ற நோக்கோடு அன்றாடம் நிறைய படிக்கின்றார். அது மாநிலம் பற்றிய செய்திகளாக இருந்தாலும் சரி, தேசிய அளவிலான செய்திகளாக இருந்தாலும் சரி, உலக அளவிலான செய்திகளாக இருந்தாலும் சரி, நாட்டினுடைய ஏழைகளின் நலனில் ஏற்றம் உருவாக வேண்டும், உழவர்களுக்கும், நெசவாளர்களுக்கும், உழைக்கும் வர்க்கத்திற்கும், அனைத்துத் தரப்பு மக்களுக்கும் வாழ்விலே சுபிட்சம் உருவாக வேண்டும் என்ற நோக்கோடு, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு நாளைக்கு 20 மணி நேரத்திற்கு மேல் உழைக்கின்ற காரணத்தினால், அப்படி அவர்கள் ஆழ்ந்து தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, மக்களுக்காகவே



பணியாற்ற வேண்டுமென்ற நோக்கோடு வாழ்கின்ற காரணத்தினால்தான், இப்படிப்பட்ட சாதனைகளை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களால் நிறைவேற்ற முடிந்தது என்பதனை நான் மகிழ்வோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

110 Statement – 110–வது விதியிலே ஓர் அறிக்கை வருகிறது என்றாலே, மக்கள் எல்லோரும் நல்லது நடக்கப் போகிறது, மக்களுக்கு, ஏழைகளுக்கு நல்லது கிடைக்கப் போகிறது என்று பாராட்டுவார்கள் என்ற ஒரு நிலை (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தினுடைய அனைத்து மக்கள் மத்தியிலும் உருவாகக்கூடிய அளவிற்கு, 110 Statement என்றால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நாட்டிற்கு நல்லதைத் தரப்போகிறார், நல்லதை செய்யப் போகிறார், (மேசையைத் தட்டும் ஒலி) ஏழைகளுக்கு ஏற்றத்தைச் செய்யப் போகிறார் என்ற அளவிற்கு, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 110 Statement–ஐக் கொடுத்து, மக்களுக்கு பல நல்லவற்றை இந்த அவைமூலமாகச் செய்திருக்கின்றார்கள்.

110 Statement அடிக்கடி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுப்பதுகூடாது என்ற உணர்வோ அல்லது இப்படிக் கொடுக்கிறார் என்ற உணர்வோ யாருக்கும் இருக்கக்கூடாது என்பதற்காக இதனை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். ஏதோ 110 Statement மூலமாக பணச் செலவுக்குட்பட்ட நடவடிக்கைகள் புரட்சித் தலைவி அம்மா காலத்தில்தான் அறிவிக்கப்பட்டது என்ற ஒரு தவறான எண்ணத்தை உருவாக்கக்கூடிய முயற்சியில் யாரும் ஈடுபட்டுவிடக்கூடாது. 1996–லிருந்து 2001 வரை தமிழகத்தை ஆண்ட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்கூட அன்றைய முதலமைச்சர் அவர்களும், பிற அமைச்சர்களும் கிட்டத்தட்ட 61, 110 Statement–களை இதே அவையிலே தந்திருக்கின்றார்கள் என்பதனை திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் நான் தெரிவிக்க விழைகின்றேன்.

பிற்பகல் 4–45

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, 110 Statement படிக்கக்கூடாது என்றோ, அதற்கு விதியில்லை என்றோ நாங்கள் சொல்லவில்லை. அமைச்சர் பெருமக்களுக்கு முக்கியமான, அத்தியாவசியமான, அவைக்குத் தெரிந்தே ஆகவேண்டிய, உடனடியாகத் தெரிவிக்கவேண்டிய கருத்தை அமைச்சர் பெருமக்கள் தெரிவிப்பதற்காகத்தான் 110 என்ற விதி இருக்கிறது. ஆனால், நாங்கள் கேட்பதெல்லாம் முதலமைச்சர் அவர்கள் நாட்டுக்கு நன்மை தரும்

திட்டங்களை 110 statement–லே படிக்கலாம், அதைக்கூட மறுக்கவில்லை. ஆனால், ஒரு மானியம் நடந்துகொண்டிருக்கிறபொழுது, அந்த மானியம் முடிந்ததற்குப்பிறகு அந்த அமைச்சர் எழுந்து, அந்த மானியத்திலே சில சலுகைகளை அறிவிக்கிறபொழுது, அந்த மானியத்தை ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே அந்த மானியத்திலே என்னென்ன சலுகைகள் என்று முதலமைச்சர் முன்கூட்டியே அறிவித்துவிட்டால் அப்புறம் அமைச்சர் எதற்கு? முதலமைச்சருக்கு அதிகாரம் உண்டு. ஆனால், எல்லா அதிகாரமும் அவர்கள்தான், அப்படியானால் எல்லா இலாகாக்களையும் அவரே வைத்திருக்கலாமே? ஆகையினாலே அவர் பெரிய பெரிய...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. *(குறுக்கீடு)*

**திரு. துரைமுருகன்:** அறிக்கைகளை அறிவித்து விட்டு, ...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சில முக்கியத்துவமான செய்திகள் முதலமைச்சர் வாயிலேயிருந்து வந்தால்தான் அதற்கு ஒரு மதிப்பு, மரியாதை, பெருமை, தகுதி, சிறப்பு, உயர்வு எல்லாம் உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் காரணம்தான். உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன்:** இந்த அவையில் ஆளும் கட்சி சார்பிலே எது வந்தாலும், அத்தனையும் முதலமைச்சரைத்தான் போய்ச் சாரும். ஆகையினாலே, நீங்கள் என்ன செய்தாலும், எதைச் செய்தாலும், பெருமைபட செய்தாலும் அது முதலமைச்சருக்குத்தான் சேருமேதவிர, உங்களைச் சாராது. எனவே, அப்படிப்பட்ட முதலமைச்சர், பாவம், நீங்களும் படியுங்கள், நீங்களும் சொல்லுங்க்ள் என்று அவர்களைச் சொல்லவைத்து அழகு பார்க்கலாமே? (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சியினுடைய துணைத் தலைவர் மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் ஏனோ தெரியவில்லை, 1996 முதல் 2001 வரை சட்டப் பேரவையில் அமைச்சராகவும் இருந்தார், உறுப்பினராகவும் இருந்தார். அப்போது, அப்போதிருந்த அமைச்சர்களின் உரிமையைப் பறித்துக்கொண்டு அன்றைய



முதலமைச்சர் பல 110 Statements கொடுத்தாரே, ஏன் அப்போது உங்கள் முதலமைச்சரிடம் அதை நீங்கள் சொல்லவில்லை என்பது எனக்குப் புரியாததாக இருக்கிறது. உதாரணத்திற்கு சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். 1996–லிருந்து – 16–4–1997–லே தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் தொழிலாளர் நலன் பற்றிய விவாதத்தின்போது, அன்றைய முதலமைச்சர் அவர்கள் 110 Statement மூலமாக ஓர் ஆண்டுக்கு 274.9 கோடி ரூபாய் செலவாகக்கூடிய ஒரு 110 Statement–ஐ வாசித்தார். ஆக, தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் சார்பிலே எப்படி அன்று உங்களது முதலமைச்சர் வாசித்தார் என்பதனை நான் உங்களுக்கு விளக்குகிறேன்.

அதைப்போலவே — (குறுக்கீடு) இல்லை, அதைப்போலவே முதலமைச்சர் மற்ற அமைச்சர்களுக்கு உள்ள உரிமையை எடுத்துக்கொள்ளக் கூடாது என்று சொல்லுகிறீர்கள். அன்றைய முதலமைச்சர் – உங்களது தலைவர் திரு. கருணாநிதி அவர்கள் உங்களுடைய துறை அமைச்சர் தமிழ் வளர்ச்சி, பண்பாடு மற்றும் தொழிலாளர் நலன் பற்றிய அந்த மானியக் கோரிக்கையில் கூறினார். அதைப்போலவே ஒன்று, காவல் துறைக்கு அவர் அறிவித்தார். மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலம் குறித்த விவாதத்தின்போது, கிட்டத்தட்ட சத்துணவு மையப் பணியாளர்களுக்கு ஆண்டு ஒன்றுக்குக் கூடுதல் செலவாக 32 கோடி ரூபாயும், அங்கன்வாடி மையப் பணியாளர்களுக்கு ஆண்டு ஒன்றுக்குக் கூடுதல் செலவாக 20.78 கோடி ரூபாயும் அன்றைய மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலன் குறித்த மானியத்தின்போது உங்களது முதலமைச்சர் அன்று, —அது அவருடைய துறை அல்ல; ஆனால்; அந்தத் துறையிலே இந்த 110 Statement–ஐ அளித்து இருக்கிறார். (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கேதான் — பேரவைத் தலைவர் அவர்களே, அங்கேதான் நான் மாறுபடுகிறேன். முதலமைச்சருக்கு எந்தப் பொருளைப் பற்றியும் சொல்வதற்கு உரிமையுண்டு. ஆனால், ஓர் அமைச்சருடைய Demand நடந்து கொண்டிருக்கிறபொழுது, உறுப்பினர்கள் நிறைய சலுகை கேட்டால், ஒருகால் அமைச்சர் தயங்கினால் நிதி அமைச்சருமாக இருக்கிற அவரே எழுந்து அவர்கள் கேட்கிறார்கள், அதை நான் தருகிறேன் என்று சொன்னால், அது encroachment அல்ல. நான் கேட்க விரும்புவது ஒரு Demand ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே வாதாபிகளைப் பாடுவதற்கு முன்னாலே மங்களம் பாடி முடிக்கிறீர்களே சலுகைகளை, அது நியாயமா என்றுதான் கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நானும் கேட்கின்றேன். எதற்காக அன்றைய முதலமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் அன்றைய மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சருடைய மானியக் கோரிக்கையின்போது அவருக்குப் பதிலாக மங்களம் பாடி, அன்று அந்த 32 கோடி ரூபாய் 20.78 கோடி ரூபாய் என்று அறிக்கைகளை (மேசையைத் தட்டும் ஒலி) அறிவித்தார் என்பதனை நான் கேட்க விரும்புகிறேன். (குறுக்கீடு) அல்ல, அது மானியக் கோரிக்கையின் போதே. அதைப்போலவே, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு மானியக் கோரிக்கையின்போது, ஒரு கோடி, இரண்டு கோடி அல்ல, 200.50 கோடி ரூபாய்க்கு இப்படிப்பட்ட 110 Statement அறிக்கையை அறிவித்தார்.

*பிற்பகல் 4–50*

நான் எதற்காக இதையெல்லாம் சொல்கிறேன் என்றால், மக்கள் மறந்திருப்பார்கள் என்ற எண்ணத்தோடு, கடந்த காலத்தில் என்ன நடந்தது, எப்படி அன்றைய முதல்வர் செயல்பட்டார் என்பதனை நாடு மறந்திருக்கும், அவை மறந்திருக்கும் என்ற எண்ணத்தோடு மாண்புமிகு உறுப்பினர்கள் பேசக் கூடாது. மாறாக, the Chief Minister has got entire right to speak on behalf of any Member of the Cabinet. The Cabinet has got collective and joint responsibility. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்குத் தெரியாதது அல்ல. நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அமைச்சரவைக்குத் தாயாக இருக்கிறார், மற்ற அமைச்சர்களின் சார்பில் எந்த ஒரு கருத்தையும் எந்த நேரத்திலும் கூறுவதற்கு she has got the Constitutional right. She has got the legal right என்ற அடிப்படையில்தான் இது நடைபெறுகிறது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் — சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர்களுடைய மனுக்கள் குழுவைப் பொறுத்தவரைக்கும் ஒன்றைச் சொல்ல விரும்புகின்றேன். — ஆணையிட்டார்கள். அந்த மனுக்கள் குழுவினுடைய முயற்சி சட்டப் பேரவையினுடைய, சட்டப் பேரவைத் தலைவருடைய அதிகாரத்திற்கு உட்பட்டிருக்கின்ற, மனுக்கள் குழு 2001–லிருந்து 2005 ஆம் ஆண்டு வரை கிட்டத்தட்ட 18,800 மனுக்களைப் பெற்று, அவற்றிலே 528 மனுக்களுக்குத் தீர்வு கண்டு, இந்த சட்டப் பேரவை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய அதிகாரத்திற்குட்பட்ட சட்டப் பேரவை ஓர் அபூர்வ, ஆக்கப்பணியைச் செய்திருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியாக கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதே 1996–2001 வாக்கிலே 14,294 மனுக்களைப் பெற்று, அன்று ஆய்வுகள் நடத்தப்பட்டு, நிறைவேற்றப்பெற்ற மனுக்கள் 124 மனுக்கள்தான். ஆனால், சட்டப் பேரவைக்கு உட்பட்டு இருக்கின்ற, பேரவைத் தலைவரினுடைய ஆளுகைக்கு உட்பட்டிருக்கின்ற மனுக்கள் குழுவிற்குத் தருகின்ற மனுக்கள்மீது புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு செயல்படும் அரசாக, திட்டங்களை நிறைவேற்றும் அரசாக, மக்கள் குறை தீர்க்கும் அரசாக இருக்கின்ற காரணத்தால், கடந்த காலத்திலே ஈடேற்றப்பட்ட நடைமுறைச் செயல்கள் 124. ஆனால், அம்மாவின் ஆட்சியிலே, அம்மாவினுடைய சிறந்த நிருவாகத் திறமையின் காரணமாக 528 நிகழ்வுகள் முற்றுப் பெற்றிருக்கின்றன (மேசையைத் தட்டும் ஒலி) என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் பேசுகிறபோது, உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதிப் பகிர்வைத் தருவதில், தரவில்லையென்ற ஒரு கருத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். நான் ஏற்கெனவே அவையிலேயே விளக்கி இருக்கிறேன். அது உண்மையான தகவல் அல்ல. 1997–லிருந்து 2001 வரை, 204.44 கோடி ரூபாய், Local Bodies – உள்ளாட்சி அமைப்புகளுக்கு அன்றைய நிதி நெருக்கடி காரணமாகத் தரமுடியாத நிலை ஏற்பட்டு, தராமல் நிலுவையில் இருந்தது. ஆனால், அதன் காரணமாக, financial, fiscal breakdown என்ற முறையிலே நிதிச் சீரழிவு ஏற்பட்டுவிட்ட காரணத்தால், தொடர்ந்து, அந்தச் சிக்கல் தொடர்ந்தது. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல முறை இந்த அவையிலே கூறியிருக்கின்ற அடிப்படையில் நிதி நிருவாகத்தைச் செம்மைப்படுத்தி வரி ஏய்ப்புகளைத் தடுத்தல், வரி கட்டுகிற பணிக்கு புதியவர்களைக் கொண்டுவருதல், சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், சில வீண் செலவுகளை, வீண் திட்டங்களைக் கைவிடுதல் போன்ற reform approach என்ற முறையிலே, நிருவாகச் செம்மைகளைக் கடைபிடித்த காரணத்தால், சிக்கனத்தை மேற்கொண்டார்கள். சிக்கனத்தை மேற்கொண்டு, சேமித்த பணத்தை வைத்துக்கொண்டு, கடந்த — ஒட்டுமொத்தமாக 630.58 கோடி ரூபாய் நிலுவையில் இருந்த, 2001, 2002 வாக்கிலே தர வேண்டிய பணம் எல்லாம் கிட்டத்தட்ட 835.02 கோடி ரூபாயை 2002–2003–லிருந்து தர ஆரம்பித்து, முழுமையாகத் தரப்பட்டுவிட்டது என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். அது மட்டுமல்லாமல், கூடுதலாகக்கூட 254.73 கோடி ரூபாய் உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தரப்பட்டிருக்கிறது என்ற

அந்தப் புள்ளிவிவரத்தை உங்களுக்கு நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதற்குக் காரணம் உங்களுக்குத் தெரியும். உள்ளாட்சி அமைப்புகளுக்கு போதிய நிதிப் பகிர்வு மைய அரசிடமிருந்து கிடைக்கவில்லை; காரணம், அவர்கள் — யார் மைய ஆட்சியில் இருந்தாலும் சரி, மாநிலங்களுக்கு அதிக நிதியைத் தருவதில் தயக்கம் காட்டுகிறார்கள். அதனால்தான் அண்ணா அவர்கள் மாநில சுயாட்சி வேண்டுமென்ற ஒரு கொள்கையை முன்வைத்தார்கள்.

*பிற்பகல் 4–55*

மைய அரசு கொள்கைரீதியாக ஒரு Unitary Government என்ற முறையிலே அவர்கள் செயல்படுகிற காரணத்தால், மக்களை நேரடியாகச் சந்திக்கின்ற மாநில அரசுகளுக்கு முறைப்படி கொடுக்கவேண்டிய பணத்தைக்கூட கொடுப்பதிலே தயக்கம் காட்டுகிறார்கள். இல்லையென்று சொல்லி விடுகிறார்கள். விருப்ப ஒதுக்கீடு என்ற ஒரு நெறிமுறையை வைத்துக்கொண்டு, மைய ஆட்சியிலே இங்கே இருக்கின்றவர்கள், நீங்கள் இடம் பெற்றிருந்தாலும்கூட, அதையெல்லாம்கூட நீங்கள் சில நேரம் கோருவதைக்கூட அவர்கள் கேட்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. அவர்கள் விரும்புகிற மாநிலங்களுக்கு, குறிப்பாக இந்தி பேசுகின்ற மாநிலங்களான உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், இராஜஸ்தான், பீகார், அருணாசலப் பிரதேசம், இமாச்சலப் பிரதேசம் போன்ற மாநிலங்களை எல்லாம் மிகவும் பின்தங்கிய மாநிலங்கள் என்ற பட்டியலில் வைத்து விடுகிறார்கள். கங்கை நதி பாய்கிறது. பட்டிதொட்டி எல்லாம் தண்ணீர் பாய்கிறது. தங்குதடையில்லாமல் காலில் மடைமாறக்கூடிய அளவுக்கு தண்ணீர் பாய்கிற, வறட்சியே இல்லாத அந்த மாநிலங்களை எல்லாம் பின்தங்கிய, மிகவும் பின்தங்கிய மாநிலங்கள் எனச் சொல்லி, 30 சதவிகித மக்களுக்குமேல் வறுமைக்கோட்டு எல்லைக்குக் கீழே வாழ்கின்ற தமிழகம் போன்ற மாநிலங்களை 22.5 சதவிகிதத்திற்கு மேல் கிராமப்புறத்தில் வேலைவாய்ப்பு இல்லை என்ற நிலையிலே அவர்கள் கணக்கிலே கூறப்படுகின்ற நிலையிலே இருக்கின்ற தமிழகம் போன்ற மாநிலங்களை முன்னேறிய மாநிலங்கள் என ஏதோ ஒரு கணக்கிலே கொண்டு வந்து விட்டு, நம்மை வஞ்சிக்கின்ற ஓர் அணுகுமுறையை மைய ஆட்சி, எந்த ஆட்சியாக இருந்தாலும் தொடர்ந்து கடைப்பிடிக்கிறது. இதிலே அரசியல் பாகுபாடு இல்லாமல், அரசியல் மாறுபாடு இல்லாமல், போரிட்டு, மைய அரசோடு வாதிட்டு, மைய அரசிடமிருந்து மாநிலங்களுக்கு அதிக பண ஒதுக்கீட்டை வாங்கித் தருவதற்கு எல்லோரும் முயற்சி செய்ய வேண்டுமென்பதற்காக இதை நான் கூறுகிறேன்.



Finance Commission–ஐப் பொறுத்தவரைக்கும், அதிகமான நிதிப் பகிர்வு நமக்குக் கிடைக்குமென்று எதிர்பார்த்தோம். அந்தக் காலத்தில் பெருந்தகை பேரறிஞர் அண்ணா காலத்திலேயே மைய அரசிடமிருந்து மாநில அரசுக்கு நாம் நெற்றி வியர்வை சிந்த உழைத்து, ஒட்டுமொத்த வருமானத்தை மைய அரசு எடுத்துச் செல்கிறது. நிதிப் பகிர்விலே நமக்கு மிகக் குறைவாகக் கிடைக்கிறது. அதிக நிதிப் பகிர்வு வேண்டுமென்ற கொள்கை நமது ஒரு தலையாய கொள்கை. ஆனால், அதற்கு மைய அரசு செவி சாய்க்கவில்லை. 29.5 என்ற devaluation இருந்ததை தற்போது 30.5 என்று மட்டும்தான் கொடுத்திருக்கிறார்கள். இது யானைப் பசிக்கு சோளப் பொறி போடுவதைப் போல் தந்து மைய அரசு அதிகப்படியான நிதியை எடுத்துக் கொள்கிறது. இந்த நிலை மாற வேண்டும்.

நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். தமிழகத்தினுடைய நமது ஒட்டுமொத்த வருமானம் 27,000 கோடி ரூபாய். மைய அரசுக்குக் கிட்டத்தட்ட 27,000 கோடி ரூபாய் பல தொகுப்புகளிலிருந்து செல்கிறது. ஆனால், நாம் பெறுவதோ, 100 ரூபாய் வருமானம் என்றால் 1.62 காசு நமக்குக் கிடைக்கிறது. ஏனென்றால், நாம் வளர்ந்து விட்ட மாநிலம்; எப்படியென்றால், மக்கள் தொகையைக் குறைத்துவிட்டார்கள். எப்படியென்றால், கல்வியறிவு அதிகமாக படித்தவர்கள் எண்ணிக்கை வந்து விட்டது. ஏனென்றால், per capita income இங்கு அதிகம். per capita income எப்படி அதிகம் என்று சொல்கிறார்கள் என்று யாருக்கும் புரியாது. இங்கே இருக்கிற Hyundai, Ford அல்லது Simpson, TVS போன்ற முதலாளிகள் தருகின்ற Corporate Tax எல்லாம் ஒட்டுமொத்தமாக 6 கோடி மக்களின் தலையிலே வகுத்து, ஒரு தெருவிலே செல்கின்ற ஏழைக்கும் ஒரு பிச்சைக்காரனுக்கும்கூட per capita income அதிகம் இருக்கிறது என்று கணக்கிடுகிறார்களோ என்னவோ தெரியவில்லை. இப்படியெல்லாம் சொல்லி, நமக்கு இல்லையென்று சொல்லிவிட்டு, நமது பணத்தை இந்தி பேசுகிற வட புலத்து மாநிலங்களுக்கு, அவர்களுக்கு வேண்டிய மாநிலங்களுக்கு விருப்ப ஒதுக்கீடாக தரக்கூடிய வழிவகைகளை அவர்கள் மேற்கொள்கிறார்கள். இதை ஒரு குரலோடு தமிழகத்தைச் சேர்ந்த அரசியல் கட்சிகள் யாராக இருந்தாலும், அண்ணாவின் கொள்கையை நாம் நடைமுறைப்படுத்துவதற்கு அங்கு குரல் கொடுக்க வேண்டும். இந்த நேரத்தில் இந்தக் குரலை எழுப்பி வெற்றி பெற நாம் தவறுவோமேயானால் எந்தக் காலத்திலேயுமே இது முடியாது என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மைய ஆட்சியிலே மாநிலக் கட்சிகள், அதுவும் மாநில சுயாட்சியில் நம்பிக்கையுள்ள கட்சிகள்

இடம்பிடிக்க முடியும் என்ற நம்பிக்கை அந்தக் காலத்தில் எழுந்ததில்லை. ஆனால், அப்படிப்பட்ட ஒரு சூழல் நமக்கு இயற்கை தந்திருக்கிறது. இந்தச் சூழலைப் பயன்படுத்தி எப்படியும் மாநிலத்திற்கு அதிக பண அதிகாரத்தை more financial power -ஐப் பெற வேண்டுமென்பதில் குறிக்கோளோடு இருக்கவேண்டும். அதிலே வெற்றி பெற வேண்டும். அந்த முயற்சியில் நாம் அனைவரும் இறங்கவேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடித்து விடட்டும். முடித்து விடட்டும், அப்புறம் கேளுங்கள். உட்காருங்கள். முடித்து விடட்டும்.

*பிற்பகல் 5–00*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, Planning and Development துறைமூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வாரத்தில் திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை துறைவாரி ஆய்வுகளை நடத்துகிறார். திட்டங்கள் எப்படி இருக்கவேண்டும் என்று ஆரம்பத்தில் முடிவு செய்கிறார். வளர்ச்சிப் பணிகளை எப்படி மேற்கொள்ள வேண்டும் என்று முயற்சி செய்கிறார். அந்தத் திட்டங்களின் நடைமுறைகளை அவ்வப்போது ஆய்வு செய்கிறார். குறைகளைக் கண்டறிந்து, களைய ஆணை இடுகிறார். இப்படிப்பட்ட நடவடிக்கைளை மேற்கொள்கின்ற காரணத்தால், நான் ஏற்கெனவே சொன்னேன், பல வீண் செலவுகள் குறைக்கப்பட்டன. சிக்கன நடவடிக்கைகள் காரணமாக தேவையற்ற பல திட்டங்கள் கைவிடப்பட்டன. நாம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது நெருக்கடியில் இருந்தோம். ஒட்டுமொத்தமாக, ஒட்டுமொத்த வளர்ச்சிப் பணியே ஒரு தேக்கநிலைக்குப் போகக்கூடிய அளவிற்கு 2000–2001–ல் நிதி நிலைத் தடுமாற்றத்தின் காரணமாக வளர்ச்சிப் பணிகளும் தடுமாற்றத்திற்குள்ளாக்கப்பட்டிருந்தன. இது நாடறிந்த உண்மை.

Revenue expenditure was more. Planning and development expenditure was less என்ற முறையிலே இருந்த காரணத்தால் inflation became more. அதனால் பல சீரழிவுகள் தமிழகத்திலே உருவாயின. இவற்றையெல்லாம் சரி செய்வதற்குப் பல்வேறு முயற்சிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்தார்கள். தொடர் வறட்சி தமிழகத்தினுடைய ஒட்டுமொத்தப் பொருளாதாரத்தை, the gross State



domestic product was very much affected because of the continuous severe drought, that Tamil Nadu faced continuously for over 3 to 4 years. இப்படிப்பட்ட ஒரு நிலை இருந்தது. இந்த நிலையில்தான், உன்னதமான முறையிலே Planning and Development Department மூலமாக, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின்மூலமாக பல—டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களுடைய ஆலோசனை மற்றும் அறிஞர்களுடைய ஆலோசனை ஆகியவற்றைக் கொண்டு ஓர் ஆழ்ந்த திட்டத்தை, ஓர் அறிவு சார்ந்த திட்டத்தை மேற்கொண்ட காரணத்தால் இந்த நிதி நெருக்கடியைச் சமாளிக்க முடியும் என்ற நம்பிக்கையோடுதான் 8 சதவீத வளர்ச்சியினை எப்படியும் எட்டுவோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதைக் கூறியதை எண்ணுவதற்கேற்ப, ஆரம்பத்தில் ஒரு தயக்கநிலைகூட இருந்தது. 40,000 கோடி ரூபாய் plan outlay நாம் போட்டால், அதை நாம் நடைமுறைக்குக் கொண்டு வரமுடியுமா என்றுகூட சிலர் எண்ணிய நேரத்தில், முடியும் என்ற உத்தரவாதத்தை, முடியும் என்ற நம்பிக்கையை, முடியும் என்ற உற்சாகத்தை அனைவருக்கும் தந்த பெருமை தமிழகத்தின் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைத்தான் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் ஆரம்பத்திலே வெறுமனே 5,200 கோடி ரூபாய்க்கு மேல் உங்களால் முடியாது என்று மைய அரசு அன்று சொன்னது. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் the Deputy Chairman of the Planning Commission அவர்களைச் சந்தித்தபோது, நிதி நிலை சீர்கெட்டு இருக்கிறது, உண்மைதான்; வருமானம் எங்களுக்குக் குறைவாக இருக்கிறது, உண்மைதான். இருந்தாலும்கூட, சிக்கன நடவடிக்கைளை மேற்கொள்ள இருக்கிறேன். நிதிச் சீர்திருத்தங்களை மேற்கொள்ள இருக்கிறேன். வரி ஏய்ப்புகளைத் தடுத்து, வரி செலுத்துவோர் பட்டியலை அதிகப்படுத்தி, வருமானத்தைப் பெருக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறேன். இதை ஈடேற்ற முடியும் என்று சொன்னார்கள். அம்மா அவர்கள் சொன்னதைச் செய்யக்கூடிய அளவிற்கு, எதைச் செய்ய முடியுமோ, அதைத்தான் சொல்வார்கள்; சொன்னார்கள், செய்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய திறமை.

அந்த நிலை, அடுத்த மாதம் சம்பளத்தைத் தரமுடியுமா என்ற அளவிற்கு நிதி நிலை இருந்தது. ஒரு மாதத்தில் 26 நாட்கள், 27 நாட்கள் பல மாதங்களில் Reserve Bank–லே நாங்கள் O.D. facility பெற்றுதான் நிர்வாகத்தை அன்றாடம் நடத்த வேண்டிய நிலையிலே இருந்தோம். சில நேரங்களில், பல இடங்களில், பல நிதி நிறுவன அமைப்புகளில் கடன் பெற்று, கடன் பெற்று அன்றாடச் செலவுகளை மேற்கொள்ள

வேண்டிய நிலையிலே இருந்தோம். இருந்தாலும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தொய்வடையவில்லை. The Planning and Development என்ற துறையிலே கிட்டத்தட்ட அன்றாடம், நான் ஏற்கெனவே சொன்னதைப் போல், அதிகாரிகளை வரவழைப்பார், அமைச்சர்களை வரவழைப்பார், துறைத் தலைவர்களை வரவழைப்பார், ஆய்வினை நடத்துவார். என்னப் பிரச்சினை என்று கேட்பார். நிதிப் பிரச்சினை என்று சொன்னால், சிக்கன நடவடிக்கையை இந்தத் துறையில் எடுங்கள், அது மக்களுக்குப் பலனைக் குறைவாகத் தருகிற துறை என்றால் அதிலே சிக்கன நடவடிக்கையை எடுங்கள், செலவை சற்று குறையுங்கள், அதை மக்களுக்குப் பலன் தருகின்ற ஆக்கபூர்வமான துறைக்கு மாற்றுங்கள் என்று சொல்வார். இப்படி ஆக்கபூர்வமான அணுகுமுறையை மேற்கொண்ட காரணத்தால், படிப் படியாக அம்மா அவர்களுடைய முயற்சியின் காரணமாக இன்று 9,100 கோடி ரூபாய் அளவிற்கு எங்களுடைய annual plan outlay 2005–2006–க்கு வந்த சாதனையைப் படைத்த பெருமை புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும் என்பதனை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் .5–0.5

பல நேரங்களில் எங்களுக்கு நெருக்கடியை மத்திய அரசாங்கமும் கொடுத்தது. கேட்ட பணத்தை, கேட்ட நேரத்தில் தரவில்லை. 3,000 கோடி ரூபாயை உடனடியாக உதவியாகத் தந்தால், விருப்ப ஒதுக்கீட்டிலே மைய அரசு தந்தால், பிரச்சினைகளைச் சமாளிக்கமுடியும்; அரசு ஊழியர்களுடைய பிரச்சினையைச் சமாளிக்கலாம். ஏழைகளுக்கென இருக்கின்ற இலவச வேட்டி, சேலைத் திட்டம் போன்ற திட்டங்கள் எல்லாம் தத்தளிக்கின்ற நிலைக்கு நிதி நெருக்கடி இட்டுச் சென்று விட்டதை உணர்ந்து, இதைத் தவிர்க்கலாம் என்று உதவி கேட்டார். ஆனால், மத்திய அரசு செவி மடுக்கவில்லை. அரசியல் காரணமாகவோ, வேறு காரணமாகவோ, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கேட்ட நிதியைத் தரவில்லை. மாறாக, தாங்கள் விரும்பிய மாநிலங்களுக்கு, விருப்ப ஒதுக்கீடாகப் பணத்தைத் தரக்கூடிய தவறான அணுகுமுறையை மைய அரசு கடைப்பிடித்த நேரம்.

இப்படிப்பட்ட நேரத்தில்தான், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தவிர்க்கமுடியாத அளவிற்கு சில நிர்வாக நிதிச் சீர்திருத்தங்களை தமிழகத்திலே கொண்டு வரவேண்டும்; அப்போதுதான் பிரச்சினைகளைச் சமாளிக்கமுடியும் என்ற ஒரு நிலையில் பிரச்சினைகளைச் சமாளித்தார். ஆட்சிப் பொறுப்புக்கு நாங்கள்



வந்தபோது, கிட்டத்தட்ட 2001–2002–லே, contract–காரர்களுக்குத் தரவேண்டிய 700 கோடி ரூபாயையும் சேர்த்து, 3,439 கோடி ரூபாய் அளவிற்கு, — சுமார் 3,439 கோடி ரூபாய் அளவிற்கு அன்றைக்கு revenue deficit இருந்தது. அதை நான் இதுகாறும் சொன்ன நவீன அணுகுமுறைகளை, ஆக்கபூர்வமான அணுகுமுறைகளை மாண்புமிகு அம்மா அவர்கள் அன்றாடம் மேற்கொண்ட காரணத்தினால், அந்த நிலை மாறி, தற்போது வளர்ச்சிப் பாதையிலே தமிழகம் பீடு நடை போடுகிறது. அந்த வெற்றிக்குக் காரணம், தமிழகத்தின் நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

Productive assets என்று சொல்லக்கூடிய அந்தச் சொத்துகள் சேமிப்பிலே, Capital Expenditure, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2001–2002 ஆம் ஆண்டிலே இருந்த, வெறுமனே 1,777.91 கோடி ரூபாய் என்ற நிலையை மாற்றி, இத்தகைய நிதி நெருக்கடியிலும் நிவாரணப் பணிகளை மேற்கொண்டார்; இலவச வேட்டி சேலைத் திட்டத்தை மீண்டும் கொண்டு வந்தார்; 6.00 ரூபாய் என்ற நிலையிலேயிருந்த அரிசியை ரூ. 3.50-க்கு ஏழைகள், பாமர மக்கள், பாட்டாளி மக்கள் போன்றவர்களுக்குத் தரவேண்டும் என்ற அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்; இலவச மின்சாரத் திட்டத்தை உழவர் பெருமக்களுக்கு, உழைக்கும் வர்க்கத்திற்குத் தந்தார்.

இப்படிப்பட்ட சமுதாய நலத் திட்டங்களைத் தந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அதே நேரத்திலே, Capital Expenditure, வளர்ச்சிப் பணியிலும் நாடு முன்னேறவேண்டும், வளர்ச்சித் திட்டங்களில் அதிக முதலீடு வந்தால், ஒட்டுமொத்தப் பொருளாதாரம் முன்னேறும். The Gross State domestic product will get augmented. அப்போதுதான், inflation குறையும். நாட்டிலே வளர்ச்சி வரும் என்ற முறையிலே, 2001–2002–லே, 1,777.91 கோடி ரூபாய் என்றிருந்த நிலையை மாற்றி, இப்படிப்பட்ட நெருக்கடியிலும் 4,791.64 கோடி ரூபாய்க்கு, 2005–2006–லே வரலாறு காணாத அளவிற்கு இப்படியொரு மாற்றத்தை உருவாக்கிய பெருமை, தமிழகத்தின் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

இதேநேரத்தில், ஏழையெளிய, பாமர, பாட்டாளி மக்களுக்கு பல சமூக நலத் திட்டங்களுக்கென 7,528.09 கோடி ரூபாய் நிதியினை ஒதுக்கி, அந்த ஏழையெளிய மக்களுடைய நலனைப் பேணுவதிலும், மனிதாபிமான முறையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆக்கப் பணிகளை மேற்கொண்டார். அரசுக்குச் சொந்தமான சொத்துகள்

பேணிப் பாதுகாக்கப்படாவிட்டால், proper maintenance இல்லையென்றால், அழிந்துவிடும் என்ற நிலையால், — அவற்றிற்கு நிதியொதுக்கம் இல்லாத ஒருநிலை ஆண்டு பலவாக இருந்தது. — பணத்தைச் சிக்கனமாகச் சேகரித்த காரணத்தால், ரூ. 1,681.72 கோடி மட்டுமே, 2001–2002–ல், இப்படிப் பராமரிப்பிற்கென்று இருந்த நிலையை மாற்றி, 3,364.88 கோடி ரூபாய் 2005–2006–லே ஒதுக்கி, அரசுச் சொத்துகளை, அசையாச் சொத்துகளைப் பாதுகாப்பதற்கும், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிதியொதுக்கி இப்படிப்பட்ட சிறப்பினைச் செய்திருக்கிறார்.

பிற்பகல் 5–10

அம்மா அவர்களைப்பற்றி நான் ஏற்கெனவே சொன்னேன். வரி வருவாயைப் பெருக்குவதற்கு, எந்த மாநிலத்திலும், இந்தியாவிலே இல்லாத அளவிற்கு, — மைய அரசு நிதி தரவில்லை என்கிறது. நிதி நிறுவனங்கள், வாங்கிய கடனைக் கட்டாத காரணத்தால், கடன் பெறும் தகுதி தமிழகத்திற்கு இல்லை என்று சொல்கிறது. இப்படிப்பட்ட ஒரு நிலையை, சூழ்ச்சியோடு மைய அரசு, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்குத் தொடர்ந்து உருவாக்கிவிட்ட நிலையில், அம்மா சிந்தித்தார், செயல்பட்டார். எப்படியிருந்தாலும் பிரச்சினையைத் தீர்த்தே ஆகவேண்டும் என்று சூளுரைத்துச் செயல்பட்டார். அம்மாவினுடைய தொலைநோக்குச் சிந்தனை, அயராத உழைப்பு, — ஒரு நாளைக்கு 20 மணி நேரம் என்ற உழைப்பு காரணமாக, ஆட்சிப் பொறுப்புக்கு நாங்கள் வந்தபோது, 8,613.33 கோடி ரூபாய் என்ற அளவிற்கு மட்டுமே இருந்த வரி வருவாய் வருமானத்தை, சிக்கன நடவடிக்கைகள் மட்டுமல்லாது, வரி ஏய்த்தவர்களைச் சல்லடை போட்டு ஜலித்துக் கண்டுபிடிப்பது போல் கண்டுபிடித்து, Tax net-க்குள் பலரைக் கொண்டுவந்து, சிறப்பு நடவடிக்கைகளை, அதிரடி நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தன்னுடைய நேரடிக் கண்காணிப்பிலே மேற்கொண்ட காரணத்தால், இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, தற்போது ரூ.8,613.33 கோடி என்ற நிலை மாறி, ரூ.15,198.55 கோடி என்ற நிலைக்கு (மேசையைத் தட்டும் ஒலி) உயர்வினை எட்டக்கூடிய அளவிற்கு இரவு-பகல் என்று பாராமல் உழைக்கின்ற காரணத்தால், தமிழகத்தின் நிதி நிலைமையைப் பெருக்கி, ஏழையெளிய மக்களின் வாழ்வில் ஏற்றத்தை உருவாக்கி, வளர்ச்சித் திட்டங்களுக்கு ஊக்கத்தைத் தந்து, மக்களுக்கு காட்சி வாழ்வு தருவதுதான் என்னுடைய தலையாய நோக்கம் என்று ஆறு கோடி தமிழ் மக்களுக்காகவே வாழ்வை அர்ப்பணித்து வாழ்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய (மேசையைத் தட்டும் ஒலி)



அற்புத சாதனை என்பதனை நான் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

அதைப்போலவேதான், Stamps and Registration Department, ஏற்கெனவே அவையிலே சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் நேரடியாக இதைக் கண்காணிக்கிறார்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடன் அடிக்கடி ஆய்வுகளை நடத்துகிறார். அப்படி அம்மா அவர்கள், பல நவீன அணுகுமுறைகளை இந்தத் துறையில் நிர்வாகச் சீர்திருத்தமாக, நடைமுறைப்படுத்தியதன் காரணத்தால் ரூ.910.2 கோடி என்று 2001–லிருந்த நிலை மாறி, இன்று ரூ.1,316.40 கோடி என்ற அளவிற்கு, இந்த வருமானத்தை அம்மா அவர்கள் உயர்த்தியிருக்கிறார்கள்.

மதுவிலக்குத் துறையிலும் கூடுதலாக ரூ.1,300 கோடிக்கு மேல் வருமானத்தைப் பெருக்கக்கூடிய அளவிற்கு, அரசே அந்த Indian made Foreign Liquor and Beer — இதை விற்கின்ற பொறுப்பை அரசே எடுத்துக்கொண்டால் அதிக வருமானம் வரும் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொன்னார். சில நேரங்களில் இது சாத்தியக்கூறு ஆகுமா என்று எண்ணியபோது, அம்மா அவர்கள் தெளிவாகச் சொன்னார். தவறுகள் ஆங்காங்கே நடக்கிறது; அரசுக்கு வருகிற வருமானம் போகிறது; கலப்படம் நடக்கிறது; இதைத் தடுக்கவேண்டும்; அரசின் வருவாயைப் பெருக்கவேண்டும்; பணம் இல்லாமல் நாம் கஷ்டப்படுகின்றபோது, ரூ.100 கோடி கிடைத்தாலும் அது பெரிய வருமானம் என்று துணிவோடு அந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தார். அந்தத் திட்டத்தைக் கொண்டுவந்த காரணத்தால் அரசுக்கு இன்று ரூ.1,300 கோடிக்கு மேல் அதிக வருமானம் வந்திருக்கிறது என்றால் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் போட்ட உன்னதத் திட்டம்தான் இந்த வெற்றிக்கும் காரணம்.

இப்படித்தான், பல்வேறு ஆக்கப் பணிகளை மாண்புமிகு அம்மா அவர்கள், Planning and Development என்ற துறைமூலமாக தமிழகத்தின் வளர்ச்சிக்கு மேற்கொண்டு செயல்பட்டு வருகிறார். அதைப்போலவே, அடிப்படை வசதிகளைத் தமிழகத்துக்கு அதிகம் உருவாக்கினால்தான் அந்நிய முதலீடு தமிழகத்தை நோக்கி வரும். பிற மாநில முதலீடு தமிழகத்தை நோக்கி வரும். தொழிற்சாலைகள் வெகுவாக வரும். வேலைவாய்ப்பு மிகும். Commercial Taxes will also get increased, thereby the G.S.T. of the State will get augmented என்ற முறையிலே அடிப்படை வசதிகளுக்கு முக்கியத்துவம் தரவேண்டுமென்று தங்குதடையில்லாத மின்சாரத்தைத் தருவதற்கு, பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் வகுத்தார்.

இந்தியாவிலேயே, எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, இந்த ஓர் ஆண்டிலே மட்டும் ரூ.2,160 கோடியை சாலைப் போக்குவரத்துக்கு மட்டுமே நிதியாக ஒதுக்கி, அடிப்படை வசதியான சாலைப் போக்குவரத்து செம்மையாக இருந்தால் தமிழகத்துக்கு வருவோம் என்று அந்நிய முதலீட்டாளர்கள் கூறுகிற காரணத்தால், அதற்கு ரூ.2,160 கோடி ஒதுக்கிய பெருமை, அதை ஏற்பாடு செய்த பெருமை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சேரும். (மேசையைத் தட்டும் ஒலி) பட்டணத்து மக்களுக்கு மட்டும் பலதரப்பட்ட முறையிலே பாதுகாப்பான நவீன மருத்துவ வசதி என்று இருக்கின்றபோது, 70 சதவிகிதம் மக்கள் வாழ்கின்ற, ஏழைகள் வாழ்கின்ற கிராமப்புற மக்களை புறக்கணிக்கக்கூடாது என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொன்னார். கிராம மக்களுக்கு சுதந்திரம் அடைந்த தமிழகத்தில் 55 ஆண்டுகள் ஆகியும், நல்ல மருந்துகள் கிடைப்பதில்லை, மருத்துவ வசதிகள் இல்லை, அடிப்படை வசதிகள் இல்லை. இவை அகற்றப்படவேண்டும் என்று சொல்லி, அதற்காகப் பிரத்தியேக திட்டத்தை அம்மாவே முன்னின்று அந்தத் திட்டத்தை உருவாக்கிய காரணத்தால் அது வெற்றியாக ரூ.597.5 கோடி இன்று கிராமத்திலே இருக்கிற சாதாரண மக்கள் வாழ்கின்ற அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களுக்கு மருத்துவ வசதிக்காக பல மருத்துவமனைகளை உயர்தர மருத்துவமனைகளாக, அடிப்படை வசதிகள் நிறைந்த மருத்துவமனைகளாக, நல்ல தரமான மருந்துகள் கிடைக்கின்ற மருத்துவமனைகளாக, இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு உருவாக்கிய பெருமை, அந்தத் திட்டத்தை வகுத்த பெருமை புரட்சித் தலைவி அம்மா அவர்களைச் சேரும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போலவே வனங்கள் பாதுகாக்கப்படவேண்டும், மரங்கள் வளர்க்கப்படவேண்டும். அப்போது அந்த பசுமைப் புரட்சி உருவாகின்றபோதுதான், vegetation அதிகமாக இருக்கின்றபோதுதான் மழை நன்கு பெய்யும் என்பது இயற்கைத் தத்துவம். அந்த அடிப்படையில் இந்த Ozone zone should not get depleted very fast. Ozone என்று சொல்லக்கூடிய அந்த மண்டலம் பாதிப்புக்குள்ளானால் மழை இல்லாமல் போய்விடும். வறண்ட சகாராவாக மாறிவிடும் என்ற முறையில் மரங்கள் வளர்ப்பதற்கும், காடுகளைப் பராமரிப்பதற்கும் வன கரு மரங்களை ஆங்காங்கே உருவாக்குவதற்கும் தனி முக்கியத்துவம் தர வேண்டுமென்ற திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் உருவாக்கிய காரணத்தால் 567.12 கோடி ரூபாய் திட்டத்திலே இந்த உன்னதத் திட்டம் தற்போது ஈடேற்றப்பட்டு இன்று சிறப்புத் திட்டமாக



நடைபெறுகிறது என்றால், அந்தச் சிறப்புக்கும் காரணம் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதனை நான் உங்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5–15

அம்மா அவர்கள் ஒருபுறம் மைய அரசு நிதி தரவில்லை, வரி போட்டு நிதியைச் சேகரிப்பதற்கு மக்களுக்கு தாங்கும் சக்தி இல்லை. எனவே, Small Savings, சிறுசேமிப்புமூலமாக மாநில அரசுக்கு வருவாயைப் பெருக்க வேண்டுமென்ற முயற்சியிலே உன்னதப் பரிசுத் திட்டங்களை அம்மா அவர்கள் நடைமுறைக்குக் கொண்டு வந்த காரணத்தால், அந்த ஆலோசனைகளை வழங்கிய காரணத்தால், இன்று வெறுமனே நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது 1,818.04 கோடி ரூபாய்தான் சிறுசேமிப்பு மூலமாக வருமானம் என்ற நிலையிலே இருந்தது. ஆனால், அம்மா அவர்கள் தந்த ஊக்கத்தின் காரணமாக, அம்மா அவர்களே முன்நின்று இந்தத் திட்டத்தைத் தீட்டிய காரணத்தால் எப்படிப்பட்ட ஊக்குவிப்புகளைத் தந்தால்,— லாட்டரி சீட்டு என்றால் ஏழைகளை பாதிக்கின்றது, பாமர பாட்டாளி மக்கள் வீட்டிலே அடுப்பு எரிவதற்குப் பதிலாக அங்கு பஞ்சம் தாண்டவமாடுகிறது. அதைவிட, அதை ஒழித்துவிட்டு, இந்த Small Savings என்று சொல்லக்கூடிய சிறுசேமிப்புத் திட்டத்திற்கு ஊக்கத்தைத் தாருங்கள், அப்போது சேமிப்பும் அவர்களுக்கு வரும், பணமும் மிச்சமாகும் இந்த ஏழைகளுக்கு; அரசுக்கும் பணம் கிடைக்கும் என்ற அற்புத அணுகுமுறையை பரிசுத் திட்டங்களோடு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நல்கிய காரணத்தால் இன்று 1,818.04 கோடி ரூபாய் மட்டுமே என்று 2001–லே இருந்த நிலை மாறி 5,147.89 கோடி ரூபாய் 2004–05–ல் என்ற நிலையிலே, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வரும் ஆண்டிலே 6,000 கோடியை எட்டி சாதனை புரிகின்ற அளவுக்கு திட்டத்தைத் தந்த செம்மல் தீர்க்க தரிசனத்தோடு, தொலைநோக்குச் சிந்தனையோடு அரசு வருமானத்தைப் பெருக்குவதற்கு இப்படி அற்புதங்களைக் கண்டறிந்து செயல்படுத்துகிற தலைவிதான் தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஓய்வூதியங்கள், அரசு ஊழியர்களுக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாய் உள்ளத்தோடு எவ்வாறு நல்கியிருக்கிறார்கள் என்பதனை பேசிய சில மாண்புமிகு உறுப்பினர்கள் கூறினார்கள். ஏற்கெனவே இந்த அவையிலே சொல்லியிருக்கிறேன். 1991–லிருந்து 1996 வரை

ஆட்சிப் பீடத்திலே அமர்ந்த கருணை உள்ளம் கொண்ட தாயின் ஆட்சிக் காலத்தில் கேட்காமலேயே ஏழை எளிய மக்களுக்கும், கேட்காமலேயே அரசு ஊழியர்களுக்கும் அள்ளி அள்ளித் தந்த கொடை வள்ளலாக இருந்தார் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

1996—க்குப் பிறகு 1996—லிருந்து 2001 வரை நிதி சீர்கேடு ஏற்பட்ட காரணத்தால், நிதிநிலை பாழாக்கப்பட்ட காரணத்தால், கஜானா காலி என்ற நிலை இருந்த காரணத்தால், அடுத்த மாதச் சம்பளத்திற்கே கையில் பணம் இல்லை என்ற நிலை இருந்த காரணத்தால், மைய அரசும் — அங்கே ஆட்சியிலே இருந்தவர்கள் — அம்மாவின் ஆட்சிக்குக் கெட்ட பெயர் வர வேண்டுமென்ற நோக்கோடு செயல்பட்டு, தர ஒத்துக்கொண்ட பணத்தைக்கூட தராத காரணத்தால் தத்தளிக்கின்ற நிதிநிலையிலே தவிர்க்கமுடியாத நிலை ஏற்பட்டபோது, அம்மா சொன்னார் எனக்கு மனம் இடம் தரவில்லை, அரசு ஊழியர்களுக்கு அவர்களுக்கு உரிய சலுகைகளை உடனே தரமுடியாத அளவிற்கு கையிலே பணம் இல்லையே என்று மனம் பதறுகிறது, எப்படியும் பணத்தைச் சேர்ப்பேன், எப்படியும் பணம் கையிலே சேர்ந்தபிறகு தரலாம். இந்தச் சலுகைகளை சில காலம் தள்ளி வைக்கிறேன். அந்தச் சலுகைகளை உங்களுக்கு பணம் சேர்ந்தவுடன் உடனே தந்துவிடுவேன் என்ற வாக்குறுதியைத் தந்த தாய், சிக்கன நடவடிக்கைகள், சீர்திருத்தம் என்று வாக்குறுதி தந்துவிட்டோம். இலவச வேட்டி, சேலை மீண்டும் வர வேண்டும். மூன்றரை ரூபாய் அரிசி விலைத் திட்டம் மீண்டும் வர வேண்டும். இலவச மின்சாரம் உழவர்களுக்குத் தந்தாக வேண்டுமென்ற நோக்கோடு அரசு ஊழியர்களுக்கும் ஓய்வூதியம் பெறுவோருக்கும் தந்த வாக்குறுதியைக் காக்க வேண்டும் என்ற தலையாய கடமையோடு தாய் உள்ளத்தோடு தியாகச் செம்மலாக அதை ஈடேற்றுவதற்காகத்தான் நீங்களும் நானும் எவ்வளவு நேரம் முழிக்கிறோம் என்பதல்ல, அந்தத் தாய், அந்த பாசத் தாய் ஒரு நாளைக்கு இருபது மணி நேரம் அயராமல் உழைத்தார் என்றால் கொடுத்த வாக்குறுதிகளை ஈடேற்ற வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 5-20*

கொடுத்த அந்த வாக்குறுதிகளை ஈடேற்றுவதற்கு வழிவகைகளைக் கண்டறியவேண்டும் என்று காலையிலிருந்து மாலை வரை, கோட்டையிலே பல மணிநேரம் ஆய்வுகளை நடத்துவார். அதிகாரிகளோடு ஆய்வுகளை நடத்துவார். விவரம் புரிந்த அதிகாரிகள் எந்தெந்தத் துறைகளிலிருந்தாலும், அழைத்து ஆய்வுகளை நடத்துவார்.



அரசுக்கு அப்பாற்பட்ட நிலையிலே அறிஞர்கள் இருந்தாலும், ஆலோசனைகளைச் சொல்லுங்கள் என்று கூப்பிட்டு, ஆலோசனைகளைக் கேட்பார். கோட்டையைவிட்டு வீட்டிற்குச் சென்றால், நீங்கள் நம்பவேண்டும், சத்தியமாகச் சொல்கிறேன், ஒரு நாளைக்கு, இரவு 12-00 மணி வரைக்கும் உழைத்து, அதிகாரிகளை வைத்து, பிரச்சினைகள் என்னவென்று தெரிந்து, (மேசையைத் தட்டும் ஒலி) நாளைக்கு மக்களுக்கு எதைச் செய்ய வேண்டும், நாட்டு மக்களுக்கு நல்லதைச் செய்ய வேண்டும், நல்லதைச் செய்ய முடியவில்லையென்றால், முதலமைச்சராக இருந்து என்ன பலன் என்று, இரவு 12 மணி வரைக்கும் உழைப்பார்.

விடியற்காலமே எழுந்து விடுவார். இப்படி உழைக்கின்ற ஓர் உன்னதத் தலைவியை, உன்னதத் தலைமகளை, தமிழ்த்தாய் பெற்றிருக்கின்ற பெருமை தமிழகத்தைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டு மக்களைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி உழைத்த காரணத்தால், இப்படி இரவு, பகல் என்று பாராமல், தியாக உணர்வோடு, தனக்கென வாழாமல், நாட்டு மக்களுக்காக உழைத்த காரணத்தால்தான், கொடுத்த வாக்குறுதிகளை ஈடேற்றும்வகையில், கையிலே பணம் சேர்ந்தவுடன் அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியப் பெருந்தகைகளுக்கும், ஓய்வூதியம் பெறுகின்ற அந்தப் பயனாளிகளுக்கும் சொன்ன வாக்குறுதிகளை ஈடேற்றினார். தாராளமாகத் தந்துவிட்டார். இன்னும் நிதிநிலையைப் பெருக்குவார். அம்மாவிற்கு அந்தத் திறமை இருக்கிறது.

சிங்கத்தைப் போன்ற துணிவுமிக்க அம்மாவிற்கு அளப்பரிய ஆற்றல் இருக்கிறது. இறைவன் தந்த அறிவு, ஞானம் இருக்கிறது. கடின உழைப்பு இருக்கிறது. இன்னும் நிதியினைப் பன்மடங்கு பெருக்குவார். (மேசையைத் தட்டும் ஒலி) பல சலுகைகளைத் தருவார். (மேசையைத் தட்டும் ஒலி) ஏழைகளுக்குத் தருவார். (மேசையைத் தட்டும் ஒலி) அவை இருந்தால், அவை இன்னும் 1 மாதம், 2 மாதம் இருந்தால், இன்னும் பல, பத்தென்ன, இருபதென்ன, நூற்றுக்கணக்கான 110 Statement மூலமாக ஏழைகளின் வயிற்றில் பாலை வார்த்துக்கொண்டேயிருப்பார். (மேசையைத் தட்டும் ஒலி) அவை இல்லாத நேரத்திலும், அம்மா அவர்கள், சேர்க்கின்ற பணத்தை வைத்து, சேமிக்கின்ற பணத்தை வைத்து, பணத்தைச் சேகரித்து, அந்தப் பணத்தின் மூலமாக தமிழகத்து மக்கள் வயிற்றில் பாலை வார்க்கும் திட்டங்களைத் தொடர்ந்து அறிவித்துக்கொண்டேயிருப்பார். இது, எல்லாம் வல்ல இறைவன் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குத் தந்த அளப்பரிய சக்தி. அந்த இறை சக்தி, அம்மாவிற்குத் தொடர்ந்து வெற்றியினைத் தந்துகொண்டேயிருக்கும் என்பதனை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து, மைய அரசு, Rashtriya Sam Vikas Yojana என்ற ஒரு திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறது. இந்தத் திட்டத்திலே, தமிழகத்திலே, திருவண்ணாமலை, திண்டுக்கல், கடலூர், நாகப்பட்டினம், சிவகங்கை ஆகிய இந்த ஐந்து மாவட்டங்களை மட்டும், மிகவும் பின்தங்கிய மாவட்டங்கள் என்ற கணக்கில் கொண்டுவந்து, அதற்கு infrastructure facilities தரவேண்டுமென்று, எப்படி இப்படியொரு கணக்கிற்குக் கொண்டுவந்தார்கள் என்று தெரியவில்லை, தந்திருக்கிறார்கள். ஒருவேளை, சிவகங்கை மாவட்டம் இதில் சேர்க்கப்பட வேண்டும் என்பதற்காக, திருவண்ணாமலை, திண்டுக்கல், கடலூர், நாகப்பட்டினம், சிவகங்கை என்று ஐந்து மாவட்டங்களைச் சேர்த்துவிட்டு, தமிழகத்திலே மிகவும் பின்தங்கிய நிலையிலே இருக்கிற தருமபுரி மாவட்டம் விடுபட்டுவிட்டது. பெரம்பலூர் மாவட்டம் விடுபட்டுவிட்டது. ஜி.கே. மணி இல்லை. விழுப்புரம் மாவட்டமும் -- திரு. கணேசன் அவர்களே — விடுபட்டுவிட்டது. இப்படி, இராமநாதபுரம் மாவட்டமும் விடுபட்டுவிட்டது. சேலம் மாவட்டமும் விடுபட்டுவிட்டது. உண்மையிலேயே பின்தங்கியிருக்கின்ற மாவட்டங்களை டெல்லியிலே இருக்கின்றவர்கள் மறந்துவிட்டார்கள். குறிப்பாக, அதிகமான வடபகுதி மாவட்டங்களையும் மறந்துவிட்டார்கள். மைய அரசு இதை மறுபரிசீலனை செய்து, இப்படி விடுபட்ட, உண்மையிலேயே பின்தங்கியிருக்கின்ற மாவட்டங்களை, பாரபட்சமின்றி, இந்த உதவித் திட்டத்தில் கொண்டுவர வேண்டும். அதற்கு நிதியினை ஒதுக்க வேண்டும். மைய நிதியமைச்சர், பாரபட்சம் இல்லாமல் தமிழகத்தினுடைய நலிந்த, உண்மையிலேயே நலிந்த மாவட்டங்களை வஞ்சிக்காமல், அதற்கு நிதியொதுக்க வேண்டும். நீங்கள் அதற்குப் பாடுபட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

நான் இதை முடிப்பதற்கு முன்பு, இப்படி Planning and Development துறையாக இருந்தாலும்சரி, எந்தத் துறையாக இருந்தாலும்சரி, பேசுகின்றபோது, சகோதரர் துரைமுருகன் அவர்கள் சொன்னார், முதலமைச்சர் எதற்கெடுத்தாலும் மற்ற அமைச்சர்களின் சார்பில் பேசலாமா என்று சொன்னார். The responsibility and duty of the Cabinet is joint and several. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் அமைச்சரவையினுடைய தாயாக விளங்குகிறார். எந்த அமைச்சர் சார்பிலும் தமிழகத்தினுடைய முதலமைச்சர், எந்த நேரத்திலும் எதையும் அறிவிக்கலாம். எதையும் கூறலாம். She has got that Constitutional and legal right to represent each and every Minister on any subject என்பதுதான் நடைமுறை உண்மை. அந்த முறையிலே அனைத்துத் துறைகளுக்கும்



தாயாக விளங்குகிற தாய், அறிவு, ஞானம் மிக்க தாயாக இருக்கின்ற காரணத்தினால், அனைத்துத் துறைகளைப் பற்றியும் Finger tips knowledge வைத்திருக்கின்ற தாயாக இருக்கின்ற காரணத்தினால்— (மேசையைத் தட்டும் ஒலி) நான் பெருமைக்காகச் சொல்லவில்லை. இரண்டு வருடத்திற்கு முன்னால் ஒரு கூட்டத்தில் சில பேச்சு நடக்கிறது என்றால், என்ன பேசினோம் என்பதனை, என்ன கருத்துகள் பரிமாறப்பட்டன என்பதனை..

*பிற்பகல் 5–25*

**டாக்டர் க. பொன்முடி:** தலைவர் அவர்களே,..

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** No, I am not yielding Mr. Ponmudi; at the end you can raise. எந்தக் கருத்துகள் பேசப்படுகிறது என்பதனை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இரண்டு வருடம் கழித்துக்கூட, இந்தத் துறையிலே, இந்தக் கருத்தை இந்த அதிகாரி சொன்னார், இந்த அமைச்சர் சொன்னார் என்று அந்தக் கருத்துகளை, அந்தத் திட்டத்தை தனது நினைவில் வைத்து இரண்டு வருடங்கள் கழித்துக்கூட Photographic Memory என்று சொல்லக்கூடிய அளவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிப்பட்ட தெய்வீக ஞாபக சக்தி வைத்திருக்கின்ற ஒருவரை என் வாழ்நாளிலேயே நான் சந்தித்தது இல்லை. யாரும் சந்தித்திருக்க முடியாது. நான் சத்தியமாய் உண்மையைச் சொல்கிறேன், இப்படிப்பட்ட அளப்பரிய திறமை அம்மா அவர்களுக்கு இருக்கின்ற காரணத்தினால்தான், அனைத்துத் துறைகளைப் பற்றியும் அளப்பரிய ஞானத்தை கையிலே வைத்திருக்கிறார். அரைகுறை ஞானம் அல்ல. In each and everything our Hon.Chief Minister is aiming at perfection – total perfection, 100% perfection— இதுதான் மாண்புமிகு அம்மா (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய முறை. தன்னைப்போலவே தனது அமைச்சர்களாக இருந்தாலும் சரி, தன்னைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, 100% perfect–ஆக இருக்கவேண்டும், ஒவ்வொன்றிலும், 100% முழுமையாகச் செயல்பட வேண்டுமென்பதில் கண்டிப்பாக இருக்கிறார், கண்ணும்கருத்துமாக இருக்கிறார். இதனால்தான், புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இப்படிப்பட்ட இமாலய வெற்றிகள் தொடர்ந்து கிடைத்துக்கொண்டிருக்கின்றன என்பதனை நான் கூறுவதில் பெருமைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்கள் இப்படிப்பட்ட நிலைகளை 'மேற்கொண்ட காரணத்தினால் தமிழகம், நான் ஏற்கெனவே,

சொல்லியிருக்கிறேன். முதல்நிலை என்ற பல சாதனைகளைப் பெற்றிருக்கிறது. விவசாயத் துறையை 70 சதவிகித மக்கள் நம்பியிருக்கிறார்கள். உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குகூட மிஞ்சாது என்ற பழமொழியில், வறுமைக் கோட்டின் எல்லைக்குக்கீழே வாழுகின்ற நிலையில் கிராம மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு Productivity increase வேண்டும். Production increase என்றால் அதிக நிலம் வேண்டும். நிலத்தை விரிவுப்படுத்த முடியாது. Productivity increase என்றால் உற்பத்தித் திறனைப் பெருக்கி மகசூலை அதிகப்படுத்தினால், வருமானம் மிகும். இது அம்மா அவர்களுடைய கிராமப்புறப் பொருளாதார அணுகுமுறை. இதிலே ஆய்வுகளை நடத்த வேண்டுமென்று கோவை விவசாயப் பல்கலைக்கழகத்திற்கு அறிவுரை வழங்கினார், கண்காணிக்கிறார். அப்படி கண்காணிக்கின்ற காரணத்தினால், இந்தியாவிலேயே அதிகப்படியான உற்பத்தித் திறனை தருகின்ற மாநிலம், sugarcane, கரும்பிலும், ground nut, கடலையிலும், சோளத்திலும், இந்தியாவிலேயே உற்பத்தித் திறனில் அதிக மகசூலைத் தருகின்ற மாநிலம் என்கின்ற ஆராய்ச்சியிலே அம்மாவினுடைய நேரடிப் பார்வை, Hi–tech Agriculture and precision Engineering in Agriculture என்பதனை அம்மா அவர்கள், விவசாயப் பல்கலைக்கழகத்தினுடைய துணை வேந்தரை அழைப்பார். துணை வேந்தரை அழைத்து, நேரடியாக ஆய்வுகளை நடத்துவார். திட்டங்கள் என்னவென்று கேட்பார். இப்படிச் செய்யுங்கள் என்று ஆணையிடுவார். அப்படிப்பட்ட அணுகுமுறையை மேற்கொண்ட காரணத்தினால், கிராமப்புறப் பொருளாதாரத்தில் 8 சதவிகித வளர்ச்சியினைப் பெறக்கூடிய அளவிற்கு, வறட்சியிலும் வெற்றியினைப் பெறக்கூடிய அளவிற்கு, சாதனையைப் படைத்திருக்கிறார், நமது அன்புத் தாய், தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்படித்தான் தரமான விதைகள் இருந்தால்தான், உற்பத்தித் திறன் அதிகமாகும். தரமான விதை இல்லையென்று, 2001–2002–ல் அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. சொன்னார், சட்டரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். சட்டத்தின்மூலமாக, கடும் சட்டத்தின்மூலமாக, அந்த Seed Law–வை நடைமுறைப்படுத்தி, அதன்மூலமாக, தரமான விதைகள் தந்து, உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று இந்தியாவிலேயே முதல்முறையாக, இதை நடைமுறைப்படுத்தி, இன்று கண்கூடான சாதனையை, நாம் பெறக்கூடிய அளவிற்கு, வெற்றியைத் தேடித் தந்திருக்கின்ற, வெற்றித்தாய் தமிழகத்தின் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்



(மேசையைத் தட்டும் ஒலி) என்பதனை நான் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். மற்றவையெல்லாம், பலவற்றை ஏற்கெனவே நான் அவையிலே என்னென்ன சாதனைகளை அம்மா அவர்கள் நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பதனை என்னுடைய நிதிநிலை இறுதிப் பேச்சிலே நான் கூறியிருக்கின்ற காரணத்தினால், அவற்றை மீண்டும் நான் சொல்ல விரும்பவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் தமிழகத்தினுடைய தலைமகளாய் விளங்குகின்ற தானைத் தலைவி இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இப்படி, உங்களுக்காக, நமக்காக, நாம் மக்களின் பிரதிநிதிகளாக இங்கு இருக்கின்றோம். நாட்டு மக்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்றுதான் அம்மா அவர்களுடைய அக்கறை. சட்டப்பேரவை இங்கு இருக்கிறது என்றால் கருத்து வேறுபாடுகள் நமக்குள் இருக்கலாம். கொள்கை மனமாச்சர்யங்கள் நமக்குள் இருக்கலாம். ஆனால், நம் மக்களுக்கு நாம் ஆற்ற வேண்டிய பணி ஒன்று இருக்கிறது, கடமை இருக்கிறது, கடப்பாடு இருக்கிறது. அதைச் செய்தாக வேண்டுமென்பதில் மிகவும் கவலையுடன், சுறுசுறுப்புடன் செயல்படுகின்ற தாய்தான் நமது புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 5–30*

நான் அவை உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அடிக்கடி மைய அரசைக் கேளுங்கள், மைய அரசைக் கேளுங்கள் என்று சொல்கிறீர்களே, இது நியாயமா என்று அன்புச் சகோதரர் திரு. பழனிசாமி அவர்கள் கூறுகிறார். இது நியாயம்தான். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களே சொன்னார். The financial powers are centralised in the hands of Central Government. Central Government is moving towards a unitary state of Constitution. Federal Constitution என்று சட்டரீதியாக இருந்தாலும்கூட ஆண்டு பலவாக மாநிலத்திற்குள்ள பண அதிகாரத்தை the financial power of the States படிப்படியாக மைய அரசால் பறிக்கப்பட்டு வருகின்ற நிலை இருக்கிறது. இதனால் மக்களை அன்றாடம் நேரடியாகச் சந்திக்கின்ற மாநிலத்திற்கு அதிக நிதி அதிகாரம் இல்லை என்றால், மக்களுக்கு என்ன தேவை என்பதை அறியக்கூடிய வாய்ப்புள்ள மாநில அரசுகள் மிகவும் ஒரு கேவலமான நிலைக்குத் தள்ளப்பட்டுவிடும். இந்த நிலை கூடாது. அண்ணாவின் கொள்கையான மாநில சுயாட்சிக் கொள்கையை இங்கே இருக்கின்ற பல இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் ஒத்துக்கொள்கிறார்கள். இந்தியாவிலே யாருக்கும் கிடைக்காத ஒரு வாய்ப்பு மாநிலத்திற்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று சொல்கிற இந்த அவையிலே இருக்கின்ற

பல இயக்கங்களுக்கு டெல்லியிலே தற்போது கிடைத்திருக்கிறது. இந்த வாய்ப்பை மக்களுக்காக நாம் பயன்படுத்த வேண்டும். மக்களுக்காக நீங்கள் பயன்படுத்த வேண்டும், ஆட்சியிலே இங்கு இருக்கிறபோது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்வேன்.

Service tax என்பது இன்று வளர்ந்து வருகின்ற பொருளாதாரத்திலே அதிகப்படியான 50 சதவிகித வருவாயை ஈட்டித் தரக்கூடியது. Service tax என்று பாரதப் பிரதமர் மன்மோகன் சிங் அவர்களே கூறி இருக்கிறார். அப்படி Primary sector என்று சொல்லக்கூடிய விவசாயத் துறையைவிட, Secondary sector என்று சொல்லக்கூடிய தொழில் துறையைவிட, Tertiary sector என்று சொல்லக்கூடிய அந்த சேவைத் துறையில் அதிகப்படியான வருமானம் வளர்ந்து வருகின்ற இந்தியாவில் கிடைக்கின்ற வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால் அதை மாநிலப் பட்டியலுக்குக் கொண்டுவர வேண்டும். அன்றே அண்ணா சொன்னார், தொடர்ந்து புரட்சித் தலைவர் சொன்னார், மாண்புமிகு அம்மா அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இதை மைய அரசு செவி மடுக்கவில்லை. மாறாக பொதுப் பட்டியலிலே இருந்த Service tax–ஐ மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டும். Residuary List of the Constitution, அதில் இருந்த அந்த Service tax–ஐ State List–க்கு கொண்டு வரவேண்டுமென்று 1998–லேயே முதலமைச்சர்கள் மாநாட்டிலே அன்று VAT என்ற இந்த மதிப்புக் கூட்டு வரி வரவேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டபோது கூறப்பட்டிருக்கிறது. அன்றைய தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. கருணாநிதியும் அதில் பங்கேற்று இருப்பார் என்று நான் நம்புகிறேன். ஆனால் அது காற்றில் பறக்கவிடப்பட்டு விட்டது. Service tax இன்று Union List–க்கு சென்றுவிட்டது. தற்போது நிதி அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு சிதம்பரம் அவர்கள் மாநிலங்களை ஏன் மறந்துவிட்டார் என்று புரியவில்லை. மைய அரசு 1998–லே முதலமைச்சர் மாநாட்டிலே கொடுத்த வாக்குறுதி. தொடர்ந்து பி.ஜே.பி. ஆட்சியிலேயும் கொடுக்கப்பட்ட வாக்குறுதி. தற்போது அந்த வாக்குறுதி காற்றிலே பறக்கவிடப்பட்டு, Service tax has gone to the Union List. States are deprived of the legitimate financial rights which they are entitled to என்ற முறையிலே மாநிலங்களுக்கு சட்டரீதியாக வரக்கூடிய வாய்ப்புள்ள அந்த சேவை வரியை அங்கே எடுத்துச் சென்றுவிட்டார்கள். இப்படி மாநில சுயாட்சி என்று சொல்கிறோம். மாநிலத்திற்குள்ள பண அதிகாரத்தை மைய அரசு படிப்படியாக பறித்துவிட்டால், மாநிலங்கள் மக்களுக்கு எந்த சேவையுமே செய்ய முடியாத ஓர் அவலநிலை உருவாகிவிடும்.



VAT வர வேண்டுமென்று சொல்கிறார்கள். VAT வந்தால், 1300 கோடி ரூபாய் VAT loss மதிப்புக் கூட்டு வரியிலே தமிழகத்திற்கு இழப்பு வரும். கணக்கிட்டு புள்ளிவிவரத்தோடு மைய அரசுக்குச் சொல்லி இருக்கிறோம். அதைப்போலவே, VAT நடைமுறைக்கு வந்தால் C.S.T. should get abolished. அது போய்விடும். C.S.T. மைய அரசு விதிக்கின்ற அந்த வருவாய், அந்த வரி போய்விடும். Sales tax போய்விடுமென்றால் 1,500 கோடி ரூபாய் தமிழகத்திற்கு இழப்பு ஏற்படும். சுமாராக 3,000 கோடி ரூபாய் ஆண்டுக்கு இழப்பு ஏற்படும். VAT நடைமுறைப்படுத்தி விடுவோமென்றால், Our hands are tied. We cannot levy any further tax at all in future in Tamil Nadu. Commercial Taxes என்ற முறையிலே எந்த வரியும் தமிழகமும், எந்த மாநிலமும் நினைத்தாலும் விதிக்க முடியாத அளவிற்கு நமது கைகள் விலங்குகளால் கட்டப்பட்டுவிடும். நம் மக்களுக்குத் தேவை ஒரு ஆயிரம் கோடி ரூபாய்க்கு ஏழைகளுக்கு நல்ல திட்டங்கள் தேவை. பணம் வேண்டுமென்றால் ஒரு வரி விதிப்பைக் கொண்டுவர நியாயமான வரி விதிப்பைக் கொண்டுவரக்கூட நமக்குள்ள அதிகாரம் VAT வந்தால் பறிக்கப்பட்டுவிடுகிறது.

பிற்பகல் 5–3.5

அந்த நிலையை உருவாக்கினால் மைய அரசின் காலிலே நாம் விழ வேண்டும். மைய நிதி அமைச்சர் காலிலே விழ வேண்டும். மாநிலத்தை யார் ஆட்சி புரிகிறவர்களாக இருந்தாலும், மைய அரசினுடைய கட்டளைக்கு, ஆணைக்கு இணங்காத அரசை தொல்லைக்கு உள்ளாக்குகின்ற நிலையை அந்த VAT நடைமுறைக்கு வந்து, CST நடைமுறைக்கு வந்து, அதை நடைமுறைப்படுத்துகிறபோது இழப்பு ஏற்படும். இதை ஈடுகட்டத்தான் நாங்கள் கேட்டோம், மாண்புமிகு அம்மா அவர்கள், முதலமைச்சர் மாநாட்டிலே தெளிவுபடச் சொன்னார்கள், VAT loss should be compensated continuously, not as 100% for the first year, 75% for the second year, 50% for the third year — அப்படி என்றால் இரண்டாவது ஆண்டிலே 25 சதவிகித இழப்பை யார் ஈடு கட்டுவார்கள்? 3–வது ஆண்டிலே 50% இழப்பை யார் ஈடு கட்டுவார்கள்? வரி போடமுடியாது. VAT–ஐ ஏற்றுக்கொண்டால் வரி போட முடியாது. மைய நிதி அமைச்சர் காலை பிடித்தால்தான் அந்த 50 சதவிகிதம் பணம் கிடைக்கும். மைய நிதி அமைச்சர் காலை பிடித்தால்தான் இரண்டாவது ஆண்டிலே அந்த 25 சதவிகிதம் பணம் கிடைக்கும். எனவேதான் நாங்கள் சொன்னோம், எனவேதான் அம்மா சொன்னார், VAT–ஐ நடைமுறைப்படுத்த வேண்டுமென்றால், வளர்ந்து விட்ட மாநிலம் தமிழகம், தமிழகத்திலே தற்போது இருக்கின்ற வரி

12½ % is the neutral rate. 4% – 12½% proposed rates. ஆனால், தமிழகத்திலே *13%, 14%, 15%, 16%, 17%,* என்று அதிகப்படியான வரியினை விதித்துக் கொண்டிருக்கிற மாநிலமாக தமிழகம் இருக்கிற காரணத்தால் வரியை, VAT வரியை நடை-முறைப்படுத்துகிறபோது இழப்பு, தொடர் இழப்பாக தமிழகத்திற்கு வரும். தொடர்ந்து நீங்கள் ஈடு கட்ட வேண்டாமா? குறைந்தபட்சம் Service tax–ஐ எங்களுக்குத் தாருங்கள், இப்படிப்பட்ட 3,000 கோடி ரூபாய் இழப்பை, Service tax மூலமாக ஈடுகட்ட வேண்டும். 'You bring law for devolution of Service tax to the States simultaneously when you introduce VAT law' என்று சொன்னோம். பி.ஜே.பி. ஆட்சி, அன்று ஒத்துக்கொண்டது. திரு. சிதம்பரத்தினுடைய நிதி அமைச்சகம் தற்போது அதை ஒத்துக்கொள்ளவில்லை. இதை நான் சொல்வதற்குக் காரணம், அரசியலைப் பார்க்க வேண்டாம். கட்சி மாச்சரியங்களை பார்க்க வேண்டாம். மாநிலத்தினுடைய அதிகாரங்களை, பண அதிகாரங்களைப் பறிக்கின்ற அணுகுமுறையை மைய அரசு மேற்கொள்கிறது. பறிக்கின்ற அணுகுமுறையை மைய நிதி அமைச்சகம் மேற்கொள்கிறது. இதற்கு நாம் அடிபணிந்துவிட்டால் தமிழகத்தை, மைய அரசுக்கு தொடர்ந்து அடிமையாக்கி விடுவோம் என்ற குற்றச்சாட்டிற்கு நீங்கள் யாரும் உள்ளாகிவிடக்கூடாது என்று சொல்லி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அளப்பரிய முயற்சியை, இந்த மக்களின் வாழ்வில் ஏற்றத்தைத் தரவேண்டும், ஏழைகளின் வாழ்க்கையில் உய்வினைத் தரவேண்டும், உழைக்கும் வர்க்கம், நெசவு குடிமக்கள், உழவர் பெருமக்கள் உய்வினைப் பெற வேண்டும் என்ற முறையில் அம்மா அவர்கள் பாடுபடுகின்ற, நடைமுறைப்படுத்துகின்ற திட்டங்களுக்கும், வளர்ச்சிப் பணிகளுக்கும் உங்களுடைய ஒத்துழைப்பு, உங்களுடைய ஆதரவு அரசியலுக்கு அப்பாற்பட்டு இருக்க வேண்டும். அதுதான் தமிழக மக்களுக்கு நன்மையைத் தரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பல வெட்டுத் தீர்மானங்களைத் தந்திருக்கிறார்கள். அவற்றை மாண்புமிகு அம்மா அவர்களுடன் கலந்து, அவற்றிற்கு பரிகாரம் தேட நான் ஆவன செய்வேன் எனச் சொல்லி, மாண்புமிகு உறுப்பினர்கள் பல கருத்துகளையும் இங்கே சொல்லி இருக்கிறார்கள், அவையும் ஆய்ந்து பரிசீலிக்கப்படும் என்று சொல்லி, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டும் என்று நான் பணிவோடு வேண்டுகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. *(குறுக்கீடு)*

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், Joint responsibility, collective responsibility பற்றியெல்லாம் குறிப்பிட்டார்கள். நான் அவரிடம் தெரிந்துகொள்ள விரும்புவது, collective responsibility என்பது each Minister is responsible to the individual Department, as well as he is collectively responsible to the others' Departments. This is the basic principle of collective responsibility. என்னைப் பொறுத்தவரையில், முதலமைச்சருக்குத் திறமை இருக்கலாம், நான் அதிலே சந்தேகப்படவில்லை. ஆனால் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, பொன்முடி நீங்கள் தாமதமாக வந்தீர்கள். அதற்கு முன்னாலே பேசி முடிக்கப்பட்டு விட்டது. திரு. ஞானசேகரன், சொல்லுங்கள். *(குறுக்கீடு)*

**டாக்டர் க. பொன்முடி:** ஏங்க, ஒரு நல்ல intellectual arguments–க்கு கொஞ்சம் நேரம் கொடுங்கள், சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், சொல்லுங்கள். *(குறுக்கீடு)* இதுசம்பந்தமாக முன்பே விவாதம் பண்ணி முடித்தாகிவிட்டது. *(குறுக்கீடு)* திரு. ஞானசேகரன். *(குறுக்கீடு)*

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவரவர்களே, நல்ல விவாதம். இதற்குக்கூட விட மாட்டேன் என்கிறீர்களே, நான் ஒன்றும் கேட்கவில்லையே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் மூன்று மானியக் கோரிக்கைகள் இருக்கின்றன. *(குறுக்கீடு)*

**டாக்டர் க. பொன்முடி:** ஆக, இந்த collective responsibility–சம்பந்தமாக நான் தெரிந்துகொள்ள விரும்புவது, ஒரு மானியம் படிக்கிறபோது, அந்த மானியத்திலே இருக்கிற அமைச்சர் அந்த அறிவிப்பை சொல்லலாம். உதாரணமாக, Commercial Tax–லே 3½ கோடி ரூபாய்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொன்முடி, இதைத்தான் சொல்கிறேன். நீங்கள் தாமதமாக வந்தீர்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** இல்லை, நான் முதலிலே இருந்து கேட்டுக்கொண்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் தாமதமாக வந்தீர்கள். நீங்கள் வருவதற்கு முன்பே துரைமுருகன் இந்தப் பிரச்சினையை எழுப்பி, பேசி முடித்துவிட்டோம். திரு. ஞானசேகரன், சொல்லுங்கள். (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவரவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், சொல்லுங்கள். (குறுக்கீடு) போதும், போதும். (குறுக்கீடு) போதும், போதும். உட்காருங்கள். திரு. ஞானசேகரன். (குறுக்கீடு) திரு. கருணாகரன் (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** ஒரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசியதை முழுமையாக நீங்கள் கவனிக்கவில்லை. Our Hon'ble Chief Minister is a personality of total perfection. She is craving, aiming and achieving for total perfection in each and every Ministry. ஒவ்வொரு அமைச்சரையும் தகுதியுள்ள அமைச்சராக, திறமைமிக்க அமைச்சராக, உருவாக்கித் தந்திருக்கின்ற திறமைசாலிதான் omni–potent personality எங்கள் Hon'ble Chief Minister. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன். (குறுக்கீடு)

**டாக்டர் க. பொன்முடி:** நானும் அதைத்தான் சொல்கிறேன். It should not become a kitchen cabinet.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி மன்ற அமைப்புகளுக்கு நிதி ஒதுக்கீடு சம்பந்தமான விஷயத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே விரிவாகச் சொன்னார்கள். மத்திய அரசாங்கத்திடமிருந்து மாநிலத்திற்குக் கிடைக்கவேண்டிய அதிக அதிகாரங்கள், அதிக நிதி போன்றவற்றில் இப்போது அவர் என்ன proposals–ஐ அல்லது ஆலோசனைகளைச் சொன்னாரோ, இவற்றை எல்லாம் எங்கள் கட்சியைப் பொறுத்தவரை நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிற பிரச்சினைதான்; ஏற்றுக் கொண்டிருக்கிற பிரச்சினைதான். இனியும் வலியுறுத்துவோம். என்னுடைய கேள்வி, உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி வழங்குவது சம்பந்தமாக 1996–2001-ல் முதல் நிதி ஆணைக் குழு முதல் வருடத்தில்



8 சதம் தொடங்கி, 9,10,11 என்று 2001 முடிகிறபோது 12 சதம் தருவது என்று வழிகாட்டுதல் கொடுக்கப்பட்டது. அன்றைய தி.மு.க. அரசு அதை அமலாக்கவில்லை. 8 சதமே கொடுக்கப்பட்டது. இரண்டாது நிதி ஆணைக் குழு 2001–2006, இந்த period–ல் வழங்கப்பட்டது. இப்போதும் 8–ல் தொடங்கி 10 சதவீதம் வரை தரவேண்டுமென்று பரிந்துரை உள்ளது. நீங்களும் எட்டோடு நிறுத்திக் கொண்டீர்கள். உங்களில் பல கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். இந்த விஷயத்தைப் பொறுத்தவரை சரியான விஷயத்தில் ஒரே நிலையில் அமல் நடத்தியிருக்கிறீர்கள். அந்தக் காலத்தில்......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கருத்தைச் சொல்லிவிட்டீர்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை, இல்லை. நான் சொல்லி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. (குறுக்கீடுகள்)

## (அ) கோரிக்கை எண் 1 – மாநிலச் சட்டமன்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 1. மாநிலச் சட்டமன்றம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஆர். கிருஷ்ணன், இருக்கையில் இல்லை. திரு. ஆர். கிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே.இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை. திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை. திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. க. சிவராஜ், இருக்கையில் இல்லை. திரு. க. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.



திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை. திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.வி திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. அ. அசோகன், இருக்கையில் இல்லை. திரு. அ. அசோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. (குறுக்கீடுகள்)

திருமதி எ.எஸ். மஹேஸ்வரி, இருக்கையில் இல்லை. திருமதி எ.எஸ். மஹேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.13,13,30,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடுகள்)

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (ஆ) கோரிக்கை எண் 2 - ஆளுநர் மற்றும் அமைச்சரவை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 2 – ஆளுநர் மற்றும் அமைச்சரவை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ. இரா. மலையப்பசாமி :** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன். (குறுக்கீடுகள்)

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா. (குறுக்கீடுகள்)

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை. திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை. திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை. திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை. திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா.சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.



"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.13,93,07,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடுகள்)

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (இ) கோரிக்கை எண் 15 – நிதித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 15, நிதித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திருமதி காசாம்பு பூமாலை, இருக்கையில் இல்லை. திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. வேல் முருகன், இருக்கையில் இல்லை. திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை. திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை. திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோவை தங்கம்.



**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன். *(குறுக்கீடுகள்)*

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

**"நிதித் துறை பற்றிய 15 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.393,92,54,000/–, மூலதனக் கணக்கில் ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.18,27,04,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.** *(கூச்சல்—குழப்பம்)*

**ஏற்போர் 'ஆம்' என்க.** **(ஆம்)**

**மறுப்போர் 'இல்லை' என்க.** **(இல்லை)**

**ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.**

**ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.**

**அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.**

**(ஈ) கோரிக்கை எண் 35 – திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மானியக் கோரிக்கை எண் 35, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை.* வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. அ.இரா. மலையப்பசாமி. *(குறுக்கீடுகள்)*

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை. திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. *(குறுக்கீடுகள்)*

திருமதி காசாம்பு பூமாலை, இருக்கையில் இல்லை. திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை. திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.



திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை. திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை. திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

பிற்பகல் 5–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.124,64,10,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.8,33,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

### (உ) கோரிக்கை எண் 37 – பொதுத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 37 – பொதுத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.



**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை. திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திருமதி காசாம்பு பூமாலை, இருக்கையில் இல்லை. திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

டாக்டர் ஆர். கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை. டாக்டர் ஆர். கோவிந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை. திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை. திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை. திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** நான் வலியுறுத்துகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

**திரு. துரைமுருகன்:** அவர் வலியுறுத்துகின்றேன் என்று சொல்கின்றார்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, (குறுக்கீடு) சொல்லுங்கள், சொல்லுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். நீங்கள் என்ன அவருக்கு வக்கிலா? திரு. துரைமுருகன், உட்காருங்கள், திரு. ஞானசேகரன், சொல்லுங்கள். என்னவென்று சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகின்றது.

ஏற்போர் 'ஆம்' என்க. (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை, I want Division. எல்லோருமே Division கேட்கின்றோம். எல்லோருமே Division கேட்கின்றோம். I want Division. Division–க்கு விடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் தலைவர் விருப்பப்பட்டால்தான் Division–க்கு விடமுடியும். பேரவைத் தலைவர் விருப்பப்படாவிட்டால் விடமுடியாது. குரல் ஓட்டுக்கு விடுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) தீர்மானம் வெற்றி பெற்றது. நிதியமைச்சர் அவர்களுடைய தீர்மானம் வெற்றி பெற்றது.

"பொதுத் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் *37*–ன்கீழ் வருவாய்க் கணக்கில் *ரூ.81,23,13,000/–* மற்றும் மூலதனக் கணக்கில் *ரூ.10,00,00,000/–* ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகின்றது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## (ஊ) கோரிக்கை எண் 48 – ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் *48* – ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை. திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திருமதி காசாம்பு பூமாலை, இருக்கையில் இல்லை. திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

டாக்டர் ஆர். கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை. டாக்டர் ஆர். கோவிந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.



திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை. திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை. திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை. திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை. திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 48 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,831,13,00,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**(எ) கோரிக்கை எண் 25 – விட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை**

**(ஏ) கோரிக்கை எண் 28 – செய்தி மற்றும் சுற்றுலாத் துறை–சுற்றுலா**

**(ஐ) கோரிக்கை எண் 27 – செய்தி மற்றும் சுற்றுலாத் துறை**



**(எ) கோரிக்கை எண் 25 – வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 25 – வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை. மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.231,97,37,000/–, மூலதனக் கணக்கில் ரூ.22,00,11,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.115,50,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2893, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்களுக்கும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய இடத்தில் தமிழ்நாட்டில் வேண்டும் இடத்தில் வீட்டுமனை ஒன்று ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.231,97,37,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,00,11,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.115,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3522. திரு. ஐ. கணேசன்.

[2005 ஏப்ரல் 11

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எடப்பாடியில் வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டு விற்பனை செய்யப்படாமல் உள்ள வீடுகளை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.231,97,37,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,00,11,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.115,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4347, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதியில் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் அரசு மானியத்துடன் வீடுகள் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.231,97,37,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,00,11,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.115,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4655, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 5223, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் 2-வது தொகுதிக்குட்பட்ட மிட்டா அய்யம் பெருமாம்பட்டி கிராமத்தில் 20 ஆண்டுகளுக்கு முன்பாக வீட்டு வசதி வாரியத்தின்மூலம் ஏழை குறுவிவசாயிகளின் நிலங்களை தரிசு நிலம் என கையகப்படுத்துவதாக அரசு கூறியது. இதுவரை விவசாயிகள் விவசாயம் செய்து வருகிறார்கள். ஆகவே, அரசு நிர்வாக செலவினை பெற்றுக்கொண்டு மீண்டும் குறு விவசாயிகளிடம் விவசாய நிலங்களை ஒப்படைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



2005 ஏப்ரல் 11] [திரு. மு. கார்த்தி]

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.231,97,37,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,00,11,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.115,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5274, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வீட்டு வசதி துறையினரால் கட்டப்பட்டுள்ள வீடுகள் தரமற்றதாக இருப்பதால், அங்கு வசிக்கும் மக்களுக்கு இலவசமாக ஆயுள் இன்சூரன்ஸ் செய்து கொடுக்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.231,97,37,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,00,11,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.115,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5810, திருமதி காசாம்பு பூமாலை, இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 6244, திரு. சி. சண்முகம்.

**திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.231,97,37,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,00,11,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.115,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7286, திரு. ஜி.கே. மணி. இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 2789, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.231,97,37,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,00,11,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.115,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3303, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3880, திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 5553, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பேராவூரணி தொகுதியிலுள்ள அலிவலம், குறிச்சி, துறவிக்காடு, புனல்வாசல், திருச்சிற்றம்பலம், செருவாவிடுதி, இடையாத்தி, பூவாருள் கிராமத்தில் உள்ளவர்களுக்கு பட்டுக்கோட்டை வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கத்தின்மூலம் கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.231,97,37,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,00,11,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.115,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3955, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.231,97,37,000/–, மூலதனக் கணக்கில்



ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,00,11,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.115,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7505, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள் மொத்த தொகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்துள்ளவற்றிற்கு முதிர்வு காலம் முடிந்தபின் கிரயப் பத்திரத்தை உரிமையாளர்களுக்கு ஒப்படைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிந்து, வழிமொழிந்து, திரும்பப்பெற்றுக் கொள்கிறேன்.

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.231,97,37,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,00,11,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.115,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

பிற்பகல் 5–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6482, திருமதி எ.எஸ். மஹேஸ்வரி, இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 241, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை நகரில் டி.எப்.ஓ. காம்பவுண்டில் உள்ள வீட்டு வசதி வாரிய வீடுகளுக்கு சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து மாடிகளுக்கு சிறுவாணித் தண்ணீர் செல்ல சின்டெக்ஸ் தொட்டிகள் அமைத்துக் கொடுத்தும் வீட்டு வசதி வாரியம் தண்ணீர் வழங்கவில்லை. தண்ணீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.231,97,37,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,00,11,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.115,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 632, திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, "சித்தலபாக்கம் வீட்டு வசதி வாரிய மனைப் பிரிவுகளில் அரசால் கட்டப்பட்டுள்ள பள்ளிக் கட்டடம், சமுதாயக் கூடங்கள், அந்த மனைகளில் வீடுகட்டி குடியேறாததால் பாழ்பட்டு சமூக விரோதச் செயலுக்குப் பயன்படுவதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.231,97,37,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,00,11,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.115,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3326, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை எல்லிஸ் நகர், திண்டுக்கல் இராணி மங்கம்மாள் காலனி போன்று தமிழகமெங்கும் உள்ள வீட்டு வசதி வாரியத்தால் குடியிருக்கும் மக்களுக்குப் பத்திரம் கிடைக்கவும், தேவையற்ற மனைகளைச் சாலை போடவும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.231,97,37,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,00,11,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.115,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நன்மாறன், நீங்கள் திரும்பப் பெறவில்லையே? ஏனென்றால் ஒரே கட்சியிலே வெவ்வேறு விதமான நிலைப்பாடு எடுக்கிறீர்கள்? (குறுக்கீடு) சரி.

**திரு. என். நன்மாறன்:** ரைட் சார். அமைச்சரின் பதிலுரைக்குப்பிறகு நான் திரும்பப் பெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3265, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வீட்டு வசதி வாரியத்தின்மூலம் கட்டப்பட்ட வீடுகள் பல இடங்களில் விற்பனையாகாமல் உள்ளதையும் அதன்மூலம் வாரியத்திற்கு ஏற்பட்டுள்ள நஷ்டத்தையும் தவிர்ப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.231,97,37,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,00,11,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.115,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3064, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5490, திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை தொகுதியில் பட்டுக்கோட்டை வீட்டு வசதி சங்கம்மூலம் வீட்டு வசதிக் கடன் அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.231,97,37,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,00,11,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.115,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4229, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறை சட்டமன்றத் தொகுதியிலுள்ள ஆழியார் நகர் பகுதியில் வீட்டு வசதி வாரியம்மூலம் நீண்டகால கடனுக்கு வீடு கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.231,97,37,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,00,11,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.115,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4154, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரையிலுள்ள வீட்டு வசதி வாரியத்தின்மூலம் மக்கள் வீடு கட்ட கடன் வழங்கவும், இச்சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டவும் வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.231,97,37,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,00,11,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.115,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4275, திரு. எஸ். தாமோதரன்.

**திரு. எஸ். தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகாசியில் தொழிலாளர்களுக்கு 1,000 வீடுகள் கொண்ட குடியிருப்பு கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.231,97,37,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,00,11,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.115,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4483, திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6816, திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு அரசு வீட்டு வசதி வாரியத்தால் ஓசூர் பகுதியில் உள்ள நிலங்களை கையகப்படுத்தியுள்ள நில உடைமைதாரர்களுக்கு பல ஆண்டுகளாக வழங்கப்படாத ஈட்டுத் தொகையை (நில மதிப்பீட்டுத் தொகை) உடனே வழங்கிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.231,97,37,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,00,11,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.115,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7222, திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகாசி நகரில் ஏழை எளியவர்களுக்கு வீடுகள் கட்டித்தர வேண்டியது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.231,97,37,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,00,11,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.115,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7278, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வீட்டு வசதி வாரியம் கையகப்படுத்தி லே–அவுட் போடாமல் உள்ள நிலங்களை மீண்டும் பழைய நில உரிமையாளர்களுக்கே திருப்பித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.231,97,37,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,00,11,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.115,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7162, திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6199, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறந்தாங்கியில் அரசு ஊழியர்களுக்கு அடுக்குமாடி வீடுகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.231,97,37,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.22,00,11,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.115,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6119, திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

## (ஏ) கோரிக்கை எண் 28 – செய்தி மற்றும் சுற்றுலாத் துறை– சுற்றுலா

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 28 – செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – சுற்றுலா, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.18,03,80,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.14,38,46,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2651, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கபிலர்மலை தொகுதி, வேலூர், காவிரிக் கரையில் அமைந்துள்ள வரலாற்றுப் பிரசித்திபெற்ற ஸ்ரீகாசி விஸ்வநாதர் கோயில் குடமுழுக்கு நடத்தவும், ஆலயத்தின் வரலாற்றுச் சிறப்பை அனைவரும் அறிந்துகொள்ளும்வண்ணம் சுற்றுலாத் தலமாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,03,80,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,38,46,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3552, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு சுற்றுலாத் துறையில் நீண்ட நாட்களாகப் பணிபுரியும் தற்காலிகப் பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,03,80,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,38,46,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4339, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதியில் திருமுருகப்பெருமானின் அறுபடைவீடுகளில் ஒன்றான திருத்தணியைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,03,80,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,38,46,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4719, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5393, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, சோலையார்பேட்டை ஒன்றியம், ஏலகிரி மலைப் பகுதி மிகவும் இயற்கை நிறைந்த பகுதியாகும்.

சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்மூலம் தங்கும் விடுதி மற்றும் உணவு விடுதி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,03,80,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,38,46,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4955, திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6975, திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7071, திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2786, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,03,80,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,38,46,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3907, திரு. எச்.எம். ராஜு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5529, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பேராவூரணி தொகுதியில் உள்ள மனோரா சுற்றுலாத் தலத்தில் சிறுவர் பூங்கா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற



ரூ.18,03,80,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,38,46,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6486, திருமதி எ.எஸ். மஹேஸ்வரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7220, திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஸ்ரீவில்லிப்புத்தூர் காட்டு அழகர் கோவில் வனப் பகுதியை சுற்றுலா மையமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,03,80,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,38,46,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4859, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாநகராட்சிக்குச் சொந்தமான போஸ் மைதானத்தில் நிரந்தரமான பொருட்காட்சி மற்றும் விற்பனை நிலையங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,03,80,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,38,46,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6805, திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விட்டில் இங்கிலாந்து என்று அழைக்கப்படும் தளியில் உள்ள ஏரியில் படகு சவாரி மையம் அமைக்கவும், சிவன் கோவில் இருக்கும் தேவர்பெட்டா ஆகிய இரு இடங்களையும் சுற்றுலா மையமாக்க ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.69 இலட்சத்தை உடனே வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,03,80,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,38,46,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3142, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6041, திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5867, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் உள்ள ஆழியாறு அணை, மங்கிபால்ஸ் நீர்வீழ்ச்சி பகுதிகளை சுற்றுலா மையமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,03,80,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,38,46,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4102, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை, தொண்டாமுத்தூர் ஒன்றியத்தில் உள்ள வைதேகி நீர்வீழ்ச்சியை சுற்றுலாத் தலமாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,03,80,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,38,46,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3315, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மன்னர் திருமலைநாயக்கர் அரண்மனையில் செய்யப்படும்



ஒலி, ஒளி காட்சிக்கான புதிய இயந்திரம் டெல்லியிலிருந்து வருவதில் உள்ள தாமதத்தைப் போக்கி விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,03,80,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,38,46,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3304, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3262, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், கோயில்கள் நிறைந்த மாவட்டம்; அங்கு வெளி மாநிலங்களிலிருந்து சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருகிறார்கள். அவர்கள் பார்த்துச் செல்கின்ற அளவில் மதுரை தெப்பக்குளத்தில் ஆண்டு முழுவதும் நீர் நிரப்பி படகுவிடவும், வண்டியூர் கண்மாயில் நீர் நிரப்பி படகுகள் விட்டு ஒரு சுற்றுலாத் தலமாக ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,03,80,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,38,46,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 631, திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாமல்லபுரம் சுற்றுலாத் தலத்தைத் தரம் உயர்த்துவது தொடர்பாக" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,03,80,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,38,46,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6664, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை-செஞ்சி-சாத்தனூர் அணை, ஜவ்வாதுமலை, படவேடு ஆகியவற்றை ஒருங்கிணைத்து சுற்றுலாப் பேருந்து இயக்குவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,03,80,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,38,46,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6247, திரு. சி. சண்முகம்.

**திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரும்பாலான சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் சிலைகள் கவனிப்பாரற்று பழுதடைந்த நிலையில் உள்ளதை அரசு உடனடியாகப் பராமரித்துப் பாதுகாக்க வேண்டியது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,03,80,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,38,46,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6202, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறந்தாங்கி தொகுதியில் உள்ள கோடியக்கரையை சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,03,80,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,38,46,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7273, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், பாலமதி, செங்காநத்தம், அமிர்தி, ஏலகிரி, ஜவ்வாது மலைகளுக்குச் சுற்றுலாத் துறையின்மூலம் அடிப்படை வசதிகளைப் பெருக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,03,80,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,38,46,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1159, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை எட்டிப்பட்டி தூவலை சுற்றுலாத் தலமாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,03,80,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,38,46,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1177, திரு. கா. சுந்தசாமி, இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 3953, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குமரி மாவட்டம், விளவங்கோடு தாலுகாவில், சிவலோகம் என்ற பகுதியை சுற்றுலாத் தலமாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை - சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,03,80,000/-- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,38,46,000/-ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2729, திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஸ்ரீபெரும்புதூரை ஒரு சுற்றுலா மையம் ஆக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,03,80,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.14,38,46,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4597, திரு. ஆர். கிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

பிற்பகல் 5–55

## (ஐ) கோரிக்கை எண் 27 – செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – செய்தி மற்றும் விளம்பரம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 27 – செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – செய்தி மற்றும் விளம்பரம். மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,07,21,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2830, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்கள் அவரவர்களது தொகுதிகளுக்குட்பட்ட அனைத்து துறை சார்ந்த விவரங்களையும்



பொது மக்கள் தெரிந்துகொள்வதற்காக அரசின் செலவில் அச்சிட்டுக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,07,21,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3542, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருட்டு வி.சி.டி. தயாரிப்பாளர்கள் மற்றும் விநியோகிப்பவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,07,21,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4341, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டத்தில் அரசு செய்தி மற்றும் விளம்பரங்களை வெளியிடாத சினிமா திரையரங்குகள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,07,21,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7138, திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 7167, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,07,21,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2787, திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,07,21,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5706, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,07,21,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6795, திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,07,21,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3313, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரையில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு சிலை



நிறுவ அரசின் அனுமதி விரைவில் கிடைத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,07,21,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3263, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சுதந்திரப் போராட்ட வீரர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களது பெயரை மதுரை விமான நிலையத்திற்கு வைக்க மாநில அரசு மைய அரசுக்கு உரிய பரிந்துரை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,07,21,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4851, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகம் முழுவதும் அனைத்து கிராமங்களிலும் கலைக் குழு மூலமாக குடும்பக் கட்டுப்பாடு மற்றும் எய்ட்ஸ் நோயின் தன்மையை பொது மக்களுக்கு விளக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,07,21,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4284, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சினிமாவில் ஆபாசக் காட்சிகளைத் தடை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,07,21,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6662, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக அரசின் பல்வேறு திட்டங்கள் மற்றும் மக்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் குறித்து மக்கள் அறிய வசதியாக மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும், மக்கள் கூடும் முக்கிய சந்திப்புகளிலும் விளம்பரப் பலகைகள் நிறுவ வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,07,21,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6484, திருமதி எ.எஸ். மஹேஸ்வரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6201, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாவட்ட அளவில் அனைத்துப் பத்திரிகை நிருபர்கள், போட்டோகிராபர்கள் ஆகியோருக்கு இலவசப் பேருந்து அனுமதிச் சீட்டு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.32,07,21,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு



வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலே தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பதிவேட்டிலே பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்பு என்னுடைய பதிலுரையிலே அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – சுற்றுலா பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பதிவேட்டிலே பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளை தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@@@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பதிவேட்டில்

---

@ 511 முதல் 538 வரையிலான பக்கங்களில் இணைப்பு–I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

@@ 539 முதல் 611 வரையிலான பக்கங்களில் இணைப்பு–II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

@@@612 முதல் 657 வரையிலான பக்கங்களில் இணைப்பு–III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். விவாதத்தில் கலந்துகொள்ளும் மாண்புமிகு உறுப்பினர்கள் இப்போது முன்மொழியப்பெற்ற 3 மானியக் கோரிக்கைகள்மீதும் தங்களுடைய கருத்துகளை ஒருங்கே தெரிவிக்கலாம். திரு. து. நெப்போலியன்.

**திரு. து. நெப்போலியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தி மற்றும் விளம்பரம், சுற்றுலா, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை என்ற 3 துறைகளிலே பேசுவதற்கு வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும், எங்களது கழகத் தலைவர், தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், இந்த மாமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் இனமான பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும், எங்கள் தளபதி அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 6–00*

செய்தி மற்றும் விளம்பரத் துறையை நான் முதலில் எடுத்துக்கொள்கிறேன். எல்லோருக்கும் பொதுவானதுதான் திரைப்படம். சிறியவர்கள், பெரியவர்கள் ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடு இல்லாமல் சாதி, இன, மொழிக்கு அப்பாற்பட்டு அனைவரும் பார்த்து மகிழக்கூடிய பொழுதுபோக்கு சாதனமாக விளங்கிய தமிழ் சினிமா 1949–ல் திராவிட முன்னேற்றக் கழகம் உருவானது முதல் இன்று வரை; 1967–ல், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தது முதல் இன்று வரை பெரிய புரட்சியை ஏற்படுத்தி, அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தி, ஆட்சிக் கட்டிலிலும் அமர உதவியிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. அந்தந்த காலகட்டங்களில், இந்த நாட்டை ஆண்ட முதலமைச்சர்கள், தமிழ்த் திரைப்பட உலகிற்கு செய்த சலுகைகள் ஏராளம். குறிப்பாக, எங்களுடைய கழகத் தலைவர், தானைத் தலைவர், டாக்டர் கலைஞர் அவர்கள், அவர் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தபொழுதெல்லாம் தமிழ்த் திரைப்படத் துறைக்கு ஏராளமான சலுகைகளையும், வரிச் சலுகைகளையும், மானியங்களையும், உதவித் திட்டங்களையும் வகுத்துக் கொடுத்துள்ளார். 1989-க்கு முன்பு



ராஜா சாண்டோ என்ற கலைத் துறை வித்தகர் விருது ஒன்று மட்டுமே இருந்தது. தலைவர் கலைஞர் அவர்கள், கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் விருது, தியாகராஜ பாகவதர் விருது, அறிஞர் அண்ணா விருது, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். விருது, நடிகர் திலகம் சிவாஜி கணேசன் விருது, பாவேந்தர் பாரதிதாசன் விருது, கவியரசு கண்ணதாசன் விருது என்ற விருதுகளையெல்லாம் அவர்தான் வழங்கி, தமிழ்த் திரைப்பட உலகில் தன்னிகரில்லாத் தலைவராக புகழ் பெற்றார்.

2001–ல் நான் முதன் முதலாக சட்டமன்றத்தில் பொறுப்பேற்று திரைப்படத் துறை சார்பாக, நான் வந்து சட்டமன்றத்தில் அமர்ந்தபொழுது, முதன்முதலாக இந்த அரசு நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்தது. நான் முதன்முதலாக அந்த நிதிநிலை அறிக்கையை படித்துப் பார்த்தபொழுது, திரைப்படத் துறைக்கு என்று எந்தச் சலுகைகளும், எந்த மானியங்களும், எந்த உதவி நலத் திட்டங்களும் வழங்கப்படாதது எனக்கு பெரிய ஏமாற்றத்தை அளித்தது. அதிக செலவு செய்து சினிமா தயாரித்துக்கொண்டு, சினிமா தத்தளித்துக்கொண்டிருந்த நேரத்தில், 2003–ல் இந்த அரசு மேலும் பல சுமைகளைத் திரைப்படத் துறைக்கு வகுத்துக் கொடுத்தது. அரசுக் கட்டுப்பாட்டிலிருந்த இடங்களில் படப்பிடிப்புகளுக்கு பல்வேறு கட்டணங்களை உயர்த்தியது. தலைவர் கலைஞருடைய ஆட்சியின்போது 5,000 ரூபாய் என்று இருந்ததை, 1,000 ரூபாயாகக் குறைத்தார். 2,500 ரூபாய் என்று இருந்ததை, 500 ரூபாயாகக் குறைத்தார். இராஜாஜி ஹாலுக்கு படப்பிடிப்பிற்கு 10,000 ரூபாயை நிர்ணயித்திருந்தார். 2003–ல் இந்த அரசு பல மடங்கு உயர்த்தியது கட்டணம், 500 ரூபாய் என்று இருந்ததை, 25,000 ரூபாயாகவும், 1,000 ரூபாய் என்று இருந்ததை, 50,000 ரூபாயாகவும், இராஜாஜி ஹாலுக்கு 10,000 ரூபாய் என்று இருந்ததை, 1,00,000 ரூபாயாகவும் உயர்த்தியது. ஏற்கெனவே, சிரமப்பட்டுக்கொண்டிருந்த தமிழ் சினிமா, 2003–லிருந்து 2004 செப்டம்பர் வரை மிகவும் மோசமான ஒரு சூழ்நிலையைக் கண்டது. நாங்கள் எல்லாம் தமிழ்நாட்டிலே படப்பிடிப்பு நடத்த முடியாமல், ஆந்திராவிற்கும், கேரளாவிற்கும், பாண்டிச்சேரிக்கும் சென்று படப்பிடிப்பு நடத்திக்கொண்டிருந்தோம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு பல்வேறு கோரிக்கைகள் வைத்தார்கள். அப்பொழுது அரசு பரிசீலனை செய்யவில்லை. 2004–ல், 23–9–2004–ல் தமிழ்த் திரை உலகமே ஒன்றுகூடி, பேர்ணியை நடத்தி, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு பல்வேறு கோரிக்கைகளை வைத்த பிறகுதான், மாண்புமிகு முதல்வர் அவர்கள் பல்வேறு சலுகைகளை எங்களுக்கு வழங்கினார். அதற்காக, திரைப்படத் துறை சார்பாக, மாண்புமிகு

முதலமைச்சர் அவர்களுக்குக்கூட பாராட்டு விழா நடைபெற்றது. ஆனால், தமிழ்த் திரை உலகிற்கு இன்றும் பல்வேறு வசதிகள் கிடைக்காமல் இருக்கின்றன. தற்போது உள்ள கட்டணம், 50,000/–லிருந்து 10,000/–ஆகக் குறைத்துள்ளார்கள் படப்பிடிப்புக் கட்டணத்தை; 25,000/–லிருந்து 5,000/–ஆகக் குறைத்துள்ளார்கள். இராஜாஜி ஹாலுக்கு 1,00,000/– என்று இருந்ததை 25,000/–ஆகக் குறைத்துள்ளார்கள். ஆனால், கலைஞருடைய ஆட்சிக் காலத்தில் வெறும் 500/– ரூபாயும், 1,000/– ரூபாயும், 10,000/– ரூபாயுமாக இருந்தது. அதனால் மீண்டும் மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்தத் தமிழ்த் திரைப்பட உலகை வாழ வைப்பதற்காக மீண்டும் அந்தப் பழைய கட்டணத்தையே நீங்கள் நிர்ணயம் செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

அதேபோல், மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தத் துறை சார்பாக, திரைப்படத் துறைக்கு மானியத் தொகையாக ரூ.5,00,000/– என்று இருந்ததை ரூ.7,00,000/–ஆக உயர்த்தினார். திரைப்படத் துறையிலிருந்த தயாரிப்பாளர்கள் எல்லாம் மகிழ்ச்சி கொண்டார்கள். ஆனால், 2000, 2001, 2002, 2003, 2004 ஆகிய ஐந்து ஆண்டுகளுக்கும் இன்றுவரை, ஒரு படத்திற்குக்கூட மானியம் வழங்கப்படவில்லை என்பது வருத்தப்படவேண்டிய விஷயம். நூற்றுக்கு மேற்பட்ட.... (குறுக்கீடு)

*பிற்பகல் 6–05*

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2000, 2001, 2002 ஆம் ஆண்டுகளுக்குண்டான அந்தத் திரைப்படங்களைக் குழுவானது பார்வையிட்டு இப்பொழுதுதான் அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கின்றது. மேலும் இருக்கின்ற, 2003 ஆம் ஆண்டுக்குண்டான படங்களையும் குழுக்கள் பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, 2004–க்குண்டான படங்களைப் பார்வையிடுவதற்கு இன்றையதினம் 34 படங்கள் தேர்வு செய்யப்பட்டு, அந்தப் படங்களையும் பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு அம்மாவினுடைய அரசானது கூடிய விரைவிலே அதற்குண்டான அந்த மானியத் தொகையை வழங்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து அமர்கின்றேன்.

**திரு. து. நெப்போலியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 5 ஆண்டுகளுக்கும் இந்த மானியத் தொகையை எப்பொழுது வழங்குவீர்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலுரையில் தெரிவிக்கவேண்டும். அதேபோல் கேளிக்கை வரியை தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1989–ல் 54 சதவீதமாக



இருந்ததை 40 சதவீதமாகக் குறைத்து, 1998–ல் 40 சதவீதமாக இருந்ததை 30 சதவீதமாகக் குறைத்து, 2000–ல் 30 சதவீதமாக இருந்ததை 25 சதவீதமாகக் குறைத்து, பழைய படங்களுக்கு 40 சதவீதம் என்றிருந்ததை 20 சதவீதமாகக் குறைத்தார். மாண்புமிகு இன்றைய முதலமைச்சர் அவர்களும் புதிய படங்களுக்கு 25 சதவீதம் என்றிருந்ததை 15 சதவீதமாகவும், பழைய படங்களுக்கு 20 சதவீதம் என்றிருந்ததை 10 சதவீதமாகவும் குறைத்துள்ளார். இதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், மொழி மாற்றுப் படங்களுக்கு 25 சதவீதம் என்று இருந்ததை 50 சதவீதமாக உயர்த்தியது இந்த அரசு. அதனால் ஆங்கிலப் படங்கள் மட்டுமே இப்பொழுது மொழி மாற்றம் செய்து, தமிழ்த் திரையுலகில் வலம் வந்து கொண்டிருக்கிறது. ஆங்கிலப் படங்கள் வருவதால் ஆங்கில கலாச்சாரம் தமிழ்நாட்டில் புகுந்துகொண்டிருக்கிறது.

திராவிட இயக்கத்தைச் சேர்ந்த ஆளும் கட்சியானாலும் சரி, எதிர்க்கட்சியானாலும் சரி, திராவிட இயக்கத்தை நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம். இந்தத் திராவிட இன மொழிகளான மலையாளம், கன்னடம், தெலுங்கு போன்ற மொழிப் படங்கள் இப்பொழுது வரமுடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆண்டொன்றுக்கு 180 படங்கள் தமிழ்த் திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டன. இப்பொழுது 80 படங்கள் மட்டுமே தயாரிக்கப்பட்டு வருகின்றன. காரணம், இயலாத, முடியாத சூழ்நிலை உருவாகி இருக்கிறது. அதனால் மொழி மாற்றுப் படங்கள் வந்தபொழுது, அது நிவர்த்தி செய்யப்பட்டிருந்தது. கிட்டத்தட்ட 200 படங்கள், 250 படங்கள் இந்தத் திரையரங்குகளுக்குத் தேவைப்பட்டுக்கொண்டிருந்தது. இப்பொழுது மொழி மாற்றுப் படங்கள் மலையாளம், கன்னடம், தெலுங்கு – மூன்று மொழிப் படங்களில் ஒரு படம்கூட dubbing நடக்கவில்லை. அதனால் dubbing Union-ல் இருக்கிற 2,000 dubbing தொழிலாளர்கள் அதாவது மாற்று மொழிக்குக் குரல் கொடுக்கிற தொழிலாளர்கள் ரொம்ப பாதிக்கப்படுகிறார்கள். அதிலேயிருந்து வருகிற எழுத்தாளர்கள், கவிஞர்கள் dubbing நடக்கிறது, mixing நடக்கிறது, editing நடக்கிறது எல்லாம் இப்போது ரொம்ப பாதிக்கப்பட்டிருக்கிறது. அதனால், திராவிட இயக்கத்தைச் சேர்ந்த நாம் அந்த அண்டை மாநில மொழிகளின் படங்களும் தமிழ்நாட்டிற்கு வரும் அளவிற்கு நீங்கள், அந்த 50 சதவீதம் என்று இருப்பதை இப்பொழுது நேரடிப் படங்களுக்கு 15 சதவீதம் என்று இருப்பதைப்போல குறைத்துக் கொடுக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். அதேபோல 1995–ல் 2,541....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரைப்படத் துறையினரிடையே முரண்பாடான கருத்துகள் இருப்பதாகத் தெரிகிறது. ஏற்கெனவே, திரைப்படத் துறையைச் சார்ந்த பிரதிநிதிகள், நடிகர் சங்கத் தலைவர் உட்பட பலர் என்னைச் சந்தித்து டப்பிங் படங்கள் அதிகமாக வருவதால் தமிழ் படங்கள் பாதிக்கப்படுகின்றன. ஆகவே, வேறு மொழிகளிலிருந்து தமிழில் டப்பிங் செய்யப்பட்ட படங்களுக்கான வரியை ஏற்றவேண்டும் என்று அவர்கள் கேட்டுக்கொண்டதனால்தான், இந்த ஏற்றத்தைத் தமிழக அரசு செய்திருக்கிறது. இப்போது அதையே இந்த மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்கள் குறைக்கவேண்டும் என்கிறார். ஆகவே, திரைப்படத் துறையில் உள்ளவர்களே கலந்து பேசி ஒரு முடிவுக்கு வரவேண்டும். தமிழ்ப் படங்களைக் காப்பாற்றவேண்டும் என்பதற்காகத்தான் இந்த நடவடிக்கையை இந்த அரசு எடுத்திருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. து. நெப்போலியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் வைத்ததால் அவ்வாறு செய்துள்ளேன் என்று கூறியிருக்கிறார்கள். ஆனால், அதே தயாரிப்பாளர்களும், அதே விநியோகஸ்தர்களும், அதே திரையரங்கு உரிமையாளர்களும் மாண்புமிகு முதல்வரிடம் இந்த கோரிக்கையை நீங்கள் வையுங்கள் என்று என்னிடத்தில் இப்பொழுது கடிதம் கொடுத்திருக்கிறார்கள். அதனால் நான் இந்தக் கோரிக்கையை வைத்தேன். மேலும் 1995–ல் 2,541 திரையரங்குகள் இருந்தன. கடந்த 10 ஆண்டுகளில், 700 திரையரங்கங்கள் இன்றைக்குக் கல்யாண மண்டபங்களாகவும், காம்ப்ளக்ஸ்களாகவும் மாறிவிட்டன. 1,800 திரையரங்குகள்தான் இப்போது இருக்கின்றன. அதற்குக் காரணம் படங்கள் இல்லை. ஆங்கிலப் படத்தை எல்லா இடத்திலும் போடமுடியாது. ஆங்கிலப் படத்தை எல்லா இடத்திலும் போட்டால் மக்கள் வரமாட்டார்கள். அதனால், அவர்கள் இந்த மொழி மாற்றுப் படங்களைப் போட்டுக்கொண்டிருந்தார்கள். இப்போது போடமுடியாத சூழ்நிலை, தமிழ்ப் படங்களும் குறைந்து போனதனால், அந்தத் திரையரங்குகள் இப்போது குறைந்துவிட்டன. அதனால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

*பிற்பகல் 6–10*

அதேபோல் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் மறைந்து கிட்டத்தட்ட 4 ஆண்டு காலமாகிவிட்டது. 21–7–2001–ல் மறைந்தார். அதன்பிறகு



நாங்கள் மாண்புமிகு முதல்வரிடம் கோரிக்கை வைத்தோம். சிவாஜி கணேசனுக்கு மணி மண்டபம் கட்டுவதற்கு எங்களுக்கு ஓர் இடம் வேண்டும் — தென்னிந்திய நடிகர் சங்கத்திற்கு ஓர் இடம் வேண்டுமென்று வேண்டுகோள் வைத்தோம். சத்யா ஸ்டுடியோவுக்கு எதிரில் 6.5 சென்ட் உள்ள அரசு நிலத்தை ரூ.10 கோடியே 19 இலட்சம் மதிப்புள்ள, அந்த இடத்தை ஒதுக்கிக் கொடுத்தார்கள். ஆனால், 4 ஆண்டுகளாக தென்னிந்திய நடிகர் சங்கமும் அரசும் நாங்களும் கடிதத்திலேயே பேசிக் கொண்டிருக்கிறோமேதவிர, இன்றுவரை அந்த இடம் தென்னிந்திய நடிகர் சங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்டது, ஒதுக்கப்பட்டது என்ற ஆணை எங்களுக்கு இதுவரை வரவில்லை.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவைக்குத் தவறான தகவலைக் கொடுக்கிறார். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அடையாறு ஆந்திரா மகிளா சபா அருகிலே ரூ.10 கோடியே 19 இலட்சம் பெறுமானமுள்ள 0.65 ஏக்கர் இடத்தை அரசாணை நிலை எண் 167–ன்கீழ் 26–9–2002–ன்படி அன்றையதினம் தென்னிந்திய நடிகர் சங்கத்திற்கு இலவசமாகப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். ரூ.10 கோடி பெறுமானமுள்ள இடத்தை வழங்கியிருக்கிறார்கள் என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. து. நெப்போலியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொடுத்த அனைத்துக் கடிதமும் என்னிடமும் இருக்கிறது. ஆனால், இதுவரை அங்கே ஒரு ரோடு, P.W.D–ஐச் சேர்ந்த ரோடு வந்து இருப்பதனால், அமைச்சர் பெருமக்களும் நீதிபதிகளும் அந்த வழியாகச் செல்கின்ற காரணத்தினால், மாற்றுப் பாதை அமைக்க வேண்டும், அதனால் மாற்றுப் பாதை அமைத்த பிறகுதான் அந்த இடம் உங்களுக்கு ஒப்படைக்கப்படும் என்றும்; அதற்கு மொத்தச் செலவையும் நீங்களே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் எங்களுக்கு கடிதம் வந்தது. நாங்களும் அந்த மொத்தச் செலவை ஏற்றுக்கொள்கிறோம், அது 50 மீட்டர்தான் அந்த ரோடு அதற்குண்டான செலவை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் என்று சொல்லியும், இன்றுவரை அந்த இடம் எங்களுக்கு ஒப்படைக்கப்படவில்லை என்பதுதான் உண்மை. இங்கே..

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அணுகுச்சாலையும், சுற்றுச் சுவரும் அமைப்பதற்காக பொதுப் பணித் துறை மூலமாக ரூ.4 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாயிலே

[திரு. கே.பி. அன்பழகன்] [2005 ஏப்ரல் 11

estimate தயார் செய்யப்பட்டு நடிகர் சங்கத் தலைவர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அவர்கள் நாங்கள் ரூ.2 இலட்சம் மட்டும் தருகிறோம் மற்றவற்றை அரசே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று எங்களிடம் அறிவுறுத்தினார்கள். ஆகவே, அந்த ரூ.2 இலட்சத்தைத் தந்தார்கள் என்றால், மீதியிருக்கின்ற தொகைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் கண்டிப்பாக அதைப்பற்றி ஆலோசித்து பரிசீலிப்பார் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அந்த ரூ.2 இலட்சத்தையும் அவர்கள் இதுவரை தராத காரணத்தினால்தான், அந்த நிகழ்வானது காலதாமதம் ஆகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. து. நெப்போலியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூ.2 இலட்சம் தருகிறோம் என்று நாங்கள் சொல்லி பல மாதங்கள் ஆகிவிட்டது. கடிதம்மூலம் நாங்கள் தருகிறோம் என்று சொல்லி விட்டோம். இன்னமும் பரிசீலனை செய்கிறோம், பரிசீலனை செய்கிறோம் என்று காலம் கடத்தாமல் மாண்புமிகு அமைச்சர் அவர்கள்..

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** இதுவரை ரூ.2 இலட்சத்தை அவர்கள் தரவில்லை என்பதை அவைக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ரூபாயைக் கொடுத்து விடுங்கள். பணத்தைக் கொடுத்து விடுங்கள் நெப்போலியன். இன்னும் 2 மணித் துளிகளில் பேச்சை முடித்து விடுங்கள்.

**திரு. து. நெப்போலியன்:** இன்னும் 3 துறைகளில் பேச வேண்டும். பேரவைத் தலைவர் அவர்களே, நான் இன்னும் என்னுடைய துறைக்கே வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் துறையில் மட்டும் பேசி முடித்து விடுங்கள், 2 மணித்துளிகளில்.

**திரு. து. நெப்போலியன்:** 1995–ல் மாண்புமிகு முதல்வர் அவர்கள் திரைப்படத் துறைக்காக உருவாக்கிக் கொடுத்த எம்.ஜி.ஆர். திரைப்பட நகர் இப்போது இல்லை. அதனால் திரைப்பட உலகம் இன்று சிரமப்பட்டுக் கொண்டு இருக்கிறது. எந்தக் காரணத்தினால் அந்தத் திரைப்பட நகர் மூடப்பட்டது என்று எங்களுக்குத் தெரியவில்லை. எம்.ஜி.ஆர். பெயரால் இயங்கிக் கொண்டிருந்த அந்த நகரை மூடிவிட்டீர்கள்.



2005 ஏப்ரல் 11]

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு பலமுறை இந்த அவையிலேயே விளக்கம் சொல்லியாகிவிட்டது. எம்.ஜி.ஆர். திரைப்பட நகர் Film City இருந்த இடத்திலே எம்.ஜி.ஆர். Knowledge City உருவாக்கப் போகிறோம். ஆகவேதான் திரைப்பட நகர் மூடப்பட்டிருக்கிறது. அங்கே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் பெயரிலேயே ஓர் அறிவு நகர் Knowledge City தொடங்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. து. நெப்போலியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இந்த அவையில் பேசும்போதும் அதை சொன்னேன். திரைப்பட நகர் என்பது அப்படியே இருக்கட்டும்; அறிவு நகர் என்பதும் அப்படியே இருக்கட்டும். ஆனால், திரைப்பட நகரை எக்காரணம் கொண்டும் மூடாதீர்கள் என்று நான் சொன்னேன். ஆனால், இப்போது எங்களுக்கு வேறு வழியில்லை. எங்களுக்கு மாற்று இடம் ஏற்பாடு செய்து திரைப்பட நகர் ஒன்றை உருவாக்கித் தாருங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல FEFSI தொழிலாளர்களுக்காக தென்னிந்திய தொழிலாளர் சம்மேளனத்தில் இருக்கும் 21 crafts–ல் இருக்கிற 20,000–க்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்காக 85 ஏக்கர் நிலம் வேளச்சேரி பக்கத்தில் ஒதுக்கிக் கொடுத்தார்கள். 1995–லே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் அந்தத் திட்டத்தைச் சொன்னார்கள். ஆனால், இன்றுவரை அந்தத் திட்டமும் அப்படியே கிடப்பில் கிடக்கிறது. எப்போது.

பிற்பகல் 6–15

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் FEFSI தொழிலாளர்களுக்காக 11–12–1991 அன்று. அந்தத் தொழிலாளர்கள் அனைவரும், நாங்கள் வாழ்வதற்கு இடம் வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்களிடம் வேண்டுகோள் வைத்தார்கள். அதன் அடிப்படையிலே 16–3–1995 அன்று 85 ஏக்கர் நிலமானது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அவர்களுக்கு ஒதுக்கித் தந்தார்கள். 20–4–2005 அன்று FEFSI அமைப்பின் குடியிருப்புக்கு அடிக்கல் நாட்டும் விழாவில் கலந்துகொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், இந்நிலம் இலவசமாக வழங்கப்படும் என்ற அறிவிப்பினை அன்றையதினம் அறிவித்தார்கள். 10–6–1995 அன்று நிலத்தினை, தாழ்வான பகுதிகள

அரசின் செலவிலே மேடாக்கப்படும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அன்றையதினம் அறிவித்தார்கள். 11-7-1997-லே இவர்களுடைய ஆட்சிக் காலத்திலே அந்த இடத்திற்கு அரசு தடையாணை விதித்து, அவர்களுக்கு கிடைக்கின்ற இடத்தைத் தவறவிட்டது என்பதை மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. து. நெப்போலியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நெப்போலியன், ஒரு மணித் துளியில் பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. து. நெப்போலியன்:** 5 மணித்துளிகள் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இரண்டு மணித் துளிகளில் பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. து. நெப்போலியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடத்திற்கு இப்போது இந்த அரசு 36 கோடி ரூபாயை அந்தத் தொழிலாளர்கள் கட்டவேண்டும் என்று ஓர் ஆணையைப் பிறப்பித்திருக்கிறது. எப்படி 36 கோடி ரூபாயை அவர்கள் கட்டுவார்கள்? அதனால் அதில் நீங்கள் ஒரு நல்ல முடிவு எடுத்து, மீண்டும் அந்த இடம் அந்தத் தொழிலாளர்களுக்குக் கிடைப்பதற்கு ஆவன செய்யுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் பத்திரிகையாளர்களுக்கு, அவர்களுக்கு என்று இயங்கிக்கொண்டிருக்கும்...

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடத்திற்கு 36 கோடி ரூபாய் கட்டவேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவிக்கவில்லை. 23-9-2004 அன்று மாண்புமிகு அம்மா அவர்களை அந்த FEFSI தொழிலாளர்கள் சந்தித்துக் கேட்டதற்குபிறகு, அந்த இடத்திற்கு மாற்று இடமாக காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மாண்புமிகு அம்மா அவர்கள் இன்றையதினம் இடத்தைத் தேர்வு செய்யச் சொல்லிக் கேட்டிருக்கின்றார்கள். இடம் தேர்வு செய்த பிறகு, அந்த இடத்திலே இல்லையென்றாலும், வேறு ஓர் இடத்தை அந்த FEFSI தொழிலாளர்களுக்கு வழங்குவதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் இன்றையதினம் ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நெப்போலியன், ஏதாவது கோரிக்கை இருந்தால் மள மளவென்று சொல்லுங்கள்.



**திரு. து. நெப்போலியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயகத்தின் நான்கு தூண்களில் ஒன்றுதான் பத்திரிகை. நாட்டில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சியையும், செய்தியையும் மக்களுக்குக் கொண்டு சேர்ப்பது பத்திரிகையும், தொலைக்காட்சியும். அவர்களுக்கு இந்த அரசு பல சலுகைகளை அளிக்கவேண்டும்.

சென்னை நிருபர்கள் சங்கக் கட்டடம் அரசினர் தோட்டத்தில் 50 ஆண்டு காலமாக பழுதடைந்துள்ளது; இடிந்து விழும் நிலையில் உள்ளது. இந்த அரசு அதை இடித்துவிட்டு புதியதாக ஒரு கட்டடத்தைக் கட்டித் தருமாறு நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, 20 ஆண்டுகளுக்கு மேலாகப் பணிபுரிந்து பணியில் இருக்கும்போதே இறந்துபோன பத்திரிகையாளர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும் நிதியுதவி 4-9-2001 அன்று முதல் 50,000 ரூபாயிலேயிருந்து 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டது. இன்றுவரை 10-க்கும் மேற்பட்டவர்கள் இறந்துள்ளார்கள்; ஆனால், யாருக்கும் கொடுக்கப்படவில்லை...

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 நபர்களுக்கு 6 இலட்சம் ரூபாய் வழங்குகின்ற வகையிலே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசாணையை வெளியிட்டு, அந்த 3 நபர்களுக்கு அந்தப் பணமானது சென்று சேர்ந்திருக்கிறது. மேலும் 4 பேருக்கு வழங்குவதற்குண்டான அரசாணை கூடிய விரைவிலே வரும். மீதம் இருக்கின்றவர்களுக்கு அரசினுடைய பரிசீலினையில் உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. து. நெப்போலியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4 ஆண்டுகளுக்கு முன்பு கொடுக்கப்பட்ட ஆணை. ஆனால், நேற்றைய முன்தினம்தான் 3 பேருக்குக் கொடுத்திருக்கிறார்கள். 7 ஆம் தேதி முன்தினம்தான் 3 பேருக்குக் கொடுத்திருக்கிறார்கள். இறந்துபோய் அன்றுதான் 3 பேருக்குக் கொடுத்திருக்கிறார்கள். இறந்துபோய் எவ்வளவோ வருடம் ஆகி, நேற்றைய முன்தினம்தான், அதுவும் இந்த மானியக் கோரிக்கை வரும், இந்த மாதிரி எதிர்க்கட்சிக்காரர்கள் கேள்வி கேட்பார்கள் என்று தெரிந்துதான் 3 பேருக்கு அவசர, அவசரமாக கொடுத்திருக்கிறார்கள். அந்த ஆணை என்னிடமும் இருக்கிறது.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல

விண்ணப்பத்தைக் கொடுத்துவிட்டால், உடனே பணத்தை வழங்க இயலாது. அவர் தகுதி படைத்தவரா என்பதை ஆய்ந்து, அதற்குப் பிறகுதான் அந்தப் பணத்தை வழங்க இயலும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நெப்போலியன், கொடுப்பதைக் கெடுத்துவிடாதீர்கள். அடுத்த கோரிக்கையைச் சொல்லுங்கள்.

**திரு. து. நெப்போலியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பத்திரிகைகளுக்கு விளம்பரம் தரும்போது சிறிய பத்திரிகை, பெரிய பத்திரிகை என்று பாகுபாடு இல்லாமல் அனைத்து பத்திரிகைகளுக்கும் விளம்பரத்தைத் தரவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்கின்றேன். அதேபோல...

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசின் அனைத்துத் துறைகள், அரசின் பொறுப்பில் உள்ள பல்வேறு கழகங்கள் மற்றும் அனைத்து வாரியங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றின் விளம்பரங்களை வெளியிடும் மைய நிறுவனமாக செய்தி, மக்கள் தொடர்புத் துறையின் விளம்பரப் பிரிவு இயங்கி வருகிறது. விளம்பரத்தின் தன்மையைக் கருத்தில்கொண்டு, அவ்விளம்பரம் போய்ச் சேரவேண்டிய பகுதி, மக்கள் ஆகியவற்றின் அடிப்படையில்தான் பத்திரிகைகளுக்கு விளம்பரம் அளிக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நெப்போலியன், உரையை நிறைவு செய்யுங்கள்.

பிற்பகல் 6-20

**திரு. து. நெப்போலியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989-ல் தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் 5.5 ஏக்கர் நிலத்தில் 136 பத்திரிகையாளர்களுக்கு வீட்டுமனைகளை கோட்டிவாக்கத்தில் ஒதுக்கித் தந்தார்கள். (மணியடிக்கப்பெற்றது) தலைவர் கலைஞர் அவர்கள் அதுபோன்று, பத்திரிகையாளர்களுக்கு அரசுக் குடியிருப்பில் வாடகைக்கு நிறைய இடங்களில் வீடுகளைக் கொடுத்தார்கள். second unit என்று சொல்வதுபோல, வேறு இடத்தில் இதுபோன்று அதேபோல இந்த அரசும் பத்திரிகையாளர்களுக்கு மனையை ஒதுக்கீடு செய்து தரவேண்டும்



ஆனால், ஏற்கெனவே ஒதுக்கிய அந்த வீடுகளுக்குப் பத்திரம் இன்றுவரை அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

அதேபோல, 2001-ல் இந்த அரசு, வீட்டு வசதித் துறையினர்மூலம் கட்டப்படும் வீடுகளை தவணை முறையில் வழங்கப்படும் என்று டிசம்பர் 10 ஆம் தேதி ஆணை பிறப்பித்தது. அது இப்போது என்ன நிலையில் உள்ளது? எவ்வளவு பேருக்குக் கொடுத்திருக்கிறீர்கள்? பத்திரிகையாளர்களுக்கு வீட்டு வசதித் துறைமூலம் தவணை முறையில் வழங்கப்படுகின்ற வீடுகள் எவ்வளவு கொடுத்திருக்கிறீர்கள் என்பதை இந்த அவையில் தெரிவிக்கவேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

பத்திரிகையாளர்கள், அரசு மருத்துவமனைகளில் பொது மக்களோடு சேர்ந்துதான் அவர்கள் சிகிச்சை பெறவேண்டியுள்ளது. அவர்களுக்குச் சிறப்புச் சிகிச்சை அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, டெல்லியிலுள்ள தமிழ்நாடு அரசினுடைய, Tamil Nadu House-ல் தங்குவதற்குப் பத்திரிகையாளர்களுக்கு இடம் ஒதுக்குவதில்லை. பத்திரிகையாளர்களும் அங்கு தங்குவதற்கு இட வசதி செய்து தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கூறிக் கொண்டு, ஒரேயொரு கருத்தை மட்டும் சொல்லி விடைபெறுகின்றேன்.

'V' for victory என்பார்கள். இந்த அரசில் பல 'V' வெற்றி பெற்றிருக்கின்றன என்று சொன்னார்கள். உலக வரைபடத்தில் இந்தியாவின் தென்னகத்து அமைப்புகூட, அந்த 'V' வடிவில்தான் இருக்கும். பேரவைத் தலைவர் அவர்கள் படிக்கும் இரண்டு வரி மந்திரமாம் திருக்குறளை, 2000 வருடங்களுக்கு முன்பே எழுதிவிட்டுச் சென்ற அய்யன் திருவள்ளுவனுக்கு 2000 ஆம் ஆண்டில், முக்கடல் சங்கமிக்கும் கன்னியாகுமரியில் உலக வரைபடத்தின் வினோதத்தை, இந்தியாவின் தென்னகத்தை, இந்தியாவின் 'V'-யைத் தாங்கி நிற்பதுபோல, அந்த வான்புகழ் வள்ளுவனுக்கு 33 அடி உயரச் சிலை எழுப்பி, சாதனை புரிந்த சரித்திர (குறுக்கீடு) 133 அடி உயரச் சிலை எழுப்பி, சாதனை புரிந்தது தானைத் தலைவர் டாக்டர் கலைஞருடைய சரித்திரம்தான், சாதனைதான், வெற்றிகளில் சிறந்த வெற்றிதான். ஆனால், இந்தத் துறையின்மூலமாக, செய்தித் துறைமூலமாக நிறுவப்பட்ட அந்த வான்புகழ் வள்ளுவன் சிலை, இப்போது பராமரிப்பில்லாமல் கிடக்கிறது. அதைப் பராமரிப்புச் செய்யவேண்டும். (மணியடிக்கப்பெற்றது) இளைஞர் நலனைக் காக்கும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, முடித்து விடுங்கள், முடித்து விடுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திருவள்ளுவர் சிலை சுற்றுலாத் துறைமூலமாகப் பராமரிக்கப்படவில்லை. ஆரம்பத்தில் செய்தித் துறைமூலமாக அது நிறுவப்பட்டது. பிறகு சுற்றுலாத் துறை, கடந்த 2004 ஆம் ஆண்டுதான் அதை எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நெப்போலியன், வாக்கியத்தை நிறைவு செய்யுங்கள்.

**திரு. து. நெப்போலியன்:** ஒரேயொரு நிமிடம். அதைத்தான் சொன்னேன். செய்தித் துறைமூலமாக நிறுவப்பட்டது. அதைப் பராமரிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இளைஞர் நலனைக் காக்கும் கலைஞன், இளம் வயதில் தோன்றிய அதிசயம். உலகச் சுற்றுலா, (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திருவள்ளுவர் சிலையை, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், அவசர அவசரமாக இரண்டு நாட்கள் விழா எடுத்து, 1999 டிசம்பர் 31 ஆம் தேதி, 2000 ஆம் ஆண்டு, ஜனவரி 1 ஆம் தேதி, இரண்டு நாட்கள் விழா எடுத்து, அரைகுறையாக விட்டுவிட்டுச் சென்று விட்டார்கள். அதன்பிறகு, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகுதான், அதற்கு 93 இலட்சம் ரூபாய் செலவு செய்து, மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) காரணம், அவர்கள் அதன்பிறகும் ஓர் ஆண்டு, ஒன்றரை ஆண்டுக்கும் மேலாக ஆட்சியில் இருந்தார்கள். ஆனால், அந்தச் சிலையைப் பராமரிக்கவோ, அதைப் பொதுமக்கள் பார்வைக்கு அனுமதிக்கின்ற அளவிற்கு அங்கு தரைத் தளமோ அல்லது கைப்பிடிச் சுவரோ அல்லது லைட் வசதியோ ஏற்படுத்தவில்லை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**திரு. து. நெப்போலியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமி என்ற அலையாலேயே அசைக்கமுடியாதது அந்த அதிசயம்; அந்த அதிசயம் உலக அதிசயத்தில் ஒன்றாக இடம் பெறவேண்டும். அந்த அளவிற்கு அதைப் பராமரிக்கவேண்டும். தமிழக அரசு அதைச் சிறந்த முறையில் பேணிக் காக்கவேண்டும் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)



நாற்பதோடு 40 சேர்ந்தால் 80. 40–க்கு 40–ம் கிடைத்தால் 110 என்பதை இந்த ஆட்சியில்தான் நான் காண்கிறேன். 40–க்கு 40–ம் சேர்ந்தால் 80 என்பது பழைய கணக்கு; 40–க்கும் 40–ம் போனால் 110; இது புதுக் கணக்கு. நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராதாரவி. (குறுக்கீடுகள்)

பிற்பகல் 6–25

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நெப்போலியன் அவர்கள் என்ன கணக்கு சொன்னார் என்று தெரியவில்லை. மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுக்கின்ற இந்த 110–ஐக் கண்டு எதிர்க்கட்சிகள் இன்றைக்கு பயந்து போயிருக்கின்றன. அவ்வளவு நன்மைகள் இன்றைக்கு மக்களுக்கு சென்று கொண்டிருக்கின்றன. எனக்கொரு ஐயம், அந்த 110–ஐக் கண்டு பயந்த இவர்களுக்கு மக்கள் 111–ஐச் சாத்திவிடுவார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராதாரவி (குறுக்கீடுகள்)

**திரு. ராதாரவி:** பெருமதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் துறையைச் சேர்ந்தவர்தான். பேசட்டும்.

**திரு. ராதாரவி:** செய்தித் துறை மானியக் கோரிக்கைமீது பேச வாய்ப்பளித்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்து...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நெப்போலியன் முடித்துவிட்டீர்கள். முடித்துவிட்டீர்கள். அமைச்சர் கருத்தைச் சொல்லியிருக்கிறார், அவ்வளவுதான். திரு. ராதாரவி.

**திரு. ராதாரவி:** அதாவது என்னுடைய colleague என்று சொல்லலாம். என்னுடைய...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இரண்டு பேருமே வில்லாதி வில்லன்கள். (சிரிப்பு)

**திரு. ராதாரவி:** சட்டமன்ற உறுப்பினர், மாண்புமிகு நெப்போலியன் அவர்கள் சொன்னார்கள் ஒரு கணக்கு. அவர் சொல்கிற கணக்கெல்லாம், அவர் எந்த எண்ணத்தில் சொல்கிறார் என்று

தெரியவில்லை. ஆனால், இன்றைக்குவரை இருப்பது அண்ணா தி.மு.க. தனிமையாக 139. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ராதாரவியைப் பேச அழைக்க, பேரவைத் தலைவர் அனுமதித்துள்ளார். அதற்குக் காரணமாக இருக்கும் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, அம்மா வாழ்ந்துகொண்டு இருக்கிறதே அவர் செய்த தர்மத்தால். அதனால்தான்,

"தர்மம் தலைகாக்கும், தக்க சமயத்தில் உயிர்காக்கும்,
கூட இருந்தே குழி பறித்தாலும், கொடுத்தது காத்து நிற்கும்,
மலைபோலே வரும் சோதனையாவும், பனிபோல் நீங்கிவிடும்,
நம்மை வாழவிடாதவர் வந்து நம் வாசலில் வணங்கிட வைத்துவிடும்" (மேசையைத் தட்டும் ஒலி)

இது எப்படிப்பட்ட தர்மம் என்றால், இதுவரை கோயில்களில் நைவேத்தியம் பண்ணுவார்கள், சாமி சாப்பிடுவதாகத்தான் சொல்லி கேட்டிருக்கிறோம். ஆனால், இப்போதுதான், அம்மா அவர்கள் வந்தபிறகு, கடவுளைக் கும்பிடும் பக்தன்கூட சாப்பிடும் அளவிற்கு அன்னதானத் திட்டம் என்று ஒன்றைக் கொண்டுவந்தார். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தர்மம் இவர்களை எப்படியும் காப்பாற்றும்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

முக்கியமான துறைகளில் செய்தித் துறையும் ஒன்று. ஏனென்றால், சுற்றலாத் துறை, வீட்டு வசதித் துறை என்று ஏதாவது பேசினால், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் இருக்கிறார். அவர் உடனே நிறுத்து, உன் லைனில் பேசு என்று சொல்லிவிடக்கூடாது. இருந்தாலும், செய்தித் துறை என்றால், உண்மையான நிகழ்ச்சிகளை மக்களுக்கு எடுத்துச் செல்லக்கூடியது. இந்த அரசாங்கத்திற்கும், பொது மக்களுக்கும் உண்மையான நிகழ்ச்சிகளை எடுத்துக்கொண்டு செல்வது. அதனால், பொய்யான கருத்துகளை இதிலே சொல்லக்கூடாது. பொதுவாகச் சொல்லிக்கொள்கிறேன், இந்தச் செய்தித் துறையில், உண்மையான நிகழ்ச்சிகள் என்பதற்காகத்தான், ஒட்டுமொத்த கருத்துகளைச் சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது, 2001–ல் அவருடைய உரையில், முதல் ஒரு வாரத்திலே பதில் சொல்லும்போது 2000–2001 ஆம் ஆண்டில் ரூ.8,613.33 கோடியாக இருந்த வணிக வரி வசூல், 2003–2004 ஆம் ஆண்டில் ரூ.11,004.63 கோடியாக அதிகரித்துள்ளது என்று சொன்னார். இதை யாருமே பாராட்டவில்லை என்னும்போது, மன வருத்தமாக



இருக்கிறது. ஏனென்றால், வரும்படி அதிகமாக இருக்கிறது. அந்த உண்மையைப் பாராட்டவேண்டும் அல்லவா? அதை விட்டுவிட்டு, இந்த பட்ஜெட் எதற்காகப் போட்டு இருக்கிறார்கள் என்றால், இந்தத் தேர்தலுக்காக போட்டிருக்கிறார்கள்; அப்படி, இப்படி என்று பேச ஆரம்பித்துவிட்டார்கள். தேர்தலுக்காக வரியில்லாத பட்ஜெட் போட்டிருக்கிறார்கள் என்று சொன்னவர்கள், இந்த போலீஸைப் பார்த்து, காவல் துறை என்ன அரசாங்கத்தின் ஏவல் துறையா என்று சொன்னவர்கள், கடைசியிலே இந்த போலீஸ் மானியத்திலே அம்மா அவர்கள் சில நல்ல திட்டங்களைக் காவல் துறையினருக்கு அளித்தவுடன், இன்னும் அதிகமாகத் தந்திருக்கலாமே என்று சிலர் கூக்குரலிட்டார்கள். எதற்காக திடீரென்று அந்த நீலிக் கண்ணீர்? அது தேர்தலுக்காகவா? அல்லது உண்மையாகவா அந்தக் கண்ணீர் என்று எனக்குத் தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

அதிலேயும், நல்ல திட்டங்களைச் சொல்லும்போது, எப்போதும் வெளிநடப்பு செய்துக்கொண்டே இருக்கிறார்கள். அதுதான் வருத்தமாக இருக்கிறது. அதுவும் எதிர்க்கட்சித் தோழர்கள் சதா வெளிநடப்புச் செய்தால், நாளைக்கு ஜனங்கள், ஓட்டு போடக்கூடிய ஜனங்கள் நாம் ஓட்டுப்போட்டால் இவர்கள் உள்ளேயே போகமாட்டார்கள்; இவர்கள் வெளியிலே இருந்தால் பரவாயில்லை என்று நினைத்துவிட்டால் என்னவாகும்? (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அன்பு சகோதரர், திரு. நெப்போலியன் அவர்கள் பேசும்போது, இந்த rate பற்றியெல்லாம் சொன்னார்கள். தி.மு.க ஆட்சியில் இப்படி இருந்தது, அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் முதலில் ஏற்றியதைப் பிறகு குறைத்தார்கள் என்று. ஒன்றே ஒன்று சொல்லிக்கொள்கிறேன். ஏனென்றால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். நாமெல்லாம் சினிமாவிலே இருக்கிறோம். மனசாட்சியோடு இருக்க வேண்டும். நாம் அவ்வப்போது rate–ஐ ஏற்றிக்கொண்டேதான் இருக்கிறோம். எப்போதாவது ரேட்டைக் குறைத்திருக்கிறோமா? (மேசையைத் தட்டும் ஒலி) ரேட்டைக் குறைத்ததாக சரித்திரமே கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) எவ்வளவோ புரடியூசர்கள் நம்மிடம் கெஞ்சுகிறார்கள். நான் உங்களையும் என்னையும் வைத்துச் சொல்லவில்லை. ஏனென்றால் நாம் வந்து கேரக்டர், at least வில்லன் நடிகர்கள்தான். ஹீரோக்களை சொல்கிறேன், பொதுவாக. எல்லோரும் சம்பளத்தை ஏற்றுகிறார்கள். எவ்வளவோ Producer–கள் கெஞ்சுகிறார்கள், யாருமே குறைத்ததாக சரித்திரம் கிடையாது. ஆனால், ஏற்றிய ரேட்டை குறைத்த ஒரே

அரசாங்கம் இப்போது அம்மா அவர்கள் தலைமையில் இருக்கிற அரசாங்கம்தான். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதை நாம் பாராட்ட வேண்டும்.

*பிற்பகல் 6–30*

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

அதுபோல மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த 8.5 ஏக்கர் பற்றி சொன்னார்கள். ஏனென்றால் அப்போது நான் பெப்சியிலே உப தலைவராக இருந்தேன். அது அவருக்குத் தெரியும். எதற்காகச் சொல்கிறேன் என்றால் 8.5 ஏக்கர் இலவசமாகக் கொடுத்தது அம்மா புரட்சித் தலைவி அவர்கள். ஆனால் பிறகு வந்த ஆட்சி உடனே 4.5 ஏக்கர் வாங்கிக் கொண்டார்கள். பிடுங்கிய உடன் அதை பெரிய தகராறு பண்ணி வாங்கியதில் நானும் அதில் ஒருவன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். திருப்பி அதை வாங்கினாலும்கூட, இவ்வளவு கட்ட வேண்டும், அவ்வளவு கட்ட வேண்டும் என்று பல சிக்கல்கள் உருவாக்கியதால், இன்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்னொரு இடத்தை நியமித்து இருக்கிறார்கள் என்று இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எதற்காக இதை ஞாபகப்படுத்துகிறேன் என்றால், 85 ஏக்கர் பற்றி சொன்ன அந்த மாண்புமிகு உறுப்பினர், இரண்டு கிரவுண்டு இடம் கொடுத்தார்கள் 100 ஃபீட் ரோட்டிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த பெப்சி தொழிலாளிகள் கட்டடம் கட்டுவதற்காக. இலவசமாகக் கொடுத்த அந்த இடத்தில் 11 இலட்சம் ரூபாய் வாங்கியது தி.மு.க. அரசாங்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதை நாம் மனசாட்சியோடு ஒத்துக்கொள்ள வேண்டும். அவ்வளவுதான். இது வேறு ஒன்றும் ஒரு பெரிய தகராறோ, இல்லை, நாம் தப்பு பண்ணிவிட்டோம் என்றோ அதற்காக சொல்லவில்லை. குற்றம் கண்டுபிடிப்பது என்றால், எல்லாவற்றிலும் குற்றம் இருந்து கொண்டேதான் இருக்கும். இருந்தாலும் எதற்காகச் சொல்கிறேன் என்றால், இந்த செய்தித் துறை என்பதனால் உண்மையைச் சொல்கிறேன். இப்போதுகூட படித்துப் பார்த்தேன், செய்தித் துறையிலே இந்தப் பத்திரிகையாளர்களுக்கு எல்லாம் வீடு கொடுத்திருக்கிறார்கள். எல்லா நன்மையும்தான் பண்ணி இருக்கிறார்கள். இதுவரைக்கும் ஐந்து இலட்சம் ரூபாய் மானியம் இருந்ததை ஏழு இலட்சம் ரூபாயாக ஆக்கியது புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் சினிமாவுக்கு. *(மேசையைத் தட்டும் ஒலி).* அது ஒரு நல்ல திட்டம். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர், என்ன நீங்களே இப்படி என்னை பேசுகிறீர்களே என்று சண்டைப் போடக்கூடாது.



நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், இந்த நன்றி அறிவிப்புக் கூட்டத்திற்குக்கூட நீங்கள் எல்லாம் வரவில்லை. இருந்தாலும் எதற்காகச் சொல்கிறேன் என்றால், இப்போது சொல்கிறீர்கள் இவ்வளவு பண்ணினார்கள், அவ்வளவு பண்ணினார்கள் என்று, மன வருத்தம் எனக்கும் இருக்கிறது இந்தக் கட்சிக்காரன் என்ற முறையிலே. எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், பொய்யான பிரச்சாரத்தையே சொல்லிக்கொண்டே இருக்க வேண்டுமென்றால் எப்படி? எப்போதுமே பொய்யான பிரச்சாரம்தானா? நல்லது நடக்கின்றது எவ்வளவோ இருக்கிறது. ஒன்றும் இல்லை. நேற்று பேசிய பாட்டாளி மக்கள் கட்சி மாண்புமிகு உறுப்பினர், வெள்ளிக்கிழமை அன்று பேசும்போது, எடுத்தவுடனே சினிமாவைப் பிடிக்கிறார். ஆபாசமான காட்சி. நல்ல வேளை முதல்வர் சொன்னார்கள், இப்போது வருகின்ற படங்களை நான் பார்க்கவில்லை, பழைய படத்தைப் பார்த்தேன் என்று சொன்னார்கள். அவர் மொத்தப் படத்தையும் பார்த்துவிட்டு அப்புறமா கவர்ச்சி என்று சொல்கிறார். மொத்தமாக ஏன் பார்க்கிறீர்கள் நீங்கள்; பார்க்காதீர்கள். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், நம்மையே அசிங்கப்படுத்துகிறார். கவர்ச்சி என்று ஆரம்பித்துவிடுகிறார்கள். ஆனால், தேர்தல் நேரத்திலே மட்டும் இந்த நடிகர்கள் தேவைப்படுகிறார்கள். அது ஆச்சர்யமாக இருக்கிறது. ஏன், நான் சொல்கிறேன் என்றால்...

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். *(குறுக்கீடு)* உட்காருங்கள்.

**திரு. ராதாரவி:** நான் பேசிவிடுகிறேன். இருங்கள். பிறகு நான் யார் யாருக்கெல்லாம் வேலை செய்தேன் என்பதை நான் சொல்ல வேண்டும். அதெல்லாம் வேண்டாம். *(குறுக்கீடு)* உட்காருங்கள், எனக்குத் தெரியும். ஏனென்றால் இப்போது நீங்கள் வந்து வேறு ஒரு கூட்டணியாக இருக்கலாம். இப்போது உங்களுக்கும் மாண்புமிகு சரத்குமார் வரலாம், மாண்புமிகு நெப்போலியன் வரலாம், எல்லோரும் வரலாம் உங்களுக்கும். அதனால் வேண்டாமென்று சொல்லிவிட முடியாது. அதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், பொய்யான கருத்துகளை சொல்லிக் கொண்டே இருக்கக்கூடாது. ஏனென்றால், நான் இப்போது சொல்லும்போது எல்லா பத்திரிகைகளிலுமே ஆபாசமான படங்கள் வருகின்றன. உடனே நான் என்ன சொல்ல வேண்டும். உங்கள் கூட்டணியிலே இருக்கிறார்கள். குடும்பப் பத்திரிகையிலே ஆபாசமாக வருகிறதே படம், அதை நிறுத்த முடியுமா? அப்படி நான் கேட்கிறேனா?

நான் கேட்கமாட்டேன். இது வியாபாரம், சரி செய்து கொண்டு போகிறார்கள் என்று விட்டுவிடுவேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எப்போது பார்த்தாலும் தமிழ், தமிழ், தமிழ், தமிழ் என்று பேசுகிறீர்கள். இல்லை என்று சொல்லவில்லை. இப்போதுகூட படித்துப் பார்த்தேன். நான் தப்பா சொல்லவில்லை உங்களை. ரொம்ப குடும்பத்திலே குழப்பம் இருக்கிறதப்பா. ஏனென்றால் உண்மையைச் சொல்கிறேன். வீட்டு ஓனருக்குப் பெயர் வீட்டுக்காரன் என்று பேர் சொல்ல வேண்டுமென்று சொல்கிறீர்கள். வீட்டு ஓனர் பெண்ணாக இருந்தால் வீட்டுக்காரி என்று சொல்லவேண்டுமென்று சொல்கிறீர்கள். உண்மையிலேயே நாம் வீட்டுக்காரன் என்று யாரைச் சொல்வோம், புருஷனைச் சொல்வோம். வீட்டுக்காரி என்று பெண்டாட்டியைச் சொல்வோம். இப்போது, எப்படியப்பா ஓனரை சொன்னால் குழப்பம் ஆகிவிடாதா குடும்பத்திலே? (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக சொல்கிறேன் நான். அதனாலே தமிழ் யாருக்கும் தெரியாமல் இல்லை. எதற்காக இதைப்போய் சொல்ல வேண்டும்? நல்ல வளர்ச்சியான நேரத்தில் எல்லாம் அம்மாதான் சொன்னார்களே, அறிவியல் தமிழ் அந்தத் தமிழ், இந்தத் தமிழ் படித்துவிட்டு போய் நன்றாகக் கற்றுக்கொள்ளுங்கள். மற்ற பாஷையை கற்றுக்கொள்ளுங்கள். வேண்டாமென்றா சொல்கிறார்கள். ஏன் நான் சொல்கிறேன் என்றால், இப்படித்தான் இந்தி எதிர்ப்பு, இந்தி எதிர்ப்பு என்று நான் எல்லாம் தமிழையே கற்றுக்கொண்டு இப்போது இந்திப் படத்தில் போய் நடிக்க முடியவில்லையப்பா? அப்படி நடித்திருந்தால் ஏதோ ஐஸ்வர்யா ராய் அவர்களோடு எல்லாம் நடித்திருக்கலாம். ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கும்.

பிற்பகல் 6–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராதாரவி, நீங்கள் நடிக்க வேண்டுமென்றால், நீங்கள் படியுங்கள். அதற்காக எல்லோரையும் படிக்கச் சொல்லாதீர்கள். (சிரிப்பு)

**திரு. ராதாரவி:** இல்லை, இல்லை. எல்லோருமே தமிழை வேண்டாம் என்று சொல்லவில்லை. இருந்தாலும், சில அர்த்தங்கள் தப்பாகிறது. இப்பொழுது ஒன்றுமில்லை, *உண்மைக்கு மாறான கருத்துகள் என நான் ஏன் சொல்ல வந்தேன் என்றால், சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் தேதி சுனாமி பேரலை தாக்கியது. தமிழகத்தில் கிட்டத்தட்ட

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.



8,000 பேர்களுக்குமேல் தங்களது இன்னுயிர்களை இழக்க நேரிட்டது. மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் கணேசன் அவர்களிடம் சொல்லிவிடுகிறேன். இந்த point–ஐயும் கேட்டுவிட்டு, எதிர்த்துச் சொல்லுங்கள். தப்பில்லை. ஏனென்றால், சுனாமியால் பாதிக்கப்பட்ட 8,000 பேர்களுக்கு அம்மா அவர்கள் போய் நிவாரண நிதியைக் கொடுத்தார்கள். ஏறத்தாழ 900 கோடி ரூபாய். அதிலேயும் 1 இலட்சத்து, 30 ஆயிரம் குடும்பங்களுக்கு, 1 இலட்சத்து, 50 ஆயிரம் ரூபாய் செலவிலே காங்கிரீட் வீடுகள் கட்டித் தரவேண்டும் என்று order போட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் ஏன் நான் சொல்கிறேன் என்றால், இதில் *ஓர் உண்மைக்கு மாறான கருத்தைச் சொல்லும்போது, மனம் வருத்தமாக இருக்கிறது. (குறுக்கீடு) இவ்வளவு செய்திருக்கிறார்கள் அம்மா.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உண்மைக்கு மாறுபட்டது என்று சொல்லுங்கள்.

**திரு. ராதாரவி:** இல்லை, இல்லை. இவ்வளவு செய்திருக்கிறார்கள் அம்மா.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராதாரவி, உண்மைக்கு மாறுபட்டது என்று சொல்லுங்கள்.

**திரு. ராதாரவி:** நான் அதைச் சொல்லவில்லை. இவ்வளவு செய்திருக்கிறார்கள் அம்மா. ஆனால், *ஓர் உண்மைக்கு மாறான கருத்து என்று எதிர்க்கட்சியில் சொல்கிறார்கள் என்றால், (குறுக்கீடு) சரி, சொல்லக்கூடாது. உண்மைக்கு மாறான கருத்து. சரி, உண்மைக்கு மாறான கருத்து. அதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிட்டீர்கள். உண்மைக்கு மாறான கருத்து. இந்த உண்மைக்கு மாறான கருத்தை எப்படிச் சொல்கிறார்கள் என்றால், பேசிக்கொண்டிருக்கும்போது, (குறுக்கீடு) அதைப் பேசுகின்றவர்களுக்குத்தான், நான் பேசியிருப்பதைப் பாருங்கள். நான் பேசியிருப்பதைப் பாருங்கள். ஏதாவது ஒன்றை எழுதி வைத்துப் படிப்பேனா? படிக்கமாட்டேன். ஏனென்றால், எனக்குத் தெரியும். நான் வந்து உள்ளசுத்தியோடு பேசுகிறேன் என்று. ஏனென்றால், நான் நடிகன், camera–விற்கு முன்னால். இங்கே, பொதுமக்களுக்காக இருப்பவன் என்பது எனக்குத் தெரியும். ஏன் நான் சொல்கிறேன் என்றால், அப்படிப்பட்ட இயக்கத்தில் இருக்கிறேன். தாயுள்ளம் படைத்த அண்ணா தி.மு.க.–வில் இருந்து வருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், நான் எல்லோருக்குமே மரியாதை

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது

கொடுப்பவன் என்று உங்களுக்குத் தெரியும். எதற்கு நான் இதைச் சொல்கிறேன் என்றால், ஓர் உண்மைக்குப் புறம்பான ஒரு செய்தியைச் சொல்கிறார்கள். இந்த 26 ஆம் தேதி, அம்மா, பெண்மணி என்றுகூடப் பாராமல், பாதுகாவலர்களெல்லாம் போகவேண்டாம் என்று சொல்கிறார்கள். இருந்தாலும், 27 ஆம் தேதி, உடனே நாகப்பட்டினம், கடலூர், கன்னியாகுமரி என்று வந்து பார்த்தார்கள். பற்றாக்குறைக்கு 30 ஆம் தேதியும் வந்து பார்க்கிறார்கள், எல்லோரையும். இதை, அந்த பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவரும், மாண்புமிகு ச.ம.உ. — சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் மணி அவர்கள் — ஏனென்றால் தமிழிலேதானே சொல்லவேண்டும்; அதனாலே சொல்கிறேன். உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள், அவர் என்ன சொல்கிறார் என்றால்— ஏனென்றால் பார்த்ததைச் சொல்கிறேன். நான் உண்மைக்குப் புறம்பான கருத்தைச் சொல்லவில்லை. அவர் சொல்கிறார், இந்த பூமி அதிர்ச்சி ஏற்பட்டதற்கும், சுனாமி ஏற்பட்டதற்கும் காரணமே அண்ணா தி.மு.க.தான் என்று சொன்னார். நான் பயந்துவிட்டேன். ஏனென்றால், நமது அண்ணா தி.மு.க. ஆட்களா கட்டையை எடுத்துக்கொண்டுபோய் கடலுக்குள்ளேபோய், நோண்டி, நோண்டி சுனாமியை உண்டாக்குகிறோம். நல்லவேளை, 11-30 மணிக்குச் செய்தி சொல்கிறார்கள். இது நடந்தது சுமத்ரா தீவு அருகில். பல ஆயிரம் மைல் இந்தியாவிலேயிருந்து தூரமாக இருக்கிறது. அப்படி நடந்ததைப்போய் அண்ணா தி.மு.க. என்று சொன்னால், சுமத்ரா தீவில் அண்ணா தி.மு.க. ஆட்சியா நடக்கிறது? இதைச் சொல்லலாமா? இதையெல்லாம் ஏன் நான் சொல்கிறேன் என்றால், தயவுசெய்து நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். நல்லவேளை, கடைசியிலே, இந்தியாவின் முதல் மனிதனாக இருக்கக்கூடியவர் மேதகு ஜனாதிபதி அய்யா அவர்கள், அவர் சொல்லியிருக்கிறார்; பெரிய விஞ்ஞானி அவர். அவர் சொல்லியிருக்கிறார்; மரங்களையெல்லாம் வளர்த்தால் சுனாமி வராது என்று. அப்பொழுதுதான் தெரிந்துகொண்டேன், ஏன் சுனாமி வந்தது என்று. (மேசையைத் தட்டும் ஒலி) எதற்கு இதைச் சொல்கிறேன் என்றால், பல நேரத்திலே, (குறுக்கீடு) இல்லை, இல்லை. மரம் இல்லாததற்குக் காரணம். அதைச் சொல்கிறேன் நான். அதாவது, நீங்கள் உடனே, (குறுக்கீடு) மரம் இல்லாததற்குக் காரணம். ஆகவே, மரம் வளர்ந்தால் நல்லது என்று சொல்கிறேன். இருந்தாலும், அதேபோல, மாநில அரசு மத்திய அரசுடன் ஒத்துப்போவதில்லை என்கிறார்கள். ஏனென்றால், மாண்புமிகு உறுப்பினர் நெப்போலியன் அவர்கள் இருக்கிறார். அவருக்குத் தெரியவேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். ஏனென்றால், நான் வருத்தத்தில் சொல்கிறேன்.



மாநில அரசு, மத்திய அரசோடு ஒத்துப்போகவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால், சென்னையில், சைதாப்பேட்டையில் என் தொகுதிக்கு உட்பட்ட இடத்திலே, எந்த மாநகராட்சி விழாவாக இருந்தாலும், அந்த மண்டலக் குழுத் தலைவர் பெயரும், எந்த Division-லே நடக்கிறதோ, அந்த Councillor பெயரும் இல்லாமல் விழா நடந்ததாகச் சரித்திரமே கிடையாது. ஏனென்றால், அப்படிப்பட்ட இயக்கம் இது. சட்டத்திற்கு உட்பட்ட இயக்கம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சியாக இருந்தாலும் பெயரைப் போட்டுத்தான் தீரவேண்டும். ஆனால், மாநில அரசு மத்திய அரசுடன் ஒத்துப்போகவேண்டும் என்று எந்தக் கூட்டத்திலே பேசுகிறார்கள் என்றால், கத்திப்பாரா அருகில் ஒரு பெரிய பாலம் கட்டுகிறார்கள். அங்கு நடந்த விழாவிலே இந்தப் பேச்சு நடக்கிறது. மாநில அரசு, மத்திய அரசோடு ஒத்துப்போக வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால், அந்த invitation-லே, அந்த அழைப்பிதழிலே — அந்தக் கத்திப்பாராவிலே இந்தப் பக்கம் பார்த்தால் சைதாப்பேட்டை தொகுதி. அதற்கு எம்.எல்.ஏ. யார் என்றால் ராதாரவி. இந்தப் பக்கம் பார்த்தால் ஆலந்தூர். அதற்கு யார் எம்.எல்.ஏ. என்று பார்த்தால், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர். இவர்கள் இரண்டு பேர்களுடைய பெயரும் கிடையாது. அதிலே சம்பந்தம் இல்லாதவர்களுடைய பெயர் இருக்கும்போது வருத்தம் இருக்குமா, இல்லையா? அப்படியென்றால் யார் ஒத்துப் போகவில்லை? மாநில அரசு, மத்திய அரசோடு ஒத்துப் போகவில்லையா? அல்லது மத்திய அரசு மாநில அரசோடு ஒத்துப்போகவில்லையா? அதைத் தெரிந்துகொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி )

பிற்பகல் 6-40

அதேமாதிரி, அம்மா புதுப்புது சலுகைகள், எல்லாம் இங்கே அறிவிக்கும்போது, உடனே எதிர்ப்பு சொல்கிறார்கள். அதற்கு நிறைய ரூல்ஸ் இருக்கிறது, இப்படி இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதனால்தான் கோரிக்கையை கேட்க பயமாக இருக்கிறது. ஏதாவது கேட்டு அம்மா அவர்கள் announce பண்ணிவிட்டு இவர்கள் வேண்டாம் என்று சொல்லிவிடுவார்களோ என பயமாக இருக்கிறது. அதனால்தான் எழுதி எடுத்துக் கொண்டு போகலாம் என்று நினைக்கிறேன். ஆனால், ஆங்கிலத்திலே ஜான் வெஸ்லி சொல்லியிருக்கிறான்.

'Do all the good you can, By all the means you can, In all the ways you can, In all the places you can, At all the times you can, To all the people you can, As long as ever you can'. அதாவது Do all the good you can. நீ எவ்வளவு

நன்மைகளைச் செய்ய முடியுமோ செய். By all the means you can. எந்த வழிமுறையில் செய்ய முடியுமோ நீ செய். In all the ways you can எந்த வழிகளில் எல்லாம் செய்ய முடியுமோ நீ செய். In all the places you can. எந்தெந்த இடத்தில் உதவி செய்ய முடியுமோ செய். At all the times you can. எந்த நேரத்தில் செய்ய முடியுமோ, அந்த நேரத்தில் எல்லாம் செய். To all the people you can. எந்தெந்த மக்களுக்கு உதவி தேவையோ செய். As long as ever you can. உன்னால் முடிந்த அளவிற்கு இருக்கும் வரை செய்து கொண்டே இரு என்று அந்த ஆங்கிலேயன் சொல்லியிருக்கிறான். அதனால்தான், இதை நம்முடைய அம்மா அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி ) இதைப் போய், தவறாகச் சொல்லியிருக்கும்போது வருத்தமாக இருக்கிறது.

ஒரே ஒரு விஷயம். கோரிக்கை என்று ஒன்றை எடுத்துக்கொண்டால் இந்த Special Court எல்லாம் Government தான் அமைக்கிறது. அது மாதிரி இப்போது நிறைய பைனான்ஸ் கம்பெனிஸ், அதற்கெல்லாம் இருக்கு Special Court. அதேமாதிரி இந்த VCD Piracy–க்கும் தனி Court வைத்தால், உடனே தீர்ப்பு கிடைத்து, உடனே யார், யார் குற்றவாளிகளோ அவர்களைத் தண்டிக்கலாம். அதற்கு உதவியாக இருக்கும். அதேபோல், தமிழகத்தில் உள்ள கேபிள் டி.வி. ஆப்பரேட்டர்கள் பலருக்கு கட்டண டி.வி. சேனல்கள், தங்கள் நிறுவனத்தின் ஒளிபரப்பை வெளியிட உரிமைகள் வழங்குவது கிடையாது. எனவே, எந்த ஒரு கேபிள் டி.வி. ஆப்பரேட்டர், எந்த டி.வி. சானல் நிறுவனத்தின் ஒளிபரப்பை வெளியிட விரும்பினால் அவர்களுக்கு டி..வி. சேனல் நிறுவனங்கள், உரிமம் வெளியிட உத்தரவிட வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல கலை மேம்பாட்டுத் துறையின்மூலமாக, தமிழ்நாடு கிராமிய கலைஞர்களுக்கு அடையாள அட்டையைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு பஸ் பாஸ் வேண்டுமென்றால் மெட்ராஸ் வரவேண்டியிருக்கிறது. அம்மா, அவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். இப்போது, ஒன்றுமில்லை, அரக்கோணத்தில் புரோகிராமை முடித்துக்கொண்டு, திருப்பி ஓசூர் போகவேண்டுமென்றால், மெட்ராஸ் வந்து பாஸ் வாங்க முடியாது. ஆகையினால் கலை மேம்பாட்டுத் துறைமூலமாக அந்த Identity Card கொடுத்து இருக்கிறார்கள். அந்த Identity Card காண்பித்தால் அந்த இடத்திலேயே பாஸ் கொடுத்தால் நன்றாக இருக்கும்.



அதேபோல நெசவாளர்கள் பிள்ளைகள் படிப்பதற்கு நல்ல திட்டம் கொண்டு வந்தீர்கள். அதுபோல் கிராமிய கலைஞர்களின் பிள்ளைகள் படிக்க நீங்கள் உதவி செய்ய வேண்டும். ஏன் நான் சொல்கிறேன் என்றால், என்னுடைய அப்பா வந்து நன்றாக சம்பாதித்தார். உழைத்துக் கொண்டேயிருந்தார். இந்த திராவிட இயக்கத்திற்கு ஒரு தூணாக இருந்தார். இந்த உழைப்பிற்கே நேரம் சரியாகிப் போய்விட்டது. ஆனால், என்னைப் படிக்க வைத்தது எல்லாம், என்னுடைய தாய்தான். அதனால்தான், இந்த கலைக் குழந்தைகள் படிக்க வேண்டுமென்று தாய் உள்ளத்தோடு இருக்கும் முதலமைச்சர் அம்மா அவர்களை நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இவர்கள் படிப்பதற்கு நீங்கள் நல்லதொரு திட்டத்தைக் கொடுக்க வேண்டும். ஏனென்றால், நீங்கள் இருக்கும்போதுதான் நல்லது நடக்கும், மற்றது எல்லாம் வெளிநடக்கும் என்று சொல்லிக்கொண்டு, 'காலத்தை வென்றவர் நீங்கள், காவியம் ஆனவர் நீங்கள், வேதனை தீர்ப்பவர் நீங்கள், விழிகளில் நிறைந்தவர் நீங்கள், வெற்றித் திருமகள் நீங்கள், நீங்கள், நீங்கள்' என்று சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி ) சாதாரணமாக திருப்பதி என்றால் லட்டு இருக்கும்; அய்யப்பன் கோவில் என்றால் அப்பம் இருக்கும்; பழனி என்றால் பஞ்சாமிர்தம் இருக்கும்; பஞ்சாமிர்தம் இல்லையென்றால் பழனியா என்று சந்தேகம் வரும். லட்டு இல்லையென்றால் திருப்பதியா என்று சந்தேகம் வந்துவிடும். அப்பம் இல்லையென்றால் அய்யப்பன் கோவிலா என்று சந்தேகம் வந்துவிடும். ஏனென்றால் இது எல்லாம் இல்லாமல் இருக்காது. அதேபோலத்தான் ஒரு பட்ஜெட் என்றால் வரியிருந்தாக வேண்டும். ஆனால், அப்படி வரியில்லாத பட்ஜெட்டைக் கொடுத்த அம்மா அவர்களை மக்கள் பாராட்டுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

ஒரு தாய் தன் குழந்தைகளுடன் கோவிலுக்குச் செல்கிறாள். சந்தை வழியாகப் போன குழந்தை எனக்கு ரிப்பன் வேண்டும், ஐஸ்கிரீம் வேண்டும், அது வேண்டும், இது வேண்டும் என்று கேட்கிறது. உடனே அம்மா சொல்கிறார்கள். கோவிலுக்குப் போய் திரும்பி வந்தவுடனே வாங்கித்தரேன் என்று. சாமி கும்பிட்டுக் கொண்டிருக்கும்போது, இந்த அம்மா வாங்கித் தர மாட்டாங்க போல இருக்கிறதேயென்று, குழந்தை ஓடிப்போய், உள்ளே ஓடிப்போனவுடன் சந்தையிலே இடிபடுகிறது. இந்த இடிபட ஆரம்பித்தவுடன் அழ ஆரம்பித்துவிடுகிறது. ஏனென்றால் இவ்வளவு நாள் இடிபாடு வாங்கிக் கொண்டிருந்தது புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் போன்று அந்தத் தாய்தான். அந்த இடிபாடு இந்தக் குழந்தைக்குத் தெரியவில்லை. இப்போது இடி வாங்கியவுடன் அழ ஆரம்பித்துவிடுகிறது. இப்போ எல்லோரும்

கேட்கிறார்கள், என்னம்மா வேண்டும், ஏம்மா அழுகிறாய் உனக்கு என்ன வேண்டுமென்று. ரிப்பன் வேண்டுமா என்று கேட்டார்கள். வேண்டாம், எனக்கு எங்க அம்மாதான் வேண்டுமென்று கை நீட்டுகிறது. அதேமாதிரி உனக்கு ஐஸ்கிரீம் வேண்டுமா என்று கேட்டார்கள். வேண்டாம் எனக்கு எங்க அம்மாதான் வேண்டுமென்று கைநீட்டுகிறது. ஏனென்றால் இப்போது அவங்க அம்மாதான் வேண்டும். அதைப்போலத்தான் தமிழ்நாட்டு மக்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏதோ ஐஸ்கிரீம் வேண்டும், ரிப்பன் வேண்டும் என்ற ஆசையிலே ஒரு நாடாளுமன்றத் தேர்தலிலே போய் இருக்கலாம். ஆனால், இப்போது (மேசையைத் தட்டும் ஒலி) பெட்ரோல், டீசல் விலையெல்லாம் ஏறினாலும், இந்தக் கொடுமையைத் தாங்க முடியாமல்– பெட்ரோல் டீசல் விலை ஏறினாலும், பஸ் டிக்கட் விலையை ஏற்றாமல் இருக்கும் அம்மா வேண்டும் வேண்டும் என்று மக்கள் கை நீட்டிச் சொல்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு வாய்ப்புக் கொடுத்ததற்கு, பேரவைத் தலைவர் அவர்களுக்கும், வழிவகுத்துக் கொடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் பாதங்களைத் தொட்டு வணங்கி, செவிமடுத்த என்னுடைய சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எதிர்க்கட்சித் தோழர்களுக்கும், வணக்கத்தைக் கூறி விடைபெறுகிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 6–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. ஜெயக்குமார்

***திரு. கு. ஜெயக்குமார்:** இன்றைய மானியக் கோரிக்கைகளின் மேல் பேசுவதற்கு வாய்ப்பளித்த அவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். அன்னை இந்திராவின் மருமகளாய் இருந்து, இந்தியாவின் ஒப்பற்றத் திருமகளாய் உயர்ந்து, தியாகத்தின் திருவுருவாம் மகாத்மாவின் மறு உருவாகி, இன்றைய இந்திய அரசியலில் மகா சக்தியாக உலா வரும், உலகம் போற்றும் உத்தமத் தலைவி, அன்னை சோனியா காந்தி அவர்கள், ஓர் அரசு அதிகாரியாக இருந்த என்னை, இருமுறை நாடாளுமன்ற வேட்பாளனாக்கி, இம்முறை சட்டமன்ற உறுப்பினராக்கி, ஈடில்லா இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியின் அகில இந்தியச் செயலாளராக்கி, சுந்தரத் தெலுங்கு ஆளும் ஆந்திரா மாநிலத்தின் பொறுப்பாளராக்கி, என்னை இங்கே சிறப்பித்து இருக்கின்ற அன்புத் தலைவி, அன்னை சோனியா காந்தி அம்மையார் அவர்களுக்கு என்னுடைய நன்றியினைக் காணிக்கையாக்குகின்றேன்.



கண் இமைக்கும் நேரத்தில், சுனாமி நம் சொந்தங்களையெல்லாம் சுருட்டிச்செல்ல, அந்தக் கோரக் கொடுமையிலிருந்து மக்களைக் காத்திட சுனாமி ஓயும்முன் அத்தனை கடலோரங்களுக்கும் ஓடினார் சோனியா அன்னை. அந்தமானிலே நில நடுக்கம் இன்னும் ஓயவில்லை. அங்கே விமானத்தளம்கூட விரிசல் கண்டு இருக்கின்றது. உங்கள் உயிருக்கே ஆபத்து ஏற்படலாம் என்று அதிகாரிகள் சொல்லியும்கூட, மக்கள் உயிர் காக்க தன் உயிரைத் துச்சமென நினைத்து, உடைமைகளையும் உற்றார், உறவினர்களையும் இழந்தோரின் கரம்பற்றி கண்ணீர் துடைத்திட, பெற்றோரை இழந்து அநாதைகளாக இருக்கின்ற குழந்தைகளை வாரி அனைத்துத் தன் குழந்தைகளாக்கிட, அந்தமான் ஓடினார். அங்கிருந்து காசிமேடு, காசிமேட்டிலிருந்து பட்டினப்பாக்கம். பட்டினப்பாக்கம் அடுத்து நாகை, நாகை அடுத்து கன்னியாகுமரி, அதனை அடுத்து கேரளா என்று அத்தனை இடங்களுக்கும் சென்று 'போற்றுவோர் போற்றட்டும், புழுதி வாரி தூற்றுவோர் தூற்றட்டும், பணி செய்வதே என் கடமை' என்று மக்களுக்காகத் தன்னை அர்ப்பணித்துக்கொண்ட உத்தமத் தலைவி சோனியா காந்தி அம்மையார் அவர்களுக்கு சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அனைவரின் சார்பாகவும் என்னுடைய நன்றியினை தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, உங்களைப்பற்றி ஓரிரு வார்த்தைகள் சொல்ல நீங்கள் அனுமதிக்க வேண்டும் என்று நான் விழைகின்றேன். இந்த மாமன்றத்திலே, எனக்கு முன்பாகப் பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள், உங்களைத் தமிழ் ஞானி என்றும், தமிழ்ப் புலவர் என்றும், தமிழ் வித்தகர் என்றும் சொல்லியதை நான் கேள்விப்பட்டு இருக்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. ஜெயக்குமார், நான் ஒரு தமிழ் மாணவன் அவ்வளவுதான்.

**திரு. கு. ஜெயக்குமார்:** தமிழ் மாணவன் என்று சொல்கின்றீர்கள். ஆனால், உங்களுடைய தமிழ் உரையை, உங்களுடைய புலமையைக் கேட்கின்ற வாய்ப்பு எனக்குக் கிட்டவில்லை. இருப்பினும் உங்களுடைய நினைவாற்றலை நான் இங்கே மெச்சுகின்றேன், போற்றுகின்றேன், புகழ்கின்றேன். காரணம், இந்த அவையிலே என்னுடைய அருமை இளவல், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் பேசுகின்றபோது, தமிழகத்திலே முழு மது விலக்குக் கொள்கை கொண்டு வரவேண்டும் என்று குறிப்பிட்ட நேரத்திலே, நான் அவையிலே இங்கே அமர்ந்து இருந்தேன். இந்தக்

கூட்டத் தொடரிலே நான் ஒரு சில நாட்கள் அவைக்கு வரவில்லை. காரணம் நாட்டிற்கு சுதந்திரம் பெற்றிட வேண்டுமென்று உண்ணா நோன்பும், உப்புப் போரும் தொடுத்திட்ட அண்ணல் காந்தியடிகள் தொடங்கிய அந்தத் தண்டிப் பயணத்திற்காக இரண்டுமுறை நான் சென்று அங்கு வேலைகளை கவனிக்க வேண்டியிருந்ததால், சில நாட்கள் சபைக்கு வரவில்லை. ஆனால், நீங்கள் அழைத்த அன்று சபையிலேயிருந்தும், திரு. ஞானசேகரன் அவர்களுடைய நேரம் வீணாகக்கூடாது என்பதற்காக நான் எழவில்லை. என்னைத் தூண்டிப் பார்த்தீர்கள் நீங்கள். என்ன பதில் சொல்லப் போகிறேன் என்று. அன்றைக்குச் சொல்லாத பதிலை இன்றைக்கு நான் சொல்கின்றேன். எங்களுடைய கொள்கை, என்னுடைய கொள்கை, என்னுடைய கட்சியினுடைய கொள்கை, அன்றைக்கு திரு. ஞானசேகரன் அவர்கள் சொன்னதுதான்.

*பிற்பகல் 6–50*

முழு மதுவிலக்கு வேண்டுமென்பதுதான். ஏன், முன்பொரு முறை நான் பேசியபோது 'கள்' உண்பதை தமிழகத்திலே அனுமதிக்க வேண்டுமென்று இந்தச் சபையிலே பேசியதை நீங்கள் கவனம் வைத்துக்கொண்டிருந்தீர்கள். தமிழகத்திலே இன்று 7 கோடி பனை மரங்கள் இருக்கின்றன; 2 கோடி தென்னை மரங்கள் இருக்கின்றன. இந்தத் தென்னை மரங்களிலேயிருந்து சாறு இறக்குவதாகச் சொல்லிவிட்டு, கள்ளை இறக்குவதன் காரணமாக, இந்த அரசு அந்தக் 'கள்' இறக்குவோர்மீது அபராதம் விதித்து, சுமார் வருடத்திற்கு 11 கோடி ரூபாய் வருவாய் பெறுகிறது. அதே 'கள்' இறக்குவதை நீங்கள் ஏற்றுக்கொண்டால், 280 கோடி ரூபாய் இந்த அரசுக்குக் கூடுதல் வருவாயாக வரும் என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு இங்கே நான் நினைவுபடுத்துவது மட்டுமல்ல, 'கள்' உண்பதன்மூலம் மஞ்சள் காமாலை நீங்கும், 'கள்' உண்பதன்மூலம் சர்க்கரை வியாதி குறையும் என்ற கருத்துகளையெல்லாம் அன்றைக்கே நான் சொன்னேன். ஏன் என்றால், இந்த அரசு தாராளமாக சாராயத்தை அவிழ்த்துவிட்டு இருப்பதன் காரணமாக, விஷ சாராயத்தைக் குடித்து ஆங்காங்கே மக்கள் மாண்டு கொண்டிருக்கின்றார்கள். கள்ளச் சாராயத்தைக் குடித்து மக்கள் இறக்கின்றார்கள். (குறுக்கீடு) நான் பேசுகின்ற நாளிலே நடந்த நிகழ்ச்சி இது; அன்றைய நிகழ்வுகள். ஆகவே, மக்கள் (குறுக்கீடு) முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, உங்களை — You will be allowed to continue. சாராயம் தற்போது இங்கே நடைமுறையில்



இல்லை. It is only Indian made foreign liquor and beer, not liquor. Country liquor is not there.

**திரு. கு. ஜெயக்குமார்:** Whatever. ஏதோ நீங்கள் கொடுப்பதைக் குடிப்பதன்மூலம் மக்கள் சாகின்றார்கள்; உயிரிழக்கின்றார்கள். எனவே, அதற்குப் பதிலாக, உடலுக்கு நல்லதைக் கொடுக்கின்ற இந்தக் கள்ளைக் கொடுக்கலாமே என்றுதான் சொன்னேனேயொழிய, இந்த அரசு எந்தக் காரணம் கொண்டும்...

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுபானங்களில் ஒரு வகையான 'கள்' வேண்டுமென்று இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நியாயப்படுத்தி (குறுக்கீடு) நியாயப்படுத்தி கூறிக்கொண்டிருக்கின்றார். (குறுக்கீடு) கள்ளை நேரடியாக விற்கின்றபோது, அரசினுடைய கட்டுப்பாட்டில் இல்லாமல் விற்கின்றபோது, ஆந்திரம் போன்ற மாநிலங்களில் Hydro Chloride என்ற போதையை உருவாக்கக்கூடிய சில கெமிக்கல்களை, இரசாயன விஷத்தன்மை வாய்ந்த பொருள்களை அதில் கலந்து விற்று, அங்கே பெரும் பகுதியான மக்கள் உடல்நலம் மிகவும் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருந்தது. அதனால், நாங்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகவே அந்தக் 'கள்' இறக்குவோர் சமுதாயத்தை நாங்கள் கூப்பிட்டு, அழைத்துப் பேசுகின்றபோது, கள்ளை நீங்கள் மரத்திலிருந்து இறக்கி அதைத் தொழிற்சாலைகளின்மூலமாக process செய்து, அதை டாஸ்மாக் போன்ற நிறுவனங்களுக்கு நீங்கள் வழங்கினால் அதை நாங்கள் நேரடியாகக் கடைகளில் சில்லறை விற்பனைக் கடைகளில் விற்பதற்கு அரசு தயாராக இருக்கின்றது. அந்தமாதிரியான ஒரு திட்டத்தை நீங்கள் தயாரித்து அரசிடம் கொடுக்கின்றபட்சத்தில், 'கள்' அனுமதிக்கப்படும் என்ற கருத்தினைச் சொல்லியிருக்கின்றோம். அவர்களும், நாங்கள் ஆய்வு செய்துவிட்டு வருகின்றோம் என்று சொன்னவர்கள் இதுவரை வரவில்லை என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய கருத்தைத் தவறாகப் புரிந்துகொண்டார்கள். நான் 'கள்' கொண்டுவர வேண்டுமென்று இப்போது சொல்லவில்லை. அன்றைக்குச் சபாநாயகர் அவர்கள், பேரவைத் தலைவர் அவர்கள் "ஜெயக்குமார் என்ன சொல்கின்றார்" என்று கேட்டதற்குத்தான் இப்போது, அன்றைக்கு நான் இதைப்பற்றி எதற்காகப் பேசினேன் என்று ஒரு விளக்கத்தைக் கொடுத்தேன்.

அடுத்து, மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு வீட்டு வசதி மானியத்தின்மீது பேசுகின்றபோது, மானியக் கோரிக்கையாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 370 கோடி ரூபாயைக் கேட்டிருக்கின்றார்கள். 3 தலைப்புகளிலே சொன்னார்கள். 232 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கு என்றும், மூலதனச் செலவு ரூபாய் 22 கோடி என்றும், கடன் செலவு ரூபாய் 115 கோடி என்றும் இங்கே சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களை நான் ஒன்று கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன். இந்த வருடம் கடந்த ஆண்டைவிட சுமார் ஆயிரம் கோடி ரூபாய் நீங்கள் அதிகமாக திட்டச் செலவிலே காட்டியிருக்கின்றீர்கள். Plan Funds, Rs. 9,100 Crores. ஆனால், கடந்த ஆண்டைவிட வீட்டுவசதி வாரியத்திற்கு 130 கோடி ரூபாயை Plan Funds–லே குறைத்திருக்கின்றீர்கள். இதே அரசுதான் 'குடும்பத்திற்கு ஒரு வீடு' என்ற திட்டத்தையும் அறிவித்திருக்கின்றது. ஆனால், கடந்த ஆண்டைவிட உங்களுடைய மொத்தச் செலவிலே அதிகமாகக் கொடுத்திருக்கலாம். ஆனால், நீங்கள் வீடு கட்ட வேண்டியது போன்ற செலவுகளுக்காக, மூலதனச் செலவுகளுக்காக, மேம்பாட்டுச் செலவுகளுக்காகக் கொடுக்க வேண்டிய பணத்தில் 25 சதவீதத்தைக் கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு குறைத்துக் காட்டியிருக்கின்றீர்கள். அது மட்டுமல்ல, நீங்கள் ஆட்சிக்கு வந்த நாள் முதற்கொண்டு இதுவரை 498.81 கோடி ரூபாயில் 1 இலட்சத்து 48 ஆயிரம் வீடுகள் கட்டியிருப்பதாகவும், இவ்வாண்டு 35 கோடி ரூபாயில் 37 ஆயிரத்து, 676 வீடுகள் கட்டப்போவதாகவும் சொல்லியிருக்கின்றீர்கள். ஆக, ஒரு வீட்டிற்கு நீங்கள் செலவு செய்யப் போவது ரூபாய் 28 ஆயிரத்தைத் தாண்டவில்லை. இந்த ஒரு நிலையிலே எப்படி நீங்கள் 'ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு' கொடுக்கப் போகின்றீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பதில் அளிக்கின்றபோது சொன்னால், நலமாக இருக்கும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 6–55*

வேறொரு திட்டத்தையும் இங்கே அறிவித்திருக்கின்றீர்கள். வீடுகளின் நிலை உயர்த்தப் போவதாகவும் சொல்லியிருக்கின்றீர்கள். அதாவது 10 ஆயிரம் ரூபாய் கொடுக்கப் போவதாகவும், அதிலே அரசு, 2,500 ரூபாயை மானியமாக கொடுக்கும் என்றும், வீட்டுக்காரர் 500 ரூபாயைக் கொடுப்பார் என்றும், மீதி 7,000 ரூபாய் வங்கியிலே இருந்து கொண்டு வரப்படும் என்று சொல்லியிருக்கின்றீர்கள். இதுவும் சாத்தியமா என்று எனக்குத் தெரியவில்லை. காரணம், இந்த 7,000



ரூபாயை வங்கியிலேயிருந்து வாங்குவதற்கு என்ன பாடு இந்த மக்கள் படவேண்டும் என்பதை காலையிலே எங்கள் கட்சியின் சார்பாக பேசிய அருமை சகோதரி மாண்புமிகு உறுப்பினர் யசோதா அவர்கள்கூட இங்கே குறிப்பிட்டார்கள்.

மாண்புமிகு அமைச்சர் பெருந்தகை அவர்களே, உங்களுடைய துறையிலே பல பெரும் குறைகள் இருக்கின்றன. குறிப்பாக, பல மக்கள் என்னிடம் வந்து நேராகச் சொல்லியிருக்கின்றார்கள். என்னுடைய தொகுதியிலேகூட, கணிசமான மக்கள் இதுபோன்ற குறைகளால் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். 20 வருடங்கள் ஆகியும், மக்கள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வீட்டிற்காக வேண்டிய பணத்தைக் கட்டிய பிறகும், 20 வருடங்கள் ஆன பிறகும்கூட அவர்களுக்குப் பத்திரங்கள் கொடுக்கப்படாமல் இருக்கின்றதே இது என்ன நியாயம்? (குறுக்கீடு) கடைசியாகச் சொல்லுங்கள், மொத்தமாகச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வீட்டிற்கான இடத்திற்கான பணங்களை செலுத்திய பின்பும் அதற்கான பத்திரங்கள் வரவில்லை என்ற குறையைச் சொன்னார்கள். இன்றைக்கு வீட்டிற்கான இடங்களைப் பெறுகின்றபோது, அது வழக்கு மன்றத்திலே இருக்குமானால், அந்த வழக்கு மன்றத்தினுடைய தீர்ப்பு வந்த பின்புதான் அதற்கு முடிவு செய்து, அதற்கான முடிவான மதிப்புகள் செய்யப்பட முடியும். அந்த வகையிலேதான் தீர்ப்புகள் வந்த பின்புதான் அதற்கான பத்திரங்களையும் வழங்க முடியும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. கு. ஜெயக்குமார்:** என்னதான் இது பதிலாக இருந்தாலும், 20 ஆண்டுகள் பத்திரம் கொடுக்கவில்லை என்றால், அந்த வீட்டின் சொந்தக்காரர் நிலை என்ன என்பதை தயவுசெய்து இந்த அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும். நீங்கள் சொல்கின்ற பதில் நீதிமன்றங்களிலே இருக்கிறது; வெவ்வேறு நிலைகளிலே இருக்கிறது என்பதாகலாம். ஆனால், இந்த 20 வருடங்களுக்குப் பிறகு, அந்த வீட்டிற்கே மதிப்பு கிடையாது. இடிந்து விழுகின்ற நிலையிலே அந்த வீடு இருக்கும்போது, நீங்கள் 20 வருடங்கள் கழித்து பத்திரங்கள் கொடுத்தால் என்ன, கொடுக்காவிட்டால் என்ன என்ற ஒரு நிலையை அந்த மக்கள் அடைகிறார்கள்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடங்களை வாங்குகின்றபோது, அது

தோராய மதிப்பீட்டிலே பெறுகின்ற வகையிலேதான் அவர்கள் வாங்குகின்றார்கள். அதன்மீது வழக்கு இருக்கின்றபோது, அந்த வழக்கு முடிவு வந்தால்தான், அதற்கான முடிவுகளைச் செய்வதற்கான வழிகள் எல்லாம் ஏற்படும். அந்த வகையிலேதான் பத்திரங்கள் வழங்கப்படுகின்றன. இன்றைக்கு மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சராய் இருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தீர்மானமாகச் சொல்லியிருக்கின்றார்கள். முடிவான விலைகள் அமைந்த பின்புதான், அவர்களுக்கு இடங்களை ஒதுக்கவேண்டும் என்ற ஆணையை இன்றைக்கு வழங்கியிருக்கின்றார்கள் என்று சொன்னால், இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கின்ற இந்த வீட்டு வசதி வாரியத்திலே வாங்கப்பட்டிருக்கின்ற இடங்களை வாங்கியவர்களுடைய வேதனைகளை எல்லாம் அறிந்து மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் இன்றைக்குத் தெளிவான முடிவுகள் எடுத்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாறு முழுப் பணத்தையும் கட்டிவிட்ட மக்களுக்கு அந்த வீட்டுப் பத்திரங்களைக் கொடுப்பதற்கு, நீங்கள் உடனடியாக ஓர் ஆணை பிறப்பிக்க வேண்டும். இது பெரும்பாலும் அதிகாரிகளுடைய செயல்பாடு சரியாக இல்லாததால் இப்படி இருக்கின்றது. இதை நான் நன்றாக அறிவேன். அதுமட்டுமல்ல, நீங்கள் விலையைப் பற்றி இங்கே சொன்னீர்கள். இதனால் பாதிக்கப்பட்டிருப்பவன் நானும்கூட. எனக்கு இதுவரை இருக்கின்ற சொத்து ஒரு Tamil Nadu Housing Board வீடு மட்டும்தான். அந்த வீடு வாங்கி, 5 வருடங்கள் பொறுத்து, ஆரம்பத்திலே ஒரு விலையைச் சொன்னீர்கள் (குறுக்கீடு) எந்த அரசு என்று நான் சொல்லவில்லை. பொதுவாகச் சொல்கின்றேன். ஆரம்பத்திலே ஒரு விலையை வீட்டு வசதி வாரியம் குறிப்பிட்டது. 5 வருடங்கள் பொறுத்து, இது மாற்றி அமைக்கப்பட்ட விலை என்று 70 சதவிகிதம், 80 சதவிகிதம் உயர்த்திச் சொல்கின்றார்களே, இதில் என்ன நியாயம் இருக்கின்றது? வருத்தத்தோடு சொல்கின்றேன்...

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடங்களை வாங்குகின்றபோது, தோராய மதிப்பீடு என்ற அடிப்படையில்தான் வாங்கப்படுகிறது. அந்த நிலத்தின்மீது வழக்கு மன்றத்திலே தீர்ப்பு வருகின்றபோது, அதற்கான மதிப்பீடுகளைக் கொடுக்கின்றபோது, அந்த வீட்டை வாங்குகின்றவர்களுக்கு அது தவறான கருத்தாக எண்ணலாம். ஆனால், வாங்குகின்றபோது தோராய மதிப்பீடு என்ற அடிப்படையிலே வாங்குகின்ற காரணத்தினால்தான், இந்த முடிவு ஏற்படுகின்றது என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்கின்றேன்.



*பிற்பகல் 7-00*

**திரு. கு. ஜெயக்குமார்:** எவ்வளவு நாட்களுக்கு, எத்தனை அரசுகள் இதுபோன்ற பதில்களைக் கொடுத்துக் கொண்டிருக்கப் போகின்றன என்று எனக்குத் தெரியவில்லை. அது மட்டுமல்ல.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** ஆகவேதான் இன்றைக்கு மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொல்லியிருப்பதால் இதுபோன்று இருக்கின்ற வழக்குகளையெல்லாம் ஒருங்கிணைத்து வழக்கு மன்றத்திலே தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை உடனே எடுக்க வேண்டுமென்ற வகையிலே இன்றைக்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை நான் எடுத்துச் சொல்கிறேன்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, வீடுகளின் நிலைகளைப் பார்க்கின்றபோது, பழமைவாய்ந்த கட்டடங்கள் வலிமையாக உள்ளன. இந்தக் கட்டடத்தைக்கூட எடுத்துக் கொள்ளுங்கள். இவ்வளவு நாளும் இது இவ்வளவு வலிமையோடு இருக்க, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் கட்டிக்கொடுக்கின்ற வீடுகளெல்லாம் அவற்றினுடைய தரம் குறைந்தவையாக எளிதிலே விழுந்துவிடுபவையாக இருக்கின்றன. வீட்டின் தரத்தையும் அரசு உயர்த்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் சிறப்பான ஒரு காரியத்தை இங்கே செய்திருக்கின்றார். அதாவது, Special Component Plan செலவு காட்டியிருக்கிறார்கள் இந்த முறை. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சற்று இதிலே பங்கெடுத்துக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன். கடந்த முறையே நீங்கள் Special Component Plan-ஐ அமல்படுத்தி இருக்கின்றீர்கள். இந்த முறை நம்முடைய மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் Special Component Plan-ஐக் கொடுத்திருக்கின்றார்கள். அந்த Special Component Plan-லே, மொத்தத் திட்டச் செலவு 74 கோடி ரூபாய் என்றும், S.C.P.-லே 44 கோடி ரூபாய் என்றும் இதிலே காட்டியிருக்கின்றார்கள். நான் இதை மிக வேதனையோடு குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே நீங்கள் S.C.P.-லே காட்டியிருந்தாலும், S.C.P. என்பது இந்தத்

தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒதுக்கித் தரப்படுகின்ற உட்கூறு திட்டம். இதை இங்கே நீங்கள் காட்டியிருந்தாலும் நிச்சயமாகச் சொல்கிறேன், திட்டவட்டமாகச் சொல்கிறேன். உங்களுடைய அரசு இந்த S.C.P.–ஐக் கொடுக்கப்போவது கிடையவே கிடையாது. இந்த ஏழை மக்களுக்கு, இந்தப் பணத்தை நீங்கள் கொடுக்கப் போவதேயில்லை என்பதைத் திட்டவட்டமாக நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**திரு. கு. ஜெயக்குமார்:** பேச்சை முடித்துவிடுகிறேன். பிறகு உங்கள் விளக்கத்திலே சொல்லுங்கள். மாண்புமிகு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஜெயக்குமார், இன்னும் 3 மணித்துளிகளில் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களே, உங்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இந்த S.C.P.–லே காகிதக் கூழ் திட்டத்தின்கீழ் ஏற்கெனவே ஒரு திட்டத்தை வனத் துறையிலே அறிவித்திருந்தார்கள். 189 இலட்சம் ரூபாய். 189 இலட்சம் ரூபாய் இந்த மரக் கூழ் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டு, அதிலே 36 இலட்சம் ரூபாயை S.C.P.–ஆகக் காட்டியிருக்கின்றார்கள். ஏற்கெனவே சொன்னேன், இந்த S.C.P. திட்டப் புத்தகத்தை சபையிலே இருக்கின்ற அனைவருக்கும் நீங்கள் கொடுக்க வேண்டும். இதை ஒரு இரகசியப் பெட்டகமாக நீங்கள் காத்துக் கொண்டிருக்கிறீர்கள். இதற்கு நான் கடும் கண்டனம் தெரிவிக்கின்றேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இது கிடைப்பது கிடையாது. இதிலே சொல்லியிருக்கின்றீர்கள். 36 இலட்சம் ரூபாய் S.C.P.–லே சொல்லியிருக்கின்றீர்கள். அதனுடைய செலவு விவரப் பட்டியலை இங்கே படித்துக் காண்பிக்கிறேன். சம்பளம் 117 இலட்சம், அகவிலைப் படி 62 இலட்சம், பயணச் செலவு 5 இலட்சம், அலுவலகச் செலவு என்று பெட்ரோல், மோட்டார் வண்டி என்று 189 இலட்சத்திற்கு கணக்குக் காட்டியிருக்கின்றீர்களே, இதில் S.C.P. என்று 36 இலட்சத்தைச் சொல்லியிருக்கின்றீர்களே, எந்த ஒரு ஆதிதிராவிடனுக்கு, தாழ்த்தப்பட்டவனுக்கு இதனால் பயன் ஏற்பட்டது என்ற வினாவை இந்த அரசின் முன்வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, நீங்கள் இந்த முறை இந்த



S.C.P.–யிலே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைக் கரம்கூப்பிக் கேட்டுக்கொள்கிறேன், S.C.P. என்பது 789 account. இந்த account 789–ல் தயவுசெய்து நீங்கள் உங்களுடைய link document–ஐ எடுத்துப்பாருங்கள். Link document —document No. 60. In that you have provided a total plan amount of Rs. 9,100 Crores. The S.C.P. as given by the Government—This is a Government document compiled by the Adi Dravidar Welfare Department taking information from all the other departments. In that they have shown an S.C.P. amount of Rs. 1,820 Crores very cleverly, very efficiently, very sincerely. You have shown an amount of 18 per cent. Excellent. The whole world will praise this Government for providing Rs. 1,820 Crores. But what is the reality? The reality is nothing less than what you have done under the wood pulp scheme, not even a naya paise has gone for the Scheduled Caste people. You take your account on Link Document No. 60. You please put the computer button for 789. Your account 789 will give only Rs. 278 Crores out of Rs. 9,100 Crores which is nothing but 15 per cent on the allotted amount of Rs.1,820 Crores.

பிற்பகல் 7–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** ஒன்றே ஒன்றுக்கு மட்டும் விளக்கம் சொல்லிவிடுகிறேன்.

**திரு. கு. ஜெயக்குமார்:** I will finish (Interruption) I will finish, please Sir. Otherwise my point would be incomplete. Please listen to me and answer me. I want that only. My entire effort is to get the Hon. Finance Minister's attention to do justice for the people. Sir, you have provided only ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஜெயக்குமார், இன்னும் இரண்டு மணித்துளிகளில் முடியுங்கள். ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு வந்து விடுங்கள். அங்கேயே நின்றுவிடாதீர்கள்.

**திரு. கு. ஜெயக்குமார்:** சார், இதிலே ஆங்கிலத்திலே பேசினால்தான் சரியாக இருக்கும். ஆக திட்டத் தொகையிலே S.C.P.–யின் தலைப்பிலே 18 சதவிகிதம் கொடுத்ததாக 1,820 கோடி ரூபாயை இந்த மக்களுக்கு ஒதுக்கியதாக கணக்குக் காட்டியிருக்கின்றீர்கள். வேறு ஒரு document–லே நீங்கள் 278 கோடியைத்தான் செலவாகக் காண்பித்து இருக்கின்றீர்கள். இதன் மறு அர்த்தம் என்ன என்றால், 100 ரூபாயை நீங்கள் இந்த மக்களுக்காக செலவு செய்ய வேண்டுமென்றால், அதற்குப்

185241

பதிலாக 1.5 ரூபாயைத்தான் இந்த அரசு செலவு செய்திருக்கின்றது. இதற்குத்தான் கணக்கு காண்பித்திருக்கின்றீர்கள். இதுதான் கணக்கிலே வருகின்றது. மீதி எங்கே சென்றது என்று என்னைப்போன்று சற்று பொருளாதாரம் தெரிந்தவன் கேட்கின்றேன். உங்கள் பதிலைக் கொடுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, S.C.P.-ஐப் பொறுத்தவரைக்கும், specific allocation for schemes or projects meant for Scheduled Castes என்பது ஒன்று. இன்னும் ஒன்று ஒரு ரோடு, சாலை போடப்படுகிறது. ஒரு dam கட்டப்படுகிறது. அதுவெல்லாம் அனைவருக்கும் it is a common utility. The benefit therein is going to be enjoyed by the Scheduled Castes people also. இந்த முறையில்தான் இந்தக் கணக்குகள் வரையறுக்கப்படுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஒட்டுமொத்தமாக தனிப்பட்ட முறையிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு specific programme என்று சொல்லக்கூடிய தனிப்பட்ட திட்டங்களுக்கு ஒதுக்கப்படுகின்ற நிதி என்பது ஒன்று. அடுத்து common utility என்ற முறையிலே அதிலும் அவர்கள் பலனைப் பெறுகின்ற காரணத்தால் அதையும் கணக்கிலே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார். ஒரு மணித் துளியில் முடித்துவிடுங்கள். முடித்து விடுங்கள். வாக்கியத்தை நிறைவு செய்யுங்கள்.

**திரு. கு. ஜெயக்குமார்:** சார், சரியாகதான் பேசுகிறேன். தவறாக எதுவும் பேசவில்லை சார். மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இங்கே S.C.P.-ஐ இன்னொரு இடத்திலே சுட்டிக் காட்டுகின்றேன். Share capital assistance to Tamil Nadu Police Housing Corporation — out of Rs.10 crores, Rs.1.91 crores is for SCP. Why there is an S.C.P. in Tamil Nadu Police Housing Corporation? ஒரு போலீஸ் அதிகாரி S.C.-ஆக இல்லாவிட்டால் அவருக்கு வீடு கொடுக்கமாட்டீர்களா? அவருக்கு வீடு கொடுப்பது அவர் போலீசில் வேலை செய்கின்றார் என்பதற்காகவா? அல்லது S.C. என்பதாலா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அப்படி இல்லை, அப்படி இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, there is special allocation, specially earmarked for the Scheduled Castes, Government employees therein என்பதுதான் பொருள்.



**திரு. கு. ஜெயக்குமார்:** But that should not be shown as S.C.P for the Police Department. அடுத்து Payment to Tamil Nadu Housing Board towards construction of Housing Complex for Legislature. இந்த Legislature-க்கு S.C.P. பணத்திலே இருந்து 4 அடுக்குமாடி வீடுகளைக் கட்டிக் கொடுத்திருக்கின்றீர்கள். அதை S.C.P.-யிலே காட்டுகின்றீர்களே, இது தர்மம்தானா, இது நியாயம்தானா? இதில் கொடுத்திருக்கின்றீர்கள். தயவுசெய்து மாண்புமிகு நிதி அமைச்சருடைய கவனத்திற்கு இது வரவேண்டும். இதை தயவுசெய்து நீங்கள் பார்க்க வேண்டுமென்று சொல்லி என்னுடைய தொகுதி சார்பாக ஓரிரண்டு கருத்துகளை மட்டும் சொல்லி நான் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், தொகுதி சார்பாக இருப்பதை எழுதிக் கொடுத்துவிடுங்கள்.

**திரு. கு. ஜெயக்குமார்:** ஒரு நிமிடத்திற்கு மேலே எடுத்துக் கொள்ளவில்லை. இதே அவையிலே 2001 ஆம் ஆண்டிலே குளிர்ப் பதனக் கிடங்கு ஒன்று நாமக்கல்லிலே அமைப்பதாக வாக்குறுதி அளிக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜேந்திர பிரசாத் அவர்கள் அமைச்சராக இருந்தபோது வாக்குறுதி அளிக்கப்பட்டது. என்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்தவர் நிதி அமைச்சர் அவர்கள். இதுநாள்வரையில் 4 வருடங்கள் ஆகியும், நம்முடைய காலமும், சட்டமன்றத்திலே முடியப் போகிறது. 4 வருடங்கள் ஆகியும் ஒரு வேலையையும், இந்த விதத்தில் இந்த வாக்குறுதிக்காக இந்த அரசு செயல்படுத்தவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றொன்று, நாமக்கல்லுக்கு மிகத் தரம் குறைந்த பஸ்கள் சென்றுகொண்டிருக்கின்றன. கீழே இருக்கின்ற புழுதி பஸ்ஸில் இருக்கும் மக்கள்மீது வந்து விழுகின்றது. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் நல்ல பஸ்ஸை நாமக்கல்லுக்கு விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். எருமைப்பட்டி என்ற இடத்திலே ஒரு பஸ் நிலையத்தையும் கொடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

இங்கே அனைத்து விளையாட்டுப் போட்டிகளில் பாரத நாட்டின் சார்பில் கலந்துகொண்ட தமிழ்நாடு மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு கிண்டி அரசு பொறியியல் கல்லூரியிலும், சென்னை அரசு மருத்துவக் கல்லூரியிலும் இட ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்பதை நான் இங்கே கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடித்து விடுங்கள், முடித்து விடுங்கள்.

**திரு. கு. ஜெயக்குமார்:** தஞ்சை மாவட்டம், பேராவூரணி தொகுதியில் ஒரு சுற்றுலாத் தலம் அமைத்துத் தர வேண்டுமென்று நான் உங்களை தாழ்ந்து கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ** நிவாரணம் வழங்கப்படுகிறது. பலர் என்னிடம் வந்து குறைகளைச் சொல்லி இருக்கின்றார்கள். ஆனால், தயவுசெய்து பாதிக்கப்பட்ட...(குறுக்கீடு)

பிற்பகல் 7–10

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இல்லை, இல்லை. This is a grave charge. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது உண்மையில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** ** இது முற்றிலும் தவறான தகவல்.

**திரு. கு. ஜெயக்குமார்:** என்னிடத்திலே பல பேர் மனு கொடுத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மாவுடைய உத்தரவு, சுனாமியால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும்--அனைவருக்கும் என்று சொல்லும்போது மீனவர்கள், மீனவர்கள் என்றால், மீன்பிடித் தொழிலைச் சார்ந்தவர்கள், மீன்பிடித் தொழிலில் சம்பந்தப்பட்டவர்கள், allied activities. இதிலே எல்லா சமுதாயத்தினரும் வருகின்றார்கள்--** அனைவருக்குமே வழங்கப்படுகின்றது. சென்னையை எடுத்துக்கொண்டாலும்கூட 44,369 பேருக்கு நிவாரணம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதிலே கிட்டத்தட்ட 30, 40 சதவிகிதம் பேர் ஆதிதிராவிடர் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**திரு. கு. ஜெயக்குமார்:** என்னிடம் பலர் வந்து குறைகளைச் சொன்னார்கள். அந்தக் குறைகளை அனுப்பி வைக்கின்றேன். நீங்கள் நடவடிக்கை எடுத்தால் நலமாக இருக்கும்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



***திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் உறுப்பினர் தன் தொகுதியில் இருக்கிற அல்லது தனக்குத் தெரிந்த செய்திகளை சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் தனக்கு வருகிற செய்திகளை இந்த மன்றத்திலே தெரிவிக்கிறார். உடனே நீங்கள் உத்தரவு போட்டிருப்பீர்கள். ஆனால், அதிகாரிகள் அப்படி நடந்திருக்க மாட்டார்கள். அதைத்தான் உறுப்பினர் சொன்னார். அரசு என்ன செய்ய வேண்டும்? அப்படி இருந்தால் எங்களிடத்திலே கொடுங்கள் நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொல்ல வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) இல்லை, இல்லை. உடனே எடுத்துவிட்டால் எப்படி? உடனே expunge செய்தால் எப்படி?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜெயக்குமார் முடியுங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. பதில் சொல்லியிருக்கிறார்கள். அமைச்சர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். ஜெயக்குமார் வாக்கியத்தை நிறைவு செய்யுங்கள்.

**திரு. கு. ஜெயக்குமார்:** ஒரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன், சார். மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர்கள் அனைவரும் பதில் அளிக்கின்ற நேரத்திலே ஒவ்வொரு துறையைப் பற்றியும் பேசுகின்றபோது தத்தம் துறைதான் இந்தியாவிலேயே முதன்மைத் துறையாக விளங்குகின்றது என்றும் தமிழகம் முதன்மையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது என்றும் இங்கே குறிப்பிட்டார்கள். நான் பல புள்ளிவிவரங்களைப் பார்த்தேன். குறிப்பாக வறுமைக் கோட்டுக்குக் கீழாக இருக்கின்ற மக்களுக்காக இருக்கின்ற புள்ளிவிவரம் 2000—ஞானசேகரன் பேசியபோது மாண்புமிகு முதல்வர்கூட அதற்கு பதில் அளித்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புதிய கருத்துக்கு நேரம் இல்லை. திரு. கு. ஜெயக்குமார் அவர்கள் பேச்சு நிறைவுபெற்றது. விவாதம் நாளை தொடரும். (குறுக்கீடு) உங்களுடைய பேச்சு நிறைவுபெற்றது. விவாதம் நாளையும் தொடரும்.

## 8. அரசினர் தீர்மானம்

### (அ) விதி 32-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளை 12–4–2005 வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

[2005 ஏப்ரல் 11

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ நாளை, 12–04–2005 செவ்வாய்க்கிழமை அன்று தளர்த்தி, அந்நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை (12–04–2005) வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.

## (ஆ) விதி 55 (6)-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளை (12–4–2005), இரண்டிற்கும் மேற்பட்ட கவன ஈர்ப்பு அறிவிப்புகள் எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும் என்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதி 55 (6)–ஐத் தளர்த்தி, நாளை (12–04–2005), இரண்டிற்கும் மேற்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொள்ளலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2005 ஏப்ரல் 11] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (12–04–2005) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 7–13 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

# 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*109.* (i) இம்மாநிலத்தில் யாதொரு தயாரிப்புத் தொழில் பிரிவில் பயன்படுத்துவதற்காக அட்டவணையிடப்பட்ட பொருட்களை வெளிநாட்டிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யும் இறக்குமதியாளர் ஒவ்வொருவருக்கும், அறிவிக்கையில் குறிப்பிடப்பட்ட படிவத்தில் அவர் உறுதிமொழி அளிப்பதற்கு உட்பட்டும் மற்றும் (ii) வெளிநாடுகளிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்டு தமிழ்நாட்டிலுள்ள சென்னை ஏற்றுமதிப் பொருள் தயாரிப்பு மண்டலத்திலும் சிறப்புப் பொருளாதார மண்டலத்திலும் அமைந்துள்ள 100 சதவீத ஏற்றுமதி நோக்கிலான பிரிவுகளிலும் மற்றும் ஏனைய பிரிவுகளிலும் பொருள்கள் தயாரிப்பில் பயன்படுத்துவதற்காக விற்பனை செய்யப்படும் அட்டவணையிடப்பட்ட பொருட்களுக்காக, இறக்குமதியாளரும், தயாரிப்பாளரும் குறிப்பிடப்பட்ட படிவங்களில் உறுதிமொழி அளிப்பதற்கு உட்பட்டும் பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் பதிவு பெற்ற வணிகரான இறக்குமதியாளர் ஒவ்வொருவருக்கும் 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருள்கள் கொண்டுவருவதன் மீதான வரிச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்து வணிக வரித் (சி2) துறையின், 21–10–2004 ஆம் நாளிட்ட 167 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருள்கள் கொண்டுவருவதன் மீதான வரிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 20/2001) 14 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

[2005 ஏப்ரல் 11

*110.* லோ சல்ஃபர் ஹெவி ஸ்டாக் (எல்.எஸ்.எச்.எஸ்) இறக்குமதி குறித்து (1) திருவாளர்கள் மதுரை பவர் கார்ப்பரேஷன் பிரைவேட் லிமிடெட், சமயநல்லூர், (2) திருவாளர்கள் சாமல்பட்டி பவர் கம்பெனி பிரைவேட் லிமிடெட், (3) திருவாளர்கள் ஜி.எம்.ஆர். பவர் கார்ப்பரேஷன் பிரைவேட் லிமிடெட் ஆகிய நிறுவனங்கள் 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருள்கள் கொண்டு வருவதன் மீதான வரிச் சட்டத்தின்கீழ் 3 சதவீதத்திற்கு அதிகமாகச் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரித் (சி2) துறையின் 2-3-2005 ஆம் நாளிட்ட 20 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருள்கள் கொண்டு வருவதன் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/2001) 14 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

*111.* 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறையின் 5-1-2005 ஆம் நாளிட்ட 5 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 320 (5)-ன்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*233.* நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு செய்தி, விளம்பரத் துறை மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

*234.* ஊரக வளர்ச்சித் துறையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு செய்தி, விளம்பரத் துறை மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

*235.* மானியக் கோரிக்கை எண் 25 – வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)



2005 ஏப்ரல் 11]

*236.* மானியக் கோரிக்கை எண் 28 – செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – சுற்றுலா பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

*237.* மானியக் கோரிக்கை எண் 27 – செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

*238.* மானியக் கோரிக்கை எண் 47 – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

*239.* இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் "மக்கள் சாசனம்", 2005. (தமிழ், ஆங்கிலம்)

*240.* மதிப்பீட்டுக் குழுவின் முப்பத்து ஒன்றாவது அறிக்கை. (2003–2005).

---

## இணைப்பு I

*(467 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண் 25

## வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006

### 1. முன்னுரை

1.1. மக்களின் அவசியத் தேவைகளில் உறைவிடம் என்பது பல்லாண்டு காலமாக மிக முக்கியப் பங்கு வகிக்கின்றது. இந்த அடிப்படைத் தேவையை பூர்த்தி செய்ய தமிழக அரசு தேவையான அனைத்து திட்டங்களையும் வடிவமைத்து ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் வீட்டு வசதி வளர்ச்சியினை ஏற்படுத்தி சாதனை புரிந்து வருகின்றது. தமிழக அரசு "ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு" என்ற குறிக்கோளை கொள்கையாகக் கடைபிடித்து வருகிறது. தமிழக அரசின் இக்குறிக்கோளை நிறைவு செய்யும்வண்ணம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம் மற்றும் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் ஆகியவை பல்வேறு வருமானப் பிரிவைச் சார்ந்தவர்களுக்கு, அவர்களுக்குத் தகுந்த குடியிடங்களை உருவாக்கித்தரும் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன.

1.2. நாட்டின் மிகவும் நகர்மயமாக்கப்பட்ட மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். 1931 முதல் 2001 ஆம் ஆண்டுவரைக்கான காலத்தில் இம்மாநிலத்தின் நகர்ப்புறத்தில் வாழும் மக்கள்தொகை மாநிலத்தின் மொத்த மக்கள்தொகையில் 18 விழுக்காடாக இருந்து 43.86 விழுக்காடாக உயர்ந்து வந்துள்ளது. 1991 முதல் 2001 முடிய உள்ள பத்தாண்டுக் காலத்தில் நகர்ப்புற மக்கள்தொகையின் ஆண்டு வளர்ச்சி விகிதம் 0.36-லிருந்து 2.84 ஆக உயர்ந்துள்ளது. 2001 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மொத்த மக்கள்தொகையான 6.21 கோடியில் 2.72 கோடி மக்கள் 832 நகர மையங்களில் வசித்து வருகின்றனர்.

[2005 ஏப்ரல் 11

1.3. தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971–ஐச் செயல்படுத்துதல் நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் பொறுப்பாக அமைந்துள்ளது. சட்டரீதியான திட்டங்கள் தயாரித்தல், அவற்றைச் செயல்படுத்துதல், மேலும் மக்கள் வாழும் இடங்களில் தூய்மையான, சுகாதாரமான, சுற்றுச்சூழலுக்கு வழிவகுக்கும் இதர திட்டங்கள் தயாரித்தல் போன்ற பணிகளில் திட்டக் குழுமங்களுக்கு நகர் ஊரமைப்பு இயக்ககம் உதவி புரிந்து வருகிறது. நகர் ஊரமைப்புச் சட்டத்தை அமல்படுத்துவது, நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் பெரும் பொறுப்பாக இருந்து வெ[illegible]நுடன், தொழில், குடியிருப்பு மற்றும் இதர நோக்கங்களுக்கான தனியார் நில மற்றும் கட்டட மேம்பாட்டுப் பணிகளையும் நகர் ஊரமைப்பு இயக்ககம் ஒழுங்குபடுத்துகிறது. மாநில அரசின் நிதியுதவியின் வாயிலாக நகர் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு நிதியுதவி வழங்கும் மைய நிறுவனமாகவும் நகர் ஊரமைப்பு இயக்ககம் செயல்படுகிறது. மண்டலத் திட்டங்கள், முழுமைத் திட்டங்கள், புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள், விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் இதர சிறப்புத் திட்டங்கள் தயாரித்தல் நகர் ஊரமைப்புச் சட்டத்தின் முக்கிய குறிக்கோள்களாகத் திகழ்கின்றன.

1.4. 2001 ஆம் ஆண்டில் 43 இலட்சம் மக்கள் தொகையைக் கடந்துவிட்ட சென்னை மாநகரம் இந்தியாவில் உள்ள பெருநகரங்களில் ஒன்றாகும். இது 2011–ல் 48 இலட்சமாக உயருமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அபரிமிதமான மக்கள் தொகை வளர்ச்சி, சென்னைப் பெருநகர்ப் பகுதியின் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மற்றும் நகர்ப்புற வசதிகள் செய்வதற்கு, மிகக் கடினமான சவாலாக உள்ளது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் அதிகார வரம்பிற்குள் உள்ள சென்னைப் பெருநகர் பகுதி 1177 சதுர கி.மீ. கொண்டதாகும். இதில் சென்னை மாநகரம், 8 நகராட்சிகள் மற்றும் 10 ஊராட்சி ஒன்றியங்கள் அடங்கும். சென்னைப் பெருநகரின் வளர்ச்சிக் கொள்கையானது இந்தச் சவால்களைக் கருத்திற்கொண்டு இவற்றிற்குத் தீர்வு காணும் விதத்தில் அமைய வேண்டும். அரசின் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் விதத்தில் அமைய வேண்டும். அரசின் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் விதத்தில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தவும் உள்கட்டுமான வசதிகளை உருவாக்கவும் ஏற்கெனவே உருவாக்கிய நகர வசதிகளை அதிகப்படுத்தவும் பல திட்டங்களை மேலும் வடிவமைத்து செயல்படுத்தி வருகின்றது.



2005 ஏப்ரல் 11]

## 2005–2006 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

### சுருக்கம்

ரூபாய் ஆயிரத்தில் (தொகு மொத்தம்)

| வ. எண் | துறைத் தலைமை அலுவலகங்கள் | வருவாய் | மூல தனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | தலைமைச் செயலகம் | 2,50,73 | — | 102,00,00 | 104,50,73 |
| 2. | நகர் ஊரமைப்பு இயக்ககம் | 8,47,62 | — | — | 8,47,62 |
| 3. | வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | 4,38,64 | — | 6,50,00 | 10,88,64 |
| 4. | சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் | 203,04,04 | 2,00,04 | 7,00,00 | 212,04,08 |
| 5. | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் | 12,17,80 | 3 | — | 12,17,83 |
| 6. | தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் | 1,38,54 | 20,00,04 | — | 21,38,58 |
| | மொத்தம் | 231,97,37 | 22,00,11 | 115,50,00 | 369,47,48 |

## 2005–2006 ஆம் ஆண்டிற்கான பகுதி–II திட்டங்கள்

| வ. எண் | திட்டப் பணிகளின் விவரம் | 2005–2006–ஆம் ஆண்டுக்கான திட்டச் செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| | **தலைமைச் செயலகம்** | |
| (1) | துணைப் பாகங்களுடன் கூடிய 5 புது கணினிகள் வாங்குதல் | 3.00 |

[2005 ஏப்ரல் 11

### தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்

| | | |
|---|---|---|
| (2) | சென்னை மற்றும் ஏனைய நகரங்களில், குடிசைப் பகுதி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு பயிற்சி திட்டத்தின் வாயிலாக வறுமையை ஒழித்தல் மற்றும் தொழிற்திறனை மேம்படுத்துதல் | 25.00 |
| (3) | மாவட்ட நகரங்களின் திட்டப் பகுதியில், சுய உதவிக் குழுக்களுக்கு உருக்காலான பெட்டிக் கடைகளை அமைத்தல் | 7.50 |
| (4) | வெளியூர் நகரங்களில், வால்மீகி அம்பேத்கர் வீட்டுவசதித் திட்டத்தின்கீழ், வீட்டுவசதித் திட்டப் பகுதிகளில், சூரிய ஆற்றலால் இயங்கும் வெளிப்புற விளக்கு வசதி அமைத்தல் | 10.00 |
| (5) | சென்னை மாநகரில் குடியிருப்புகளில் மழைநீர் சேகரிப்பு திட்டத்தின் வாயிலாக, முழுமையான நீர் மேலாண்மை முன்னோடித் திட்டம் | 10.00 |
| (6) | குடிசைப் பகுதி குடியிருப்பு திட்டப் பணிகளில், குறைந்த செலவிலான துப்புரவு குறித்த முன்னோடி திட்டம் | 20.00 |

### கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி)

| | | |
|---|---|---|
| (7) | தலைமை அலுவலகத்திற்கு ஜெராக்ஸ் இயந்திரம் ஒன்று வாங்குதல் | 0.85 |
| (8) | தலைமை அலுவலகத்திற்கு நிகரி இயந்திரம் ஒன்று வாங்குதல். | 0.19 |

### சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம்

| | | |
|---|---|---|
| (9) | சென்னைப் பெருநகர வளர்ச்சி குழுமத்தின் நிதியுதவியுடன் சென்னையில் 4 முக்கிய பயண வழிபாதைகளுக்கு SCOOT/SCAT முறையை ரூ.4.50 கோடியில் செயல்படுத்துதல் | 1.00 |
| (10) | சென்னைப் பெருநகர வளர்ச்சி குழுமத்தின் நிதியுதவியுடனும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் ஆலோசனையுடனும் சென்னை பெருநகர எல்லை—சாலை தொடரமைப்புக்காக காற்றில் மாசு கண்டறியும் தர கண்காணிப்பு அமைப்பினை ரூ.87.72 இலட்சத்தில் செயல்படுத்துதல் | 1.00 |



2005 ஏப்ரல் 11]

| | | |
|---|---|---|
| (11) | சென்னைப் பெருநகர வளர்ச்சி குழுமத்தின் நிதியுதவியுடன், சென்னைப் பெருநகர எல்லைக்கு வெளியே அம்பத்தூர் மற்றும் திருவொற்றியூர் பேருந்து முனையத்தில் வண்டி நிறுத்துமிடம் மற்றும் சவாரி வசதியினை ரூ.50.75 இலட்சத்தில் அமைத்தல் | 1.00 |
| (12) | சென்னைப் பெருநகர எல்லைக்குள் பள்ளிக்கூடம் அமைந்துள்ள முக்கியப் பகுதிகளில், போக்குவரத்தைக் கட்டுப்படுத்தும் வண்ண விளக்கு (Pelican Signals) அமைப்புகளை ரூ.16.75 இலட்சத்தில் நிறுவுதல் | 1.00 |

### நகர்-ஊரமைப்பு இயக்ககம்

| | | |
|---|---|---|
| (13) | உள்ளூர் திட்டமிடல் குழுமம், புதிய நகர வளர்ச்சிக் குழுமம் மற்றும் மண்டல அலுவலகங்களில் மின்–ஆளுகையை அறிமுகப்படுத்துதல் | 10.00 |
| (14) | நூலக புத்தகங்கள் மற்றும் ஏனைய இதழ்களை வாங்குதல் | 0.25 |
| | மொத்தம் | 90.79 |

## 2. தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம்

**2.1.** பொருளாதாரத்தில் நலிவுற்றோர், குறைந்த வருவாயினர், நடுத்தர வருவாயினர் மற்றும் உயர் வருவாயினர் என சமுதாயத்திலுள்ள அனைத்துப் பிரிவு மக்களுடைய வீட்டு வசதித் தேவைகளையும் நிறைவு செய்வது வீட்டு வசதி வாரியத்தின் தலையாய நோக்கமாகும். மேலும், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் அனைத்து வருவாய்ப் பிரிவினருக்கும் வேண்டிய மேம்படுத்தப்பட்ட மற்றும் அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளையும் கொண்ட மனைகளை வாங்கத்தக்க விலையில் அளிக்கிறது. கடந்த 44 ஆண்டுகளாக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மேம்படுத்தப்பட்ட மனைகளை உருவாக்குவதிலும் வீடுகள் கட்டுவதிலும் ஈடுபட்டுள்ளது. வீட்டு வசதி வாரியம் தனது பல்வேறு திட்டங்களின் மூலம் இதுவரை 3,93,684 குடியிருப்பு அலகுகளை உருவாக்கியுள்ளது. இவற்றுள் 2,04,813 மேம்படுத்தப்பட்ட மனைகளாகும். மீதமுள்ள 1,88,871 அலகுகள் வீடுகள் மற்றும் அடுக்குமாடிக் குடியிருப்புகள் ஆகும்.

[2005 ஏப்ரல் 11

**2.2.** வீட்டு வசதி வாரியத்தால் நிறைவேற்றப்படும் எல்லா திட்டங்களிலும் (சுயநிதித் திட்டம் நீங்கலாக) மேம்படுத்தப்பட்ட மனைகள் / வீடுகள் / குடியிருப்புகள் ஆகியவற்றின் ஒதுக்கீட்டில், ஆதிதிராவிடருக்கு 18 சதவீதமும், பழங்குடியினருக்கு 1 சதவீதமும் தனியாக ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. இச்சலுகை இனிவரும் திட்டங்களிலும் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும். தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தமிழக அரசு அலுவலர்களுக்கு வாடகைக் குடியிருப்புகள் கட்டிப் பராமரிக்கும் திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது. இதுவரை 29,055 வாடகைக் குடியிருப்புகள் இத்திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ளன.

**2.3.** தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மனைகள்/வீடுகள்/ அடுக்குமாடி குடியிருப்புகள் அதிக அளவில் விற்கப்படாமல் நிலுவையில் உள்ளதால் தற்போது புதிய வீட்டு வசதி திட்டம் எதையும் மேற்கொள்ள வேண்டாம் என தீர்மானிக்கப்பட்டு விற்பனையில் அதிகக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு கோட்ட அலுவலகத்திலும் விற்பனைக் குழுக்களை நியமித்தல், சொத்து மற்றும் விற்பனைக் கண்காட்சிகளில் பங்கேற்றல், அரசு / அரசு சார்ந்த நிறுவனங்களில் விற்பனை முகாம்கள் நடத்துதல், விற்பனை, சொத்துக் கண்காட்சிகளில் பதிவு செய்பவர்களுக்கு செலுத்தும் தொகையில் 1 சதவீதம் தள்ளுபடி அளித்தல், மேலும் விற்பனை முகவர்களை நியமித்தல் போன்ற பல விற்பனை உத்திகள் கையாளப்பட்டு விற்பனை மேம்படுத்தப்பட்டு வருகிறது. சிறப்பு உத்தியாக, குறிப்பிட்ட சில திட்டங்களில் விற்கப்படாமல் உள்ள மனைகள்/வீடுகளின் விற்பனையை அதிகரிக்க, வட்டி முதலாக்கத்தினை நீக்கி, அசல் விலையினையே விற்பனை விலையாக நிர்ணயித்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேலும், வட்டி முதலாக்கத்தினை நீக்குவது மட்டுமன்றி உயர்மட்டக் குழுவின் ஒப்புதல் பெற்று விலைக் குறைப்பும் செய்து விற்கப்பட்டு வருகின்றன. மேற்குறிப்பிட்ட பல விற்பனை உத்திகளைக் கையாண்டதன் பலனாக கடந்த 1–4–2001–க்குப் பிறகு ரூ.517.45 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. விற்பனையை மேலும், அதிகப்படுத்த தேவையான நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன.

**2.4.** தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட மனைகளில் கண்டிப்பாக வீடு கட்டி முடித்தால் மட்டுமே விற்பனைப் பத்திரம் வழங்கப்படும் என்று நடைமுறையில் இருந்த வாரிய நிபந்தனை நீக்கப்பட்டு ஒதுக்கீடுதாரர்கள் விரைவாக விற்பனைப் பத்திரம் பெறவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு



2005 ஏப்ரல் 11]

செலுத்தியிருப்பின் மனைகளுக்குண்டான முழுத் தொகையைச் விரைவாக விற்பனைப் பத்திரம் வழங்கலாம் என அரசு அவர்களுக்கு ஆணை வெளியிட்டுள்ளது. இதன் பயனாக கடந்த 25–9–2003–ல் அக்டோபர் 2003 முதல் டிசம்பர் 2004 வரை 16,452 விற்பனைப் பத்திரங்கள் ஒதுக்கீடுதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**2.5.** முதற்கட்டமாக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் வசமுள்ள சிறிய அளவிலான நிலங்களில் கூட்டு முயற்சித் திட்டத்தினை அமல்படுத்துவதற்குத் தேவையான வழிமுறைகள் உருவாக்குவது குறித்து ஆராயப்பட்டு வருகிறது. அதேபோன்று தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் வசமுள்ள நிலங்களை நன்முறையில் பயன்படுத்த ஒரு புதிய நிலப்பயன்பாட்டு கொள்கையை உருவாக்குவது குறித்தும் ஆராயப்பட்டு வருகிறது. சென்னை வெளிப்புறச் சாலையில் சென்னை உள்கட்டமைப்பு முதலீட்டுத் திட்டத்தின்கீழ் பெரிய அளவிலான புறநகரம் (Satellite Town) அமைத்திட நிலம் கையகப்படுத்தும் பணியும் நடைபெற்று வருகிறது.

**2.6.** தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் செயல்முறைத் திட்டங்கள் அனைத்தையும் கணினிமயமாக்குவதற்கு ஒரு குழுவை அக்டோபர் 2003–ல் அரசு நியமித்தது. இதன் தொடர்ச்சியாக 1,46,000 ஒதுக்கீடுதாரர்களின் கணக்குகள் கணினிமயமாக்கப்பட்டு, ஒதுக்கீடுதாரர்கள் மின்னணு வங்கி மூலமாக அவரவர் வசதிக்கேற்ற வங்கி கிளையில் நிலுவைத் தொகையினை செலுத்த வசதி செய்யப்பட்டுள்ளது. நில எடுப்பு சம்பந்தப்பட்ட பதிவேடுகளை கணினிமயமாக்கும் பணி முடியும் தருவாயில் உள்ளது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கணக்கு முறையை (Integrated financial accounting) செயல்படுத்தும் பணியும் நடைபெற்று வருகிறது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய பணியாளர்கள் அனைவருக்கும் புகழ்வாய்ந்த பயிற்சி நிறுவனங்கள் மூலம் அவர்கள் பணியாற்றும் இடங்களிலேயே கணினிப் பயிற்சியளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் பல்வேறு அலுவலகங்களுக்கும் அவற்றின் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு கூடுதலாக நவீன கணினிகள் வாங்கப்பட்டு வருகின்றன.

## 3. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்

**3.1.** சென்னை மாநகரிலும், தமிழகத்திலுள்ள மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளிலுள்ள குடிசைப் பகுதி வாழ்வோரின் குடிசைப் பகுதிகளை மாற்றி அடுக்குமாடிக்

[2005 ஏப்ரல் 11

குடியிருப்புகள் அமைத்து குடிசைப் பகுதிகளை மேம்படுத்தும் பணியினை தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் செய்து வருகிறது.

**குடிசைப் பகுதியைப் பற்றிய கொள்கைகள்**

(1) நகரப் பகுதிகளில் மிகவும் நெரிசலான இடங்களில், சுகாதாரமற்ற சூழ்நிலையில் அமைந்துள்ள குடிசைப் பகுதிகளை மாற்றி அவ்விடங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்தல்.

(2) குடிசைப் பகுதிகளைத் தேர்வு செய்து அடிப்படை வசதிகளை அமைத்து மக்கள் வாழ்வதற்கேற்றவாறு மேம்படுத்துதல்.

(3) மறு குடியமர்வு திட்டத்தின்கீழ் மாற்றிடங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்தல்.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், ஒரு தலைவர், மேலாண்மை இயக்குநர் மற்றும் அரசின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த 9 இயக்குநர்களால் அமைக்கப்பெற்றது.

**3.2.** தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் பல்வேறு வீட்டுவசதி, குடிசைப் பகுதி மேம்பாடு மற்றும் மறு குடியமர்வு திட்டப் பணிகளை நகர குடிசைப் பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும்பொருட்டு 2005–06 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்களை செயல்படுத்தவுள்ளது:

**1. குடிசைப் பகுதி மாற்றுத் திட்டம்**

நகர குடிசைப் பகுதிகளில் மிகவும் நெரிசலான பகுதிகளில் வாழும் குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகளான குடிநீர், கழிவுநீரகற்றும் வசதி, சாலை, தெரு மின்விளக்கு போன்றவற்றுடன் தன்னிறைவான சுகாதார வசதியுடன் கூடிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் அதே பகுதியில் அமைத்துத்தரும் இத்திட்டத்தின்கீழ் சென்னை கவுஸ் மொய்தீன்பேட்டைப் பகுதியில் 552 அடுக்குமாடி குடியிருப்புகள் ரூ.6.90 கோடி செலவில், ரூ.3.45 கோடி அரசு மானியத்துடன், 2005–06 ஆம் ஆண்டில் அமைக்கப்படத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகளுக்கு தேவைப்படும் நிதி மைய அரசின் வால்மீகி அம்பேத்கர் வீட்டு வசதி திட்டத்தின்கீழ் மானியமாகவும் மற்றும் பெருநகரங்களுக்கான மேம்பாட்டுத்



2005 ஏப்ரல் 11]

திட்டத்தின்கீழ் கடனாக நிதி நிறுவனங்களில் பெறப்பட்டு அரசால் திருப்பிச் செலுத்தப்படும்.

**2. சென்னை நகரில் ஆட்சேபகரமான பகுதிகளில் வாழும் குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களை மறு குடியமர்வு செய்தல்**

பெருநகரங்களில் வாழும் குடும்பங்களை மறு குடியமர்வு செய்ய தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் 2005–06 ஆம் ஆண்டில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது:—

**2.(அ) பெருவெள்ளக் குறைப்புப் பணிகள் – தூர்வாரும் பணிகளுக்கு இடையூறாக நதிக் கரைகளில் வாழும் குடிசைப் பகுதி வாழ் குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்தல்**

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்துடன் பொதுப் பணித் துறையினர் சென்னையின் நதிக்கரைகளில் 33,313 குடும்பங்கள் குடிசைப் பகுதிகளில் வாழ்வதாகக் கண்டறிந்து அவர்களுள் பொதுப் பணித் துறையினரால் தூர்வாரும் பணிகள் மேற்கொள்வதற்கு இடையூறாக வாழும் 8,164 குடிசைவாழ் குடும்பங்கள் பெருவெள்ளக் குறைப்புத் திட்டத்தின்கீழ் மறுகுடியமர்வு செய்யப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. பொதுப் பணித் துறையினர் உடனடியாக தூர்வாரும் பணிகள் மேற்கொள்வதற்காக அருகில் அடுக்கு மாடிக் குடியிருப்புகள் அமைத்து இக்குடிசைவாழ் மக்களை மறு குடியமர்வு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட மறு குடியமர்வு திட்டத்தின் ஒரு பகுதியாக சென்னை ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியில் முன்னதாக தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் 3,000 குடியிருப்புகளை ரூ.26.23 கோடி செலவில் அமைத்து முடிவுற்றுள்ளது. இக்குடியிருப்புகள் சென்னையின் நதிக்கரைகளில் குடிசைப் பகுதியில் வாழ்ந்த குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேலும், திட்ட செலவினத்தில் ஏற்பட்ட சேமிப்பினைக் கொண்டு ரூ.1.27 கோடி செலவில் 108 அடுக்குமாடிக் குடியிருப்புகள் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் சென்னை செம்மஞ்சேரி பகுதியில் அமைக்க திட்டமிடப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இத்திட்டப் பணிகள் 2005–06ஆம் ஆண்டில் முடிவுற்று சென்னையின் நதிக்கரைகளில் தூர்வாரும் பணிகளுக்கு இடையூறாக வாழும் குடிசைப் பகுதி குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

## 2.(ஆ) சென்னைப் பெருநகர் மேம்பாட்டுத் திட்டம்

செம்மஞ்சேரி பகுதியில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்தல்

சென்னை மாநகரில் செல்லும் முக்கிய நதிகளின் கரைகளில் பொதுப் பணி துறையினால் உடனடியாக மேற்கொள்ளப்படும் நதிகளின் தூர்வாரும் பணிகளுக்கு இடையூறாக வாழும் மீதமுள்ள 5,164 குடும்பங்களை மறு குடியமர்வு செய்யும் திட்டத்தின் ஒரு பகுதியாக தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் 5,164 அடுக்குமாடிக் குடியிருப்புகள் (கட்டடப் பரப்பு 21 சதுர மீட்டர்) கீழே கூறப்பட்டுள்ள நிதி ஆதாரங்களைக் கொண்டு ரூ.67.13 கோடி செலவில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | அரசு மானியம் | ரூ. 20.00 கோடி |
| 2. | பெருநகரங்களுக்கான திட்டக் கடன் | ரூ. 25.82 கோடி |
| 3. | மைய அரசின் வாம்பே மானியம் | ரூ. 15.49 கோடி |
| 4. | தேசிய குடிசைப் பகுதி திட்ட மானியம் | ரூ. 5.82 கோடி |
| | மொத்தம் .. | ரூ. 67.13 கோடி |

இக்குடியிருப்புகள் 30-06-2005-க்கு முன்னர் அமைத்து முடிக்கப்படும். இக்குடியிருப்புகள் அமைத்து முடிக்கப்பட்ட பின்னர் நதிக்கரைகளில் சுகாதாரமற்ற நிலையில் வாழும் குடும்பங்கள் செம்மஞ்சேரி பகுதியில் அமைக்கப்படும் அடுக்குமாடிக் குடியிருப்புகளில் 2005-06 ஆம் ஆண்டில் மறு குடியமர்வு செய்யப்படுவர்.

## 2.(இ) நதிக்கரைகளில் வாழும் மீதமுள்ள 25,149 குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களை மறு குடியமர்வு செய்தல் – சென்னை ஒக்கியம் துரைப்பாக்கம், செம்மஞ்சேரி மற்றும் பாரதி நகர் பகுதிகளில் 3,404 அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்தல்

சென்னை மாநகரில் நதிக்கரைகளில் வாழும் மீதமுள்ள 25,149 குடிசைப் பகுதி வாழ் குடும்பங்களை சென்னைப் பெருநகர பகுதியில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்து மறு குடியமர்வு செய்யவும் சென்னைக்கருகில் சென்னை ஒக்கியம் துரைப்பாக்கம், செம்மஞ்சேரி மற்றும் பாரதி நகர் பகுதிகளில் 3,404 அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைக்க தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் திட்டமிட்டுள்ளது.



இத்திட்டத்தின் ஒரு பகுதியாக சென்னை செம்மஞ்சேரி பகுதியில் 1,404 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.18.25 கோடி செலவில் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டப் பணிகள் 2005-06 ஆம் ஆண்டில் முடிவுற்று சென்னை மாநகரில் நதிக் கரைகளில் வாழும் குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு இக்குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்படும். சென்னை ஒக்கியம் துரைப்பாக்கம் மற்றும் பாரதி நகர் பகுதிகளில் 2,000 அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைக்கும் திட்டப் பணிகள் ரூ.26.00 கோடி செலவில் 2005-06 ஆம் ஆண்டில் துவங்கப்படும். இக்குடியிருப்புகள் சென்னை மாநகரில் ஆட்சேபகரமான பகுதியில் வாழும் குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும். சென்னைப் பெருநகர் மேம்பாட்டுத் திட்டப் பணிகளுக்காக மாநில அரசால் 2005-06 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்டத்தில் ரூ.20.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 3. வால்மீகி அம்பேத்கர் வீட்டு வசதி திட்டம் – தனி வீடுகள் அமைத்தல்

### வால்மீகி அம்பேத்கர் வீட்டு வசதி திட்டம் பகுதி–V

இத்திட்டத்தின்கீழ் கான்கிரிட் தளத்துடன் செங்கல் சுவர்கள் கொண்ட 5,000 தனி வீடுகள் அமைப்பதற்கான பணிகள் ரூ.23.30 கோடி செலவில் 2005-06 ஆம் ஆண்டில் துவங்கப்படும். இத்திட்டப் பணிகள் 2005-06 ஆம் ஆண்டில் துவங்கப்பட்டு 2006-07 ஆம் ஆண்டில் கீழே கூறப்பட்டுள்ள நிதி ஆதாரங்களைக் கொண்டு முடிவுறும்.

| வ. எண் | நிதி ஆதாரம் | சதவீதம் | தொகை (ரூ.) | |
|---|---|---|---|---|
| | | | சென்னை | இதர நகரங்கள் |
| 1 | மைய அரசின் மானியம் | 50 | 25,000 | 20,000 |
| 2 | நிதி நிறுவன கடன் | 40 | 20,000 | 20,000 |
| 3 | பயன்பெறும் குடும்பங்களின் முன் பங்குத் தொகை | 10 | 5,000 | 5,000 |
| | மொத்தம் | 100 | 50,000 | 45,000 |

[2005 ஏப்ரல் 11

**4.(அ) அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளுதல் – வால்மீகி அம்பேத்கர் வீட்டு வசதி திட்டத்தின்கீழ் குடியிருப்பு மேம்பாட்டுப் பணிகள்**

சென்னை மற்றும் இதர நகரங்களில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் அமைக்கப்பட்ட குடியிருப்புகளின் கூரைத்தளம், மாடிப்படிகள், மாடி முகப்புகள், மாடிப்படிகளுக்கான முகப்புகள் பழுதடைந்துள்ளன.

தற்போது சென்னை மற்றும் இதர நகரங்களில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்குக் கூடுதல் கட்டமைப்பு பழுதுபார்ப்புப் பணிகள் ரூ.19.00 கோடி செலவில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகளுக்கான நிதி ஆதாரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| (1) மைய அரசின் வால்மீகி அம்பேத்கர் வீட்டு வசதி திட்ட மானியம் | ரூ. 9.50 கோடி |
| (2) நிதி நிறுவனக் கடன் (தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் திருப்பிச் செலுத்தப்படும்) | ரூ. 9.50 கோடி |
| மொத்தம் | ரூ. 19.00 கோடி |

**4.(ஆ) சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதி**

சென்னை மாநகர சட்டமன்றத் தொகுதி உறுப்பினர்களுக்கான தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.2.00 கோடி மானிய உதவி 2005–06 ஆம் ஆண்டில் பெற்று சென்னை மாநகரில் உள்ள அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு பழுதுபார்ப்பு மற்றும் புதுப்பித்தல் பணிகளை நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

**5. நகர சீரமைப்புத் திட்டம்**

அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான பராமரிப்புச் செலவினங்களுக்கு போதிய நிதி ஆதாரத்தினை ஏற்படுத்த, சென்னை மற்றும் தமிழகத்தின் இதர பெருநகரங்களில் வணிக முக்கியத்துவம்



2005 ஏப்ரல் 11]

வாய்ந்த இடங்களில் வணிக வளாகங்கள் மற்றும் மத்திய வருவாய் பிரிவினருக்கான அடுக்ககங்கள் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் அமைக்கப்படுகின்றன. இதுபோன்ற வணிக வளாகங்கள் குடிசைப் பகுதிவாழ் மக்களுக்கு அவ்விடங்களிலேயே அடுக்குமாடி குடியிருப்புகள் அமைத்தது போக மீதமுள்ள மிகக் குறைந்த பரப்பளவு உள்ள நிலங்களில் மட்டுமே கட்டப்படுகின்றன. இதன்மூலம் கிடைக்கப்பெறும் உபரி வருவாய் அடுக்குமாடி குடியிருப்புகளைப் பராமரிக்க பயன்படுத்தப்படுகிறது. இத்திட்டப் பணிகள் அட்கோ மற்றும் தேசிய வீட்டு வசதி வங்கி போன்ற நிதி நிறுவனங்களிடமிருந்து கடனுதவி பெற்று நிறைவேற்றப்பட்டன. இக்கடன்களை திருப்பிச் செலுத்தும் பொறுப்பினை வாரியம் மேற்கொண்டுள்ளது.

திருநெல்வேலி நகரில் மனையுடன் கூடிய 30 தனி வீடுகள் ரூ.1.05 கோடி செலவில் அமைக்க திட்டமிடப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இத்திட்டப் பணி 2005–06ஆம் ஆண்டில் முடிவுறும்.

**6. மழை நீர் சேகரிக்கும் முறைகள்**

2005–2006 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படவுள்ள திட்டப் பகுதிகளில் மழைநீர் சேகரிக்கும் முறைகளை ரூ.25.00 இலட்சம் செலவில் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

**7. சிறப்பு உள்ளடக்க திட்டம் (2005–2006)**

**நகர குடிசைப் பகுதிகளில் வாழும் ஆதிதிராவிட குடும்பங்கள் பயனடையும்பொருட்டு நிறைவேற்றப்படவுள்ள திட்டங்கள்**

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் நகர குடிசைப் பகுதி வாழ் குடும்பங்களின் வாழ்க்கை நிலையினை மேம்படுத்த பல்வேறு வீட்டு வசதி திட்டப் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. இதுபோன்று 2005–2006 ஆம் ஆண்டில் நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ள பல்வேறு வீட்டு வசதி பணிகளின்மூலம் குடிசைப் பகுதிகளில் வாழும் 60 சதவிகித ஆதிதிராவிடர் இன மக்கள் பயன்பெறுவர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:—

[2005 ஏப்ரல் 11

## 2005-06-க்கான சிறப்பு உள்ளடக்க திட்டம்

### செயலாக்கம்—வீடுகள்/குடும்பங்கள்

செலவினம்—ரூ.கோடி

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மொத்தம் | | சிறப்பு உள்ளடக்க திட்டம் | |
|---|---|---|---|---|---|
| | | செயலாக்கம் | செலவினம் | செயலாக்கம் | செலவினம் |
| 1. | சென்னை மாநகரில் நதிக் கரைகள் மற்றும் கடற்கரை யோரங்களில் வாழும் குடிசைப் பகுதி வாழ் குடும்பங்களை மறுகுடியமர்வு செய்தல் | 2000 | 26.00 | 1200 | 15.60 |
| 2. | தமிழகத்தின் நகர குடிசைப் பகுதி களில் தனி வீடுகள் அமைத்தல் | 5000 | 23.30 | 3000 | 13.98 |
| 3. | சென்னை கவுஸ் மொகைதீன் பேட்டை பகுதியில் குடிசைப் பகுதி மாற்றுத் திட்டத்தின்கீழ் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்தல் | 552 | 6.90 | 331 | 4.14 |
| 4. | சென்னைப் பெருநகர் மேம்பாட்டுத் திட்டம்—நதிக்கரை களில் வாழும் குடும்பங்களை மறு குடியமர்வு செய்ய அடுக்கு மாடிக் குடியிருப்புகள் அமைத்தல் | 1404 | 18.25 | 842 | 10.95 |
| | மொத்தம் | 8956 | 74.45 | 5373 | 44.67 |

## 4. கூட்டுறவு வீட்டு வசதி

### கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள்

*4.1.* "ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு" என்கிற அரசின் வீட்டு வசதிக் கொள்கையை செயலாக்குவதில் தமிழ்நாட்டில் உள்ள வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்கள் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றன. நகர்ப்புறம் மற்றும் கிராமப்புற மக்களின் தேவையினைப் பூர்த்தி செய்ய 1,253 கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் இயங்குகின்றன. இவற்றில் 196 கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களும் 1,057 நகர்ப்புற கூட்டுறவு வட்டக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களும் அடங்கும். மாநில அளவில் தமிழ்நாடு வீட்டு வசதிச் சங்கங்களும் அடங்கும். மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையமும் செயல்பட்டு வருகின்றது.



2005 ஏப்ரல் 11]

### மேலாண்மை

*4.2.* கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களில் பாரபட்சமற்ற மேலாண்மையினை உறுதி செய்யும்பொருட்டு அனைத்து கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களில் 25-5-2001 முதல் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மக்களாட்சிக் கோட்பாடுகளின்படி விரைவில் இச்சங்கங்களுக்கு தேர்தல் நடத்தப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவிடம் சங்க நிர்வாகம் ஒப்படைக்கப்படும்.

### கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களின்மூலம் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்

(அ) ஊரகப் பகுதியில் பொருளாதாரத்தில் நலிவுற்றோருக்கான ஊரக வீட்டு வசதித் திட்டம்

(ஆ) நகர்ப்புறங்களில் பொருளாதாரத்தில் நலிவுற்றோருக்கான சிறப்பு வீட்டு வசதித் திட்டம்

(இ) கிராமப்புறங்களில் குறைந்த மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான திட்டம்

(ஈ) நகர்ப்புற வீட்டு வசதித் திட்டம்

(உ) வால்மீகி அம்பேத்கர் ஆவாஸ் யோஜனா திட்டம் (வாம்பே திட்டம்)

(ஊ) வீடுகள் விரிவாக்கம் மற்றும் புதுப்பித்தல்

### கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களின் சாதனைகள்

*4.3.* தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம் அது தொடங்கப்பட்டது முதல் இதுவரை தொடக்கநிலை கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு 11,36,646 வீடுகள் கட்டுவதற்காக ரூ.4298.75 கோடி அளவிற்கு கடனுதவி அளித்துள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:—

[2005 ஏப்ரல் 11

| வ. எண் | திட்டத்தின் பெயர் | 31-12-2004 வரை கட்டி முடிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை | வழங்கப் பட்ட கடன் தொகை (ரூ.கோடி யில்) |
|---|---|---|---|
| 1. | ஊரகப் பகுதியில் பொருளாதாரத்தில் நலிவுற்றோருக்கான ஊரக வீட்டு வசதித் திட்டம் | 6,27,108 | 413.25 |
| 2. | நகர்ப்புறங்களில் பொருளாதாரத்தில் நலிவுற்றோருக்கான சிறப்பு வீட்டு வசதித் திட்டம் | 28,088 | 68.33 |
| 3. | கிராமப்புறங்களில் குறைந்த மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான திட்டம் | 88,706 | 529.14 |
| 4. | நகர்ப்புற வீட்டு வசதித் திட்டம் | 3,11,024 | 3035.29 |
| 5. | சமத்துவபுரம் திட்டம் | 8,257 | 7.73 |
| 6. | வாம்பே திட்டம் | 7,397 | 27.63 |
| 7. | விரிவாக்கம் மற்றும் புதுப்பித்தல் திட்டம் | 59,147 | 52.06 |
| 8. | அடமானக் கடன் | 6,919 | 165.32 |
| | மொத்தம் | 11,36,646 | 4298.75 |

**2005-2006 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்**

4.4. நகர்ப்புற வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் 2005-2006 ஆம் ஆண்டில் 6,000 புதிய வீடுகள் கட்ட ரூ.100 கோடி கடனுதவி வழங்க உத்தேசித்துள்ளது.

## 5. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

### அரசு அலுவலர்களுக்கு வீடு கட்ட முன்பணம் வழங்கும் திட்டம்

5.1. அரசு அலுவலர்களுக்கு வீடு கட்ட முன்பணம் வழங்கும் திட்டத்தின்கீழ் கீழே குறிப்பிட்டுள்ள வீட்டு வசதி அமைப்பு இனங்களுக்கு வீடு கட்ட முன்பணம் வழங்கப்படுகிறது:—

(1) வீட்டுமனை வாங்கி அதில் வீடு கட்டுதல்.

(2) புதிதாக வீடு கட்டுதல்.



2005 ஏப்ரல் 11]

(3) தனியாரால் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடிக் குடியிருப்பு/ வீடு வாங்குதல்.

(4) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடிக் குடியிருப்பு/வீடு வாங்குதல்.

(5) தற்போதுள்ள வீட்டை விரிவாக்குதல்.

(6) தற்போதுள்ள வீட்டை மேம்படுத்துதல்.

5.2. இத்திட்டத்தின்கீழ் வீடு கட்ட முன்பணம் மாநில அரசு அலுவலர்களுக்கு உயர்ந்தபட்சமாக ரூ.6.00 இலட்சமும் இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களுக்கு உயர்ந்தபட்சமாக ரூ.7.50 இலட்சமும் வழங்கப்படுகிறது. அதே போன்று தற்போதுள்ள வீட்டை விரிவாக்க/ மேம்படுத்த முன்பணத் தொகை ரூ.3 இலட்சம் வரை வழங்கப்படுகிறது.

5.3. 2005-2006 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்டத்தில் அரசு ஊழியர்கள் மற்றும் இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களுக்கு வீடு கட்ட முன்பணம் வழங்கும் திட்டத்தின்கீழ் ரூ.102.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 6. இடவசதிக் கட்டுப்பாடு

6.1. தமிழ்நாடு கட்டடங்கள் (குத்தகை மற்றும் வாடகை கட்டுப்பாடு) சட்டம், 1960 திருத்தப்பட்ட சட்டம் 23/1973, கீழ்க்கண்ட நோக்கங்களைக் கொண்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. இடவசதி கட்டுப்பாடு | – | வீடுகள் வாடகைக்கு விடுவதை சீர் செய்து முறைப்படுத்துவது. |
| 2. வாடகை கட்டுப்பாடு | – | வாடகைகள் கட்டுப்படுத்துவது |
| 3. வெளியேற்றுகை கட்டுப்பாடு | – | முறையற்ற வெளியேற்றங்களைத் தடுப்பது. |

6.2. சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரை சென்னை மாவட்ட ஆட்சியர் இடவசதி கட்டுப்பாட்டுக்கு பொறுப்பானவராவார். அவர் வீடுகளை வாடகைக்கு விடுவதற்கான சட்ட வழிவகைகளை கவனிப்பதற்கு மேற்படி சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட அலுவலராவார். மற்ற மாவட்டங்களில் கோட்ட வருவாய் அலுவலர் இப்பணியை கவனிக்கிறார்.

[2005 ஏப்ரல் 11

*6.3.* அரசு கட்டுப்பாட்டில் உள்ள வீடுகளுக்கு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியாளர்/ கோட்ட வருவாய் அலுவலர் சட்டபூர்வமான வாடகைதாரர் என்பதால் வீட்டிற்கான வாடகை செலுத்துவது, பராமரிக்க வேண்டியது ஆகிய பொறுப்புகள் அவரையே சார்ந்ததாகும்.

*6.4.* தற்போது சென்னையில் மட்டும் அரசுக் கட்டுப்பாட்டில் 52 கட்டடங்கள் உள்ளன. கோயம்புத்தூரில் 17 வீடுகளும் உள்ளன. மற்ற மாவட்டங்களில் வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் வீடுகள் இல்லை. இந்த வீடுகள் விடுவிக்கப்பட்டு உரிமையாளர்கள் வசம் ஒப்படைக்கப்படும் வரை, அரசே இந்த வீடுகளின் குடியிருப்புதாரர்கள் ஆவார்கள்.

*6.5.* தற்போதைய சூழ்நிலைக்கேற்ப நடைமுறையிலுள்ள வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தினை நீக்கி புதிய சட்டம் கொண்டுவர "மாதிரி வாடகை கட்டுப்பாடு சட்டம்" ஒன்றினை மத்திய அரசு தயாரித்து மாநில அரசுகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. அதன் அடிப்படையில் இந்த அரசு நடைமுறையிலுள்ள வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தினை நீக்கி புதிய சட்டம் கொண்டுவருவது குறித்து ஆய்வு செய்து வருகிறது.

## 7. நகர் ஊரமைப்பு இயக்ககம்

*7.1.* தமிழ்நாட்டில் நகர்மயமாக்கலின் வேகம் வரும் பத்தாண்டுகளில் மேலும் அதிகரித்து 2011 ஆம் ஆண்டு வாக்கில் 3 கோடி நகர்ப்புற மக்கள் என்ற எண்ணிக்கையினை அடையும். இது மாநிலத்தின் அப்போதைய மக்கட்தொகையில் 50 விழுக்காட்டிற்கும் மேற்பட்டதாக அமையும். இக்கணிப்பு கடந்த பத்தாண்டுகளில் ஏற்பட்டுள்ள நகர்மயமாதலின் தன்மைக்கு வலு சேர்ப்பதுடன், தேசிய சராசரி நகர்ப்புற வளர்ச்சியின் மொத்த விகிதத்தைவிட தமிழ்நாட்டில் வேகமாக நடைபெறும் வளர்ச்சி நிலையை எடுத்துக் காட்டுகிறது. தமிழ்நாட்டின் நகர்மயமாதல் நிலை சீராக அதிகரித்து வருகிறது.

*7.2.* சென்னையை அடுத்து கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, வேலூர் மற்றும் ஈரோடு நகரங்கள் அதிக வளர்ச்சிக் குறியீட்டுடன் கொண்ட மக்கட்தொகையுடன் அமைந்துள்ளன. இம் மக்கட்தொகை வளர்ச்சி, நகர்ப்பகுதியினைக் காட்டிலும் புறநகரில் அதிக அளவில் உள்ளது. இந்த நிலை எல்லா மாவட்ட தலைமையிடங்கள் மற்றும் மத்திய தர நகரங்களுக்கும் பொதுவானதாக உள்ளது.



2005 ஏப்ரல் 11]

*7.3.* தமிழ்நாட்டில் மனிதன்/நிலம், விகிதாசாரம் நாட்டின் மற்ற மாநிலங்களை ஒப்பிடும்போது குறைவானதாக உள்ளது. இவ்விகிதாசாரம் 1991 ஆம் ஆண்டில் 0.23 ஹெக்டேர்/நபரிலிருந்து 2001 ஆம் ஆண்டில் 0.20 ஹெக்டேர்/நபர் எனக் குறைந்து மேலும் 2011-ல் இது 0.17 ஹெக்டேர்/நபர் ஆகவும் குறையும் வாய்ப்புள்ளது. இவ்விகிதாச்சார நிலைமை நகர் மற்றும் கிராமப்புறப் பகுதிகளில் கடுமையான பாதிப்பினை ஏற்படுத்தும். குறிப்பாக நகர்ப்புற பொருளாதாரம், சமூக மற்றும் பொருளாதார கட்டமைப்புகள் மற்றும் வாழ்க்கைத் தரத்தினை பாதிக்கும். எனவே, நிலத்தினை முழு அளவிற்கு உபயோகப்படுத்துவது உடனடித் தேவையாகிறது. 2010 ஆம் ஆண்டில் வீட்டு வசதிக்காக மட்டும் 91,000 ஹெக்டேர் நிலம் தேவைப்படுகிறது. ஒவ்வொரு 10 இலட்சம் மக்கட்தொகைக்கும் கூடுதலாக சுமார் 14,000 ஹெக்டேர் நிலம் மாநிலத்தின் வீட்டு வசதி மற்றும் இதர உபயோகத்திற்கு தேவை என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

*7.4.* நகரங்கள் அதிகப்படியான உற்பத்தித் திறனை அடையும்போது நகர்மயமாக்கல் பொருளாதார வளர்ச்சிக்கு சாதகமான நிலையினை ஏற்படுத்துகிறது. நகர்ப்புற வளர்ச்சிக்கான நிலைப்பாடு (Strategy) என்பது நகர்ப்புற பகுதிகள் பொருளாதார ரீதியில் வலுவுள்ளதாக அமையும் சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். முதலீடுகள் குறைவாக இருப்பதால் கிடைக்கக்கூடிய முதலீட்டினை அனைத்து நகரங்களுக்கும் பகிர்ந்தளிப்பது குறைந்த பலனையே அளிக்கும். எனவே, முதலீட்டை தேர்ந்தெடுக்கப்பட்ட மையங்களில் இடுவதன்மூலம் திறமையான மற்றும் சீரான வளர்ச்சியை அந்த மண்டலங்கள் அடைய முடியும்.

## 1. முழுமை திட்டங்கள் மற்றும் புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள்

*7.5.* 2003-04 ஆம் ஆண்டில் நகராட்சிகளாக இருந்த அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கி 108 முழுமை திட்டங்களும், 6 புதுநகர் வளர்ச்சி திட்டங்களும் இதுகாறும் தயாரிக்கப்பட்டுள்ளன. 2004-05 ஆம் ஆண்டில் ஆறு முழுமை திட்டங்களும், ஒரு புதுநகர் வளர்ச்சித் திட்டமும் மறு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டும் மற்றும் மூன்று நகரங்களுக்கு புதிய முழுமை திட்டம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டும் வருகிறது. 2005-06 ஆம் ஆண்டில் பத்து முழுமை திட்டம் மறு ஆய்வு செய்ய மற்றும் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2005 ஏப்ரல் 11

**2. விரிவு அபிவிருத்தித் திட்டங்கள்**

*7.6.* ஒரு இலட்சம் மக்கட்தொகையைவிட அதிகமான தரம்–1 நகரங்களில் திருநெல்வேலியைத் தவிர ஏனைய அனைத்து தரம்–1 நகரங்களுக்கும் இத்துறையால் முழுமை திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. திருநெல்வேலிக்கும் முழுமை திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. அனைத்து தரம்–1 நகரங்களுக்கும் தயாரிக்கப்பட்டுள்ள முழுமை திட்டமானது பெரிய .அளவிலான திட்டமாகும். ஆதலால் அடுத்த கட்டமாக இந்நகரங்களுக்கு நுண்ணிய அளவிலான திட்டமான விரிவு அபிவிருத்தித் திட்டம் தயாரிக்க வேண்டிய அவசியம் உள்ளது. ஐம்பது விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கும் பணி 2004–05 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. தரம்–1 நகரங்கள் மற்றும் அனைத்து பெரிய நகரங்களிலும் மிக விரைவாக அபிவிருத்தி அடைந்துவரும் பகுதிகளுக்கு விரிவு அபிவிருத்தித் திட்டங்களை உடனடியாக தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியமுள்ளதால் 2005–06 ஆம் ஆண்டில் குறைந்தபட்சம் 100 விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**3. சிறப்புத் திட்டங்கள் மற்றும் நடைமுறையில் உள்ள திட்டங்கள்**

**பாரம்பரிய நகர வளர்ச்சித் திட்டங்கள்**

*7.7.* ரூ.3.75 கோடி மொத்த மானிய தொகையில் ஒன்பது பாரம்பரிய நகரங்களில் ஒவ்வொரு நகரத்திற்கும் அதிகபட்சமாக ரூ.50.00 இலட்சம் வழங்கி மேம்பாட்டுத் திட்டங்களை 2004–05 ஆம் ஆண்டில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. இதேபோன்று 2005–06 ஆம் ஆண்டில் மன்னார்குடி மற்றும் பிள்ளையார்பட்டி ஆகியவற்றை உள்ளடக்கிய ஐந்து பாரம்பரிய நகரங்களில் இத்திட்டத்தை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**போக்குவரத்து மேலாண்மைத் திட்டங்கள்**

*7.8.* சென்னையை தவிர ஏனைய ஐந்து மாநகராட்சிகள் ஒவ்வொன்றிற்கும் ரூ.50.00 இலட்சம் வீதமும் மற்றும் பத்து நகராட்சிகள் ஒவ்வொன்றிற்கும் ரூ.25.00 இலட்சம் வீதமும் மானியமாக நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து வழங்கி போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டங்கள் 2004–05 ஆம் ஆண்டில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டு



2005 ஏப்ரல் 11]

பணி நடைபெற்று வருகிறது. இத்திட்டம் 2005–06 ஆம் ஆண்டில் தொடர்ந்து செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**துவக்க முதலீடு திட்டத்தின்கீழ் சட்டரீதியான திட்டங்களைச் செயல்படுத்துதல்**

*7.9.* ஆரம்ப முதலீட்டு திட்டத்தின்கீழ் முழுமை திட்டங்கள், விரிவு அபிவிருத்தித் திட்டங்கள்/ புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றில் உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்களை 2004–05 ஆம் ஆண்டில் செயல்படுத்த மொத்த மானியத் தொகையாக ரூபாய் ஒரு கோடி அளவிற்கு ஐந்து நகரங்களுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. இதேபோன்று 2005–06 ஆம் ஆண்டிலும் மேலும் ஐந்து நகரங்களில் மொத்த மானியத் தொகை ரூபாய் ஒரு கோடி அளவிற்கு வழங்கி இத்திட்டத்தைச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**பூங்கா மற்றும் விளையாடுமிடங்களை மேம்படுத்துதல்**

*7.10.* பூங்கா அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் அதிகபட்சமாக ஒவ்வொரு நகர்ப்புற உள்ளாட்சிக்கும் ரூ.1.25 இலட்சம் மானியம் வழங்கும் திட்டத்தின்படி 2004–05 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.12.50 இலட்சம் மானியமாக வழங்கி திட்டங்கள் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இதேபோன்று 2005–06 ஆம் ஆண்டிலும் மேலும் பத்து நகர்ப்புற உள்ளாட்சிகளில் உள்ள பூங்காக்களை மேம்படுத்த மொத்த மானியத் தொகை ரூபாய் 12.50 இலட்சம் வழங்கி இத்திட்டத்தைச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**4. சிறப்புத் திட்டங்கள்**

**அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கான புவியமைப்பு தகவல் முறை**

*7.11.* தேசிய அளவிலான தகவல் சேகரிப்புத் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் ஆறு நகரங்களுக்கான திட்ட வரைபடங்களை கணினி மயமாக்கவும், தகவல்கள் சேகரிக்கவும் ஆகும் செலவில் 70 விழுக்காடு தொகை மத்திய அரசால் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. திருத்திய மதிப்பீட்டின்படி, மாநிலத்தின் பங்காக ரூ.13.44 இலட்சம் மட்டுமே அளிக்கப்பட வேண்டியுள்ளது. இத்திட்டத்திற்கு மத்திய அரசின் முறையான ஒப்புதல் எதிர்நோக்கப்படுகிறது. ஒப்புதல் பெறப்பட்டவுடன் மாநிலத்தின் பங்குத் தொகை விடுவிக்க வேண்டிய நிலை உள்ளது. ஆதலால், 2005–06 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.13.44 இலட்சம் ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2005 ஏப்ரல் 11

### அபிவிருத்திக் கட்டுப்பாட்டு விதிகள்

*7.12.* மாநிலத்திற்கான அபிவிருத்திக் கட்டுப்பாட்டு விதிகள் தயாரிக்க வேண்டியது நீண்ட காலத் தேவையாக இருந்து வருகிறது. 2005–06 ஆம் ஆண்டில் அரசால் அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி கட்டுப்பாட்டு விதிகளை வெளியிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 8. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

### முன்னுரை:

*8.1.* பாரம்பரியமும் நவீனத் தன்மையும் நல்லிணக்கத்தோடு இணைந்த ஓர் அற்புத நகரம் என சென்னையை வர்ணிக்கலாம். 1639 ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களின் கிழக்கு இந்திய கம்பெனியால், புனித செயின்ட் ஜார்ஜ் கோட்டை என்ற ஒரு சிறிய வாணிபத் துறைமுகமாக உருவாக்கப்பட்ட சென்னை இன்று தென்னகத்திலேயே மிகப்பெரிய நகரமாக வளர்ந்து, இந்தியாவிலுள்ள 4 பெரிய நகரங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. 2001 ஆம் ஆண்டு மக்கள் கணக்கெடுப்பின்படி 43.4 இலட்சம் மக்கள்தொகை கொண்ட நகரமாக விளங்குகிறது.

*8.2.* நகர் ஊரமைப்புத் திட்ட சட்டம், 1971–ன்படி சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஒரு சட்டமுறை ஆணைக் குழுவாக அமைக்கப்பட்டதாகும். ஊரக வளர்ச்சித் துறை அரசாணை எண் 2380, நாள்: 13-11-1972–ன்படி ஓர் இடைக்கால அமைப்பாக உருவாக்கப்பட்ட இந்தக் குழுமம், 7-3-1975–ல் சட்டமுறை ஆணைக் குழுவாக உருவெடுத்தது. தற்போது தமிழக அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் இக்குழுமம் உள்ளது. இக்குழுமம் தனது எல்லையாக சென்னைப் பெருநகர் பரப்பினைக் கொண்டுள்ளது. சென்னைப் பெருநகரின் வளர்ச்சிக் கொள்கையானது அதிவேகமாக வளர்ந்து வரும் நகர மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் உள்ள பிரச்சினைகளைக் கருத்தில்கொண்டு இவற்றிற்குத் தீர்வு காணும் விதத்தில் அமைந்துள்ளது. அரசின் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் விதத்தில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தவும் உள்கட்டுமான வசதிகளை வலுப்படுத்தவும், ஏற்கெனவே உருவாக்கிய நகர அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும் பல திட்டங்களை உருவாக்கியுள்ளது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்களும் அவற்றின் முன்னேற்றமும் பின்வருமாறு:



2005 ஏப்ரல் 11]

### (1) சென்னைப் பெருநகர் பகுதிக்கான வளர்ச்சி முதலீட்டுத் திட்டம்

*8.3.* சென்னைப் பெருநகர் பகுதியில் உள்கட்டமைப்பு வசதிகளை விரைவாக மேம்படுத்தும் நோக்கத்தில் கட்டமைப்பு வளர்ச்சிக்கான முதலீட்டுத் திட்டம் 2003 ஆம் ஆண்டு முதல் செயலாக்கப்பட்டு வருகிறது. பொது மற்றும் தனியார் துறைகளின் பங்கீட்டுடன் செயல்படுத்த உள்ள இந்தத் திட்டத்தில், போக்குவரத்து, வீட்டு வசதி, குடிநீர் வசதி, கழிவுநீர் அகற்றல் வசதி மற்றும் மழைநீர் வடிகால் போன்ற வசதிகளை அளித்தல் / மேம்படுத்துதல் ஆகியன அடங்கும்.

*8.4.* இத்திட்டத்தில் 2003–2004 ஆம் ஆண்டில் ரூ. 1322 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. 2004–2005 ஆம் ஆண்டில் ரூ. 1673 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் செயலாக்கப்பட்டு வருகின்றன. இதன் பணிகளை தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னைப் பெருநகர் குடிநீர் வாரியம், பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, சென்னை மாநகராட்சி, நகராட்சிகளுக்கான ஆணையம், சிறப்பு ஊராட்சிகளுக்கான இயக்ககம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை இயக்ககம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் ஆகிய துறைகள் செயல்படுத்தி வருகின்றன.

*8.5.* 2004–2007 ஆம் ஆண்டுகளுக்கான மூன்றாண்டு காலத் திட்டத்தில் ரூ. 8233.73 கோடி உள்கட்டமைப்புத் திட்டங்களுக்காக முதலீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2005–2006 ஆம் நிதியாண்டில் ரூ. 2054.09 கோடி முதலீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 2 (அ) திரளான துரித இரயில் போக்குவரத்துத் திட்டம்–II

*8.6.* சென்னைக் கடற்கரை முதல் திருமயிலை வரையிலான திரளான துரித இரயில் போக்குவரத்து (நிலை–I)–ஆனது ஏற்கெனவே செயல்பாட்டில் இருக்கிறது. சுமார் ரூ. 706 கோடி மதிப்பிடப்பட்ட செலவில் திருமயிலை முதல் வேளச்சேரி வரையிலான 11.17 கி.மீட்டர் தூரத்திற்குள்ள திட்டம்–II முழு வேகத்தில் செயல்படுத்தப்பட்டு திருவான்மியூர் வரையிலான 5 கி.மீ. தூரத்திற்கு, ஜனவரி 2004–ல் முதல் பகுதியாக நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த 67 சதவிகித செலவினை தமிழக அரசும் மீதமுள்ள 33 சதவிகித செலவினை மத்திய அரசும் ஏற்றுக் கொண்டுள்ளது. தமிழக அரசின் பங்காக, ரூ. 435.50 கோடியை தமிழக அரசு இதுவரையிலும் அளித்துள்ளது. இதுவரை செய்யப்பட்டுள்ள செலவினம் ரூ. 552.32 கோடியாகும்.

[2005 ஏப்ரல் 11

**2 (ஆ) திரளான துரித இரயில் போக்குவரத்துத் திட்டம் நிலை–II–ன் நீட்டிப்பு**

*8.7.* இந்தத் திட்டத்தை புனித தோமையர் மலை வரை நீட்டித்து ஒரு வளைவு இரயில் பாதையொன்றினை முடித்தால்தான் திரளான துரித இரயில் போக்குவரத்துத் திட்டத்தின் முழுப் பயனை உணரமுடியும் என்பதைக் கருத்தில் கொண்டு ரூ. 416 கோடி செலவில் 5 கி.மீட்டர் தூரத்திற்கு வேளச்சேரி முதல் புனித தோமையர் மலை வரை திரளான துரித போக்குவரத்துத் திட்டத்தை நீட்டித்து அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இந்திய அரசுடன் கூட்டாக இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த 67 சதவிகித செலவினை தமிழக அரசும், 33 சதவிகித செலவினை இந்திய அரசும் பகிர்ந்து கொள்ளும் முறையை தமிழக அரசு ஏற்கெனவே ஏற்றுக் கொண்டிருக்கிறது.

**(3) வெளிவட்டச் சாலை**

*8.8.* சென்னை மாநகரின் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், சென்னைப் பெருநகரின் வெளியோரத்தில் வெளிவட்டச் சாலை அமைக்க திட்டமிட்டுள்ளது. சென்னை – திருச்சி சாலை, சென்னை–பெங்களூர் சாலை, சென்னை–திருவள்ளூர் நெடுஞ்சாலை, சென்னை–நெல்லூர் சாலை, திருவொற்றியூர் – பொன்னேரி பஞ்சட்டி சாலை ஆகிய சாலைகளை இணைத்து வெளி வட்டச் சாலை அமைக்க 1993 ஆம் வருடம் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. சுமார் 62 கிலோ மீட்டர் நீளத்தில் தெற்கே வண்டலூரையும், வடக்கே மீஞ்சூரையும் இவ்வெளிவட்ட சாலை இணைக்கின்றது. 220 அடி அகலத்துடன் கூடிய இச்சாலையின் இருபுறமும் வணிக வளாகங்கள் அமைக்க வசதி செய்யும் பொருட்டு, 400 அடி அகலத்துடன் கூடிய நிலம் கையகப்படுத்தப்படும். முதல் கட்டத்திற்கான நில ஆர்ஜிதப் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.

*8.9.* இரண்டாம் கட்டத்திற்காக மொத்தம் 454 ஹெக்டேர் நிலங்கள் தேவைப்படுகின்றன. இதில் 277 ஹெக்டேர் நிலங்கள் தனியாரிடமிருந்து நில எடுப்பு செய்யப்பட உள்ளது. மற்றும் உள்ள 177 ஹெக்டேர் நிலங்கள் பல்வேறு அரசு துறை நிறுவனங்களிடமிருந்து நில உரிமை மாற்றம் செய்யப்பட உள்ளது. இதிலுள்ள மொத்தம் 53 தொகுதிகளில் (22 கிராமங்கள்), 4(1) அறிவிக்கை 47 தொகுதிகளுக்கு வழங்கப்பட்டு 5(ஏ) விசாரணை நடத்தப்பட்டுள்ளது. தீர்ப்பாணை விசாரணை 11 தொகுதிகளுக்கு நடத்தப்பட்டு 8 தொகுதிகளுக்கு தீர்ப்பாணை வழங்கப்பட்டுள்ளது.



2005 ஏப்ரல் 11]

*8.10.* வெளிவட்டச் சாலையை, தனியார் பங்கீட்டோடு செயல்படுத்துவதற்குத் தேவையான செய்யத்தக்கமைக்கான அறிக்கை தமிழ்நாடு சாலை வளர்ச்சி கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு முடிவடையும் தருவாயில் உள்ளது.

**(4) விரிவான போக்குவரத்து ஆய்வு**

*8.11.* சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தில் கண்ட திட்டங்களை வலுப்படுத்த 1992–95 ஆம் வருடங்களில் மேற்கொண்ட விரிவான போக்குவரத்து ஆய்வின்படி பயண வளர்ச்சிகளை நடைமுறைப்படுத்த உலக வங்கியின் உதவியுடன் பிப்ரவரி–ஏப்ரல் 2004–ல் ரூ.15 இலட்சம் செலவில் ஒரு மூன்று மாத கால ஆய்வு தொடங்கப்பட்டு செப்டம்பர் 2004–ல் முடிக்கப்பட்டது. குறுகிய மற்றும் மத்திய கால திட்டங்கள் இந்த ஆய்வின் மூலம் வலுப்படுத்தப்பட்டு, ரூ. 760 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் III–ன்கீழ் உலக வங்கியிடம் நிதியுதவி கோரப்பட்டுள்ளது.

**(5) தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்– III**

*8.12.* சென்னைப் பெருநகர் பகுதிகளில் பெருகிவரும் போக்குவரத்துப் பிரச்சினைகளை குறைப்பதற்கு, தமிழக அரசால் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளின் வரிசையில், உலக வங்கியின் உதவியுடன் சுமார் ரூ. 760 கோடி மதிப்பீட்டில் 2005 முதல் 2010 வரையிலான ஓர் ஐந்தாண்டுத் திட்டத்தை மேற்கொள்ள தமிழ்நாடு அரசு / சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உத்தேசித்துள்ளது. போக்குவரத்தைக் கட்டுப்படுத்தி அதன் செயலாக்க முறைகளை நிர்மாணிக்கவும், பாதசாரிகளுக்கான சுரங்க வழிப்பாதையை கட்டுவதன்மூலம் சாலைப் போக்குவரத்து மற்றும் தரவாயுவை செம்மைப்படுத்தவும், மேல்வழிப்பாதைகள்/சுரங்க வழிப்பாதைகள் அமைப்பதன் மூலம் இரயில் சந்திக் கடவுகளை நீக்கியும் சென்னைப் பெருநகர வளாகத்தின் புறவெளியில் உள்ள பெருநகர அதிவேக சாலைகளின் இணைப்புகளை வலுப்படுத்தி மற்றும் அகலப்படுத்துவதோடு புறநகர்ச் சாலை மற்றும் இரயில் வழிகளில் உள்ள பெரிய முடுக்குகளை நீக்கியும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கவும் நடுத்தர திட்ட முறையின் குறிக்கோளாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**(6) சென்னைப் பெருநகர் பகுதிக்கான பெருநகர நில சந்தை பற்றிய ஆய்வு**

*8.13.* சென்னைப் பெருநகரில் நிலச் சந்தை சம்பந்தப்பட்ட ஓர் ஆய்வை சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் உலக வங்கியின

உதவியுடன் மேற்கொண்டுள்ளது. இது சென்னைப் பெருநகரில் நிலப் பயன்பாட்டுத் திட்டம் உருவாக்கிட உதவியாய் இருக்கும். இந்த ஆய்வினை மேற்கொள்ள ரூ. 36 இலட்சம் மானியமாக பெறப்பட்டுள்ளது. நிலக் கிரயம் பற்றிய தகவல் சேகரிப்பதற்கான கணக்கெடுப்புப் பணி சென்னைப் பல்கலைக்கழகத்தில் உள்ள புவியியல் துறைமூலம் நடத்தப்பட்டு வருகிறது.

*8.14.* இந்த ஆய்வின் மூலம் நிலப் பயன்பாட்டில் ஏற்படும் மாற்றம், வளர்ச்சியின் போக்கு, நகர்ப்புற வளர்ச்சிக்குத் தேவையான நிலம், அதன் மதிப்பீடு, நில மேலாண்மை, நகர வளர்ச்சித் திட்டம் மற்றும் உள்கட்டமைப்பு திட்டமிடுதல் ஆகியவற்றைப் பற்றி புரிந்துகொள்ள இயலும். இந்த ஆய்வு 2005 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் முடிக்கப்படும்.

### (7) மெரினா கடற்கரை அபிவிருத்தித் திட்டம்

*8.15.* மெரினா கடற்கரையை அழகுபடுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியாக இயந்திரம் மூலம் கடற்கரையைச் சுத்தம் செய்வது 2003 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் செயலாக்கப்பட்டு வருகிறது. சீர்படுத்திய நடைபாதைகள், கூடுதல் வாகன நிறுத்துமிடங்கள், குழந்தைகள் விளையாடுமிடங்கள், உயர் மின்விளக்குகள், புல்தரைகள், கழிவறைகள், குடிநீர், சுற்றுக்காவல் போன்ற வசதிகளை ரூ.4.84 கோடி செலவில் அமைக்கத் திட்டமிடப்பட்டு, சம்பந்தப்பட்ட துறைகள் மூலம் செயலாக்கப்பட்டு வருகிறது. மெரினா கடற்கரைப் பகுதியை திட்டமிட்டபடி வளர்ச்சி செய்யும்பொருட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் "கடற்கரை மேலாண்மைக் குழு" அமைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தலைமையில் "சென்னைப் பெருநகர் கடற்கரை குழு" அமைக்கப்பட்டு, இக்குழு காலமுறைப்படி கூடி, திட்டங்களைச் செயல்படுத்த சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அறிவுறுத்தி வருகிறது.

### (8) உள்ளாட்சி அமைப்புகளுக்கு மானிய நிதி உதவி செய்தல் மற்றும் சமுதாய சுற்றுச்சூழல் மேம்பாட்டுத் திட்டம்

*8.16.* சாலை மேம்பாடு, தெருவிளக்கு அமைத்தல், கால்வாய் அமைத்தல், மயான மேம்பாடு, குடிநீர் வசதி மற்றும் கழிவுநீர் அகற்றல், குப்பைக் கூளங்கள் அகற்ற வாகனங்கள் வாங்குவது போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், சென்னைப் பெருநகரப் பகுதிக்குள் அமைந்துள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஆண்டுதோறும் மானியமாக நிதி உத்வி அளித்துவருகிறது. இம்மானிய உதவி,





உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி உதவி செய்தல் மற்றும் சமுதாய சுற்றுச்சூழல் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக அளிக்கப்பட்டு வருகிறது. 2004–2005 ஆம் நிதியாண்டில், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மானியத் தொகையாக ரூ. 2.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

*8.17.* உள்ளாட்சி நிதி உதவி திட்டத்தின்கீழ், 90 விழுக்காடு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் மானியமாகவும் மீதமுள்ள 10 விழுக்காடு உள்ளாட்சி அமைப்புகளின் பங்கேற்பு மூலமாகவும் செயல்பட்டு வருகிறது. சமுதாய சுற்றுச்சூழல் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பூங்கா சீரமைப்பு, குளம், குட்டைகள் தூர்வாருதல், மயான மேம்பாடு, மரம் நடுதல், பள்ளிக்கூடங்களின் சுற்றுப்புறச்சூழல் மேம்பாடு மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் போன்ற பணிகளுக்காக 80 விழுக்காடு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் மானியமாகவும், மீதமுள்ள 20 விழுக்காடுகளில் 10 விழுக்காடு உள்ளாட்சி அமைப்பும் மற்றும் 10 விழுக்காடு பயன்பெறும் சமுதாயத்தினரிடமிருந்தும் பெறப்படுகின்ற நிதிகள் மூலம் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது.

*8.18.* மேற்கூறிய திட்டங்களுக்கு 2005–2006 ஆம் நிதியாண்டில் ரூ. 3.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### (9) கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் காய்கறி கழிவிலிருந்து மின்உற்பத்தி செய்யும் திட்டம்

*8.19.* கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் பிரதி தினம் 80 டன் தாவர கழிவு சேருகிறது. இதனை சென்னை மாநகராட்சி தற்பொழுது அப்புறப்படுத்தி எடுத்துச் செல்கிறது. இத்தாவரக் கழிவிலிருந்து மின்சக்தி தயாரிக்கும் திட்டத்தினை மத்திய அரசு உதவியுடன் ரூ. 5 கோடி செலவில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்தி உள்ளது. இதன்படி, நாளொன்றுக்கு 30 டன் கழிவினை உபயோகித்து ஆண்டொன்றுக்கு 17.20 இலட்சம் யூனிட்கள் மின்சக்தி தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் முடியும் தருவாயில் உள்ளதால் விரைவில் மேற்படி மின் உற்பத்தி துவங்கப்படவுள்ளது.

### (10) சென்னைப் பெருநகர எல்லைக்குள் வாகனங்கள் நிறுத்துமிடம் பற்றிய ஆய்வு

*8.20.* சென்னைப் பெருநகர எல்லைக்குள் மிக முக்கியமான பகுதிகளில் வாகனங்கள் நிறுத்த தேவைப்படும் இடங்களுக்கான

[2005 ஏப்ரல் 11

திட்டங்களைத் திட்டுவது தற்போதைய கால கட்டத்தில் செய்யவேண்டிய அவசியப் பணியாகும். இதனைக் கருத்தில் கொண்டு வில்பர்ஸ் ஸ்மித் அஸோசியேட்ஸ் என்னும் ஆலோசகரிடம் வாகன நிறுத்த தேவைகள் மற்றும் இருக்கும் இடங்கள், மிக முக்கியமான பகுதிகளின் தேவைகளைச் சமாளிக்கும் வழிமுறைகள், அதற்கான நிர்வாகத் தீர்வுகள் போன்றவற்றை உள்ளடக்கி ஒரு வாகன நிறுத்தக் கொள்கைத் திட்டத்தைத் தயாரிக்கும்படி இக்குழுமம் ஒப்படைத்தது.

**8.21.** இந்த ஆலோசகர் மிக முக்கியமான ஒன்பது இடங்களைக் கண்டறிந்து இவ்விடங்களில் பல அடுக்கு வாகன நிறுத்த ஏற்பாடுகள் செய்வது குறித்து தன்னுடைய ஆய்வில் தெரிவித்துள்ளார். இந்நிலையில் மீகான் லிமிடெட் (மத்திய அரசு நிறுவனம்) என்னும் நிறுவனம் இதுபோன்ற திட்டங்களைத் தீட்டுவதிலும் செயல்படுத்துவதிலும் வல்லமை பெற்றவர்கள் என்ற அடிப்படையில், சில திட்டங்களை நிறைவேற்ற முன்வந்துள்ளது. இதனடிப்படையில் முக்கியமான ஆறு இடங்களுக்கு மட்டும் விரிவான திட்ட அறிக்கையினைத் தயாரிக்குமாறு இக்குழுமம் அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளது. (1. பிராட்வே பஸ் நிலையம், 2. எம்.யூ.சி. மைதானம், 3. பனகல் பூங்காவின் கிழக்கில் அமைந்துள்ள இடம், 4. தி.நகர் பேருந்து நிலையத்தில் உள்ள ஒரு பகுதி, 5. அண்ணா சாலையும் வாலாஜா சாலையும் சந்திக்குமிடத்தில் உள்ள அரசினர் தோட்டம் (Government Estate), 6. பட்டுல்லாஸ் சாலையில் அமைந்துள்ள மாநகரப் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான பணிமனை)



2005 ஏப்ரல் 11]

## இணைப்பு II

*(467 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண் 28

## செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006

### முன்னுரை

சுற்றுலா என்பது இன்றைய உலகில் ஒரு சொகுசுப் பொருளோ அல்லது இடங்களைச் சுற்றிப் பார்ப்பதோ மட்டுமல்ல. மிகவும் சாதாரண மனிதன்கூட ஒரு சுற்றுலாப் பயணி என்ற தகுதியை தற்போது பெற முடிகிறது. அண்மையில் போக்குவரத்துத் துறையிலும், தகவல் தொழில்நுட்பத் துறையிலும் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், இதற்குப் பேருதவியாக அமைந்துள்ளது. இதனால் சுற்றுலாப் பயணிகள் இன்று உலகில் எந்த ஒரு பகுதிக்கும் மிகக் குறைந்த செலவில் செல்லலாம். சுற்றுலாத் தலங்களைப் பார்ப்பது முதல் பல்வேறு கலாச்சாரங்கள், வாழ்க்கை முறைகள் மற்றும் சுற்றுச்சூழல் முதலியவற்றை அனுபவிப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. சுற்றுலா, சந்தைப் பொருள் மற்றும் விற்பனையில் புதிய முயற்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. எனவே, இன்று பெரும்பாலும் சுற்றுலா, அறிவை அடிப்படையாகக் கொண்ட தொழிலாக மாறி விட்டது. விருந்தோம்பல், ஓய்வு நேரம் மற்றும் தரைவழிப் போக்குவரத்துத் துறைகளில் புதிய வேலைவாய்ப்புகளை சுற்றுலா உருவாக்கியுள்ளது. 21 ஆம் நூற்றாண்டில் சுற்றுலாத் தொழில் மிகப் பெரிய வளர்ச்சியை எட்ட உள்ளது.

சுற்றுலா, ஒரு மாபெரும் வளர்ச்சியை தற்போது கண்டுள்ளது. வளர்ந்து வரும் சுற்றுலாத் துறைக்கு ஒரு பொருளாதார வடிவம் உள்ளது. சுற்றுலாத் துறை ஆயிரக்கணக்கான நபர்களுக்கு இலாபகரமான வேலைவாய்ப்பைத் தருகிறது. இத்துறை மூலம் அரசுக்கு ஆண்டுதோறும் பலகோடி ரூபாய் அந்நியச் செலாவணியாகக் கிடைக்கிறது. சுற்றுலாத் தொழிலின் மிகப்பெரிய நன்மை என்னவென்றால் அது அதிகமாக இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலையில் செயற்பாடுகளை உருவாக்க வல்லதாகும். வெளிநாடு

[2005 ஏப்ரல் 11

செல்லுதல், வெளிநாட்டிலிருந்து இங்கு வருகைபுரிதல் மற்றும் உள்நாட்டுச் சுற்றுலா என்று சுற்றுலாத் தொழிலை வகைப்படுத்தலாம்.

**(2) சுற்றுலா – உலக அளவில் ஒரு கண்ணோட்டம்**

ஐரோப்பாவில் முன்னோடியாகத் திகழும் "Conde Nast Traveller" என்ற பத்திரிகை நடத்திய ஓர் ஆய்வின்படி உலகின் மூன்று பெரிய சுற்றுலாத் தலங்களாக இத்தாலி, ஆஸ்திரேலியா மற்றும் பிரான்ஸ் நாடுகள் விளங்குகின்றன. இந்த ஆய்வு அறிக்கையின்படி இந்தியா ஒன்பதாவது இடத்தைப் பெற்றுள்ளது. சிங்கப்பூர் போன்ற நாடுகள் ஒவ்வோர் ஆண்டும் தங்கள் மொத்த மக்கள் தொகையைவிட அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கிறது.

உலகில் ஒவ்வொரு நாட்டிலும், தனித்தன்மை வாய்ந்த சுற்றுலாத் தலங்கள் உள்ளன. எண்ணெய்க் குளியல், சூரிய ஒளிக் குளியல் போன்றவை குறித்து நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், மணல் குளியலுக்கு சுற்றுலாப் பயணிகள் தெற்கு ஜப்பானில் உள்ள "இபுசுகி" என்ற கடற்கரைக்குச் செல்லுகிறார்கள். இங்கு சுற்றுலாப் பயணிகள் தங்கள் உடலை, தலை மட்டும் வெளியே தெரியும்வண்ணம் மணலுக்குள் புதைத்துக் கொள்கிறார்கள். மணலுக்கு உள்ளே இருக்கும் வெப்பநீர் ஊற்று சுற்றுலாப் பயணிகளுக்கு மகிழ்வூட்டுகிறது.

சுற்றுலாத் தொழில் மிக வேகமாக வளர்ந்து வருகிறது. சீனாவில், விண்வெளி தொழில்நுட்பத்தை வணிகப்படுத்துவதில் ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. இதன் பயனாக சீன மக்கள் இன்னும் 20 ஆண்டுகளில் விண்வெளிச் சுற்றுலா என்ற கனவை நனவாக்கும் நிலையில் உள்ளனர்.

அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியாவில், விண்வெளி கப்பல்–1 என்ற இயந்திரம், மூன்றரை நிமிடம் விண்வெளியில் செலவழிக்கப்பட்டதன்மூலம் விண்வெளிச் சுற்றுலா ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. இனி, விண்வெளியில் சிறிதுகாலம் கழிப்பது என்பது வசதி படைத்த சுற்றுலாப் பயணிகளுக்கு இன்னும் 10 ஆண்டுகளில் சாத்தியமாகலாம்.

**(3) சுற்றுலா – தேசிய அளவில் ஒரு கண்ணோட்டம்**

2003–2004 ஆம் ஆண்டில் இந்தியா, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வருகையில் ஒரு நிகரற்ற வளர்ச்சியைக் கண்டது. 2002 ஆம் ஆண்டில் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வருகை 23.8 இலட்சமாக இருந்தது. ஆனால், 2004 ஆம் ஆண்டில் (நவம்பர் வரை) வெளிநாட்டுச்



2005 ஏப்ரல் 11]

சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை 29.8 இலட்சமாக உயர்ந்துள்ளது. இந்தியாவிற்கு வருகைதரும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்வதற்காக மைய அரசால் அண்மையில் ஒரு விளம்பர முகாம் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த விளம்பர யுக்தியின் பெயர் "அதிதி தேவோ பவ" ஆகும். இதன் பொருள் "விருந்தினர்கள், இறைவனுக்குச் சமமானவர்கள்" என்பதாகும். நாடுகளுக்கிடையே கடுமையான போட்டி நிலவிவரும் நிலையிலும் புது தில்லி, ஆக்ரா, ஜெய்ப்பூர் என்ற தங்க முக்கோணச் சுற்றுலா, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைப் பெரிதும் ஈர்க்கும் தன்மையுடையதாக விளங்குகிறது. சுற்றுலாத் தொழில், அதிகமாக கவனத்தை ஈர்க்காத நிலையிலிருந்து, தற்போது சந்தை மற்றும் வருவாயில் முக்கிய பங்கினை வகிக்கும் துறையாக மாறி வருகிறது.

தெற்காசிய நாடுகளையும், இந்திய நாட்டின் சுற்றுலாவினையும் ஒருங்கிணைக்க வேண்டும் என்று ஒரு வேண்டுகோள் இருந்து வருகிறது. அதன்படி ஐரோப்பாவைச் சார்ந்த சுற்றுலாப் பயணிகள் இந்தியாவில் உள்ள சுற்றுலாத் தலங்களைப் பார்வையிட்ட பின்னர் தெற்காசிய நாடுகளுக்குச் செல்ல வேண்டும். இதேபோன்று வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தெற்காசிய நாடுகளுக்குச் சென்ற பின்னர் இந்தியாவில் உள்ள சுற்றுலாத் தலங்களுக்கு வருகை தர வேண்டும். "பயணம் மற்றும் ஓய்வு நேரம்" என்ற ஒரு இதழ் நடத்திய ஆய்வில், உலகில் உள்ள 100 சிறந்த ஓட்டல்களில் இந்தியாவில், ஜெய்ப்பூர் மற்றும் ஆக்ராவில் உள்ள 2 ஓட்டல்கள் இடம் பெற்றுள்ளதாகத் தெரிய வந்துள்ளது. "கொண்டே நாஸ்ட் டிராவலர்" என்ற பயணம் மற்றும் சுற்றுலா இதழ் இமாலயாவில் உள்ள "ஆனந்தா ஓய்வகத்தை" உலகத்தில் உள்ள முதல் ஆரோக்கிய இடமாக (SPA) தெரிவு செய்துள்ளது. விமானக் கட்டணம் குறைந்து வருவதால் சுற்றுலாத் துறை மிகப்பெரிய வளர்ச்சியைக் காண உள்ளது. சுற்றுலா மூலம் இந்தியாவில் 2 கோடி நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. வெளிநாட்டிலிருந்து இந்தியாவிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை சுமார் 30 இலட்சமாகும். இது உலக சுற்றுலாப் பயணிகளின் போக்குவரத்தில் ஆண்டொன்றுக்கு 0.5 சதவீதத்திற்கும் குறைவானதாகும். மிகப் பழமையான ஆலயங்கள், மாளிகைகள் மற்றும் பசுமையான காடுகள் கொண்ட இந்தியா ஒரு சிறந்த சுற்றுலாத் தலமாக விளங்குகிறது.

தொலைநோக்கு அறிக்கை 2020, என்ற ஒரு அறிக்கையை இந்திய தொழில் துறையின் கூட்டமைப்பு தயாரித்து வெளியிட்டுள்ளது.

[2005 ஏப்ரல் 11

இவ்வறிக்கையில் பயணம் மற்றும் சுற்றுலாத் தொழில் 50 மில்லியன் நபர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் நாட்டின் வருவாய்க்கு, சுற்றுலாத் தொழிலின் பங்களிப்பை 7 சதவீதமாக உயர்த்த முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சுற்றுலா, ஒருநாட்டின் சமூக–பொருளாதார முன்னேற்றத்துடன் ஒரு வலுவான இணைப்பு கொண்டுள்ளது. பொருளாதார வளத்தைப் பெருக்கும் தன்மை சுற்றுலாவுக்கு உண்டு. இந்தியாவிற்கு வருகைபுரியும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இந்தியாவின் கலாச்சாரம், பாரம்பரியம் மற்றும் சுற்றுச்சூழல் வளத்தை விரும்புகிறார்கள். ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் சுற்றுலாத் துறைக்கு ரூ. 750.00 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டது. ஆனால் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ரூ. 2900.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தியாவிற்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளை இங்குள்ள வரலாற்று நினைவுச் சின்னங்கள் மிகவும் ஈர்க்கின்றன. இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறை, இந்தியாவில் 3,500–க்கும் மேற்பட்ட நினைவுச் சின்னங்களைப் பராமரித்து வருகிறது. உலக அளவில் நவீனம், வரலாற்றுச் சிறப்பு, பாரம்பரிய வேறுபாடு, இயற்கை எழில், வனவிலங்கு, ஆன்மீகம், யோகா மற்றும் ஆயுர்வேதம் போன்றவைகளுக்கு இந்தியா புகழ்பெற்றதாகும்.

அடுத்த 10 ஆண்டுகளில் சுற்றுலாத் தொழில் ஆசியாவில் ஏனைய பகுதிகளுடன் அல்லது உலக சராசரி அளவுடன் ஒப்பிடும்பொழுது, அதிக வேகமாக வளரக்கூடும் என்று சுற்றுலாத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் கணக்கிட்டுக் கூறுகிறார்கள். எனவே, சுற்றுலாப் பயணிகளுக்குப் பயன் தரக்கூடிய ஒரு சிறந்த வரிச் சலுகைத் திட்டத்தை உருவாக்கி, இச்சூழ்நிலையை இந்தியா தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற கருத்து நிலவி வருகிறது.

சுற்றுலாவும், வரியும் எப்பொழுதும் ஒன்றாகச் செல்கின்றன. ஒரு சுற்றுலாப் பயணிக்கு ஆகும் மொத்தச் செலவினத்தில் 10 சதவீதமாக வரி குறைப்பதன்மூலம் ஒரு நாட்டின் வருமானம் (GDP) ரூ. 123.00 பில்லியன்வரை கூடும் என்று ஒரு மதிப்பீடு தெரிவிக்கிறது. மேலும் ரூ. 460.00 மில்லியன் வரியாகவும், 6,70,000 வேலைவாய்ப்புகளும் கூடுதலாகக் கிடைக்கும்.

**(4) சுற்றுலா – மாநில அளவில் ஒரு கண்ணோட்டம்**

கடந்த சில ஆண்டுகளாக, மாநிலத்தில் சுற்றுலா ஒரு முக்கியத்துவம் பெற்ற துறையாகியுள்ளது. இவை கூடுதல் நிதி ஒதுக்கீடு, பொது மற்றும்



2005 ஏப்ரல் 11]

தனியார் துறைகளுக்கிடையே வளர்ந்து வரும் கூட்டு முயற்சிகள், சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு, நவீன விளம்பர யுக்திகள் மூலம் பிரதிபலிக்கப்படுகிறது. எனவே, சுற்றுலாவை ஒரு மக்கள் இயக்கமாக்குவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, வறுமையைப் போக்கி பொருளாதார வளர்ச்சிக்கு தூண்டுகோலாக அமைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். ஆசியாவின் வளர்ச்சிக்கோட்டில் சிறந்த இடத்தில் தமிழ்நாடு உள்ளதால், ஆசியாவின் இந்திய நுழைவு வாயிலாக தமிழ்நாடு கருதப்படுகிறது. ஒருங்கிணைந்த உலகத்தரம் வாய்ந்த கட்டமைப்பு வசதிகள் மற்றும் அடிப்படை வசதிகளை சுற்றுலாத் தலங்களில் ஏற்படுத்துவதில் எதிர்வரும் ஆண்டிலும் கவனம் செலுத்தப்படும்.

சுற்றுலா வளர்ச்சியில் தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் முதல் இடத்தை தமிழ்நாடு பெற்றுள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் ஓட்டல்கள் மற்றும் சுற்றுலாப் பயணத் திட்டங்களுக்கு அறைகள்/இருக்கைகள் கணினி மூலம் உடனுக்குடன் முன்பதிவு செய்து அதற்கான தொகையையும் செலுத்தும் வசதியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 2–7–2004 அன்று தொடங்கி வைத்தார்கள். இத்தகைய திட்டத்தை அறிமுகப்படுத்திய முதல் மாநில அரசு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், "தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்" ஆகும். பிப்ரவரி 2005 வரை, இந்த வசதியின் மூலம் கீழ்க்கண்ட இடங்களிலிருந்து 2000–க்கும் மேற்பட்ட முன்பதிவுகள் செய்யப்பட்டுள்ளன:

| அயல் நாடுகள் | இந்திய மாநிலங்கள் / யூனியன் பிரதேசம் |
|---|---|
| ஸ்பெயின் | கேரளம் |
| அமெரிக்க ஐக்கிய நாடுகள் | மகாராஷ்டிரம் |
| ஆஸ்திரேலியா | கர்நாடகம் |
| பின்லாந்து | உத்திரப் பிரதேசம் |
| நார்வே | ஆந்திரப் பிரதேசம் |
| கனடா | மேற்கு வங்காளம் |
| இத்தாலி | குஜராத் |
| ஜப்பான் | புது தில்லி |
| ஜெர்மனி | பாண்டிச்சேரி |
| நெதர்லாந்து | கோவா |

சுற்றுலா கட்டமைப்பு, மேம்பாடு மற்றும் அதற்கான திட்டமிடுதல், அதைச் செயற்படுத்துவது / சந்தைப்படுத்துவது முதலியன சுற்றுச்சூழல், சமூக, கலாச்சார மற்றும் பொருளாதார வலிமை அளிப்பதன்மேல் கவனம் செலுத்துவதாக அமையும்.

**(5) தமிழ்நாட்டில் சுற்றுலா வளம்**

தமிழ்நாடு ஒரு மகிழ்வூட்டும் மாநிலமாகத் திகழ்கிறது. இங்கு நவீன தொழில்நுட்பம் மற்றும் உடனிகழ்வான புத்துணர்ச்சி, பாரம்பரியம் மற்றும் புராதன கலைநுட்பத்துடன் இணைந்து காணப்படுகின்றன. தமிழ்நாடு ஆண்டுதோறும் சுற்றுலாப் பயணிகள் வரக்கூடிய ஒரு சுற்றுலாத் தலமாகும். மாநிலத்தில் அதிக அளவில் காணப்படும் சுற்றுலா வளத்தினைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்:

**(அ) மலைவாச ஸ்தலங்கள்**

இங்கு அழகிய மலைத் தொடர்ச்சிகள், புல்வெளிப் படுகைகள், பலவிதமான செடி, கொடிகள் முதலியன காணப்படுகின்றன. சுற்றுலா, சுற்றுச்சூழலுக்கு நண்பனாக விளங்கி வருகிறது. உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் ஏற்காடு குறிப்பிடத்தக்க மலைவாச ஸ்தலங்களாகும். மலைவாச ஸ்தலங்களில் தோட்டங்களைச் சுற்றிச்சுற்றி அமைக்கப்பட்டுள்ள சாலைகளில் செல்லுவது புத்துணர்ச்சியூட்டுவதாக அமைகிறது.

மலைகளின் அரசி என்று அழைக்கப்படும் உதகமண்டலம், தனக்கு மேலும் பெருமை சேர்க்க உள்ளது. 1899 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட உதகை "மலை இரயில்" உலகப் பாரம்பரியச் சின்னமாக அறிவிக்கப்படும் வாய்ப்பைப் பெற்றுள்ளது. இதேபோன்று உதகமண்டலத்தில் அமைந்துள்ள ரோஜா தோட்டம் அனைத்துலக ரோஜா அமைப்பினால், "சிறப்பான தோட்டம்" என்று அறிவிக்கப்படவுள்ளது.

**(ஆ) கடற்கரை வாச ஸ்தலங்கள்**—தமிழ்நாட்டில் மட்டும், 1,076 கி.மீ. நீளம் உள்ள கடற்கரைப் பகுதி உள்ளது. இது இந்தியாவிலுள்ள கடற்கரைப் பகுதி நீளத்தில் ஏழில் ஒரு பங்காகும். இந்தக் கடற்கரை, வெண்ணிற மணல் மற்றும் சூரிய ஒளிக்கதிர்கள் வீசும் அழகிய கடற்கரைப் பகுதியாகக் காட்சி அளிக்கின்றது. சென்னையில் உள்ள மெரினா கடற்கரை உலகிலேயே இரண்டாவது பெரிய கடற்கரைப் பகுதியாக உள்ளது.



**(இ) நீர் வீழ்ச்சிகள்**—மாநிலத்தில் உள்ள ஒகேனக்கல், குற்றாலம், திற்பரப்பு, கும்பக்கரை, பாபநாசம் போன்ற நீர் வீழ்ச்சிகள் கண்கொள்ளாக் காட்சியாகும். இக்காட்சிகள் வியப்பூட்டுகின்றனவாகவும் உள்ளன.

**(ஈ) வனவிலங்குச் சரணாலயங்கள்**

முதுமலை, ஆனைமலை, முண்டந்துறை, களக்காடு முதலியன முக்கியமான வனவிலங்குச் சரணாலயங்களாகும். வெப்ப / ஈரப் பதமுள்ள பச்சை நிறக்காடுகள் ஆண்டுதோறும் இலை உதிர்கின்ற முட்காடுகளாக மாறுவதை இங்கு காணலாம்.

**(உ) உயிரியல் பூங்காக்கள்**

சென்னை வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கின்றது. இங்கு பலவிதமான உயிரினங்களை அதன் இயற்கையான சூழ்நிலைகளில் காணலாம்.

**(ஊ) பறவைகள் சரணாலயங்கள்.**—இங்கு எழுப்பப்படும் பலவிதமான பறவைகளின் ஒலிகள் செவிக்கு இனிமையாக உள்ளன. முக்கியமான பறவைகள் சரணாலயங்கள் பின்வருமாறு:

| இடம் | | மாவட்டம் |
|---|---|---|
| வேடந்தாங்கல் | – | காஞ்சிபுரம் |
| பழவேற்காடு | – | திருவள்ளூர் |
| கூந்தன்குளம் | – | திருநெல்வேலி |
| கரைவெட்டி | – | பெரம்பலூர் |
| கோடியக்கரை | – | நாகப்பட்டினம் |

**(எ) தாவரவியல்/தோட்டக்கலைப் பூங்காக்கள்.**—உதகமண்டலம் மற்றும் குன்னூர் போன்ற இடங்களில் உள்ள தாவரவியல் மற்றும் தோட்டக்கலைப் பூங்காக்கள் கண்ணுக்கு விருந்தளிக்கும் வகையில் பராமரிக்கப்படுகின்றன.

**(ஏ) கோவில்கள், தேவாலயங்கள், மசூதிகள்.**—மாநிலங்களில் உள்ள கோவில்கள், தேவாலயங்கள், மசூதிகள் ஆகியவற்றில் உள்ள சிற்பங்கள் மிக நேர்த்தியாக வடிக்கப்பட்டவையாகும். இந்தச் சிற்பங்கள், மிகத் துல்லியமாகவும், வெவ்வேறு விதமாகவும் செதுக்கப்பட்டபொழுதிலும் ஒன்றோடொன்று இணைந்துள்ளதாகவே காணப்படுகின்றன. இவை

[2005 ஏப்ரல் 11

சிற்பிகளின் கலைத் திறனை வெளிப்படுத்துகின்றன. சில கோவில்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் சுமார் 1,000 ஆண்டுகளுக்குமேல் பழமையானதாகும்.

**(ஐ) பாரம்பரிய நினைவுச் சின்னங்கள்.**—மாமல்லபுரம் மற்றும் கங்கைகொண்ட சோழபுரம் ஆகிய இடங்களில் உள்ள பாரம்பரிய நினைவுச் சின்னங்கள், கலைநுட்பத்துடன் தனித்தன்மையோடு வியப்பூட்டும் வகையில் திகழ்கின்றன. கடந்த நூற்றாண்டுகளின் பொறியியல் திறனை இந்நினைவுச் சின்னங்கள் பறைசாற்றுகின்றன.

**(ஒ) சதுப்புநிலக் காடுகள் (Mangrove Forests).** —கடலூர் மாவட்டம், பிச்சாவரத்தில் உள்ள சதுப்புநிலக் காடுகள், உலகிலேயே மிகப்பெரிய சதுப்புநிலக் காடுகளில் ஒன்றாகும். திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டையிலும் சதுப்புநிலக் காடுகள் காணப்படுகின்றன. 26-12-2004 அன்று சுனாமி தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளைத் தாக்கியபொழுது சதுப்பு நிலக்காடுகள் சுனாமியின் வேகத்தை நல்ல முறையில் கட்டுப்படுத்தியது என்று நம்பப்படுகிறது.

**(ஓ) ஏரிகள்.**—கடற்கரைப் பகுதியை ஒட்டி அமைந்துள்ள பழவேற்காடு ஏரி இந்தியாவிலேயே இரண்டாவது மிகப்பெரிய ஏரியாகத் திகழ்கிறது. (முதலாவது ஒரிஸ்ஸாவில் உள்ள சிலிகா ஏரி ஆகும்)

**(6) தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலா வகைகள்**

தமிழ்நாட்டில் சுற்றுலாவினைப் பலவிதமாக வகைப்படுத்தலாம்.

**(அ) இன்பச் சுற்றுலா**

தமிழ்நாட்டிற்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளில் பெரும்பாலானோர் தங்களின் உபரி நேரத்தை உல்லாசமாகக் கழிக்க வருகிறார்கள். இவர்கள் பொதுவாக மலைவாச ஸ்தலங்கள், கடற்கரைகள், நீர் வீழ்ச்சிகள், உயிரியல் பூங்காக்கள் போன்றவற்றிற்குச் செல்கின்றார்கள்.

**(ஆ) புனிதச் சுற்றுலா**

புனிதத் தலங்களுக்குப் பெரும்பாலான சுற்றுலாப் பயணிகள் வருகை புரிகின்றனர். இவர்கள் பொதுவாக தங்கள் மதம் சார்ந்த ஆலயங்களுக்குச் செல்கின்றார்கள். சில சமயங்களில், பிற மதத்தைச் சார்ந்த வழிபாட்டுத் தலங்களுக்கும் சென்று வழிபடுவது உண்டு.



2005 ஏப்ரல் 11]

**(இ) பாரம்பரியச் சுற்றுலா**

இவ்வகைச் சுற்றுலாப் பயணிகள் வரலாற்றுச் சின்னங்களைப் பார்வையிடுவதில் மிகவும் ஆர்வம் கொண்டவர்களாகக் காணப்படுகிறார்கள்.

**(ஈ) சாகசச் சுற்றுலா**

இவ்வகைச் சுற்றுலாப் பயணிகள் மிகவும் இளைஞர்கள் ஆவார்கள். இக்குழுவினர் மலை ஏறுதல், ஆகாயம் மற்றும் நீர் விளையாட்டுகள் போன்றவற்றில் விருப்பமுள்ளவர்களாகக் காணப்படுகிறார்கள்.

**(உ) வியாபாரச் சுற்றுலா**

வியாபாரம் தொடர்பான மாநாடுகள், கருத்தரங்குகள், பொதுக் குழுக் கூட்டங்கள் முதலியவற்றில் கலந்துகொள்ள வருபவர்கள் தங்கள் பயணத்துடன் சுற்றுலாவையும் இணைத்துக்கொள்கிறார்கள்.

**(ஊ) மருத்துவச் சுற்றுலா**

தமிழ்நாட்டில் மிகச் சிறந்த மருத்துவ (அலோபதி, ஆயுர்வேதம், சித்தா, யுனானி) வசதிகள் உள்ளன. இத்துடன், தமிழ்நாட்டின் பாரம்பரிய விருந்தோம்பல் தன்மையும் இணைந்து, பிற மாநிலங்கள் / அண்டை நாடுகளிலிருந்து நோயாளிகளைக் கவர்கின்றன. சிகிச்சைக்குப்பின் பூரண சுகம் பெற்றவுடன் நோயாளிகளும் அவர்களுக்கு உறுதுணையாக வருபவர்களும் சுற்றுலாத் தலங்களுக்குச் செல்வது உண்டு.

**(எ) பொருட்காட்சி / விழாக்கள் சுற்றுலா**

பொதுவாக பொங்கல், தீபாவளி, கிறிஸ்துமஸ், ரம்சான் போன்ற பெரிய பண்டிகைகளையொட்டி சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகமாகக் காணப்படுகிறது. பொருட்காட்சிகள் (சென்னை, தீவுத்திடலில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் பொருட்காட்சி போன்றவை) அதிக அளவு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க உதவுகின்றன.

**(ஏ) சமூக விழாக்கள்**

திருமணம், புதுமனை புகுவிழா மற்றும் காதணி விழா போன்ற சுப நிகழ்ச்சிகளுக்காக நண்பர்கள் மற்றும் உறவினர்கள் வீட்டிற்குச் செல்லும் மக்கள் அந்த நிகழ்ச்சிகளுக்கு முன்போ அல்லது பின்போ சுற்றுலாத் தலங்களுக்குச் செல்லும் வழக்கத்தைக் கடைப்பிடிக்கிறார்கள்.

**(ஐ) கல்விச் சுற்றுலா**

கல்வி நிலையங்களில் பயிலும் மாணவர்கள் தங்கள் பாடத் திட்டத்தின் ஒரு பகுதியாக சுற்றுலாத் தலங்களுக்குச் செல்கிறார்கள். சென்னையிலுள்ள சுற்றுலாத் தலங்களான அரசு அருங்காட்சியகம், கோட்டை அருங்காட்சியகம், பாம்புப் பண்ணை, கோளரங்கம் முதலியவை மாணவர்களுக்குக் கல்வி புகட்டும் இடங்களாகத் திகழ்கின்றன.

சுற்றுலாத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் பூம்புகார் சுற்றுலா வளாகம், மதுரை திருமலை மன்னர் அரண்மனையில் நடைபெற்றுவரும் ஒலி-ஒளிக் காட்சி, பாஞ்சாலங்குறிச்சியில் உள்ள கட்டபொம்மன் நினைவுக் கோட்டை போன்ற சுற்றுலாத் தலங்களைக் காண வரும் மாணவர்களுக்கு நுழைவுக் கட்டணத்தில் சலுகை அளிக்கப்படுகிறது. இத்தகைய பயணங்களின்போது மாணவர்கள் கல்வியையும் சுற்றுலாவையும் இணைத்துக்கொள்கிறார்கள்.

**(7) சுற்றுலா ஆணையரகம் மற்றும் அதன்கீழ் இயங்கும் அலுவலகங்கள்**

சுற்றுலா ஆணையரகம், சுற்றுலா ஆணையர் தலைமையின்கீழ் செயல்பட்டு வருகிறது. சுற்றுலா ஆணையரகத்தில் ஒரு இணை இயக்குநர், மூன்று துணை இயக்குநர்கள், இரண்டு உதவி இயக்குநர்கள், ஒரு வெளியீட்டு அலுவலர், ஒரு கணக்கு அலுவலர் மற்றும் 200-க்கும் மேற்பட்ட அமைச்சுப் பணியாளர் பணியிடங்கள் உள்ளன. சுற்றுலா ஆணையரகத்தின்கீழ் 20 சுற்றுலா அலுவலகங்கள் (14 தமிழ்நாட்டிலும், 6 வெளி மாநிலங்களிலும்) மற்றும் 27 சுற்றுலாத் தகவல் மையங்கள் (19 தமிழ்நாட்டிலும், 8 வெளி மாநிலங்களிலும்) இயங்கி வருகின்றன. சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான தகவல் வழங்குதல், மேலும் அவர்கள் தங்கள் பயணங்களை மேற்கொள்ள உதவி செய்தல், தமிழ்நாட்டின் சுற்றுலா வளத்தை விளம்பரப்படுத்துதல் மற்றும் மாவட்ட ஆட்சியர் / பொதுப் பணித் துறை / உள்ளாட்சி அமைப்புகளுடன் சுற்றுலாத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் ஒத்துழைத்தல் போன்றவை சுற்றுலா அலுவலகங்களின் முக்கியமான பணிகளாகும்.

சுற்றுலா அலுவலகங்கள் கீழ்க்கண்ட இடங்களில் செயல்பட்டு வருகின்றன:





**தமிழ்நாட்டில் செயல்படுபவை:**

(1) சென்னை
(2) கன்னியாகுமரி
(3) உதகமண்டலம்
(4) கொடைக்கானல்
(5) மாமல்லபுரம்
(6) மதுரை
(7) இராமேசுவரம்
(8) தஞ்சாவூர்
(9) திருச்சிராப்பள்ளி
(10) திருநெல்வேலி
(11) சேலம்
(12) தருமபுரி
(13) சிதம்பரம்
(14) பூம்புகார்

**பிற மாநிலங்களில் செயல்படுபவை**

(15) புது தில்லி
(16) மும்பை
(17) கொல்கத்தா
(18) பனாஜி (கோவா)
(19) ஜெய்ப்பூர்
(20) ஆக்ரா

**சுற்றுலா ஆணையரகத்தின்கீழ் செயல்பட்டுவரும் சுற்றுலாத் தகவல் மையங்கள்**

**தமிழ்நாட்டில் செயல்படுபவை**

**விமான நிலையங்கள்**

(1) சென்னை (பன்னாட்டு விமான நிலையம்)
(2) சென்னை (உள்நாட்டு விமான நிலையம்)
(3) மதுரை
(4) கோயம்புத்தூர்
(5) திருச்சிராப்பள்ளி

**இரயில் நிலையங்கள்**

(1) சென்னை (சென்ட்ரல்)
(2) சென்னை (எழும்பூர்)
(3) மதுரை
(4) கோயம்புத்தூர்
(5) இராமேஸ்வரம்
(6) திருச்சிராப்பள்ளி
(7) திருநெல்வேலி

**பேருந்து நிலையங்கள்**

(1) புறநகர் பேருந்து நிலையம், கோயம்பேடு
(2) இராமேசுவரம்

**பிற இடங்கள்**

(1) கூடலூர் (நீலகிரி மாவட்டம்)
(2) தரங்கம்பாடி (நாகப்பட்டினம் மாவட்டம்)
(3) ஓட்டல் தமிழ்நாடு வளாகம், தஞ்சாவூர் (தஞ்சாவூர் மாவட்டம்)
(4) பாஞ்சாலங்குறிச்சி (தூத்துக்குடி மாவட்டம்)
(5) வேலூர் கோட்டை (வேலூர் மாவட்டம்)

**பிற மாநிலங்களில் செயல்படுபவை**

(1) இரயில் நிலையம், பெங்களூர்
(2) ஐதராபாத்
(3) திருவனந்தபுரம்
(4) அகமதாபாத்
(5) புவனேஷ்வர்
(6) சண்டிகர்
(7) கௌகாத்தி
(8) வாரணாசி

**(8) சுற்றுலாப் பயணிகள் வருகை**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையின்கீழ் ஜூலை 2001-ல் நடைபெற்ற சுற்றுலாத் துறையின் முதல் ஆய்வுக் கூட்டத்தில் தமிழ்நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை 7–9 சதவீதத்திலிருந்து 10–12 சதவீதமாக உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்க முடிவெடுக்கப்பட்டது. அக்கூட்டத்திற்குப் பிறகு





சுற்றுலாத் துறையின் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கூறிய இலக்கை அடையும் நோக்கத்தோடு மேற்கொள்ளப்பட்டன. இந்த முயற்சிகள் நல்ல பலனைத் தரத் தொடங்கியுள்ளன என்பதை கீழ்க்காணும் புள்ளி விவரங்கள் மூலம் அறியலாம்:

| ஆண்டு | தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்த உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | வளர்ச்சி விகிதம் | தமிழ்நாட்டிற்கு வருகை புரிந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | வளர்ச்சி விகிதம் | மொத்தம் (இலட்சத்தில்) | வளர்ச்சி விகிதம் |
|---|---|---|---|---|---|---|
| 2000 | 229.82 | 8.7 | 7.86 | 8.9 | 237.68 | 8.7 |
| 2001 | 238.12 | 3.6 | 7.73 | (–) 1.7 | 245.85 | 3.4 |
| 2002 | 246.61 | 3.6 | 8.05 | 4.1 | 254.66 | 3.6 |
| 2003 | 270.59 | 9.7 | 9.02 | 12 | 279.61 | 9.8 |
| 2004 | 300.77 | 11.2 | 10.58 | 17.3 | 311.35 | 11.4 |

மேற்கூறிய அட்டவணை மூலம் தமிழ்நாட்டிற்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதைக் காணலாம். தமிழ்நாடு 2001 ஆம் ஆண்டில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதில் மூன்றாவது இடத்தை வகித்தது. 2003 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட ஓர் ஆய்வில் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதில் தமிழகம் இரண்டாவது இடத்தை அடைந்துள்ளது. உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதில் மூன்றாவது நிலையைத் தக்கவைத்துள்ளது. 2005–2006 ஆம் ஆண்டில் இந்த முயற்சி தொடரப்படும்.

**(9) சுனாமி 2004**

26–12–2004 அன்று தமிழக கடற்கரைப் பகுதிகளைச் சுனாமி தாக்கியதால் சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்தது. பின்னர் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிக்கத் தொடங்கியது. தற்பொழுது சுற்றுலாப் பயணிகள் வருகை இயல்பு நிலைக்குத் திரும்பி வழக்கம்போல் உள்ளது. சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருகை புரியும் டிசம்பர்-ஜனவரி மாதங்களில் சுனாமி தாக்கியதால் அரசு

[2005 ஏப்ரல் 11

சுற்றுலாத் துறை மட்டுமின்றி தனியார் ஈடுபட்டுள்ள சுற்றுலாத் தொழிலிலும் கணிசமான அளவிற்கு இழப்பு ஏற்பட்டது.

சுனாமி தாக்கியவுடன் சுற்றுலாத் துறை அதன் தாக்குதலைச் சமாளிக்கும் செயல்களில் ஈடுபட்டது. இந்தியாவின் பிற பகுதிகள் / வெளிநாடுகளில் வசிக்கும் சுற்றுலாப் பயணிகளின் உற்றார் உறவினர்களுக்கு தகவல் அளிக்க ஓர் அலுவலர் நியமிக்கப்பட்டார். சுனாமிக்குப்பின் தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாப் பகுதிகளைப் பற்றி தகவல்கள் வலைதளம்மூலம் வழங்கப்பட்டது. இந்தத் தகவல்கள் முன்னேற்றத்தின் அடிப்படையில் அவ்வப்போது திருத்தப்பட்டன. இத்தகவல்கள் இந்திய அரசு சுற்றுலாத் துறையின் வலைதளம் மூலமும் வழங்கப்பட்டது.

தமிழ்நாட்டில் உள்ள முக்கியமான சுற்றுலாத் தலங்களில், சென்னை, மாமல்லபுரம், கன்னியாகுமரி, பிச்சாவரம், கடலூர், தரங்கம்பாடி மற்றும் வேளாங்கன்னி முதலிய கடற்கரை அருகில் அமைந்துள்ள சுற்றுலாத் தலங்கள் சுனாமியால் பாதிக்கப்பட்டன.

தமிழ்நாட்டின் உட்பகுதியிலுள்ள பெரிய சுற்றுலாத் தலங்களான சிதம்பரம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கங்கைகொண்டசோழபுரம், செட்டிநாடு, மதுரை, கொடைக்கானல், உதகமண்டலம் போன்றவை சுனாமியால் பாதிக்கப்படவில்லை என்ற தகவல் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்குத் தெரிவிக்கப்பட்டது.

23-12-2004 அன்று தொடங்கப்பட்ட மாமல்லபுரம் நாட்டியவிழா 26-12-2004 அன்று முதல் நிறுத்தப்பட்டது. சுற்றுலாப் பயணிகளிடமிருந்து பெற்ற வரவேற்பினாலும், வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளிடமிருந்து பெறப்பட்ட வேண்டுகோளினாலும் 7-1-2005 முதல் மீண்டும் தொடங்கப்பட்டு 30-1-2005 வரை நடைபெற்றது.

இந்தியச் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியின் தொடக்கம் சுமார் மூன்று வாரங்கள் ஒத்திவைக்கப்பட்டு 13-1-2005 அன்று தொடங்கிவைக்கப்பட்டது.

26-12-2004 அன்று கன்னியாகுமரியில் விவேகானந்தர் நினைவுப் பாறைக்கும், திருவள்ளுவர் சிலைக்கும் செல்லும் படகுவசதி நிறுத்தப்பட்டு 5-2-2005 அன்று மீண்டும் தொடங்கப்பட்டது.



2005 ஏப்ரல் 11]

**சுற்றுலாத் துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சொத்துக்களுக்கு சுனாமியால் ஏற்பட்ட சேதங்களின் மதிப்பு பின்வருமாறு:**

| வ. எண் | சுற்றுலா வசதிகள் | சேதங்களின் விவரம் | தோராய மதிப்பு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக கடற்கரை வளாகம், மாமல்லபுரம் | சேதமடைந்த குடில்கள் | 253.00 |
| 2 | படகு இல்லம், முட்டுக்காடு | படகு குழாம் சேதம் மற்றும் 13 படகுகள் காணவில்லை. | 27.50 |
| 3 | படகு இல்லம், முதலியார்குப்பம் | படகு இல்லம் சேதம் | 17.50 |
| 4 | திருவள்ளுவர் சிலை, கன்னியாகுமரி | கழிப்பறை, ஓய்வறை மற்றும் தேனீரகம் ஆகியவை சேதம் | 43.20 |
| 5 | காட்சி கோபுரம், கன்னியாகுமரி | சுற்றுச்சுவர் மற்றும் பிற வசதிகள் சேதம் | 6.30 |
| 6 | கடற்கரை வசதிகள், கன்னியாகுமரி | வட்டக்கோட்டை, முட்டம், தெக்குறிச்சி, சொத்தவிளை ஆகிய பகுதிகள் சேதம் | 55.00 |
| 7 | ஓட்டல் தமிழ்நாடு, நாகப்பட்டினம் | கட்டடங்களுக்கு ஏற்பட்ட இழப்பு | 14.00 |
| 8 | வேளாங்கன்னி | கழிப்பிடம் மற்றும் நிலச்சீரமைப்பு சேதம் | 50.00 |
| 9 | சுற்றுலா வளாகம், பூம்புகார் | குடில்கள் சேதம்<br><br>பாவை மன்றம், இலஞ்சி மன்றம், நெடுங்கல் மன்றம், அணுகுசாலை, குடில்கள், பணியாளர் விடுதி, சுவர்கள், சிலப்பதிகாரக் கலைக்கூடம் சீரமைப்புப் பணிகள் | 69.00 |
| | | மொத்தம் | 535.50 |

மேற்கூறிய சுற்றுலா வசதிகளைச் சீர்செய்யவும், புதுப்பிக்கவும் ரூ. 535.50 இலட்சம் நிதியுதவி வழங்குமாறு மைய அரசு சுற்றுலாத் துறை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல்கள், படகு குழாம் மற்றும் பிற வசதிகளிலும் கணிசமான அளவிற்கு வருவாயில் இழப்பு ஏற்பட்டது.

[2005 ஏப்ரல் 11

சுனாமியால் சுற்றுலாவிற்கு ஏற்பட்ட சேதத்தையும் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிப்பது குறித்தும் ஆலோசிப்பதற்காக 16–2–2005 அன்று ஓட்டல் அதிபர்கள், சுற்றுலா முகவர்கள், சுற்றுலாப் பயணத் திட்டம் நடத்துபவர்கள் மற்றும் சுற்றுலாத் துறையைச் சார்ந்த பலரும் பங்கேற்ற கூட்டம் ஒன்று சென்னையில் ஏற்பாடு செய்யப்பட்டது. அக்கூட்டத்தில் சுற்றுலாப் பயண எழுத்தர்களுக்கு சுற்றுலாப் பயணத் திட்டம் ஏற்பாடு செய்தல், மாநாடு சுற்றுலா, சீரிய விளம்பர முயற்சி, வெளிநாட்டில் வாழும் இந்தியர்களை ஈர்ப்பது போன்ற பல ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டன. இவை ஆராயப்பட்டு தேவையான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

சுனாமி பின்வாங்கியவுடன் மாமல்லபுரம் கடற்கரைப் பகுதியில் இதுவரைக் கண்டிராத நினைவுச் சின்னங்கள் தெரிய வந்தன. தற்போது இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறை, இந்திய கடற்படை உதவியுடன் கடற்கரைப் பகுதியிலும் கடலுக்கு உள்ளேயும் ஆராய்ச்சி நடத்தி வருகிறது. இவ்வாறு புதிதாகக் கண்டறியப்பட்ட நினைவுச் சின்னங்கள் மாமல்லபுரத்தில் ஏற்கெனவே உள்ள நினைவுச் சின்னங்களுடன் சேர்க்கப்படும்.

**(10) ஏழு அம்ச நடவடிக்கைத் திட்டம்:**

20–10–2003 அன்று சென்னையில் நடைபெற்ற 64–வது ஸ்கால் உலக மாநாடு தொடக்க விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில், சுற்றுலா வளர்ச்சிக்கான ஏழு அம்ச நடவடிக்கைத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள். இந்த ஏழு அம்ச நடவடிக்கைத் திட்டம், வருங்கால முயற்சிகளுக்கு உறுதுணையாக அமையும். இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்கள் பின்வருமாறு:

(அ) தமிழ்நாட்டில் பிரபலமாகாத சிறப்பு சுற்றுலாத் தலங்கள் சில உள்ளன. உதாரணமாக, செட்டிநாடு, பிச்சாவரம், பழவேற்காடு முதலியன. இவ்வாறு மறைந்து கிடக்கும் சுற்றுலாச் செல்வங்களை (Hidden Treasures) வெளிக் கொணருதல்.

(ஆ) சென்னை மற்றும் கோயம்புத்தூரை பன்னாட்டு மாநாடு மற்றும் பொருட்காட்சி நடத்துவதற்கு ஏதுவாக மாற்றியமைத்தல்.

(இ) அண்டை நாடுகளுடன் ஒத்துழைத்து இரண்டு சுற்றுலாத் தலங்களை ஒன்றாக இணைத்தல் மற்றும் பொதுவான சுற்றுலாச் சுற்றுச்சாலைகள் மேம்படுத்துதல்.



2005 ஏப்ரல் 11]

(ஈ) சுற்றுலாத் தலங்களுக்கு செல்லும் பாதைகளை மேம்படுத்துதல் மற்றும் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துதல்.

(உ) சுற்றுலாத் தலங்களில் கட்டமைப்பு வசதிகளில் உள்ள குறைபாடுகளைக் களைதல்.

(ஊ) மிகத் தீவிரமான விளம்பர முறையை மேற்கொள்ளுதல்.

(எ) சுற்றுலாவிற்கென விமான சேவை மற்றும் கப்பல்வழி (Cruise) பயணம் ஏற்படுத்துதல்

கடந்த ஒன்றரை ஆண்டுகளில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள அ, ஈ முதல் ஊ வரை மற்றும் எ ஆகிய அம்சங்களில் குறிப்பிடத்தக்க சாதனைகளை இத்துறை எட்டியுள்ளது. இதர அம்சங்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இந்த 7 அம்ச நடவடிக்கைத் திட்டமானது சுற்றுலாத் துறையின் எதிர்காலத் திட்டங்களுக்கு வழிகாட்டியாக அமையும்.

**கப்பல் சுற்றுலா**

கப்பல்வழி சுற்றுலாவை மேம்படுத்துதல் 7 அம்ச நடவடிக்கைத் திட்டத்தில், ஏழாவது இடத்தில் இடம்பெற்றுள்ளது. கப்பல்வழிப் பயணம் இன்று உலகம் முழுவதிலும் ஒரு மிகப் பெரிய அளவில் வளர்ந்து வரும் துறையாகும். இத்துறையின் மொத்த ஆண்டுக் கொள்முதல் 500 பில்லியன் டாலர் ஆகும். 9.6 மில்லியன் பயணிகள் உலகம் முழுவதிலும் கப்பலில் பயணம் செய்வதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

சுற்றுலாத் துறை, கப்பல்வழிச் சுற்றுலாவை ஈர்ப்பதில் அக்கறை கொண்டுள்ளது. 26–1–2005 அன்று 52 இங்கிலாந்து நாட்டு சுற்றுலாப் பயணிகள் அடங்கிய சொகுசுக் கப்பல் சென்னை துறைமுகத்திற்கு வந்தது.

இதேபோன்று சுமார் 900 வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் பிப்ரவரி 2005–ல் மற்றொரு சொகுசுக் கப்பல் மூலம் சென்னை மற்றும் தூத்துக்குடி துறைமுகங்களுக்கு வந்தனர். அவர்கள் சென்னை மாநகர், மாமல்லபுரம், காஞ்சிபுரம், மதுரை மற்றும் திருநெல்வேலி போன்ற இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். சுற்றிப்பார்க்கத் தேவையான வசதிகள் அவர்களுக்குச் செய்யப்பட்டன. அவர்களுக்குப் பாரம்பரிய முறையில் வரவேற்பு அளிக்கப்பட்டது. 28–3–2005 அன்று 650 அமெரிக்க நாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கொண்ட கப்பல் ஒன்றும் சென்னை துறைமுகத்தை அடைந்தது. இதுபோன்ற கப்பல் வழிப் பயணம் வருகின்ற ஆண்டிலும் ஊக்குவிக்கப்படும்.

[2005 ஏப்ரல் 11

**(11) "மகிழ்வூட்டும் தமிழ்நாடு – நீங்களே அனுபவியுங்கள்" விளம்பரம்**

மேற்கூறிய விளம்பரத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 2003 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நடைபெற்ற 64–வது ஸ்கால் உலக மாநாட்டில் வெளியிட்டார்கள். தமிழ்நாட்டின் சுற்றுலாவிற்கு வலுவாக அமைந்துள்ள பாரம்பரியம், வரலாறு, கலாச்சாரம், ஆன்மீகம் மற்றும் அமைதியை எடுத்துக்கூறும் வகையில் வெளியிடப்பட்ட இந்த விளம்பரக் கையேடு தமிழ்நாட்டின் விலை உயர்ந்த பலவகையான சுற்றுலாத் தலங்களை உள்ளடக்கியுள்ளது. இதில் "அனுபவம்" என்ற வார்த்தைக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவம் ஓர் ஈடு இணையற்ற தகவலாகத் திகழ்கிறது. மேலும், இது தற்கால சுற்றுலாவுடன் ஒருமித்து காணப்படுகிறது. இந்த விளம்பர யுக்தி 2004–2005 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் சுற்றுலா வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்தது. இந்த விளம்பர யுக்தி, மாபெரும் வெற்றியைத் தந்ததால், இதனை 2005–2006 ஆம் ஆண்டிலும் தீவிரமாகத் தொடர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**(12) மைய அரசு நிதி உதவித் திட்டங்கள்**

மாநிலங்களில், சுற்றுலா கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த மைய அரசின் சுற்றுலாத் துறை நிதியுதவி அளித்து வருகிறது. எட்டாவது மற்றும் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் மைய அரசின் நிதியுதவியானது நாடு முழுவதும் உள்ள சிறிய திட்டப் பணிகளுக்குச் செலவிடப்பட்டது. எனவே, மைய அரசின் நிதியுதவி நாட்டின் சுற்றுலா வளர்ச்சியில் எதிர்பார்த்த அளவிற்குத் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. ஆகையால், 10–வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (2002–2007) கீழ்க்கண்ட திட்டங்களுக்கு மட்டும் நிதியுதவி அளிக்க மைய அரசு முடிவு செய்துள்ளது:

**(அ) ஒருங்கிணைந்த கட்டமைப்பு மற்றும் சுற்றுலாத் தலம் மேம்பாட்டுத் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ், ஏற்கெனவே உள்ள சுற்றுலாத் தலங்களையும், புதிய சுற்றுலாத் தலங்களையும் உலகத் தரத்துடன் ஒப்பிடும் அளவிற்கு மேம்படுத்தப்படும். இதன்படி கட்டமைப்பு மற்றும் சுற்றுலாத் தலம் மேம்பாட்டிற்காக மைய அரசின் சுற்றுலாத் துறை மாநில அரசுகளுக்கு நிதியுதவி அளித்து வருகிறது. மைய அரசு ஒரு சுற்றுலாத் தலத்திற்கு அதிகபட்சமாக ஆண்டொன்றுக்கு ரூ.5.00 கோடி வரை நிதியுதவி அளிக்கிறது. இதன்படி 2002–2003 ஆம் ஆண்டில் மைய அரசு கீழ்க்கண்ட திட்டங்களுக்கு நிதியுதவி அளித்துள்ளது:



2005 ஏப்ரல் 11]

**(1) மாமல்லபுரத்தில் ஒருங்கிணைந்த சுற்றுலா வளர்ச்சி**

இத்திட்டத்தின் மொத்தச் செலவு தோராயமாக ரூ.10.00 கோடி ஆகும். மைய அரசின் சுற்றுலாத் துறை கீழ்க்கண்ட முதற்கட்டப் பணிகளுக்கு ரூ.5.00 கோடி ஒப்பளிப்பு செய்துள்ளது:

| | |
|---|---|
| அ) கடற்கரை கோயில் பகுதி மேம்பாடு | ரூ.2.00 கோடி |
| ஆ) ஐந்து இரதம் பகுதி மேம்பாடு | ரூ.3.00 கோடி |

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இத்திட்டத்தை காஞ்சிபுரத்தில் 8–1–2003 அன்று நடைபெற்ற விழாவில் தொடங்கி வைத்தார்கள்.

**(அ) கடற்கரை கோயில் பகுதி மேம்பாடு – திட்ட மதிப்பீடு ரூ.2.00 கோடி**

இத்திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன:

(1) 15 வணிகக் கடைகள் கட்டுதல்
(2) சுற்றுச் சுவர் கட்டுதல்
(3) கிணறு
(4) நுழைவுச் சீட்டு விற்பனைக் கூடம் கட்டுதல்
(5) வாகனம் நிறுத்துமிடம் அமைத்தல்
(6) நடைபாதை அமைத்தல்
(7) நிலச் சீரமைப்பு
(8) செடிகள் நடுதல்
(9) மின் வேலைகள்

மேற்கூறிய பணிகள் முடிவுற்றன.

**(ஆ) ஐந்து இரதம் பகுதி மேம்பாடு – திட்ட மதிப்பீடு ரூ.3.00 கோடி**

இத்திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன:

(1) சுற்றுச் சுவர் கட்டுதல்
(2) நிலச் சீரமைப்பு
(3) 101 கடைகள் கட்டுதல் (ஐந்து இரதம் பகுதிக்குச் செல்லும் வழியில் உள்ள கடைகள் இந்தப் புதிய கடைகளுக்கு மாற்றப்படும்)
(4) உணவகம்

[2005 ஏப்ரல் 11

(5) கழிப்பறை
(6) பேருந்து நிழற்குடை
(7) நுழைவுச் சீட்டு வழங்குமிடம்
(8) கூடாரம் ( KIOSK)
(9) விளம்பரப் பலகை
(10) நடைபாதை

மேற்கூறிய பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

**(2) மாமல்லபுரத்தில் ஒருங்கிணைந்த சுற்றுலா வளர்ச்சி (இரண்டாவது கட்டம்)**

இத்திட்டத்தின்கீழ் இரண்டாம் கட்ட பணிகளுக்காக ரூ.519.99 இலட்சம் மதிப்பீட்டிலான கருத்துரு மைய அரசு சுற்றுலா அமைச்சகத்திற்கு ஒப்பளிப்பு வேண்டி அனுப்பப்பட்டது. மைய அரசு சுற்றுலா அமைச்சகம், பிப்ரவரி 2005-ல் இத்திட்டத்திற்கு ரூ.432.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்து பணிகளை உடனடியாகத் துவங்க முதல் தவணையாக ரூ.345.00 இலட்சம் விடுவித்து ஆணை வெளியிட்டுள்ளது. இத்திட்டத்தின்படி கீழ்க்காணும் பணிகள் செயல்படுத்தப்படும்:

(1) அர்ச்சுனன் தபசுக்கு எதிர்புறம் உள்ள பகுதி மேம்பாடு
(2) இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறை அலுவலகம் எதிரில் உள்ள பகுதி மேம்பாடு
(3) உயர்நிலைப் பள்ளி, தொடக்கப் பள்ளி மற்றும் பாலர் பள்ளி கட்டுதல்
(4) ஐந்து ரதங்கள், கடற்கரை கோயில் அணுகு சாலை மேம்பாடு
(5) புதிய பேருந்து நிலையம் கட்டுதல்
(6) நடைபாதை விரிவாக்கம்
(7) புலிக்குகை மற்றும் அருள்மிகு ஸ்தலசயனபெருமாள் கோயில் பகுதி மற்றும் குளம் மேம்பாடு
(8) சுற்றுலா பேருந்து நிறுத்துமிடம் மேம்பாடு

**(3) ஏற்காடு மேம்பாடு**

கிழக்குத் தொடர்ச்சி மலையில் உள்ள சேர்வராயன் மலைப் பகுதியில் ஏற்காடு மலைவாசஸ்தலம் அமைந்துள்ளது. சேர்வராயன் மலை பல அழகிய காட்சி முனைகளைக் கொண்டுள்ளது. சேலத்திலிருந்து 30 கி.மீ. தொலைவில் உள்ள ஏற்காட்டில் குளிரான மற்றும் மகிழ்ச்சியான இயற்கைச் சூழ்நிலை நிலவுகிறது.



2005 ஏப்ரல் 11]

ஏற்காடு ஏரி, அண்ணா பூங்கா, லேடீஸ் சீட், பகோடா முனை, கிள்ளியூர் நீர்வீழ்ச்சி, கரடிக்குகை, மான் பூங்கா, சேர்வராயன் காவேரியம்மன் ஆலயம், ரோஜா தோட்டம், பட்டுப் பண்ணை, தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், ஏரிப் பூங்கா, சேலம் காட்சி முனை (16 மற்றும் 17-வது வளைவில்) முதலியன ஏற்காட்டில் உள்ள முக்கியமான சுற்றுலா பகுதிகளாகும்.

எனவே, கட்டமைப்பு / சுற்றுலாத் தலம் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஏற்காடு பகுதி மேம்பாட்டிற்காக ரூ.498.00 இலட்சம் மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டு மைய அரசின் ஒப்புதலுக்காக 2004-2005 ஆம் ஆண்டு அனுப்பி வைக்கப்பட்டது. மைய அரசின் சுற்றுலாத் துறை அமைச்சகம் இத்திட்டத்திற்கு ரூ.448.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்து முதல் தவணையாக ரூ.358.40 இலட்சம் வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் பணிகள் எடுத்துக் கொள்ளப்படும்:

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மொத்த மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | சுற்றுலாத்தலத்தை சுற்றியுள்ள இடங்கள் மேம்பாடு (நிலச் சீரமைப்பு, பூங்கா மேம்பாடு, வேலி, பொதுக் கழிப்பிடம், விளக்கு வசதி, ஏரியில் செடிகள் அகற்றுதல்) | 319.00 |
| 2 | ஏற்காடு ஏரி தூர் அகற்றுதல் | 100.00 |
| 3 | சுற்றுலாவுடன் நேரடி தொடர்புடைய செயல்பாடுகள் (படகு குழாம் மேம்பாடு) | 29.00 |
| | மொத்தம் | 448.00 |

மேற்கூறிய பணிகள் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 2005-2006 ஆம் ஆண்டு பணிகள் தொடங்கப்படும்.

**(ஆ) சுற்றுலா சுற்றுச் சாலைகளில் ஒருங்கிணைந்த மேம்பாடு**

ஒரே பாதையில் குறைந்தது மூன்று வெவ்வேறு சுற்றுலாத் தலங்கள் இருந்தால் அது ஒரு சுற்றுலா சுற்றுச் சாலையாகக் கருதப்படுகிறது. ஆனால், இந்த மூன்று சுற்றுலாத் தலங்களும் ஒரே கிராமம், நகரம் அல்லது மாநகரத்தில் இருத்தல் கூடாது. அதே நேரத்தில் இந்த

[2005 ஏப்ரல் 11

சுற்றுலாத் தலங்கள் ஒன்றுக்கொன்று அதிக தூரத்தில் இல்லாமல் ஒரே நேரத்தில் சுற்றுலாப் பயணிகள் பார்ப்பதற்கு ஏதுவாக அமைந்திருக்க வேண்டும். இவை எளிதில் வந்து செல்லும் பகுதியாக அமைந்திருக்க வேண்டும். ஒரு சுற்றுலாப் பயணி சுற்றுச் சாலையில் நுழைந்தவுடன் அனைத்து சுற்றுலாத் தலங்களையும் கண்டுகளிக்க தூண்டப்படும் வண்ணம் சுற்றுலா சுற்றுச் சாலை அமைய வேண்டும். இத்திட்டத்தின் முதல் குறிக்கோள் சுற்றுச் சாலையில் உள்ள சுற்றுலாத் தலங்களுக்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதும், இரண்டாவது குறிக்கோளாக சுற்றுச் சாலையில் உள்ள அனைத்துச் சுற்றுலாத் தலங்களின் சிறப்புகளைப் பிரபலப்படுத்தி சுற்றுலாப் பயணிகளுக்குத் தெரிவித்தலும் ஆகும். ஒரு சுற்றுலா சுற்றுச் சாலை ஒருங்கிணைந்த மேம்பாட்டிற்கு மைய அரசு அதிகப்படியாக ரூ.8.00 கோடி வழங்கி வருகிறது.

2003–2004 ஆம் ஆண்டு, மைய அரசு சுற்றுலா அமைச்சகம் ஆதி சங்கரர் மற்றும் விவேகானந்தர் சுற்றுலா சுற்றுச் சாலை திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் பணிகளுக்கு நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது:

**(1) ஆதி சங்கரர் சுற்றுலா சுற்றுச் சாலை மேம்பாடு (காஞ்சிபுரம்)**

இத்திட்டத்தின்கீழ் ரூ.259.40 இலட்சம் காஞ்சிபுரத்தில் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்த மைய அரசால் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இப்பணி மைய அரசின் பொதுப் பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் கைப்பிடியுடன்கூடிய மழைநீர் வடிகால் பாதைக்கு மேல் நடைபாதை அமைத்தல், உயர் கம்ப மின் விளக்கு போன்ற பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**(2) விவேகானந்தர் சுற்றுலா சுற்றுச் சாலை மேம்பாடு (இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி)**

**இராமநாதபுரம்**

சுவாமி விவேகானந்தர் அவர்கள் தனது வரலாற்றுச் சிறப்புமிக்க அமெரிக்க ஐக்கிய நாடுகள் பயணம் முடிந்த பின்னர் இராமநாதபுரத்திற்கு முதன்முதலாக வருகை புரிந்தார். சேதுபதி மன்னர், பாம்பனில் சுவாமிக்கு சிறப்பான வரவேற்பு அளித்தார். இதனைத் தொடர்ந்து விவேகானந்தர், அரசவையைப் பார்வையிட்ட பின்னர் பாம்பன், இராமேசுவரம், இராமநாதபுரம், பரமக்குடி மற்றும் இதர இடங்களில் சிறப்புரை ஆற்றினார். சுவாமி விவேகானந்தரின் வருகை அப்பகுதி மக்களின் மனதில் நீண்ட நாட்கள் நீங்காத



2005 ஏப்ரல் 11]

நினைவாக இருந்தது. எனவே, சுவாமி விவேகானந்தர் வருகை புரிந்த இடங்களை மேம்படுத்துவதற்கு ரூ.367.84 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான கருத்துரு மைய அரசு சுற்றுலா அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டது. இத்திட்டத்திற்கு மைய அரசு சுற்றுலா அமைச்சகம் ரூ.168.24 இலட்சம் ஒப்பளிப்பு செய்து பணிகள் துவங்க ரூ.54.47 இலட்சம் முதல் தவணையாக விடுவித்துள்ளது.

இத்திட்டத்தில் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:–

(அ) பாம்பனில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்

(ஆ) விவேக பாஸ்கரம் மேம்பாடு

(இ) அக்னி தீர்த்தம் மேம்பாடு

(ஈ) இராமர் பாதம் மேம்பாடு

(உ) ஜடாயு தீர்த்தம் மேம்பாடு

(ஊ) இராமேசுவரத்தில் சுற்றுலா தகவல் மையம் கட்டுதல்

(எ) உத்திரகோசமங்கையில் சிமென்ட் நடைபாதை

மேற்கண்ட பணிகள் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் நடைபெற்று வருகின்றன.

**கன்னியாகுமரி**

கன்னியாகுமரி, நாட்டின் முக்கிய சுற்றுலாத் தலமாகும். விவேகானந்தர் சுற்றுலா சுற்றுச் சாலை மேம்பாடு திட்டத்தின்கீழ் பல்வேறு வகையான திட்டங்கள் ரூ.662.48 இலட்சங்கள் மதிப்பீட்டில் மைய அரசு சுற்றுலா அமைச்சகத்தால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:

**(அ) கன்னியாகுமரி விவேகானந்தர் நினைவுப் பாறையில் வெள்ள ஒளி விளக்கு**

விவேகானந்தர் நினைவுப் பாறை கன்னியாகுமரியிலுள்ள முக்கியமான சுற்றுலாத் தலங்களில் ஒன்றாகும். எனவே, இங்கு பகலில் காண்பது போன்று இரவிலும் காண்பதற்காக வெள்ள ஒளி விளக்கு ஏற்படுத்த முடிவெடுக்கப்பட்டது. மைய அரசு ரூ.32.13 இலட்சம் ஒப்பளிப்பு செய்து முழுத் தொகையையும் மைய பொதுப் பணித் துறைக்கு பணிகளைச் செயல்படுத்த விடுவித்துள்ளது.

[2005 ஏப்ரல் 11

**(ஆ) கன்னியாகுமரியில் ஒலி–ஒளிக் காட்சி**

நீண்ட நாள் கனவை நனவாக்கும் வண்ணம் கன்னியாகுமரியில் ஒலி–ஒளிக் காட்சி ஏற்படுத்தும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மைய அரசு ரூ.225.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்து முதல் தவணையாக ரூ.202.00 இலட்சம் இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு பணிகள் துவங்க வழங்கியுள்ளது. படகுக் குழாம் பகுதியில் ஒலி–ஒளிக் காட்சி அமைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

**(இ)** சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக மைய அரசு ரூ.255.35 இலட்சம் ஒப்பளிப்பு செய்து முதல் தவணையாக ரூ.76.60 இலட்சம் வழங்கியுள்ளது. இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின்மூலம் கீழ்க்கண்ட பணிகள் நடைபெற்று வருகின்றன:

1) விவேகானந்தா கேந்திராவில் ஐந்து குடில்கள் கட்டுதல் – பணிகள் முடிவுற்றன.

2) விவேகானந்தர் நினைவுப் பாறையில் உள்ள படகுக் குழாமைப் புனரமைத்தல்

3) சூரியன் உதயம் காட்சிப் பகுதி மேம்பாடு மற்றும் படகுக் குழாமில் குளிர்பானக் கடைகள் மேம்பாடு

**ஈ)** கடற்கரைச் சுற்றுலா மேம்பாட்டிற்கு, மைய அரசு ரூ.150.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்து முதல் தவணையாக ரூ.45.00 இலட்சம் இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு வழங்கி கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள முட்டம் மற்றும் திக்குறிச்சி கடற்கரைப் பகுதிகளில் பணிகள் மேற்கொள்ளக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. பணிகள் விபரம் — முட்டத்தில் தங்கும் வசதி, சிறு கடைகள், கழிப்பிட வசதி, சிற்றுண்டியகம் மற்றும் நிலச் சீரமைப்பு, திக்குறிச்சியில் மீன் காட்சியகம், நிழற்குடை, சிறு கடைகள், கழிப்பறைகள், உடை மாற்றும் அறை, படகுத் தளம், நிலச் சீரமைப்பு முதலியன.

**3) சுற்றுச்சூழல் சுற்றுலா சுற்றுச் சாலை மேம்பாடு (கோடியக்கரை வனவிலங்கு சரணாலயம், முத்துப்பேட்டை சதுப்புநிலக் காடுகள் மற்றும் பிச்சாவரம்) 2004–2005**

சுற்றுச்சூழல் சுற்றுலா மேம்பாடு குறித்து இத்துறை 2002–ல் தயாரித்த தொலைநோக்குத் திட்டத்திலும், 2003–2004–க்கான சுற்றுலாத் துறை கொள்கை விளக்கக் குறிப்பிலும் மற்றும் பத்தாவது ஐந்தாண்டு திட்டம் (2002–2007) ஆகியவற்றிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி



2005 ஏப்ரல் 11]

சுற்றுச்சூழல் சுற்றுலா சுற்றுச் சாலை கீழ்க்காணும் இடங்களை உள்ளடக்கி அமைக்க உத்தேசிக்கப்பட்டது:

அ) கோடியக்கரை – நாகப்பட்டினம் மாவட்டம்

ஆ) முத்துப்பேட்டை – திருவாரூர் மாவட்டம்

இ) பிச்சாவரம் – கடலூர் மாவட்டம்

இதனடிப்படையில் கோடியக்கரை, முத்துப்பேட்டை, பிச்சாவரம் (பரங்கிப்பேட்டை, எம்.ஜி.ஆர். திட்டு மற்றும் சின்ன வாய்க்கால் உட்பட) மேம்படுத்த ரூ.368.00 இலட்சம் மதிப்பீட்டில் கருத்துரு மைய அரசின் சுற்றுலா அமைச்சகத்திற்கு ஒருங்கிணைந்த சுற்றுலா சுற்றுச் சாலைத் திட்டத்தின்கீழ் ஒப்பளிப்பு செய்ய அனுப்பப்பட்டது. மைய அரசு இத்திட்டத்திற்கு 2004–2005 ஆம் ஆண்டில் ஒப்பளிப்பு செய்து முதல் தவணையாக ரூ.294.40 இலட்சம் பணிகள் தொடங்க விடுவித்துள்ளது. சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள்மூலம் 2005–2006 ஆம் ஆண்டில் இப்பணிகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டப் பணிகள் விபரம் பின்வருமாறு:

**(அ) கோடியக்கரை வனவிலங்கு சரணாலயம் சுற்றுச்சூழல் மேம்பாடு – ரூ.212.00 இலட்சம்**

1) வரவேற்பு மையம் ஏற்படுத்துதல்
2) கூடாரத்திலான தங்கும் வசதி ஏற்படுத்துதல்
3) விளம்பரப் பலகைகள் நிறுவுதல்
4) வனவிலங்கு குறித்த குறும்படங்களை உள்ளூர் மொழியில் மொழி பெயர்த்தல்
5) சரணாலயத்தின் உட்பகுதியில் உள்ள சுற்றுலாப் பாதைகளை மேம்படுத்துதல்
6) இயற்கை வழித்தடம் ஏற்படுத்துதல்
7) பூநாரை இல்லம் ஓய்வு விடுதி புனரமைத்தல்
8) வன இல்லத்திற்குச் சுற்றுச் சுவர் கட்டுதல்
9) சிறுவர் பூங்கா
10) வாகனம் நிறுத்துமிடம்
11) தம்புசாமி ஓய்வு இல்லத்தில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்
12) சரணாலயத்திற்கு அணுகு சாலை ஏற்படுத்துதல்

[2005 ஏப்ரல் 11

**(ஆ) திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை சதுப்புநிலக் காடுகள் சுற்றுச்சூழல் சுற்றுலா மேம்பாடு – ரூ.51.50 இலட்சம்**

1) பார்வையாளர் மையம் ஏற்படுத்துதல்
2) படகுகள் வாங்குதல்
3) பார்வையாளர் ஓய்வுக் கூடம் கட்டுதல்
4) காட்சிக் கோபுரம் ஏற்படுத்துதல்
5) பையோ டைவர்சிடி மையம் ஏற்படுத்துதல்
6) மரப்பாலம் நடைபாதை ஏற்படுத்துதல்
7) விளம்பரம் மற்றும் விழிப்புணர்வு

**(இ) பிச்சாவரத்தில் சுற்றுச்சூழல் மேம்பாடு (பரங்கிப்பேட்டை, எம்.ஜி.ஆர். திட்டு மற்றும் சின்ன வாய்க்கால் உட்பட) – ரூ.104.50 இலட்சம்**

1) படகு தளம் அமைத்தல்
2) குடில்கள் கட்டுதல்
3) உணவகம் கட்டுதல்
4) ஓய்வறை கட்டுதல்
5) கழிப்பிடங்கள், விற்பனை மையம், குடிநீர்த் தொட்டி, இருக்கைகள் அமைத்தல்
6) வரவேற்பு மையம் கட்டுதல்
7) படகுகள் வாங்குதல்

**(ஈ) அதிக வருவாய் ஈட்டக்கூடிய திட்டங்கள்**

இத்திட்டத்தின்கீழ் மைய அரசு, சொகுசு இரயில்கள், கப்பல் போக்குவரத்து, கம்பி வழிப் பயணம் போன்ற திட்டங்களுக்குத் திட்ட மதிப்பீட்டில் 2.5 சதவீதம் மானியம் வழங்குகிறது. இத்திட்டங்களில், கம்பி வழிப் பயணம் சுற்றுலாப் பயணிகளிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. கம்பி வழிப் பயணத்தின்போது, அவ்விடத்தின் இயற்கை எழிலைச் சுற்றுலாப் பயணிகள் உயரத்திலிருந்து கண்டு களிக்கிறார்கள்.



2005 ஏப்ரல் 11]

இத்திட்டத்தின்கீழ் மைய அரசு 2003–2004 ஆம் ஆண்டு கீழ்க்காணும் திட்டங்களை ஒப்பளிப்பு செய்துள்ளது:

**மொத்த திட்ட மதிப்பீடு**

1) உதகமண்டலத்தில் கம்பி வழிப் பயணம் – ரூ.1587.00 இலட்சம்
2) கொடைக்கானலில் கம்பி வழிப் பயணம் – ரூ.1452.00 இலட்சம்

மேற்கூறிய இடங்களில் கம்பி வழிப் பயணம் விரைவில் தொடங்கப்படும்.

**(உ) கிராமியச் சுற்றுலா**

உலகம் முழுவதும் தொழில் துறையின் முன்னேற்றத்தினால் நகரப் பகுதிகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. நகர்ப்புற வாழ்க்கையில் உள்ள சிரமங்களால் கிராமியப் பகுதிகளை மக்கள் அதிகமாக விரும்புகிறார்கள். வளர்ச்சிபெற்ற நாடுகளில் கிராமியப் பகுதிகளுக்குச் சென்று அங்கு ஓய்வெடுப்பதும், சுகமாக வாழ்வதும் ஒரு புதிய சுற்றுலாவாக உருவெடுத்துள்ளது. இந்தியாவிலும், கிராமியச் சுற்றுலாவில் நாட்டம் அதிகரிக்கின்றது. ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு தனிச் சிறப்பு உண்டு. சிறப்புத் தன்மைகளான வாழ்க்கைமுறை, கலை, கலாச்சாரம், நினைவுச் சின்னம் போன்றவற்றிற்குக் கிராமியச் சுற்றுலா முக்கியத்துவம் அளிக்கும். எனவே, மைய அரசு கிராமியச் சுற்றுலா மேம்பாட்டிற்காக ஒரு பகுதிக்கு ரூ.50.00 இலட்சம் வரை ஒப்பளிப்பு செய்ய முன்வந்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்படும் திட்டங்கள் பின்வருமாறு:–

1) கிராமத்தைச் சுற்றியுள்ள பகுதி மேம்பாடு / சாலை மேம்பாடு
2) விளக்கு வசதி
3) கழிவுநீர் அகற்றல்
4) சாலையோர வசதிகள்
5) நினைவுச் சின்னங்கள் புனரமைப்பு
6) விளம்பரப் பலகைகள் முதலியன

கிராமிய சுற்றுலாத் திட்டத்தின்கீழ், சுற்றுலா வசதிகள் கிராமப்புற சுற்றுலாப் பகுதிகளில் ஏற்படுத்தப்படுகிறது. மைய அரசு கீழ்க்கண்ட கிராமிய சுற்றுலாத் திட்டங்களுக்கு இதுவரை ஒப்பளிப்பு செய்துள்ளது:

[2005 ஏப்ரல் 11

**கழுகுமலை**

தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள கழுகுமலை மேம்பாட்டிற்காக 2003–2004 ஆம் ஆண்டு ரூ.48.68 இலட்சம் கிராமிய சுற்றுலாத் திட்டத்தின்கீழ் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இது தவிர, 2004–2005 ஆம் ஆண்டில் கழுகுமலை மேம்பாட்டிற்கு (மென் திட்டங்கள் – Software components) ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.20.00 இலட்சம் ஒப்பளித்துள்ளது.

**செட்டிநாடு**

சிவகங்கை மாவட்டத்திலுள்ள செட்டிநாடு மேம்பாட்டிற்காக 2003–2004 ஆம் ஆண்டு ரூ.50.00 இலட்சம் கிராமிய சுற்றுலாத் திட்டத்தின்கீழ் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இது தவிர, செட்டிநாடு மேம்பாட்டிற்கு (மென் திட்டங்கள் – Software components) ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.20.00 இலட்சம் ஒப்பளித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் தவிர, சுயஉதவிக் குழுக்கள் செயல்பாடு, கலாச்சாரப் பணிகளுக்குத் திறன் மேம்பாடு போன்ற பணிகள் எடுத்துக் கொள்ளப்படும்.

**தீர்த்தமலை**

தருமபுரி மாவட்டத்திலுள்ள தீர்த்தமலை மேம்பாட்டிற்காக 2003–2004 ஆம் ஆண்டு ரூ.50.00 இலட்சம் கிராமிய சுற்றுலாத் திட்டத்தின்கீழ் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய பணிகள் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**13) மைய அரசு சுற்றுலா அமைச்சகத்திற்குக் கருத்துரு அனுப்பப்பட்டு ஆணை எதிர்பார்க்கப்படும் திட்டங்கள் விபரம்:**

**அ) சுற்றுலா சுற்றுச் சாலை ஒருங்கிணைந்த மேம்பாடு**

**1) சமண சமயத் தலங்கள் சுற்றுலா சுற்றுச் சாலை மேம்பாடு**

சமண மதம், அகிம்சை, சத்தியம் மற்றும் பிரம்மசரியம் ஆகிய கொள்கை கனவுகளின் அடிப்படை கோட்பாடாகக் கொண்டுள்ளது. தமிழ்நாட்டில், திகம்பர சமணர்கள், பாரம்பரிய கலை, புகழ்பெற்ற நினைவுச் சின்னங்களிலும், சிறந்த வழிபாட்டுத் தலங்களிலும் வெளிப்படுகிறார்கள். தமிழ்நாட்டில் பல இடங்களில் 550 சமண கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. சமண மதம் 2,000 ஆண்டுகள் வரலாற்றுச் சிறப்புமிக்கது. சோழர்கள் காலத்திற்குப் பின்னர்



2005 ஏப்ரல் 11]

விஜயநகரப் பேரரசர்கள் ஆட்சிக் காலத்தில் வளர்ச்சியடைந்த சமண சமயம், 16 ஆம் நூற்றாண்டிலிருந்து வட தமிழ்நாட்டிலும் புத்துயிர் பெற்றது. சமண மதத் தலைவர்கள், தமிழ்க் கலாச்சாரத்தைப் பேணுவதில் பெரும் பங்கு வகித்து மக்களின் மனம் மற்றும் வாழ்க்கையில் நீங்காத இடத்தை ஏற்படுத்தியுள்ளனர். மொழி, இலக்கியம், கட்டடக் கலை, கல்வி, மருந்தியல், சமூக சேவை ஆகியவற்றில் சமணர்களின் பங்கு மிகவும் போற்றத்தக்கது. இங்குள்ள நினைவுச் சின்னங்கள், வழிபாட்டுத் தலங்கள், சிற்பங்கள், ஓவியங்கள் பண்டைய சமண சமயக் கலாச்சாரத்தை எடுத்துக்காட்டுகின்றன. தமிழ்நாட்டில் ஏழு மாவட்டங்களில் 50–க்கும் மேற்பட்ட சமண சமய வழிபாட்டுத் தலங்கள் உள்ளன.

ஒருங்கிணைந்த சமண சமயச் சுற்றுலா சுற்றுச் சாலைத் திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் சமண சமயச் சுற்றுலா சுற்றுச் சாலை மேம்படுத்த ரூ.192.00 இலட்சம் செலவில் கருத்துரு மைய அரசு சுற்றுலா அமைச்சகத்திற்கு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது:

| வ.எண் | சமண சமய புனிதத் தலம் | மாவட்டம் |
|---|---|---|
| 1 | திருமலை | திருவண்ணாமலை |
| 2 | முத்துப்பட்டி | மதுரை |
| 3 | மேட்டுப்பட்டி | மதுரை |
| 4 | சித்தன்னவாசல் | புதுக்கோட்டை |
| 5 | மேல்சித்தாமூர் | விழுப்புரம் |
| 6 | திருநாதர்குன்று | விழுப்புரம் |
| 7 | திருநறுங்கொண்டை | விழுப்புரம் |
| 8 | சிதறால் | கன்னியாகுமரி |
| 9 | வள்ளிமலை | வேலூர் |
| 10 | திருப்பருத்திகுன்றம் | காஞ்சிபுரம் |

**2) ஆதி சங்கரர் சுற்றுலா சுற்றுச் சாலை மேம்பாடு**

ஒருங்கிணைந்த ஆதி சங்கரர் சுற்றுலா சுற்றுச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஆதி சங்கரர் சுற்றுலா சுற்றுச் சாலை மாங்காடு, திருவொற்றியூர், சிதம்பரம், மயிலாடுதுறை, கும்பகோணம், சுவாமி மலை,

திருவானைக்காவல், திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை மற்றும் திருச்செந்தூர் உட்பட) மேம்பாட்டிற்கு ரூ.450.70 இலட்சம் மதிப்பீட்டில் மைய அரசு சுற்றுலா அமைச்சகத்திற்கு நிதி ஒப்பளிப்பு கோரி கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

**ஆ) கிராமியச் சுற்றுலா**

கிராமியச் சுற்றுலாத் திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் இடங்களை மேம்படுத்த நிதி ஒப்பளிப்பு கோரி மைய அரசுக்குக் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது:

**1) தேவிப்பட்டினம் – இராமநாதபுரம் மாவட்டம்**

மாவட்டத் தலைநகரான இராமநாதபுரத்திற்கு அருகில் தேவிப்பட்டினம் அமைந்துள்ளது. சமஸ்கிருதத்தில் தேவி என்பது இறைவியையும், பட்டினம் என்பது நகரத்தையும் குறிப்பிடப்பட்டுள்ளதால். இவ்விடம் தேவிப்பட்டினம் என்று அழைக்கப்படுகிறது. மகிஷாசுரன் என்ற அரக்கனைக் கொன்ற மகிஷாசுரமர்த்தினியின் பழைய கோயில் இங்குள்ளது. இக்கோயிலில் உள்ள இறைவி லோகநாயகி அல்லது தேவி என்ற பெயராலும் அழைக்கப்படுகிறது. எனவே, இறைவியின் பெயராலேயே இக்கிராமமும் அழைக்கப்படுகிறது. சமஸ்கிருதத்தில் நவபாஷாணம் என்று அழைக்கப்படும் இவ்விடம் ஒன்பது கிரகங்கள் அல்லது ஒன்பது கோள்களின் பிரதிபலிப்பாக ஒன்பது கற்கள் கடலில் நிறுத்தப்பட்டுள்ளன. தென்னிந்தியாவின் புனித நீராடும் இடங்களில் ஒன்றாக இவ்விடம் அமைந்துள்ளது. ஸ்ரீ ராமர், இலங்கைக்குச் செல்லும் வழியில் இவ்விடத்தில் இந்த ஒன்பது கற்களை, ஒன்பது கோள்களாக நிறுவி வழிபட்டதாகக் கூறப்படுகிறது. அதிகமான சுற்றுலாப் பயணிகள் மற்றும் யாத்ரிகர்கள் இந்த இடத்திற்கு வருகை புரிகின்றனர். எனவே, கிராமியச் சுற்றுலா மேம்பாடுத் திட்டத்தின்கீழ் தேவிப்பட்டினம் மேம்பாட்டிற்கு ரூ.75.60 இலட்சம் ஒப்பளிப்பு வேண்டி மைய அரசு சுற்றுலா அமைச்சகத்திற்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

**2) திருக்குறுங்குடி – திருநெல்வேலி மாவட்டம்**

தமிழ்நாட்டிலுள்ள முக்கிய நகரமான திருநெல்வேலியிலிருந்து 40 கி.மீ. தொலைவில் திருக்குறுங்குடி புனித தலம் உள்ளது. இது 108 வைணவத் தலங்களில் ஒன்றாகும். இக்கோயில் ஏழாம் நூற்றாண்டைச்



சார்ந்தது. இக்கோயிலிலுள்ள மட்டையாடி மண்டபம், ரதி மண்டபம் மற்றும் சிற்ப மண்டபம் ஆகியவற்றில் ஆளுயர சிற்பங்கள் (20 முதல் 25 வரை) செதுக்கப்பட்டுள்ளது. ரதி மண்டபத்திலுள்ள நாட்டிய மங்கை சிலையும், சிற்ப மண்டபத்திலுள்ள குறவன் ராஜகுமாரியைக் கடத்திச் செல்லும் சிலையும், சிற்பத்தின் சிறப்புத் தன்மையைக் காட்டுகிறது. இவை மிகவும் கலை நயத்துடன் வடிக்கப்பட்டுள்ளன. மேலும், திருக்குறுங்குடி இயற்கைச் சூழலுடன் அமைந்துள்ளது. ஆகையால் திருக்குறுங்குடியை மேம்படுத்துவதற்கு மைய அரசு சுற்றுலா அமைச்சகத்திற்கு நிதி ஒப்பளிப்பு கோரி கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

**இ) ஒலி–ஒளிக் காட்சி அமைத்தல்**

**1) மாமல்லபுரத்தில் ஒலி–ஒளிக் காட்சி**

மாமல்லபுரம் தமிழ்நாட்டில் உள்ள பாரம்பரிய நினைவுச் சின்னமாகும். மைய அரசு ஒருங்கிணைந்த மாமல்லபுரம் சுற்றுலா வளர்ச்சித் திட்டத்தை 2002 ஆம் ஆண்டு முதல் தோராயமாக ரூ.19.00 கோடி செலவில் மேற்கொண்டுள்ளது. மாமல்லபுரத்திற்கு 2004 ஆம் ஆண்டில் பத்து இலட்சத்திற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை புரிந்துள்ளனர். எனவே, மாமல்லபுரத்திற்கு ஒலி–ஒளிக் காட்சி தேவையான ஒன்று. இதனை நினைவில் கொண்டு மைய அரசு சுற்றுலா அமைச்சகத்திற்கு ரூ.235.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்யக் கோரி கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

**2) தஞ்சாவூரில் ஒலி–ஒளிக் காட்சி**

இது தமிழ்நாட்டில் உள்ள உலகப் பாரம்பரிய நினைவுச் சின்னங்களில் ஒன்றாகும். சோழர்களின் தலைநகராக விளங்கியது. இங்குள்ள பிரகதீஸ்வரர் கோயில் முதலாம் இராஜராஜ சோழனால் கட்டப்பட்டது. இக்கோயிலின் விமானம் 64.8 மீ. உயரத்தில் 14 அடுக்குகளுடன் பிரமிடு வடிவில் உள்ளது. அதற்கு மேல் 81.3 டன் எடை கொண்ட கிரானைட் ஒரே கல்லில் செதுக்கப்பட்ட கும்மட்டம் உள்ளது. ஏறக்குறைய 4,000 சுற்றுலாப் பயணிகள் / யாத்ரிகர்கள் தினமும் இக்கோயிலுக்கு வருகை தருகின்றனர். ஆகையால் சோழர்கள் வரலாறு மற்றும் கலைத் திறனை விளக்கும் ஒலி–ஒளிக் காட்சி அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ.150.00 இலட்சம் நிதி உதவி கோரி மைய அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

[2005 ஏப்ரல் 11

சப்தவிடங்கள் ஸ்தலம் சுற்றுலா சுற்றுச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் இடம்பெறும் இடங்கள்:

1) நாகப்பட்டினம் (திருநாகைகோரணம்) நாகப்பட்டினம் மாவட்டம்

2) திருவாய்மூர் (நாகப்பட்டினம் மாவட்டம்)

3) திருமறைக்காடு (வேதாரண்யம், நாகப்பட்டினம் மாவட்டம்)

4) திருவாரூர் (திருவாரூர் மாவட்டம்)

5) திருக்காராயில் (திருவாரூர் மாவட்டம்)

6) திருக்குவளை (திருவாரூர் மாவட்டம்)

7) திருநள்ளார் (புதுச்சேரி யூனியன் பிரதேசம்)

இந்தச் சுற்றுலா சுற்றுச் சாலையில் (தமிழ்நாட்டில் உள்ள) உள்ள இடங்களை மேம்படுத்துவதற்குக் கருத்துரு மைய அரசுக்கு அனுப்பி வைக்கப்படும்.

**3) சோழநாட்டுத் திருப்பதிகள் சுற்றுலா சுற்றுச் சாலை மேம்பாடு:**

வைணவ திவ்ய ஸ்தலங்கள் மொத்தம் 108. இந்த 108 திவ்ய தேசங்கள் நமது நாட்டில் புனிதமான வழிபாட்டுத் தலங்களாகும். ஆழ்வார்கள் பாமாலைகளில் இவை பெரிதும் போற்றப்பட்டுள்ளன. இந்தத் தேசங்கள் வெல்ல முடியாத அரண்களாகக் கருதப்படுகின்றன. இந்த 108 தேசங்களில், 82 தமிழ்நாட்டில் உள்ளன. 82 தேசங்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன:

1) சோழநாட்டுத் திருப்பதிகள் (நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்கள் – 40 இடங்கள்)

2) பாண்டிய நாட்டுத் திருப்பதிகள் (நவத் திருப்பதிகள் உட்பட புதுக்கோட்டை, இராமேசுவரம், மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் விருதுநகர் – 18 இடங்கள்)

3) தொண்டைநாட்டுத் திருப்பதிகள் (காஞ்சிபுரம் – 22 இடங்கள்)

4) நடுநாட்டுத் திருப்பதிகள் (கடலூர் மாவட்டம் – 2 இடங்கள்)



2005 ஏப்ரல் 11]

2003–2004 ஆம் ஆண்டு, பாண்டியநாட்டுத் திருப்பதிகளில் ஒரு பகுதியான நவ திருப்பதிகள் கோவில் பகுதிகளை மேம்படுத்த சுற்றுலாத் துறை மற்றும் நகர் மற்றும் ஊரமைப்புத் துறையின்மூலம் ரூ.98.75 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது. பாண்டிய நாட்டுத் திருப்பதிகளில் அடங்கியுள்ள திருமயம் (புதுக்கோட்டை மாவட்டம்) மற்றும் திருக்குறுங்குடியை (திருநெல்வேலி மாவட்டம்) மேம்படுத்த ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே, சோழநாட்டுத் திருப்பதிகள் பகுதிகளை மைய அரசு சுற்றுலா அமைச்சக நிதி உதவியுடன் மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சோழநாட்டுத் திருப்பதிகளில் உள்ள 40 இடங்களில் 23 இடங்களுக்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலா பயணத் திட்டம் நடத்தி வருகிறது. இந்த இடங்கள் நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் உள்ளன. முதற்கட்டமாக கீழ்க்கண்ட இடங்கள் மேம்படுத்தப்படும்:

| வ.எண் | இடம் | மாவட்டம் |
|---|---|---|
| (1) | சீர்காழி | நாகப்பட்டினம் |
| (2) | திருநகரி | நாகப்பட்டினம் |
| (3) | திருக்கண்ணபுரம் | நாகப்பட்டினம் |
| (4) | திருக்கண்ணமங்கை | திருவாரூர் |
| (5) | திருச்சேரை | தஞ்சாவூர் |
| (6) | திருநரையூர் (நாச்சியார்கோயில்) | தஞ்சாவூர் |
| (7) | திருக்கண்டியூர் | தஞ்சாவூர் |
| (8) | திருக்கடம்பூர் (உத்தமர்கோயில்) | திருச்சிராப்பள்ளி |
| (9) | திருவெல்லாரை | திருச்சிராப்பள்ளி |
| (10) | திருக்கோழி (உறையூர்) | திருச்சிராப்பள்ளி |

மேற்கூறிய சுற்றுலா சுற்றுச் சாலையை மேம்படுத்த மைய அரசுக்குக் கருத்துரு அனுப்பி வைக்கப்படும்.

[2005 ஏப்ரல் 11

**14) 2005–2006 ஆம் ஆண்டில் மைய அரசு நிதி உதவியுடன் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்கள்**

**அ) கட்டமைப்பு மற்றும் சுற்றுலாத் தலம் மேம்பாடு.**

**திருவண்ணாமலை:**

திருவண்ணாமலை, அருள்மிகு அருணாசலேசுவரர் ஆலயம் பிரசித்தி பெற்றதாகும். இந்தக் கோயிலில், சுவாமி, லிங்கோத்பவர் அல்லது ஜோதிர் லிங்கமாக காட்சியளிக்கிறார். அதாவது, கடவுள் நெருப்பாக உருவெடுத்தது. வெளியிலுள்ள உயர்ந்த கோபுரங்கள் பிரம்மாண்டமாகவும், கண்ணியத்துடனும், அழகுக் கலை உள்ளதாக காட்சியளிக்கிறது. இக்கோயில் கட்டுமானத்தில் சோழர்கள், விஜயநகரப் பேரரசர்கள், ஒய்சாலர்கள் மற்றும் தஞ்சாவூர் நாயக்கர்கள் பங்கு பெற்றனர். இக்கோயிலிலுள்ள அழகான ஆயிரம் கால் மண்டபம் மறைபுதிரான சிற்பங்களைக் கொண்டுள்ளது. நவம்பர்–டிசம்பர் மாதத்தில் நடைபெறும் கார்த்திகை தீபம் விழாவின்போது மலையின் உச்சியில் பெரிய தீபம் ஏற்றப்படுகிறது. அவ்வமயம் பக்தர்கள் கோயிலிலும், கோயிலின் அருகிலுள்ள மலையைச் சுற்றிலும் திரளாகக் கூடி வழிபடுகின்றனர். பௌர்ணமி தினத்தில் அதிகமான சுற்றுலாப் பயணிகள் கிரிவலம் (மலையைச் சுற்றி வருதல்) செல்ல இத்தலத்திற்கு வருகை தருகின்றனர். தமிழ்நாடு அரசால் திருவண்ணாமலை பாரம்பரியமிக்க மையமாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகையால் கட்டமைப்பு மற்றும் சுற்றுலாத்தல மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் திருவண்ணாமலையை ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பொருள் தொடர்பாக தேவையான கருத்துரு மைய அரசுக்கு அனுப்பப்படும்.

**ஆ) ஒருங்கிணைந்த சுற்றுலா சுற்றுச் சாலை மேம்பாடு:**

**1) அறுபடை வீடு சுற்றுலா சுற்றுச் சாலை மேம்பாடு:**

அதிக அளவில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் அறுபடை வீடு தலங்களுக்கு வருகை புரிகின்றனர். ஆகையால், அறுபடை வீடு, சுற்றுலா சுற்றுச் சாலை திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் இடங்களை மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது:

1) பழனி

2) திருப்பரங்குன்றம்



2005 ஏப்ரல் 11]

3) திருச்செந்தூர்

4) சுவாமி மலை

5) சோலை மலை மண்டபம் (பழமுதிர்ச் சோலை)

6) திருத்தணி

இதற்கான கருத்துரு தயாரிக்கப்பட்டு மைய அரசுக்கு அனுப்பி வைக்கப்படும்.

**2) சப்தவிடங்கள் ஸ்தலம் சுற்றுலா சுற்றுச் சாலை மேம்பாடு:**

புராணங்களின்படி இந்திரன், வேலன் என்ற கொடியவனால் பல இன்னல்களைச் சந்திக்க நேரிட்டது. எப்பொழுதும் சண்டையிடும் அந்தக் கொடியவனிடமிருந்து விடுதலைபெற இந்திரன், சோழ நாட்டு அரசன் முசுகுந்தனை அணுகினார். முசுகுந்தன் சிவனின் தொண்டர் ஆவார். முசுகுந்தன் அரசர் உடனே அசுரனை வீழ்த்த இந்திரனுக்கு உதவி செய்தார். இந்திரன் மிகவும் மகிழ்ச்சி அடைந்து, முசுகுந்த மன்னனுக்குப் பரிசளிக்க விரும்பி, என்ன பரிசு வேண்டும் என்றார். சிவனின் பெரிய பக்தனாக விளங்கிய முசுகுந்த மன்னர், இந்திரன் வழிபட்டு வந்த சோமாஸ்கந்த மூர்த்தியைத் தரும்படி கேட்டார் (சோமாஸ்கந்தர் மூர்த்தி விஷ்ணுவினால் இந்திரனுக்கு வழங்கப்பட்டவர்) இந்திரன் தான் பெரிதும் விரும்பிய பொருளைத் தருவதில் தயக்கம் காட்டினார். எனவே, இதேபோன்று 6 சிலைகளைச் செய்து அதனுடன் உண்மையான சிலையையும் வைத்து, அவற்றிலிருந்து மூலச் சிலையைத் தேர்ந்தெடுக்கும்படி கூறினார். அரசர் சிறிது நேரம் சிவனை நோக்கி தியானம் செய்த பின்னர் உண்மையான சிலையைக் கண்டுபிடித்தார். எனவே, இந்திரன் மிகவும் மகிழ்ச்சி அடைந்து சோமாஸ்கந்த மூர்த்தியின் ஏழு சிலைகளையும் அரசனுக்கு வழங்கினார். அரசர் மூலச் சிலையைத் தன்னுடைய தலைநகரமான திருவாரூரிலும், மீதமுள்ள 6 சிலைகளை தமிழ்நாட்டில் உள்ள 6 வெவ்வேறு இடங்களிலும் நிறுவினார். இந்த ஏழு இடங்களும் புனிதத் தலங்கள் அல்லது சப்தவிடங்கள் ஸ்தலங்கள் என்று அழைக்கப்படுகின்றன. ஏனென்றால் இந்த ஏழு சிலைகளும் செதுக்கப்படவில்லை. மாறாக அவை சொர்க்கத்திலிருந்து வரப்பட்டவையாகும். இந்த ஏழு சிற்பங்களும் விடங்கள் என்று அழைக்கப்படுகின்றன. புராணங்களின்படி ஒரு நபர் தன்னுடைய வாழ்நாளில் இந்த ஏழு ஸ்தலங்களுக்கும் சென்று வழிபட வேண்டும்.

[2005 ஏப்ரல் 11

சப்தவிடங்கள் ஸ்தலம் சுற்றுலா சுற்றுச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் இடம்பெறும் இடங்கள்:

1) நாகப்பட்டினம் (திருநாகைகோரணம்) நாகப்பட்டினம் மாவட்டம்

2) திருவாய்மூர் (நாகப்பட்டினம் மாவட்டம்)

3) திருமறைக்காடு (வேதாரண்யம், நாகப்பட்டினம் மாவட்டம்)

4) திருவாரூர் (திருவாரூர் மாவட்டம்)

5) திருக்காராயில் (திருவாரூர் மாவட்டம்)

6) திருக்குவளை (திருவாரூர் மாவட்டம்)

7) திருநள்ளாார் (புதுச்சேரி யூனியன் பிரதேசம்)

இந்தச் சுற்றுலா சுற்றுச் சாலையில் (தமிழ்நாட்டில் உள்ள) உள்ள இடங்களை மேம்படுத்துவதற்குக் கருத்துரு மைய அரசுக்கு அனுப்பி வைக்கப்படும்.

**3) சோழநாட்டுத் திருப்பதிகள் சுற்றுலா சுற்றுச் சாலை மேம்பாடு:**

வைணவ திவ்ய ஸ்தலங்கள் மொத்தம் 108. இந்த 108 திவ்ய தேசங்கள் நமது நாட்டில் புனிதமான வழிபாட்டுத் தலங்களாகும். ஆழ்வார்கள் பாமாலைகளில் இவை பெரிதும் போற்றப்பட்டுள்ளன. இந்தத் தேசங்கள் வெல்ல முடியாத அரண்களாகக் கருதப்படுகின்றன. இந்த 108 தேசங்களில், 82 தமிழ்நாட்டில் உள்ளன. 82 தேசங்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன:

1) சோழநாட்டுத் திருப்பதிகள் (நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்கள் – 40 இடங்கள்)

2) பாண்டிய நாட்டுத் திருப்பதிகள் (நவத் திருப்பதிகள் உட்பட புதுக்கோட்டை, இராமேசுவரம், மதுரை, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் விருதுநகர் – 18 இடங்கள்)

3) தொண்டைநாட்டுத் திருப்பதிகள் (காஞ்சிபுரம் – 22 இடங்கள்)

4) நடுநாட்டுத் திருப்பதிகள் (கடலூர் மாவட்டம் – 2 இடங்கள்)



2005 ஏப்ரல் 11]

2003–2004 ஆம் ஆண்டு, பாண்டியநாட்டுத் திருப்பதிகளில் ஒரு பகுதியான நவ திருப்பதிகள் கோவில் பகுதிகளை மேம்படுத்த சுற்றுலாத் துறை மற்றும் நகர் மற்றும் ஊரமைப்புத் துறையின்மூலம் ரூ.98.75 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது. பாண்டிய நாட்டுத் திருப்பதிகளில் அடங்கியுள்ள திருமயம் (புதுக்கோட்டை மாவட்டம்) மற்றும் திருக்குறுங்குடியை (திருநெல்வேலி மாவட்டம்) மேம்படுத்த ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே, சோழநாட்டுத் திருப்பதிகள் பகுதிகளை மைய அரசு சுற்றுலா அமைச்சக நிதி உதவியுடன் மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சோழநாட்டுத் திருப்பதிகளில் உள்ள 40 இடங்களில் 23 இடங்களுக்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலா பயணத் திட்டம் நடத்தி வருகிறது. இந்த இடங்கள் நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் உள்ளன. முதற்கட்டமாக கீழ்க்கண்ட இடங்கள் மேம்படுத்தப்படும்:

| வ.எண் | இடம் | மாவட்டம் |
|---|---|---|
| (1) | சீர்காழி | நாகப்பட்டினம் |
| (2) | திருநகரி | நாகப்பட்டினம் |
| (3) | திருக்கண்ணபுரம் | நாகப்பட்டினம் |
| (4) | திருக்கண்ணமங்கை | திருவாரூர் |
| (5) | திருச்சேரை | தஞ்சாவூர் |
| (6) | திருநரையூர் (நாச்சியார்கோயில்) | தஞ்சாவூர் |
| (7) | திருக்கண்டியூர் | தஞ்சாவூர் |
| (8) | திருக்கடம்பூர் (உத்தமர்கோயில்) | திருச்சிராப்பள்ளி |
| (9) | திருவெல்லாரை | திருச்சிராப்பள்ளி |
| (10) | திருக்கோழி (உறையூர்) | திருச்சிராப்பள்ளி |

மேற்கூறிய சுற்றுலா சுற்றுச் சாலையை மேம்படுத்த மைய அரசுக்குக் கருத்துரு அனுப்பி வைக்கப்படும்.

[2005 ஏப்ரல் 11

**4) சுதந்திரப் போராட்ட சுற்றுலா சுற்றுச் சாலை மேம்பாடு:**

வரவிருக்கின்ற 60–வது இந்திய சுதந்திர தினவிழாக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக தமிழகத்தில் சுதந்திரப் போராட்டம் தொடர்புடைய இடங்களைக் கண்டறிந்து, 2005–2006 ஆம் ஆண்டில் மைய அரசு நிதி உதவியுடன், அவ்விடங்களில் தேவையான கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும். இது தொடர்பான கருத்துரு தயார் செய்து மைய அரசுக்கு அனுப்பப்படும்.

**இ) அதிக வருவாய் ஈட்டக்கூடிய திட்டங்கள்:**

**கன்னியாகுமரியில் கம்பி வழிப் பயணம்:**

கொடைக்கானலிலும், உதகமண்டலத்திலும் கம்பி வழிப் பயணம் ஏற்படுத்த மைய அரசு ஏற்கெனவே 2003–2004 ஆம் ஆண்டு நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது. இதுபோன்று கன்னியாகுமரியில் கம்பி வழிப் பயணம் ஏற்படுத்த நிதி உதவி கோரி மைய அரசுக்குக் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.1700.00 இலட்சமாகும்.

**ஈ) கிராமிய சுற்றுலா திட்டங்கள்**

2005–2006 ஆம் ஆண்டு கீழ்க்கண்ட இடங்களை மத்திய அரசு நிதி உதவியுடன் கிராமிய சுற்றுலாத் திட்டத்தின்கீழ் மேம்படுத்த கருத்துருக்கள் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது:

**1) தரங்கம்பாடி:**

தரங்கம்பாடி, நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க நகரமாகும். டேனிஷ் மக்கள் கி.பி. 1620 ஆம் ஆண்டு இங்கு வந்தனர். அவர்கள் காலத்தில் கட்டப்பட்ட நினைவுச் சின்னங்களான டேனிஷ் கோட்டை, சீயோன் ஆலயம், ஆளுநர் மாளிகை முதலியன இன்னும் உள்ளன. 2005–2006 ஆம் ஆண்டு தரங்கம்பாடியை கிராமியச் சுற்றுலாத் திட்டத்தின்கீழ் மைய அரசு நிதி உதவியுடன் மேம்படுத்த கருத்துரு அனுப்பப்படும்.

**2) ஸ்ரீவாஞ்சியம்:**

திருவாரூர் மாவட்டத்தில் உள்ள ஸ்ரீவாஞ்சியம், காசியைப் போன்று புனிதமானது. புராணங்களின்படி சிவன், பார்வதியிடம் தான் இந்த இடத்தை மிகவும் விரும்புவதாகக் கூறியுள்ளார். தஞ்சாவூர் மாவட்டத்தில் (முன்னதாக இருந்த எல்லைக்குள்) ஸ்ரீவாஞ்சியம் ஆலயம் மிகப் பெரியதாகும். இது 588 அடி நீளம், 324 அடி அகலம்,



2005 ஏப்ரல் 11]

3 கோபுரங்கள், 3 விமானங்கள், 5 அடுக்கு கொண்ட இராஜகோபுரம் (200 அடி உயரம்), 3 பிரகாரங்கள் கொண்டதாகும். இந்த ஆலயத்தின் தனிச் சிறப்பு, இராகு–கேது ஒரே சிற்பத்தில் செதுக்கப்பட்டுள்ளன. கும்பகோணம் அருகே உள்ள திருநாகேஸ்வரத்தைப் போன்று மூர்த்திகள் மீது ஊற்றப்பட்ட பால் இங்கேயும் (ஸ்ரீவாஞ்சியத்தில்) நீலமாக மாறுகிறது. புராணங்களின்படி புனித குளமான குப்த கங்காவில் புனித நீராடுவது வாரணாசி, இராமேசுவரம் மற்றும் கும்பகோணத்தில் உள்ள மகாமகம் குளங்களில் நீராடுவதற்குச் சமமாகும்.

**15) மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்:**

2004–2005 ஆம் ஆண்டு மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் உதகமண்டலம் படகு இல்லம், டி.ஆர். பஜாரில் புதிய படகுக் குழாம் கட்டுதல் மற்றும் நீலகிரி மாவட்டத்திலுள்ள பிற சுற்றுலாத் தலங்கள் மேம்பாட்டிற்காக ரூ. 72.50 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

2005–2006 ஆம் ஆண்டு, உதகமண்டலம் மற்றும் பைகாராவில் படகுக் குழாம் பகுதி, தொட்டபெட்டா தொலைநோக்குக் கருவி, முதுமலை இளைஞர் விடுதி மற்றும் நீலகிரியில் அதிக பிரபலமாகாத சுற்றுலாத் தலமான சந்தனமலை முதலியன ரூ.64.50 இலட்சம் செலவில் மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**16) மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்:**

2004–2005 ஆம் ஆண்டு மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கொடைக்கானல் படகுக் குழாம் மேம்பாடு, புதிய படகுகள் கொள்முதல் செய்தல் மற்றும் கொடைக்கானலில் உள்ள இளைஞர் விடுதி புதுப்பித்தல் போன்ற பணிகளுக்காக ரூ.45.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

2005–2006 ஆம் ஆண்டு ரூ.35.00 இலட்சம் செலவில் கொடைக்கானலில் சுற்றுலாத் தகவல் மையம் மற்றும் திற்பரப்பு நீர்வீழ்ச்சி (கன்னியாகுமரி மாவட்டம்) மேம்பாடு முதலிய பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**17) கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்:**

2005–2006 ஆம் ஆண்டில் கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் திண்டுக்கல் மாவட்டம் சிறுமலை மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் பச்சமலை ஆகியவற்றை மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2005 ஏப்ரல் 11

**18) கடற்கரைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்:**

2005–2006 ஆம் ஆண்டில் கடற்கரைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் இடங்கள் மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளன:

| வ.எண் | இடம் | மாவட்டம் |
|---|---|---|
| 1) | நாகப்பட்டினம் கடற்கரைப் பகுதி | நாகப்பட்டினம் |
| 2) | வேளாங்கண்ணி கடற்கரைப் பகுதி | நாகப்பட்டினம் |
| 3) | வெள்ளி கடற்கரைப் பகுதி | கடலூர் |
| 4) | மனோரா | தஞ்சாவூர் |

**19) மாநில அரசு நிதி உதவித் திட்டங்கள்:**

**அ) சுற்றுலா மேம்பாட்டிற்காக மாநில அரசின் கூடுதல் நிதி ஒதுக்கீடு:**

சுற்றுலா மேம்பாட்டிற்கு அரசு அதிக கவனத்தைச் செலுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் சுற்றுலாத் தொழிலில் ஏற்பட்டுள்ள பெரிய மாற்றத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறப்புப் பங்காற்றியுள்ளார்கள். பதவியேற்றவுடன் 13–7–2001 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுற்றுலாத் துறையின் செயல்பாடுகளை ஆய்வு செய்தார்கள். அச்சமயம் தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக்குத் தேவையான நடவடிக்கைகள் எடுப்பது குறித்து அறிவுரை வழங்கினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறிய அறிவுரைகளைச் செயல்படுத்த (அதாவது கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் மற்றும் விளம்பரப் பணிகள் மேற்கொள்ள) அதிக நிதி தேவைப்பட்டது. தமிழக அரசு தற்பொழுது முன் எப்போதும் இல்லாத அளவிற்கு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் சுற்றுலாத் துறைக்கு நிதி ஒதுக்கி வருகிறது. 2001–2002 முதல் 2004–2005 வரை ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி விவரம் பின்வருமாறு:—

| வருடம் | நிதி ஒதுக்கீடு (ரூ. கோடியில்) |
|---|---|
| 2001–2002 | 17.47 |
| 2002–2003 | 32.64 |
| 2003–2004 | 26.79 |
| 2004–2005 | 30.35 |



2005 ஏப்ரல் 11]

**ஆ) அறிவிப்புகள், 2004–2005 (பகுதி–II திட்டங்கள்):**

2004–2005 ஆம் ஆண்டுக்கான சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கை விவாத நேரத்தில் சட்டமன்றப் பேரவையில் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் விவரம் பின்வருமாறு:—

| வ. எண் | அறிவிப்புகள் | மொத்தத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | 4 சுற்றுலா அலுவலகங்களுக்கும் (ஒரு அலுவலகத்திற்கு ஒன்று வீதம்) சுற்றுலா ஆணையர் அலுவலகத்திற்கு (2) கணினி கொள்முதல் செய்தல் | 5.00 |
| 2. | 5 சுற்றுலாத் தகவல் மையங்களுக்கு தொடர் செலவினம் | 7.56 |
| 3. | செட்டிநாடு பாரம்பரிய சுற்றுச்சாலை மேம்பாடு | 60.00 |
| 4. | பூம்புகார் சுற்றுலா வளாகத்தில் மனமகிழ் பூங்கா, நிலச்சீரமைப்பு மற்றும் புனரமைப்பு | 30.00 |
| 5. | சுற்றுலா அலுவலகம் மற்றும் சுற்றுலாத் தகவல் மையம் புனரமைப்பு | 20.00 |
| 6. | பழவேற்காட்டில் கட்டமைப்பு மேம்பாடு | 30.00 |
| | மொத்தம் | 152.56 |

மேற்கூறிய பணிகள் வெவ்வேறு நிலையில் உள்ளன.

**இ) சுற்றுலாத் தலங்களில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல்:**

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சுற்றுலாத் தலங்களிலும் கட்டமைப்பு வசதிகளைப் படிப்படியாக மேம்படுத்துவதிலும்/உருவாக்குவதிலும் சுற்றுலாத் துறை அதிக முக்கியத்துவம் செலுத்தி வருகிறது. இப்பணி 2001–2002 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அச்சமயம் 15 மாவட்டங்களில் உள்ள 27 சுற்றுலாத் தலங்களில் கட்டமைப்பு வசதிகள் (குடிநீர், கழிப்பறை, சிற்றுண்டிச் சாலை, மின் விளக்கு வசதி, அணுகுச் சாலை, பொருட்கள் பாதுகாப்பு அறை, வாகனம் நிறுத்துமிடம், விளம்பரப் பலகை முதலியன) செய்ய ரூ.5 கோடி செலவிடப்பட்டது.

[2005 ஏப்ரல் 11

இதேபோன்று தமிழக அரசு ஒவ்வோர் ஆண்டும் கட்டமைப்பு வசதி ஏற்படுத்த நிதி வழங்கி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மேலும் பல சுற்றுலாத் தலங்கள் (குறிப்பாக அதிகப் பிரபலமாகாதவை) மேம்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாவட்ட நிர்வாகத்தின் பங்காக சட்டமன்றப் பேரவை / பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி போன்ற நிதிகளிலிருந்து திட்டத்திற்கான செலவில் 50 சதவீதத்தை ஏற்றுக் கொள்கிறார்கள். 2003–2004 ஆம் ஆண்டு 8 மாவட்டங்களில் உள்ள 10 சுற்றுலாத் தலங்களில் கட்டமைப்பு வசதிகள் செய்ய நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது. 2004–2005 ஆம் ஆண்டு எடுத்துக்கொள்ளப்பட்ட திட்டங்கள் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | மாவட்டம் | திட்டம் | திட்ட மதிப்பீடு | மாவட்ட நிர்வாகத்தின் பங்கு | சுற்றுலாத் துறையின் பங்கு |
|---|---|---|---|---|---|
| | | | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1 | கோயம்புத்தூர் | கோவை குற்றாலம் மற்றும் வெள்ளியங்கிரி கோவில் மேம்பாடு. (கழிப்பறை வசதி, உடைமாற்றும் அறை, நடைபாதை அமைத்தல் சாலை மேம்பாடு, நீர்வீழ்ச்சிக்கு அருகில் பாதுகாப்பு வளையம், கைப்பிடி குழாய் அமைத்தல்.) | 135.42 | 67.71 | 67.71 |
| 2 | தூத்துக்குடி | நவதிருப்பதி ஆலயங்களில் மேம்பாடு (முதல்கட்டம்) (ஸ்ரீவைகுண்டம், நத்தம், திருபுளியங்குடி, இரட்டை திருப்பதி) (கழிப்பறை வசதி, சாலை வசதி, குடிநீர் வசதி) | 48.75 | 24.38 | 24.37 |



2005 ஏப்ரல் 11]

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | திருநெல்வேலி | பூதத்தான் குடியிருப்பில் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல். (ஓய்வு கூடம், சாலை வசதி, சிறுவர் பூங்கா, தெரு விளக்குகள், குடிநீர் தொட்டி, குடிநீர் வசதி) | 22.00 | 11.00 | 11.00 |
| 4 | திருநெல்வேலி | கூந்தன்குளம் பறவைகள் சரணாலயம் மேம்பாடு (ஓய்வு இல்லம், காட்சிகோபுரம், குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான கழிப்பறை வசதி, சிறுவர்கள் விளையாட்டு பூங்கா, குடிநீர் வசதி, சாலை வசதி) | 40.00 | 20.62 | 19.38 |
| 5 | திருநெல்வேலி | கூனியூரில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் (சாலை வசதி, கழிப்பறை, சிறுவர் பூங்கா, மின் வசதி, குடிநீர் வசதி) | 27.01 | 13.51 | 13.50 |
| 6 | திருநெல்வேலி | குற்றாலம் மேம்பாடு (உடை மாற்றும் அறை, வாகனம் நிறுத்துமிடம், கழிப்பறை வசதி, மின்வசதி, விளம்பர வசதி) | 82.00 | 41.00 | 41.00 |
| 7 | நாமக்கல் | அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயிலில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் (கழிப் பறை, சாலை வசதி) | 99.40 | 50.00 | 49.40 |
| 8 | தஞ்சாவூர் | கலைக்கூடம் மற்றும் சரஸ்வதி மகாலில் மின்வசதி ஏற்படுத்துதல் | 3.00 | 2.25 | 0.75 |
| 9 | கன்னியாகுமரி | மனக்குடியில் அடிப்படை வசதிகள் மேற் கொள்ளுதல் (படகு இல்லம் அமைத்தல்) | 18.00 | 9.00 | 9.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10 | கிருஷ்ணகிரி | முகமது கவுஸ் ஏரி மேம்பாடு – காட்சி கோபுரம் மற்றும் தொலைநோக்கு கருவி | 77.00 | 38.50 | 38.50 |
| 11 | கோயம்புத்தூர் | திருமூர்த்திமலைப் பகுதியில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் (திருமூர்த்தி கோயிலில் இருந்து பஞ்சலிங்கம் செல்லும் நடைபாதை சரிசெய்தல், படிகட்டு வசதி) | 8.45 | 4.225 | 4.225 |
| 12 | ஈரோடு | அருள்மிகு கொடுமுடி மகுடேஸ்வரர் திருக் கோயிலில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் (ஓய்வுக்கூடம், தெருவிளக்குகள், குடிநீர்ப் வசதி, சாலை வசதி) | 35.00 | 17.50 | 17.50 |
| 13 | தூத்துக்குடி | காயல்பட்டினம் கடற்கரைப்பகுதியில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் (குடிநீர் வசதி, கழிப்பறை, மின்வசதி) | 30.00 | 15.00 | 15.00 |
| 14 | நாகப்பட்டினம் | நாகப்பட்டினம் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள திமிங்கலத்தின் எலும்பு கூட்டினை ஒருங் கிணைப்பு செய்தல் | 1.40 | 0.70 | 0.70 |
| 15 | நீலகிரி | கூடலூரில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் | 85.00 | 42.50 | 42.50 |
| 16 | புதுக்கோட்டை | ஆவுடையார்கோவில் மற்றும் குடுமியான் மலையில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல் | 40.410 | 20.205 | 20.205 |





**ஈ) புனிதச் சுற்றுலா:**

தமிழ்நாட்டில் உள்ள வழிபாட்டுத் தலங்கள் அதாவது ஆலயங்கள், மாதா கோவில்கள், மசூதிகள் இந்தியாவில் பிற பகுதிகளில் மட்டுமின்றி, உலகத்தின் பிற பகுதிகளிலிருந்தும் பக்தர்களை ஈர்க்கின்றன. ஏறக்குறைய அனைத்து பக்தர்களும் வழிபாட்டுத் தலங்களுக்குச் சென்ற பின்னர் சுற்றுலாப் பயணிகளாக மாறி விடுகின்றார்கள். எனவே, சுற்றுலாவை மேம்படுத்த உபயோகப்படுத்துவதற்கு புனிதத் தலங்கள் ஒரு நல்ல சந்தைப் பொருளாக விளங்குகின்றன. புனிதத் தலங்களில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தால், அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் இந்த இடங்களுக்கு வருவார்கள். இதை மனதிற்கொண்டு, தமிழ்நாடு அரசு சுற்றுலாத் துறை கீழ்க்கண்ட புனிதத் தலங்களில் 2004–2005 ஆம் ஆண்டு அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன:

| வ. எண் | கோயில் | மாவட்டம் | திட்ட மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | வெள்ளியங்கிரி | கோயம்புத்தூர் | 75.00 |
| 2. | நவதிருப்பதிகள் | தூத்துக்குடி | 98.75 |
| 3. | அர்த்தநாரீஸ்வரர் | நாமக்கல் | 99.40 |
| 4. | கொடுமுடி மகுடேஸ்வரர் | ஈரோடு | 35.00 |

இந்த முயற்சிகள் 2005–2006 ஆம் ஆண்டிலும் தொடரும். இதன்மூலம் மேலும் பல வழிபாட்டுத் தலங்கள் மேம்படுத்தப்படும்.

**உ) சுற்றுச்சூழல் சுற்றுலா:**

சுற்றுச்சூழல் சுற்றுலா என்பது இயற்கையை அடிப்படையாகக் கொண்டதாகும். இது, சுற்றுலா பொழுதுபோக்கு போன்ற அம்சங்களை உடையதாகும். மிக வேகமான தொழில் வளர்ச்சி மற்றும் நகர்ப்புற வாழ்க்கையில் உள்ள அழுத்தம் காரணமாக சுற்றுலாப் பயணிகள் தற்பொழுது சுற்றுச்சூழல் சுற்றுலாவில் அதிக அக்கறை காட்டுகிறார்கள். சுற்றுலாத் துறை இந்தச் சூழ்நிலையை நன்கு பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறது. சுற்றுச்சூழல் சுற்றுலா மேம்பாடு, சுற்றுச்சூழலை எந்த விதத்திலும் பாதிப்பு ஏற்படுத்தாமலிருப்பதற்குத் தேவையான முயற்சிகள் எடுக்கப்படும்.

[2005 ஏப்ரல் 11

2004–2005 ஆம் ஆண்டு கீழ்க்கண்ட சுற்றுச்சூழல் சுற்றுலாத் தலங்களில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன:

| வ. எண் | இடம் | மாவட்டம் | திட்ட மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | கோவை குற்றாலம் | கோயம்புத்தூர் | 60.42 |
| 2. | குற்றாலம் | திருநெல்வேலி | 82.00 |
| 3. | திருமூர்த்திமலை | கோயம்புத்தூர் | 8.45 |
| 4. | கூடலூர் | நீலகிரி | 85.00 |

2005–2006 ஆம் ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஒகேனக்கல் மற்றும் வேலூர் மாவட்டத்தில் உள்ள ஏலகிரி மலை சுற்றுச்சூழல் சுற்றுலாத் திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்படும்.

**ஊ) கடற்கரைச் சுற்றுலா:**

தமிழ்நாட்டில் உள்ள கடற்கரைகள் சுற்றுலாப் பயணிகளுக்கும் உள்ளூர் மக்களுக்கும் பொழுபோக்கு வசதியை அளிக்கின்றன. எனவே கடற்கரைகள் ஆண்டு முழுவதும் மக்கள் கூட்டத்தினால் நிறைந்து காணப்படுகின்றன. பொது விடுமுறைகளிலும் மற்றும் நீண்ட விடுமுறைக் காலங்களிலும் மக்கள் கூட்டம் அலைமோதுவதைக் காணலாம். எனவே, கடற்கரைப் பகுதியில் அடிப்படை வசதிகள் செய்வது சுற்றுலாத் துறையின் கடமையாகிறது. 2004–2005 ஆம் ஆண்டு கீழ்க்கண்ட கடற்கரைப் பகுதிகள் மாநில அரசு நிதி உதவியுடன் மேம்படுத்தப்பட்டன:

ரூ. இலட்சத்தில்

| | |
|---|---|
| 1) காயல்பட்டினம், தூத்துக்குடி மாவட்டம் | 30.00 |
| 2) கடற்கரையையொட்டி அமைந்துள்ள பூம்புகார் சுற்றுலா வளாகம் (நாகப்பட்டினம் மாவட்டம்) | 30.00 |
| 3) பழவேற்காட்டில் (திருவள்ளூர் மாவட்டத்தில் கடல் அருகில் அமைந்துள்ள பகுதி) கட்டமைப்பு வசதிகள் | 30.00 |
| 4) திருமுல்லைவாசல் (நாகப்பட்டினம் மாவட்டம்) | 7.45 |



2005 ஏப்ரல் 11]

**20) வரலாற்று / பாரம்பரியச் சிறப்பு கொண்ட நினைவுச் சின்னங்கள்:**

தமிழ்நாட்டில் உள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க நினைவுச் சின்னங்கள் விவரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| மத்திய தொல்பொருள் ஆய்வுத்துறையின் கட்டுப்பாட்டில் தமிழ்நாட்டில் உள்ள நினைவுச் சின்னங்கள் எண்ணிக்கை | 241 |
| தமிழக அரசின் தொல்பொருள் ஆய்வுத்துறையின் கட்டுப்பாட்டில் தமிழ்நாட்டில் உள்ள நினைவுச் சின்னங்கள் எண்ணிக்கை | 88 |

மேற்கூறிய நினைவுச் சின்னங்களுக்கு அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் வருகை புரிவதால் அங்கே சுற்றுலாத் துறை அடிப்படை வசதிகள் செய்து தருகிறது. இந்தப் பணிகள் மைய / மாநில அரசு முகமை உதவியுடன் மேற்கொள்ளப்படுகின்றன. 2004–2005 ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள கலைக்கூடம் மற்றும் சரஸ்வதி மகாலில் ரூ. 3.00 இலட்சம் செலவில் அடிப்படை வசதிகள் செய்யப்பட்டன. இத்தகைய முயற்சிகள் 2005–2006 ஆம் ஆண்டிலும் தொடரும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் ஆணைப்படி நகர மற்றும் ஊரமைப்புத் துறையின் உதவியுடன் பாரம்பரிய நகரங்களைப் பாதுகாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கீழ்க்கண்ட நகரங்கள் 1993 மற்றும் 1994 ஆம் ஆண்டுகளில் பாரம்பரிய நகரங்களாக அறிவிக்கப்பட்டன:

| | | | |
|---|---|---|---|
| 1) காஞ்சிபுரம் | 11) மதுரை | 21) நாகூர் | 31) மருதூர் |
| 2) சிதம்பரம் | 12) பழனி | 22) வேளாங்கன்னி | 32) குறிஞ்சிப்பாடி |
| 3) இராமேசுவரம் | 13) திருச்செந்தூர் | 23) குற்றாலம் | 33) திருமயம் |
| 4) ஸ்ரீரங்கம் | 14) திருத்தணி | 24) ஸ்ரீபெரும்புதூர் | 34) சித்தன்னவாசல் |
| 5) மாமல்லபுரம் | 15) கன்னியாகுமரி | 25) திருநெல்வேலி | 35) ஆவுடையார் கோவில் |
| 6) திருவில்லிப்புத்தூர் | 16) திருவண்ணாமலை | 26) திருச்செங்கோடு | 36) பத்மநாபபுரம் |
| 7) தஞ்சாவூர் | 17) செஞ்சி | 27) காரைக்குடி | 37) கொளச்சல் |
| 8) கும்பகோணம் | 18) செட்டிநாடு | 28) பேரூர் | 38) மரக்காணம் |
| 9) கங்கைகொண்ட சோழபுரம் | 19) வாலிநோக்கம் | 29) பவானி | |
| 10) பூம்புகார் | 20) தரங்கம்பாடி | 30) பிச்சாவரம் | |

[2005 ஏப்ரல் 11

*2004–2005* ஆம் ஆண்டு, கீழ்க்கண்ட பாரம்பரிய நகரங்கள் நகர் மற்றும் ஊரமைப்புத் துறையின் மூலம் மேம்பாட்டிற்காக எடுத்துக் கொள்ளப்பட்டன:

| | ரூ. இலட்சத்தில் |
|---|---|
| ஸ்ரீரங்கம் | 50.00 |
| திருவில்லிப்புத்தூர் | 50.00 |
| பிச்சாவரம் | 50.00 |
| பவானி | 50.00 |
| ஆவுடையார்கோயில் | 25.00 |
| தூத்துக்குடி மாவட்டத்தில் 9 நவத்திருப்பதி ஆலயங்களுக்கு உட்பட்ட 5 வைஷ்ணவ ஆலயங்கள் | 50.00 |
| விருத்தாசலம் அருகே ஸ்ரீமுட்டம், பரிக்கல் மற்றும் திருக்கோவிலூர் (விழுப்புரம் மாவட்டம்). | 50.00 |
| மானாமதுரை அருகே உள்ள இடைக்காட்டூர் | 25.00 |
| சேதுக்கரை | 25.00 |
| மொத்தம் | 375.00 |

மேற்கூறிய நகரங்கள் தவிர பாரம்பரிய நகரங்களான செட்டிநாடு (ரூ.60.00 இலட்சம்) மற்றும் பழவேற்காடு (ரூ.30.00 இலட்சம்) சுற்றுலாத் துறை நிதியிலிருந்து 2004-2005 ஆம் ஆண்டில் மேம்படுத்தப்பட்டன.

**தரங்கம்பாடி:**

இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க நகரம் நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டத்தில் உள்ளது. இது சென்னையிலிருந்து 296 கி.மீ தொலைவில் கிழக்குக் கடற்கரைச் சாலையில் அமைந்துள்ளது. 1620 ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாகாணம் விஜய இரகுநாத நாயக்கர் அவர்கள் ஆட்சியின்கீழ் இருந்தது. அவர், கிறிஸ்டியன்–IV என்ற டென்மார்க் அரசருக்கு தரங்கம்பாடியில் வணிக மையம் அமைக்க 5-5-1620 அன்று அனுமதி வழங்கினார். அந்த நாள் முதல் இந்தியாவில் டென்மார்க் நாட்டினர் வந்தமரத் தொடங்கினார்கள். அதற்குப் பின்னர் தரங்கம்பாடியில் பல கட்டடங்கள் கட்டப்பட்டன.



2005 ஏப்ரல் 11]

**ஆளுநர் மாளிகை:**

இம்மாளிகை 1784 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. கலை மற்றும் கலாச்சாரப் பாரம்பரியத்திற்கான இந்திய தேசிய அமைப்பு, சென்னை–6, ஆளுநர் மாளிகை பாதுகாப்பு குறித்து ஓர் அறிக்கை தயாரிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த அறிக்கையானது ஆளுநர் மாளிகையைப் புதுப்பிக்கவும் சுற்றுலா மேம்பாட்டிற்குப் பயன்படுத்தவும் ஆலோசனை வழங்கும். அதே சமயத்தில், இந்த அறிக்கையானது வரலாற்றுச் சிறப்புகொண்ட மாளிகையை எதிர்காலத்தில் எவ்வாறு பாதுகாத்துப் பராமரிக்கப்பட வேண்டும் என்பதையும் எடுத்துரைக்கும்.

**21) கலாச்சார விழாக்கள் மற்றும் பொருட்காட்சிகள்:**

பழமையும், செழிப்பும் மிக்க கலாச்சாரமும், பண்பாடும் தமிழ்நாட்டின் சிறப்பு அம்சங்களாகும். இதில், இசை, நடனம் மற்றும் நாடகம் பல நூற்றாண்டுகளாக தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கையின் ஓர் அங்கமாக விளங்குகிறது. காலங்கள் பல சென்றாலும் தனக்கே உரிய பெருமையை இழக்காமல் உள்ள பரதநாட்டியத்தினைக் காணும் வாய்ப்பினை எந்த ஒரு சுற்றுலாப் பயணியும் விட்டுக்கொடுக்க முன்வரமாட்டார் என்பது அனுபவ உண்மையாகும். எனவே, தமிழக பண்பாட்டுச் சுற்றுலாவை வளர்க்கும் வகையில் சில விழாக்கள் ஆண்டுதோறும் நடத்தப்படுகின்றன. இந்த நிகழ்ச்சியையொட்டி சுற்றுலாப் பயணத் திட்டங்களை ஏற்பாடு செய்வதற்கு ஏதுவாக இந்த நிகழ்ச்சிகள் குறித்து இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் முன்னதாகவே நல்ல விளம்பரம் செய்யப்படுகிறது.

**அ) பருவகால விழாக்கள்:**

ஆண்டுதோறும் மே மற்றும் ஜூன் மாதங்களில் கோடை விழாக்கள் உதகமண்டலம், கொடைக்கானல், சுருளி அருவி, ஏலகிரி, கொல்லி மலை, ஏற்காடு, நாகப்பட்டினம் கடற்கரை, வால்பாறை, ஜவ்வாது மலை மற்றும் வெள்ளிகடற்கரை (கடலூர்) ஆகிய இடங்களில் நடத்தப்பட்டு வருகின்றன.

முதல் விடுதலைப் போராட்ட வீரர் வீரபாண்டிய கட்டபொம்மனின் நினைவாக பாஞ்சாலங்குறிச்சியில் ஆண்டுதோறும் மே மாதத்தில் சிறப்பு விழா ஒன்றும் நடத்தப்பட்டு வருகிறது.

[2005 ஏப்ரல் 11

குற்றாலத்தில் சுற்றுலாப் பயணிகளை மகிழ்விக்க சாரல் விழா நடத்தப்பட்டு வருகிறது.

**ஆ) தேசிய கலாச்சார விழா, கன்னியாகுமரி:**

கன்னியாகுமரி, நாட்டின் முக்கியமான ஒரு சுற்றுலாத் தலமாகும். விவேகானந்தர் நினைவுப் பாறை, சூரிய உதயம் / அஸ்தமனம், திருவள்ளுவர் சிலை, காந்தி மண்டபம் முதலியவை கன்னியாகுமரியில் உள்ள முக்கியமான சுற்றுலாத் தலங்களாகும். 2004 ஆம் ஆண்டு சுமார் பதினெட்டு இலட்சம் சுற்றுலாப் பயணிகள் கன்னியாகுமரிக்கு வருகை புரிந்தனர். கன்னியாகுமரியை தேசிய மற்றும் சர்வதேச அளவில் பிரசித்தப்படுத்துவதற்காக தேசிய கலாச்சார விழா நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான அறிவிப்பை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 2004 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சென்னையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் வெளியிட்டார்கள். தமிழக அரசு இவ்விழாவிற்காக ரூ.5.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்துள்ளது.

**இ) செட்டிநாடு பாரம்பரிய கருத்தரங்கு மற்றும் விழா:**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 2003 ஆம் ஆண்டு தமிழகத்தில் சுற்றுலா வளர்ச்சிக்காக வெளியிட்ட 7 அம்ச நடவடிக்கைத் திட்டத்தின் முதல் திட்டம் செட்டிநாடு போன்ற அதிக பிரபலமாகாத சுற்றுலாத் தலங்களை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. முறையே, சுற்றுலாத் துறை செட்டிநாடு பகுதியை உலக அளவில் பிரபலப்படுத்த பல நடவடிக்கைகள் எடுத்துள்ளது. இதனை மனதிற்கொண்டு காரைக்குடியில் மார்ச் 2005–ல் 3 மற்றும் 4 ஆம் நாள் பாரம்பரிய மற்றும் கருத்தரங்கு விழா நடைபெற்றது. இந்த விழாவில் செட்டிநாடு பாரம்பரிய பகுதிகள் குறித்து ஒலி–ஒளிக் காட்சிகள், கலை நிகழ்ச்சிகள், கருத்தரங்கு முதலியன இடம்பெற்றன. முன்னணியில் உள்ள இந்தியா மற்றும் வெளிநாட்டுப் பயண முகவர்கள், சுற்றுலாப் பயணத் திட்டம் நடத்துபவர்கள், ஓட்டல் அதிபர்கள், பயண எழுத்தர்கள் ஆகியோர் பிரதிநிதிகளாகக் கலந்துகொண்டனர்.

**ஈ) தேசிய புனித விழா, இராமேசுவரம்:**

இராமேசுவரம் நாட்டின் முக்கியமான ஒரு புனிதத் தலமாகும். இராமநாதசுவாமி ஆலயம், புனித நீராடுமிடம், கந்தமதன பர்வதம், கோதண்டராமர் ஆலயம், குருசடைத் தீவுகள் போன்றவை இராமேசுவரத்தில் குறிப்பிடத்தக்க சுற்றுலாத் தலமாகும். 2004 ஆம்



2005 ஏப்ரல் 11]

ஆண்டு இராமேசுவரத்திற்கு பதினெட்டு இலட்சத்திற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை புரிந்தனர். இராமேசுவரத்திற்கு அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளை, குறிப்பாக பக்தர்களை ஈர்ப்பதற்காக இராமேசுவரத்தில் தேசிய புனித விழா நடத்தி அதன் மூலம் இராமேசுவரத்திற்கு அதிக விளம்பரம் அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக மாநில அரசு ரூ.5.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த விழாவில் இராமேசுவரம் மற்றும் தமிழ்நாட்டின் பல சுற்றுலாத் தலங்கள் ஒலி–ஒளிக் காட்சி, கலை விழாக்கள், கருத்தரங்கு, பொருட்காட்சி ஆகியவை இடம்பெறும்.

**நாட்டிய விழா:**

| | | இடம் | | நடைபெறும் மாதம் |
|---|---|---|---|---|
| 1) நாட்டிய விழா | – | மாமல்லபுரம் | – | டிசம்பர் / சனவரி |
| 2) நாட்டியாஞ்சலி விழா | – | சிதம்பரம் | – | பிப்ரவரி / மார்ச் |

**அறுவடைத் திருவிழாக்கள்:**

| | | | | |
|---|---|---|---|---|
| 1) பொங்கல் விழா | – | தமிழ்நாட்டிலுள்ள அனைத்துச் சுற்றுலாத் தலங்களில் | – | சனவரி |
| 2) தேயிலை (ம) சுற்றுலா விழா | – | உதகமண்டலம் / குன்னூர் | – | சனவரி |
| 3) மாங்கனி விழா | – | கிருஷ்ணகிரி | – | ஜூன் |

**22) பொருட்காட்சி மற்றும் கண்காட்சிகள்:**

1) உலகச் சுற்றுலா தின விழா – அனைத்துச் சுற்றுலா அலுவலகங்கள் மற்றும் சுற்றுலாத் தகவல் மையங்கள் (வெளி மாநிலங்களில் இயங்குபவை உட்பட) –செப்டம்பர்

2) இந்தியச் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி – தீவுத் திடல், சென்னை– டிசம்பர் முதல் மார்ச் வரை

3) சேலம், கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் செய்தி மக்கள் தொடர்புத் துறை நடத்தும் பொருட்காட்சிகளில் இத்துறை கலந்துகொண்டு சுற்றுலா பற்றிய தகவல்களை அளிக்கிறது.

[2005 ஏப்ரல் 11

**இவை தவிர கீழ்க்கண்ட இடங்களில் நடத்தப்படும் சிறப்பு விழாக்களில் சுற்றுலாத் துறை கலந்து கொள்கிறது:**

| வ. எண் | விழா | இடம் | மாதம் |
|---|---|---|---|
| 1. | சந்தனக்கூடு விழா | ஏர்வாடி | மார்ச் |
| 2. | சித்திரை முழு நிலவு விழா | பூம்புகார் மற்றும் மதுரை | ஏப்ரல்/மே |
| 3. | தேர்த் திருவிழா | திருவாரூர் | மே |
| 4. | சித்திரை விசு விழா | திருநெல்வேலி | மே |
| 5. | ஆடிப்பூரம் | மேல்மருவத்தூர் | ஜூலை |
| 6. | ஆடிப்பெருக்கு | பவானிகூடுதுறை மற்றும் ஒகேனக்கல் | ஜூலை/ஆகஸ்ட் |
| 7. | வேளாங்கன்னி மாதா திருவிழா | வேளாங்கன்னி | ஆகஸ்ட்/செப்டம்பர் |
| 8. | கந்தூரி விழா | நாகூர் | ஆகஸ்ட்/செப்டம்பர் |
| 9. | சதய விழா | தஞ்சாவூர் | அக்டோபர்/நவம்பர் |

**23) தேசிய பூங்காக்கள் மற்றும் வன விலங்கு சரணாலயங்கள்:**

பல நாடுகளிலிருந்து பறவைகள் கூடு கட்டி இனப் பெருக்கம் செய்வதற்காக தமிழ்நாட்டில் உள்ள பறவைகள் சரணாலயத்திற்கு பருவகாலங்களில் வருகின்றன. சுற்றுலாப் பயணிகள் இந்தப் பறவைகள் சரணாலயத்திற்கு வருகைபுரிவதால், அங்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்த சுற்றுலாத் துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. 2004-2005 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பறவைகள் சரணாலயத்திற்கு அடிப்படை வசதிகள் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

பழவேற்காடு – திருவள்ளூர் மாவட்டம் – ரூ.30.00 இலட்சம்

கூந்தன்குளம் – திருநெல்வேலி மாவட்டம்– ரூ.40.00 இலட்சம்



2005 ஏப்ரல் 11]

**24) 2005–2006 ஆம் ஆண்டில் மாநில அரசு நிதி உதவியுடன் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டமைப்பு வசதித் திட்டங்கள்:**

| வ. எண் | மாவட்டம் | திட்டம் | திட்ட மதிப்பீடு | மாவட்ட நிர்வாகத்தின் பங்கு | சுற்றுலாத் துறையின் பங்கு |
|---|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1) | சேலம் | தாரமங்கலம் மேம்பாடு | 16.25 | 8.125 | 8.125 |
| 2) | திருச்சிராப்பள்ளி | குமாரவயலூரில் கட்டமைப்பு வசதிகள் | 15.00 | 7.50 | 7.50 |
| 3) | கன்னியாகுமரி | உதயகிரியில் பயோ டைவர்சிட்டி பூங்கா (Bio Diversity Park) | 37.50 | 18.75 | 18.75 |
| 4) | கன்னியாகுமரி | உதயகிரி கோட்டையினுள் சுற்றுச் சுவரை ஒட்டி நடைபாதை அமைத்தல் | 35.00 | 17.50 | 17.50 |
| 5) | திருவண்ணாமலை | ஜவ்வாதுமலை மற்றும் சாத்தனூர் அணையில் கட்டமைப்பு வசதிகள் | 108.00 | 54.00 | 54.00 |
| 6) | திருவண்ணாமலை | திருவண்ணாமலையில் கட்டமைப்பு வசதிகள் | 75.50 | 37.75 | 37.75 |
| 7) | திருவண்ணாமலை | போளூர் தாலுக்கா, எலத்தூர் மோட்டூர் அருள்மிகு சிவசுப்ரமணிய சுவாமி கோயிலில் அடிப்படை வசதிகள் | 19.50 | 9.75 | 9.75 |
| 8) | திண்டுக்கல் | கொடைக்கானலில் கட்டமைப்பு வசதிகள் | 120.00 | 60.00 | 60.00 |
| 9) | நாகப்பட்டினம் | திருமணஞ்சேரியில் அடிப்படை வசதிகள் | 20.00 | 10.00 | 10.00 |
| 10) | நாகப்பட்டினம் | சீர்காழியில் கட்டமைப்பு வசதிகள் | 15.00 | 7.50 | 7.50 |
| 11) | கிருஷ்ணகிரி | தளி பெரிய குளம் சுற்றி மேம்பாடு | 60.00 | 30.00 | 30.00 |

[2005 ஏப்ரல் 11

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12) | கிருஷ்ணகிரி | தேவர்பெட்டா புனித தலத்தில் அடிப்படை வசதிகள் | 69.00 | 34.50 | 34.50 |
| 13) | விழுப்புரம் | பூவனேசம்குப்பம் புனித தலத்தில் கட்டமைப்பு வசதிகள் | 17.00 | 8.50 | 8.50 |
| 14) | விழுப்புரம் | சின்னசேலம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த மேல்நாரியப்பனூர் ஊராட்சி புனித அந்தோணியார் திருத்தலத்தில் அடிப்படை வசதிகள் | 20.80 | 10.40 | 10.40 |
| 15) | தஞ்சாவூர் | புனித தலங்களில் அடிப்படை வசதிகள் | 4.50 | 2.25 | 2.25 |
| 16) | தஞ்சாவூர் | பூண்டி மாதா தேவாலயத்தில் கட்டமைப்பு வசதிகள் | 20.00 | 10.00 | 10.00 |
| 17) | தஞ்சாவூர் | புன்னைநல்லூர் மாரியம்மன் கோயிலில் அடிப்படை வசதிகள் | 50.00 | 25.00 | 25.00 |
| 18) | மதுரை | திருப்பரங்குன்றம் புனித தலத்தில் கட்டமைப்பு வசதிகள் | 41.00 | 20.50 | 20.50 |
| 19) | கரூர் | அய்யர்மலை இரத்தினகிரீஸ்வரர் கோயிலில் கட்டமைப்பு வசதிகள் | 32.40 | 16.20 | 16.20 |
| 20) | நீலகிரி | உதகமண்டலத்தில் கட்டமைப்பு வசதிகள் | 80.00 | 40.00 | 40.00 |
| 21) | திருநெல்வேலி | நைனார்குளத்தில் கட்டமைப்பு வசதிகள் | 220.00 | 170.00 | 50.00 |
| 22 | கோயம்புத்தூர் | சூலூர் ஏரி மேம்பாடு | 30.00 | 15.00 | 15.00 |



2005 ஏப்ரல் 11]

**25) 2005–2006 ஆம் ஆண்டிற்கான குறிக்கோள்கள் மற்றும் வழிமுறைகள்:**

**அ) சுற்றுலாப் பயணிகள் வருகை** – சுற்றுலாத் துறை ஏற்கெனவே தமிழ்நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை பத்தாவது ஐந்தாண்டுத் (2002–2007) திட்டக் காலத்தில் தற்போது உள்ள 7–9 சதவீதத்திலிருந்து 10–12 சதவீதம் ஆக உயர்த்த வேண்டும் என்று தீர்மானித்துள்ளது. இதே இலக்கு 2005–2006 ஆம் ஆண்டிற்கும் பொருந்தும்.

**ஆ) சுற்றுலாப் பயணிகள் தங்கும் காலம்** – அரசுக்குக் கிடைக்கும் வருவாயை நினைத்துப் பார்க்கும் போது, ஈட்டுவதை மனதிற்கொண்டால் சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டில் தங்கும் கால அளவினை நீட்டிப்பது முக்கியத்துவம் பெறுகிறது. எனவே, சுற்றுலாத் துறை தமிழ்நாட்டில் சுற்றுலாப் பயணிகள் தங்கும் காலத்தை கீழ்க்கண்டவாறு நீட்டிப்பதில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளது:

| வ.எண் | தற்போது சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டில் தங்கும் காலம் | 2004–2005 ஆம் ஆண்டிற்கு சுற்றுலாத் துறையால் நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கு |
|---|---|---|
| 1 | 4–5 நாட்கள் (உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள்) | 7–8 நாட்கள் |
| 2 | 7 நாட்கள் (வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள்) | 10 நாட்கள் |

**இ)** மேற்கண்ட இலக்கு 2004–05 ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்டது. அதிக பிரபலமாகாத சுற்றுலாத் தலங்களை மேம்படுத்தி இந்த இலக்குகளை அடைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒலி–ஒளிக் காட்சி, கம்பி வழிப் பயணம், புதிய படகு இல்லங்கள், முக்கிய சுற்றுலாத் தலங்களுடன் சாலை வசதி இணைப்பு முதலிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். இந்த இலக்கு 2005–06–லும் பொருந்தும்.

**ஈ)** அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையில் (குறிப்பாக தகவல் தொழில்நுட்பம்) ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைச் சுற்றுலா வளர்ச்சிக்குப் பயன்படுத்துதல், சுற்றுலா வலைத்தளம், கணினி மூலம் முன்பதிவு செய்யும் வசதிகள் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு சீரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படும்.

[2005 ஏப்ரல் 11

**உ)** சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்காக அனைத்து சுற்றுலாத் தலங்களிலும் உலகத் தரம் வாய்ந்த கட்டமைப்பு வசதிகள் படிப்படியாக ஏற்படுத்தப்படும். 2001–2002 ஆம் ஆண்டு இப்பணி துவக்கப்பட்டது. இது ஆண்டுதோறும் தடையின்றித் தொடரும்.

பிற விளம்பர யுக்திகள் பின்வருமாறு:

- நாளேடுகள் வார / மாத இதழ்களில் விளம்பரம் (உள்நாடு மற்றும் வெளிநாடு)
- செயற்கைக்கோள் மூலம் தனியார் தொலைக்காட்சிகளில் சிறிய விளக்கப் படம் ஒளிபரப்பு, இரயில் நிலையம், விமான நிலையம், பேருந்து நிலையங்களில் தொலைக்காட்சி மூலம் சிறிய விளம்பரம் ஒளி பரப்பு
- முக்கியமான இடங்களில் தொடுதிரைக் கணினி நிறுவுதல்
- வலைத்தளம்
- பல மொழிகளில் உயர்ரக மடிப்பேடு வெளியிடுதல்
- மின்னணுச் சந்தைப்படுத்துதல்
- முகாம்களின் மூலம் விளம்பரம்
- வானொலி மற்றும் தொலைக்காட்சியில் நேரடி மற்றும் பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சிகள் வழங்குதல்

**26) எதிர்கால வளர்ச்சிக்கு, முனைப்பான முயற்சிகள்:**

சுற்றுலாத் தொழிலை மேம்படுத்துவதில் ஓர் உன்னதமான நிலையை அடைய சுற்றுலாத் துறை பல புதிய முயற்சிகளை முனைப்பாக ஆண்டுதோறும் செயல்படுத்தி வருகிறது. சுற்றுலாப் பயணிகளுக்கு மிகச் சிறந்த சேவை புரிவதே இந்த முயற்சிகளின் நோக்கமாகும். 2005–2006 ஆம் ஆண்டு கீழ்க்கண்ட புதிய முயற்சிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது:

**அ) மருத்துவச் சுற்றுலா – நலவாழ்வில் ஒரு வளம்:**

தமிழ்நாட்டில் பல வகையான நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கக்கூடிய மருத்துவமனைகள் உள்ளன. இந்த மருத்துவமனைகளில் மருத்துவச் சிகிச்சை மிகவும் குறைந்த செலவில்



2005 ஏப்ரல் 11]

அளிக்கப்படுகிறது. தாய்லாந்து நாட்டில் ஆண்டுதோறும் சுமார் 10 இலட்சம் வெளிநாட்டு நோயாளிகள் சிகிச்சை பெறுகிறார்கள். உடல்நிலை சரிபார்த்தல், இருதயம், கண்கள், மூளை மற்றும் புற்றுநோய் போன்ற சிகிச்சைகளுக்காக ஒவ்வொரு வருடமும் சுமார் 2 இலட்சம் நோயாளிகள் சிங்கப்பூர் செல்கிறார்கள். 2025 ஆம் ஆண்டிற்குள் மருத்துவச் சுற்றுலா மூலம் இந்தியாவுக்கு சுமார் 10,000 முதல் 11,000 கோடி ரூபாய் வரை வருவாய் கிடைக்க இயலும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவில் மருத்துவ சிகிச்சைக்கு ஆகும் செலவு மிகவும் குறைவு. அமெரிக்க நாட்டில் இருதய அறுவை சிகிச்சைக்காக சுமார் ரூ.13.50 இலட்சம் வரை செலவாகும். ஆனால், அதே சிகிச்சையை இந்தியாவில் ஏறக்குறைய ரூ.2.70 இலட்சம் செலவில் பெறலாம். தமிழ்நாட்டில், சித்தா, ஆயுர்வேதம், யுனானி, இயற்கை வைத்தியம், யோகா முதலிய மருத்துவ வசதிகள் உள்ளன. இவற்றை வெளிநாட்டவர் பயன்படுத்திக்கொள்கிறார்கள். நோயாளிகளும் அவர்களுக்குத் துணையாக வருபவர்களும் சுற்றுலா வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகிறார்கள். எனவே, சுற்றுலாத் துறை "உடல்நலக் குறைவிலிருந்து சுகம் பெறுதல்" என்ற முறையை சுற்றுலா வளர்ச்சிக்காகப் பயன்படுத்தும். இதற்காக, மருத்துவ வசதியுடன் சுற்றுலா வளர்ச்சியும் ஒருங்கிணைக்கப்படும். 2004 ஆம் ஆண்டில் மட்டும் சுமார் 1.80 இலட்சம் வெளிநாட்டு நோயாளிகள் இந்தியாவில் மருத்துவச் சிகிச்சை பெற்றனர்.

சர்வதேச மருத்துவ சுற்றுலாப் பொருட்காட்சி பக்ரைனில் டிசம்பர் 2004–ல் நடைபெற்றது. தமிழக அரசு சுற்றுலாத் துறை, மாநிலத்தில் உள்ள பல தனியார் மருத்துவமனைகள் மற்றும் ஓட்டல்களுடன் இணைந்து மேற்கூறிய மாநாட்டில் கலந்துகொண்டது. தமிழ்நாட்டில் மிகக் குறைந்த செலவில் பெறக்கூடிய மருத்துவச் சுற்றுலா குறித்து மேற்கூறிய பொருட்காட்சியில் விளம்பரப்படுத்தப்பட்டது.

தமிழ்நாட்டில் மருத்துவச் சுற்றுலாவை வளர்க்க இது சரியான தருணமாகக் காணப்படுகிறது. மருத்துவச் சுற்றுலாப் பயணிகள் வசதிக்காக சென்னை பன்னாட்டு விமான நிலையத்தில் மருத்துவச் சுற்றுலாப் பயணிகளுக்கு விரைவில் குடிபுக அனுமதி வழங்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. மருத்துவச் சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக புதிய வகையான மருத்துவ விசா வழங்குவதை அறிமுகப்படுத்தும்படி மைய அரசை சுற்றுலாத் துறை கேட்டுக்கொண்டுள்ளது.

**ஆ) விளம்பரம் மற்றும் சந்தைப்படுத்துதல்:**

2004–2005 ஆம் ஆண்டு 20–க்கும் மேற்பட்ட வகைகளில் மடிப்பேடுகள், சுவரொட்டிகள் அச்சடிக்கப்பட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மடிப்பேடுகள் கீழ்க்கண்ட தலைப்புகளில் அச்சடிக்கப்பட்டன:

மகிழ்வூட்டும் தமிழ்நாடு (ஆங்கிலம், பிரெஞ்சு மற்றும் ஜெர்மன் மொழிகளில்)
புதுக்கோட்டை
தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்
சென்னை இசைவிழா
கன்னியாகுமரி மாவட்டத்தில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள்
மாமல்லபுரம் நாட்டிய விழா
அயல்நாட்டு அஞ்சல் உறைகள்
நவக்கிரக கோயில்கள்
அறுபடை வீடு கோயில்கள்
செட்டிநாடு மற்றும்
அரசு அருங்காட்சியகம்

விளம்பரப் பணிகளில் பயன்படுத்தப்பட்ட படங்கள் ஒரு தனித்தன்மை வாய்ந்ததாகக் காணப்பட்டன. இவைகள் பயண முகவர்கள், சுற்றுலாப் பயணிகள் மற்றும் பத்திரிகையாளர்களிடமிருந்து பாராட்டை பெற்றது. 2004–2005 ஆம் ஆண்டு சுற்றுலா பற்றி குறுந்தட்டுகள் விளம்பரப் பணிகளுக்காக தயாரிக்கப்பட்டன.

சுற்றுலாப் பகுதிகளில் சுனாமி ஏற்படுத்திய விளைவு குறித்தும் தமிழ்நாடு வழக்கம் போல் சுற்றுலாப் பயணிகளின் ஒரு பாதுகாப்பான சுற்றுலாத் தலம் என்று சுற்றுலாப் பயணிகளுக்கு எடுத்துக் கூறும் வகையில் ஒரு சிறப்பு மடிப்பேடு தயாரிக்கப்பட்டது.

அகில உலக சுற்றுலாச் சந்தை, மிகவும் முனைப்பாக உள்ளது. அதன் தேவைகள் புதிதாக உள்ளன. எனவே, சுற்றுலாத் துறையின் வழிமுறைகளும் புதியதாக இருந்தால்தான் புதிய இலக்குகளை அடைய முடியும். எனவே, இத்தகைய புதிய முயற்சிகள் கட்டாயம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஏனென்றால், தமிழக அரசு சுற்றுலாத் துறை தற்பொழுது உலக அளவில் தமிழ்நாட்டை ஒரு சிறந்த சுற்றுலாத் தலமாக ஆக்குவதில் அக்கறை கொண்டுள்ளது. எனவே, விளம்பரப் பணிகள் மாறுபட்ட வகையிலும், புதிய முறையிலும் மேற்கொள்ளப்படும்.





**இ) விளையாட்டுச் சுற்றுலா:**

தமிழ்நாட்டில் உலகத் தரத்துடன் ஒப்பிடும் அளவிற்கு வசதிகள் கொண்ட விளையாட்டு அரங்கங்கள் உள்ளன. உலக அளவிலான விளையாட்டுக்கள் இங்கே நடைபெறும்பொழுது அதற்கு வெளிநாட்டிலிருந்து விளையாட்டு வீரர்களும் இந்தியாவின் பல பகுதிகளிலிருந்து பார்வையாளர்களும் வருகிறார்கள். விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெறுபவர்களும், பார்வையாளர்களும் போட்டிகளுக்கு முன் அல்லது பின் சுற்றுலாத் தலங்களுக்குச் செல்கிறார்கள். இத்தகைய விளையாட்டுக்கள் மாநிலத்தில் உள்ள சுற்றுலா வளம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. சென்னை ஓப்பன் டென்னிஸ் விளையாட்டுப் போட்டிக்கு தமிழக அரசு ஒரு பெரிய ஆதரவாளராக இருந்தது. இதனால், தமிழ்நாட்டின் சுற்றுலா வளத்தை விளம்பரப்படுத்த ஒரு வாய்ப்பு கிடைத்தது. சனவரி 2005–ல் நடைபெற்ற இப்போட்டியில் "மகிழ்வூட்டும் தமிழ்நாடு" என்ற விளம்பரம் விளையாட்டு வீரர்கள் ஆடும் களத்திலும், தொலைக்காட்சி ஒளிபரப்பிலும் அனைவரும் பார்க்கும் வகையில் விளம்பரப்படுத்தப்பட்டது. போட்டிகளின்போது நேரடி தொலைக் காட்சி ஒளிபரப்பிற்கு இடையே தமிழ்நாட்டின் சுற்றுலாத் தலங்கள் காண்பிக்கப்பட்டன.

2005 ஆம் ஆண்டின் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியின் கருப்பொருள் "விளையாட்டு மற்றும் சுற்றுலா" ஆகும். தமிழ்நாடு விளையாட்டுத் துறையில் உள்ள சிறப்புகளை, சுற்றுலா வளர்ச்சிக்காக தொடர்ந்து பயன்படுத்த இத்துறை நடவடிக்கை எடுக்கும்.

**ஈ) ஒருநாள் தங்கும் திட்டம்:**

தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாத் தலங்களை இரவு நேரப் பேருந்து அல்லது இரயில்மூலம் சென்றடையலாம். இரவில் பயணம் தொடங்கி சுற்றுலாத் தலங்களுக்கு காலையில் செல்லலாம். இதனால் சுற்றுலாப் பயணிகளுக்கு பல இடங்களை சுற்றிப் பார்க்கவும் தங்களுக்குத் தேவையான பொருட்கள் வாங்கவும் போதிய அளவு அவகாசம் கிடைக்கிறது. இருப்பினும், புனிதத் தலங்களுக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகள், குறிப்பாக குறைந்த வருமானம் பெறும் வகுப்பினர், தங்கள் குடும்பத்துடன் பகல்வேளையில் தங்குவதற்கு நியாயமான செலவில் உரிய வசதியில்லாத காரணத்தால், இத்தகைய பயணம் மேற்கொள்ளத் தயங்குகிறார்கள். விடுதிகளில் தங்குவது சில சமயங்களில் அதிக செலவாகிறது. மேலும் குடும்பத்துடன் தங்குவதற்கு ஏற்றதாக இருப்பதில்லை.

[2005 ஏப்ரல் 11

புனிதத் தலங்களுக்குச் செல்லும் குறைந்த வருவாய் உடைய சுற்றுலாப் பயணிகளுக்கு அவர்களுக்குத் தேவையான தங்கும் வசதியை குறைந்த செலவில் அளிப்பதற்கு பகலில் தங்கும் திட்டத்தை சுயஉதவிக் குழுக்கள்மூலம் அடிப்படை வசதிகள் கொண்ட தங்கும் அறைகளை வழங்க ஊக்கப்படுத்தப்படுவார்கள். இத்திட்டத்தின்கீழ் சுற்றுலாப் பயணிகளுக்கு கீழ்க்கண்ட வசதிகள் நியாயமான கட்டணத்தில் வழங்கப்படும்:

(அ) இரயில் / பேருந்து நிலையத்திலிருந்து முன்பதிவு மற்றும் போக்குவரத்து வசதி (கட்டணம் செலுத்தப்பட வேண்டும்).

(ஆ) காலை உணவு.

(இ) கோயில் அல்லது சுற்றுலாத் தலங்களைச் சுற்றிப் பார்க்க வழிகாட்டி வசதி (தேவைப்பட்டால்).

(ஈ) மதிய உணவு.

(உ) கொசுத் தொல்லை இல்லாத சுத்தமான நல்ல ஒளி வசதி உள்ள அறை. இந்த அறையில் குளிக்கலாம் / மதியம் ஓய்வெடுக்கலாம். சுற்றுலாப் பயணிகள் அங்காடிகளுக்கு அல்லது கோயில்களுக்குச் செல்லும்பொழுது தங்கள் உடைமைகளைப் பாதுகாப்பாக இங்கே வைக்கலாம்.

(ஊ) இரவு நேர இரயில் அல்லது பேருந்துக்குச் செல்வதற்கு முன்னதாக உணவு

குறைந்த வருவாய் வகுப்பு சுற்றுலாப் பயணிகள், குறிப்பாக குடும்பத்தினர் மற்றும் பெண்கள் இத்திட்டத்தை வரவேற்பார்கள் என்று கருதப்படுகிறது. முதற்கட்டமாக கும்பகோணத்திலும், தஞ்சாவூரிலும் இதை ஒரு முன்னோடித் திட்டமாக சுயஉதவிக் குழுவின் ஒத்துழைப்புடன் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**உ) முகாம்களின் மூலம் விளம்பரம் (Road Show):**

சுற்றுலாத் துறை, இந்தியாவின் அனைத்து முக்கியமான நகரங்களில் சுற்றுலா அலுவலகம் / சுற்றுலா தகவல் மையம் படிப்படியாகத் திறக்க திட்டமிட்டுள்ளது. தற்சமயம் கீழ்க்கண்ட பிற மாநில நகரங்களில் தமிழக அரசின் சுற்றுலா அலுவலகம் / சுற்றுலா தகவல் மையம் செயல்பட்டு வருகின்றது:



2005 ஏப்ரல் 11]

**சுற்றுலா அலுவலகம்**

1) மும்பை
2) கொல்கத்தா
3) பனாஜி – கோவா
4) புதுதில்லி
5) ஜெய்ப்பூர்
6) ஆக்ரா

**சுற்றுலா தகவல் மையம்**

1) பெங்களூர்
2) ஐதராபாத்
3) திருவனந்தபுரம்
4) அகமதாபாத்
5) புவனேஷ்வர்
6) சண்டிகர்
7) கவுகாத்தி
8) வாரணாசி

சுற்றுலா அலுவலகம் / சுற்றுலாத் தகவல் மையம் ஏற்படுத்துவது அதிகச் செலவை ஏற்படுத்தும். எனவே, ஓர் இடைக்கால முயற்சியாக இந்தியாவின் பல மாநிலங்களில் விளம்பர முகாம்கள் நடத்தப்பட்டன. சந்தைப்படுத்தும் முயற்சிக்கு மேலும் நல்ல பலன் அளிக்கக்கூடிய வகையில் நேரடியாகச் சென்று (Road Show) இந்தியாவின் முக்கிய நகரங்களில் விளம்பர முகாம்கள் நடத்தப்படும். இந்த விளம்பர முகாம்களில் தமிழ்நாடு உணவு வகைகள், கலை நிகழ்ச்சிகள் முதலியன இடம்பெறும். இது தவிர, இந்நிகழ்ச்சியில் அந்தப் பகுதியில் உள்ள பயண / ஓட்டல் முகவர்களுடன் சந்திப்பு, அந்த மாநில சுற்றுலாத் துறை அதிகாரிகளுடன் கலந்துரையாடல், பத்திரிகையாளர்களுடன் நேர்காணல் போன்றவை இடம்பெறும். 2005–2006 ஆம் ஆண்டு ஐதராபாத், மும்பை, புதுதில்லி, பெங்களூர், வாரணாசி, ஜெய்ப்பூர், அகமதாபாத் மற்றும் விசாகப்பட்டினம் ஆகிய இடங்களில் விளம்பர முகாம்கள் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2005 ஏப்ரல் 11

**ஊ) இரயில் சுற்றுலா:**

தென் மாநிலங்களை உள்ளடக்கிய தென்னிந்திய சுற்றுலாக் குழு, "சொகுசு இரயில்" ஒன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த இரயில் 4 தென் மாநிலங்களான தமிழ்நாடு, கேரளம், ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம் மற்றும் யூனியன் பிரதேசமான பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களில் உள்ள முக்கிய சுற்றுலாத் தலங்களுக்கு சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் செல்லும். இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.40.00 கோடி ஆகும். இச் செலவினத்தை எவ்வாறு மேற்கொள்வது மற்றும் திட்டத்தின் பிற அம்சங்கள் குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

**எ) வெளிநாட்டுப் பயணம் மற்றும் சுற்றுலாச் சந்தைகளில் பங்கேற்பு:**

அந்நியச் செலாவணியை ஈர்ப்பது சுற்றுலாத் துறையின் மிகப் பெரிய நன்மையாகும். வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிகச் செலவு செய்யும் பிரிவைச் சார்ந்தவர்கள். இவர்கள் அந்தப் பகுதியின் பொருளாதார வளர்ச்சிக்கும் ஒரு நாட்டின் அந்நியச் செலாவணி ஈட்டுவதிலும் மிகவும் உதவி செய்கிறார்கள். எனவே, தமிழ்நாட்டிற்கு அதிக அளவு வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க 2004–2005 ஆம் ஆண்டு கீழ்க்கண்ட அனைத்துலகச் சுற்றுலாச் சந்தைகளில் சுற்றுலாத் துறை பங்கேற்றுள்ளது:

தெற்கு ஆசியா நுழைவு வாயில் பயணச் சந்தை:

| | |
|---|---|
| இலங்கை | – அக்டோபர் 04 |
| உலகப் பயணச் சந்தை, இலண்டன், | – நவம்பர் 04 |
| அனைத்துலக மருத்துவச் சுற்றுலாப் பொருட்காட்சி, பக்ரைன் | – டிசம்பர் 04 |
| அனைத்துலக சுற்றுலாச் சந்தை–பெர்லின் | – மார்ச் 05 |

சுற்றுலாத் துறை வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க வெளிநாட்டுச் சுற்றுலாச் சந்தைகளில் கலந்துகொண்டு தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு உலக சுற்றுலாத் துறையில் ஒரு முக்கியமான அங்கம் வகிப்பதே தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் நோக்கமாகும்.

**27) உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில் பயிற்சி:**

சுற்றுலா, விருந்தோம்பலை அடிப்படையாகக் கொண்டதாகும். எனவே, வரவேற்பு, சமையல், விருந்தோம்பல், அரங்கு உள் அலங்காரம்



2005 ஏப்ரல் 11]

போன்றவற்றில் தொழில் திறமை தேவைப்படுகிறது. இப்பணிகளில் பயிற்சி அளிக்க தமிழ்நாட்டில் இரண்டு அரசு உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில் பயிற்சி நிறுவனங்கள் உள்ளன.

**அ) மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில்நுட்பப் பயிலகம், திருச்சிராப்பள்ளி:**

1981 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்த நிறுவனத்தை புதுதில்லி, அனைத்திந்திய தொழில்நுட்பப் பயிற்சிக் குழு அங்கீகரித்துள்ளது. இது தமிழ்நாடு அரசு தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்திற்கு 1986 வரை மைய அரசு நிதி உதவி அளித்தது. அதன் பின்னர் தமிழ்நாடு அரசு இப் பயிலகத்திற்கு ஆண்டுதோறும் மானியம் வழங்கி வருகிறது. மூன்றாண்டு பட்டப் படிப்பு மற்றும் ஓராண்டுச் சான்றிதழ் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. ஓட்டல் வரவேற்பு, கணக்கு வைப்பு முறை, இல்லம் பராமரித்தல், சிற்றுண்டிச் சாலைகளில் உணவு பரிமாறுதல், ரொட்டி மற்றும் இனிப்புப் பண்டங்களைத் தயாரித்தல், உணவு உற்பத்தி செய்யும் முறைகள் போன்ற பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. தற்போது 800–க்கும் மேற்பட்ட மாணவ–மாணவியர் பயிற்சி பெறுகின்றனர். பயிற்சி பெற்ற மாணவ–மாணவியர்கள் வளாக நேர்காணல் முறை மூலம் வேலைவாய்ப்பும் பெறுகின்றனர்.

**ஆ) உணவாக்கத் தொழில்நுட்பம், உணவக மேலாண்மை மற்றும் சத்துணவுப் பயிலகம், தரமணி, சென்னை:**

1963 ஆம் ஆண்டு மைய அரசு இந்நிறுவனத்தை ஏற்படுத்தியது. தமிழ்நாடு அரசும் இந்நிறுவனத்திற்கு ஆதரவு அளித்து வருகிறது. மூலதனத்தை மத்திய அரசு சுற்றுலாத் துறை வழங்குகிறது. தொடர் செலவுகளை இந்நிறுவனமே ஏற்றுக்கொள்கிறது. தமிழ்நாடு அரசு செய்தி மற்றும் சுற்றுலாத் துறையின் செயலர் இதனை ஆளும் குழுவின் தலைவர் ஆவார். ஓட்டல் மேலாண்மை, உணவு தயாரிப்பு, பானங்கள் தயாரிப்பு போன்ற பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. தற்போது 900–க்கும் மேற்பட்ட மாணவ–மாணவியர் பயிற்சி பெறுகின்றனர்.

**28) தமிழ்நாட்டில் தங்கும் வசதிகள்:**

தமிழ்நாட்டில், சுற்றுலாவை மேம்படுத்த, சுற்றுலாத் துறை பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அவற்றில், உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டில் தங்கும் காலத்தை 4–5 நாட்களிலிருந்து 7–8 நாட்களாக அதிகரிப்பதும், வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள்

[2005 ஏப்ரல் 11

தமிழ்நாட்டில் தங்கும் காலத்தை 7 நாட்களிலிருந்து 10 நாட்களாக அதிகரிப்பதும் ஒன்றாகும். தமிழ்நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகளை அதிகளவில் ஈர்ப்பதற்கு எடுக்கப்பட்டுவரும் இடைவிடா முயற்சிகளின் விளைவாக வருங்காலங்களில் தமிழ்நாட்டில், குறிப்பாக சுற்றுலாத் தலங்களிலும் மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடங்களிலும் தங்கும் வசதி அதிகமாகத் தேவைப்படும். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் 55 ஓட்டல்கள் தவிர, தமிழ்நாட்டில் வகைப்படுத்தப்பட்ட தனியார் ஓட்டல்கள் பல உள்ளன. விவரம் பின்வருமாறு:

| வகை | ஓட்டல்கள் |
|---|---|
| பாரம்பரியம் | 3 |
| 5D நட்சத்திரம் | 4 |
| 5 நட்சத்திரம் | 3 |
| 4 நட்சத்திரம் | 5 |
| 3 நட்சத்திரம் | 43 |
| 2 நட்சத்திரம் | 17 |
| 1 நட்சத்திரம் | 3 |
| மொத்தம் | 78 |

மேற்கூறிய ஓட்டல்கள் தவிர தமிழ்நாட்டில் வகைப்படுத்தப்படாத ஓட்டல்கள் பல உள்ளன. வகைப்படுத்தப்பட்ட ஓட்டல்களில் ஒரு படுக்கை அறை, இரண்டு படுக்கை அறை மற்றும் குடும்ப அறைகள் என மொத்தம் சுமார் 5,000 அறைகள் உள்ளன.

மாநில அரசு 2002–2003 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் உள்ள ஓட்டல் தொழிலுக்குப் பெரிய சலுகை அளித்தது. அச்சமயம் சொகுசு வரி கீழ்க்கண்டவாறு குறைக்கப்பட்டது:

| வ. எண் | விபரம் | வரி சதவீதம் கட்டணத்தில் |
|---|---|---|
| 1. | நாளொன்றுக்கு ஓர் அறைக்கு விடுதிக் கட்டணம் இருநூறு ரூபாய்க்குக் குறையாமலும் ஐநூறு ரூபாய்க்கு மிகாமலும் உள்ள விடுதி | 5 சதவீதம் |
| 2. | அத்தகைய கட்டணம் நாளொன்றுக்கு ஓர் அறைக்கு ஐநூறு ரூபாய்க்குக் குறையாமலும் ஆயிரம் ரூபாய்க்குக் குறைவாகவும் உள்ள விடுதி | 10 சதவீதம் |
| 3. | நாளொன்றுக்கு ஓர் அறைக்கு ஆயிரம் ரூபாய் அல்லது அதிகமாகவும் உள்ள விடுதி | 12.5 சதவீதம் |



2005 ஏப்ரல் 11]

இதனால் சுற்றுலாப் பயணிகள் பெருமளவிற்குப் பயனடைந்துள்ளார்கள். சுற்றுலாத் துறை, தமிழ்நாட்டில் அதிகமான ஓட்டல் கட்டுவதற்கு தனியார் ஓட்டல் அதிபர்களை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கும்.

**29) சேவை புரிபவர்களுக்குப் பயிற்சி அளித்தல்:**

இத்திட்டத்தின்கீழ், ஓட்டல் பணியாளர்கள், வாடகை வாகனம், ஓட்டுபவர்கள், வரவேற்பாளர்கள், தங்குமிடம், காலை சிற்றுண்டி வழங்குபவர்கள் முதலியவர்களுக்குக் குறுகியகாலப் பயிற்சித் திட்டம் நடத்த 2003–2004 ஆம் ஆண்டு ரூ.7.30 இலட்சம் ஒப்பளிப்பு செய்தது. சேவை புரிபவர்கள், ஓட்டல் பணியாளர்கள், வாடகைச் சீருந்து / பேருந்து ஓட்டுநர்கள் முதலியவர்களுக்கும் இதேபோன்று குறுகிய காலப் பயிற்சி 2005–2006 ஆம் ஆண்டிலும் நடத்தப்படும்.

**30) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்:**

தமிழ்நாட்டில் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவைப்படுகின்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி, சுற்றுலாவை வணிக அடிப்படையில் மேம்படுத்தும் முக்கிய நோக்கத்தோடு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1971 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. தமிழக அரசிடமிருந்து ஐந்து சுற்றுலா மாளிகைகளைப் பெற்று இரு பேருந்துகளுடன் இக்கழகம் சிறிய அளவில் செயல்படத் தொடங்கியது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் விரைவாக முன்னேறி இன்றைக்கு மிக அதிகமாக 55 ஓட்டல்களுடன் இந்தியாவிலேயே நல்ல பெயரை ஈட்டியுள்ளது. சுற்றுலாப் பேருந்துகளின் எண்ணிக்கை 22 ஆக உயர்ந்துள்ளது. இம்மாநிலத்திலுள்ள முக்கிய சுற்றுலாப் பகுதிகளில் சுற்றுலாப் பயணிகளின் நன்மைக்காக கீழ்க்காணும் வசதிகளை இக்கழகம் செய்துள்ளது:

1) ஓட்டல்கள்
2) இளைஞர் விடுதிகள்
3) உணவகங்கள்
4) படகு இல்லங்கள்
5) தொலைநோக்கி இல்லங்கள்
6) ஏரிப் பூங்கா
7) பெட்ரோல் பங்க்

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் இளைஞர் விடுதிகளில் சிக்கன சுற்றுலாப் பயணிகளுக்கு ஒரே இடத்தில் பலர்

தங்குவதற்கு வசதிகள் கொண்ட பெரிய அறைகள் (DORMITORY) கொண்ட இடவசதிக்கு வகை செய்யப்பட்டுள்ளது. உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு போன்ற இடங்களில் சுற்றுலாப் பருவ காலங்களிலும் குறைந்த செலவில் இடவசதியைப் பெறுவதற்கு சுற்றுலாப் பயணிகளுக்கு இவ்வசதி பயனுள்ளதாய் உள்ளது.

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்களை தனியாருக்குக் குத்தகை விடுதல்.**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 31 ஓட்டல்களையும், 10 உணவகங்களையும் தனியாருக்குக் குத்தகைக்கு விட அரசு ஏற்கெனவே அனுமதித்துள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இதுவரை பகிரங்க ஒப்பந்தப்புள்ளி நடைமுறை மூலம் 11 ஓட்டல்களையும், 4 உணவகங்களையும் குத்தகைக்கு விட்டுள்ளது. இது தவிர திருச்சி (யூனிட்–2) தஞ்சை (யூனிட்–2) ஆகிய இரண்டு ஓட்டல்கள் தனியாருக்கு ஏற்கெனவே நீண்ட கால குத்தகைக்கு விடப்பட்டுள்ளன.

**போக்குவரத்துப் பிரிவு:**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1/2 நாள் முதல் 14 நாட்கள் வரையிலான திட்டமிட்ட 37 வகை சுற்றுலா பயணத் திட்டங்களை நடத்துகிறது. இச்சுற்றுலாத் திட்டத்தில் தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் மட்டும் அல்லாமல் தென்னக மாநிலங்கள் (அனைத்தும்) மற்றும் மகாராஷ்டிரம், மத்திய பிரதேசம், உத்திரப்பிரதேசம், ஒரிசா ஆகிய மாநிலங்களும் உள்ளடக்கியுள்ளன. மேலும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மலேசியா, சிங்கப்பூர், மொரீசியஸ், தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு சிறப்பு சுற்றுலாவினை நடத்துகிறது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பின்வரும் சுற்றுலாப் பயண திட்டங்களை நடத்தி வருகிறது:

1. 1/2 நாள் சென்னை சுற்றுலா
2. 1 நாள் காஞ்சிபுரம் – மாமல்லபுரம் சுற்றுலா (நாள் முழுவதும்)
3. 1 நாள் பாண்டிச்சேரி சுற்றுலா
4. 1 நாள் திருப்பதி சுற்றுலா
5. 1 நாள் திருவண்ணாமலை கிரிவலம் சுற்றுலா
6. 1 நாள் சுருட்டப்பள்ளி சுற்றுலா
7. 1 நாள் சக்தி சுற்றுலா (சென்னையைச் சுற்றியுள்ள சைவத் திருத்தலங்கள்)





8. 1 நாள் திருமால் தரிசன சுற்றுலா (சென்னையைச் சுற்றியுள்ள 9 வைணவத் திருக்கோயில்கள்)
9. 1 நாள் கொளவாய் ஏரி, வண்டலூர் உயிரியல் பூங்கா, கிஷ்கிந்தா சுற்றுலா
10. 1 நாள் கேளிக்கைச் சுற்றுலா
11. 3 நாள் நவக்கிரக சுற்றுலா (ஒன்பது கிரகங்கள் சுற்றுலா)
12. 3 நாள் நவ திருப்பதிகள் சுற்றுலா
13. 3 நாள் பஞ்ச பூத தலங்கள் சுற்றுலா
14. 4 நாள் அறுபடை வீடு சுற்றுலா (முருகக் கடவுள் சுற்றுலா)
15. 6 நாள் தென்னிந்திய சுற்றுலா
16. 7 நாள் மூகாம்பிகை சுற்றுலா
17. 7 நாள் கோவா மந்திராலயம் – புட்டப்பர்த்தி சுற்றுலா
18. 7 நாள் ஆந்திர சுற்றுலா
19. 8 நாள் கிழக்கு மேற்குக் கடற்கரைச் சுற்றுலா
20. 8 நாள் தமிழ்நாடு சுற்றுலா
21. 14 நாள் மும்பை – அஜந்தா–எல்லோரா சுற்றுலா
22. 14 நாள் சன்னி சௌத் சுற்றுலா
23. 14 நாள் பூரி – கயா – காசி – அலகாபாத் சுற்றுலா

**சிறப்புச் சுற்றுலாக்கள்**

24. ஊட்டி சுற்றுலா
25. கொடைக்கானல் சுற்றுலா
26. ஏற்காடு ஒகேனக்கல் சுற்றுலா
27. மைசூர் சுற்றுலா
28. ஏலகிரி சுற்றுலா
29. குற்றாலம் சுற்றுலா
30. 1 நாள் திருத்தணி – காளஹஸ்தி – நல்லாத்தூர்– மத்தூர் சுற்றுலா
31. தொண்டை நாடு திருப்பதிகள் சுற்றுலா
32. 1 நாள் தென்னாங்கூர் – உத்திரமேரூர் – மதுராந்தகம் சுற்றுலா
33. 1 நாள் வல்லக்கோட்டை – திருத்தணி சுற்றுலா
34. 3 நாட்கள் – மூணாறு சுற்றுலா
35. 4 நாட்கள் – சோழநாட்டு திருப்பதிகள் சுற்றுலா
36. 5 நாட்கள் – பாண்டியநாட்டு திருப்பதிகள் சுற்றுலா
37. 5 நாட்கள் – ஐதராபாத் – விஜயவாடா சுற்றுலா

**பொருட்காட்சிப் பிரிவு:**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை தீவுத் திடலில் ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் திங்கள் கடைசி வாரம் முதல் மார்ச் திங்கள் வரை இந்திய சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சியினை நடத்தி வருகிறது. இருப்பினும், 2005 ஆம் ஆண்டு பொருட்காட்சி 26-12-2004 அன்று தமிழக கடற்கரையோரங்களில் சுனாமியால் ஏற்பட்ட பாதிப்புக் காரணமாக சுமார் 3 வாரங்கள் தாமதமாகத் தொடங்கப்பட்டது. பொருட்காட்சி நடைபெறும் இடத்தில் கூவம் ஆற்றின் குறுக்கே அமைக்கப்பட்ட தற்காலிக மரப்பாலங்கள் சுனாமி வெள்ளத்தால் அடித்துச்செல்லப்பட்டன. இவை உடனடியாக, மிக விரைவாக, திரும்ப அமைக்கப்பட்டன.

தொடக்கத்தில் பொருட்காட்சிக்கு வருவோரின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தது. பின்னர், வருவோரின் எண்ணிக்கை அதிகரித்து, சென்ற வருடம் கிடைத்த வசூலைவிட இந்த ஆண்டின் வருவாய் உயர்ந்துள்ளது. பொருட்காட்சி நடைபெறாத காலத்தில், இந்திய நுகர்வோர் பொருட்காட்சிகள் போன்று பல தனியார் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு, ரூ.31.00 இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளது. மேலும், பொருட்காட்சி நடைபெறாத காலத்தில் தீவுத் திடலில் தனியார் பொருட்காட்சிகள் நடத்துவதற்கு ஏதுவாக இருக்கும் வண்ணம் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**விற்பனை முன்னேற்றமும் அங்காடி வசதியும்:**

1. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலாப் பேருந்துகளை வாடகைக்கு விடும் அடிப்படையில் 2005, பிப்ரவரி முதல் அன்றாட திருப்பதி சுற்றுலாக்களை இயக்குவதற்கு இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இதன்மூலம் 2005-2006 ஆம் ஆண்டில் கூடுதலாக ரூ.60.00 இலட்சம் கிடைக்கும்.

2. தேசிய விமான குழுமமும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் ஒப்பந்தம் செய்து கொண்டு அவற்றின் பணியாளர்களை கொடைக்கானலில் தங்க வைக்க 2005-2006-ல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

3. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தனது 12 ஓட்டல்களில் தனியார் ஓட்டல் அதிபர்களுடன் 6,000 அறைகளை ஒரு வருடத்திற்கு ஒதுக்கீடு செய்வதற்காக உத்தரவாதத்துடன் (இரவு





பதிவு ஒப்பந்தம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. காலத்திற்கு) பதிவு ஒப்பந்தம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதனால் இக்கழகத்திற்கு 2005-2006-ல் ரூ.30.00 இலட்சம் கூடுதல் வருவாய் கிடைக்கும்.

4. தமிழக கல்வித் துறை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தை அணுகி சர்வ சிக்ஷா அபியான் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் பல மாவட்டச் சுற்றுலா மையங்களுக்கு சிறப்புச் சுற்றுலாக்களை மாணவர்களின் நன்மைக்காகத் துவக்கவுள்ளது. மாணவர்களுக்கு உதவி புரிவதோடு மட்டுமல்லாமல், இந்த வகையான சுற்றுலாப் பயணத் திட்டங்களினால் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சாதனை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

5. தனியார் முகவர்கள் நடத்தும் சுற்றுலாப் பயணத் திட்டங்களில் கலந்துகொள்ளும் சுற்றுலாப் பயணிகள் கன்னியாகுமரியில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு அறைகளில் தங்குவதற்கு ஒப்பந்தம் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இந்த முயற்சி முழுமை பெற்றால், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக வருவாய் பெருகும்.

6. 2004-2005-ல் பல தனியார் நிறுவனங்களுக்கு சிறப்புச் சுற்றுலா பயணத் திட்டங்கள் நடத்தப்பட்டன. 2005-2006 ஆம் ஆண்டில் இதுபோன்ற சுற்றுலாப் பயணத் திட்டங்களை நடத்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தனியார் துறையிலும், பொதுத் துறையிலும் உள்ள நிறுவனங்களிடம் தொடர்புகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்கள் மற்றும் திட்டமிட்ட சுற்றுலாக்களுக்கு கணினி வழியில் பதிவு செய்தல்:**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த தொகை செலுத்தி கணினி வழியில் பதிவு செய்து கொள்ளும் முறையை 2-7-2004 அன்று தொடங்கி வைத்தார்கள். இக்கழகம், தொகை செலுத்தி கணினி வழியில் பதிவு செய்து கொள்ளும் முறையைத் தொடங்கியதில் இந்தியாவிலேயே முதல் மாநிலச் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் என்ற தனித்துவத்தைப் பெற்றுள்ளது. கணினி வழி பதிவு முறை (WEBSITE) http://www.ttdconline.com-ல் தொடங்கப்பட்டுள்ளது. இதன்மூலம், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஏதேனும் ஓட்டலில் இடவசதிக்கும், உலகத்தில் எங்கிருந்தேனும் திட்டமிட்ட சுற்றுலாவுக்கும் பதிவு

[2005 ஏப்ரல் 11

செய்துகொள்ள இயலும். கடன் வசதி அட்டைகளைப் பயன்படுத்தி தொகை செலுத்தவும், பதிவை உறுதிப்படுத்திக் கொள்ளவும் இயலும். இம்முறை, சுற்றுலாப் பயணிகள் வீட்டிலேயே இருந்துகொண்டு திட்டமிட உதவும். மாஸ்டர் கார்டு, விசா போன்ற கடன் வசதி அட்டைகளைப் (Credit Cards) பயன்படுத்தி கணினி வழியில் பதிவு செய்துகொள்வதன் வாயிலாக ஓட்டல்களில் இடவசதியை உறுதி செய்துகொள்ளவும் சுற்றுலாக்களில் இடம்பெறவும் உறுதி செய்துகொள்ளவும் இயலும். http://www.tamilnadutourism.org-ல் தமிழ்நாடு சுற்றுலா இணையதளத்தை அணுகி சுற்றுலாப் பயணிகள் சுற்றுலா குறித்த விவரங்களைப் பெறக்கூடும். அதன்மூலம் தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலா இடங்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் திட்டமிட்ட சுற்றுலாக்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக ஓட்டல்கள், அவற்றின் கட்டணங்கள், அக்கழகம் அளிக்கும் வசதிகள், தமிழ்நாட்டின் விழாக்கள் முதலியன போன்ற விவரமான தகவல்கள் கிடைக்கும். தற்போது சுமார் 250 சுற்றுலாப் பயணிகள் அன்றாடம் இந்த இணையதளத்திற்கு வருகை தருகின்றனர்.

கணினி வழி பதிவுமுறை மூலம் சுற்றுலாப் பயணிகள் பதிவு செய்துள்ள சுற்றுலாக்கள் / ஓட்டல் இடவசதிகளை உறுதிசெய்து, பதிவு செய்து கொண்டவர்களுக்கு கணினி மூலம் செய்தி அனுப்பப்படுகின்றன. அதன் நகல் ஒன்று, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஆவணங்களுக்காகவும் தயாரிக்கப்படுகிறது. இம்முறையின் செயல்பாடு முழுவதும் உடனுக்குடன் கணினி வழியில் செயல்படுத்தப்படுகிறது.

கணினி வழி மூலம் 2005, மார்ச் வரை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ரூ.14.13 இலட்சம் தொகைக்குப் பதிவுகளை பின்வரும் வெளி நாடுகளிலிருந்தும் இந்திய மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளிலிருந்தும் செய்துகொண்டுள்ளது:

| வெளிநாடுகள் | இந்திய மாநிலங்கள்/மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகள் |
|---|---|
| ஸ்பெயின் | கேரளம் |
| ஐக்கிய நாடுகள் | மகாராஷ்டிரம் |
| ஆஸ்திரேலிய | கர்நாடகம் |
| பின்லாந்து | உத்திரப் பிரதேசம் |
| நார்வே | ஆந்திரப் பிரதேசம் |
| கனடா | மேற்கு வங்காளம் |
| இத்தாலி | குஜராத் |
| ஜப்பான் | புது தில்லி |
| ஜெர்மனி | பாண்டிச்சேரி |
| நெதர்லாந்து | கோவா |



2005 ஏப்ரல் 11]

## தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்கு எடுத்துள்ள நடவடிக்கைகள்.

1. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பெரிய ஓட்டல்கள் அனைத்திலும் வாடகை அடிப்படையில் தொலைக்காட்சிப் பெட்டிகள் நிறுவியது.
2. தொகை செலுத்தி கணினி வழி பதிவு முறையைத் தொடங்கியது.
3. உணவகங்களும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தெரிந்தெடுக்கப்பட்ட ஓட்டல்களில் உள்ள மதுபான விற்பனைப் பகுதியும் மேம்படுத்தப்பட்டது.
4. பழைய சிறிய சுற்றுலாப் பேருந்துகள் நான்கிற்குப் பதிலாக புதிய சுற்றுலாப் பேருந்துகள் கொள்முதல் செய்தது.
5. பல்வேறு படகு இல்லங்களில் படகுப் போக்குவரத்து வருமானத்தைப் பெருக்க 120 படகுகள் கொள்முதல் செய்தது.
6. ஊட்டியில் கூடுதல் படகுத் துறையை ஏற்படுத்தியது.
7. உதகமண்டலம், இளைஞர் விடுதியில் ரூ.6.00 இலட்சம் செலவில் பணிகளின் தரம் உயர்த்தியது.
8. மின் சக்தி பயன்பாட்டுச் செலவைக் குறைக்க மதுரை–2 ஓட்டலில் மின்சக்தி சேமிப்பு வசதியை நிறுவியது. மின் பயன்பாட்டில் ஏற்பட்ட ஆண்டு சேமிப்பு ரூ.1.10 இலட்சம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.
9. ஓட்டல் தமிழ்நாடு, இராமேஸ்வரம் ஓட்டலில் ரூ.1.50 இலட்சம் செலவில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொண்டது.
10. ஓட்டல் தமிழ்நாடு ஏற்காட்டில் ரூ.3.30 இலட்சம் செலவில் காட்டேஜ்களில் (சுற்றுலாக் குடில்களின்) தரத்தை மேம்படுத்தியது.
11. ஊட்டி படகு இல்லத்தில் ரூ.8.00 இலட்சம் செலவில் மேம்பாட்டுப் பணிகளைச் செய்தது.

[2005 ஏப்ரல் 11

12. ரூ.32.00 இலட்சம் செலவில் கன்னியாகுமரி திருவள்ளுவர் சிலைக்கு பாலி சிலிகான் இரசாயனக் கலவைப் பூச்சு செய்வது உட்பட மேம்பாட்டுப் பணிகள் செய்தது.

13. கொடைக்கானல், ஏற்காடு, முட்டுக்காடு, பிச்சாவரம் படகு இல்லங்களில் கணினி மூலம் கட்டண விதிப்பு எந்திரங்களை நிறுவியது.

**2005-2006 ஆம் ஆண்டில் செயல்பாட்டை மேம்படுத்துவதற்கு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கைகள்:**

1. ஓட்டல் நிர்வாகம் மற்றும் வாடிக்கையாளர் பணியின் தரத்தை உயர்த்துவதற்கு வகை செய்யும் வண்ணம் "டி" வகை பணியாளர்களின் பணியை தனியார் வசம் ஒப்படைத்தல்.

2. பழைய, பயனற்றதாகிவிட்ட சுற்றுலாப் பேருந்துகள் / டெம்போ டிராவலர்ஸ் வண்டிகளை உடனடியாக மாற்றுதல்.

3. முதல் தர அறைக் கலன்கள் மற்றும் உள் அலங்காரங்களுடன் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் அனைத்து உணவகங்கள் மற்றும் மதுபான பிரிவுகளையும் தரம் உயர்த்துதல்.

4. தமிழ்நாடு ஓட்டல்களில் செலவுக் குறைப்பு நடவடிக்கைகளாக மின் பயன்பாட்டுச் சேமிப்பு சாதனம் முதலியவற்றை நிறுவுதல்.

5. படகுப் போக்குவரத்து வருமானத்தைப் பெருக்க கூடுதலாகப் படகுகளை வாங்குதல்.

6. நீலகிரி மாவட்டத்தில் உள்ள டி.ஆர். பஜாரில் படகுத் துறை கட்டுமானப் பணியை விரைவில் முடித்தல் மற்றும் புதிய படகுத் துறைக்குப் படகுகள் வாங்குதல்.

7. நிலையான, நன்கு திட்டமிடப்பட்ட விளம்பர ஏற்பாட்டுடன் ரயில்--சாலை வழி சுற்றுலாக்களில் கவனம் செலுத்துதல்.

8. ஐதராபாத்தை இணைக்கும் புதிய இரயில் – சாலை வழி சுற்றுலாவை அறிமுகப்படுத்துதல்.

9. பொருத்தமான இடங்களில் கண்கவர் விளம்பரப் பலகைகளை நிறுவுதல்.



2005 ஏப்ரல் 11]

10. ஓட்டல்களில் பழைய மெத்தைகளையும், தலையணைகளையும் மாற்றுதல்.

11. பழைய சீர்வளி சாதனங்களை மாற்றுதல்.

12. உதகமண்டலம், கொடைக்கானல், கன்னியாகுமரி, ஏற்காடு போன்ற இடங்களில் பயணிகள் கம்பி வழிப் பயணத் திட்டத்தை விரைவில் செயல்படுத்துதல். இதன்மூலம் கழகத்திற்குக் கணிசமான வருமானம் கிடைக்கும்.

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக நிதி வகையிலான சாதனை:**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 2004–2005 ஆம் ஆண்டில் (திருத்திய மதிப்பீடு) ரூ.3,956.53 இலட்சம் மொத்த வியாபாரத் தொகையை ஈட்டியுள்ளது. ஆனால் 2003–2004 ஆம் ஆண்டு மொத்த வியாபாரத் தொகை ரூ.3,946.78 இலட்சமாகும். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 2004–2005 ஆம் ஆண்டுக்கு வரி விதிப்பிற்கு முன் ரூ.250.00 இலட்சம் இலாபம் நிகர ஆதாயத்தை எதிர்பார்த்துள்ளது. ஆனால், 2003–2004 ஆம் ஆண்டின் நிகர ஆதாயம் ரூ.293.21 இலட்சமாகும். நிகர ஆதாயத்தில் ஏற்பட்ட ஓரளவுக் குறைவுக்கு, கோடைப் பருவத்தில் உதகமண்டலத்தில் பருவகாலமல்லாது மழை பெய்ததும், சுனாமியால் மாமல்லபுரம் கடற்கரை ஓய்வு வளாகத்தில் கழகத்தின் உடைமைகளுக்குச் சேதமேற்பட்டதால் வணிக இழப்பு ஏற்பட்டதும், கன்னியாகுமரி மாவட்டத்தில் திருவள்ளுவர் சிலை, காட்சி கோபுரத்தின் அடிப்படை கட்டமைப்பு வசதிகள், முட்டுக்காடு மற்றும் முதலியார் குப்பத்திலுள்ள படகுத் துறைகள் ஆகியவையும் சுனாமியால் பாதிக்கப்பட்டதுமே காரணங்களாகும். சுனாமியாலும் உதகமண்டலத்தில் பருவமல்லாத மழையாலும் தொடர்ந்து கணிசமான அளவுக்குக் கழகத்திற்கு இழப்பு ஏற்பட்டபோதிலும் 2004–2005 ஆம் ஆண்டுக்கு ரூ.250.00 இலட்சம் நிகர ஆதாயம் கிடைக்குமென இன்னும் எதிர்பார்க்கப்படுகிறது.

**வருங்காலத்திற்கான எதிர்பார்ப்பு (நோக்கம்):**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் விருப்ப ஓய்வுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியதால், பணியாளரமைப்புச் செலவில் கணிசமான சேமிப்பும், குத்தகை வருமானத்தில் உயர்வும் ஏற்பட்டது. மேலும், இழப்பு ஏற்பட்டுள்ள அனைத்து ஓட்டல்கள் / உணவகங்களைக் குத்தகைக்கு விடவும், பெரிய ஓட்டல்களின் தரத்தையும் வாடிக்கையாளர் பணியையும் பேணிக் காத்து வருவதை

மேம்படுத்துவதில் கவனம் செலுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ஓட்டல்களுக்கு வந்து தங்குவோரின் எண்ணிக்கையை உயர்த்தவும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கணிசமான ஆதாயத்தை ஈட்டவும் நீண்ட காலம் ஆகும். போக்குவரத்துத் துறையில், பேருந்துகளை நவீனப்படுத்துவதும், இரயில்–சாலை வழி சுற்றுலா அமைப்பை விரிவுபடுத்துவதும் வலியுறுத்தப்படும். கம்பி வழிப் பயணத் திட்டம் செயற்படுத்தப்படுவதன்மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குக் கணிசமான வருமானம் கிட்டும்.

## 31) பரிசுகளும் பாராட்டுகளும்

கடந்த ஓராண்டுக் காலத்தில் தமிழ்நாடு சுற்றுலாத் துறை தேசிய மற்றும் உலக அளவில் பல பெருமைக்குரிய பாராட்டுகளையும் பரிசுகளையும் பெற்றுள்ளது.

### அ) 'ட்டி3' அமேடியஸ் விருது

மார்ச் 2004 புதுதில்லியில் நடைபெற்ற சாத்தே (தெற்கு ஆசிய பயணம் மற்றும் சுற்றுலா பரிமாற்றம்) SATTE - South Asia Travel & Tourism Exchange) நிகழ்ச்சியில் தமிழக அரசு சுற்றுலாத் துறைக்கு இவ்விருது வழங்கப்பட்டது. ஆண்டின் மிகச் சிறந்த சுற்றுலா நிகழ்வாக 64–வது ஸ்கால் (SKAL) உலக மாநாட்டை சென்னையில் நடத்தியதற்காக இந்த விருது அளிக்கப்பட்டது. (ட்டி3 என்பது ஒரு புகழ்பெற்ற சுற்றுலா இதழாகும். அமேடியஸ் என்பது சுற்றுலா மேம்பாட்டில் அமைப்பை உருவாக்கும் ஒரு முன்னிலை முகமையாகும்).

### ஆ) கலிலியோ எக்ஸ்பிரஸ் பயணம் மற்றும் சுற்றுலா விருது

சிறந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியமைக்காக இந்த விருது நவம்பர் 2004–ல் வழங்கப்பட்டது. சுற்றுலா வளர்ச்சிக்குத் தகவல் தொழில்நுட்பத்தை அதிக அளவு பயன்படுத்தியதற்கும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தும் ஓட்டல்கள் / சுற்றுலாப் பயணத் திட்டங்களில் இருக்கைகள் கணினி மூலம் முன்பதிவு செய்து உடனுக்குடன் அதற்கான தொகையைச் செலுத்தும் முறையை அறிமுகப்படுத்தியதற்காகவும் இவ்விருது அளிக்கப்பட்டது. (எக்ஸ்பிரஸ் என்பது இந்தியன் எக்ஸ்பிரஸ் குழுவை குறிக்கின்றது. கலிலியோ என்பது சுற்றுலா மேம்பாட்டில் அமைப்பை உருவாக்கும் ஒரு முன்னிலை முகமையாகும்).



### இ) பாட்வா சர்வதேச விருது

பசிபிக் பகுதி பயண எழுத்தாளர்கள் கூட்டமைப்பு, உலகச் சுற்றுலாவில் ஒரு பிரபலமான அமைப்பாகும். இந்த அமைப்பு செட்டிநாடு பாரம்பரிய சுற்றுலாவைப் பிரபலப்படுத்தியதற்காக தமிழ்நாடு சுற்றுலாவிற்கு இவ்விருதினை அளித்துள்ளது. மார்ச் 2005–ல் பெர்லினில் நடைபெற்ற உலகச் சுற்றுலா சந்தையில் தமிழ்நாடு சுற்றுலாத் துறை இவ்விருதைப் பெற்றது.

# இணைப்பு III

*(467 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண் 27

## செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம்

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2005–2006

### முகவுரை

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி நாளுக்கு நாள் புதுமைபெற்று, அசுர வேகத்தில் வளர்ந்து வருவதாலும், அறிவியல், மின்னணுப் பயன்பாடு மற்றும் செயற்கைக்கோள்வழி தகவல் பரிமாற்றம் போன்றவற்றாலும், செய்தி ஊடகங்கள் நாள்தோறும் நவீனமயமாகி வருகின்றன. எனவே, பரந்து விரிந்துள்ள இவ்வுலகமானது ஓர் உலகக் கிராமமாகச் (Global Village) சுருங்கி வருகிறது. எனவே, அரசுசார் செய்திகளை விரைந்து வழங்கிவரும் செய்தி—மக்கள் தொடர்புத் துறை உலகத் தரத்திற்கு இணையாக நவீனப்படுத்தப்பட்டேயாக வேண்டும் என்பது ஓர் அவசர அவசியமாகும். அதன் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையில் இத்துறையின் அனைத்துப் பிரிவுகளும் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

மக்களாட்சி முறையை முழுவதுமாக ஏற்றுக்கொண்டிருக்கின்ற நம்முடைய அரசியல் அமைப்பில், அரசின் அன்றாடச் செயல்பாடுகள் குறித்து மக்களுக்குத் தெரிவித்து தெளிவடையச் செய்வது என்பது ஒரு தவிர்க்க இயலா அம்சமாகும். அதன் அடிப்படையில், அனைத்து வகையான மக்கள் தொடர்புச் சாதனங்களையும் ஒருங்கிணைத்துப் பயன்படுத்தி, அரசின் கொள்கைகளையும், சாதனைகளையும், செயலாக்கங்களையும் மக்களுக்கு விளக்கி, பயனடையும் மக்களிடையே விழிப்புணர்ச்சியை உருவாக்கி வளர்ச்சிப் பணிகள் குறித்த மக்களின் உரிய ஈடுபாட்டை உறுதிப்படுத்திடும் வகையில் இத்துறை பெரும்பங்காற்றி வருகிறது. அதே நேரத்தில் திட்டப் பயன்பாடுகள் குறித்த மக்களின் மனநிலையை அரசின் பார்வைக்குக் கொண்டு செல்லும் பணியினையும் இத்துறை செவ்வனே செயல்படுத்தி வருகிறது.





அரசின் அறிவிப்புகள், திட்டங்கள் மற்றும் முக்கிய அரசு நிகழ்வுகள் ஆகியவற்றை நாள்தோறும் மக்கள் தொடர்புச் சாதனங்களுக்கு விரைந்து வழங்கிவரும் 'செய்தி வெளியீட்டுப் பிரிவு'; அரசின் அனைத்துத் துறைகளின் சாதனைகளையும், திட்டஞ்சார்ந்த செய்திகளையும், மாதந்தோறும் வெளியிட்டு வரும் 'தமிழரசு' இதழ்; வெளிப்படையான நிர்வாகம் என்ற அடிப்படையில், துறைகள் சார்ந்த ஒப்பந்த விலைப்புள்ளி விவரங்களைச் செய்தி இதழ்கள், மாநில மற்றும் மாவட்ட ஒப்பந்தப்புள்ளிச் செய்தி மலர்கள் மூலம் தெரிவிக்கும் 'விளம்பரப் பிரிவு'; முக்கிய நகரங்களில் அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை அரசுப் பொருட்காட்சிகள் மூலம் காட்சிக்கு வைக்கும் 'பொருட்காட்சிப் பிரிவு'; சான்றோர் நினைவைப் பேணிடும் வகையில் நினைவகங்கள் அமைத்துப் போற்றிப் புகழ் பரப்பும் 'நினைவகப் பிரிவு'; கேட்டவுடனேயே தகவல் வழங்கும் 'மேற்கோள் பிரிவு'; ஆய்வாளர்களுக்கும், மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் தகவல் கேந்திரமாகத் திகழ்ந்திடும் 'மாநிலச் செய்தி நிலையம்'; திரைத் துறை தொடர்பான நவீனத் தொழில்நுட்பங்களைப் பயிற்றுவிக்கும் 'திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனம்'; விழிப்புணர்வுக் கருத்துகள், அரசின் நல்வாழ்வுத் திட்டங்கள், செயலாக்கங்கள், முக்கிய நிகழ்வுகள் போன்றவற்றைத் திரை வடிவில் செய்தி மலராகவும், வீடியோ செய்தி மலராகவும் வெளியிட்டுவரும், 'திரைப்படப் பிரிவு'; தொலைதூரக் குக்கிராமங்கள் உட்பட அனைத்துப் பகுதிகளிலும் வாழும் அனைத்துத்தரப்பு மக்களுக்கும், அரசுக்கும் இடையே 'நல்லுறவுப் பாலம்' அமைத்திடும் வகையில் நற்பணிகளை ஆற்றிவரும் மாவட்டச் செய்தி—மக்கள் தொடர்பு அலுவலகங்கள் ஆகிய பன்முகச் செயல் களங்களை தன்னகத்தே கொண்டு இத்துறை சீரோடு செயல்பட்டு வருகிறது.

இந்திய மாநிலங்கள் எல்லாவற்றுள்ளும் 'முதல்நிலை நோக்கி'—என்ற அடிப்படையிலும் முன்னுதாரணமாகத் திகழ்கின்ற வகையிலும், பலரும் பாராட்டும் வகையிலும், வளர்ச்சித் திட்டங்களுக்கு முன்னுரிமை—அதே நேரத்தில் மக்களுக்குத் தேவையான பல்வேறு சமூக நலத் திட்டங்களின் செயலாக்கங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய மிகக் கூர்மையான மதிநுட்பத்தோடு, தொலைநோக்குப் பார்வையோடு, தமிழக அரசை வழிநடத்திடும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையில் இத்துறை நாள்தோறும் நவீனமயமாகி வருகிறது.

[2005 ஏப்ரல் 11

## அத்தியாயம் – 1

## செய்தி வெளியீட்டுப் பிரிவு

மக்களாட்சி அமைப்பில், 'நான்காவது தூணாக' விளங்கி வருகின்ற செய்தி ஊடகங்களின் பணிகள் என்பது ஒரு தவிர்க்க இயலா அங்கமாக முக்கியத்துவம் பெற்றுத் திகழ்ந்து வருகின்றன. அதிலும், குறிப்பாக உலகமானது 'அறிவு சார்' நிலையை எய்தி வருகின்ற இன்றைய சூழலில், வளர்ந்து வரும் மின்னணுத் தொடர்பு, வான் தொடர்பு ஆகியவற்றின் பயன்பாட்டுத் தாக்கத்தின் விளைவாகச் செய்திப் பரிமாற்றம் என்பது ஒரு 'மின்னல் வேக' நிலையினை எய்தியுள்ளது. அரசின் புதிய அறிவிப்புகளை, செய்திகளை, செயல்பாடுகளைத் தொடர்புடைய வண்ணப் புகைப்படங்களுடன் செய்தி இதழ்களுக்கு மின்னணு அஞ்சல் வழியில் உடனுக்குடன் அனுப்பிடும் பணி மற்றும் வீடியோ கேசட்டுகளாக தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்கும் பணி ஆகியவை அரசின் அன்றாடப் பணிகளில் அவசர அவசியமான மிக முக்கியப் பணியாகப் பரிணாமம் பெற்றுள்ளது. அந்த வகையில், தலைமைச் செயலகத்தில் உள்ள செய்தி வெளியீட்டுப் பிரிவானது, அரசின் செய்திகளை பத்திரிகைகள் மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு உடனுக்குடன் வழங்கும் பணியினை மேற்கொண்டு வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் செய்தி வெளியீடுகள், அரசின் அனைத்துத் துறைகளின் செயல்பாடுகள், அரசின் நலத் திட்டங்கள், சாதனைகள், ஆக்கப் பணிகளைப் பற்றிய செய்திகள்; அவற்றோடு தொடர்புடைய புகைப்படங்கள் ஆகியவை இப்பிரிவின் மூலம் நாளிதழ்கள், தொலைக்காட்சிகள், செய்தி நிறுவனங்கள், வானொலி மற்றும் இணைய தளங்கள் என ஏறத்தாழ 100 தகவல் தொடர்பு நிறுவனங்களுக்கு, நேரடியாகவும், நிகரி மற்றும் மின்னணு அஞ்சல் வழியாகவும் உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செய்தியாளர் கூட்டங்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கான செய்தியாளர் கூட்டங்கள் ஆகியவற்றிற்குத் தேவையான ஏற்பாடுகளை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது. அரசின் முக்கிய அறிவிப்புகள் மற்றும் செய்தி வெளியீடுகளை மாவட்டங்களில் உள்ள செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு அனுப்பிவைத்து, மாவட்டங்களில் வெளியிடப்படும் ஏடுகளிலும் அச்செய்திகள் இடம்பெறும் வகையிலும், மாவட்டங்களிலிருந்து பெறப்படும் முக்கியச் செய்திகள்



2005 ஏப்ரல் 11]

தலைமையகத்திலிருந்து வெளிவரும் ஏடுகளில் இடம்பெறும் வகையிலும் இப்பிரிவின் மூலம் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், துறைச் செயலாளர்கள் விழாக்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கலந்துகொள்ளும் முக்கிய நிகழ்ச்சிகள், செய்தியாளர் கூட்டங்கள், முக்கிய பிரமுகர்களின் வருகை போன்ற நிகழ்வுகளைப் புகைப்படம் எடுத்து அனைத்து நாளிதழ்களுக்கும் வழங்கும் பணியினை மேற்கொள்வதுடன், இதுபோன்ற நிகழ்ச்சிகளைப் படம் எடுப்பதற்குத் தேவையான உதவிகளை தொலைக்காட்சிகளின் ஒளிப்பதிவாளர்கள் மற்றும் நாளிதழ்களின் புகைப்படக்காரர்களுக்கும் இப்பிரிவு வழங்கி வருகின்றது.

### செய்தியாளர்களுக்கு அங்கீகார அட்டை (Accreditation Card)

சென்னை மற்றும் வெளிமாநிலங்களிலிருந்து வெளியாகும் நாளிதழ்களின் செய்தியாளர்கள், வானொலி, அரசு மற்றும் தனியார் தொலைக்காட்சிகள், திரைப்படப் பிரிவு, புகைப்படப் பிரிவு ஆகியவற்றில் பணிபுரியும் செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள், ஒளிப்பதிவாளர்கள் ஆகியோருக்கு 'செய்தியாளர் அங்கீகார அட்டைகள்' ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன. அரசால் அமைக்கப்படும் செய்தியாளர் அங்கீகாரக் குழுவின் பரிந்துரைக்கேற்ப, இந்த அட்டைகள் வழங்கப்படுகின்றன. நடப்பாண்டில் தமிழகம் முழுவதும் 554 செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள், ஒளிப்பதிவாளர்களுக்கு 'செய்தியாளர் அங்கீகார அட்டைகள்' வழங்கப்பட்டுள்ளன.

இந்த அங்கீகார அட்டைகள் பெறும் பத்திரிகையாளர்களுக்கு, அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் இலவசமாகப் பயணம் செய்யப் பேருந்து அட்டையும், இரயில் பயணத்தில் 50 சதவிகித கட்டணச் சலுகையும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய வாடகைக் குடியிருப்புகளில் வீடு ஒதுக்கீடு பெறுவதற்கு முன்னுரிமையும் வழங்கப்பட்டு வருகின்றன.

### பருவ இதழ்களின் செய்தியாளர்களுக்குச் செய்தியாளர் அட்டை

வார இதழ்கள், மாத இதழ்கள் போன்ற பருவ இதழ்களைச் சேர்ந்த செய்தியாளர்கள் மற்றும் புகைப்படக்காரர்களுக்கு 'செய்தியாளர் அட்டைகள்' வழங்கப்படுகின்றன. இவ்வாண்டில் மொத்தம் 155 செய்தியாளர் அட்டைகள் சென்னையில் வழங்கப்பட்டுள்ளன.

[2005 ஏப்ரல் 11

**மாவட்டங்களிலுள்ள செய்தியாளர்களுக்கு அடையாள அட்டை**

மாவட்டங்களிலுள்ள செய்தியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர்கள் மூலமாகச் செய்தியாளர் அடையாள அட்டைகள் மற்றும் இலவசப் பேருந்துப் பயண அட்டைகள் வழங்கப்படுகின்றன. மேலும், அடையாள அட்டை பெற்ற செய்தியாளர்களுக்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய வாடகைக் குடியிருப்புகளில் முன்னுரிமை அடிப்படையில் வாடகைக்கு வீடுகள் ஒதுக்கப்படுகின்றன.

மதுரை, இராமநாதபுரம், காஞ்சிபுரம், தருமபுரி, சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய 8 மாவட்டங்களிலுள்ள 230 பத்திரிகையாளர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் சலுகை விலையில் வழங்கப்பட்டுள்ளன.

**பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதித் திட்டம்**

அங்கீகாரம் அல்லது அடையாள அட்டைகள் பெற்று, 20 ஆண்டுகள் அல்லது அதற்குமேல் தொடர்ச்சியாகப் பணியாற்றிய ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள், செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள் மற்றும் தொலைக்காட்சி நிறுவனச் செய்தியாளர்கள், ஒளிப்பதிவாளர்கள் இவர்களில் எவரேனும் பணியிலிருக்கும்போதே இயற்கை எய்தினால் அவர்களது குடும்பத்திற்கு 'பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதித் திட்டத்தின்' மூலம் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிதி உதவி வழங்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கேற்ப, இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் உதவி நிதி 4–9–2001 முதல் ரூ. 50,000/–லிருந்து ரூ.2 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படுகிறது.

**பத்திரிகையாளர் ஓய்வூதியம்**

பத்திரிகைத் துறையில் பணியாற்றி ஓய்வுபெற்று, வறுமை நிலையில் உள்ள மூத்த பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் 1986 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் தொடங்கப்பட்டபோது, மாதந்தோறும் ரூ.250/– மட்டுமே ஓய்வூதியமாக வழங்கப்பட்டது. பின்னர் இந்த ஓய்வூதியம் படிப்படியாக உயர்த்தப்பட்டு மாதந்தோறும் ரூ.2,000/– என்ற அளவில் வழங்கப்பட்டு வந்தது. கடந்த 2001–2002 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கிணங்க பத்திரிகையாளர் மாத ஓய்வூதியத் தொகை ரூ. 2,000/–லிருந்து ரூ.3,000/–ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் தற்போது



2005 ஏப்ரல் 11]

பத்திரிகையாளர்களுக்கும் மாதந்தோறும் ஓய்வூதியம் பெற்று வரும் 67 ரூ.3,000/– ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

**பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம்**

பத்திரிகையாளர் ஓய்வூதியம் பெற்றுவந்த மூத்த பத்திரிகையாளர் இயற்கை எய்தினால், அவரின் துணைவியாருக்கு, அவரது வாழ்நாள் முழுவதும் குடும்ப ஓய்வூதியமாக மாதந்தோறும் ரூ.500/– வழங்கப்பட்டு வந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 4–9–2001 முதல் இத்தொகையானது ரூ.500/–லிருந்து ரூ.1,500/–ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**பத்திரிகையாளர்களுக்கு எளிய தவணையில் குடியிருப்புகள்/வீடுகள்**

தமிழகத்தில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட (Accredited) பத்திரிகையாளர்களுக்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் எளிய தவணையில் வீடு வாங்குவதற்கு ஏதுவாக ஒரு சிறப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தைத் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியமும், பாரத ஸ்டேட் வங்கியும் இணைந்து செயல்படுத்துகின்றன.

**புகைப்படப் பிரிவு**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், முக்கியப் பிரமுகர்கள் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள், விழாக்கள், கூட்டங்கள் மற்றும் அரசால் மேற்கொள்ளப்படும் நலத் திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள், திட்டப் பணிகள் ஆகியவற்றைப் புகைப்படப் பிரிவிற்கென வாங்கப்பட்ட டிஜிட்டல் கேமரா மூலம் புகைப்படம் எடுத்து உடனுக்குடன் மின்னஞ்சல் வழியாக அனைத்து நாளிதழ்களுக்கும் அனுப்பும் பணியினை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது. இதன் காரணமாக நாளிதழ்கள் வண்ணப் புகைப்படங்களை உரிய காலத்தில் பெற்று பிரசுரித்து வருகின்றன.

**நவீன முறையில் இணையத் தொடர்பு (Web / Video Streaming)**

தற்பொழுது, சென்னையிலுள்ள தலைமையிடத்தில் மட்டுமே மின்னஞ்சல் வழியாகச் செய்தி இதழ்களுக்கு வண்ணப் புகைப்படங்கள் உடனுக்குடன் அனுப்பப்பட்டு வருகின்றன. மாநிலத்தில் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சிகள், வளர்ச்சிப் பணிகள், இயற்கைப் பேரிடர் காலங்களில் வழங்கப்படும் நிவாரணங்கள் ஆகியவை வீடியோ படங்களாக எடுக்கப்பட்டு, வீடியோ ஒளிநாடாக்கள் தரை வழியாகவோ

அல்லது வான் வழியாகவோ தலைமையிடத்திற்குக் கொண்டுவரப்பட்டு, தேவையான பிரதிகளைப் பதிவு செய்து தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இதில் ஏற்படும் காலவிரையத்தைத் தவிர்த்து, 'ஆப்டிகல் பைபர் கேபிள்' வழியாகப் படம் எடுக்கும் வீடியோ கேமராவை தலைமையகத்தில் உருவாக்கப்படவுள்ள நவீன இணைய அமைப்போடு இணைத்து, நேரடியாகப் பெறப்படும் கேமரா காட்சிகள் ஒளி, ஒலியுடன் மின்னஞ்சல் வழியாக அனைத்துத் தொலைக்காட்சிகளுக்கும் உடனுக்குடன் வழங்கப்படவுள்ளன.

மேலும், இதேபோன்று, மாநிலத்தின் எந்த ஒரு மூலையிலும் நடைபெறும் நிகழ்ச்சிகளைப் பற்றிய புகைப்படங்களும், செய்திகளும் தலைமையகத்திற்கும், தலைமையகத்திலிருந்து அனைத்து மாவட்டங்களுக்கும் உடனுக்குடன் காலவிரயமின்றி இப்புதிய இணையத்தின் மூலம் வழங்கிட இயலும்.

இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையிலான இம்முன்னோடித் திட்டத்தை உருவாக்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையில் ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான திட்ட அறிக்கை தீவிரப் பரிசீலனையில் உள்ளது.



## அத்தியாயம் – 2

## மேற்கோள் பிரிவு

ஆங்கிலம் மற்றும் தமிழ் நாளிதழ்கள், பருவ இதழ்களின் முக்கியச் செய்தி நறுக்குகளை அன்றைய தினமே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், தொடர்புடைய மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், துறைச் செயலாளர்களுக்கும் பார்வைக்கெனவும், நடவடிக்கைக்கெனவும் தொகுத்து அனுப்பிவைக்கும் பணியை மேற்கோள் பிரிவு மேற்கொண்டு வருகிறது.

இப்பிரிவில் பல ஆண்டுகளுக்கு முந்தைய நாளிதழ்களின் தொகுப்புகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவற்றிலிருந்து துறைகளுக்கு அவ்வப்போது தேவைப்படும் தொடர்புடைய செய்தி நறுக்குகள் இப்பிரிவால் வழங்கப்படுகின்றன.

இப்பிரிவின் பயன்பாட்டுக்கென ஒரு கணினி, அதன் துணைக் கருவிகள் மற்றும் ஒரு நிகரி ரூ.1.50 இலட்சத்தில் வாங்கிப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

### சிறப்பு வடிவத் தளவாடங்கள்

2004–2005 பகுதி-II திட்டத்தின்கீழ் சிறப்பு வடிவத் தளவாடங்கள் ரூ.1.35 இலட்சம் செலவில் டான்சி நிறுவனம் மூலம் பெற்றுப் பயன்படுத்தப்படுகின்றன.

### மின்னணு ஆவணக் காப்பக முறை

இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மேற்கோள் பிரிவில் அரசுத் தொடர்பான முக்கியச் செய்திகள் கணினிகளில் பதிவு செய்யப்பட்டு, தேவைக்கேற்ப உடனுக்குடன் கண்டெடுக்கும் வகையில், 'மின்னணு ஆவணக் காப்பக முறை' (Electronic Archiving System) வெகுவிரைவில் உருவாக்கப்படவுள்ளது.

[2005 ஏப்ரல் 11

## அத்தியாயம் – 3

### விளம்பரம்

தமிழ்நாடு அரசின் அனைத்து விளம்பரங்களும், நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்களில் வெளியிடுதல் மையப்படுத்தப்பட்டு, செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை வழியாக வெளியிடப்பட்டு வருகின்றன. அரசின் அனைத்துத் துறைகள், பல்வேறு கழகங்கள், வாரியங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றின் விளம்பரங்கள் அனைத்தும், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை வழியாக வெளியிடப்பட்டு வருகின்றன. விளம்பரத்தின் தன்மை, அவை சென்றடைய வேண்டிய பகுதி, அறிய வேண்டிய மக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள் அளிக்கப்பட்டு வருகின்றன. சிறிய மற்றும் நடுத்தரப் பத்திரிகைகளையும் ஆதரிக்கும்பொருட்டு, அவற்றிற்கும் அரசு விளம்பரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

நவீன தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி, கூடுதல் செலவு ஏதுமின்றி . அனைத்து அரசு விளம்பரங்களும், மக்களையும், ஒப்பந்தக்காரர்களையும் எளிதில் சென்றடையும் வகையில் ஒப்பந்தப்புள்ளி மற்றும் வரைகலை விளம்பரங்கள், தேசிய தகவல் மையத்தின் மூலம் www.tn.gov.in என்ற இணைய வலைதளத்தில் தமிழக அரசின் சார்பில் வெளியிடப்படுகின்றன.

அரசு விளம்பரங்கள் பத்திரிகைகளில் வெளியிடப்படுவதுடன் இணையதளத்திலும் வெளியிடப்படுவதால், அரசின் வெளிப்படையான நிருவாகம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பதோடு, தகுதியான எவரும் தமிழக அரசின் ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அரசின் செயல்பாடுகள் அனைத்தும் மக்கள் அறிந்துகொள்ளும் வகையில் வெளிப்படையாக இருத்தல் வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில், 1998 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட ஒப்பந்தப்புள்ளிச் சட்டத்திற்குட்பட்டு 'தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள் 2000' இயற்றப்பட்டு, அதன் அடிப்படையில் மாவட்ட/மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்கள் வாரந்தோறும் வெளியிடப்படுகின்றன.

ரூ.5 இலட்சத்திற்கு மேல் ரூ.10 இலட்சம் வரையிலான கொள்முதல் மதிப்பு மற்றும் ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.25 இலட்சம் வரையிலான பணிகளின் மதிப்பு ஆகியவற்றை அளவீடாகக் கொண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும்,



2005 ஏப்ரல் 11]

ரூ.10 இலட்சத்திற்கு மேற்பட்ட கொள்முதல் மதிப்பு மற்றும் ரூ.25 இலட்சத்திற்கு மேற்பட்ட பணிகளின் மதிப்பு ஆகியவற்றை அளவீடாகக் கொண்ட ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள், மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் வெளியிடப்படுகின்றன. இம்மலர்களில் வெளியிடப்படும் ஒப்பந்தப்புள்ளிகளின் முடிவுகளும் வெளியிடப்பட்டு வருகின்றன.

[2005 ஏப்ரல் 11

## அத்தியாயம் – 4

## பொருட்காட்சி

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் பொருட்காட்சிப் பிரிவால் நடத்தப்படும் அரசுப் பொருட்காட்சிகள், அரசின் கொள்கைகள், நலத் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த உரிய விளக்கங்களைப் பொது மக்கள் எளிதில் அறிந்திடும் வகையில் நடத்தப்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் மதுரை மற்றும் கோயம்புத்தூரில் ஏப்ரல்–ஜூன் மாதங்களிலும், சேலத்தில் ஜூலை–செப்டம்பர் மாதங்களிலும் அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

இந்தப் பொருட்காட்சிகளில், அரசுத் துறைகள், அரசுச் சார்பு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகியவை கலந்து கொள்கின்றன. அரசுப் பொருட்காட்சிகள் மக்களுக்குப் பொழுதுபோக்காக அமைவதோடு நேரிடையாகவும், மறைமுகமாகவும் பலருக்கு வேலைவாய்ப்பையும் அளித்து வருகின்றன.

*2004–2005* ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றதால் ஏப்ரல், ஜூன் மாதங்களில் நடைபெறவேண்டிய கோயம்புத்தூர் மற்றும் மதுரை அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்படவில்லை. நிர்வாகக் காரணங்களால் *2004* ஆம் ஆண்டு ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் நடத்தப்படவேண்டிய சேலம் அரசு பொருட்காட்சியும் நடத்தப்படவில்லை. திருநெல்வேலியில் *2004* ஆம் ஆண்டு ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் அரசுப் பொருட்காட்சி நடத்தப்பட்டு, ரூ.*22.16* இலட்சம் இலாபமாக ஈட்டப்பட்டது. இந்த ஆண்டு மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சி அல்லது திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்படவுள்ளன.

மேலும், சிறு கண்காட்சிகள், மாவட்டங்களில் ஆண்டுதோறும் முக்கிய விழாக்கள் நடைபெறும் இடங்களில் மாவட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலகங்கள் மூலம் நடத்தப்படுகின்றன.

இந்தியத் துணைக் கண்டத்தின் ஒருமைப்பாடு, மத நல்லிணக்கம் ஆகியவற்றை வலியுறுத்தும் வகையில், புதுடெல்லியில் *2004* அக்டோபர் மாதம் நடைபெற்ற மலர்ப் பேரணி விழாவில் **(Phool Walon Ki Saire)** இத்துறையின் பொருட்காட்சிப் பிரிவு பங்கேற்றது. இவ்விழாவில் தமிழகம் கடந்த *4* ஆண்டுகளாகத் தொடர்ந்து முதல் பரிசைப் பெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தகுந்ததாகும்.



2005 ஏப்ரல் 11]

சென்னையில் ஆண்டுதோறும் நடைபெறும் குடியரசு தின விழாவில், அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் கலந்துகொள்வதும், ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்வதும் இத்துறையின் பங்களிப்பாகும். இவ்வாண்டு, சுனாமிப் பேரலையினால் தமிழ்நாட்டின் கரையோர மாவட்டங்களில் ஏற்பட்ட மிகக் கடுமையான பாதிப்புகளால், அலங்கார அணிவகுப்பு, கலைநிகழ்ச்சிகள் போன்ற நிகழ்ச்சிகளின்றி குடியரசு தின விழா எளிமையான முறையில் நடைபெற்றது.

சென்னையில் நடைபெறும் அகில இந்தியச் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் இத்துறை பங்கேற்று அரங்கு அமைத்துள்ளது. புதுடெல்லியில் கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் நடைபெற்ற அகில இந்திய பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில் தமிழகத்தின் சார்பில் இத்துறை பங்கேற்றது. பொருட்காட்சி நடைபெறும் டெல்லி பிரகதி மைதானத்தில், இத்துறையின் பொறுப்பில் உள்ள 'தமிழ்நாடு அரங்கில்' தமிழ்நாடு அரசின், செய்தி—மக்கள் தொடர்புத் துறை, சுற்றுலாத் துறை, வேளாண்மைத் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக இயக்ககம், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, தமிழ்நாடு கனிம நிறுவனம், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம், தொழில் வணிகத் துறை, சென்னைத் துறைமுகம், "ஆவின்", தமிழ்நாடு மின்னணு நிறுவனம், தமிழ்நாடு மின்சார வாரியம் ஆகிய துறைகளின் செயல்பாடுகளை காட்சிப்படுத்திடும் வகையில் இப்பிரிவு ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொண்டது. இப்பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், முதல் தடவையாக மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களைக் காட்சிப்படுத்தியதும் ரூ.*52* இலட்சம் மதிப்பிலான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டதும் குறிப்பிடத் தகுந்த ஒன்றாகும்.

[2005 ஏ ’ரல் 11
ரரம்,

## அத்தியாயம் – 5

## நினைவகங்கள்

’மம்,

மக்களால் பெரிதும் நேசிக்கப்பட்ட தியாகசீலர்கள், சான்றோர்கள் நல்வழி காட்டிய தலைவர்களின் பெருமைகளை என்றென்றும் நினை; கூரத்தக்க வகையில், அவர்களுக்குத் திருவுருவச் சிலைக நினைவகங்கள் அமைத்துச் சிறப்புச் செய்யும் பணிகள் இத்து மூலம் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இவ்வகையில் 39 நினைவக 2 அரங்கங்கள், 4 நினைவுத் தூண்கள், ஒரு நினைவுப் பூங் ஆகியவை உருவாக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன.

1. பேரறிஞர் அண்ணா நினைவிடம் மற்றும் பேரறிஞர் அண்ணா அருங்காட்சியகம், மெரினா கடற்கரை, காமராஜர் சாலை, சென்னை.
2. பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடம், மெரினா கடற்கரை, காமராஜர் சாலை, சென்னை.
3. வள்ளுவர் கோட்டம், நுங்கம்பாக்கம், சென்னை.
4. கலைவாணர் அரங்கம், வாலாஜா சாலை, சென்னை.
5. இராஜாஜி மண்டபம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை.
6. காந்தி மண்டபம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை.
7. மூதறிஞர் இராஜாஜி நினைவாலயம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை.
8. ‘வெள்ளையனே வெளியேறு’ இயக்கப் பொன்விழா நினைவுத் தூண், காந்தி மண்டப வளாகம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை.
9. மொழிப்போர்த் தியாகிகள் மணிமண்டபம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை.
10. தியாகிகள் மணிமண்டபம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை.



2005 ஏப்ரல் 11]

41. 11. பெரியவர் எம். பக்தவத்சலம் நினைவிடம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை.
12. பெருந்தலைவர் காமராஜர் நினைவு இல்லம், திருமலை சாலை, தியாகராய நகர், சென்னை.
13. பெருந்தலைவர் காமராஜர் நினைவகம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை.
14. மகாகவி பாரதியார் நினைவு இல்லம், துளசிங்கப் பெருமாள் கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.
15. சுதந்திரப் பொன்விழா நினைவுத் தூண் (போர் நினைவுச் சின்னம் அருகில்) காமராஜர் சாலை, சென்னை.
16. குடியரசுப் பொன்விழா நினைவுத் தூண் (காந்தி சிலை அருகில்) காமராஜர் சாலை, சென்னை
17. பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம், சின்ன காஞ்சிபுரம், காஞ்சிபுரம் மாவட்டம்.
18. முத்து மண்டபம் (இலங்கையின் கடைசித் தமிழ் மன்னர் விக்ரமசிங்க ராஜா நினைவகம்) பாலாற்றங்கரை, வேலூர், வேலூர் மாவட்டம்.
19. அண்ணா கலை அரங்கம், ஆபீஸர்ஸ் லேன், வேலூர், வேலூர் மாவட்டம்.
20. சிப்பாய்க் கலகம் நினைவுத் தூண், மக்கான் சந்திப்பு, வேலூர், வேலூர் மாவட்டம்.
21. மூதறிஞர் இராஜாஜி பிறந்த இல்லம், தொரப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம்.
22. பெரியார்–அண்ணா நினைவகம், ஈரோடு.
23. திருப்பூர் குமரன் நினைவகம், திருப்பூர், கோயம்புத்தூர் மாவட்டம்.
24. பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி மணிமண்டபம், உடுமலைப்பேட்டை, கோயம்புத்தூர் மாவட்டம்.

[2005 ஏப்ரல் 11

25. வ.வே. சுப்பிரமணியம் நினைவகம், வரகனேரி அக்ரஹாரம், திருச்சிராப்பள்ளி.

26. தில்லையாடி வள்ளியம்மை நினைவகம், தில்லையாடி கிராமம், நாகப்பட்டினம் மாவட்டம்.

27. நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் நினைவு இல்லம், நாமக்கல்.

28. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மணிமண்டபம், முத்துப்பேட்டை சாலை, நாடியம்மாள்புரம், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.

29. கவியரசர் கண்ணதாசன் மணிமண்டபம், புதிய பேருந்து நிலையம் அருகில், காரைக்குடி, சிவகங்கை மாவட்டம்.

30. தவத்திரு குன்றக்குடி அடிகளார் மணிமண்டபம், தெற்கு ரத வீதி, குன்றக்குடி, சிவகங்கை மாவட்டம்.

31. மருதுபாண்டியர் நினைவு மண்டபம், சுவீடிஷ் மிஷன் மருத்துவமனை வளாகம், திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம்.

32. தியாகி விஸ்வநாததாஸ் நினைவு மண்டபம், திருமங்கலம், மதுரை மாவட்டம்.

33. தியாகசீலர் கக்கன் மணிமண்டபம், தும்பைப்பட்டி, மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்.

34. பூலித்தேவன் நினைவு மாளிகை, நெற்கட்டும்செவல் கிராமம், சிவகிரி வட்டம், திருநெல்வேலி மாவட்டம்.

35. பெருந்தலைவர் காமராஜர் பிறந்த இல்லம், சுலோசனா தெரு, விருதுநகர்.

36. பாரதி மணிமண்டபம், எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம்.

37. பாரதியார் பிறந்த இல்லம், எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம்.

38. வ.உ.சி. இல்லம், ஒட்டப்பிடாரம், தூத்துக்குடி மாவட்டம்.

39. காந்தி நினைவு மண்டபம், கடற்கரைச் சாலை, கன்னியாகுமரி.

40. பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபம், கடற்கரைச் சாலை, கன்னியாகுமரி.



2005 ஏப்ரல் 11]

41. சதாவதானி செய்குத்தம்பி பாவலர் நினைவு மண்டபம், இடலாக்குடி, கோட்டார், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

42. பொதுவுடைமை வீரர் ப. ஜீவானந்தம் மணிமண்டபம், சர். சி.பி. ராமசாமி நினைவுப் பூங்கா, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

43. வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட இடமான கயத்தாறில் நினைவுப் பூங்கா, தூத்துக்குடி மாவட்டம்.

44. கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் மணிமண்டபம், காயிதே மில்லத் அரசினர் மகளிர் கல்லூரியின் பின்புறம், சென்னை.

45. பெரியார் நினைவகம், வைக்கம், கோட்டயம் மாவட்டம், கேரள மாநிலம்.

46. வீரன் அழகுமுத்துக்கோன் மணிமண்டபம், கட்டாரங்குளம், தூத்துக்குடி மாவட்டம்.

கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் அவர்களுடைய நினைவாக, திருநெல்வேலியில் ரூ.75 இலட்சம் செலவில் மணிமண்டபம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் நினைவாக, தென்னிந்திய நடிகர் சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க, தென்னிந்திய நடிகர் சங்கத்தின் மூலமாக நினைவு மண்டபம் அமைப்பதற்கென, அடையாறு ஆந்திர மகிள சபா அருகில் ரூ.10 கோடியே 19 இலட்சம் மதிப்பீட்டிலான 0.65 ஏக்கர் மனையிடம் அரசால் தென்னிந்திய நடிகர் சங்கத்திற்கு இலவசமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கும் பொருட்டு, விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டம், ஓமந்தூர் கிராமத்தில் 0.46.5 எக்டேர் நிலம் ரூ.43,500 செலவில் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மணிமண்டபம் கட்டுவதற்கு ரூ.75 இலட்சத்திற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டம், தொரப்பள்ளிக்கு அருகிலுள்ள மோர்னப்பள்ளியில் மூதறிஞர் இராஜாஜி அவர்களுக்கு மணிமண்டபம்

அமைத்திட 1.00 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. பொதுப் பணித் துறையின் மதிப்பீடு கிடைக்கப் பெற்றவுடன், உரிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும்.

ஈரோடு மாவட்டம், அரச்சலூர் கிராமம், ஓடாநிலையில் தீரன் சின்னமலைக்கு மணிமண்டபம் அமைக்க 3.05.0 எக்டேர் தனியார் நிலம் ரூ.19.67 இலட்சம் செலவில் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த இடத்தில் மணிமண்டபம் அமைக்க ரூ.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டுள்ளார்கள். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் இங்கு சமுதாயக் கூடமும் கட்டப்படும்.

தருமபுரி மாவட்டம், அதியமான் கோட்டையில், அதியமான் கோட்டம் மற்றும் திருமண மண்டபம் அமைத்திடும் வகையில், 0.81.0 எக்டேர் நிலம் ரூ.1,28,253/- செலவில் கையகப்படுத்தப்பட்டுள்ளது. கட்டுமானப் பணிகளுக்கென ரூ.112 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாள் நூற்றாண்டு நிறைவு விழா நினைவாகப் பெருந்தலைவர் காமராஜர் பிறந்த ஊரான விருதுநகரில் நகராட்சி தங்கும் விடுதி வளாகத்தில் நினைவுத் தூண் அமைப்பதற்காக ரூ.5 இலட்சமும், மணிமண்டபம் கட்டுவதற்காக ரூ.9 இலட்சமும், ஆக மொத்தம் ரூ.14 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 14–7–2003 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, தற்பொழுது கட்டுமானப் பணிகள் முடிவுறுந்தருவாயில் உள்ளன.

திருப்பூர் குமரன் நூற்றாண்டு விழாவினையொட்டி, திருப்பூர் குமரன் நினைவகத்தில் அவரது மார்பளவு வெண்கலச் சிலை நிறுவப்பட்டுள்ளது.

சென்னை மெரினா கடற்கரையில் உள்ள பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிட வளாகத்தில், டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் அருங்காட்சியகம் ரூ.38.50 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன், தந்தை பெரியார் ஆகியோரின் 9 அடி உயர வெண்கலச் சிலைகள், ஒவ்வொன்றும் தலா ரூ.2.50 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்டுள்ளன. புதுடெல்லி நாடாளுமன்ற வளாகத்தில் இச்சிலைகள் விரைவில் நிறுவப்படவுள்ளன.





ரூ.7 இலட்சம் மதிப்பீட்டில் 28 நினைவகங்களில் தொடர்புடைய தலைவர்களின் வாழ்க்கைக் குறிப்புகள் அடங்கிய கிரானைட் கல்வெட்டுகள் வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, பொதுப் பணித் துறையின் மூலம் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தியாகி செண்பகராமன் அவர்களின் முழுவுருவச் சிலை சென்னை, கிண்டியிலுள்ள காந்தி மண்டப வளாகத்தில் நிறுவப்படவுள்ளது.

செஞ்சிக் கோட்டை அரசன் தேசிங்கு ராஜன் உயிர்நீத்த இடமான விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டத்திலுள்ள கடலி கிராமத்தில் நினைவகம் கட்டி, சிலை நிறுவும் பணிகளுக்காக ரூ.36.80 இலட்சம் மதிப்பீடு பொதுப் பணித் துறையிடமிருந்து பெறப்பட்டுள்ளது. வருவாய்த் துறையின் மூலம் கட்டுமான இடம் கையகப்படுத்தப்பட்ட பின்னர், நினைவகம் அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 9–3–2005 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ரெட்டமலை சீனிவாசன் அவர்களுக்கு தமிழ்நாட்டில் தகுந்த இடத்தில் நினைவுச் சின்னம், நினைவு மண்டபம் அரசு சார்பில் உருவாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இத்துறையின் சார்பில் இதற்கான ஆயத்தப் பணிகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 10–3–2005 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் கடைசி காலத்தில் வாழ்ந்த மதுரை—திருநகர் இல்லம் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் நினைவில்லமாக அரசின் சார்பில் உருவாக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஆயத்தப் பணிகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[2005 ஏப்ரல் 11

## அத்தியாயம் - 6

### அரசு விழாக்கள் - பல்துறைப் பணிவிளக்க முகாம்கள்

நமது நாட்டின் விடுதலைக்காகவும், தமிழ் மொழி வளர்ச்சிக்காகவும், அருந்தொண்டாற்றிய தலைவர்களையும், அறிஞர் பெருமக்களையும் போற்றிப் புகழ்ந்திட அவர்தம் பெருமையை நாட்டு மக்கள் அறிந்திடச் செய்யும் வகையில், அவர்களது பிறந்த நாள் விழாக்கள், நினைவு நாள் நிகழ்ச்சிகள் அரசினால் நடத்தப்படுகின்றன.

ஆண்டுதோறும் தலைவர்களின் திருவுருவச் சிலைகளுக்கு அவர்களின் பிறந்த நாளின்போது கீழ்க்கண்டவாறு அரசின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்படுகிறது:

| | | |
|---|---|---|
| 1. | ஜனவரி 17 | பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாள் |
| 2. | ஜனவரி 23 | நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பிறந்த நாள் |
| 3. | ஜனவரி 30 | மகாத்மா காந்தியடிகள் நினைவு நாள் |
| 4. | ஏப்ரல் 14 | டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாள் |
| 5. | ஏப்ரல் 27 | சர். பிட்டி. தியாகராயர் பிறந்த நாள் |
| 6. | ஏப்ரல் 29 | பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் |
| 7. | ஜூன் 5 | கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் பிறந்த நாள் |
| 8. | ஜூன் 24 | கவியரசர் கண்ணதாசன் பிறந்த நாள் |
| 9. | ஜூலை 15 | பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் |
| 10. | ஜூலை 17 | தியாகிகள் தினம் — தியாகி சங்கரலிங்கனார் மற்றும் தியாகி ஆர்யா என்கிற பாஷ்யம் |
| 11. | செப்டம்பர் 5 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. பிறந்த நாள் |
| 12. | செப்டம்பர் 15 | பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் |
| 13. | செப்டம்பர் 17 | தந்தை பெரியார் பிறந்த நாள் |
| 14. | செப்டம்பர் 29 | முன்னாள் மேயர் சிவராஜ் பிறந்த நாள் |
| 15. | அக்டோபர் 2 | மகாத்மா காந்தியடிகள் பிறந்த நாள் |



2005 ஏப்ரல் 11]

| | | |
|---|---|---|
| 16. | அக்டோபர் 30 | பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள் |
| 17. | நவம்பர் 14 | பண்டித ஜவஹர்லால் நேரு பிறந்த நாள் |
| 18. | டிசம்பர் 10 | மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் |
| 19. | டிசம்பர் 11 | மகாகவி பாரதியார் பிறந்த நாள் |

மாவட்டங்களில் கடந்த 2004–2005 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் பெருமக்களின் பிறந்த நாள் விழாக்கள் கொண்டாடப்பட்டன:

1. இராமநாதபுரத்தில் 19–6–2004 அன்று ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி அவர்களின் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது.
2. ஈரோடு மாவட்டம் ஓடாநிலையில் 2–8–2004 அன்று தீரன் சின்னமலை நினைவு ஆடிப் பெருவிழா கொண்டாடப்பட்டது.
3. நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையில் 3–8–2004 அன்று வல்வில் ஓரி விழா கொண்டாடப்பட்டது.
4. தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரத்தில் 7–9–2004 அன்று வ.உ. சிதம்பரனார் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது.
5. வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த நாள் விழா 15–9–2004 அன்று தூத்துக்குடி மாவட்டம் பாஞ்சாலங்குறிச்சியில் கொண்டாடப்பட்டது.
6. வீரன் சுந்தரலிங்கம் பிறந்த நாள் விழா 25–9–2004 அன்று தூத்துக்குடி மாவட்டம் கவர்ணகிரியில் கொண்டாடப்பட்டது.
7. சென்னை மற்றும் அனைத்து மாவட்டங்களிலும் மகாத்மா காந்தியடிகள் பிறந்த நாள் விழா 2–10–2004 அன்று கொண்டாடப்பட்டது.
8. ஈரோடு மாவட்டம், சென்னிமலையில் 4–10–2004 அன்று திருப்பூர் குமரன் பிறந்த நாள் நூற்றாண்டு நினைவு தபால் தலை வெளியிடப்பட்டது.
9. 24–10–2004 அன்று மதுரையில் மருதுபாண்டியர் சகோதரர்களின் நினைவு நாளினை முன்னிட்டு, மருதுபாண்டியர் சகோதரர்களின் தபால் தலை வெளியிடப்பட்டது.

10. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள விழா 30–10–2004 அன்று மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் கொண்டாடப்பட்டது.

11. மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் விழா 10–12–2004 அன்று கிருஷ்ணகிரி மாவட்டம் தொரப்பள்ளியில் கொண்டாடப்பட்டது.

12. மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா 11–12–2004 அன்று தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் கொண்டாடப்பட்டது.

13. திருப்பூர் குமரன் பிறந்த நாள் நூற்றாண்டு விழா ஈரோட்டில் 12–2–2005 அன்று அரசின் சார்பில் ரூ.2 இலட்சம் செலவில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

**பல்துறைப் பணிவிளக்க முகாம்கள்**

பல்வேறு துறைகளையும் ஒருங்கிணைத்து அவற்றின் சார்பில் அரங்குகள் அமைத்து அரசின் திட்டங்கள், சாதனைகளை விளக்கக்கூடிய வகையில் பல்துறைப் பணிவிளக்க முகாம்கள் மாவட்டங்களில் அவ்வப்போது நடத்தப்பட்டு வருகின்றன.

மாதந்தோறும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் கிராமங்களில் நடத்தப்படும் மக்கள் குறைகேட்பு நிகழ்ச்சிகளில், சிறு புகைப்படக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

**மாவட்ட விளம்பர ஒருங்கிணைப்புக் குழு**

அரசின் திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள் குறித்த தகவல்கள், நலத் திட்ட உதவிகள் பெறுவதற்கான வழிமுறைகள், தகுதிகள் போன்றவற்றை மக்கள் அறிந்து பயன்பெறும் வகையில், பல்வேறு துறைகளின் ஒருங்கிணைப்புடன் மாவட்டங்களில் விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அப்பணியினைத் தீவிரப்படுத்தி, செம்மையாகச் செயல்படுத்திடும் வகையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையில் மாவட்ட விளம்பர ஒருங்கிணைப்புக் குழுக்கள் அனைத்து மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக் கூட்டம், மாதம் ஒருமுறை மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெறுகிறது. அரசின் திட்டங்களை விளம்பரப்படுத்தும் நடைமுறைகள் பற்றி இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, பல்துறைகளையும் ஒருங்கிணைத்து விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.





## அத்தியாயம் – 7

## தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள்

தமிழ்த் திரைப்படத் துறையை ஊக்குவிக்கும் பொருட்டு, 1968 ஆம் ஆண்டு முதல், சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்கு தமிழ்நாடு அரசால் திரைப்பட விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. சிறந்த திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோரைத் தேர்வு செய்வதற்கென ஆண்டுதோறும் ஒரு தேர்வுக் குழு அரசால் அமைக்கப்படுகிறது.

இக்குழுவால் தேர்வு செய்யப்படும் திரைப்படங்களுக்கு ஆண்டுதோறும் கீழ்க்கண்டவாறு விருதுகள் வழங்கப்படுகின்றன:

1. முதல் பரிசு ... ரூ.2 இலட்சம் மற்றும் ஒரு நினைவுப் பரிசு
2. இரண்டாம் பரிசு ... ரூ.1 இலட்சம் மற்றும் ஒரு நினைவுப் பரிசு
3. மூன்றாம் பரிசு ... ரூ.75 ஆயிரம் மற்றும் ஒரு நினைவுப் பரிசு
4. சிறப்புப் பரிசு ... ரூ.75 ஆயிரம் மற்றும் ஒரு நினைவுப் பரிசு

பெண்களின் முன்னேற்றம் மற்றும் பெண்களைப் பற்றி உயர்வாகச் சித்தரிக்கும் திரைப்படத்திற்கு சிறப்புப் பரிசாக ரூ.1.25 இலட்சம் மற்றும் ஒரு நினைவுப் பரிசு வழங்கப்படுகிறது.

தேர்வுக் குழுவால் தேர்வு செய்யப்படும் சிறந்த நடிகர்கள், நடிகைகள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 5 பவுன் தங்கப் பதக்கம் மற்றும் நினைவுப் பரிசு வழங்கப்படுகிறது. 2000 ஆம் ஆண்டிற்கான விருதுபெறும் கலைஞர்களில் ஆண் மற்றும் பெண் 'டப்பிங்' கலைஞர்களும் சேர்க்கப்பட்டனர். சிறந்த குணச்சித்திர நடிகர், சிறந்த குணச்சித்திர நடிகை, சிறந்த நகைச்சுவை நடிகை ஆகியோருக்கான விருதுகள் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டு 2001 ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகின்றன. அளவான குடும்பம், திட்டமிட்ட குடும்ப நெறிகளைப் பிரதிபலிக்கின்ற திரைப்படங்களுக்கு முதல் பரிசு ரூ.50,000/-, இரண்டாம் பரிசு ரூ.25,000/-, மூன்றாம் பரிசு ரூ.10,000/- வீதம் வழங்கப்பட்டு வருகின்றன.

### கலைத் துறை வித்தகர் விருதுகள்

தமிழ்த் திரைப்படத் துறை வரலாற்றில் முத்திரை பதித்து, மக்கள் மனதில் இடம் பெற்ற அறிஞர் அண்ணா, கலைவாணர், ராஜா சாண்டோ, எம்.ஜி.ஆர்., கவிஞர் கண்ணதாசன், நடிகர் திலகம் சிவாஜி கணேசன், தியாகராஜ பாகவதர் ஆகியோர் பெயர்களில் கலைத் துறை வித்தகர் விருதுகள் வழங்கப்படுகின்றன.

### திரைப்பட விருதுகள் வழங்கும் விழா

2000, 2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளுக்கான திரைப்படத் துறையினருக்கான விருதுகளை 3-12-2004 அன்று சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கி, திரைப்படத் துறையினருக்குச் சிறப்புச் செய்தார்கள். 2003 ஆம் ஆண்டிற்கான திரைப்பட விருதுகளுக்கான பட்டியல் உரிய முறையில் ஆய்வு செய்யப்பட்டு விரைவில் வெளியிடப்படவுள்ளது. 2004 ஆம் ஆண்டுக்கான திரைப்பட விருதுகளுக்குத் தேர்வு நடைபெற்று வருகிறது. 2003 மற்றும் 2004 ஆம் ஆண்டிற்கான திரைப்பட விருதுகள் விரைவில் வழங்கப்படும்.

### அரசு மானியம்

சமூக நீதியை வலியுறுத்தி குறைந்த செலவில் தமிழ்த் திரைப்படங்கள் தயாரிப்பதை ஊக்குவிக்கும்பொருட்டு, இவ்வகையான படங்களுக்கு அரசு மானியம் வழங்கும் திட்டத்தினை அரசு செயல்படுத்தி வருகிறது. ஆண்டுதோறும் இத்திட்டத்தின்கீழ் படங்களைத் தேர்ந்தெடுக்க ஒரு தேர்வுக் குழு அரசால் அமைக்கப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு படத்திற்கும் ரூ.5 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டு வந்தது. 2003 ஆம் ஆண்டு முதல் இத்தகு படங்களுக்கான மானியத் தொகையை ரூ.7 இலட்சமாக உயர்த்தி வழங்கிட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டுள்ளது.

2000, 2001, 2002, 2003 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில் குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு மானியத் தொகை விரைவில் வழங்கப்படவுள்ளன.

### கேளிக்கை வரிவிலக்கு அளிக்கும் திட்டம்

குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் தகுதியுடைய



திரைப்படங்களுக்கு, அத்திரைப்படங்கள் வெளியிடப்படும் நாளிலிருந்து முதல் நான்கு வாரங்களுக்கு, கேளிக்கை வரி விலக்கு அளிக்கப்படுகிறது.

### திரைப்படத் துறையினருக்கு வழங்கப்படும் அரசின் சலுகைகள்

1. குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு தலா ரூ.5 இலட்சம் மானியம் வழங்கப்படுகிறது. 2003 ஆம் ஆண்டு முதல் இம்மானியத் தொகையை ரூ.7 இலட்சமாக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. 2000, 2001, 2002, 2003, 2004 ஆகிய ஆண்டுகளில் குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு மானியத் தொகை விரைவில் வழங்கப்படும்.

2. குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு, முதல் நான்கு வாரங்களுக்கு கேளிக்கை வரிவிலக்கு அளிக்கப்படுகிறது.

3. சிறந்த திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்கு ரொக்கப் பரிசு, தங்கப் பதக்கம் மற்றும் நினைவுப் பரிசு ஆகியவை வழங்கப்படுகின்றன.

4. திரைப்படத் துறையில் குறிப்பிடத்தக்க சீரிய சாதனை புரிந்தவர்களுக்கு கலைத் துறை வித்தகர் விருதுகள் வழங்கப்படுகின்றன.

5. அரசுக்குச் சொந்தமான இடங்களில் படப்பிடிப்பு நடத்த ஒற்றைச் சாளர முறையில் அனுமதி வழங்கப்படுகிறது. மேலும் அரசு மற்றும் அரசு சார் நிறுவனங்களுக்குச் சொந்தமான இடங்களில் நடத்தப்படும் படப்பிடிப்புகளுக்கான கட்டணம் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

6. திரைப்படத் துறையில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க, மாவட்ட மற்றும் மாநில அளவில் குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளன.

7. சண்டைக் காட்சியில் நடிக்கும்பொழுது சண்டைப் பயிற்சியாளர் காயமுற்று இறந்தால், அவரது குடும்பத்தினருக்கு ரூ.1 இலட்சமும், செயல்பட முடியாத அளவுக்கு ஊனமுற்றால் ரூ.50 ஆயிரமும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

8. மேலும், தமிழ்த் திரைத் துறை வளர்ச்சியை ஊக்கப்படுத்திடும் வகையில், திரைப்பட திரையீட்டாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, உரிமம் வழங்கும் அலுவலர் மற்றும் வணிகவரித் துறை அலுவலர்களுக்கு முன் அறிவிப்புக் கொடுத்துவிட்டு புதிய திரைப்படங்கள் திரையிடப்படும் நாளிலிருந்து இரண்டு வார காலத்திற்கு உச்சவரம்பு இன்றி கட்டண வீதங்களை நிர்ணயித்துக்கொள்ள திரையரங்க உரிமையாளர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

9. திருட்டு வீடியோ தடுப்பிற்கென காவல் துறையில் 12 பிரிவுகள் புதிதாக உருவாக்கப்பட்டு, இந்தியாவிற்கே முன்னோடியாகத் தமிழகத்தில் திருட்டு வீடியோ குற்றங்கள் பெருமளவில் தடுக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தகுந்ததாகும்.





## அத்தியாயம் – 8

## தமிழ்நாடு திரைப்படப் பிரிவு

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு, கருத்து விளக்கப் படங்களும் வீடியோ செய்தி மலர்களும் தயாரித்து வருகிறது. அரசின் முக்கிய நிகழ்ச்சிகளையும், குறிப்பாக அரசின் பல்வேறு நலத் திட்டங்களையும் இத்தயாரிப்புகள் உள்ளடக்கி உள்ளன.

ஆண்டுதோறும் 20 நிமிட கால அளவிலான 12 வீடியோ செய்தி மலர்கள் மற்றும் 35 மி.மீ. வண்ணப் படச்சுருளில் 10 நிமிட கால அளவிலான 6 கருத்து விளக்கப் படங்கள் மட்டுமே தயாரிக்கப்பட்டு வந்தன. 2004–2005 ஆம் ஆண்டு முதல் 12 வீடியோ செய்தி மலர்களும், 35 மி.மீ. வண்ணப் படச்சுருளில் 12 செய்தி மலர்களும் தயாரிக்கப்படுகின்றன.

வீடியோ செய்தி மலர்கள் சென்னைத் தொலைக்காட்சி மற்றும் தனியார் தொலைக்காட்சிகள் மூலம் ஒளிபரப்பப்பட்டு, அரசின் திட்டங்கள் மக்களை எளிதில் சென்றடைய வகை செய்யப்படுகிறது.

இந்த வீடியோ செய்தி மலர்கள் 60 குறுந்தகடுகளாக மாற்றப்பட்டு, மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் மூலம், கள விளம்பரப் பணிகளில் பயன்படுத்தப்படுகின்றன. இக்குறுந்தகடுகளின் எண்ணிக்கையை 350 ஆக உயர்த்தி, மாவட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலகங்கள் மூலம் பொது மக்களுக்குத் திரையிடப்பட உள்ளன. அதிக அளவில் பிரதிகள் எடுப்பதற்குரிய மல்டி காப்பியர் சிஸ்டம் ரூ.5 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளது.

[2005 ஏப்ரல் 11

## அத்தியாயம் – 9

## தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம்

தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம், திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி மற்றும் அவை தொடர்பான பல்வேறு பயிற்சிகளுடன் கூடிய பாடங்களைப் பயிற்றுவிக்கும் முதன்மையான நிறுவனமாகும்.

இந்தியாவிலுள்ள திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கும் மூன்று நிறுவனங்களில், தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம்தான் ஒரு முன்னோடி நிறுவனமாகும்.

தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில், இயக்குதல் மற்றும் திரைக்கதை எழுதுதல்; ஒளிப்பதிவு; ஒலிப்பதிவு மற்றும் ஒலிப் பொறியியல்; படப் பதனிடுதல்; மற்றும் படத்தொகுப்பு ஆகிய பட்டயப் படிப்புகள் நடத்தப்படுகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஒவ்வொரு பட்டயப் படிப்பிற்குமான 12 இருக்கைகள் 2001–2002 ஆம் கல்வியாண்டு முதல் 14 இருக்கைகளாக அதிகரிக்கப்பட்டன.

இந்நிறுவனத்தில் பயிற்சி அளிக்கப்படும் எல்லாப் பட்டயப் படிப்புகளுக்கும் புதுடெல்லியில் உள்ள அகில இந்திய தொழில்நுட்பக் கல்விக் குழு (AICTE) அங்கீகாரம் அளித்துள்ளது.

2004–2005 ஆம் கல்வியாண்டு முதல் இரண்டாம் ஆண்டு பட்டயப் படிப்பு மாணவர்களுக்கு வீடியோ பாடல் காட்சிகள் பதிவு செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டு, புதிய பாடத் திட்டமாக பின்பற்றப்பட்டு வருகின்றது. இயக்குதல் மற்றும் திரைக்கதை எழுதுதல், ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு மற்றும் ஒலிப்பொறியியல், படப்பதனிடுதல் மற்றும் படத்தொகுப்பு ஆகிய ஐந்து பிரிவுகளிலிருந்து பிரிவிற்கு ஒரு மாணவர் வீதம் தனித்தனிக் குழுக்கள் அமைக்கப்பட்டு பட்டயக் குறும்படங்கள் தயாரிப்பில் பயிற்சி அளிக்கப்படுகின்றன.

இந்நிறுவனத்தில் பயின்று பட்டயத் தகுதிபெற்ற மாணவ–மாணவியர்களில் பலர், திரைப்படத் துறை, அரசு மற்றும் தனியார்



2005 ஏப்ரல் 11]

தொலைக்காட்சி நிறுவனங்களில் தொழில் வாய்ப்புகளைப் பெற்று, தங்கள் தனித் தன்மைகளை வெளிக்காட்டி வருகின்றனர்.

சென்னைத் தொலைக்காட்சி பொதிகைச் சேனலில் சனிக்கிழமைதோறும் மாலை 3.10 மணிக்கு ஒளிப்பரப்பாகும் 'முதல் முயற்சி' நிகழ்ச்சியில், இந்நிறுவன மாணவர்களால் தயாரிக்கப்பட்ட பட்டயக் குறும்படங்கள் தொடர்ந்து ஒளிபரப்பப்படுகின்றன. அந்தக் குறும்படங்களைத் தயாரித்த மாணவர் குழுவின் பேட்டிகளும் இந்நிகழ்ச்சியில் இடம் பெறுகின்றன.

இந்நிகழ்ச்சியில் 2005 ஏப்ரல் திங்களில், பழைய கதை, தண்ணீர், தேசம் தாண்டி, ஓட்டம், Big Bang, அனாமிகா, நிறம், அய்யா, ஆனந்தமடம், நாற்றுக்கள் மற்றும் மனசு ஆகிய பட்டயக் குறும்படங்கள் ஒளிபரப்பு செய்யப்படவுள்ளன.

இந்நிறுவன மாணவர்கள் தயாரிக்கும் பட்டயக் குறும்படங்களின் சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த ஒலிப்பதிவாளர், சிறந்த படத்தொகுப்பாளர் மற்றும் சிறந்த படச்சுருள் பதனிடுபவர் ஆகியோருக்கு "தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவன மாணவர் விருதுகள்" ஆண்டுதோறும் தமிழக அரசால் வழங்கப்படுகின்றன. இவ்விருதில் ஒரு பவுன் தங்கப் பதக்கம், ரூ. 5,000/- ரொக்கப் பரிசு மற்றும் நினைவுக் கேடயம் அடங்கும்.

இந்நிறுவன மாணவர்களால் தயாரிக்கப்படும் பட்டயப் படங்கள் தேசிய மற்றும் சர்வதேச திரைப்படப் போட்டிகளில் பங்கேற்கும் வகையில், உபதலைப்புகளுடன், அதிக அளவில் பிரதிகள் எடுத்து அனுப்பிடும் பொருட்டு ரூ. 75,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது இந்நிறுவன மாணவர்களால் தயாரிக்கப்பட்ட, நகரம், நிறம், ஓட்டம், சித்தார்த் ஆகிய பட்டயப் படங்கள், பாரீஸ் நகரில் 11-5-2005 முதல் 22-5-2005 வரை நடைபெறவுள்ள "CANNES FILM FESTIVAL"-இல் திரையிட அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

திருவாளர்கள் கொடாக் இந்தியா நிறுவனத்தால் வழங்கப்பட்ட ரூ. 2 இலட்சம், வங்கிக் கணக்கில் முதலீடு செய்யப்பட்டு, அதில் வரும் ஆண்டு வட்டித் தொகையினை அந்தந்தக் கல்வி ஆண்டில் தலைசிறந்த ஒளிப்பதிவு மாணவர் ஒருவருக்கும், படச்சுருள் பதனிடுதல் மாணவர் ஒருவருக்கும் 1999–2000 கல்வி ஆண்டிலிருந்து சரிசமமாகப் பிரித்து பரிசு வழங்கப்பட்டு வருகிறது.

நாளுக்குநாள் வளர்ந்து வரும் மின்னணுச் சாதனங்களின் மின்னல் வேக வளர்ச்சியினைக் கணக்கில் கொண்டு இந்நிறுவன மாணவர்களின் மனிதவளத்தினை நவீன தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப உருவாக்கிடும் வகையில், கடந்த நிதியாண்டில் ரூ. 61.45 இலட்சம் ஒதுக்கீட்டில் நவீன உபகரணங்கள் வாங்கப்படவுள்ளன.





## அத்தியாயம் – 10

## தமிழரசு

தமிழக அரசின் செயல்பாடுகள், வளர்ச்சித் திட்டங்கள், சாதனைகள் போன்றவற்றை மக்களிடையே சேர்க்கும் ஊடகம் 'தமிழரசு' இதழ்.

தமிழரசு இதழில் அரசின் சாதனைகள், மேதகு ஆளுநர் அவர்களின் உரைகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உரைகள், அறிவிப்புகள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் உரைகள், அறிவிப்புகள், மக்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள், திட்டங்கள், செயல்பாடுகள், மாவட்ட வளர்ச்சிப் பணிகள், மகளிர் மேம்பாட்டுத் திட்டங்கள், இலக்கியம், மருத்துவம் போன்ற பொதுக்கட்டுரைகள் மற்றும் பிறமொழிக் கதைகள் போன்றவை வெளியிடப்பட்டு வருகின்றன.

தமிழரசு இதழ் அச்சிடுவதற்கென இத்துறையின்கீழ் தமிழரசு அச்சகம் இயங்கி வருகிறது. சிறப்பான முறையில் இதழ்களை அச்சிடுவதற்கு ஏற்ற வகையில், தமிழரசு அச்சகத்திற்கென நவீன இயந்திரங்கள் வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழரசு இதழ்கள் மட்டுமல்லாமல் சிறப்பு வெளியீடுகள், சிறப்புக் கையேடுகள், அரசு விழா அழைப்பிதழ்கள் ஆகியனவும் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன.

தமிழரசு தமிழ் இதழ் மாத இதழாகவும், ஆங்கில இதழ் காலாண்டு இதழாகவும் வெளியிடப்பட்டு வருகின்றன. தமிழரசு தமிழ் இதழின் விலை ரூ.10. ஆண்டுச் சந்தா ரூ.120. ஆயுள் சந்தா (10 ஆண்டுகளுக்கு) ரூ.1,000/–.

தமிழரசு ஆங்கில இதழின் விலை ரூ.15. ஆண்டு சந்தா ரூ.60. ஆயுள் சந்தா (10 ஆண்டுகளுக்கு) ரூ.500/–.

2001 ஏப்ரல் வரையில் மொத்தம் 48,000 ஆக இருந்த தமிழரசு தமிழ் இதழின் சந்தாக்கள், தற்பொழுது 73,325 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. முன்பு 1,131 ஆக இருந்த ஆயுள் சந்தாக்கள், தற்பொழுது 41,749 ஆக உயர்த்தப்பட்டு, இதன்மூலம் 4 கோடியே 17 இலட்சத்து 49 ஆயிரம் ரூபாய் அரசுக்கு வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தகுந்ததாகும்.

[2005 ஏப்ரல் 11

**சிறப்பு வெளியீடுகள்**

1. இந்த அரசு ஏழை எளியோரின் அரசு – ஜூன், 2001
2. வளம் தரும் திசையில் வளரும் தமிழகம் (100 நாள் சாதனைகள்) – ஆகஸ்ட், 2001
3. பெரியார் விருது – அம்பேத்கர் விருது – திரு.வி.க. விருது – பாரதியார் விருது – பாரதிதாசன் விருது – கி.ஆ.பெ. விருது வழங்கும் விழா – தகுதி உரைத் தொகுப்பு – டிசம்பர், 2001
4. முதல்நிலை நோக்கி முன்னேறும் தமிழகம் – மார்ச், 2002
5. தன்னிகரற்ற தமிழகத்தை உருவாக்க 15 அம்சத் திட்டம் – ஏப்ரல், 2002
6. தமிழகம் என்றென்றும் அமைதிப் பூங்காவாகத் திகழச் செய்வோம் – ஏப்ரல், 2002
7. பிளாஸ்டிக் பொருட்களின் தீமையை மக்கள் உணரச் செய்வோம் – மே, 2002
8. இந்தியாவில் முதலீட்டுக்கு உகந்த முதன்மையான மாநிலம் தமிழ்நாடு – ஆகஸ்ட், 2002
9. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிக்கை (காவிரி நதிநீர்ப் பிரச்சினை) – செப்டம்பர், 2002
10. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிக்கை (அரிசி விலை) – செப்டம்பர், 2002
11. மக்களின் நம்பிக்கையே நமக்கு வலிமை தரும் சக்தி – பிப்ரவரி, 2003
12. அமைதி ஆட்சி செலுத்தும் தமிழகம் – ஏப்ரல், 2003
13. தமிழகத்தில் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் தொடர்கிறது – மே, 2003
14. நாங்கள் மக்கள் பக்கம், மக்கள் எங்கள் பக்கம், வெற்றி எங்கள் பக்கம் – பிப்ரவரி, 2004



2005 ஏப்ரல் 11]

15. மாவட்டங்களில் நடைபெற்ற அரசு விழாக்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரைகளின் தொகுப்பு
16. மக்கள் நலம் பாதுகாக்கும் தமிழக அரசின் அறிவிப்புகள் – மே, 2004
17. நாட்டு மக்கள் நலன் காக்க அரசின் புது அறிவிப்புகள் – ஜூன், 2004
18. தமிழ்நாடு மாநிலக் கணக்காயரின் பேட்டி வரைமுறைகளை மீறியது, அரசியல் சாசனத்திற்கு முரணானது – மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – செப்டம்பர், 2004
19. ஒவ்வொரு நாளும் தமிழக முன்னேற்றம் ஒவ்வொரு தமிழர்க்கும் மேன்மை – பிப்ரவரி, 2005

[2005 ஏப்ரல் 11

## அத்தியாயம் – 11

## மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகங்கள்

தமிழ்நாட்டிலுள்ள 30 மாவட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலகங்களும், அரசின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள், செயலாக்கங்கள், சாதனைகள் மற்றும் அரசின் புதிய அறிவிப்புகளைப் பயனாளிகளான பொதுமக்களுக்கு, செய்தி இதழ்கள், தொலைக்காட்சி, வானொலி போன்ற ஊடகங்கள் வழியாக விளம்பரப்படுத்தும் பணியினை செம்மையுறச் செயல்படுத்தி வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையில், இவ்வலுவலகங்கள் மேம்படுத்தப்பட்டு நவீனமயமாகி வருகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, புதிய மாவட்டமாக உருவாகியுள்ள கிருஷ்ணகிரியில், மாவட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலகத்தைப் புதிதாக அமைத்திடும் வகையில் தொடராச் செலவினமாக 8,38,000 ரூபாயும், தொடர் செலவினமாக 7,30,000 ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவ்வலுவலகம் தற்பொழுது முழுமையாகச் செயல்படத் தொடங்கியுள்ளது.

மேலும், இத்துறையின்கீழ் உள்ள செய்தி வெளியீட்டுப் பிரிவு, மேற்கோள் பிரிவு, புகைப்படப் பிரிவு, தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம், தமிழ்நாடு திரைப்படப் பிரிவு, தமிழரசு அச்சகம் ஆகிய பிரிவுகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி ரூ.146.20 இலட்சம், நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நவீன கருவிகள் வாங்கி வழங்கிடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அவ்வகையில், 2004–2005 ஆம் ஆண்டு பகுதி–II திட்டத்தின்கீழ் ரூ.3.5 இலட்சம் ஒதுக்கீட்டில், 5 வீடியோ வாகனங்கள் ஈரோடு, திண்டுக்கல், தருமபுரி, விருதுநகர் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களுக்கு 1–3–2005 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன.



2005 ஏப்ரல் 11]

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி 30 மாவட்ட செய்தி–மக்கள் தொடர்பு அலுவலகங்களின் பயன்பாட்டிற்கென நவீன டிஜிட்டல் கேமராக்கள் ரூ.54 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கி வழங்கப்படவுள்ளன. இதன் அடிப்படையில், இத்துறையைச் சேர்ந்த செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்கள், உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மற்றும் புகைப்படக்காரர்களுக்கு அண்ணா மேலாண்மை நிலையத்தின் மூலம் ரூ.2 இலட்சம் செலவினத்தில் கணினி மற்றும் டிஜிட்டல் கேமரா இயக்குதல், மின்னணு அஞ்சல் மூலம் தகவல் பரிமாற்றம் ஆகியவை குறித்த பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

[2005 ஏப்ரல் 11

## அத்தியாயம் – 12

## செய்தி நிலையங்கள்

செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறையின்கீழ் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், கோயம்புத்தூர், புதுடெல்லி ஆகிய ஆறு இடங்களில் செய்தி நிலையங்கள் இயங்கி வருகின்றன.

சென்னையில் மாநிலச் செய்தி நிலையம், ஓமந்தூரார் அரசினர் தோட்டத்திலுள்ள கலைவாணர் அரங்க வளாகத்தில் இயங்கி வருகிறது. பொதுமக்கள், கல்வியாளர்கள், மாணவ–மாணவியர் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு அவ்வப்போது தகவல் வழங்கும் ஒரு முக்கிய தகவல் மையமாக இச்செய்தி நிலையம் விளங்குகிறது. இச்செய்தி நிலைய நூலகத்தில் 17,000-க்கும் மேற்பட்ட பல வகை நூல்கள் பொது மக்களின் பயன்பாட்டிற்காகப் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.



2005 ஏப்ரல் 11]

## அத்தியாயம் – 13

## 2004–2005 ஆம் ஆண்டிற்கான பகுதி–II திட்டங்கள்

| வ. எண் | திட்டத்தின் பெயர் | தொகை ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு ரேடியோ மற்றும் டேப் ரிக்கார்டர் வாங்கி வழங்குதல் | 0.60 |
| 2. | செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் மேற்கோள் பிரிவிற்கு ஒளிநகல் இயந்திரம் வாங்கி வழங்குதல் | 1.50 |
| 3. | செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் மேற்கோள் பிரிவிற்கு பிரமிட் வடிவத்திலுள்ள மேஜைகள் மற்றும் இரும்பு அலமாரிகள் வாங்கி வழங்குதல் | 1.35 |
| 4. | செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் மேற்கோள் பிரிவில் மின்னணு ஆவணக் காப்பகம் உருவாக்குதல் | 5.00 |
| 5. | தலைமையிடத்திலுள்ள புகைப்படப் பிரிவிற்கு கூடுதலாக ஒரு டிஜிட்டல் கேமரா வாங்கி வழங்குதல் | 2.00 |
| 6. | செய்தி வெளியீட்டுப் பிரிவிற்கு அதிக சக்தி கொண்ட நிகரி இயந்திரம் வாங்கி வழங்குதல் | 0.30 |
| 7. | செய்தி-மக்கள் தொடர்புத் துறை அலுவலர்களுக்கு இரண்டாம் கட்டமாக பயிற்சி அளித்தல் | 2.00 |
| 8. | திரைப்படக் கல்லூரி மாணவர்கள் பயன்பாட்டிற்காக ஒரு நான்லீனியர் பிலிம் எடிட்டிங் சிஸ்டம் வாங்கி வழங்குதல் | 16.65 |
| 9. | திரைப்படக் கல்லூரி மாணவர்கள் பயன்பாட்டிற்காக ஒரு டிஜிட்டல் இ.என்.ஜி. வீடியோ ஷூட்டிங் சிஸ்டம் வாங்கி வழங்குதல் | 28.20 |
| 10. | தமிழ்நாடு திரைப்படக் கல்லூரிக்காக திரைக்கதை மற்றும் திரைப்படத் தயாரிப்பு குறித்த கணினி மென்பொருள் வாங்கி வழங்குதல் | 5.00 |
| 11. | திரைப்படக் கல்லூரிக்கு ஒரு நான்லீனியர் வீடியோ எடிட்டிங் சிஸ்டம் வாங்கி வழங்குதல் | 11.60 |

| | | |
|---|---|---|
| 12. | தமிழ்நாடு திரைப்படப் பிரிவிற்கு வி.சி.டி. மல்டி காப்பியர் சிஸ்டம் வாங்கி வழங்குதல் | 5.00 |
| 13. | 5 மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு வீடியோ படப்பிடிப்புடன் கூடிய புதிய வீடியோ விளம்பர ஊர்திகள் வாங்கி வழங்குதல் | 35.00 |
| 14. | தமிழரசு அச்சகத்திற்குக் கூடுதலாக இரண்டு வெப் ஆப்செட் பிரிண்டிங் யூனிட்டுகள் வாங்கி வழங்குதல் | 32.00 |
| | மொத்தம் | 146.20 |

இதில் 12 திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன. 2 திட்டங்கள் நிறைவேற்றப்படவுள்ளன.



## அத்தியாயம் – 14

## திரைப்படம், வீடியோ மற்றும் கேபிள் தொலைக்காட்சி இணைப்பு

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், திரைப்படத் தொழில் மிகப் பெரிய தொழில்களில் ஒன்றாக விளங்கி வருகிறது. மேலும், தமிழ்நாட்டில்தான் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் மற்றும் இந்தி மொழிப் படங்கள் அதிக அளவில் தயாரிக்கப்படுகின்றன. எனவே, திரைப்படத் தொழிலானது உள்ளாட்சி அமைப்புகளுக்கும், அரசுக்கும் வருவாய் ஈட்டித் தருகின்ற ஒரு நிதி ஆதாரமாக இருந்து வருகிறது. திரையரங்குகளில் படம் பார்ப்பது என்பது, அடித்தள மற்றும் நடுத்தர வருமானமுள்ள பிரிவினருக்கு ஒரு முக்கியமான பொழுதுபோக்கு அம்சமாக விளங்கி வருகிறது. எனவே அரசு திரைப்படத் துறையின் தரத்தை மேம்படுத்திடும் வகையில், பல்வேறு ஊக்குவிப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

2. தமிழ்நாட்டில் மொத்தம் 1,771 திரையரங்குகள் இயங்கி வருகின்றன. அவற்றில்,

| | |
|---|---|
| நிரந்தரத் திரையரங்குகள் | 1,351 |
| பகுதி நிரந்தரத் திரையரங்குகள் | 120 |
| நடமாடும் திரையரங்குகள் | 291 |
| திறந்த வெளித் திரையரங்குகள் | 09 |
| மொத்தம் | 1771 |

3. திரையரங்குகளின் கட்டட உறுதிப்பாடு, முறையான பராமரிப்பு மற்றும் திரையரங்குகளுக்குச் செல்லும் இரசிகப்பெருமக்களுக்கான அடிப்படை வசதி வழங்கல் ஆகியவற்றை முறைப்படுத்தி, நெறிப்படுத்திடும் வகையில், 1955 ஆம் ஆண்டைய தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டம் மற்றும் 1957 ஆம் ஆண்டைய தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) விதிகளில் வழிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

4. திரைப்படத் தொழிலை ஊக்குவிக்கும்பொருட்டு இவ்வரசு திரையரங்குகளுக்குப் பல்வேறு சலுகைகளை அளித்துள்ளது.

திரையரங்குகளுக்குப் பல்வேறு சலுகைகளை அளித்துள்ளது.

**உரிமம் வழங்கும் அலுவலர்/வணிக வரித் துறை**

(அ) அதன்படி, உரிமம் வழங்கும் அலுவலர்/வணிக வரித் துறை அலுவலர்களுக்கு, முன்னறிவிப்புக் கொடுத்துவிட்டு, திரையரங்கு

[2005 ஏப்ரல் 11

உரிமதாரர்கள், கடைசி வகுப்பைத் தவிர மற்ற வகுப்புகளுக்கு விதிக்கப்படும் கட்டணத்தில் 75 சதவீதம் வரை உயர்த்தி நிர்ணயிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. கடைசி வகுப்புக் கட்டணம் மாநகரங்களில் ரூ.10-க்கு மிகாமலும் மற்ற இடங்களில் ரூ.5-க்கு மிகாமலும் இருக்க வேண்டும். மேலும், அது அடுத்த உயர்வகுப்புக் கட்டண வீதங்களைக் காட்டிலும் குறைவாக இருக்க வேண்டும். திரையரங்குகளில் அனும்திக்கப்பட்ட மொத்த இருக்கையில் 10 சதவீத இருக்கைகளை கடைசி வகுப்புக்கு கட்டாயமாக ஒதுக்க வேண்டும்.

(ஆ) உரிமம் வழங்கும் அலுவலர் மற்றும் வணிகவரித் துறை அலுவலர்களுக்கு முன்னறிவிப்புக் கொடுத்துவிட்டு புதிய திரைப்படங்கள் திரையிடப்படும் நாளிலிருந்து இரண்டு வார காலத்திற்கு உச்சவரம்பு இன்றி கட்டண வீதங்களை நிர்ணயித்துக்கொள்ள திரையரங்க உரிமையாளர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

(இ) திரைப்படம் பார்ப்பவர்கள் சுகாதாரமான சூழ்நிலையில், வசதியாக அமர்ந்து திரைப்படங்களை இரசித்து மகிழ வேண்டும் என்பதே அரசின் நோக்கமாகும். திரையரங்குகளை, உரிமம் வழங்கும் அலுவலர்கள் கூட்டாக இணைந்து சென்று நேரடியாகப் பார்வையிட்டு ஆய்வு செய்து சுகாதாரமாகப் பராமரிக்காத உரிமையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(ஈ) திரையரங்கிற்கு வரும் பொதுமக்களின் பாதுகாப்புக் கருதி திரையரங்கினுள் தீ விபத்து ஏற்படாமல் தடுப்பதற்கு அரசின் கடித (டி) எண் 664, உள் துறை, நாள் 22-9-1997-ன்படியும், மற்றும் அரசு நிலை ஆணை எண் 922, உள் துறை, நாள் 24-8-2000-ல் பிறப்பித்த நெறிமுறைகளையும் தவறாது பின்பற்றுமாறு அனைத்து உரிமம் வழங்கும் அலுவலர்களுக்கும் அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. மேலும் புதிய திரைப்படங்கள் திரையிடும்போது அனுமதிக்கப்பட்ட பார்வையாளர்களுக்கு மேல் கூடுதலாக பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுகின்றனரா என்றும், தற்காலிகமாக இருக்கைகள் ஏதும் போடப்பட்டு உள்ளனவா என்பதையும் உரியமுறையில் கண்காணிக்குமாறும் அனைத்து உரிமம் வழங்கும் அலுவலர்களுக்கும், அனைத்து காவல் துறை கண்காணிப்பாளர்களுக்கும் அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.



2005 ஏப்ரல் 11]

5. 23-9-2004 அன்று திரைப்படத் தொழில் தொடர்புடைய சங்கங்களின் பிரதிநிதிகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் திரைப்படத் துறை வளர்ச்சியினை மேம்படுத்தக் கோரி பல்வேறு கோரிக்கைகளை அளித்தனர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அக்கோரிக்கைகள் பரிவுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன.

(அ) அதன்படி குளிர்சாதன வசதிகொண்ட திரையரங்கிற்கு ரூ.1/–ம், குளிர்சாதன வசதியற்ற திரையரங்கிற்கு 0.50 பைசாவும் பராமரிப்புக் கட்டணமாகச் சேர்த்து முன்பு போல் வசூல் செய்ய அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

(ஆ) மாநகராட்சி மற்றும் சிறப்பு நிலை நகராட்சிப் பகுதிகளில் புதிய திரைப்படங்களுக்கு, மொத்த வசூல் தொகையில் 25%–ம் பழைய திரைப்படங்களுக்கு 20%–ம் என்று செலுத்தி வந்த கேளிக்கை வரி முறையே 15% மற்றும் 10% ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

(இ) ஏனைய பகுதிகளில் நடைமுறையிலுள்ள கூட்டு வரியை அறவே நீக்கிவிட்டு மொத்த வசூலில் 10% வீதம் வரி செலுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(ஈ) 1982 ஆம் ஆண்டைய அபாயகரமான குற்றத் தடுப்புச் சட்டத்தின்கீழ் வரும், கள்ளச்சாராயக் குற்றவாளிகள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரம் தொடர்புடைய குற்றவாளிகள் மற்றும் குடிசைப் பகுதி நில ஆக்கிரமிப்புக் குற்றவாளிகள் போன்று வீடியோ திருட்டு செய்பவர்களையும், அபாயகரமான நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின்கீழ் கொண்டுவந்து தண்டித்திடும் வகையில், அரசால் உரிய திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

மேலும், காணொலிப் பேழைப் பதிவுக் கருவிகள் மற்றும் கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பமைவு மூலமாகத் தொலைக்காட்சிப் பெட்டி திரைகளில் திரைப்படங்களை காட்டுதல் (முறைப்படுத்துதல்) குறித்த 1984 ஆம் ஆண்டைய சட்டத்தின்கீழ் மீறுபவர்கள் மீது நிர்ணயிக்கப்பட்டுள்ள தண்டனை மற்றும் அபராதத் தொகையை அதிகரித்து இவ்வரசால் உரிய திருத்தம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## 6. வீடியோ சட்டமும் விதிகளும்

தமிழ்நாட்டில் வீடியோ கேசட் பதிவுக் கருவிகளைப் பயன்படுத்தி திரைப்படங்களைத் தொலைக்காட்சித் திரைகளில் ஒளிபரப்புவதை முறைப்படுத்துவதற்காகவும், இதன் இடைநிகழ்வான அல்லது தொடர்புடைய பொருள்களுக்காகவும் தமிழ்நாடு அரசு 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு காணொலிப் பேழைப் பதிவுக் கருவிகள் மற்றும் கம்பி வடத் தொலைக்காட்சி இணைப்பமைவு மூலமாக தொலைக்காட்சிப் பெட்டித் திரையில் திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்தல்) சட்டத்தை இயற்றியுள்ளது. இந்தச்சட்டம் வீடியோ கேசட் பதிவுக் கருவிகள் (வீடியோ நூலகங்கள்) மூலம் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்களை ஒளிபரப்புவதற்கும் வீடியோ நூலகங்கள் நடத்துவதற்கும் தனியார்களுக்கு உரிமம் வழங்க வகை செய்கிறது. மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர்களும், சென்னை மாநகரில் காவல் துறை ஆணையரும் மாவட்ட உரிமம் வழங்கும் அலுவலர்களாவர். வீட்டில் குடும்ப உறுப்பினர்களின் பயன்பாட்டிற்காக வீடியோ கேசட் பதிவுக் கருவிகள் மூலம் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்களைக் காட்டுவதற்கு உரிமம் எதுவும் அவசியம் இல்லை.

## 7. திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவு

(அ) தமிழ்நாடு அரசு உள் துறையின் (திரைப்படம் 2) 17-2-1995 ஆம் நாளிட்ட 3 (டி) 16 ஆம் எண் அரசாணையின்படி தமிழ்நாடு புலனாய்வுத் துறை குற்றப் பிரிவின்கீழ், திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்போது சென்னை காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநரின் (குற்றம்) நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் இப்பிரிவு இயங்கி வருகிறது. மேலும் 2000 ஆம் ஆண்டைய பதிப்புரிமைச் சட்டத்தின்கீழ் தகவல் தொழில்நுட்பச் சட்டம் ஆகியவை தொடர்பான மீறல்களைத் தடுக்கவும் இப்பிரிவிற்கு அரசால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) சென்னை, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவ்ட்டங்களில் ஆறு பிரிவுகள் இதன்கீழ் செயல்படுகின்றன. ஒவ்வொரு பிரிவிலும் காவல் துறை ஆய்வாளர் ஒருவரும் மற்றும் காவலர்கள் (நிலை 1) இருவரும் பணியாற்றி வருகின்றனர்.

(இ) 2004 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில், சென்னையில் நடைபெற்ற காவல் துறை அலுவலர்கள், மாவட்ட ஆட்சியர்கள்



கலந்துகொண்ட மாநாட்டில் வீடியோ திருட்டைக் கட்டுப்படுத்தும் வகையில், மேலும் ஆறு வீடியோ திருட்டுத் தடுப்புப் பிரிவுகள் உருவாக்கப்படுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, சென்னை, பரங்கிமலை, வேலூர், திண்டுக்கல், கடலூர் மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் கூடுதலாக 6 காணொலித் திருட்டுத் தடுப்புப் பிரிவுகள் நிறுவிட அரசு தக்க ஆணை பிறப்பித்துள்ளது.

திருட்டு வீடியோ தடுப்பு 12 பிரிவுகளுக்கான தலைமையிடங்கள் மற்றும் அதிகார வரம்புப் பகுதிகள் பின்வருமாறு:

| வ. எண் | சிறு பிரிவுகள் | அதிகார வரம்புப் பகுதிகள் |
|---|---|---|
| 1. | சென்னை-1 | சென்னை மாநகர வடக்குச் சரகம் |
| 2. | சென்னை-2 | சென்னை மாநகர மத்திய மற்றும் தெற்குச் சரகங்கள் |
| 3. | பரங்கிமலை | திருவள்ளூர், செங்கற்பட்டு கிழக்கு, காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்கள் |
| 4. | வேலூர் | வேலூர், திருவண்ணாமலை மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள் |
| 5. | சேலம் | சேலம் நகரம், சேலம் மாவட்டம், நாமக்கல் மற்றும் தர்மபுரி மாவட்டங்கள் |
| 6. | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் மாவட்டம் ஈரோடு மற்றும் நீலகிரி மாவட்டங்கள் |
| 7. | திருச்சி | திருச்சி நகரம், திருச்சி மாவட்டம், புதுக்கோட்டை மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்கள் |
| 8. | கடலூர் | கடலூர், பெரம்பலூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்கள் |
| 9. | மதுரை | மதுரை நகரம் மற்றும் மதுரை ஊரக மாவட்டம் |
| 10 | திண்டுக்கல் | திண்டுக்கல், தேனி மற்றும் கரூர் மாவட்டங்கள் |
| 11. | விருதுநகர் | விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்கள் |
| 12. | திருநெல்வேலி | திருநெல்வேலி, திருநெல்வேலி நகரம், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் |

[2005 ஏப்ரல் 11

(ஈ) திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவுக்கென ஒரு கார், ஒரு ஜீப் மற்றும் நான்கு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், திருச்சி, மதுரை, சேலம், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி காணொலித் திருட்டு தடுப்புப் பிரிவுகளுக்கென தற்காலிக அடிப்படையில் ஐந்து ஜீப்புகள் மாற்றப்பட்டுள்ளன. அனைத்து பிரிவுகளுக்கும் 2004ஆம் ஆண்டு முதல் நேரடித் தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. சென்னை, சேலம், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய பிரிவுகள் காவல் நிலையங்களாகப் பிரகடனம் செய்யப்பட்டன. 1957 ஆம் ஆண்டு பதிப்புரிமைச் சட்டம், 1984 ஆம் ஆண்டு, தமிழ்நாடு காணொலிப் பேழை பதிவுக் கருவிகள் மற்றும் கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்பமைவு மூலமாக தொலைக்காட்சிப் பெட்டித் திரையில் திரைப்படங்களைக் காட்டுதல் மற்றும் 1952 ஆம் ஆண்டு திரைப்படச் சட்டம் மூலம் காணொலித் திருட்டு கட்டுப்படுத்தப்படுகிறது.

(உ) திருட்டு வீடியோ குற்றங்களைத் தடுக்கும் தனிப் பிரிவின் செயல்பாடுகளாவன:

1. திருட்டு வீடியோ குறுந்தகடுகள் தொடர்பான தகவல்களைச் சேகரித்தல்
2. திரைப்படத் தயாரிப்பாளர்கள் அளிக்கும் தகவலைச் சரி பார்த்தல்
3. திடீர்ச் சோதனை நடத்தி குற்றம் சாட்டப்பட்டவரைக் கைது செய்தல்
4. குற்றத்திற்கு உட்படுத்தும் பொருட்களைக் கைப்பற்றுதல்
5. தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுதல், குற்றம் சாட்டப்பட்டவரை ரிமாண்டு காவலில் வைத்தல், புலனாய்வை முடித்த பின்னர் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தல்
6. நீதிமன்றங்களில் வழக்கு விசாரணைகளில் கலந்துகொண்டு உதவி செய்தல்

(ஊ) 1982 ஆம் ஆண்டைய தமிழ்நாடு கள்ளச் சாராயக் குற்றவாளிகள், மருந்து சரக்கு குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரம் தொடர்புடைய குற்றவாளிகள் மற்றும் குடிசைப் பகுதி நில ஆக்கிரமிப்பு குற்றவாளிகள் ஆகியோரின்



2005 ஏப்ரல் 11]

அபாயகரமான நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின்கீழ், மாநிலத்தின் வீடியோ பதிப்புரிமைத் திருட்டை ஒழிப்பதின் ஒரு பகுதியாக, 2004 ஆம் ஆண்டில் வீடியோ பதிப்புரிமை திருட்டுக் குற்றம் புரிந்த ஒருவர் சென்னையிலும், ஒருவர் திருச்சியிலும் ஆக இரு நபர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

(எ) மாநிலத்தில் உள்ள பன்னாட்டு விமான தளங்களில் சுங்கத் துறையினருடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு டிவிடி—க்கள் மற்றும் விசிடி—க்கள் வெளிநாட்டிலிருந்து கடத்தி வரும் செயலைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஏ) மாநிலத்தில் இயங்கி வரும் தொலைதூரப் பேருந்துகளில் திருட்டு கேசட்டுகளையும் விசிடிகளையும் பயன்படுத்தி புதிய திரைப்படங்கள் காண்பிக்கப்பட்டு வந்தன. இதனைத் தடுத்திடும் வகையில், தொலைதூரப் பேருந்துகள் அடிக்கடி சோதனை செய்யப்பட்டு, இத்தகைய செயல்கள் தடுக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலும் இக்குற்றம் நடைபெறா வண்ணம் பார்த்துக் கொள்ளுமாறு தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. தொலைதூரப் பேருந்துகளில் திருட்டு விசிடி மூலம் புதிய திரைப்படங்கள் காட்டியதற்காக 2004 ஆம் ஆண்டில் பேருந்து உரிமையாளர்கள் மீது 57 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

(ஐ) வீடியோ வகையிலான திருட்டுத் தடுப்புப் பிரிவில் 2003 ஆம் ஆண்டில் 594 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. 2004 ஆம் ஆண்டில் 1,180 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 1.1.2004 முதல் 31.12.2004 வரையிலான ஓராண்டு காலத்தில் வீடியோ வகைத் திருட்டுத் தடுப்புப் பிரிவு கைப்பற்றிய குற்றத்திற்குட்படுத்தும் சொத்துக்களின் மதிப்பு ரூ.12 கோடியே 6 இலட்சத்து 43 ஆயிரத்து 647 ஆகும். 1995 முதல் 2004 (31.12.2004 வரை) வரையிலான சுமார் 9 ஆண்டுகளில் இப்பிரிவு கைப்பற்றிய குற்றத்திற்குட்படுத்தும் சொத்துக்களின் மதிப்பு ரூ.25 கோடியே 32 இலட்சத்து 91 ஆயிரத்து 924 ஆகும்.

## 8. கேபிள் தொலைக்காட்சிக் கட்டமைப்பு

மத்திய கேபிள் தொலைக்காட்சி (முறைப்படுத்தல்) சட்டம் — 1995 மற்றும் விதிகள் — 1994 சட்டத்தை மத்திய அரசு இயற்றியுள்ளது. இச்சட்டம் இந்தியா முழுவதற்கும் பொருந்துகின்ற ஒன்றாகும். இதன்படி, தலைமை அஞ்சல் நிலைய அலுவலர், பதிவு செய்யும் அலுவலர் ஆவார். 2000 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட கேபிள்

தொலைக்காட்சி (முறைப்படுத்தல்) சட்டத்தின்படி (36/2000) மாவட்ட ஆட்சியர், கோட்டாட்சியர் மற்றும் சென்னை காவல் துறை ஆணையாளர், ஆகியோர்க்கு, இச்சட்டத்தின் 3,5,6 அல்லது 8 ஆகிய பிரிவுகளை மீறி குற்றம் செய்த கேபிள் தொலைக்காட்சி இயக்குபவர்கள்மீது நடவடிக்கை எடுக்க அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

சென்னை, குற்றப்புலானய்வுத் துறையில் உள்ள வீடியோ திருட்டுத் தடுப்புப் பிரிவு, 2004 ஆம் ஆண்டில் கேபிள் தொலைக்காட்சிகள் தொடர்பாக, 53 வழக்குகளைப் பதிவு செய்துள்ளது. 2003 ஆம் ஆண்டில் 50 வழக்குகள் மட்டும் பதிவாகியுள்ளன.

**9. கண்டிஷனல் அக்ஸஸ் சிஸ்டம் (சி.ஏ.எஸ்.)**

இவ்வழிமுறையின்கீழ், சந்தாதாரர்கள் தாங்கள் பார்க்க விரும்பும் கட்டண அலைவரிசைகளைக் காண்பதற்கு ஏதுவாக உருவாக்கப்பட்ட ஒரு முறையாகும். இந்த முறையின்படி, பார்வையாளர்கள் அவர்கள் பார்க்கும் கட்டண அலைவரிசை ஒளிபரப்புக்கான கட்டணத்தைச் செலுத்திப் பார்க்கலாம். இதற்கு 'செட்—டாப் பாக்ஸ்' என்னும் கருவியைப் பயன்படுத்த வேண்டும். இதர கட்டணமில்லா அலைவரிசை ஒளிபரப்புகளைக் காண இக்கருவி தேவையில்லை. இதன்படி 30 கட்டணமில்லாச் சேனல்களை ரூ.72/—க்கு (மற்றும் வரி) காணலாம். பிப்ரவரி 2004—ல் நடுவண் அரசின் ஓர் அறிவிக்கையின்படி இம்முறையானது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனை எதிர்த்து சென்னையைச் சேர்ந்த முதன்மையான கேபிள் ஆபரேட்டர்கள் சென்னை உயர் நீதிமன்றத்தை அணுகி தடை பெற்றுள்ளனர்.

**10. நேரடி இல்லத் தொடர்பு (டி.ட்டி.ஹெச்.) ஒளிப்பரப்புச் சேவை**

நேரடி இல்லத் தொடர்பு (டி.ட்டி.ஹெச்.) தொலைக்காட்சி ஒளிபரப்புச் சேவைத் திட்டம் தற்போது மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்படி கேபிள் ஆபரேட்டர்கள் என்ற இடைநிலை அமைப்பு மூலமாக அல்லாமல் பல்வகை சேனல்களின் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை கே.யு. பேண்ட் அலைவரிசை மூலமாக ஜியோ சிங்க்ரோனஸ் செயற்கைக்கோள் முறையைப் பயன்படுத்தி தொலைக்காட்சி சமிக்ஞைகளை சந்தாதாரர்களின் இல்லங்களுக்கே நேரடியாகக் கொண்டு சென்று அளிப்பதாகும்.



தற்சமயம் இதன் ஒளிபரப்பு 19 தூர்தர்ஷன் சேனல்க[illegible]ம் 14 தனியார் ஒளிப்பரப்பாளர்களின் சேனல்களைக் கொண்டு [illegible]பரப்ப மத்திய அரசால் உத்தேசிக்கப்பட்டுள்ளது சமிக்ஞை பெறும் சாதனம், சிறிய செயற்கைக் கோள் டிஷ் ஆன்டெனா மற்றும் ஒரு செட்—டாப் பாக்ஸ் (ரிசீவர்/டிக்கோடர்) ஆகியவற்றைக் கொண்டதாகும். இது திறந்தவெளி அங்காடியில் கிடைப்பதோடு மேலும் எந்தவொரு தொலைக்காட்சி விற்பனையாளரிடமும் பெற்றுக் கொள்ளத்தக்கதாக உள்ளது. அந்தச் சாதனம் ரூ. 3,000/— முதல் ரூ.4,000/- வ[illegible]ான விலையில் கிடைக்கிறது. இத்திட்டத்தைச் செயல்படுத்துத[illegible]ித்த மத்திய அரசின் அறிவிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

❖❖❖❖

D V 211, 3/05 POS. 81.2
186241

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**112, Anna Salai,**
**Chennai-600 002.**

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Special Commissioner and Commissioner of Stationery and Printing, Chennai-600 002.